காலமும் கணக்கும் நீத்த காரணன்:

கம்பன்



காலமும் கணக்கும் நீத்த காரணன்:
கம்பன்

(காரைக்குடி கம்பன் தமிழ்ஆய்வுமையம் நடத்திய கம்பராமாயண உலகத்தமிழ் ஆய்வுக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்)

பதிப்பாசிரியர்கள்

'கம்பன் அடிசூடி' **பழ.பழனியப்பன்**

முனைவர் **சொ.சேதுபதி**

முனைவர் **மு.பழனியப்பன்**

முனைவர் **இரா.குறிஞ்சிவேந்தன்**

பேராசிரியர் **சொ.அருணன்**

கம்பன் தமிழ்ஆய்வுமையம்,
கம்பன் மணிமண்டபம்
காரைக்குடி -630001

வெளியீடு

கபிலன் பதிப்பகம்

321, மூன்றாம் முதன்மைச்சாலை,
மகாவீர் நகர்
புதுச்சேரி-605 008
arunankapilan@gmail.com

KAALAMUM KANAKKUM NEETTHA KAARANAN: KAMBAN

(Research papers presented at the World Tamil Kambaramayana research Conference.)

Kamban Tamil Research Centre©
Karaikudi.

First Edition - March 2013

Editors:
'Kamban Adisoodi' **Pazha. Pazhaniappan**
Dr. **C. Sethupathi**
Dr. **M. Palaniappan**
Dr. **R.Kurinjivendan**
Prof. **C.Arunan**

Pages: 522

Rate: ₹350/-

Published By:

KAPILAN PATHIPPAGAM
321. 3rd Main Road,
Mahavir Nagar, Karuvadikkuppam,
Puducherry - 605 008.

Printed at:

SURYA PRINT & SOLUTIONS
Sivakasi.

ISBN: 978-81-922092-4-1

காரைக்குடி கம்பன் திருநாள் பவளவிழாவை ஒட்டி நடத்தப் பெற்ற கம்பராமாயண உலகத் தமிழ்ஆய்வுக் கருத்தரங்கில் தமிழ்நாடு மேனாள் தகவல் ஆணையர் பேராசிரியர் சாரதா நம்பி ஆரூரன் அவர்களால் வெளியிடப்பெற்றது.

35/2



நின்னை வணங்கி, நீவகுத்த நெறியில் நிற்கும் அதுஅல்லால்,
என்னை, அடியோம் செயற்பால? - **கம்பன்**

(நாட்டரசன்கோட்டை, கம்பன் அருட்கோயிலில் பங்குனி அத்தத்திருநாள் வழிபாட்டில், உடன் உதவுவோர் மெ.நா.சிதம்பரம், பின்னாளில் கம்பன் அறநிலையத் தலைவரான மு.மெ.முத்துராமன், இந்நாள் கம்பன் கழகச் செயலர் கம்பன் அடிசூடி)

கம்பன் அருட்கவி ஐந்து

1. நாட்டை ராகம்

உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகுஇலா விளையாட்டு உடையார் - அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே. 1

2. ஆரபி ராகம்

வாணாள் அளித்தி, முடியாமல்; நீதி வழுவாமல் நிற்றி;- மறையோய்!
பேணாய், உனக்கோர் பொருள்வேண்டும் என்று,பெறுவான் அருத்தி பிழையாய்;
ஊணாய், உயிர்க்கும் உயிராகி நிற்றி; உணர்வாய பெண்ணின் உருவாய்,
ஆணாகி, மற்றும் அலிஆதி!-ஆர், இவ்அதிரேக மாயை அறிவார்? 8255

3. கௌளை ராகம்

வேதங்கள் அறைகின்ற உலகு எங்கும் விரிந்தன உன்
பாதங்கள் இவை என்னின், படிவங்கள் எப்படியோ?
ஓதம் கொள் கடல் அன்றி, ஒன்றினோடு ஒன்று ஒவ்வாப்
பூதங்கள்தொறும் உறைந்தால், அவைஉன்னைப் பொறுக்குமோ? 2563

'நீஆதி பரம்பரமும்: நின்னவே உலகங்கள்;
ஆயாத சமயமும் நின் அடியவே; அயல் இல்லை;
தீயாரின் ஒளித்தியால்; வெளி நின்றால் தீங்கு உண்டோ?
வீயாத பெரு மாய விளையாட்டும் வேண்டுமோ? 2569

4. வராளி ராகம்

வங்கியம் பல தேன் விளம்பின; வாணி முந்தின பாணியின்
பங்கி அம்பரம் எங்கும் விம்மின; பம்பை பம்பின; பல் வகைப்
பொங்கு இயம் பலவும் கறங்கின; நூபுரங்கள் புலம்ப, வெண்
சங்கு இயம்பின; கொம்பு அலம்பின, சாம கீதம் நிரந்தவே!. 1554

5. ஸ்ரீ ராகம்

'உன்னை உள்ளபடி அறியோம்; உலகை உள்ளதிறம் உள்ளோம்;
பின்னை அறியோம்; முன்அறியோம்; இடையும் அறியோம், பிறழாமல்;
நின்னை வணங்கி, நீவகுத்த நெறியில் நிற்கும் அதுஅல்லால்,
என்னை, அடியோம் செயற்பால?-இன்பதுன்பம் இல்லோனே! 8662

கம்பன் புகழ்பாடி, கன்னித்தமிழ்வளர்க்கும் கம்பன் கழகமும் கம்பன் தமிழாய்வு மையமும்

தென்பாண்டிநாட்டின் செம்மைசால் நகரமாக விளங்கும் காரைக்குடியின் பெருமைமிகு இலக்கியப் பேரமைப்புகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கது காரைக்குடி கம்பன் கழகமாகும்.

அண்ணல் காந்தியடிகளின் அருமைச்சீடராய் விளங்கிய தேசத்தொண்டர், சா.கணேசன் அவர்கள், கம்பனின் இராமாவதாரக் காப்பியத்தால் பெரிதும் ஈர்க்கப்பெற்று காரைக்குடியில் 1939 ஏப்ரல் 2, 3 ஆகிய நாட்களில் ரசிகமணி டி.கே.சி தலைமையில் கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் தம் வாழ்நாள் வேள்வியைத் தொடங்கினார். காரைக்குடி யிலிருந்து 30 கல் தொலைவில் உள்ள நாட்டரசன் கோட்டையில் உள்ள கம்பன் சமாதிக்கோயில் வளாகத்தில் கம்பன் கவியரங்கேற்றிய பங்குனி அத்தத் திருநாளிலும், அதற்கு முந்திய மூன்று நாட்களான பங்குனி மகம், பூரம், உத்திரம் ஆகிய நாட்களில் காரைக்குடியிலும் கம்பன் திருநாளைக் கொண்டாடினார்.

கம்பன் திருநாளின் முதல்நாளான திருநாள் மங்கலப் பேரவையை, கம்பன் மலர் வணக்கத்துடன் தொடங்குவார். அதற்கெனவே, 108 போற்றித் தொடர்கள் அடங்கிய அற்புதமான கவிமலரை யாத்தார். இசைக்கலைஞர் ஒருவர் பாட, குழந்தைகள் இருவர் கம்பன் படத்திற்குத் தாமரைமலர் இட்டு வணங்குவர். நாட்டரசன்கோட்டை கம்பன் அருட்கோயிலில் அத்தநாள் வழிபாடு நிகழ்த்துவதற்கென என்று கம்ப ராமாயணப்பாடல்கள் ஐந்தினை, 'கம்பன் அருட்கவி ஐந்து' எனத்தேர்ந்தெடுத்து அவற்றுக்கு, திருவையாறு தியாகராஜர் சமாதியில் பாடும் பஞ்சரத்னக் கீர்த்தனைக்குரிய அதே ஐந்து கனராகங்களில் ஸ்வரம் அமைத்துப் பாடவும் ஏற்பாடு செய்தார். இன்றும் இந்த நடைமுறைகள் பின்பற்றப்பெறுகின்றன.

தம் இயற்பெயரைவிடவும் 'கம்பன் அடிப்பொடி' என்னும் சிறப்புப் பெயரே அவருக்கு நிரந்தரமாகும் வண்ணம் கம்பன் பெயர் விளங்க நிறுத்தி அவர் ஆற்றிய அரும்பணிகள் மிகப்பலவாகும். கம்பன் பிறந்த நாளை நாம் அறியச் சான்று ஏதும் கிடைக்காததால், அவன் தன் இராமாவதாரக் காப்பியத்தை அரங்கேற்றியதாகத் தனிப்பாடல் ஒன்றின் துணையால் அறிய நேர்ந்த நாளையே (கி.பி

886, பெப்ருவரி 23உ புதன்கிழமை) கம்பன் கவிச்சக்கரவர்த்தியாக இப்பூவுலகில் அவதரித்த நாளாகக்கொண்டு கொண்டாடி வந்தார்; அவர் விடுதலை வேள்வியில் ஈடுபட்டு அலிபூர் சிறையில் இருந்த போதும் விழா நிகழ்ச்சிகளைச் சிறையிலிருந்தபடியே அமைத்துத் தன் நண்பர் மெ.நா.சித.சிதம்பரம் அவர்களைக் கொண்டு நடத்தினார். ஆண்டு தவறாது 44 ஆண்டுகள் தொடர்ந்து தம் வாழ்நாள் வரை (1982) கம்பனுக்கு விழாக் கொண்டாடினார். 1983முதல் அவர் விரும்பியவண்ணமே அவர்தம் தலை மாணாக்கரான கம்பன் அடிசூடியை செயலாளராகக் கொண்டு அதேமுறையில் தொடர்ந்து 30 ஆண்டுகளாக விழா நடத்தப் பெற்று வருகிறது.

கம்பன் கழகம், தன் பொன்விழாவை ஒட்டி, 1989ல் முதன் முதலில், தமிழகத்திற்குச் சாகித்திய அகாதெமியினரை அழைத்து வந்து, அகில இந்திய இராமாயண மாநாட்டை இரு நாட்கள் நடத்திப் பெருமைகொண்டது. அந்தவரிசையில், கம்பன் அடிப்பொடியின் உளப்பாங்கின்வண்ணம் ஒருவார விழாவாக இக்கழகத்தின் பவளவிழா, இந்த ஆண்டு(2013) இனிதே நிகழ்கிறது.

உலகில் வேறு எங்கும், எம்மொழிக்கும் இல்லாததான மொழிக்கான திருக்கோயிலை, தமிழக அரசின் ஆதரவோடு கம்பன் மணிமண்டப வளாகத்தில் நிறுவியவர் கம்பன்அடிப்பொடியார். தமிழ்த்தாய், அகத்தியர், தொல்காப்பியர், கம்பன், திருவள்ளுவர், இளங்கோவடிகள், ஒலித்தாய், வரித்தாய் ஆகியோரின் சிலா வடிவங்களோடு அறுகோண அமைப்பிலான கல் திருப்பணித் திருக்கோயிலாக விளங்குகிறது அத்திருக்கோயில். தமிழ்த்தாய், ஒலித்தாய், வரித்தாய் சிலைகள், கம்பன் அடிப்பொடியாரின் வளர்ப்பு மைந்தரான 'சிற்பகுரு', வாஸ்து விஞ்ஞானி வை. கணபதி ஸ்தபதி அவர்களால் வடிவமைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், 1968ல் நிகழ்ந்த இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலைக்கண்காட்சிக் குழுவிற்குத் தமிழகமுதல்வர், பேரறிஞர் அண்ணாவின் வேண்டுதலால் தலைமையேற்ற கம்பன் அடிப் பொடியார், கண்டோர் வியக்கும்வண்ணம் கலைக்காட்சியை நடத்திய தோடு, 'கையேடு' என்ற கருத்துக் கருவூலத்தையும் பதிப்பித்தார். பிள்ளையார்பட்டித் தல வரலாறு, இராஜராஜன், தமிழ்த்திருமணம், *Some Iconographic Concepts*, கட்டுரைக் களஞ்சியம் உள்ளிட்ட பல்வேறு நூல்களைத் தமிழுலகிற்கு நல்கிய அவர் பல்துறை ஆற்றல் மிக்க படைப்பாளி; கருதியது முடிக்கும் கர்மயோகி.

நெடுங்காலமாய், கம்பராமாயணத்திற்கு, மூலபாடம் இல்லாதிருந்த குறையைப் போக்கப் பெருமுயற்சி மேற்கொண்டார். சில தமிழ் அறிஞர்களின் துணையோடு, எண்ணற்ற ஏட்டுச்சுவடிகள், பழம்பெரும் பதிப்புகளை ஆராய்ந்து முடிந்த அளவிற்குப் பாட பேதமற்ற, கல்லாதாரும் எளிதில் புரிந்து படிக்கும்படியாகச் சந்தி பிரித்து பொருள் மாலையுடன் கூடின ஒரு பதிப்பினை, தம் நண்பர் மர்ரே எஸ் ராஜம் உதவியுடன் சிறப்புறப் பதிப்பித்தார். ஆறு காண்டங்களையும் தனித்தனியாகக் கொண்ட அற்புதக்களஞ்சியம் அது. கூடவே, பன்னருங் கலைதெரி 'பட்டிமண்டபத்தோடு', மேல்முறையீட்டுப் பட்டிமண்டபம், நற்றமிழ் முற்றம். கவியரங்கம், மகளிர் மண்டலம், ஆடகஅரங்கு உள்ளிட்ட மேடைஇலக்கிய வடிவங்களையும் தண்ணார் தமிழகத்திற்கு முன்வந்து அறிமுகப்படுத்திய பெருமை அன்னாருக்கே உண்டு.

காரியதரிசி, செயலர் என்றிருந்ததைச் செயலாளன் என்றதும், பிரசங்கம் என்றிருந்ததைச் சொற்பொழிவு என்றாக்கியதும், அவரே. பழந்தமிழ்ப்பண்பாட்டை நினைவுபடுத்தும்விதமாக அரங்கை அமைக்கும் நேர்த்தியும், நிகழ்வுகளை அறிமுகப்படுத்தும் பாங்கும், பார்வையாளர்களில் தகுதிப்பாடுடையவர்களை நோக்கர்களாகத் தேர்ந்தெடுத்துப் பட்டிமண்டபத்தில் தக்க அணி, வெற்றிபெறக் குடவோலையில் வாக்களிக்கச் செய்வதுமாய்ப் பல்வேறு மரபார்ந்த புதுமைகளைச் செய்ததும் குறிப்பிட்டறிய வேண்டியது. வென்ற அணியினர் போக, எஞ்சிய அணியினர் மேல்முறையீடு செய்து உண்மை வென்றிட உழைக்கும் பட்டிமண்டப நிகழ்வில் இதுவரை வந்த தலைப்பு மறுமுறை வந்ததே இல்லை என்பது வரலாற்று உண்மை. அதுபோல், உரியபொழுதில் வரத்தாமதிக்கும் எவருக்காகவும் காத்திருந்த வரலாறும் இல்லை.

முன்னரே எழுத்தில் இசைவுபெற்று முறையாக நிகழ்வுக்கு முன்னும் பின்னும் பங்கேற்பாளர்களோடு தொடர்புகொண்டு விருந்தோம்பி விழா நடத்தும் கம்பனடிப்பொடியாரின் 'சென்சாருக்கு'த் தப்பாமல் எந்தக் கவிஞரும் அரங்கேறி முழங்க முடியாது. கி.வா.ஜ. முதல் கண்ணதாசன் வரை எல்லாருக்கும் இதுதான் நியதி. நெறியின் புறஞ்செல்லா நேரிய பாங்கில் செறிவாய்க் கம்பனையும் தமிழையும் இலக்கிய, வாழ்வியல் நேர்த்திகளையும் மக்களுக்கு உணர்த்தும் மாமண்டபமாக விளங்கும் நேர்த்தியை நேரில் கண்டால்தான் உணரமுடியும். என்றாலும் தொடர்ந்து அனைத்து

வானொலிநிலையங்களும் அந்நிகழ்வுகளை நேரடியாக ஒலிபரப்பிப் பெருமைபெற்றன. பின்னர் தொலைக்காட்சியமைப்புகளும் அப்பணியைத் தொடர்ந்தன. பத்திரிகை முதலான ஊடகங்களின் பங்கும் குறிப்பிடத்தக்கதாக அமைந்திருக்கக் காணலாம்.

விழாத்தொடங்குமுன், 'கம்பன் வாழ்க, கம்பன் புகழ் வாழ்க, கன்னித்தமிழ்வாழ்க' என்னும் முழக்கத்தை, வெண்கலக் குரலில் கம்பன்அடிப்பொடியார் முன் எழுப்ப, அரங்கிலுள்ளோர் அனைவரும், 'வாழ்க வாழ்க' என்று இணைந்து வாழ்த்தொலிக்க, குறித்த நேரத்தில் நடக்கும் ஒரேவிழாவாக, சாதி, மத, பதவி, அரசியல் சார்பு பேதமற்று, உலகப்பேரறிஞர்களோடு, இந்திய மற்றும், தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்கள் எல்லோரும் பங்கேற்கும் தமிழ் இலக்கியவிழாவாகக் கம்பன் விழாவை வடிவமைத்த பெருமைக்கும் அன்னவரே முன்னவர்; அவரே, தமிழகம் மற்றும் பிறநாடுகளில் கம்பன் கழகங்கள் தோன்றவும் காரணமாயினார்.

இன்றளவும் புதிதாகத் தொடங்கப் பெறும் சேய்க்கழகங்களுக்கு முதன்முதலில் சீராட்டு நல்கி நல்வாழ்த்தளிக்கும் தாய்க்கழகமாகக் காரைக்குடி கம்பன் கழகம் திகழ்ந்து வருவது யாவரும் அறிந்ததே.

படைப்பாளிகள், பத்திரிகையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், கல்வியாளர்கள், அரசியலாளர்கள், தமிழகம் மற்றும் புதுவை மேனாள் முதல்வர்கள், அதிகாரிகள், ஆட்சியாளர்கள், நிர்வாகிகள், ஆன்மிகப் பெரியார்கள், மொழியியல் வல்லுநர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், பேராசிரியர்கள், நீதியரசர்கள், வழக்கறிஞர்கள் எனப் பல்துறை வித்தகர்களும் வந்து பங்கேற்றுச் சிறப்பித்திருக்கின்றனர்.

உள்ளூர் தொடங்கி உலக நாடுகள் வரை பல்துறையாளர்கள் வந்து பார்வையாளர்களாக, சுவைஞர்களாகப் பங்கேற்ற பெருமை இந்தக் கழகத்திற்கே உண்டு.

ரசிகமணி டி.கே.சி. தொடங்கி, சொ.முருகப்பா, ராய.சொ., ப.ரா., எம்.எஸ்.பூரணலிங்கம்பிள்ளை, ஏ.சியால்நாடார், கு.அருணாசலக் கவுண்டர், பண்டிதமணி மு.கதிரேசச்செட்டியார், அ.மு.சரவணமுதலியார், ந.மு.வேங்கடசாமிநாட்டார், பொ.திரிகூடசுந்தரன், பி.ஸ்ரீ. ஆச்சார்யா, வெள்ளக்கால் சுப்பிரமணியமுதலியார், எஸ்.வையாபுரிப்பிள்ளை, அ.சீ.ரா., வ.ரா., மு.அருணாசலம், ஞா.தேவநேயப்பாவாணர்,

ஜி.சுப்பிரமணிய பிள்ளை, நா.கிரிதாரி பிரசாத், பு.ரா.புருஷோத்தமநாயுடு, ச.து.சு.யோகியார், ரா.பி.சேதுப்பிள்ளை, மு.இராகவையங்கார், கோவைக்கிழார் சி.எம். இராமச்சந்திரச் செட்டியார், இராஜாஜி, கல்கி, வெ.சாமிநாதசர்மா, தெ.பொ.மீ., தொ.மு.பாஸ்கரத் தொண்டைமான், ஜீவா (ப.ஜீவானந்தன்), எஸ்.ஆர்.கே (எஸ்.இராமகிருஷ்ணன்), அ.ச.ஞா(னசம்பந்தன்),தவத்திரு குன்றக்குடி அடிகளார், ம.பொ.சி (ம.பொ. சிவஞானம்), கி.வா.ஜ(ஜகந்நாதன்), திருலோகசீதாராம், தொ.மு.சிரகுநாதன், கலைஞர்.மு.கருணாநிதி, ஹா.கி.வாலம், க.கு.கோதண்டராமன், எஸ்.கே. இராமராசன், ஏ.என்.சிவராமன், அ.நடேசமுதலியார், பி.ஜி.கருத்திருமன், திருமுருக. கிருபானந்த வாரியார், ஏவி.மெய்யப்பன், சேவியர் எஸ்.தனிநாயக அடிகள், செக்நாட்டுத்தமிழறிஞர்கமில்சுவலபில், மு.வ(வரதராசன்), கா.நயீனார்முகம்மது, சாரணபாஸ்கரன், ஆல்பெர்ட் ஃபிராங்க்ளின், மறைத்திரு பிரான்சிஸ் முராயிஸ் அடிகள்.சே.ச., மறைத்திரு. சா.லாரன்ஸ் அடிகள், எஸ்.கே.நாயர், சுந்தரசுவாமிகள், பேரூர் சாந்தலிங்க இராமசாமி அடிகள், வை.வேங்கடசுப்பாரெட்டியார், கொத்தமங்கலம் சுப்பு, கண்ணதாசன், ந.சஞ்சீவி, அ.முத்துசிவம், வ.சுப. மா(மாணிக்கம்), நீதிபதியரசர்கள் எஸ்.மகாராஜன், மு.மு.இஸ்மாயீல், செங்கோட்டுவேலர், ஏ. ஆர்.லெட்சுமணன், எம்.கற்பகவிநாயகம், எம்.சொக்கலிங்கம், வி.இராமசுப்பிரமணியன் ஆகியோர், என்.வி.நாயுடு, இரா.இராதாகிருஷ்ணன், புலவர் கீரன், வை.சிட்டிபாபு, நாபாலுசாமி, அரங்க.சீனிவாசன், பூ.அமிர்தலிங்கனார், முடியரசன், சொக்கு.சுப்பிரமணியம், வ.அய்.சுப்பிரமணியம், சு.குழந்தைநாதன், எஸ்.கே.இராமராசன், அப்துல்ரகுமான், ஜெயகாந்தன், சிற்பி பாலசுப்பிரமணியம், மு.மேத்தா, தமிழண்ணல், பா.நமசிவாயம், தா.பாண்டியன், குமரிஅனந்தன், கா.காளிமுத்து, ஔவைநடராசன், அரங்க.சீனிவாசன், அன்புவேதாசலம், எஸ்.எம்.டயஸ், எம்.ஓ.எச். பாரூக் மரைக்காயர், அ.அருணகிரி, மரியதாஸ், தெ.ஞானசுந்தரம், சோ. சத்தியசீலன், அ.அறிவொளி, அ.வ.ராசகோபாலன், தி.இராசகோபாலன், கி.பக்ஷிராஜன், சுகி.சிவம், நெல்லைக் கண்ணன், சாலமன் பாப்பையா, அப்துல்காதர், கு.ஞானசம்பந்தம், பழ.கருப்பையா, பழ.முத்தப்பன், பழ.முத்துவீரப்பன், பழ.பழனியப்பன், சொ.சேதுபதி, மு.பழனியப்பன், த.இராமலிங்கம், சொ.சொ.மீ.சுந்தரம், தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன், நா.நஞ்சுண்டன், நாஞ்சில்நாடன், தமிழருவி மணியன் எனப் பல்வேறு துறைசார் அறிஞர்கள் யாவரும் வந்து வந்து உரைநல்கிய பெருமைஉடையது இந்தக் கழகம்.

பெண்களில் ஆ.ரா.இந்திரா, சிவகாமசுந்தரி, சிவானந்த விஜலட்சுமி, இராஜேஸ்வரிநடராஜன், ந.சரோஜினிதேவி, சி.குழந்தையம்மாள், சக்திப்பெருமாள், இரா.மீனாட்சி, சரசுவதிஇராமநாதன், செல்லப்பாப்பா கீரன், ஆர்.திலகவதி, இளம்பிறைமணிமாறன், இரா.ருக்மிணி, இரா. காந்திமதி, அரசு மணிமேகலை, உமையாள் முத்து, சாரதாநம்பி ஆரூரன், சுதாசேஷய்யன் எனப் பலரும் வந்து உரையாற்றியிருக்கிறார்கள். (இந்தப்பட்டியல்கள் முழுமை பெற்றவையல்ல. விரிக்கிற் பெருகும்)

இவர்களை அடுத்து வந்த தலைமுறைப் பேச்சாளர்களும், அவர்களை அடுத்து வந்த இளம்பேச்சாளர்களும் என, இந்தக் கழகத்தில் ஏறிப் பெருமைபெற்றவர்கள் ஏராளமானவர்கள்.

அத்தோடு, இளந்தலைமுறையினரை இனங்கண்டு நாளைய அறிஞர்களாக உருவாக்கும் வண்ணம், தமிழகம் முழுதுமுள்ள கல்லூரி மாணாக்கர்களுக்கான கம்பராமாயணம், திருக்குறளில் பேச்சு, கட்டுரைப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தி வருகிறது இக்கழகம். இதன்வழி, அடுத்த தலைமுறைப் பேச்சாளர்கள், ஆய்வாளர்கள் சிறப்பாக உருவாகி வருகிறார்கள்.

ஆண்டுதோறும் நடத்தப்பெறும் கம்பன் திருநாட்கள் மட்டுமன்றி, மாதந்தோறும் முதற் சனிக்கிழமைகளில் தக்க அறிஞர் ஒருவரோடு, மாணாக்கர் / இளந்தலைமுறையினர் ஒருவரைக் கொண்டும் புதிய கோணங்களில் கம்பன் காவியம் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறுகின்றன; அவை அச்சில் கொணரும் நோக்கில் தொகுக்கப் பெறுகின்றன.

அந்தவகையில், ஆண்டுதோறும், கம்பராமாயணத்தில் புதிய கூறு ஒன்றைப் பற்றி அறக்கட்டளை ஆய்வுப் பொழிவுகள் இரண்டு இங்கு நிகழ்த்தப்பெறுகின்றன; ஒன்று மூத்த அறிஞர்களைக் கொண்டும், மற்றொன்று இளந்தலைமுறைப்பேராசிரியர்களைக் கொண்டும் நடத்தப் பெற்றுவருகின்றன. இப்பொழிவுகள், இதுவரை, 'தாய் தன்னை அறியாத....', 'கம்பனின் மனவளம்', 'கம்பனில் எண்ணமும் வண்ணமும்', 'கம்பனில் நான்மறை', கம்பர் காட்டும் உறவும் நட்பும்', 'கம்பர் போற்றிய கவிஞர்', 'கம்பனின் அம்பறாத்தூணி', 'கம்பன் காக்கும் உலகு', 'கம்ப வானியல்' என நூல்களாக்கப் பெற்றுள்ளன. அவை, அந்தந்த ஆண்டுகளில் வெளியிடப்பெற்றுள்ளன. இவைபோகக் கம்பன் கழகத்தில் கம்பன் மணிமலர் என்னும் பெயரில் மலர்களும் வெளியிடப் பெற்றுள்ளன.

அரங்க நிகழ்வுகளிலும் ஆய்வுத்துறைகளிலும் தொடர்ந்து தடம்பதித்து வரும் காரைக்குடிக் கம்பன் கழகத்தின் பவளவிழாப் போதில், இனிய பிறப்பெடுக்கிறது, கம்பன் தமிழ்ஆய்வு மையம்.

சங்ககாலத்துக் கபிலர் தொடங்கி, சமகாலத்துக் கண்ணதாசன் வரை நீளும் இலக்கிய வளங்களையும், தொல்காப்பியர் முதலாய்த் தண்டமிழ்ச் சான்றோர் வகுத்துக் கொடுத்த இலக்கணச் செழுமைகளையும் கவிச்சக்கரவர்த்தி கம்பனை முன்னிறுத்தி, உலகளாவிய நிலையில் அடுத்துவரும் தலைமுறையினர்க்கு எடுத்துச் செல்லும் நோக்கில் ஒல்லும்வாயெல்லாம் உடனுக்குடன் தன் பணியாற்றிடத் துடிப்புடன் முனைகிறது. இம்முயற்சியின் ஒரு கூறாக, உலக அளவிலான கருத்தரங்கம், காலந்தோறும் கம்பன் (Kamban at all times) என்ற பொருண்மையில், திட்டமிட்டபடி, 2013 மார்ச் 23 ,24 ஆகிய இருநாட்கள் இனிது நடைபெறுகின்றது.

இக்கருத்தரங்கில், தமிழகம் மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களில் இருந்தும், உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் பேராளர்களும், ஆய்வாளர்களும் பங்கேற்றுச் சிறப்பிக்கிறார்கள். அறிவிப்புக் கண்ட நாளில் இருந்து தொடர்ந்து நல்லாதரவும் பங்களிப்பும் செய்துவரும் அத்துணைபேருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து மகிழ்கிறோம்.

கம்பன் தொடர்பான ஆய்வுகள் வளரவும், நூல்கள் எழுதுவோர் மற்றும் வெளியிடுவோரை ஊக்குவிக்கும் முகமாகவும், 2011, 2012 ஆண்டுகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளிவந்த கம்பராமாயண ஆய்வு நூல்களுக்கும், அவற்றை வெளியிட்ட பதிப்பகங்களுக்கும் பரிசுகள் வழங்கி மகிழ்கிறது கம்பன் தமிழாய்வு மையம்.

இதனைத் தொடர்ந்து ஈராண்டுகளுக்கு ஒருமுறை இத்தகு கருத்தரங்கமும், இடையிட்ட ஆண்டில் இலக்கியப் பயிலரங்கமும் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம். தொடர்ந்து, கம்பன் உள்ளிட்ட தமிழ், இலக்கிய இலக்கண வளங்களைக் கற்கவும், கற்பிக்கவும் ஓர் ஆய்வு மேற்கோள் நூலகம் ஏற்படுத்தி, ஆய்வு நிகழ்த்துவோருக்கான பணியிட வசதி செய்து, நெறிப்படுத்தி, செம்மொழித் தமிழ் ஆய்வுகளை ஊக்கப்படுத்தவும் முயற்சிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. அவற்றுக்கும் தமிழ்கூறு நல்லுலகம் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்று நம்புகிறோம். நன்றி.

– கம்பன் அடிசூடி பழ.பழனியப்பன்

THE KAMBAN DREAM

SUGANTHY KRISHNAMACHARI

This year marks the 75th anniversary of the Karaikudi Kamban Kazhagam, the seeds of which were sown by Saw. Ganesan.

A neat turn of phrase, an apt simile, a brilliant metaphor, the euphony of a word -- can all delight, for the felicitous use of language does give one a frisson of thrill. But even so, will anyone deify a language, not figuratively, but literally? One man did. Kamban Adippodi Saw. Ganesan.

Ganesan's love for Tamil began when he was in school. Those who encouraged him to study Kamba Ramayanam included P. Sri, the author of Ananda Vikatan's'Chithira Ramayanam', who lived in Karaikudi for some years, Va. Ve. Su. Iyer, T.K. Chidambaranatha Mudaliar (TKC) and even a scholarly grocery store owner in Burma! It was in 1939 that Ganesan set out to organise Kamban Vizha in Karaikudi, under the stewardship of TKC.

From 1935, Ganesan was actively involved in the Freedom Movement. His participation in the Quit India Movement resulted in his house being raided by the police. Several lakhs worth of property was confiscated. Unperturbed, Ganesan went about in disguise, giving rousing speeches to mobilise the youth against British rule. The police then arrested his friends, and to save them trouble, Ganesan surrendered, and was promptly despatched to the Alipore jail. But even while in prison, he ensured that the Karaikudi Kamban Vizha continued.

The venue

The Kamban Vizha is held in Karaikudi in the Tamil month of Panguni, and concludes in Nattarasankottai, in the star Hastham. Ganesan had a reason for choosing Hastham. There is a verse that says that Kamban inaugurated his work on Panguni Hastham. There is yet another verse that says Kamban died in Nattarasankottai. Ganesan visited Nattarasankottai, and found that the villagers there worshipped at a certain place, which they called Kamban Samadhi. Ganesan saw them taking mud from a pit near a rough

hewn stone, beneath which Kamban was believed to have been buried, and applying this mud on the tongues of their school going children, in the belief that Kamban would bless their academic endeavours. Ganesan came to the conclusion that this must be Kamban's burial place and so he decided to organise the last day of the celebrations at Nattarasankottai.

In 1940, Ganesan asked Vaidyanatha stapathi to make a panchaloha idol of Tamizh Thai, Tamizh represented as a Goddess. Tamizh Thai is seen seated on a globe to indicate the geographical spread of Tamizh. She holds in her hands palm leaf manuscripts, a japa mala, the torch of knowledge and a Sengottu yazh, described in Tamil literature and a sculptural representation of which is seen in the Tirumeyyam temple.

Ganesan's friends presented him with a purse for Rs. one lakh on his 60 birthday, and he used the money for a Kamban Mani Mandapam, the construction of which was completed in 1972. Praising Ganesan's dedication to Kamban, Justice Maharajan gave him the title 'Kamban Adippodi.' Ganesan conceived of a temple for Tamizh Thai, but passed away before the project was completed. Upon his death, the mantle fell on Kamban Adisoodi Pala Palaniappan, who, as a school student, came under the tutelage of Ganesan, and helped draw up programmes for the Karaikudi Kamban Vizha. Later, Palaniappan became the secretary of the Chennai Kamban Kazhagam.

Worthy pupil

After his retirement, Palaniappan returned to Karaikudi. How did he get interested in Kamban? "I used to be an orator in school, and apart from my Tamil teachers, one of my earliest inspirations was Ganapathi stapathi, who was my mathematics teacher! Later, Ganesan took me under his wing and taught me Kamba Ramayanam. He presented me with a copy of the Murray's edition of Kamba Ramayanam, which he had helped edit. Although Karaikudi was the place where Kamban celebrations began, it spread to other places."

The Tamizh Thai temple was declared open in 1993, by Mu. Karunanidhi. The main shrine is for Tamizh Thai, and on either side, we find Agastyar and Tholkappiyar. Outside the main shrine

are icons of Oli Thai (The Goddess of Sound) and Vari Thai (the Goddess of Letters), with separate enclosures for Kamban, Ilango and Valluvar. The temple construction and sculpturing work were by Ganapathy stapathi.

I am curious about why Kamban is always depicted with a walrus moustache. "The moustache was inspired by TKC's luxuriant moustache," laughs Palaniappan.

Almost all Tamil scholars have participated in the Karaikudi Kamban Vizha – A.C. Paul Nadar, Professor A.S. Gnanasambandam, Ra.Pi. Sethupillai, Dr. Francis Jayanandan, who was secretary of the Christian Literature Society, Xavier Tani Nayaka Adigal, Mu.Raghava Iyengar, Kamil Zvelebil and Justice Ismail, to name a few.

On the other hand, people who called themselves atheists would wangle a slot in the proceedings, and then make veiled attacks on Kamban. When it was suggested to Ganesan that he prevent such people from speaking, he would say that no one could be immune to the charms of Kamba Ramayanam for long, and even those who aimed barbs at the work, would soon come round. And sure enough, the same people who had mocked Kamban, would in later years, speak admiringly of the bard.

This year marks the 75th anniversary of the Karaikudi Kamban Kazhagam, and an international conference will be held in Karaikudi. The speakers include medical doctors and professors of engineering, based in London and Paris, all of whom have one thing in common -- love for Kamba Ramayanam. It is not often that one's dreams result in fruition, and even when they do, few dreams survive beyond one's lifetime. But the Karaikdui Kamban Kazhagam continues to thrive, and is a tribute to Saw. Ganesan, whose zeal and grit shaped it.

courtesy: The Hindu 08/03/2013

தோரணவாயில்

ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய கம்பராமாயணக் காப்பியத்திற்குச் சென்ற நூற்றாண்டில் கொடுக்கப்பெற்ற முக்கியத்துவத்தை வரலாறு மறந்துவிடவில்லை.

கும்பிட்டுப் போற்றவும், கொளுத்திப்பார்க்கவுமாய்க் கம்பனை இருவேறு திசைகளில் இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்த காலத்தில் நடுநின்று, அவனை, 'உள்ளது உள்ளபடி உணர்ந்து உலகிற்கு அறிவிக்கத் தோன்றியது' காரைக்குடிக் கம்பன் கழகம்.

கைகோத்துக்கொண்டும் களமிறங்கியும், கம்பன் புகழும் கன்னித் தமிழும், ஆழிசூழ் உலகம் யாவும் பரவும் வகை செய்த இத்தாய்க் கழகத்திற்கு இது பவளவிழா ஆண்டு.

இடையில் ஒரு முக்கால் நூற்றாண்டு முழுதாய்க் கழிந்திருக்கிறது. இன்னும் ஒரு கால் நூற்றாண்டைக் கடக்குமுன் கம்பனை முன்வைத்து நாம் கற்றதும் பெற்றதும் என்ன என்பதைக் கணக்கிட்டுக் கொள்ளக் கம்பன் தமிழாய்வு மையம் அமைத்துக் கொடுத்த களம், இந்த உலகத்தமிழ்க் கருத்தரங்கம்; அதன் உன்னத விளைச்சல்களுள் ஒன்று இந்த ஆய்வுத் தொகுப்பு.

உள்ளூர் தொடங்கி, தமிழகம், புதுச்சேரி, கேரளா உள்ளிட்ட இந்திய மாநிலங்களில் இருந்தும், இலண்டன், சிங்கப்பூர், பிரான்சு ஆகிய பிறநாடுகளில் இருந்தும் வருகைதந்து பங்கேற்ற பேராளர்கள், ஆய்வாளர்கள், சுவைஞர்கள் வாசித்தளித்த 88 ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைகிறது.

சுந்தரகாண்டத்து, ஊர்தேடும் படலத்தில், சீதையைக் காணாது தவிக்கும் அனுமனின் மனவுணர்வை, அவனது குறிக்கோளின் தேட்டத்தைக் கம்பன் பின்வருமாறு காட்டுவான்:

'கண்டுவரும்' என்று இருக்கும்
        காகுத்தன் கவிக்குலக்கோன்
'கொண்டுவரும்'என்றிருக்கும்
        யான் இழைத்த கோள் 'இதுவால்' (5061)

இதுதான், இந்த நூலின், அகம்;ஆக்கம் எல்லாம்.

காப்பியத்தில், சீதையைத் தேடிய அனுமன், 'கண்டுவருவான்' என்று காத்திருக்கிறான் இராமன். கவிக்குலத்தோனாகிய, சுக்ரீவனோ, 'கொண்டுவருவான்' என்று பார்த்திருக்கிறான். ஆனால், 'சொல்லின் செல்வன்' அனுமனோ, கண்டுவந்தான்; செய்தியைக் கொண்டுவந்தான். அதனால், கற்போர் நெஞ்சில் எல்லாம் நின்றிருந்தான்.

இடையில் ஒன்றும் சொல்லிவிடவேண்டும். அனுமனும் சீதையை, 'கொண்டுவரும்' நோக்கில்தான் முயன்று பார்த்தான். அறமன்று' என்று சீதை தவிர்த்ததனால், இராமன் முன் 'கண்டதும் உண்டு, அவள் கற்பும் நன்று' என்று அவன் உணர்ந்துகொள்ளும் வண்ணம் நடித்தும் காட்டினான்.

அதுபோல், சொல்லின் செல்வனாகிய அனுமன் நிலைநின்று, காதலன்போடு கம்பனாம் சீதையைக் காணக் காத்திருக்கும் எத்தனையோ வாசக இராமர்களுக்கு, கண்டு, நின்று, காட்டிக் கொண்டு கொடுக்கும் 88 ஆய்வாளர்களின் ஆய்வுத்தேடலில் கிடைத்த அற்புதத்திரவியங்கள் இந்தக் கட்டுரைகள்.

கம்ப சாகரத்துள் மூழ்கிக் கண்டெடுத்ததத்தனையும் முத்துக்கள், கூடவே, சோழிகள், சங்குகள் யாவும் அதனதன் அமைப்பில் இணைந்து வரக் கோத்துத் தொடுத்த தமிழ்மாலைக் கொத்து இது. எடுத்துவரும் வேகத்தில், நனைந்த நிலையில் இருந்து கடல் துளிகளாய்ச் சொட்டும் சொல்துளிகள் ஒவ்வொன்றும் கம்பன் துளிகள். தொடுத்துக் கொடுக்கும் முயற்சியில் சிந்தியவை போகச் சேர்ந்தவற்றை ஆதரிக்கும் சிந்தையுடையவர்கள் தாங்கள்; ஆதலினால் நன்றி சொல்லி வருகிற இந்நூல், மெய்வண்ணனாகிய கம்பனின் 'நூல்' வண்ணம் காட்டுகிற, ஆய்வாளர்களின் கைவண்ணத்தால் உருவான கலைப்படைப்பு 'எல்லையொன் றின்மை எனும் பொருள் அதனைக் கம்பன் குறிகளால் காட்டிட முயலும் முயற்சி.

'காலந்தோறும் கம்பன்' என்ற பொதுத்தலைப்பின்கீழ், 'காலமும் கணக்கும் நீத்த காரணன்: கம்பன்' எனும் இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் நான்கு பகுப்புகளாகக் கட்டமைக்கப் பெற்றுள்ளன.

'கம்பனைக் கண்டு' என்னும் முதல் பகுதி, கம்பராமாயணப் பதிப்புகள் பற்றியும், கம்பனின் தனித்துவம் பற்றியும், அக்காப்பியம் சென்ற நூற்றாண்டில் எதிர்கொண்ட சிக்கல்கள், பெற்ற சிறப்புகள் பற்றியும் விளக்கும் 25 கட்டுரைகளைக் கொண்டது.

கம்பனின் சொல்நலம், பொருள் வளம், கற்பனைநயம் ஆகியவற்றை விளக்குவதோடு, அக்காப்பியத்துள் ஐயத்திற்குரிய ஆய்வுக்களங்களை வினாக்கள் எழுப்பிக் காட்டி விடைகள் தேடியும், பெண்ணியம், உளவியல், வரலாற்று மற்றும் சமூகவியல் கண்ணோட்டத்தோடு காப்பியக் கதை மற்றும் கதாபாத்திரங்களை அணுகியும் ஆய்வாளர்கள் கண்டுரைத்த ஆய்வுமுடிவுகளின் அணிவகுப்பாக இப்பகுதிக்கட்டுரைகள் அமைகின்றன.

கம்பனில் நின்று', கம்பனில் தமிழ் இலக்கியங்களின் தாக்கம், தமிழ் இலக்கியங்களில் கம்பனின் தாக்கம் என்கிற நிலைப்பாட்டில் அமைகிறது இரண்டாம் பகுதி.

தனக்கு முன்னும் பின்னும் உள்ள தமிழ் இலக்கியப்பரப்பில் கம்பன் கால் பதித்த தடங்கள், காட்டிய பதிவுகள், ஊட்டிய உணர்வுகள், உருவாக்கிய வெளிகள் குறித்து, 15 ஆய்வாளர்கள் வழங்கிய கருத்தோவியங்களின் தொகுப்பாக இப்பகுதி அமைகிறது. சங்கஇலக்கியத்தில் தொடங்கி, சமகால இலக்கியத்தில் நிறைவுறும் இவ்ஆய்வுகள் இன்னும் பல கோணங்களில் தேடலை விரித்துச் சொல்ல வழிகாட்டுகின்றன எனலாம்.

'கம்பனைக் கொண்டு', நிகழ்த்தப்பெறும் ஒப்பாய்வு அணுகுமுறை உடைய 18 கட்டுரைகளின் தொகுப்பு மூன்றாம் பகுதியாகும். இது தமிழகத்து உதித்த திருவள்ளுவர், இளங்கோவடிகள், திருமூலர், திருத்தக்கதேவர், வில்லிபுத்தூரார் முதலியோரின் ஆக்கங்களோடும், புனிதவிவிலியத்தோடும், ஷேக்ஸ்பியர், மில்டன் ஆகிய மேனாட்டு இலக்கியவாதிகளின் படைப்புகளோடும், கார்ல்மார்க்ஸோடும் கம்பனை ஒப்பீட்டுக் கண்ட உண்மைகளை விளக்குவதாக அமைந்துள்ளன.

கம்பனின் படைப்பாற்றலுக்குப் பெருங்களனாவது பாத்திரப் படைப்பு. அவனது காப்பியத்தில் துலக்கமுறும் பாத்திரங்கள் பற்றிய கட்டுரைகள், நான்காம் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அது, 'கம்பனில் கண்டு' காட்டப்பெறுவனவாக அமைகின்றன.

தனித்தும் தொகுத்தும் காப்பியமாந்தர்களை ஆய்வுக்குட் படுத்தும் 30 கட்டுரைகளில், முதன்மைப்பாத்திரங்களை விடவும் துணைமைப்பாத்திரங்களை, ஆய்வாளர்கள் துலக்கிக்காட்டி யிருக்கிறார்கள். இராமன், பரதன், குகன், வாலி, கும்பன், அனுமன்,

காசியபமுனிவர் ஆகிய ஆண்பாற்பாத்திரங்களையும் அகலிகை, கைகேயி, சுமித்திரை, சூர்ப்பணகை, தாரை, மண்டோதரி ஆகிய பெண்பாற்பாத்திரங்களையும் பல்வேறு கோணங்களில் அணுகி-யிருக்கிறார்கள். அவற்றுள்ளும் குகன் பலரைக் கவர்ந்திருக்கிறான் என்பது குறிப்பிடத்தக்கது.

தத்தம் மனநிலையில் இருந்து, தமக்கான ஆய்வு மற்றும் ரசனை அனுபவங்களின் வெளிப்பாடாகக் கட்டுரையாளர்கள் படைத்தளித்திருக்கும் இந்நூலின் பக்கங்கள், கம்பனைப் பரவலாக்கவும், ஆழங்காற்படவும், மேலாய்வுகளுக்கு எடுத்துச்செல்லவும் தூண்டித் துணைசெய்யும் என நம்புகிறோம்.

இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் மாமாங்க வருடத்தில் கம்பன் குறித்த மதிப்பீடு எவ்வாறமைகிறது என்பதைப் பதிவு செய்யும் ஓர் எளிய ஆவணமாக இதனைக் கருத்திற்கொள்ளலாம்.

ஆர்வத்தோடு களமிறங்கி, ஆற்றலோடு எடுத்துமொழிந்திருக்கிற இக்கட்டுரையாளர்கள் இந்தத் துறைகளில் இன்னும் ஈடுபட்டு உழைத்தால் கம்பன் புகழ் பரவும் கன்னித் தமிழ் வளரும் என்பதைச் சொல்லி இத்துறையில் ஒத்துழைத்து எம்பணிக்குத் துணைசெய்த அத்துணைபேருக்கும் அகம் நிறைந்த அன்பால் நன்றி பல சொன்னோம் நயந்து.

- கம்பன் தமிழாய்வு மையத்தார்



உ ல க மி சை

உவந்திருந்தருளும் ஒரு தனிச்செம்மொழியரசியாம் கன்னித் தமிழ்த்தாய் காரைக்குடியில் முதன் முதலாகக் கோயில் கொண்டருளிக் காலமெல்லாம் பயன் சுரக்க அன்னை அவளருளை வேண்டி நிற்போம்.

மணிமண்டபத்து வடபால் அமையும் தமிழ்க்கலை தெரி கழகக் கூடங்களில் மொழி, கலை, பணி மலரவேண்டும். வரலாறு, மொழியின் எழுத்தின்– எண்ணின் இலக்கணத்தின் படிவளர்ச்சி, கட்டடத்துறை, ஓவிய– சிற்ப– படிமக்கலை, இவற்றுடன் இயைந்த கோணிலை, ஒளிநூல், ஆகமம், உருப்பா (தியானசுலோகம்) முதலியவற்றை முறைப்படி கற்பித்து வருங்காலத்தில் இத்துறை அறிவு வளம் பெறச் செய்யும் பயிற்சித்துறை மலர அன்னையவள் அருளை வேண்டுவோம்.

இந்த உணர்ச்சியை ஊட்டி ஆர்வத்தை உண்டாக்கி, ஈடுபாட்டைக் கொளச் செய்தவன் கவிச்சக்கரவர்த்தி கம்பனே! 'இவன் இசைகள் கூரக் கல்லாத கலையும், வேதக் கடலும் உலகத்து எங்கும் இல்லாத!' என்று சொல்லுமாப்போலே, கல்வியிற் பெரியனாய்ப் பிறங்குகின்றான் கம்பன். 'என்னையுமே தன்னடியாய்க் கொண்டு, கன்னித்தமிழ்ப் பணிக்கு என்னைக் கைகாட்டிவிட்ட, அன்னவன் அடித்துகளே அடியனேன் சென்னிக் கணி!' என நாளும் மகிழ்வேன்.

– கம்பன் அடிப்பொடி

(கம்பன் மணிமண்டபக் கால்கோள் விழாவில், 19.03.1970)

அ. கம்பனைக் கண்டு...

ஆ. கம்பனில் நின்று...

இ. கம்பனைக் கொண்டு...

ஈ. கம்பனில் கண்டு...

மூலமும் நடுவும் ஈறும் இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும் நீத்த காரணன்–கை வில்ஏந்தி
சூலமும்திகிரி சங்கும் கரகமும் துறந்து, தொல்லை
ஆலமும் மலரும்வெள்ளிப் பொருப்பும் விட்டுஅயோத்தி வந்தான்

- கம்பன்

இருபதாம் நூற்றாண்டில் கம்பராமாயணப் பிரதி

முனைவர் ஜே.பிறீடா மேபல் ராணி
நேசமணி நினைவுக் கிறித்தவக் கல்லூரி
மார்த்தாண்டம்

எல்லாக் காலகட்டத்திலும் தொடர் வாசிப்பினைப் பெற்றுவந்த இலக்கியப்படைப்புகளாக திருக்குறளையும், கம்பராமாயணத்தையுமே குறிப்பிட இயலும். தமிழில் பரவலாக அச்சு வடிவம் கண்டவையும் இவ்விரு இலக்கியப் படைப்புகள்தாம்.

20-ஆம் நூற்றாண்டில் அச்சுப் பிரதிகளின் உருவாக்கத்திற்குப்பின் தமிழ் இலக்கியங்கள் பெருவாரியான வாசகர்களைப் பெற்றன. இலக்கியப் படைப்புக்கள் புதிய கோணங்களில் வாசிக்கப்பட்டு புதிய மதிப்பீடுகளுக்கு உள்ளாக்கப்பட்டன. அச்சுவடிவம் கண்ட பல இலக்கியப் பிரதிகள் புதிய வாசகர்களால் புறக்கணிக்கப்பட்டன. இக்காலத்திலும் பெருவாரியான வாசகர்களைக் கொண்ட இலக்கியப் பிரதியாகக் கம்பராமாயணம் திகழ்ந்தது.

கம்பராமாயணம் பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து தமிழ் வாசகர்களின் கவனிப்பிற்கு உள்ளாகி வந்துள்ளது. 20-ஆம் நூற்றாண்டில் புதிய வாசகர்களை எளிதாகப் பெற அதற்கு முடிந்துள்ளது. இதற்கான காரணங்கள் விரிவான ஆய்விற்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

19-ஆம் நூற்றாண்டில் கம்பராமாயணம்

தமிழ் வாசிப்புத் தடங்கள் குறித்த தெளிவான தகவல்களை 19-ஆம் நூற்றாண்டிலிருந்தே பெற முடிகின்றது. கம்பராமாயணத்திற்குப் பின் வந்த தமிழ் இலக்கியங்களில் அதன் தாக்கத்தைக் காணமுடிவது அந்த இலக்கியங்கள் தோன்றிய காலக்கட்டத்திலும் கம்பராமாயணம் வாசிப்பில் இருந்ததை உணர்த்துகிறது. தமிழ் இலக்கியங்கள் வாசிப்பின் தடத்திலிருந்து மறக்கப்படுவதற்குச் சமயப்பார்வை காரணமாக அமைந்தது. எடுத்துக்காட்டாக, சங்கஇலக்கியங்கள் சமண இலக்கியங்களாகக் கருதப்பட்டு வாசிப்பிலிருந்து சைவர்களால் விலக்கப்பட்டன. இக்காரணத்தினால் 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய தாக்கத்தினால் இலக்கியப் பிரதிகள் தேடிப் பாதுகாக்கப்பட்டபோது சங்க இலக்கியங்கள் அதில் உட்படவில்லை. அதுபோலவே சிலப்பதிகாரமும்

மணிமேகலையும் 19-ஆம் நூற்றாண்டில் துவக்கத்தில் வாசிப்பில் இருந்திருக்கவில்லை. கம்பராமாயணத்திற்குக் காப்பிய அமைப்பிலும் கதை சொல்வதற்குத் தகுந்த யாப்பிலும் வழிகாட்டிய சிந்தாமணியும் வாசிப்பில் இருந்திருக்கவில்லை. செவ்வியல் இலக்கியங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஐரோப்பியப் பார்வையே, இவை பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் இடம் பெறவும் அதன் காரணமாக அச்சு வடிவம் பெறவும் காரணமாக அமைந்தது. சங்கச் செவ்வியல் இலக்கியங்கள் அப்போதும் மீட்கப்படவில்லை.

திருக்குறளுக்கும் கம்பராமாயணத்திற்கும் இச்சிக்கல்கள் இல்லை. சமயத்தளத்திற்கு வேறான பொதுத்தளத்தில் இவை வாசிக்கப்பட்டன 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எந்த இலக்கியங்கள் வாசிக்கப்பட்டன என்பதற்கு, கால்டுவெல்லின் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண முன்னுரையும்" -(1875-இல் வெளியான 'திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்' இரண்டாவது பதிப்பில் 'தமிழ்மொழி இலக்கிய வரலாறு விரிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.) "உ.வே. சாமிநாத ஐயரின்" 'என் சரித்திரம்' முதலியன சான்று பகர்கின்றன". (உ.வே.சா தான் கற்ற இலக்கியப்பிரதிகளைக் குறித்து 'என் சரித்திரத்தில்' குறிப்பிட்டுள்ளார். கம்பராமாயணமும் இதில் உள்ளடங்கியுள்ளது.)

19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஐரோப்பிய நோக்கில் தமிழ் இலக்கியங்களைக் கற்பிக்கும் இரு நிறுவனங்கள் சென்னையில் இயங்கின. ஐரோப்பிய அரசு அதிகாரிகளுக்குத் தமிழைக் கற்பித்த நிறுவனம் கோட்டையில் இயங்கியது. திருக்குறள் அச்சாக்கம் பெறுவதற்கு இக்கல்லூரி தோற்றுவித்த சூழல் காரணமாக அமைந்தது. ஐரோப்பியர்களுக்குத் தமிழைக் கற்பித்த ஆசிரியர்கள் முதலில் திருக்குறளைக் கற்பித்தனர். இக்கல்லூரி திரட்டிய சுவடிகளில் கம்பராமாயணப் பிரதியும் இருந்தது. இதே காலகட்டத்தில் சீர்திருத்த கிறிஸ்தவப் பணியாளர்களுக்குத் தமிழைக் கற்பிக்க ஒரு நிறுவனமும் இயங்கியது. 'டுறு' (Drew) போன்ற ஐரோப்பிய ஆசிரியர்கள் சமயப்பணியாளர்களுக்கு இலக்கியத்தைக் கற்பித்தனர். திருக்குறள், நாலடியார், சிந்தாமணி முதலியவற்றுடன் இராமாயணமும் கற்பிக்கப்பட்டது. வால்மீகி இராமாயணத்தையும் கம்பராமாயணத்தையும் ஒப்பிட்ட கால்டுவெல் கம்பராமாயணத்தின் இலக்கியநயத்தைப் பாராட்டியுள்ளார். "அதே சமயம் காப்பியத்திற்குப் பொருத்தமான யாப்பு வடிவில் இராமாயணம் சிந்தாமணிக்குக் கடன்பட்டுள்ளதையும்

தமது திராவிடமொழிகளின் ஒப்பிலக்கண நூலின் முன்னுரையில் குறிப்பிடுள்ளார்.

ஜி.யு.போப் தவிர ஏனைய சமயப்பணியாளர்கள் சமண இலக்கியங்களுக்கே முக்கியத்துவம் தந்துள்ளனர்; எனினும் கம்பராமாயணத்தைத் தமிழ் இலக்கியச் சிகரங்களுள் ஒன்றாக மதிப்பிடத் தவறவில்லை. கால்டுவெல் ஒப்பிலக்கண முன்னுரையில் தமிழ் இலக்கிய வரலாற்றைக் குறிப்பிடும்போது சமண வட்டம், இராமாயண வட்டம், சைவ வட்டம், எதிர் பார்ப்பனிய வட்டம், தற்கால இலக்கிய வட்டம் எனப் பாகுபாடு செய்துள்ளார். சமண இலக்கிய வட்டத்திற்கு அடுத்தாற்போல் இராமாயண வட்டத்தைக் குறிப்பிடுவது இராமாயணத்திற்கு அவர் தந்த முக்கியத்துவத்தை உணர்த்துகிறது. சமயப்பணியாளர்களுள் கால்டுவெல் அழகியல் பார்வை கொண்டவர் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

19-ஆம் நூற்றாண்டில் உ.வே.சாமிநாதய்யர் முறையாக கற்ற இலக்கியப் பிரதிகளில் கம்பராமாயணமும் உள்ளடங்கி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. 19 ஆம் நூற்றாண்டிலேயே உ.வே. சாமிநாதய்யர் சந்தையில் வைத்து விற்கப்பட்ட கம்பராமாயண அச்சுப் பிரதிகளைக் குறிப்பிடுகிறார். உ.வே.சாமிநாதையர் தன் உறவினரின் பொருளுதவியால் கம்பராமாயணப்பிரதியைச் சந்தையில் வாங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சமயஅடிப்படையிலான வாசிப்பிற்கு இராமாயணப் பிரதிகள் தேவைப்பட்டிருக்கலாம் சந்தை வாய்ப்பினைக் கருதி அச்சிடப்பட்டிருக்கலாம். ஆனால், குறைந்த அளவிற்காவது இராமாயணத்திற்குச் சமயம் சாரா வாசகர்கள் இருந்திருக்க வேண்டும். 19- ஆம் நூற்றாண்டில் சமய அடிப்படையிலான சிற்றிலக்கியங்களே எழுதப்பட்டன. வாசிக்கவும் பட்டன. அவ்வப்போது அச்சு வடிவம் பெற்றன. இச்சூழலில் கம்பராமாயணம் தொடர்வாசிப்பினைப் பெற்று வந்திருப்பது கவனிக்கத்தக்கது. கம்பராமாயணத்தைத் தவிர்த்து திருக்குறளுக்கு மட்டுமே இந்த வாசகப்பரப்பு இருந்தது.

19 - ஆம் நூற்றாண்டின் இறுதியில் சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களும் சங்கஇலக்கியங்களும் படிப்படியாக அச்சுவடிவம் பெறத் துவங்கின. புதிய இலக்கியப்பிரதிகள் அச்சுவடிவம் பெற்ற சூழலில் கம்பராமாயணத்தின் வாசகப்பரப்பு அதிகரித்தே வந்ததுள்ளது.

20-ஆம் நூற்றாண்டில் கம்பராமாயணம்

20-ஆம் நூற்றாண்டில் தேசிய இயக்கம் வலுப்பெறத் துவங்கியது. வாசகச்சூழலில் இது தாக்கம் செலுத்தியது. புதிதாக உரைநடை இலக்கியங்கள் தோற்றம் கொண்டன. இதழ்களின் வருகை வாசகப்பரப்பை அதிகரிக்கச் செய்தது. இலக்கிய ஆராய்ச்சியும் இலக்கிய விமர்சனமும் புதிதாகத் தோற்றம் கொண்டன. செந்தமிழ், தமிழ்ப்பொழில் போன்ற இதழ்கள் இலக்கிய ஆராய்ச்சியை முன்னெடுத்துச் சென்றன. தேசிய இயக்கத்தில் பங்குபெற்ற இலக்கியவாதிகள் ஆங்கிலேயர்கள் பெருமைகொள்ளும் மில்டன், ஷேக்ஸ்பியர் போன்ற செவ்வியல் இலக்கியங்களில் படைப்பாளிகளுக்கு நிகராகத் தமிழ்ச் செவ்வியல் படைப்பாளிகளை முன்னிறுத்த விரும்பினர். ஆங்கிலேயருக்கு ஈடான கலாச்சாரம் இந்தியர்களுக்கும் உண்டு என்பதே இதன் உட்கிடை. இலண்டனில் கல்வி கற்ற வ.வே.சு.ஐயர் விடுதலைப் போராளியாக இந்தியா வந்தடைந்தார். ஆங்கிலேயர்களுக்குத் தமிழரின் கலாச்சார உயர்வை உணர்த்த கம்பராமாயணத்தைத் தேர்ந்துகொண்டார். மில்ட்டனோடு கம்பனை ஒப்பிட்டு இராமாயணத்தின் சிறப்பை ஆங்கிலத்தின் மூலம் உலகின் பார்வைக்குக் கொண்டுவந்தார். வ.வே.சு.ஐயரால் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட 'கம்பன் ஓர் ஆய்வு' இந்திய மொழிகளில் முன்னோடியானது. பாரதி, ஷேக்ஸ்பியருக்கு விழா எடுப்பதுபோல் தமிழில் கம்பனுக்கும் விழா எடுக்க வேண்டுமென்றார். அக்காலச் சூழலில் ஆங்கிலேயர்கள் தங்கள் கலாச்சார உயர்வை ஷேக்ஸ்பியரை முன்னிறுத்தி வெளிப்படுத்த முயன்றனர். இதற்குப் போட்டியாக தமிழ்க் கலாச்சாரத்தின் உயர்வைச் சுட்டும் விதத்தில் கம்பனுக்கு விழா என்ற சிந்தனை பாரதியிடமிருந்து தோற்றம் கொண்டது. ஆனால், பாரதியோ திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரிப் பேராசிரியர் இத்தகைய விழாவிற்காக முயன்றார் எனப் பதிவு செய்துள்ளார்.

முப்பதுகளில் ஒத்துழையாமை இயக்கப் பின்னடைவின் போது தேசிய இயக்கம் மொழிவளர்ச்சியில் கவனம் செலுத்தியது.. உரைநடை இலக்கியங்கள் வாசககவனத்தைப் பெறத்துவங்கின. தமிழ்ப் புலமையாளர்களோ திருக்குறள் உட்பட்ட தமிழ் மரபிலக்கியங்களின் பெருமையை மிகையான தளத்தில் புகழ்ந்து கொண்டிருந்தனர். உரைநடைப் படைப்பாளிகள் இதற்கு எதிரிடையாக மரபிலக்கியங்களைப் புறக்கணித்தனர். இலக்கியப் புலமையாளருக்கும் சமகாலப் படைப்பாளிகளுக்குமிடையே முரண்பாடு தோற்றம்

கொண்டது. இலக்கியப் புலமையாளர்கள் தங்கள் புலமையை உயர்த்திக் காட்டுவதிலேயே முனைந்தனர். இலக்கியச் சொற்பொழிவுகள் புதிய போக்காகப் பரவத் தொடங்கின. கம்பராமாயண விரிவுரைகளும் நிகழ்த்தப்பட்டன. இந்த விரிவுரையாளர்கள் இரசனை உணர்வு கொண்டிருக்கவில்லை. இச்சூழலில் டி.கே.சி தன்னுடைய இரசனைப்பார்வையில் கம்பராமாயணத்தை அணுகிச் சாதாரண மக்கள் பார்வைக்குக் கொண்டு வந்தார். மக்களை இரசிக்கத் தூண்டினார். டி.கே.சி. கம்பராமாயணப் பாடலின் ஓசை நயத்திற்கும் கற்பனை வளத்திற்கும் முக்கியத்துவம் தந்தார். அதேசமயம் அவரால் இரசிக்க இயலாத கம்பராமாயணப் பாடலைக் 'கம்பனே எழுதவில்லை' என்ற முடிவிற்கும் வந்தார். கம்பராமாயணப் பிரதி மிகுந்த சிக்கலை எதிர்கொண்ட காலப்பகுதி இது. வேறுபட்ட பதிப்புக்களும் வெளிவந்தன. தொடர்வாசிப்பின் பயனாக, கம்பராமாயணப் பிரதி மாசு அடைந்திருந்தது. பல பாடல்கள் இடைச்செருகலாக நுழைக்கப்பட்டிருந்தன. ஏடு எழுதுபவர்களின் கவனக்குறைவால் நிகழ்ந்த பாடவேறுபாடுகள் வாசகர்களுக்குச் சிக்கலைத் தோற்றுவித்தன. இராமாயணத்தின் தூயபிரதிகளுக்கான தேடலும் இக்காலப் பகுதியில் தோற்றம் கொண்டது. வையாபுரிப்பிள்ளை போன்ற பேரறிஞர்கள் "கம்பராமாயணத்தின் தூயபிரதியை உருவாக்குவதை பெரும் கனவாகக் கொண்டிருந்தனர்". (1933-இல் வையாபுரிப் பிள்ளை அவர்கள் பாலகாண்டத்தில் முதல் ஏழு படலங்களைப் பதிப்பித்தார். கம்பராமாயணத்தின் தூய பிரதியைப் பதிப்பிப்பது குறித்த தன் கனவை பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.)

இக்காலப்பகுதியில் கம்பராமாயணப் பிரதிகள் வாசகர்கள் எளிமையாக அணுகும்வண்ணம் அச்சிடப்பட்டன. வை.மு.கோ. பதிப்பு இராமாயணத்தை, கல்வி வட்டத்தைச் சாராத வாசகர்களிடம் எடுத்துச்சென்றது. அழகியல் நோக்கிலான வாசிப்புக்கள் நிகழ இதுவே காரணமாக அமைந்தது. உரைநடை இலக்கியப்படைப்பாளியான புதுமைப்பித்தன் தன்னுடைய வாசிப்பினைப் பதிவு செய்துள்ளார். டி.கே.சி யைப் போலவே இராமாயணப்பாடலின் ஓசை இன்பத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டார் புதுமைப்பித்தன். ஆனால் டி.கே.சியைப் போல் மேலோட்டமான கற்பனைகளை, பரபரப்பான மொழியில் முன்வைக்கவில்லை. மாறாக, அனுபவங்கள் ஆழங்களில் பயணம் செய்து கம்பனின் மேதைமையை உணர்த்தினர். 'யுத்த காண்டமே' கம்பனின் படைப்புத்திறனின் உச்சம் எனக் குறிப்பிடுவது மிகுந்த

பொருளுடையது. தொடர்ந்துவந்த படைப்பாளிகளின் மரபு கம்பராமாயணத்தை முதன்மைப்படுத்த புதுமைப்பித்தனின் வாசிப்பு காரணமாக அமைந்தது.

20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கம்பராமாயணத்தின் மீது மூன்றுவிதமான வாசிப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளன. கல்வி வட்டத்தினைச் சேர்ந்த பேராசிரியர்களின் வாசிப்பு முதல் வகையானது. பேராசிரியர்களில் பலர் தங்கள் இலக்கியப் புலமையை விளம்பரம் செய்யக் கம்பராமாயணத்தைப் பயன்படுத்திக் கொண்டனர். மிகச்சிலரே நேர்மையான வாசிப்பினை நிகழ்த்தியவர்கள். இவ்வகையில் வ.சுப. மாணிக்கத்தைக் குறிப்பிடவேண்டும். அ.ச.ஞானசம்பந்தன் போன்றவர்கள் ஷேக்ஸ்பியரின் கதைமாந்தர்களை ஐரோப்பியக் கல்வி வட்ட அறிஞர்கள் ஆராய்ந்தது போல கம்பராமாயணக் கதைமாந்தர்களையும் ஆராய்ந்து கல்விவட்ட ஆய்வுகளுக்கு வழிகாட்டினார். டி.கே.சிமரபில் வந்த சொற்பொழிவாளர்கள் கம்பராமாயணம் மீதான மேலோட்டமான இரசனையைச் சொற்பொழிவுகள் மூலம் மக்களிடம் எடுத்துச் சென்றனர். கு.அழகிரிசாமி போன்ற படைப்பாளிகள் பொருளுடைய வாசிப்பினை நிகழ்த்தியுள்ளனர். ஜெயமோகன் போன்ற இளம் படைப்பாளிகள் கூட கம்பராமாயண வாசிப்பின்மீது கவனம் செலுத்துவது குறிப்பிடத்தக்கது.

20-ஆம் நூற்றாண்டின் எதிர்மறையான வாசிப்புகளுக்கும் இராமாயணம் உட்படுத்தப்பட்டது. 'இராமாயண உள்ளுறையும் தென்னிந்திய ஜாதிகளும்' என்னும் நூலின் மூலம் வெ. சுப்பிரமணிய முதலியார் இத்தகைய வாசிப்பினைத் துவங்கிவைத்தார். நூலின் முன்னுரையில் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளையின் கருத்துகளையே தான் முன்வைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இராமனை ஆரியனாகவும் இராவணனைத் திராவிடனாகவும் இவ்வாசிப்பு முன்வைக்கிறது. பார்ப்பனர்- பார்ப்பனரல்லாதார் அரசியலில் பார்ப்பனர்மீது வெறுப்பினைக் கட்டமைக்க, சைவர்கள் தொடர்ந்து இவ்வாசிப்பினை முன்னெடுத்துச்சென்றனர். இவர்களால் கந்தபுராணம் முதன்மைப்படுத்தப்பட்டது. எனினும் கம்பனின் படைப்பு மேதமை இராமாயணத்தைக் காலத்தை வென்று நிலைபெறும்படிச் செய்தது. ஈ.வே.இராமசாமிப் பெரியார் சைவர்களின் இந்த உத்தியைக் கையாண்டு பார்ப்பன எதிர்ப்பை இராமாயணத்தின்மீது நிகழ்த்தினார். சைவர்கள் நாகரிக மொழியில் செய்ததை, பெரியார் வழிவந்த திராவிட இயக்கத்தார் அரசியல்மொழியில் நிகழ்த்தினார். இத்தகைய எதிர்மறை வாசிப்புகள்

இராமாயணப்பிரதியின் செல்வாக்கை எவ்வகையிலும் குறைத்து விடவில்லை. 20- ஆம் நூற்றாண்டில் மிக அதிகமாக வாசிக்கப்பட்ட பிரதியாகக் கம்பராமாயணத்தையே குறிப்பிட வேண்டும்.

21- ஆம் நூற்றாண்டு கணினியின் காலக்கட்டம். அச்சுப்பிரதிகளை வாசிக்கும் பழக்கம் படிப்படியாகக் குறைந்து வருகிறது. வாசகர்களுள் ஒரு பகுதியினர் கணினி வலைத்தளத்தின் மூலமாகவே மரபிலக்கியங்களை வாசித்து வருகின்றனர். காலப்போக்கில் வாசகர்களுள் பெரும்பகுதியினர் இப்பிரிவைச் சார்ந்தவர்களாகவே இருப்பர். பாடவேறுபாடுகள் வலைத் தளத்தில் வாசிப்பவர்களுக்குப் பெருஞ்சிக்கலாக அமையக்கூடும். வையாபுரிப் பிள்ளை கனவு கண்ட கம்பராமாயணத்தின் தூய பிரதியை உருவாக்கும் சவாலை எதிர்கொண்டாக வேண்டும்.

கம்பராமாயணம் தோன்றிய காலம் தொட்டு இன்று வரை தமிழ் வாசகர்களின் கவனிப்பில் இருந்துள்ளது. நாளைய வாசகர்களிடமும் இராமாயணப் பிரதியை எடுத்துச் செல்வது ஒரு சமூகக் கடமையாக அமைகிறது.

கம்பரின் சுந்தர காண்டம் - கு.அழகிரிசாமியின் பதிப்பு ஓர் ஆய்வு

பேராசிரியர் வித்தகன்
தொண்டைநாடு ஆய்வு மையம், சென்னை

தமிழ் இலக்கியத்தில் யாவரும் அறிந்த புலவராக ஈடு இணை-யில்லாக் காவியக் கவிஞராக காலந்தோறும் திகழ்கிறவர் கம்பர். அவர்தம் இராமாயணத்தைப் பரப்பவும், அதன் மேன்மையை மக்களிடம் நிலைநாட்டவும் பலர் முன்வந்தார்கள். அவர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

- தம்பேச்சுத்திறனால் கம்பராமாயணத்தை மேடைவழி பரவ, பலநாட்கள். சொற்பொழிவு மற்றும் காலட்சேபம் மூலம் தொண்டு செய்தார்கள்; செய்கிறார்கள்.
- கம்பராமாயணத்தின் பெருமைகளை உரை எழுதி புத்தகம் மூலம் வெளிட்டார்கள்.
- கம்பராமாயணத்தின் பல முக்கியப் பாடல்களை எடுத்து அதற்கு மக்கள் ரசிக்கும்வண்ணம் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி, பெரிய அளவில் உணர வைத்தார்கள்.

இவற்றுள் இரண்டாவது வகையைச் சேர்த்தவர் கு.அழகிரிசாமி என்னும் சிறந்த எழுத்தாளர். கம்பர்மீதும் அவர் இயற்றிய இராமாயணத்தின்மீதும் நிறைமதிப்பு வைத்து அதனைப் பல பதிப்புகளாகச் செய்தவர். கட்டுரைத் தொகுதிகள், சிறுகதைத் தொகுதிகள் மற்றும் 'கம்பர் சக்கரவர்த்தி' என்ற நாடகமும் இயற்றி உள்ளார்.

கம்பராமாயணம்: சுந்தரகாண்டம் (மூலம் முழுவதும் அரும்பத உரை, அடிக்குறிப்புகள், விளக்கம்- வசனத்தில் கதைக் சுருக்கம்) பதிப்பாசிரியர்: கு.அழகிரிசாமி. வெளியீடு- தமிழ்ப்புத்தகாலயம் சென்னை. முதல் பதிப்பு : ஜூலை 1955. உரிமைப் பதிவோடு வெளியானது. அவருடைய இப்பதிப்பை ஆய்வதே இங்கு நோக்கம்.

ஆசிரியர் முழுமையாகக் கம்பரை உணர்ந்து சுந்தரகாண்டத்தில்/ தான் காணும் மெய் உணர்வுகளை எவ்வாறு எல்லாம் வெளிப்படுத்துகிறார் என்பது முக்கியமானது. கீழ்க் காணும்

அட்டவணை அவருடைய முக்கியமான நோக்கங்களைக் காணவும் ஆராயவும் உதவுகின்றது.

வ. எ	படலம்	பாடல்கள்	கு.பதிப்பு பக்./அடி.	உரை யா டல்
1	கடல் தாவு படலம்	1-95=95	24-27=141	8
2	ஊர் தேடு படலம்	96-329=233	27-31=141	5
3	காட்சிப் படலம்	330-406=76	31-32=61	6
4	நிந்தனைப் படலம்	406-488=81	33-35=92	6
5	உருக்காட்டு படலம்	489-605=116	35-39=170	12
6	சூடாமணி படலம்	606-694=88	39-44=201	11
7	பொழில் இறுத்த படலம்	695-754=59	44-47=96	6
8	கிங்கரர் வதைப் படலம்	755-815=60	47-48=59	4
9	சம்புமாலி வதைப் படலம்	816-866=50	48-50=61	4
10	பஞ்ச சேனாபதிகள் வதைப் படலம்	867-933=66	50-51=71 4	4
11	அக்க குமாரன் வதைப் படலம்	934-983=49	52-53=76	5
12	பாசப் படலம்	984-1046=62	54-56=77	7
13	பிணிவீட்டுப் படலம்	1047-1186= 139	57-60=153	17
14	இலங்கை எரியூட்டுபடலம்	1187-1250=63	60-62=47	5
15	திருவடி தொழுத படலம்	1251-1302=51	62-64=118	9
		1302	1604	109

மேற்கண்ட குறிப்புகளை ஆராயுமுன் ஒன்றைச் சொல்ல வேண்டும். ஆசிரியர் சிறுவர்இலக்கிய எழுத்தாளர். குழந்தைகளின்

உள்ளத்தை நன்கு அறிந்து எளிய முறையில் எழும் நடையை கொண்டவர். அதனால் அவருடைய எல்லா வசனமும் நமக்கு நன்றாக விளங்குகிறது.

சுந்தரகாண்டத்தின் ஒவ்வொரு வரியையும் நன்றாகப் படித்து உணர்ந்து அதனுள் உறங்கிக் கிடக்கும் மேன்மையைச் சுருக்கமாக வெளிப்படுத்துகிறார். பலஇடங்களில் பலசொற்கள் பொருள் விளங்காமல் போய்விட்டால் என்ன செய்வது? என்று எண்ணி சுமார் 875 சொற்களுக்கு அரும்பதஉரை அகராதி கடைசியில் கொடுத்து இருக்கிறார். பொருள்தானாகவே விளங்கவேண்டும் என்பதற்கு அவை படிக்கும்போது தெளிவு அடைகிறது. தனியாகவோ, சேர்ந்தோ படித்துப் பயன் அடையலாம். அதுவும் இல்லாமல் கம்பர் காலத்தில் அவர் கையாண்ட முக்கியச் சொற்கள் அரும்பதமாக இல்லாமல் அறியும்பதமாக நம்முன் பொருள் விளங்குகிறது.

கவிதை வரிகள் எளிதாகப் படித்து, பொருள் அறியும் பக்குவம் கொண்ட தமிழ்ப்பயிற்சி பெற்றவர்கள்போல, சாதாரண மனிதர்கள் படிக்கத் தூண்ட முயற்சி எடுக்கும் வகையில் கதையின் சுருக்கம் அமைகிறது. 1302 பாடல்கள் கொண்ட சுந்தரகாண்டத்திற்கு 1604 வரிகள் கொண்ட சுருக்கமாக எழுதுகிறார். அதுவும் எல்லாப் பாடல்களையும் எடுத்துக்கொள்ளாமல் முக்கியமான பாடல்களின் சுருக்கமே நமக்குக் கிடைக்கிறது.

கம்பரின் சுந்தரகாண்டக் கடலை எப்படிச் சுருக்கி சுவை ஊட்டுவது என்று ஆசிரியர் எண்ணியிருக்க வேண்டும். அதற்கு ஒருமுறையை நினைத்துப் பல இடங்களில் கதாபாத்திரங்களை தனியாகவோ அல்லது பிறரிடம் பேசவைக்கிறார். 'கவிச்சக்கரவர்த்தி' என்ற நாடகத்தின் ஆசிரியருக்கு இது மிகவும் எளிதாக அமைகிறது.

"......தனக்கு உயிர்த்துணைவியாக இருந்த, தாயினும் நல்லவளான திரிசடை என்பவளைப் பார்த்து சீதை. "எனக்கு இடது கண்ணும் இடது தோளும் துடிக்கின்றன. இந்த நிமித்தங்களின் பலன் என்ன என்று தெரியவில்லை" என்று கூறினார். "அது நல்ல நிமித்தமே. உன் கணவர் அனுப்பிய தூதன் ஒருவன் வருவது நிச்சயம். நீ உன் கணவனை அடையப்போவது உண்மை" என்றாள் திரிசடை. மேலும் திரிசடை தான் கண்ட கனவு ஒன்றையும் விரித்துச் சொன்னாள். "இராவணனின் அழிவைக் குறிக்கும் அந்தக் கனவில் அந்த அரக்கன் எண்ணெய்த் தலையோடு, கழுதைகளும் பேய்களும்

கட்டிய தேரில் ஏறி இரத்தம் தோய்ந்த ஆடையுடன் தென் திசைக்குச் செல்ல, அவனுடைய மக்களும் சுற்றத்தாரும், தொடர்ந்து சென்றனர். இலங்கையில் பூரண கும்பங்களில் கள் பொங்கியது. அரக்கியரின் தாலிகள் தாமாக அறுந்து விழுந்தன. மண்டோதரியின் கூந்தல் விளக்கில் பட்டு எரிந்தது. இராஜ்யலட்சுமியானவள் இராவணனுடைய மாளிகையை விட்டு விபீஷணனின் மாளிகைக்குப் போய்ச் சேர்ந்தாள். அந்தச் சமயத்தில் என்னைத் தூக்கத்தினின்றும் நீ எழுப்பிவிட்டாய். அதனால் என் கனவு முடியவில்லை" என்றாள் திரிசடை. மீதிக் கனவையும் காண்பதற்குத் திரிசடையைத் தூங்கும்படி சீதை கேட்டுக் கொண்டாள். (பக்கம்:31, 32)

மேலும் சீதையின் உணர்வை அழகாக எழுதுகிறார். "இராமனின் மோதிரத்தைப் பார்த்த சீதை, போன உயிரை மீண்டும் பெற்றவர்கள் போலவும், இழந்த செல்வத்தைப் பெற்றவர்கள் போலவும் குழந்தை பெற்ற மலடியைப் போலவும் ஆனந்தக் கடலில் மூழ்கி, மோதிரத்தைக் கையில் வாங்கித் தன் மார்பில் வைத்தாள்; தலைமீது வைத்தாள்; கண்ணில் நீர் பெருக்கினாள், வாய் திறந்து பேச வைத்தாள்; ஆனால் பேச முடியாமல் போய்விட்டது. இராமனின் மோதிரத்தால் சீதையின் மேனியில் புதியதோர் பிரகாசம் ஏற்பட்டது. கண்ணீர் சிந்திய வண்ணம் "உத்தமனே! நீ எனக்கு உயிர் தந்தாய்..... வீரனே! துணையில்லாமல் என் துன்பத்தைத் தீர்த்த வள்ளலே! நீ ஊழூழிக் காலமும் பதினான்கு உலகங்களும் அழியும் காலத்திலும் கூட இன்று போல் இருப்பாயாக" என்று சொல்லி அனுமனுக்குச் சாகாவரத்தைக் கொடுத்தாள் சீதை.

இவ்வாறு பல இனிய உரைநடை உரையாடல்கள் மூலம் இறை-யின்பத்தைக் கொடுத்து மேலும் நேராக சுந்தர காண்டத்தை படிக்கத் தூண்டும் பல தூண்டல்கள்மூலம் கம்பருக்கு அரிய தொண்டை ஆற்றிய கு.அழகிரிசாமி நம் பாராட்டைப் பெறுகிறார்.

கம்பனின் இருபதாம் நூற்றாண்டு உரையாசிரியர்கள் உயர்நலம்

மருத்துவர் ராம்
இலண்டன்

"இராமாயணம் தெய்வக்கதையாக மக்களிடம் பரப்பப்பட்டு வந்தது; இலக்கியமாக எடுத்து நோக்கப்படவில்லை. ஆதலின் கம்பராமாயணம் கி.பி. 9-ம் நூற்றாண்டில் எழுந்தது; எனினும் அதற்கு இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை குறிப்பிட்டுச் சொல்லத்தக்க உரை எதுவும் எழவில்லை" என்கிறார் முனைவர்சிலம்பொலி சு.செல்லப்பன் (அணிந்துரை, பாலகாண்டம், கம்பராமாயணம் (பள்ளத்தூர் பழ. பழனியப்பன் உரை) ப.XIII) கம்பருக்கு ஏன் ஒரு பரிமேலழகரோ, அடியார்க்கு நல்லாரோ, நச்சினார்க்கினியரோ தோன்றவில்லை என்பதற்கு இதுவும் ஓரளவுக்குப் பொருத்தமான காரணமாகவே தோன்றுகிறது. அப்படிப் பழைய உரைகள் தோன்றியிருந்தால், கம்பராமாயணத்துக்கு இவ்வளவு பாடபேதங்கள் முளைத்திருக்க மாட்டா என்ற எண்ணமும் தோன்றுகிறது.

1840-1843 ஆண்டுகளில் திருவேங்கடாசல முதலியார் வெளி-யிட்டதுதான் கம்பராமாயணத்தின் முதல் அச்சுப்பதிப்பு என்பதும், 1861-ஆம் ஆண்டில் கிருஷ்ணசாமி முதலியாரும், அதே ஆண்டில் காஞ்சிபுரம் சபாபதிமுதலியார்-கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை இருவரும் பாலகாண்டத்துக்கு மட்டும் முதன்முதலில் உரை வெளி-யிட்டனர் என்பதும் அறிய வேண்டிய தகவல். (கம்பன் காவியம், எஸ்.வையாபுரிப் பிள்ளை நூற்களஞ்சியம், ஐந்தாம் தொகுதி, ப. 442)

நாம் இந்தக் கட்டுரையில் 20-ஆம் நூற்றாண்டு உரையாசிரியர்களைப் பற்றி மட்டுமே காணவிருக்கிறோம். சில நூல்களின் பெயர் மட்டுமே தெரிய முடிகிறது; காணக்கிடைக்கவில்லை. உரையாசிரியர்களின் நோக்கத்திற்கும், அறிவின் ஆழத்திற்கும், அகலத்திற்கும் ஏற்ப உரைகளின் தன்மையும் விரிவும் மாறுபடுகின்றன.

பாடலுக்குப் பொருள் மட்டுமே தரும் தெளிவுரையிலிருந்து, பதவுரை, அருஞ்சொற்பொருள், மேற்கோள்கள், விளக்கவுரை, இலக்கணக் குறிப்பு, பாடபேதங்கள் என்று விரிவாகத் தரும் ஆராய்ச்சிப் பதிப்பு வரை வகைவகையான உரைகள் வெளி வந்துள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பற்றி இங்கே காண்போம்.

வை.மு.கோ. உரை

1894ல் தொடங்கி 1932 வரை ஏழு காண்டங்களாக வெளிவந்த வை.மு.கோபாலகிருஷ்ணமாச்சாரியார் உரை கம்பர் உரைநூல்களில் தலையாய இடத்தைப் பெற்றுள்ளது. எல்லாச் செய்யுட்கும் தலைப்பும், பதவுரை, இலக்கணக் குறிப்புகள், மேற்கோள்கள், புராணக் கதைகள் போன்றவையும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு செய்யுளும் சீர் பிரிக்கப்பட்டுத் தரப்பட்டுள்ளது. முதனூலுக்கும் இந்நூலுக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

கம்பராமாயணத்தில் ஆழமான அறிவுடைய முனைவர் தெ.ஞானசுந்தரம் "வை.மு.கோ.வின் உரை தன் செல்வாக்கால் மற்ற உரைகளை எல்லாம் 'இரவி என்பான் தன் புகழ்க் கற்றை மற்றை ஒளிகளைத் தவிர்க்குமாபோல்' ஒளி இழக்கச் செய்துவிட்டது" என்கிறார். (அணிந்துரை, பாலகாண்டம், கம்பராமாயணம் (பள்ளத்தூர் பழ. பழனியப்பன் உரை) ப.VIII) நீண்ட நாட்களாகக் கிடைக்காமல் இருந்த வை.மு.கோ. உரை அண்மையில் உமா பதிப்பகத்தாரின் துணையால் மீண்டும் கிடைக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

உ.வே.சா. நூலகப்பதிப்பு

மகாமகோபாத்யாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள் தம்வாழ்நாளில் பெரும்பாகத்தைக் கம்பராமாயண ஆராய்ச்சியிலும் செலவிட்டிருக்கிறார். அவர் கம்பராமாயணம் முழுவதையும் தம் ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் முறையாகப் பாடம் கேட்டிருந்தமையால் தாம் அறிந்த பல அருமையான செய்திகளை உடையதாய்த் திருத்தமான பதிப்பு ஒன்றை வெளியிட வேண்டுமென்பது அவருடைய பெருவிருப்பம். சுவடிகள்தோறும் பாடபேதத்தைக்கண்ட உ.வே.சா. அவர்கள் தமக்குக் கிடைத்த இராமாயணச் சுவடிகளை எல்லாம் துருவித்துருவி ஆராய்ந்து தம் முடிவுகளை கைப்புத்தகத்திலும் தனிக்குறிப்பு ஏடுகளிலும் குறித்துவைத்திருந்தார். நூலாராய்ச்சியில் ஈடு இணையற்ற உ.வே. சா அவர்கள் அப்படி ஒரு கம்பராமாயண நூலைப் பதிப்பிக்காமல் 1942ல் மறைந்தது மாபெரும் இழப்பாகும். எனினும் அவருடைய சுவடிகளையும், குறிப்புகளையும் கொண்டு அவருடைய குமாரர் கலியாணசுந்தரையர், பேரர் க. சுப்பிரமணிய ஐயர் போன்றோர்

முயற்சியால் 1949 தொடங்கி 1972 முடிய உ.வே.சா. நூல்நிலையப் பதிப்பாகக் கம்பராமாயண உரை 9 தொகுதிகளாக வெளிவந்தது. உ.வே.சா.வுடன் நெருங்கிய தொடர்புடைய கோ. சேஷாத்திரி ஐயர், மற்றும் எல். சீனிவாச ஐயர், ஈ.எஸ்.வரதராஜ ஐயர், தி.இராமானுஜ அய்யங்கார் போன்ற பல தமிழறிஞர்கள் உழைப்பால் உருவான உரைக் களஞ்சியம் இது.

செய்யுள்கள் யாவும் சந்திபிரிக்காமல் சீர்பிரித்து அச்சிடப் பட்டுள்ளன. அதன்பின் பதவுரை, விசேட உரை, இலக்கணக் குறிப்பு, ஒப்புமைப் பகுதி, மேற்கோள்கள், பிரதிபேதங்கள் முதலியன முறையே தரப்பெற்றுள்ளன. மிகவும் பயனுள்ள இந்த உ.வே.சா. நூல் நிலைய உரைத்தொகுதி இப்போது அச்சில் இல்லை.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இராமாயணப் பதிப்புப் பணி தொடங்கியது. 1952. முதல் தொகுதி வெளிவந்தது 1955. பதினாறாவது தொகுதியுடன் பணி நிறைவுற்றது 1970. இதில் சுந்தரகாண்டத்தின் முதற்பாகம் மட்டும் உ.வே.சா நூல்நிலையம் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இரண்டின் கூட்டுமுயற்சியால் உருவானது; மற்றவை அனைத்தும் இந்தப் பல்கலைக்கழகத்தின் தனிப்பட்ட முயற்சியே. அண்ணாமலைப் பதிப்பு என்பது இராமாயணம் பற்றிய பதிப்புக்களில் ஏதோ பத்தோடு பதினொன்று என்று வைத்து எண்ணத்தக்க சாதாரணப் பதிப்பு அல்ல. அதற்கென்று இலக்கிய வரலாற்றில் தனித்ததோர் இடம் உண்டு. கம்பராமாயணத்தை முறையாகப் பதிப்பிப்பதில் உள்ள பெரும் அறைகூவல் என்னவென்றால் எது சரியான மூலபாடம் என்று கண்டறிவதே. 10,000க்கும் மேற்பட்ட பாடல்களில் பாடபேதம் இல்லாத பாடல்கள் 11 மட்டுமே. பாடலுக்குப் பாடல், அடிக்கு அடி, சீருக்குச் சீர் பாட பேதங்கள் கணக்கின்றி உள்ளன. மிகைப் பாடல்கள் மட்டும் 1309.

மு.இராகவையங்கார், ரா.பி.சேதுப்பிள்ளை, கோ.சுப்பிரமணிய பிள்ளை போன்ற அறிஞர்கள் கூடிப் பல்லாண்டுக்காலம் ஆராய்ந்து இவைதாம் கம்பர் பாடல்கள் என்று துணிந்த 10534 பாடல்களும் இந்தப் பதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலும் முதலில் சந்தி பிரிக்காமல், யாப்பிலக்கணப்படி பதிப்பிக்கப்பட்டுள்ளது. அடுத்துச் சந்தி பிரித்து அனைவரும் படித்துப் புரிந்துகொள்ளும்

விதத்திலும் தரப்பட்டுள்ளது பாடற்பொருளும். அதன்பிறகு குறிப்புரை என்ற தலைப்பில் கடினமான பகுதிகளுக்குப் பதவுரை, கருத்துரை, இலக்கணக் குறிப்புக்கள் போன்றவையும் கொடுக்கப்பட்டுள்ளன.

மொத்தப் பக்கங்கள் 15827 அதில் மூலமும் உரையும் 10289 பக்கங்கள். பாடபேதங்கள் மட்டும் 5538 பக்கங்கள் (பாடபேதக் கடலுக்குள் மூழ்கிச் சரியான பாடல் முத்துக்களைத் தேர்ந்தெடுக்க விழையும் ஆராய்ச்சியாளர்க்கு இது மிகவும் பயனுள்ள பகுதி).

கிடைத்தற்கரிய இந்த ஒப்பற்ற பதிப்பு ஒளிநகல் செய்யப்பட்டு 16 தொகுதிகளும் தற்போது மலிவு விலையில் மீண்டும் கிடைக்கிறது என்பது தமிழ் நெஞ்சங்களைக் குளிர்விக்கும் செய்தி.

கோவை கம்பன் அறநிலை வெளியீடு

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்களின் நெறிகாட்டுதலின் -படி ம.ரா.போ.குருசாமி போன்ற பல தமிழறிஞர்கள் கோவை கம்பன் அறநிலை சார்பாக உருவாக்கிய இந்த உரை 1994-ல் 8 தொகுதிகளாக வெளியிடப்பட்டது. ஒவ்வொரு பாடலையும் சொற்கள் பிரித்து ஆனால் சீர்கள் பிரிக்காமல் ஓரளவு தமிழ்ப்பயிற்சி உடையவர்களும் எளிதில் மூலத்தைப் படித்துணருமாறு அச்சிட்டிருக்கிறார்கள்.

இது மர்ரே இராஜம் மற்றும் சென்னைக் கம்பன் கழகம் வகுத்துத் தந்த விதிமுறை. படலந்தோறும் முன்னுரை உண்டு. செய்யுள், பதவுரை, விளக்கவுரை, இலக்கணக்குறிப்பு, ஒப்புமைப்பகுதி எல்லாம் உண்டு. ஒவ்வொரு காண்டத்துக்கும் அ.சா.ஞா. எழுதியுள்ள முன்னுரையும், இந்தி, வடமொழி போன்ற பல மொழிகளில் உள்ள இராமாயண நூல்களைக் கம்பரோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பேராசிரியர் அ.அ.மணவாளன் எழுதியுள்ள ஒப்பிலக்கியக் கட்டுரையும் இந்தப்பதிப்பின் சிறப்பு அம்சங்களாகும். பல உரையாசிரியர்கள் தனித்தனியே எழுதியுள்ளதால் எல்லா இடங்களிலும் ஒரே அணுகுமுறை இல்லை என்பது சிலரது மனக்குறை. எனினும் இது மிகவும் பயனுள்ள பதிப்பு என்பதில் ஐயமில்லை.

இன்னுமொரு தகவல். இந்த உரை முழுவதும் தமிழ் இணையக் கல்விக்கழகம் (Tamil Virtual Academy → www.tamilvir.org) வழங்கும் இணையதளத்தில் கிடைக்கிறது. இணையத்தில் தற்போதைக்குக் கிடைக்கும் ஒரே கம்பராமாயண உரை இதுவே.

சொ. முருகப்பா வெளியீடு

சொ.முருகப்பா அவர்கள் தமிழ்க்கடல் இராய.சொக்கலிங்க னாருடன் இளமையில் தமிழ் இலக்கியம் பயின்றவர். பல்வேறு துறைகளில் சமூக சீர்திருத்தப் பணியாற்றிய அவர் இறுதிக் காலத்தில் இராமகாதை ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

இடைச்செருகல்கள் என்று அவர் கருதிய பல பாடல்களை நீக்கிவிட்டு மொத்தம் 3248 பாடல்களை மட்டுமே முருகப்பா தேர்ந்தெடுத்தார். 1953-இல் பால காண்டத்தில் 402 பாடலுக்கும், அவர் மறைவுக்குப்பின் அயோத்திக் காண்டத்தில் 623 பாடலுக்கும் உரைகள் வெளிவந்தன.

"உரைராம காதைக்கு உரைப்பனென நின்றேன்
வரையாதென் ஆயுள்வகுப் பாய்"

என்று வெண்பாப் பாடிய சொ.முருகப்பனார் அவருடைய நோக்கம் நிறைவேறும் முன்பே மறைந்துவிட்டார். எனவே மற்ற காண்டங்களுக்கு உரை வெளிவரவில்லை.

பண்டிதமணி கதிரேசன் செட்டியார், வையாபுரிப்பிள்ளை, இராய.சொ. போன்ற அறிஞர்கள் இந்த உரையினை நயந்து முன்னுரை எழுதியுள்ளனர். முருகப்பனாரின் தமக்கையாரின் பேத்தி மகனும், காரைக்குடி கம்பன் கழகச்செயலாளரும் ஆகிய கம்பன் அடிசூடி பழ.பழனியப்பன் மற்றும் நா.சந்திரசேகரன் ஆகியோர் முயற்சியால் இந்த உரை ஸ்ரீஇந்து பப்ளிகேஷன்ஸ் வெளியீடாக மீண்டும் அச்சில் வந்துள்ளது. மற்ற உரைகளினின்றும் வேறுபட்டதும் சிந்தனையைத் தூண்டுவதும் ஆகியது முருகப்பனாரின் உரை.

1920 ஜனவரியில் மகாகவி பாரதியார் காரைக்குடி இந்து மதாபிமான சங்கத்துக்கு வந்தபோது எடுக்கப்பட்ட பிரபலமான புகைப்படத்தில் பாரதியாருக்கு இடது பக்கமாக அமர்ந்திருப்பவர்தான் சொ.முருகப்பா. தேச விடுதலை இயக்கத்திலும், சமுதாய மறுமலர்ச்சி இயக்கத்திலும் முன்னணி வகுத்த இந்த ஒப்பற்ற தமிழர் கம்பராமாயண ஆராய்ச்சியிலும் தனித்துவம் மிக்க சிந்தனையோடு செயல்பட்டார் என்பதற்கு இந்தக் கம்பராமாயணப்பதிப்பு ஒரு நல்ல சான்று.

கம்பராமாயண சாரம்

ஆங்கிலம், தமிழ் இரண்டிலும் புலமைமிக்க அறிஞர் வெள்ளக்கால் ப.சுப்பிரமணிய முதலியார் அவர்கள் 'கம்பராமாயண

இன்கவித்திரட்டு' என்ற தலைப்பின்கீழ் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 'செந்தமிழ்' என்ற இதழில் 1922ஆம் ஆண்டு முதல் பன்னிரண்டு ஆண்டுகட்கு மேலாகத் தொடர்ந்து எழுதி வந்தார். சில பகுதிகள் 'பஞ்சாமிர்தம்', 'தமிழர்நேசன்' என்ற பத்திரிகைகளிலும் வெளிவந்தன.

தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகத்தார் 1936-37 ஆண்டுகளில் 'கம்பராமாயணசாரம்' என்ற தலைப்பில் அந்த ஆராய்ச்சிக்கட்டுரைத்தொகுதியை வெளியிட்டார்கள். கம்பராமாயணம் முழுவதையும் படித்து இன்புறுவதென்பது யாவருக்கும் இயலாத காரியம் என்பதால், வெ.ப.சு. அவர்கள் மிகவும் இனிய கவிகளை மட்டும் தேர்ந்தெடுத்துக் கதைத்தொடர்ச்சி குலையாமல் அற்புதமான விளக்கவுரையை வழங்கியுள்ளார்.

ஒவ்வொரு பாடலும் சீர்பிரித்து அச்சிடப்பட்டுள்ளது. அதன்பின் கொண்டுகூட்டு, பொருள்உரை, மேற்கோள்கள், பாடபேதம் போன்றவை தரப்பட்டுள்ளன. வேண்டிய இடங்களில் வை.மு.கோ. உரையும், மு.ரா.கந்தசாமிக் கவிராயர் உரையையும் (இது தற்போது அச்சில் இல்லை) மேற்கோள் காட்டி விளக்கி இருக்கிறார்.

'பல காலம் தேர்ந்து தேர்ந்து இன்புற்று வெளியிடப்படுவதாதலின் இப்புத்தகம் முதலியாரவர்களுடைய பலவகை ஆற்றல்களையும், ஆராய்ச்சி முறைகளையும் தெரிவிக்கின்றது' என்று முன்னுரையில் உ.வே.சா அவர்கள் பாராட்டி எழுதியுள்ளார்.

படிக்கப் படிக்க இனிக்கும் அறிவார்ந்த உரைநூல் 'கம்பராமாயண சாரம்'. டி.கே.சி. உரை: (1942-1953)பொதுவாகத் தமிழ் இலக்கியத்தையும், குறிப்பாகக் கம்பராமாயணத்தையும் அணுஅணுவாக ரசித்த டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் எழுதிய உரை 'கம்பர் தரும் ராமாயணம்' என்ற பெயரில் வெளிவந்தது. 'பாடலைப் பாட வேண்டுமே ஒழிய, வசனத்தைப் போல வாசிக்கக்கூடாது' என்ற கருத்துக்கொண்ட டி.கே.சி. சந்தம் ஒன்றையே அளவுகோலாகக் கொண்டு பாடல்களைச் சீர்தூக்கிப்பார்த்து "இவைதாம் கம்பர் பாடல்கள்" என்று ஏற்றுக் கொண்டவை 1510 மட்டுமே. மற்ற பாடல்கள் எல்லாம் இடைச்செருகல் என்று விலக்கிவிட்டார்.

அவர் ஏற்றுக் கொண்ட பாடல்களுக்கு மட்டும் விளக்க உரை எழுதி வெளியிட்டார். சந்தத்திற்கு ஏற்றபடி பழைய பாடல்களைத் திருத்தியும் வெளியிட்டார். இந்த உரையில் உள்ள பாடல்களில்

கதைத்தொடர்ச்சி இல்லை. இவருடைய அணுகுமுறையை நல்ல ஆராய்ச்சி நெறி என்று வையாபுரிப் பிள்ளை போன்ற தமிழறிஞர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. (Kamban as edited by T.K.C, The Hindu, 14.02.1954, S. Vaiyapuri Pillai) டி.கே.சி. அளவுகோலாகக் கையாண்ட 'தான, தன்னன' போன்ற சந்தங்கள் யாப்பிலக்கண முறையிலும் பொருந்திவரவில்லை, அருணகிரிநாதர் கையாண்ட வண்ணப்பா வகைக்கும் ஒத்து வராதவை என்பது அவர்தம் கருத்து.

டி.என்.சேஷாசலம் ஐயர் உரை: [1926]

கம்பர் கருத்தை அவர் தேர்ந்தெடுத்த சொற்களைக் கொண்டே தெளிய வைத்தல் தக்கது என்னும் புதிய முறையை இவர் கையாண்டுள்ளார். பாலகாண்டத்துக்கு மட்டுமே இவர் உரை கிடைத்துள்ளது. கம்பர் தந்த செம்மொழித் தொடர்நயம் ஓதுவோர் மனத்தில் ஊன்றிப்பழக இது நல்ல சாதனம் என்று அவர் கருதினார். எடுத்துக்காட்டாக 'அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள்' என்ற பாடலுக்கு உரை:

> 'எண்ணவும் அரிய நலத்தினாள் (ஆகிய சீதை மேற்சொல்லியவாறு) இனையளாய் நின்றுழி (ஒருவர்) கண்ணொடு (மற்றொருவர்) கண் இணை கௌவி ஒன்றை ஒன்று உண்ணவும், நிலை பெறாது (அவர்கள்) உணர்வும் ஒன்றிட அண்ணலும் அவளை நேராக நோக்கினான், அவளும் (எதிர்) நோக்கினாள்'. பிற உரைகள்: வித்வான் ராமசாமி நாயடு எழுதிய உரை 1929-ல் வெளிவந்தது என்று வையாபுரிப் பிள்ளை தெரிவிக்கிறார் (நூற்களஞ்சியம், பக்கம் 446).

வ.வெ.சு.ஐயர் 1917-ல் பாலகாண்டத்தை மட்டும் அரும்பொருள் விளக்கத்துடன் தந்துள்ளார். பி.ஸ்ரீ. எழுதிய 'சித்திர ராமாயணம்' மிகுந்த வரவேற்பைப் பெற்றது. கவிராஜ பண்டிதர் ஜெகவீரபாண்டியனார் இராமாயணப் பாத்திரங்கள் வழியாகக் கம்பர் பாடல்களை அணுகி விரிவான விளக்கத்துடன் 'கம்பன் கலை நிலை' என்ற தலைப்பில் 15 தொகுதிகளாக 1940-களில் வெளியிட்டார். இப்போது தமிழ்நிலையம் உதவியால் மறுபதிப்பு வந்துள்ளது.

இலங்கை மகாவித்துவான் சி.கணேசையர் 'இராமாவதாரச் செய்யுட் பாடாந்தரம்' என்ற பெயரில் செந்தமிழ் இதழில் எழுதிய தொடரில் திருந்திய பாடமும் உரையுமாகப் பல பாடல்களை விளக்கியுள்ளார்.

வர்த்தமானன் பதிப்பகம் வெளியிட்ட கம்பராமாயணப் பதிப்பு (முனைவர் பூவண்ணன்) பாடலும் பொருளும் மட்டும் அடங்கிய தெளிவுரை ஆகும்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் திருமகள் நிலையம் 10 தொகுதிகளாகக் கம்பராமாயண உரையை வெளியிட்டுள்ளது. எம். நாராயணவேலுப்பிள்ளை, வ.த.இராமசுப்பிரமணியன், துரை. இராசாராம் ஆகியோர் விரிவாகவும், ஆழமாகவும் எழுதிய இந்த உரை இன்னும் விற்பனையில் உள்ளது.

பள்ளத்தூர் பழ.பழனியப்பன் வெளியிட்ட உரை 9 தொகுதிகளாக வெளிவந்தது. மிக விரிவானதும், அதே சமயத்தில் எளிமையானதும் ஆகிய இந்த உரைத்தொகுதி இருபதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் தயாரானபோதிலும், 21-ஆம் நூற்றாண்டில்தான் வெளிவந்தது.

இது தவிர சண்முகம்பிள்ளை உரை (1919), சுப்பராய செட்டியார் உரை (1904), வி.கோவிந்தப்பிள்ளை உரை (விளம்பி வருஷம் 1898- 1899) போன்ற நூல்களும் பல ஆசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

முடிவுரை

ஒரு நல்ல உரை என்பது வெறுமனே அருஞ்சொற்களுக்குப் பொருள் மட்டும் தருவது அல்ல. பாரதியார் குறிப்பிட்டதைப் போல 'அணிசெய் காவியத்தில் ஆழ்ந்திருக்கும் கவி உள்ளத்தை' அனைவரும் உணரச்செய்வதும் உரையாசிரியர் பணி ஆகும். அத்துடன் மேற்கோள்கள், ஒப்புமைப்பகுதி, இலக்கணக் குறிப்புகள் என்றெல்லாம் சேரும்போது அழகுக்கு அழகு சேர்க்கும். இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த இராமாயண உரைகள் பல இந்த எழில் நலம் மிக்கவை. இனி வரப்போகிற நூற்றாண்டுகளிலும் மேலும் புதிய உரைகள் புத்தம்புது அணுகுமுறைகளோடும் சிந்தனைப் போக்குகளோடும் உருவாகி வெளிவந்து' கல்வியிற் பெரியவர் கம்பர்' என்பதை ஒவ்வொரு தலைமுறையினரும் மீண்டும் மீண்டும் அனுபவித்து ரசிப்பார்கள் என்பதும், 'காலந்தோறும் கம்பர்' கற்பவர்கள் உள்ளத்துக்குக் களிப்பூட்டுவார் என்பதும் உறுதி.

கம்பனின் கருத்தாக்கமும் கவிநயமும்

திருமிகு த.செந்தமிழ்ச் செல்வன்
அஞ்சல அதிகாரி, சென்னை-59.

கம்பராமாயணம் உலகக் காப்பியங்களுள் ஒன்றெனக் கருதப்படுகிறது. அதன் காரணமாக தன்னுள் பல சிறப்புக்களைப் பெற்றிருப்பது அதனைக் கற்றோர் அறிந்த உண்மையாகும். நட்பின் சிறப்பை, கற்பின் வன்மையை, தீமையின் அழிவை, தியாகத்தின் உயர்வை என பலநிலைகளில் எடுத்தியம்பும் ஒரு உன்னதக் காப்பியம் ஆகும். இக்கட்டுரை கம்பனின் கருத்தாக்கத்தையும், கவிநயத்தையும் சுருக்கமாக ஆய்வதாக அமைகின்றது.

'பழையதைச் சொல்ல வேண்டும்;
அதை புதியதாகச் சொல்ல வேண்டும்!
புதியதைச் சொல்ல வேண்டும் - அதை
புதுமையாகச் சொல்ல வேண்டும்'

என்பார் கவிக்கோ அப்துல் ரகுமான். இம்மொழிக்கு ஏற்ப, கம்பர் முதல்நூலை அப்படியே முற்றிலும் தழுவிக்கொள்ளாமல், சில இடங்களில் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் தமிழ் மரபுக்கேற்ப இராமாயணத்தை அமைத்து, 'கவிச்சக்கரவர்த்தி' என்ற பெயர் பெற்றார்.

'நடையின் நின்று உயர் நாயகன் தோற்றத்தின்
இடைநி கழ்ந்த இராமாவ தாரப்பேர்த்
தொடைநி ரம்பிய தோமறு மாக்கதை' (தற்சிறப்புப்பாயிரம் 11)

வால்மீகி வடமொழியில் எழுதிய காவியத்துக்குப் பெயர் 'இராமாயணம்' என்பது. ஆனால் கம்பர் தமிழில் அமைத்த காவியத்திற்குப் பெயர் இராமாவதாரம் என்பதாகும். அதாவது இராமனது அவதாரச் சிறப்பை எடுத்தியம்புவது என்பது பொருளாகும்.

வான்மீகி காட்டிலே கண்டெடுத்த இராம கதையை,

'மெதுவாகச் சுளை எடுத்துத் தேனும் வார்த்து
நூல்படிந்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்
கம்பன் என்ற தமிழ்த்தாயர் நோற்ற மைந்தன்'

என்று கம்பன் பலாச் சொல் வளத்தை நாமக்கல் கவிஞர் சுவைக்கின்றார்.

இராமன், இலக்குவன் இருவரும் விசுவாமித்திர முனிவரோடு மிதிலை நகரை அடைகின்றனர். அந்நகரின் அழகிய காட்சிகளைக் கண்டு களித்தவாறே அரச வீதியில் செல்கின்றனர். அரண்மனை அருகில் செல்கையில் கன்னிமாடத்தின் மேலிடத்தில் சீதையானவள் அன்னங்கள் விளையாடுவதைக் கண்டு இரசிக்கிறாள். இராமன் அவளைக் காண்கின்றான். அவ்வழகிய காட்சியைத் தம் கற்பனைக் கண்கொண்டு கண்ட கம்பர்

'பொன்னின் சோதி போதினில் நாற்றம் பொலிவேபோல்
தென்னுண் தேனின் தீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னி மாடத் தும்பரின் மாடே களிபேடோடு
அன்னம் ஆடும் முன்துறை கண்டு' (மிதிலைக் காட்சிப்படலம் 23)

என்றுபாடி இதில் இராமன் கண்ட சீதையின் பொலிவினைத் தாம் கற்பனையில் கண்டவாறே கம்பர் தம்கருத்தில் பதிய வைக்க முற்படுகின்றார். உவமையின் துணைகொண்டு அதை நம் உள்ளத்தில் பதிய வைக்க முயல்கின்றார். 'பொன்னின் சோதி, போதினில் நாற்றம், தேனின் சுவை' என உவமைகளை அடுக்குகின்றார். அந்நிலையிலும் அவர் உள்ளம் நிறைவு அடையவில்லை. கடைசியில் 'செஞ்சொற் கவியின்பம்' என உருவகம் காட்டுகின்றார்.

கடவுள் வாழ்த்து அமைந்த முறைமை

. கம்பராமாயணம் பிற தமிழ்க் காப்பியங்களைப் போலல்லாது ஒவ்வொரு காண்டத்திலும் கடவுள் வாழ்த்தினைக் கொண்டுள்ளது. நூலின் தொடக்கமாக அமைந்துள்ள பாலகாண்டத்திற்கு மூன்றும், ஏனைய ஐந்து காண்டங்களுக்கும் ஒவ்வொன்றுமாக மொத்தம் எட்டுப் பாடல்கள் கடவுள் வாழ்த்துப் பாடல்களாகும்.

அது மட்டுமல்லாமல் பாலகாண்டத்தின் கடவுள் வாழ்த்து பாடலே நூல் முழுமைக்கும் முதல் பாடலாக அமைந்தது.

'உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே' (பாயிரம் 1)

'உலகம் முழுவதையும் படைத்து, காத்து, அழித்து வருகின்ற சுழற்செயல்களை விளையாட்டாகச் செய்து வருபவரே உலகிற்குத் தலைவர். அந்தத் தலைவராகிய இறைவனையே நாங்கள் சரண்

அடைவோம்' என்ற கருத்தை மேற்காணும் பாடல் விளக்குகின்றது. இப்பாடல் படைக்கும் தொழிலைச் செய்வதாகக் கருதப்படும் பிரம்மனையோ, காக்கும் தொழிலைச் செய்வதாகக் கருதப்படும் திருமாலையோ, அழிக்கும் தொழிலைச் செய்வதாகக் கருதப்படும் சிவனையோ குறிக்கவில்லை என்பதையும், அம்மூவர்க்கும் முதலாக, மூலமாகத் தலைமைத்துவம் பெற்ற 'ஓர் இறைவனையே' குறித்து போற்றுவது சிறப்புக்குரியது.

தென்னிந்திய மொழிகளில் பல இராமாயணங்கள் தோன்றி-யிருப்பினும், தமிழில் கம்பன் இயற்றியுள்ள இராமகாதைக்கு இணையாக எதையும் கூற இயலாது. தனது மூல நூலாகிய வால்மீகி இராமாயணத்தையே மிஞ்சும் அளவிற்கு பெருமையினை உடையது கம்பராமாயணம் என்பது வ.வே.சு. ஐயரின் கருத்தாகும்.

தத்துவ முத்துக்கள் கொண்டது

உலகப் பெருங்காவியமான கம்பராமாயணத்தில் தத்துவ முத்துக்கள் பலவாகப் புதைந்து காணப்படுகின்றன. மீண்டும், மீண்டும் படித்துப் படித்து இராமாயணம் என்னும் கடலில் மூழ்கித் திளைப்போர்க்கே அது விளங்கும். இராமாயணத்தைச் 'சரணாகதி சாத்திரம்' என்பர். இறைவனைக் கருணைக்கடல் என்பர். கடலிலிருந்து எவ்வளவுதான் தண்ணீர் முகந்தாலும் அது தன்னளவில் குறைவதில்லை. அதுபோல இறைவன் யாருக்கு எவ்வளவு கருணை காட்டினாலும்,அவனிடமுள்ள கருணைக் குணமானது எள்ளளவும் குறைவதில்லை.

அவனது கருணையைப் பெற அவனை வழிபடலாம். நாம் அதைவிட அவனையே சரணடைந்து விட்டால் போதும். காப்பாற்றுகிறவன் அவன். அர்ச்சுனனுக்கு இதைத்தான் சொன்னார் கிருஷ்ண பகவான். 'அர்ச்சுனா... என்னை சரணடைந்து விடு. உன்னை நான் காப்பாற்றுகிறேன்' என்றார். இதை சரணாகதித் தத்துவம் என்கின்றனர். இராமாயணத்தில் இத்தத்துவம் பயிலப்படுகிறது. இராமனைச் சரணடைந்து உயிர் தப்பினான் காகாசுரன். இராமனை சரணடைந்து இராஜ்யசுகம் பெற்றான் வீடணன்.

இன்னமும் இறைவனை அடைவதற்கு ஞான யோகம், பக்தி யோகம், கர்ம யோகம் என்று சொல்லப்பட்ட பல வழிகளைவிட மிக எளிய வழியே 'சரணாகதி' என்பர். 'சரணாகதி தத்துவம்' இராமகாதையின் உயிர்க்கொள்கை. வீடணன் அடைக்கலப்படலத்தில்,

'உடைந்தவர்க்கு உதவான் ஆயின்
உள்ளதொன்று ஈயான் ஆயின்
அறன் என்னாம்? ஆண்மை என்னாம்?'

என்று இராமன் வாயிலாகக் கூறுவது கம்பனின் கருப்பொருளுக்குச் சான்றாகத் திகழ்கின்றது.

'ஒருவனின் இறுதி மூச்சு நிற்கும்போதும்கூட, இறைவனை நினைத்தால் அவன் இறைவனையே அடைகிறான்;' என்பது கீதையின் தத்துவக் கருத்தாகும். 'வாலி வதைப்படலத்தில்' இக்கருத்து வலியுறுத்தப்படுகிறது.

வாலி இராமனைப் பரம்பொருள் என்று அறிந்தவுடன் பக்தியோடு இறுதி நேரத்தில் நினைத்துத் துதித்தான். கடைசி மூச்சு நிற்கும் நேரத்தில் இந்தப் பேறு கிடைத்ததை நன்றியோடு நினைத்து,

'ஆவி போம் வேலை வாய் அறிவு தந்து அருளினாய்' என்று இராமனிடம் கூறினான் வாலி. தான் உணர்ந்த பரம்பொருளைத் தன் மகன் அங்கதனுக்கும் காட்டிக் கொடுத்தான்.

'மால் தரும் பிறவி நோய்க்கு மருந்தென வணங்கு மைந்த!' என்று அங்கதனுக்கு அறிவுரை கூறுகின்றான். வாலி இறந்ததைக் கூறும் கம்பர், 'வானுக்கு அப்புறத்து உலகன் ஆயினான்' என்று கவிக் கூற்றாகக் கூறுகின்றான்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல, கால வகை-யினானே' என்பது நன்னூல் இலக்கணச் சூத்திரம். இது மொழிக்கும், மொழிக்கான இலக்கணத்திற்கு மட்டும் கூறியது அன்று. மொழி சார்ந்த இலக்கிய நடவடிக்கைகளுக்கும் பொருந்துவனவாகும்.

ஒரு சிறந்த இலக்கியம் என்றால் அது இன்பத்தோடு பயனையும் தரவல்லதாக இருக்க வேண்டும். அவ்வகையில் அமைந்த அருந்தமிழ் இலக்கியப் படைப்புகளுக்குள் தலையாயதாக விளங்குவது கவிச்சக்கரவர்த்தி கம்பர் இயற்றிய இராமாயணப் பெரும் காப்பியம் ஆகும்.

ஆதலாலே, சங்ககாலம் தொட்டு பாரதியார் காலம்வரை ஆயிரக்கணக்கில் புலவர்கள் தம் புலமையை வெளிப்படுத்தியிருக்க, கம்பர், வள்ளுவர், இளங்கோவடிகள் என மூவரை மட்டும் தெரிவு செய்து போற்றும்போது பாரதியார் கம்பரையே முன்நிறுத்துகின்றார் என்பது தனிச்சிறப்பு.

தமிழ்மொழியில் உருவாக்கப்பட்ட இலக்கியப் படைப்புகளிலேயே தமிழ்மொழியின் வளத்தை, அதன் அளப்பரிய ஆற்றலை, ஆழ அகலங்களை முழு வீச்சில் வெளிப்படுத்திய பெரும் புலவர் கம்பர் மட்டுமே என்பது வரகவி பாரதியாரின் கணிப்பு.

கம்பர் தாம் உருவாக்கும் ஒப்பற்ற படைப்பான இராமகாதை வெறும் சுவையூட்டும் கதையாக அமைந்துவிடாது வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காக எல்லா வகையிலும் தனி மனித உயர்வுக்கும், சமுதாய உயர்வுக்கும் பெருந்துணை புரியக் கூடிய ஆக்கப்படைப்பாக அமைய வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தவர். இதனையே தன்னுடைய வாழ்நாள் சாதனையாக நினைத்தாரோ என நம்மை வியக்க வைக்கின்றது.

புதியதாக ஒரு காப்பியக் கதையை உருவாக்கி இலக்கியம் படைப்பதைவிட, முன்னரே மக்களிடையே பரவலாக வழங்கி வந்த கதையை, தமிழ்மரபுக்கேற்ப மாற்றம், திருத்தங்களோடு காப்பியம் எழுதுவதே பெரும்பயன் தரவல்லதாய் அமையும் எனக் கம்பர் கருதியதன் விளைவே வால்மீகியின் இராமகதை, கம்பராமாயணமாக உருப்பெற்றது.

கவிச்சக்கரவர்த்தி கம்பனைப் பொறுத்தவரை அவர் வெறும் இலக்கியப் புலவராக, படைப்பிலக்கியத் திறன்மிக்க காப்பியப் படைப்பாளியாக மட்டும் கம்பராமாயணத்துள் காட்சி தரவில்லை. அரசியல் ஞானியாக, உளவியல் வல்லுநராக, விழிப்புணர்வு மிக்க சமூக சீர்திருத்தச் சிந்தனையாளராக, ஆன்மீகவாதியாகவும் விளங்குவதைப் போன்று புதியன புனையும் கவியாற்றல் பெற்றவராக விளங்குகின்றார்.

கம்பனின் கவிதைச் சிந்தனைகள்

முனைவர் கடலூர் மணிமாறன்
மேனாள் தமிழ்ப் பேராசிரியர், கற்பகம் பல்கலைக்கழகம், கோவை.

கந்தபுராணம் சிவநூல் என்றும் மகாபாரதம் அறநூல் என்றும் பெரியபுராணம் அருள்நூல் என்றும் சிலப்பதிகாரம் விதிநூல் என்றும் சீவகசிந்தாமணி இன்பநூல் என்றும் இராமாயணம் அன்புநூல் என்றும் கம்பனில் தோய்ந்து கம்பன் கவிநயத்தை விளக்கமுற எடுத்துரைத்த திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். காப்பியப் படைப்பில் ஒரு புதுமையைக் கையாண்டு தமது கவிஆளுமை, கற்பனையாற்றல், நாடக உத்தி, சந்தப்புலமை ஆகியவற்றில் வெற்றி கண்டவன் கம்பன். அணிநயம், யாப்புவளம், கருத்துத்திறம், புதிய சொல்லாட்சிகள் போன்ற பல்வேறு சிறப்புகளால் ஒளிர்வது கம்பன் காவியம்.

எதனை, எந்த நேரத்தில், எவ்வாறு எங்கு இயம்ப வேண்டுமோ அதனைச் செய்ய வைப்பதுவே காப்பிய ஆசிரியரின் இன்றியமையாத பணி. அப்பணியைக் காப்பிய மாந்தர்களின் வாயிலாக இனிதே நிறைவேற்றிய பெருமைக்குரியவன் கம்பன். 'தங்கு தடை இல்லாமல் ஓடும் நதி; பொங்கிப் பெருக்கெடுத்து ஓடும் கவி. தேடிப் பார்த்தால் பொருள் கிடைக்கும் நதியில்; மூழ்கிப் பார்த்தால் பொருள் கிடைக்கும் கவியில்" என்பார் கவியரசர் கண்ணதாசன். பிற கவிஞர்களோடு கம்பனை ஒப்பிட்டு அவர்களை விடக் கம்பன் உயர்ந்தவன் என உரைப்பதில் பயனோ, பெருமையோ இல்லை, கம்பனிலேயே கம்பன் எங்குச் சிறந்து விளங்குகின்றான் என்பதை எடுத்துக்காட்டுவதில் தான் உயர்வும் சிறப்பும் உள்ளன.

கவிஞனும் ஒரு மனிதனே. கவிஞன், தான் வாழும் காலத்தின் சூழ்நிலைகளால் கவரப்படுகின்றான்; தாக்கம் பெறுகின்றான். இது தவிர்க்க முடியாதது. கம்பனும் அவ்வாறே தான் வாழ்ந்த காலச் சூழலின் தன்மையால் தாக்கம் பெற்று அதனைத் தன் கவிதைகளில் ஆங்காங்கே பதிவு செய்துள்ளான். தாம் பயின்ற கலையறிவும் அகத்தியம் முதலாய இலக்கணங்களும் சங்க காலம் தொடங்கி மலர்ந்துள்ள தமிழ் இலக்கியங்களும் கைகொடுத்து உதவிடத் தமிழ்த் தாய்க்கு ஒப்பற்ற காப்பியத்தை மணிமுடியாகச் சூட்டியுள்ளான்.

'மகாகவிகளுடைய திறன்களெல்லாம் கம்பனில் எதிரொலிக் கின்றன. சேக்சுபியரின் நாடகச்சுவையும், மில்ட்டனின் காம்பீரியமும், பைரனின் விறுவிறுப்பும், கீட்சின் சிற்பநடையும், டென்னிசனின் இசையோவியமும், ஷெல்லியின் ஓடைநடையும், வோர்ட்சு வொர்த்தின் சுடர்நடையும் ஹோமரின் வீரச்சுவையும், தாந்தேயின் அருளினிமையும் கம்பனில் கலந்து இயங்குகின்றன' என்று வி.ஆர்.எம்.செட்டியார் குறிப்பிடுகின்றார். அழகுதான் கவிதை; உண்மையே கவிதை; வெறும் சொற்கள் கவியல்ல. அழகையும் உண்மையையும் வழிபடுபவனே உண்மையான கவிஞன். அத்தகு கவிஞன் கம்பன்.

இறைச்சிப் பொருள்

ஒரு பாடலில் சொல்லுக்குச் சொல் பொருள் காண்பது வேறு. அச்சொற்களினுள்ளே மறைந்திருக்கும் பொருளைக் காண்பது வேறு. இதனையே இறைச்சிப் பொருள் என்பர். கோசல நாட்டின் வளத்தைப் பாட வந்த கம்பன்,

'நீரிடை உறங்கும் சங்கம் நிழலிடை உறங்கும்மேதி
தாரிடை உறங்கும் வண்டு தாமரை உறங்கும் செய்யாள்
தூரிடை உறங்கும் ஆமை துறையிடை உறங்கும் இப்பி
போரிடை உறங்கும் அன்னம் பொழிலிடை உறங்கும் தோகை'

(பால காண்டம் -38)

என்று பாடுகின்றான். சங்கு, மேதி, வண்டு, செய்யாள், ஆமை, இப்பி, அன்னம், மயில் ஆகியன உறங்குவதாகக் குறிப்பிடும் கம்பர் ஒவ்வொன்றிலும் நுட்பமான கருத்தினைப் பதித்துள்ளான்.

சங்குகளுக்கு ஈரறிவு. வளமை மிகுந்த கோசல நாட்டில் தசரத மன்னனின் ஆட்சியில் ஈரறிவு படைத்த சங்குகளும் கவலையின்றி உறங்குகின்றன் வெயிலின் வெப்பம் தாங்க மாட்டாத எருமைகள் சேற்று நீரில் படுத்துக் கலக்கிக் கொண்டிருக்கும். இவ்வாறு எருமைகள் கலக்குமாயின் நீரிலே சங்கு உறங்காது. தசரதன் ஆட்சியில் நெல் வயலும் புல்வயலும் தனித்தனியே இருந்தன. புல் மேயச்சென்ற எருமை நன்கு மேய்ந்து வயிறு நிரம்பியமையால் உண்ட களைப்பால் நிழலிலே உறங்குவதாகக் கம்பன் விளக்குகின்றான்.

செழுமை காரணமாகக் கோசல நாட்டில் வண்டுகள் மலர்கள்தோறும் சிறிதே தேன் பருகும். ஒரே மலரில் போதிய தேன் கிடைக்குமாயின் உண்ட மலரிலேயே உறங்கி விடும். கோசல நாட்டின்

மலர்கள் தேன் அதிகமாகத் தாங்கிக் கொண்டுள்ளன என்பதையே 'தாரிடை உறங்கும்' வண்டு என்னும் வரி உணர்த்துகின்றது. செழித்த கோசல நாட்டில் எல்லாருக்கும் நிறைந்த அளவில் நிதிகள் குவிந்திருப்பதானால் செல்வத்தை நல்கும் திருமகளுக்கு அழைப்பில்லை. அழைப்பு இல்லாமையால் தன் சொந்த வீடாகிய தாமரையில் உறங்குகின்றாள் என்று நயம் மிளிரும் கவிதைச் சிந்தனை எண்ணத்தக்கது.

மிதிலை மக்கள் மகிழ்ச்சிச் சொற்கள்

'இராமனைக் காணச் சீதைக்கு ஆயிரம் கண்கள் வேண்டும்' என்றாள் ஒருத்தி. 'சீதையைக் காண இராமனுக்கு ஆயிரம் கண்கள் வேண்டும்' என்றாள் மற்றொருத்தி. தம்பியைக் காணுமாறு இன்னொருத்தி கூறினாள். 'இவர்களைக் காண இந்த உலகம் தவம் செய்திருக்க வேண்டும்' என்றாள் பின்னொருத்தி. 'இவர்களை இங்கு அழைத்துக் கொண்டு வந்த விசுவாமித்திரருக்கு நன்றி கூறி வணங்க வேண்டு'மென்கிறாள் இன்னொருத்தி. இதனை,

"நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கும் அன்னதேயாம்
தம்பியைக் காண்மின் என்பார்; தவமுடைத்துலகம் என்பார்
இம்பரிந் நகரில் தந்த முனிவனை இறைஞ்சும் என்பார்"

(பாலகாண்டம் -657)

என்னும் பாடலில் கம்பன் அழகுற விளக்கியுள்ளான்.

சிந்தையாலும் தொடேன்

'உலப்பில்லாத இன்பம்தான் காதலின் எல்லை' என்று கம்பன் மொழிகின்றான். பருகிய நோக்கெனும் பாசத்தாள் நோக்கினாள் என்று சீதையின் காதலைப் பாசம், அன்பு, பிரிக்க முடியாத இன்பம் என்ற நோக்கில் உயிரில் கலக்கும் காதல்' என்று பாடும்; கம்பன், 'இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்று இல்லறத்தின் உயரிய மாட்சியைத் தெளிவுபடுத்துகிறான்;.

'நடையில் நின்றுயர் நாயகன்' மானுடனாக அவதாரம் எடுத்து நடைபயின்ற தன்மையையும், பரம்பொருளுக்குத் தொண்டு செய்வதையே வாழ்வின் நோக்கமாகக் கொண்ட 'துஞ்சல் இல் நயனத்து ஐயன்' இலக்குவனின் உயர்பண்புகளையும் பதவி வந்த போதும் அதைப் புறந்தள்ளி, பாசத்திற்காக ஏங்கும் தூயஉள்ளம்

கொண்ட பரதனின் ஆளுமையையும் கம்பனின் பாடல்கள் விரித்துரைக்கின்றன.

'அளிக்கும் தேறலுண்டு, ஆடுநர் பாடுநர் ஆகிக் களிக்கின்றார் அலால் கவல்கின்றார் ஒருவரைக் காணேன்' என்னும் கம்பன் கூற்றிற்குரிய இலங்கை மாநகரின் இணையற்ற புறங்கொடாப் போர் வீரன் இராவணன் மாட்சியும், பிறன்மனை நயந்த குற்றத்தினால் அடைந்த வீழ்ச்சியும், செஞ்சோற்றுக் கடன் கழித்துக் கொலையுறு மரணத்தை ஏற்றுக் கொண்ட குணமிக்க போர்த்தலைவன் கும்பகர்ணன் பண்புநலன்களும் கம்பனின் கவிதைச் சிந்தனையால் விளக்கம் பெற்றுள்ளன.

ஆதியில் மனிதகுலத்தில் எவ்விதப் பிரிவும் இல்லை. ஒரே இனமே இருந்தது. நாளடைவில் அறிவு விரிவடைந்து உழவு முதலாய தொழில்களில் ஈடுபட்டபோதே தொழில்வழிப் பிரிவுகள் தோன்றின. இது அறிவியலாரும் ஒப்பும் உண்மையாகும். இவ்வறிவியல் கருத்தை அன்றைக்கே கம்பன், ஒன்றின் ஒன்று குலமெனப் பிரிந்தது என்று விளக்குகின்றான். கோசல நாட்டில் உழவர், மழவர், பாணர், நுழையர், கோவலர், எயினர் முதலாய பல்வேறு சாதியினரை அறிமுகப்படுத்தி அவர்கள் சரிநிகர் சமானமாகவே வாழ்ந்தனர் என்று அறிவுறுத்துகின்றான்.

கோசலத்தில் குடிமக்கள் அனைவரும் ஒப்புரவாளராகவே, சான்றோராகவே விளங்கினர். பழுமரம் உள்ளூர்ப் பழுத்தது போல் உள்ளி உள்ளவெல்லாம் உவந்து ஈயும் வள்ளியோர் அங்கு நிரம்பியிருந்தனர். விருந்தினர் முகம்கண்ட நாளே விழா நாளாக எண்ணப்பட்டது. விருந்தினரை வரவேற்பதற்காகவே மங்கலவள்ளைகள் வீடுதோறும் முழங்கிக் கொண்டிருந்தன. தனக்கென வாழாப் பிறர்க்குரியராகவே குடிகள் இருந்தமையால் அங்கு வண்மையே இல்லை. எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்துதலாலே இல்லாரும் இல்லை; உடையாளர்களும் இல்லை என்பது கம்பன் காட்டும் ஒள்ளிய கவிதைச் சிந்தனையாம்.

நல்லற மூர்த்தியாக, ஆதிமதியும் அருளும் வாய்க்கப் பெற்றவனாக, கருத்து முற்றத்தோய்ந்து திருவெனும் போகம் கடந்தவனாகத் தசரதனை அறிமுகப்படுத்துகின்றான் கம்பன். தாய் ஒக்கும் அன்பின்; தவம் ஒக்கும் நலம் பயப்பின்; சேய் ஒக்கும் என்று தாயினும் சாலப் பரிந்து நன்மை புரிந்து தவம் புரிந்தவனாகத் தசரதனைக் கம்பன் வெளிப்படுத்துகின்றான்.

கம்பனின் சமூகச் சிந்தனை

தசரத மன்னன் ஆண்ட அயோத்தி நகரின் அரும்பெருஞ் சிறப்புகளை அடுக்கும்பொழுது கம்பன் சமூகச் சிந்தனையை முன்வைக்கின்றான். பெருமைக்குரிய அயோத்தி நகரத்தில் பல்வகைக் கல்விகளைக் கல்லாதவர்கள் என்று பிரித்துச் சொல்லத்தக்கவர்கள் இல்லாமையால், கல்வியிலே முற்றிலும் வல்லவர்கள் என்று பிரித்துச் சொல்லத் தக்கவர்களும் இல்லை; அக்கல்வியில் வல்லமை இல்லாதவர்களும் இல்லை. மக்கள் அனைவரும் எல்லாவகையான சிறந்த செல்வங்களையும் பெற்றிருப்பதாலே அங்கே ஏழைகளும் இல்லை. செல்வர்கள் என்று வேறுபடுத்திச் சொல்லத்தக்கவர்களும் இல்லை என்று ஏற்றத் தாழ்வற்ற பொருள் நிலையிலும் சம வாய்ப்புடைய சமூகத்தைப் படைத்துக் காட்டுகின்றான் கம்பன். இதனை,

கல்லாது நிற்பார் பிறர்இன்மையின் கல்வி முற்ற
வல்லாரும் இல்லை அவைவல்லர் அல்லாரும் இல்லை
எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லைமாதோ (பால-167)

என்னும் பாடலில் தெளிவுறக் காட்டுகின்றான். மேலும் அந்த அயோத்தி மாநகரம் கல்வி என்னும் விதையானது முளைத்து வளர்ந்து அளவற்ற கேள்விகள் என்னும் அழகிய சிறந்த வலிய கிளைகளை வளர விட்டுச் செய்வதற்கு அரியதவம் என்னும் இலைகள் தழைக்கச் செய்து அன்பு என்னும் அரும்பினைத் தோற்றுவித்து, அறம் என்னும் மலரை மலரச் செய்து பேரின்பம் என்னும் பழத்தைப் பழுக்கச் செய்வதற்கு ஏற்ற பண்பட்ட இடமாக உள்ளது என்று கூறி மனம் பூரிக்கின்றான். தாம் காண விரும்புவது இத்தகு ஏற்றமிகு சமுதாயமே என்பதைக் குறிப்பால் உணர்த்தியுள்ள கம்பனின் கவிதைச் சிந்தனை எண்ணி மகிழத்தக்கது.

சீதையைக் காணாத இராமன்

சீதையைக் காணாது இராமன் மனம் சுழன்ற நிலையை உணர்ச்சிப்பெருக்குடன் எடுத்துரைக்கின்றான் கம்பன்.

மண் சுழன்றது; மால் வரை சுழன்றது; மதியோடு
எண் சுழன்றது; சுழன்றது அவ்வெறி கடலேழும்
விண் சுழன்றது; வேதம் சுழன்றது; விரிஞசன்
கண் சுழன்றது; சுழன்றது கதிரொடு மதியும் (ஆரண்ய -959)

என்னும் பாடல் அறிவிக்கின்றது.

எங்கும் சுழற்சி; எல்லாம் சுழற்சி! கவிஞனே சுழல்கின்றான். படிப்பவரும் சுழல்கின்றனர். பூமி சுழன்றது; பெரிய மலைகள் சுழன்றன, சான்றோர் எண்ணம் சுழன்றது; அலை வீசுகின்ற அந்த ஏழுகடல்களும் சுழன்றன. வானம் சுழன்றது; வேதங்கள் சுழன்றன. பிரமன் கண்களும் சுழன்றன. சூரியனும் சந்திரனும் சுழன்றன. இயற்கையின் இதயத்தில் ஆழ்ந்து உறங்கி விழித்துக் கவிதை படைக்கும் மின்னற்கவி கம்பன். சொற்கள் அவனை அறியாமலே கவிதைகளில் அடைக்கலம் புகுந்து தனித்த ஆளுமையைச் செய்து சிந்தனைச் சிறகுகளை விரிக்கச் செய்கின்றன.

கம்பன் நம் நாட்டில் பழைய இலக்கியங்கள் பலவற்றையும் பருகிப் புது இலக்கிய மறுமலர்ச்சியை உண்டாக்கினான். காப்பியத் தலைவன் இராமனை அன்பின் இலக்கணமாகவும், மனிதநேயத்தின் உறைவிடமாகவும் படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற பல கவிதைச் சிந்தனைகள் கம்பன் காப்பியத்தில் தொட்ட இடமெங்கும் தட்டுப்படுகின்றன.

பாலகாண்டம் ஓர் அழகியல் பார்வை

திருமிகு ப.செந்தில்நாயகம்
பகுதிநேர ஆய்வாளர், ஏபிசி மகாலெட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி.

இராமாயணக்கதைக்குறிப்புகள் சங்க இலக்கியத்துள் இடம் பெற்றுள்ளன. அகநானூற்றில் இராமன் கடல் கடக்கும்முன் ஆலமரத்தடியில் ஆலோசனை செய்த குறிப்பு வந்துள்ளது. தமிழ்க்காப்பியமான சிலப்பதிகாரத்தில் தந்தை தசரதன் ஏவலால் சீதையுடன் இராமன் காட்டிற்குச் சென்ற செய்தி உள்ளது. பின் உள்ள எல்லா இலக்கிய வகைகளிலும் கதைக்குறிப்புகள் இடம் பெற்றே வந்திருக்கின்றன. வால்மீகியைப் படித்து எவரும் கதைக்குறிப்பைத் தரவில்லை. கம்பரும் தமக்கு முன்னால், நாட்டில் வழங்கிவந்த கதையைக் காப்பியமாக்க விரும்பினார். 'இராமாவாதாரம்' என்ற பெயரால் காப்பியச்செய்யுள் தொடரை நாட்டினார். நாட்டிய தொடர்நிலைச்செய்யுள் 10,500. தேரழுந்தூரில் பிறந்த கம்பர் சடையப்ப வள்ளல் ஆதரவால் பெரும் காவியம் படைத்தார். வழக்கறிஞர் டி.கே.சிதம்பரநாத முதலியார் கம்பரின் 10,500-ஐயும் படித்தார். தாம் சுவைத்ததைக் 'கம்பர் தரும் இராமாயணம்' எனும் பெயரால் நூல் எழுதி விளக்கவுரையும் தந்தார். பாலகாண்டப்பகுதியில் ரசிகமணி ரசித்த பாடல்களை அழகியல் அணுகுமுறையில் விளக்குவதே இக்கட்டுரையாகும்.

கம்பரே உருவாக்கிய காவியம்

காலம்தோறும் சொல்லப்பட்டு வந்த கதையே யாயினும் எடுத்துரைக்கும் பண்பால், நாடகப் பண்பால், கவிப்பண்பால் சிறப்புப் பெற்றவனே சிறந்த கவிஞனாகிறான் என்பது ரசிகமணியின் கருத்தாகும்.

முத்தமிழ்த்துறை
    யின் முறை போகிய
உத்த மக்கவி...
    ஞர்க்(கு) ஒன்(று) உணர்த்துவன்;
பித்தர் சொன்னவும்
    பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும்
    பன்னப் படுபவோ? (அவையடக்கப் பாடல் -5)

இப்பாடலில் உள்ள முத்தமிழ் என்பதன் விளக்கம் கவிதைப் பண்பாகும். நாட்டு வருணனையில் ஓசைநயம் காப்பிய அமைதிக்கு நாடு நகர் சிறப்புக் கூறவேண்டுமாதலால் டி.கே.சி கோசலநாடு கோசல நாட்டுவளம் கூறுவதற்கும் நகர்வளம் கூறவும் மூன்று பாடல்களும் தேர்ந்து கம்பர் தரும் இராமாயண நூலில் அமைத்தார். நாடு பற்றி

வண்மை இல்லை ஓர்
வறுமை இன்மையால்.
திண்மை இல்லைநேர்
செறுநர் இன்மையால்,
உண்மை இல்லைபொய்
உரையிலாமையால்
ஒண்மை இல்லைபல்
கேள்வி ஓங்கலால் (பாடல். 14)

என்று கோசலநாட்டில் சான்றோர், கல்வியில் பெரியவர்கள் வாரி வழங்கும் வள்ளல்கள் பலர் இருந்தமையால் வறுமை இல்லை; பகைவர் இலர்; உறுபசி ஓவாப்பிணி செறுபகை மூன்றும் சேராது மக்கள் வளத்துடன் உள்ளனர் என்பதை- திண்மை உண்மை, ஒண்மை, வண்மை எனப் பண்புச்சொற்கள்வழி உணர்த்தியுள்ளார் கம்பர். ஒலி நயமுள்ள பாடல் ஓசையுடன் பாடலைப் படிக்கவேண்டும் என்பதற்கு ஏற்பப் பாடலைத் தேர்ந்துள்ளார் ரசிகமணி.

நகர் வருணனை

அயோத்திநகரில் பொன் விளையும் பூமி கன்னிப்பெண்களுக்குக் காவல்நகர் என்பதை ஓசை நயம்படப்பாடுகிறார்.

மின் என விளக்கென
வெயிற்பி ழம்பெனத்
துன்னிய தமனியத்
தொழில் தழைத்த அக்
கன்னிநல் நகர்நிழல்
கதுவ லால் அரோ
பொன்னுல காய(து) அப்
புலவர் வானமே (பாடல்.17)

தொழில் வளமுண்டு மகளிர்க்குப் பாதுகாப்பு உண்டு என்றிரு செய்திகளைக் கூறியுள்ளார் கம்பர். 'என' எனுஞ் சொல் எளிமை உணர்வு ரசம் உள்ளதால் அழகியல்தன்மை கொண்டது.

முடியாட்சிக் காலப் பின்னணி கூறப்படுவதற்காக மன்னன் இயல்பு கூறப்பட்டுள்ளது. தசரதன் ஆட்சி புரியும்விதம் அரசியல் படலத்தில் விளக்கப்படுகிறது. குலம்செய் தவத்தைக் கூறும் கையடைப்படலத்தில் பாடல்கள் பல தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. விசுவாமித்திரன் இராம இலக்குவரைத் தாடகைவதத்திற்கு அழைக்க வந்தபோது தசரதன் வருத்தம் அடைந்து பின்னர் மனம் தேறி அனுப்பி வைத்ததும் இப்பகுதியில் அடங்கும். தாடகை வதைப்படலத்தில் கன்னிப்போரில் கன்னியைக் கொல்லவா என்று இராமன் நினைத்ததை அறிந்த முனிவர்

வெறிந்த செம்மயிர்
  வெள்ளயிற் றாள் அயில்
எறிந்து கொல்வன் என்(று)
  ஏற்கவும், பார்க்கிலாச்
செறிந்த தாரவன்
  சிந்தைக்க ருத்தெலாம்
அறிந்து, நான் மறை
  அந்தணன் கூறுவான். (பாடல் 50)

என்பதில் அழகியல் உள்ளது. தாடகை சடை பின்னிய அறியாப் பெண் அல்லள் 'தாழ்குழலப் பேதைமைப் பெண் இவள் என்று எண்ணாதே' என முனிவர் இராமனுக்கு அறிவுறுத்துகிறார். இராமன் சிந்தையில் எழுந்த கருத்தை முனிவன் உணர்ந்து பதிலுரை தருகிறான். வேள்விப்படலத்தில் கிளைக்கதை காப்பிய இலக்கணத்திற்குப் பொருந்த அமைகிறது. மாபலி பற்றிய கதையே அது. மாபலி கூற்றில் புலன் உணர்வு அமைந்த பாடல் அழகியல் பாவத்தோடு இணைந்து அமைந்துள்ளது.

மாய்ந்தவர் மாய்ந்தவர்
  அல்லர்கள் மாயா(து)
ஏந்திய கைகொ(டு)
  இரந்தவர், ஏந்தாய்!
வீந்தவர் என்பவர்
  வீந்தவரேனும்,
ஈந்தவர் அல்ல(து)
  இருந்தவர் யாரோ? (பாடல் 71)

அழகுத்தொடரில் பாடல் ஆரம்பித்து நிலையாமைக்கருத்தை உள்ளடக்கமாக் கொண்டிலங்குகிறது.

கார்முகப்படலம் காப்பியக்கூறுகளில் ஒன்றான மணம் புரிதல் செயல்பாட்டை உள்ளடக்கியதாகும் சீதையின் பிறப்பும் விளக்கப்படுகிறது.

உழுகின்ற கொழுமுகத்தின்
　உதிக்கின்ற கதிரின் ஒளி
பொழிகின்ற புவிமடந்தை
　உருவெளிப்பட்டெனப் புணரி
எழுகின்ற தெள்ளமுதோ(டு)
　எழுந்தவளும் இழிந்(து) ஒதுங்கித்
தொழுகின்ற, - நன்னலத்துப்
　பெண்ணரசி தோன்றினாள்,　　(பாடல் 110)

சீதை இலட்சுமி அல்லள் பூமாதேவியே என்று கூறும் அளவிற்கு அழகும் குணமும் பொருந்தியவள் என்கிறார்.

எழுச்சிப்படலத்தில் இராமனின் உலாவின்போது மகளிர் குவிந்த நிலை அழகியல் தோற்றத்தைத் தரும்

மானினம் வருவபோன் றும்,
　மயிலினம் திரிவபோன் றும்,
மீனினம் மிளிர, வானின்
　மின்னினம் மிடைவபோன் றும்,
தேனினம் பம்பி ஆர்ப்ப
　சிலம்பினம் புலம்பிஏங்க,
பூநனை கூந்தல் மாதர்
　பொம்மெனப் புகுந்து மொய்த்தார்.　　(பாடல் 141)

இராமனின் முழுஅழகைக் காணாது தோளும் தாளுமே கண்டனர்.

தோள்கண்டார் தோளே கண்டார்
　தொடுகழற் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார்
　தடக்கைகண் டாரும் அஃதே;
வாள் கொண்ட கண்ணார் யாரே
　வடிவினை முடியக் கண்டார்?
ஊழ்கண்ட சமயத்(து) அன்னான்
　உருவுகண் டாரைஒத் தார்　　(பாடல் 143)

என உவமை நயம் வேண்டிக் கூறுகிறார். சீதையைக் கூறும்போது கம்பர், "நைவளம் எனத் தகையள்" (பா.156) என்கிறார். கம்பர் அனுபவித்த ராகம் நைவனம் உணர்ந்ததை உவமையாக்கியுள்ளார்.

கடிமணம் புரிந்தபின் மணவாளனும் மணவாட்டியும் ஆசி பெறும் காட்சி விடைபெறும் காட்சியாகும்.

கோனாகிய மணவாளனும்
  சனகன் தரு குயிலும்
நானா விதம் வரும் போகமே
  நுகர்கின்ற அந் நாள் வாய்
ஆனா மறை நெறி ஆசிகள்
  முனிகோ சிகன் அருளிப்
போனான் வட திசைவாய், உயர்
  பொன்மால் வரை புகுவான் (பாடல் 167)

ராமனும் சீதையும் ஆசிபெற்றனர்.

இவ்வாறு, உவமை, ஓசை, சந்தம், பாக்களில் அமைவதுடன் படிப்பவரும் உணர்ந்து அனுபவிக்கும்போது அழகியல் வெளிப்படுகிறது.

கம்பரின் நாட்டுப்படலத்தில் படிமம்

திருமிகு. கு.லட்சுமி
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், இந்தியன் கலை அறிவியல் கல்லூரி, கொண்டம்.

முன்னுரை

இமேஜ் (*Image*) என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத் தமிழில் வழங்கப்படும் சொல் 'படிமம்' என்பதாகும். இச்சொல் பல்வேறு துறைகளில் கையாளப்படுவதால் பல பொருள்களைக் கொண்டதாக விளங்குகிறது. இலக்கியத்துறையில் இச்சொல் 'காட்சித்தன்மை தருகின்ற ஒரு கவிதைத் திறன்' என்ற பொருளில் வழங்கப்படுகிறது. அருவச்சொற்கள், உருவச்சொற்கள் ஆகிய இரண்டையுமே மூலப்பொருளாகக்கொண்டு விளங்குவது கவிதை. இவற்றில், அருவத்தை உருவப்படுத்துவதும், உருவத்தைச் சரியாகக் காட்சிப்படுத்துவதும்தான் படிமம் என்ற உத்தியின் பணியாகும்.

வால்மீகி இராமாயணத்தைத் தழுவி, தமிழில் கம்பர் இயற்றுவதற்கு முன்பே தமிழில் பல இராமாயணங்கள் வழக்கிலிருந்தன. இவற்றோடு எண்ணற்ற புலவர்களும் தோன்றி, பல இலக்கியங்களை இயற்றிய போதிலும் 'கல்வியிற் பெரியவர் கம்பர்', 'கம்பநாடன் கவிதையில்போல் கற்றோர்க்கு இதயம் களியாதே', என்றெல்லாம் கம்பரை மட்டும் புகழக் காரணம்- உத்திகளைக் கையாண்டு கவிதை படைக்கும் அவரது கவித்திறமையே. அவற்றுள், நாட்டுப்படலத்தில் கம்பர் கையாண்டுள்ள காட்சிப்படிமங்களை, இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

நாட்டுப் படலம்

பலரது உழைப்பையும் பல கோடி செல்வத்தையும் இழைத்து அமைக்கப்பட்ட கோட்டையானாலும், படைப்பாளியின் அளவற்ற அனுபவங்களையும் உணர்வுகளையும் இழைத்து இயற்றப்பட்ட இலக்கியமானாலும், அதன் முகப்பு- அழகும் செறிவும் கொண்டு அமையும்போது, அவற்றின் உள்ளமைப்பையும் உள்கருத்தையும் காணும் விருப்பம் பார்வையாளனுக்கும் வாசகனுக்கும் ஏற்படுவது இயற்கை. அவ்விருப்பம்தான் படைப்பாளியின் நோக்கத்தை நிறைவுசெய்வதாக அமையும். அவ்வகையில் தன் ஒப்பற்ற நூல் அனுபவங்களையும் உணர்வுகளையும் இழைத்து இயற்றப்பட்ட இராமாயணம் என்னும்

கோட்டையின் நுழைவுவாயிலாக நாட்டுப்படலத்தை அமைத்த கம்பர், அதனைச் செறிவாக்கவும் அழகுபடுத்தவும், படிமம் என்ற இலக்கிய உத்தியைக் கையாள்கிறார்.

மருத வளம்

அழகான சோலை ஒன்று; அங்கு மழையைப்பெய்வதற்காக மேகங்கள் பெரும் இடிமுழக்கத்தோடு திரள்கின்றன. அவற்றைக் கண்டவுடன் மயில்கள் சிலிர்த்துத் தோகை விரித்து நடக்கின்றன. மழை பெய்ததால், நீர் நிலைகளில் அலைகள் தோன்றி கரைகளை மோதும் அளவு நீர் பெருக்கெடுக்கின்றது. அங்கு கருங்குவளை மலர்களும் தாமரை மலர்களும் மலர்ந்திருக்கின்றன. அருகிலுள்ள சோலையில் உள்ள மலர்க்கொடிகளெல்லாம் நீர் கிடைத்ததால் பூத்துக்குலுங்குகின்றன. அம்மலர்களில் உள்ள தேனைப் பருகிய வண்டுகள் ஒலியெழுப்பிய வண்ணம் அவற்றையே சுற்றித் திரிகின்றன. வளமிக்க இக்காட்சியைக் காண்கிறார் புலவர், இவ்வளமையால் இன்புறும் நகரத்து நிகழ்வுகளை நினைவுகூர்கிறார். வளமான மருதம் இருப்பின் நாட்டிற்கும் நகரத்திற்கும் செல்வத்திற்குக் குறைவில்லை. ஆதலால், இன்பத்தை நாடுபவர்களாக, குடிகளும் மன்னனும் விளங்க, அவ்வின்பத்தைத் தரவல்ல நிகழ்ச்சிகளுள் ஒன்றான நடன நிகழ்ச்சியை ஒப்ப நோக்குகிறார்.

அழகிய நடன அரங்கம் அதில் மன்னனும் மக்களும் தங்களை மகிழ்விக்கக்கூடிய அந்நிகழ்ச்சியைக் காண தங்கள் கண்களை அகல விரித்துக் காத்திருக்கின்றனர். இனிய இசைக்கருவிகள் முழங்க, மூடிய திரைகள் விலக, வண்ண ஓவியம் தீட்டப்பட்ட மற்றொரு திரை பின்னணியாக விளங்க, அழகிய பெண்கள் விளக்கேந்தி நிற்கின்றனர். அவ்வொளி வெள்ளத்தில் திறம்மிக்க ஆடல் அழகிகள் நடனம் புரிகின்றனர். இவ்விருநிகழ்ச்சிகளையும் ஒப்புமைப்படுத்திப் பார்த்த புலவர் உள்ளம், அவற்றை ஒன்றாக்கி ஒரே நிகழ்ச்சியாகக் கற்பனை செய்கிறது. அதன் விளைவாக,

சோலை	-	நடன அரங்கமாக,
மயில்கள்	-	ஆடலழகிகளாக,
தாமரைக்கொடிகள்	-	விளக்கேந்தும் பெண்களாக,
தாமரை மலர்கள்	-	பெண்களின் கைகளாக,
மேகங்களின் முழக்கம்	-	மத்தளமாக
நீர்நிலைகளின் அலைகள்	-	திரைகளாக,

வண்டின் ஓசை	-	மகரயாழோசையாக,
கருங்குவளை மலர்கள்	-	பார்வையாளர்களாக,
மருத நிலம்	-	மன்னனாக

உருவகப்படுகின்றன. அவற்றின்வழி அழகிய படிமக்காட்சி பிறக்கிறது. இதனை,

'தண்டலை மயில்கள் ஆடத் தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்கக் குவளைகண் விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ'

என்ற பாடல்வழி வடிவம் கொடுக்கின்றார்.

மாலை நேரக் காட்சி

வளமிக்க அந்த மருதநிலத்தில், பகலில் இரைதேடித் தன் குஞ்சுக்கு ஊட்டியும், தான் உண்டும் விளையாடி மகிழ்ந்த அன்னம் மாலைப்பொழுதில் தாமரை மலர்கள் நிறைந்த பொய்கையில் உறங்க வைக்கின்றது. பொய்கையிலுள்ள பச்சைநிறத் தவளைகள் ஒலியெழுப்புகின்றன. மேய்ச்சலுக்காகச் சுற்றித்திரிந்த எருமைகள் தங்கள் கால்களில் படிந்த சேற்றுடன் நீர் நிலைகளுக்கு வருகின்றன. மிகுதியான உணவுண்டதாலும் தன் கன்றை நினைத்தலாலும் அவற்றின் மடிகளிலிருந்து தானே பால்ஒழுக நிற்கின்றன. இந்நிகழ்ச்சியைக் காணும் கவிஞர் உள்ளம் மாலைநேரத்தில் இல்லங்களின் தாய்மையடைந்த பெண்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டி, தாலாட்டி, தூங்கவைக்கும் வழக்கமான நிகழ்வை நினைவுகூர்ந்து, பின் இரண்டையும் ஒப்புமைப்படுத்திக் காணுகிறது. தாயன்னத்திற்கு பெண்களை உவமையாக்கி, அன்னங்கள் தாமரைப்படுக்கையில் தன்குஞ்சுகளைக் கிடத்துவதாகவும், எருமையின் பாலுண்டு பச்சைத்தவளையின் தாலாட்டில் உறங்குவதாகவும் கற்பனை செய்கிறது. அதன் விளைவாக,

'சேல் உண்ட ஒன்கணாரின் திரிகின்ற செங்கால் அன்னம்
மால் உண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
கால் உண்ட சேற்று மேதி கன்று உள்ளிக் கனைப்பச் சேர்ந்த
பால்உண்டு துயிலும் பச்சைத் தேரை தாலாட்டும் பண்ணை'(45)

என்ற படிமக் காட்சி பிறக்கிறது.

காலை நேரக் காட்சி

காலை நேரத்தில் அரண்மனையில் அரசன் துயில் எழுவதற்காக

வேண்டிப் பாணர்கள், செவ்வழிப்பண்ணை இசைப்பார்கள். மன்றங்களில் பருவமடைந்த ஆணும் பெண்ணுமான மணமக்கள் திருமணம் செய்துகொள்வார்கள். நாட்டியச் சாலைகளை நடன அழகிகள் ஆடலால் அழகுபடுத்துவார்கள். மருதத்தில் காலை நேரத்தில், ஆணும் பெண்ணுமாகிய குயில்கள் மரக்கிளையில் வந்தமர்கின்றன. காலைநேரக் குளிர்க்காற்றில் மயில்கள் சிலிர்த்துத் தோகை விரித்தாடுகின்றன. வண்டுகள் தேனை உண்ணும்பொருட்டு தாமரை மலரின் அருகே ஒலியெழுப்பியவாறு சுற்றித்திரிகின்றன. இரண்டையும் ஒப்புமைப்படுத்திப் பார்க்கும் புலவர், நகர நிகழ்வுகளைவிட மருத நில நிகழ்வுகளே அழகானதாகக் கருதுகிறார்.

மரக்கிளையில் வந்தமர்ந்த ஆணும் பெண்ணுமான குயில்கள் மணம் புரிந்து கொள்வதாகவும், குளிர்காற்றில் சிலிர்க்கும் மயில்கள் நடனமாடுவதாகவும், தாமரைப்படுக்கையில் துயில்கொள்ளும் அரச அன்னங்களைத் துயில் எழுப்ப வண்டுகள் செவ்வழிப்பண்ணைப் பாடுவதாகவும், உயர்திணைச்செயல்களையெல்லாம் அஃறிணை உயிரினங்களின் மேல் ஏற்றி வைத்து,

'குயில் இனம் வதுவை செய்யக் கொம்பிடைக்குனிக்கும் மஞ்ஞை
அயில் விழி மகளிர்; ஆடும் அரங்கினுக்கு அழகு செய்ய
பயில் சிறை அரச அன்னம் பல் மலர்ப் பன்னிநின்றும்
துயில் எழத் தும்பி காலைச் செவ்வழி முரல்வ சோலை' (46)

என்று, அழகிய காலை நேர மருத நிலத்தை காட்சிப்படுத்துகிறார்.

மங்கையர் கண்கள்

பருவமடைந்த மங்கையரின் மைபூசப்பட்ட கண்களில் உள்ள கருவிழிகள் இங்குமங்குமாகச் செல்வதனால் அவற்றிற்குக் கருவண்டுகளை உவமையாக்குவர் புலவர்கள். கம்பரோ, அப்பெண்களின் முகத்தைத் தாமரை மலர் எனவும் அதிலுள்ள கண்களைத் தேனெடுக்கும் வண்டுகள் எனவும் உவமை கூறி நிறுத்த எண்ணாமல், அவ்வண்டினமே அவர்கள் கண்களைக் கண்டு பெண் வண்டுகள் என நினைத்துக் காதல் கொண்டு அதன் அருகிலேயே தங்கும் என்று அழகை மேலும் அழகாக்கி, அவர் உள்ளத்தில் தோன்றிய கற்பனையை,

'பருவ மங்கையர் பங்கய வாள் முகத்து
உருவ உண்கணை ஒன் பெடை ஆம் எனக்

கருதி அன்பொடு காமுற்று வைகலும்
மருத வேலியின் வைகின வண்டு அரோ' (55)

என்று, நம் மனக்கண்முன் நிற்கவல்ல சொல்லோவியத்தை படைக்கின்றார்.

முடிவுரை

பிற உணர்வுகளைவிட, காட்சியினால் ஏற்படும் உணர்வே நிலைத்து நிற்பதாகவும் உணர்வெழுப்ப வல்லதாகவும் அமையும். அத்தகைய காட்சித் தன்மையைத் தரவல்ல படிமம் என்னும் உத்தியைக் கையாண்டு கம்பராமாயணம் என்னும் நூலின் வாயிலாக உயரிய அறத்தை உலகிற்கு உணர்த்த நினைத்த கம்பர், அதன் முகப்பாகக் கருதப்படும் நாடு, நகர வளம் கூறும் பகுதியாக நாட்டுப்படலத்தைப் படைத்துத் தன் படைப்புடன் சேர்ந்து தானும் இறவாப்புகழ் பெற்றுள்ளார் என்பது மலையுச்சி தீபம்.

கம்பன் தீட்டிய சொல்லோவியங்களில் சில

முனைவர் வீ. சிவபாதம்
இணைப்பேராசிரியர், அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி, பூண்டி

முன்னுரை

நுண் கலைகளில் ஒன்றான ஓவியம் காண்பாரைத் தன்வயப்படுத்தும் ஆற்றல் மிக்கது. அது சுவர், கண்ணாடி, துணி, தாள், உலோகம் முதலியவற்றில் உருவங்களை வரைந்த சித்திரமாகும். காட்சிக்கு விருந்தளிக்கும் ஓவியம்போல் கற்போர்க்குக் கருத்து ஓவியங்களாகக் காப்பியக் கவிஞரான கம்பர் தாம்படைத்த இராமகாதையில் ஆங்காங்கே பல சொற்சித்திரங்களை வரைந்து காட்டுகின்றார். அத்தகைய, சொல்லோவியங்கள் கற்போர் நெஞ் சங்களைக் கொள்ளைகொண்டு அவர்தம் மனத்திரையில் என்றும் நிழலாடிக் கொண்டிருக்கின்றன.

சரயுநதியின் வெள்ளம் பெருக்கைக்கூறுமிடத்து ஒரு காட்சியை நிலைநிறுத்துகின்றார். வெள்ளமானது மதகுக் கதவுகளை முட்டி, உழவர்கள் உவகையினால் கைகளை உயரத் தூக்கி ஆரவாரம் செய்யுமாறு சென்று முன்பக்கத்திலுள்ள ஓடைகள் நிரம்பி வழியவும் தம் இரையை உண்ணுகின்ற வரிகள் பெற்ற வண்டுகள் குடையவும் நெருங்கிய மணிகள் சிதறவும் நீரைத் தள்ளிச் சென்று கரை ஓரத்தில் நடப்பட்ட தூண்கள் முறியும்படிப் பெரிய அலைகளாகிய கைகளால் வீழ்த்தி, மதமாகிய மழையையுடைய யானையைப்போல் போய் மருதநிலத்தை அடைந்தது என்று காட்சிப்படுத்துகின்றார்.

"கதவினை முட்டி மள்ளர் கையெழுத்து ஆர்ப்ப ஓடி
நுதலணி ஓடை பொங்க நுகர்வரி வண்டு கிண்ட
துதைமணி சிந்த உந்தி தறிஇறத் தடக்கை சாய்த்து
மதமழை யானை என்ன மருதம்சென் றடைந்த தன்றே" (28)

இயற்கை எழில் மகளிரின் எழில்போல் காட்சியளித்தல்

இயல்புடைய பெயர்வன மயில்மணி இழையின்
வெயில்புடை பெயர்வன மிளிர்முலை குழலின்
புயல்புடை பெயர்வன பொழில்அவர் விழியின்
கயல்புடை பெயர்வன கடிகமழ் கழனி (74)

இடையிற மகளிர்கள் எறிபுனல் மறுக
குடையவர் துவரிதழ் அலர்வன குமுதம்
மடை பெயர் அனமென மடை நட இளகுக்
கடைசியர் முகமென மலர்வன கமலம் (75)

விதியினை நடுவன அயில்விழி பிடியின்
கதியினை நடுவன அயர்நடை கமலப்
பொதியினை நடுவன புணர்முலை கலைவாள்
மதியினை நடுவன வழிதையர் வதனம் (76)

அயோத்தி நகரத்தின் சிறப்பைக் கூறும்போது,

நிலமகள் முகமோ திலகமோ கண்ணோ
நிறைநெடு மங்கல நாணோ
இலகுபூண் முலைமேல் ஆரமோ உயிரின்
இருக்கையோ திருமகட்கு இனிய
மலர்கொலோ மாயோன் மார்பில்தனை மணிகள்
வைத்தபொற் பெட்டியோ மலரோன்
உலகின்மேல் உலகோ ஊழியின் இறுதி
உறையுளோ யாதுஎன உரைப்பாம் (94)

இவற்றில் எது என எடுத்துச்சொல்லுவோம் என்று மயங்கிக் கூறுகின்றார். கோசலநாட்டின் வளத்தைக் கூறும்போது ஒரு நாடகக் காட்சியையே நிகழ்த்திக் காட்டுகின்றார்.

தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முடிவின் ஏங்க குவளை கண்விழித்து நோக்க
தெண்டிரை எழினி காட்ட தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிதுபாட மருதம் வீற்றி ருக்கும் மாதோ (35)

என்று மருதநில மாண்பை விளக்குகின்றார்.

மிதிலைக் காட்சி

மிதிலைநகரின் தெருவழியே விசுவாமித்திரரின் பின்னே செல்கின்ற இராமன், அங்கு கன்னிமாடத்தில் நின்ற சீதையைக் கண்ணொடு கண்பதியுமாறு காண்கின்றான். அவளும் அவனை நோக்குகின்றாள்.

எண்ணரு நலத்தினாள் இளையள் நின்றுழி
கண்ணொடு கண்ணினைக் கவ்வி ஒன்றை யொன்று

உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினாள் அவளும் நோக்கினாள் (514)

என்று அற்புதக்காட்சியைத் தீட்டிக் காட்டுகின்றார்.

எண்ணமும் செயலும்

சுயம்வர மண்டபத்தில் பல்வேறு அரசர்களும் சீதையின் அழகில் மயங்கி அவளை மணக்கப் போட்டியிட்டனர். அப்பொழுது விசுவாமித்திரர், 'நீதான் இந்த வில்லின் நாணை ஏற்ற வேண்டும்' என்ற நினைவோடு இராமனை நோக்கினார். அவர் நினைந்ததை எல்லாம் மனத்தினால் உணர்ந்த இராமனும் வில்லை ஏறிட்டுப் பார்க்கிறான்.

நினைந்தமுனி பகர்ந்தவெலாம் நெறியுண்ணி அறிவனும்தன்
புனைந்தசடை முடிதுலக்கிப் போரேற்றின் முகம்பார்த்தான்
வனைந்தனைய திருமேனி வள்ளலும் அம்மாதவத்தோன்
நினைந்த வெலாம் நினைந்து அந்த நெடுஞ்சிலையை நோக்கினான்

என்று ஒரு ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் உள்ள ஒழுக்க நெறியினை வெளிப்படுத்துகின்றார்.

எடுத்ததும் இற்றதும்

இராமன் தேவர்கள் மகிழ, சான்றோர் உவக்க, மகளிர் விரும்ப, சிங்கமும் யானையும் காளையும், மேரு மலையும் நடந்து வருவதுபோல நடந்து வில்லை அணுகினான். இமையா நாட்டமுடைய தேவர்களே அவன் வில்லை எடுத்ததைத்தான் கண்டார்கள். அவன் எப்படிக் கால் வைத்து நாண் பூட்டுவதற்காக வளைத்தான் என்பதைக் காணவில்லை. ஆனால் அவ்வில் ஒடிந்த ஓசை யாவர்க்கும் கேட்டது.

தடுத்து இமையாமல் இருந்தவர் தாளில்
மருத்ததும் நாண்நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர் கையால்
எடுத்தது கண்டார் இற்றது கேட்டார் (699)

கண்கொள்ளாக் காட்சி

தயரதன் முதலியோர் சனகனின் மாளிகையில் தங்கிட, இராமன் வீதிகளிலே உலாவந்தான். வீதிகளில் உள்ள பல்வேறு மகளிரும் இராமன் அழகில் ஈடுபட்டனர். இராமனுடைய எல்லா உறுப்புக்களுமே அழகு முற்றியதாகையால் ஓர் உறுப்பைப் பார்த்தவர் மறு உறுப்பைப் பார்க்க முடியாதபடி பார்த்த உறுப்பிலேயே தம் மனத்தைப் பறிகொடுத்தனராம். இக்காட்சிப் பல சமயத்தவரும் தம் மதக்கருத்துக்களே சரி என்று

அரற்றி இறைவனின் இயல்பை அறியாததுபோல இராமனைக் கண்ட பெண்களும் அவன் முழு அழகையும் காணவில்லை.

தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழல் கமலம் அன்ன
தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கை கண்டாரும் அஃதே
வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்
ஊழ்கொண்ட சமயத்து அன்னான் உருவு கண்டாரை ஒத்தார்
(1081)

சீதையின் மணக்கோலக் காட்சி

விண்ணிலே உதிக்கும் சூரியன் போலச் சிவந்து ஒளியுடன் சீதை திருமண மன்றிற்கு வந்தாள். அவள் தோற்றம்.

சிலையுடைக் கயல்வாள் திங்கள் ஏந்தியோர் செம்பொன் கொம்பர்
முலையிடை முகிழ்பத் தேர்மேல் முள்திசை முளைத்தது அன்னாள்
அலைகடல் பிறந்து பிள்ளை அவனியில் தோன்றி மீள
மலையிடை உதிக்கின்றாள்போல் மண்டப மதனில் வந்தாள்

கொடுமனக் கூனி

இராமனுக்கு முடிசூட எண்ணிய தயரதன், அதனை நாட்டு மக்களுக்கு அறிவித்தான். நகர மாந்தர் அனைவரும் சூடியும் பாடியும் மகிழ்ந்தனர். அதைக்கண்ட கூனி, இராவணன் செய்த தீமையெல்லாம் திரண்ட உருவினளாய் மனம் கொதித்தாள்.

இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல்
துன்னரும் கொடுமனக் கூனி தோன்றினாள் (1445)

அவள் கண்கள் பற்றி எரிந்தன. சினமிகுதியால் உள்ளம் துடித்தாள். அவள் நினைத்தால் மூன்று உலகத்துக்கும் துன்பத்தை இழைத்து விடுவாள்.

மூன்று உலகினுக்கும் ஓர் இடுக்கண் மூட்டுவாள் (1446)

இராமனின் தோற்றம் பொலிவு

இருள் மிகுந்த காட்டில் இராமன் தன் தம்பியொடும் சீதையொடும் போனான். அப்போது அவன் தோற்றம்,

வெய்யோன் ஒளிதன் மேனியின் விரிசோதியின் மறைய
பொய்யோ எனும் இடை யாளொடும் இளையா னொடும் போனான்
மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ
ஐயோ இவன்வடி வென்பதோர் அழியா அழகுடையான் (1926)

குகனின் செயல்

கங்கையின் தென்கரையில் நின்ற குகன், வடகரையில் ஒரு பெரும்படை வருவதைக் கண்டு, பரதனின் சேனை இராமனுடன் போரிடுவதற்கு வருவதாக எண்ணி, அதனை எதிர்கொள்ளத் தலைப்பட்டான். அப்போது அவன் தோற்றம்,

கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கும் தீயினன்
கொட்டிய துடியினன் குவிக்கும் கொம்பினான்
கிட்டியது அமர் எனக் கிளரும் தோளினான் (2311)

என அமைந்தது.

பரதனின் துறவுக் கோலம்

மரவுரி தரித்து நிற்கின்ற பரதனின் வாடிய முகத்தைக் கண்ட பரதவன் உறுதியாக இவன் படையெடுத்து வரவில்லை என்பதை உணர்கின்றான். பரதனின் தோற்றம்,

வற்கலையின் உடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையில் மதிஎன்ன நகையிழந்த முகத்தானை
கற்கனிய கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின்று இடைவீழ விம்முற்று நின்றொழிந்தான் (2331)

என விளங்கியது.

இராமனைக் கண்ட பரதனின் கைகள் தொழுகின்றன; துன்பத்தால் உடம்பு துவள்கின்றது; கண்கள் அழுகின்றன. சோகத்திற்காக ஒரு படம் வரைந்து காட்டியதுபோல வருகின்ற பரதனை எல்லாம் உணர்ந்த இராமன் முழுவதுமாகப் பார்த்தான்.

தொழுதுயர் கையினன் துவண்ட மேனியன்
அழுதுஅழி கண்ணினன் அவலம் ஈது என
எழுதிய படிவம் ஒத்து எய்துவான் தனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினான் (2423)

சூர்ப்பணகையின் தோற்றமும் மாற்றமும்

வாய்நிறைய பற்களும் வயிறு நிறைய புலால் உணவும் உடையவளான சூர்ப்பணகை, இராமனைக் கவர்வதற்காகத் திருமகள் மந்திரத்தை ஓதித் திருமகள் போன்ற தோற்றத்தைப் பெற்றாள். செம்பஞ்சுக் குழம்பு தீட்டிய தளிர் துவளும் பாதம்; இனிய சொல்

பேசும் மயில் அழகிய தேர் ஒன்று வானிலிருந்து மின்னற்கொடி இறங்குவது போலச் சூர்ப்பணகை இறங்கி வந்தாள்.

பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடியள் ஆகி
அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள் (2762)

சான்றோர் கவியும் கோதாவரியும்

மணமகளுக்கு ஓர் அணியாகவும் அனைத்துப் பொருளையும் அழித்து, புலத்துக்கு உரியதாகவும் உள்துறைகள் பல உள்ளதாகவும் ஐவகை நிலங்களையும் தழுவி, கீழ் உள்ளதும் தெளியுமாறு தெளிந்து சிறந்த ஒழுக்கமும் கொண்டு விளங்கும் சான்றோர் கவிதைக்கு இணையாக உள்ள கோதாவரியைக் கண்டார்கள்.

இங்கு, கோதாவரி ஆற்றைச் சான்றோர் கவிக்கு ஒப்பாகக் காட்டும் திறம் அறியத்தக்கதாகும். புலம் என்பதற்கு அறிவு, நிலம் எனவும் உள்துறை என்பதற்குக் குளிர்ந்த நீர்த்துறை என்றும் அகப்பொருள் துறை எனவும் ஒழுக்கம் என்பதற்கு நீர் ஓட்டம் என்றும் நன்னடத்தை என்றும் பொருள் கொள்ள வேண்டும். இதோ அப்பாடல்,

புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற் றாகி
அறியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென் ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார் (2732)

அன்ன நடையும் ஆனை நடையும்

ஆண்மை விளங்கும் காட்சிகளைச் சீதை கண்ட இராமனுக்கும் பெண்மை விளங்கும் காட்சியைக் கண்டு இராமன் கண்ட சீதைக்கும் ஒப்புமை கண்டு காட்டிச் சுவைக்க வைத்தான்.

ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழையள் ஆகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்
மாதுஅவள் தானும் ஆண்டு வந்துநீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப் புரியதோர் முறுவல் பூத்தாள்
(2736)

இவ்வகையில் கம்பரின் சொல்லோவியங்களில் சிலவற்றை மட்டுமே கூறி விரிவஞ்சி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

கம்பனின் சொல்லாட்சி

முனைவர் ப.இராசமாணிக்கம்
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், அரசு ஆடவர் கலைக்கல்லூரி,
கிருட்டிணகிரி.

கம்பரின் இராமாயணம் ஒரு மாபெரும் புலமைக் காப்பியம். அம்முறையில் சுந்தரகாண்டத்தில் அனுமன், இராமன், சீதை, இந்திரசித்து ஆகிய இவர்களின் வாயிலாகக் கம்பர் வெளிப்படுத்தும் அருமையான, அழுத்தமான சொல்லாட்சிகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சூழ்நிலையின் தன்மையையும் உணர்ச்சியின் ஆழத்தையும் உருவாக்க- காப்பியக் கவிஞன் எந்த அளவுக்குச் சொற்களைக் கூர்மையாகவும் தெளிவாகவும் பயன்படுத்துகிறானோ, அவ்வழி அக்காப்பியம் பலவகைகளில் வெற்றிபெற்ற காப்பியமாகத் திகழ்கின்றது. கவிஞர்கள் பலவகைகளில் சொற்களைப் பயன்படுத்தினாலும் "சொல்லை ஆய்ந்து பயன்படுத்துவதே சொல்லாட்சி முறை *(Diction)*" எனப்படுவதாகும்.

அனுமனின் தோற்றம்

கம்பர் அனுமனின் தோற்றத்தைப் பலவிடங்களில் பல்வேறு விதமாகக் குறிப்பிட்டாலும் இலங்கைக்குச் செல்லத் தயாராக நிற்கும் அனுமனைக் காட்டுகிறார். கடலைக் கடக்க வேண்டும்; கடல் தாவ வேண்டும் என விசுவரூபமெடுத்து மேலெழுகிறான். அனுமன் வெறுமனே மெலெழுந்தான் என்றோ, அல்லது அதையே மிகைபடக் கூறுகின்ற தன்மையிலோ அல்லாமல் அவனது தோற்றத்தை அப்படியே நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகின்ற கம்பனின் அசாத்தியச் சொல்லாட்சியை எப்படி மறக்கவியலும்?

வால்விசைத்து எடுத்து வன்தாள் மடக்கி மார்பொடுக்கி மானத்
தோல்விசைத் துணைகள் பொங்கக் கழுத்தினைச் சுருக்கித் தூண்டும்
கால்விசைத் தடக்கை நீட்டி கட்புலம் கதுவா வண்ணம்
மேல்விசைத் தெழுந்தான் உச்சி விரிஞ்சன் நாடு உரிஞ்ச வீரன்

அனுமன் பறப்பதற்கு முன் அவன் உடலில் ஏற்பட்ட மாற்றங்களை விசைத்து, எடுத்து, மடக்கி, ஒடுக்கி, சுருக்கி, நீட்டி போன்ற சொற்கள் யாவும் படிப்பவர் கண்முன் ஒரு படிமக் காட்சியை உருவாக்கும் தன்மையில் இருப்பதைக் காணலாம்.

அனுமன் பறக்கும் காட்சி

அனுமன் பறப்பதற்குமுன் தன்னைத் தயார் செய்து கொண்ட நிலை- சாதாரண நிலை அன்று. விமானம் ஓடு தளத்தில் சிறிது நேரம் ஓடிய பிறகே வேகமெடுத்து வான்வெளியில் மேலெழும்பிப் பறக்கும்; ஆனால் இங்கு அனுமனோ அப்படி நிலத்தில் ஓடிப் பிறகு வானில் பறக்கவில்லை. நின்ற இடத்திலிருந்து வானில் எழும்புகின்றான்.

மழைகிழித்து உதிரமீன்கள் மறிகடல் பாய வானங்
குழைவுறத் திசைகள் கீற மேருவுங்குலுங்க கோட்டின்
முழையுடைக் கிரிகள் முற்ற முடுக்குவான் முடிவுக் காலத்து
அழிவுறக் கடுக்கும் வேகத் தாதையும் அனையனானான்

கம்பர், 'அனுமன் சீறிப் பாய்ந்தான்' என்று ஒரே சொல்லால் கூறாமல் மழைகிழித்து, உதிர, கடல்பாய, குழைவுற, கீற, குலுங்க போன்ற பலவகையான சொற்களைப் பயன்படுத்துகின்றார். விண்மீன்கள் மேகத்தைக் கிழிக்கின்றன. கடல் பாய்ந்து எழுகின்றது. வானம் குழைகின்றது, மேருமலையோ குலுங்குகின்றது என்று பல்வேறு சொற்களை அனுமன் பறப்பதால் ஏற்படும் விளைவுகளாக்கிக் கம்பர் கூறுகின்றார்.

இலாங்காபுரியின் சிகரத் தோற்றம்

இராவணனுடைய கட்டுக்காவல் மிகுந்த அரண்மனைச் சிகரத்தையும் நமக்கு அறிமுகப்படுத்துகிறார். "நீண்ட எயிலுடை இலங்கை" என்று ஓரிடத்தில் அறிமுகப்படுத்திய கம்பர், ஓரெல்லைக் கடங்காத வானத்தை, எட்ட நின்று, இமைக்கின்ற சிகரம் என்றும் விளிக்கின்றார்,

கொண்டல் வான்திரை குரைகடல், இடையதாய்க் குடுமி
எண்தவா விசும்பு எட்ட நின்றிமைக்கின்ற இயல்பால்

வானுயர் சிகரம் என்று குறிப்பிடாமல் 'எட்டநின்று இமைக்கின்ற' என்ற வியத்தகு சொல்லாட்சியால் கவித்துவம் நிரம்பக் குறிப்பிடுகின்றார்.

சீதையின் தோற்றம்

கம்பரின் சொல்லாட்சிகளுக்கு ஈடு இணை இல்லை என்பதை ஒவ்வொரு பாடலைப் படிக்கும்தோறும் வியப்புக் குன்றாமல் மேலிடவே செய்கிறது. சீதை அரக்கியரிடையே தோன்றும் தன்மையைக் கம்பர் அற்புதமான சொல்லாட்சியின் மூலம் விளக்குகிறார்,

முனிபவர் அரக்கியர் முறையின் நீங்கினார்
இனியவர் தான் அலாது யாருமில்லையால்
தனிமையும் பெண்மையும் தவமும் இன்னதே
வனிதையர்க்காக நல்லறத்தின் மாண்பெலாம்

அரக்கியர் நடுவே, தன்னைத் தவிர தனக்குத் துணை யாருமின்றி இருக்கின்றாள் சீதை. தன்னந்தனியாய் கொடிய அரக்கியரிடையே தன்பெண்மையைக் காத்துக் கொண்டு மாபெருஞ் சோகத்தில் அமிழ்ந்துள்ள அவளின் நிலையைக் கம்பர் தனிமை, பெண்மை, தவம் என்ற மூன்று சொற்களையும் இணைத்துச் சோக உணர்வையும், பெருமையையும் அற்புதமாகவும், அழகாகவும், ஆற்றலுடனும் எடுத்துச் சொல்லுகின்றார். கம்பனின் சொல்வைப்பு முறையையும் இணைப்பு முறையையும் கூர்ந்து நோக்கின் சொல்லாட்சியின் நிரல்வைப்பும், சிறப்பும் வெளிப்படுவதைக் காணலாம்.

அனுமன் பொழிலிறுத்தக் காட்சி

அனுமன் அசோகவனத்தை அழித்த காட்சியைக் கம்பர் வெளிப்படுத்துகின்றார். அனுமனின் வீராவேசம் வெளிப்பட்டுப் பொழில் அழிவுற்றத் தன்மையை அழகியச் சொற்களைக் கொண்டு அமைக்கின்றார்.

முடிந்தன பிளந்தன முரிந்தன நெரிந்த
மடிந்தன பொடிந்தன மறிந்தன முறிந்த
இடிந்தன தகர்ந்தன எறிந்தன கரிந்த
ஒடிந்தன ஒசிந்தன உதிர்ந்தன பிதிர்ந்த

இப்பாடல் மரம், செடி, கொடிகளின் அழிவை உக்கிரத்துடன் வெளிப்படுத்துகின்றது. மேலும் அழிந்து வீழ்வதைக் குறிக்கும் சொற்கள் அனைத்தும் கையாளப்பட்டுள்ளன. பல சொற்களை ஒரு பாடலில் அமைத்து, பொழில் அழித்த அனுமனின் ஆவேசத்தைக் குறிப்பிடுகின்றார். இப்பாடலில் பலசொற்களை- ஒருபொருள் பன்மொழிகளாகக் அமைத்துக் காட்டியிருக்கும் கம்பரின் பாங்கு நயங்கூரத்தக்கது.

இந்திரசித் போர்க்கோலம்

அனுமனைப் பிடித்து வருவதற்கு முன் இந்திரசித் போர்க்கோலம் பூண்டு வீரவுரை நிகழ்த்துகின்றான். இதனைக் கம்பர்,

ஏறினன் விசும்பினுக் கெல்லை காட்டுவ
ஆறிரு நூறுபேய் பூண்ட ஆழித்தேர்

கூறின கூறின சொற்கள் கோத்தலால்
பீறின நெடுந்திசை பிளந்த தண்டமே

இந்திரசித்தின் வீரவுரையைக் காட்ட அடுக்குத் தொடர்போல "கூறின கூறின சொற்கள்" என்று கூறும் கம்பர் இந்திரசித்தின் வீரஉரையாடலை, 'பீறின நெடுந்திசை' 'பிளந்த தண்டமே' திசை, அண்டம் இரண்டுமே பிளந்தன ஆயினும் இரண்டினையும் "பீறின", "பிளந்தன" என சொற்களால் வேறுபடுத்தி உணர்ச்சி கொப்பளிக்க அருமையான சொல்லாட்சியை உருவாக்கிக் கற்போர் மனதைக் களிப்படையச் செய்கிறார்.

அனுமன் இலங்கைக்கு தீ வைத்தல்

அனுமன் தன்வாலுக்கு அரக்கர் வைத்த தீயால் இலங்கை நகரைக் கொளுத்துகிறான். அத்தீ எங்கும் பரவி இலங்கைக்கு சொல்லொண்ணாத் துயரத்தை, சோகத்தை வெளிப்படுத்துகிறது. கம்பர் தீ பரவும் உக்கிரத்தைச் சொல் வைப்புக்களாலேயே காட்டுகின்றார்,

பருதி பற்றி நிமிர்ந்தெழு பைங்கனல்
கருகி முற்றும் எரிந்தெழு கார் மழை
அருகு சுற்றும் இருந்தை அதாய் அதின்
உருகு பொற்றிரள் ஒத்தனன் ஒண்கதிர் (1028)

இப்பாடலில் கம்பர் தீ எவ்வாறு பற்றிப் படர்ந்து விரைவாய்க் கனலிட்டவாறு மேலெழுந்தது என்பதை "நிமிர்ந்தெழு", "எரிந்தெழு", 'அருகு சுற்றும்" என்பன போன்ற அருமையான சொல்லாட்சிகள் மூலம் வெளிப்படுத்துவதைக் காணலாம்.

கம்பனின் அனுபவச் செறிவு

கம்பன் பல பாடல்களில் அனுபவச் செறிவை. உள்ளடக்கி, சொற்களைப் பயன்படுத்தும் முறையில் சொற்பொருள் பின்வருநிலை அணியாக அமைகின்றான். அவ்வகையில் ஒருசில பாடல்களைக் காண்போம்;

பேண நோற்றது மனைப் பிறவி பெண்மைபோல்
நாண நோற்று உயர்ந்தது நங்கை தோன்றலான்
மாண நோற்று ஈண்டிவள் இருந்த வாறெல்லாம்
காண நோற்றிலன் அவன் கமலக் கண்களால் (402)

'நோற்று' என்ற ஒரு சொல் சீதையின் தவப் பெண்மையையும், இறுதியில் இதைக் காணாத இராமன் "நோற்றிலன்" என்று உணர்த்தியும் பொருளிணைப்புச் செய்வதைக் காணலாம். அடுத்த பாடலில்,

ஊனெலாம் உயிர் கவர்வுறுங் காலனோய்ந் துலந்தான்
தானெலாரையு மாருதி சாடுகை தவிரான்
மீனெலாமுயிர் மேகமெலாம் உயிர் மேன்மேல்
வானமெலாம் உயிர் மற்று மெலாமுயிற் சுற்றி

'எலாம்' என்ற சொல் சுற்றி சுற்றி இணைத்து பாடலின் முக்கியச் சொல்லா வலம் வருவதைக் காணலாம்.

மேற்கண்ட குறிப்புகளிலிருந்து கம்பருடைய சொல்லாட்சிகளுக்கு எடுத்துக்காட்டாகச் சிலபாடல்களை மட்டும் எடுத்துக்கொண்டு இவ்வாய்வு நிகழ்த்தப் பெற்றுள்ளது. கம்பனின் பாடல்களை விரிவாக ஆராயின் அகன்ற பரப்பினை உடைய கம்பராமாயணம் அதற்கேற்ப இடம் தந்து சுவைபல நல்கும் என்பதில் ஐயமில்லை.

கடல் தாவிய காட்சியில் கம்பனின் மாட்சி

முனைவர் வை.மோகன்
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், இராசா நந்திவர்மன் கலைஅறிவியல் கல்லூரி, தெள்ளாறு.

முன்னுரை

அனுமன் வாயுதேவனுக்கு அஞ்சனாதேவியின் வயிற்றில் மகனாகப் பிறந்தவன். கடல் தாவிய காட்சியில் அனுமனைக் கம்பர் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதை இக்கட்டுரை பேசுகிறது.

அனுமன் கடலைத் தாவிய காட்சி

அனுமன் கடலைத் தாவிய காட்சியை வருணிக்கும் வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு கம்பர் அனுமனை வானளாவப் புகழ்ந்து விடுகிறார். அனுமன் வானளாவ வளர்ந்து மயேந்திர மலைமீது நின்றமையால், அம்மலையில் ஏற்பட்ட குழப்பங்களை இருபது பாடல்களில் கூறி கம்பர் அனுமனின் வலிமையைக் காட்டுகிறார்.

வான் வழியே தாவிச் செல்லுதல்

வான் வழியே தாவிச்செல்லும் அனுமனை மேலும் இருபது பாடல்களில் மேன்மை செய்கிறார். இவ்விருபது பாடல்களில் வரும் பதினொரு உவமைகளால் அனுமனின் தெய்வத்தன்மையை உணர்த்துகிறார். வாயுவால் எடுத்துச் செல்லப்பட்ட திரிகூடமலையைப்போல அனுமன் விளங்கினான். ஆயிரங்கண்களையுடைய இந்திரனும் காணவியலா வேகத்துடன் அண்டங்களை அழிக்கச் செல்லும் புட்பக விமானம் போல அனுமன் இலங்கை நோக்கி விரைந்தான்.

'இராவணன் தன்னை முன்பு பெயர்க்க முனைந்தபோது அழுத்தியதுபோல, மீண்டும் அழுத்துவான்" என்று நினைத்து சிவனைப்பிரிந்து, இராவணனை நோக்கிச் செல்லும் கயிலை மலையை அனுமன் ஒத்திருந்தான்.

'அண்ணல்வாள் அரக்கன் தன்னை
 ஆக்குவென் இன்னம் என்னா
கண்ணுதல் ஒழியச் செல்லும்
 கயிலை அம்கிரியை ஒத்தான்" (கடல்தாவு - 25)

தன்னைவிட்டுப் பிரிந்த பிள்ளையான திரிகூடமலையைக்

காணச் செல்லும் மகாமேருமலையைப்போல அனுமன் சென்றான். இவ்விடத்தில் அனுமனைக் கம்பர், "பிரமச்சாரி வேடந்தாங்கி பேரறிவில் பிரமனையும் விஞ்சி உலகத்திற்கெல்லாம் ஓர் அச்சாணிபோல ஆகி, அறத்தையும் பொருளையும் நிறைக்கின்ற அண்ணல்" என்று பெருமையுடன் பேசுகிறார்.

மாணி ஆம் வேடம் தாங்கி மலர் அயற்கு
அறிவு மாண்டு, ஓர்
ஆணிஆய் உலகுக்கு எல்லாம்
அறம் பொருள் நிரப்பும் அண்ணல்" (கடல்தாவு -26)

என்பது கம்பரின் வாசகம். முன்னர் இராமபிரான் அனுமனைக் கண்ட மாத்திரத்தே விண்ட அவ்வாசகம் ஈண்டு ஒக்கும்.

'மாணியாம் படிவம் அன்று
மற்றுஇவன் வடிவம்! மைந்த!
ஆணி இவ்உலகுக்கு எல்லாம்
என்னலாம். ஆற்றற்கு ஏற்ற
சேண் உயர் பெருமை தன்னைச்
சிக்கு அறத்தெளிந்தேன். பின்னர்க்
காணுதிமெய்ம்மை என்று
தம்பிக்குக் கழவிக் கண்ணன்" (அனும-19)

என்ற முந்தைய பாடலில், "பின்னர் காணலாம், இவன் பெருமை" என்பதற்கு ஏற்ப அனுமனின் பெருமை ஒவ்வொன்றாகக் காட்சிக்கு வருகின்றது.

கடல்தாவு படலத்தில் கம்பர்

கடல்தாவு படலத்தில் கம்பர் மேலும் வருணனையைத் தொடர்கிறார். அனுமன் ஊழிக்காலத்தில் வீசும் பெருங்காற்று போல்வான் ஆதலின் வாயுவாகிய 'தாதையை ஒத்தான்" என்கிறார்.

இராவணன் செய்த தவப்பயன் அவன் செய்த தவறால் அற்றுப் போய்விட்டதால், இயல்பாக, கிழக்கே உதிக்கும் சூரியன் வடக்கே உதித்து, தெற்கே செல்வது போல் அனுமன் சென்றான். அதனால் 'பரிதி வானவன் ஒத்தான்" என்கிறார்.

அரக்கரை அடக்கச்செல்லும் அரசரின் ஆக்கினா சக்கிரமாம்போர் ஆழிபோன்றும், கடையூழிக்காலத்தில் வடவானில் தோன்றும் முழுமதி போன்றும், திருமாலின் வாகனமாகிய கருடனைப் போன்றும்

விளங்கினான் என்றெல்லாம் அனுமனின் தோற்றப் பொலிவையும் தோள் வலிவையும் பாடிய கம்பர் அனுமனின் வால் வலிவையும் காட்டத் தவறவில்லை.

அனுமனின் வால் மேருவைச் சுற்றிநின்ற ஆதிசேடனைப் போலவும், பாசத்தைப்போலவும் இருந்தது என்று எழுதும் கம்பர் இங்கும் அனுமன் அறத்திற்கு அருந்துணையாக வந்தவன் என்று குறிப்பிடுகிறார். முன்பு 'தருமம் பின் தனித்து ஏக" என்ற கம்பர் அத்தருமத்திற்கு இப்போது வேகத்தை ஒத்த ஆஞ்சநேயரின் துணை கிடைத்துவிட்டதால், தன் கையிலிருக்கும் கால பாசத்தை அறக்கடவுள் எனும் காலன் அனுமனுக்குப் பின்னே அனுப்பி வைத்துள்ளதுபோல் இருக்கிறது அனுமனின் வால் என்கிறார்.

'வெளித்து உப்பின்வேலை தாவும்
வீரன் வால் வேதம் ஏய்க்கும்
அளி, துப்பின் அனுமன் என்று ஓர்
அருந்துணை பெற்றதாயும்
களித்துப், புன்தொழில்மேல் நின்ற
அரக்கர் கண்ணுறுவராம் என்று
ஒளித்து, பின் செல்லும் கால
பாசத்தை ஒத்தது அன்றே" (கடல்தாவு-33)

இவ்வாறெல்லாம் உவமைகள் மூலமாக அனுமனின் தோள் வலியும் வால் வலியும் கூறிவந்த கம்பர் மிகப்பெரிய செய்தி ஒன்றைக் கூறி அனுமனைப் புகழின் உச்சிக்கே தூக்கிவிடுகிறார்.

மூவுலகும் நடுக்கம்உறப் பாய்ந்து செல்லும் அனுமனைப் பார்த்துப் பயந்துபோன வானவரெல்லாம் "ஆ! திருமாலின் திரிவிக்ரம் அவதாரம் தம் உயர்ந்த காலினால் அளந்த வான் முகட்டை இந்த ஆஞ்சனேயன் தன் வாலினால் அளந்துவிட்டானே!" என்று வியப்பெய்தினராம்!

'நாலினோடு உலகம் மூன்றும்
நடுக்குற, அடுக்கு நாகர்
மேலின்மேல் நின்றகாறும்
சென்ற கூவலத்தன் விண்டு
காலினால் அளந்த வான
முகட்டையும் கடக்கச் கால
வாலினால் அளந்தான் என்று
வானவர் மருள, சென்றான்" (கடல்தாவு -32)

கம்பரா இப்படிப் பாடினார்? இது மிகைப் பாடல் அல்ல. 'கம்ப முத்திரை" பெற்ற பாடல்தான். கம்பரின் சமயப்பொறை அன்றோ. அவரை இவ்வாறு பாட வைத்துள்ளது!

இத்தோடு விட்டாரா கம்பர்? பின்னே சென்ற வாலைத் தருமதேவனின் காலபாசம் என்றால், அனுமன் தாவும் நிலையில் முன்னே நீட்டியுள்ள இருகைகளையும் என்னவென்று சொல்வது? இரு கைகளில் ஒன்று இராமனைப் போன்றதாம்! இன்னொன்று இலக்குவனைப் போன்றதாம் !

இராமனும் இலக்குவனும் முன்னே செல்வதுபோல அனுமனின் இரு கரங்களும் முன்னே சென்றனவாம் !

'பொருஅரும் உருவத்து அன்னான்
போகின்ற பொழுது, வேகம்
தருவன தடக்கை, தள்ளா
நிமிர்ச்சிய தம்முள் ஒப்ப,
ஒருவு அருங் குணத்து வள்ளல்
ஓர் உயிர் தம்பி சென்றால்
இருவரும் முன்னர் சென்றால்;
ஒத்த அவ் இரண்டு பாலும்" (கடல்தாவு-31)

முன்பு வாலி, அனுமனை "இராமனின் கையில் இருக்கும் தனு" என்றான். அத்தனு இப்போது கடலைத் தாவிச் செல்கிறது. இத்தனுவின் இருகைகளும் இராம, இலக்குவர் போல உள்ளனவாம். இராம இலக்குவராகிய கைகளில் பொருந்திய தனுவான அனுமன் இருப்பதைக் கம்பர் மீண்டும் நினைவூட்டி உவகை தருகிறார்.

இவ்வாறு அனுமனுக்கு உவமையாகத் திரிகூட மலை, புட்பக விமானம், கயிலாயமலை, பேரூழிக்காற்று, சூரியதேவன், முழுமதி ஆகியவற்றை உவமையாகச் சொல்லி அனுமனின் பெருமையைப் பேசிய கம்பர், இறுதியாக இரு அவதாரங்களையும் காட்டி மாருதியின் படைப்புக்கு மாண்பு சேர்க்கிறார்.

'விண்டு வாலினால் அளந்த வான முகட்டையும் கடக்கக் கால வாலினால் அளந்தான்" எனும் சொற்றொடரும், 'தடக்கை.............. ஒருவருங்குணத்து வள்ளல் ஓர் உயிர்த்தம்பி என்னும் இருவரும் முன்னால் சென்றால் ஒத்த" எனும் சொற்றொடரும் கம்பமாருதியின் கழுத்தில் விழுந்த புகழ்மாலைகளாகப் பொலிகின்றன.

கடலைக் கடக்கும் வழியில் கம்பமாருதி மூன்று தடைகளைச் சந்திக்கின்றான். மாருதி சந்தித்த அக்காட்சிகள் அவனுக்கு மேலும் மாட்சி தருவனவாக அமைந்துள்ளன.

மைநாகம் எனும் மலை, கடலினுள்ளிருந்து எழுந்துவந்து, அனுமனுக்கு எதிரே நின்றது. அஞ்சாமனத்துடைய அண்ணலாகிய ஆஞ்சனேயன் அம்மலையைத் தலைகீழாகத் தள்ளிவிட்டுத் தன் பயணத்தைத் தொடர்ந்தான். விழுந்த மலை மானிடவடிவில் எழுந்து வந்து, "எந்தாய்! என்னைப் பகைவன் என எண்ண வேண்டாம். முன்பு மலைகளின் சிறகை இந்திரன் அரிந்தபோது, வாயுபகவான் என்னைக் காப்பாற்றினார். நீர் அவர் மைந்தனாதலின் உயர்விற்கும் உயர்ந்த தோளாய்! உமக்கு உதவ வந்தேன். என்மீதிருந்து இளைப்பாறிச் செல்க. நீதியில் நின்றவரே, கடலரசனும் உமைக் காண்பதே பெரும் பேறென்றான்! தாயினும் நல்லவரென்று உமை நாடி வந்தேன். இருந்திங்கு விருந்துண்டு செல்க" என வேண்டிற்று மைநாகம்.

அப்பேச்சைக் கேட்டு, மகிழ்ந்த அனுமன் "இராகவன் அன்பால் எனக்கு இளைப்பு இல்லை. என் இலட்சியம் நிறைவேறுமுன் நான் உண்ணமாட்டேன். நீ அன்பால் என்னைப் பிணித்தபோதே நான் இருந்து, விருந்துண்டவன் ஆகிவிட்டேன்! இதற்கு மேலும் ஈவது எதற்கு?" என்றான்.

முடிவுரை

கம்பராமாயணத்தில் அனுமன் அறிமுகத்தையும், அனுமன் கடலைத்தாவிய காட்சியையும், வான்வழியே தாவிச்செல்லும் அனுமனையும், அரக்கரை அடக்கச் செல்லும் அனுமனின் வால் மேருவைச் சுற்றி நின்ற ஆதிசேடனைப் போலவும் கடல் தாவிய காட்சியில் கம்பனின் மாட்சியாக இக்கட்டுரை அமைகின்றது.

உலக இலக்கியச் சோலையில் கம்பனின் கற்பனைப்பூக்கள்

திருமிகு தி.க.இராமானுஜம் (புதுயுகன்)
இலண்டன்.

முன்னுரை

இந்தக்கட்டுரை, கம்பராமாயணத்தின் சிறப்புகளான கற்பனை, அழகியல், பாத்திர அமைப்பு, மொழியழகு இவற்றின் நேர்த்தியைச் சொல்லி, வால்மீகி, சேக்ஸ்பியர் முதலான சில உலகக் கவிஞர்களோடு ஒப்பிட்டு, நிறைவாக உலக இலக்கிய வரிசையில் கம்பனின் இடத்தைப் பற்றியும் அலசுகிறது.

உலக காப்பியத் தளத்தில் கம்பராமாயணத்தின் இடம்

கில்கமேஷ் காவியம் முதலான பழைய சுமேரியக் காப்பியங்கள் காலத்தால் முன்பாக உருவாகியிருப்பினும், பழமையும் சீர்மையும் கொண்டவை, கிழக்கின் இராமாயணம் மற்றும் பாரதமும், மேற்கின் ஹோமர் எழுதிய இலியட் (கி.மு.750) மற்றும் ஒடிசி (கி.மு.720) என்ற கிரேக்கக் காப்பியங்களுமே.

வாய்மொழிமரபில் பலநூற்றாண்டுகள் வாழ்ந்தபிறகே எழுத்துரு பெற்றமையால் இராமாயணம் உருவான காலத்தை துல்லியமாய் நிறுவுதல் இயலாது. வால்மீகியால் முதலில் எழுதப்பட்டு இந்திய மொழிகள், அயல்மொழிகள் பலவற்றில் இருபதுக்கும் மேற்பட்ட முறைகள் மொழிமாற்றப்பட்டிருக்கும் இராமாயணங்களில் முக்கியமானவை துளசிதாசரின் இராமசரிதமனஸ் எனும் நூலும், இராமாவதாரம் என்கிற கம்பராமாயணமுமே. (கி.பி.8-9 அல்லது 12ஆம் நூற்றாண்டு) கம்பரின் காவியம் வால்மீகியின் நூலை தழுவி-யிருப்பினும் அது மொழிபெயர்ப்பல்ல - தமிழ்மரபில் சொல்லப்பட்ட முழுக்காவியம்.

கம்பராமாயணத்தின் சிறப்புகள்

காதல், போர் என்னும் வீரம், இவற்றோடு அறம் எனும் மாண்பையும் உயரிய கற்பனையோடும், அழகியலுடனும் சொன்னது கம்பராமாயணத்தின் முக்கிய சிறப்புகளில் ஒன்று.

இரண்டாவது சிறப்பு, இராமன், சீதை போன்ற பாத்திரங்களில் மனிதத்தையும் தெய்வத்தன்மையையும் கதையாக்கம் சிதையா

வண்ணம் கச்சிதமாக சமன்படுத்தித் தந்திருப்பது. (Compare: 'By likening spritual to corporal forms' (573, Paradise Lost, John Milton)

மனிதத்தன்மைகளை அவர்களின் வாய்மொழியிலும், வாழ்வியலிலும், தெய்வத்தன்மைகளை பிறபாத்திரங்களின் வாயிலாகவும் கதையோட்டத்தின் மூலமாகவும் (கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப் பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ- (பால-522) சொல்லியிருக்கிறார் கம்பர்.

மூன்றாவது சிறப்பு, பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இயற்றப் பட்டிருப்பினும், இதிலிருக்கும் எளிமையும், மொழியின் அழகும். உவமை எழிலும் கம்பரின் கற்பனைகளும் முதற்சிறப்பான அழகியலை ஒரு உவமையெழிலோடு ஆராய்வோம்.

முனியும் தம்பியும் போய்ம் முறையால் தமக்கு
இனிய பள்ளிகள் எய்தியபின் இருட்
கனியும் போல்பவன் கங்குலும் திங்களும்
தனியும் தானும் அத் தையலும் ஆயினான் [பால:567]

இப்பாடலில், முதலிரு வரிகள் அந்நாளின் நிகழ்வுகளை தெரிவிக்கும் குறிப்புப் போலிருக்க, அதன் பின்வரும் வரிகளில் கம்பர் வண்ணமயமாக விரிகிறார்.

'இருட்கனியும் போல்பவன்' எனும்போது காட்சி உவமைகளாக இராமன் உருவத்தால் இருள் கவிந்த கனி போன்றவன் (கார்வண்ணன் என்பதனால்) என்று முதல் பொருளும்; இருட்டிலும் கனி போன்றவன் (பகலிலும் கனிபோல் இருப்பதால்) என்ற இரண்டாவது பொருளும் வருகின்றன.

இதுதவிர, மூன்றாவதாக, இராமன் பழக இனியனாய் இருப்பதால் குணத்தால் இருட்கனியும் போல- இரவுநேர குளிர்ச்சி படிந்த கனிபோல- குளிர்ச்சியான இனிய சுபாவம் கொண்டவன் என்றும் பொருளும் வரும். இந்த உவமைச்சிறப்பும், கற்பனைச்சிறப்பும் இக்காவியம் முழுக்கக் கொட்டிக் கிடக்கின்றன.

கடைசி இருவரிகளில் இரவும், நிலவும், தனிமையும், தானும், சீதையும் ஆகினான் என்று இரவையும் நிலவையும் தனிமையையும் கூட கதாபாத்திரங்கள் போலக் காட்டியிருப்பது இனிய நளினமாய் விளங்குகிறது. இந்த உத்தி ஆங்கில இலக்கியத்தில் 'Personifica-

tion' எனப்படும். (மனிதனற்ற பொருள்களில் மனிதத்தன்மைகளைக் காட்டுதல்)

பாத்திரப் படைப்புகளும் கம்பரின் கற்பனைகள்

இரண்டாவது சிறப்பான பாத்திரப்படைப்பை இங்கே காணலாம். சேக்ஸ்பியரைப் பற்றி, 'மனிதனை எது மனிதனாக்குகிறதோ அதை நுணுக்கமாக எழுதியவர்' என்றும், 'தன் கதையின் நாயகனை எண்ணி நெகிழச்செய்வதில் நிகரற்றவர்' என்றும் சொல்வார்கள். இந்தக் காவியத்தில் சீதை என்ற ஒரு பாத்திரத்தைக் கம்பர் கையாண்டிருக்கும் திறத்தைப் பார்த்தாலே சேக்ஸ்பியர் தனியர் அல்லர்; அவருக்கு நிகருண்டு என்பது புலனாகும்.

மிதிலையில், தலைவனை முதன்முதலாய்ப் பார்த்தபோது ஒரு நிலை; அவனோடு இயற்கையை இரசித்தபடியே கானகம் சென்றபோது இன்னொரு நிலை; இராவணன் அவளைக் கவர்ந்து செல்லும்போது மற்றொரு நிலை; அசோகவனத்தில் சோகமனத்தினளாய் இராம சிந்தையோடு அமர்ந்திருந்தபோது வேறொரு நிலை; இராமன் இராவணனை வென்ற பிறகு அவளின் கற்பைச் சந்தேகிக்கும்போது துணுக்குற்ற நிலை என்று சீதையின் உளவியல் நிலையின்படியே காவியம் பயணப்படுகிறது.

இதைப்போல பரதனைச் சேனையோடு கண்டபோது, 'ஆழ நெடுந் திரை ஆறு கடந்து இவர் போவாரோ..' [அயோத்தியா:999] எனக் கொதிக்கின்ற குகன், பரதனின் நிலைப்பாட்டை அறிந்ததும் '...ஆயிரம் இராமர் நின் கேழ் ஆவரோ தெரியின் அம்மா' [அயோத்தியா:1019] என்று முழுதுமாக மாறுகிற மனவியலையும் நுணுக்கமாக படைத்திருக்கிறார் கம்பர்.

கம்பரின் மொழியழகும் சூழலுக்கேற்ற பாடலமைப்பும்

மூன்றாவது சிறப்பான மொழியழகை இக்காவியம் எங்கும் காணலாம். உதாரணமாகப் பர்ணசாலையோடு பெயர்த்தெடுத்து இராவணன் சீதையைக் கடத்திப் பறக்கிறான். சீதையின் நிலையை,

'மலையே மரனே மயிலே குயிலே கலையே பிணையே களிறே பிடியே' [ஆரண்ய:877] என்று நயனுறக் காட்டுகிறார் கம்பர்.

இப்பாவில் இருக்கும் தனிச்சொற்களின் மிகுதி, நிலைமையின் அவசரத்தை- சீதையின் மனவேகத்தை- தேரின் வேகத்தில் மாறும் காட்சிகளைக் கண்முன்னே காட்டுவது போலிருக்கிறது.

இதைப்போல அனுமன் இலங்கையை எரித்தபின் பதற்றமுற்ற இராவணன் 'உண்ட நெருப்பைக் கண்டனர் பற்றிக் கொண்டு அணைக என்றான் அண்டரை வென்றான்' [சுந்தர:1229] என்றும் 'உற்று அகலாமுன் செற்ற குரங்கைப் பற்றுமின் என்றான் முற்ற முனிந்தான்' [சுந்தர:1230] என்றும் "அக்கினிதேவனையும், அனுமனையும் பிடித்து வாருங்கள்" என்று கட்டளையிடுகிறான். கம்பராமாயணத்திலேயே மிகக் குறைந்த சொற்கள் கொண்ட பாடல்கள் இவையாகத்தான் இருக்கும். கோபத்தில் ஆணைபிறப்பிக்கும் மன்னன் நீட்டி முழக்கான் என்ற நிதர்சனத்தைப் பாடல்அளவின் மூலமாகவே சொல்கிறார் கம்பர். (பிரபுக்கள்/மன்னர்கள் பேசும் வசனங்களில் கவிநடை, சாமான்யர்களின் வசனங்களில் பேச்சுநடை என்கிற சேக்ஸ்பியரின் உத்தியோடு ஒப்பிடவும்) இப்பாடல்களின் தொனியும் அரச கட்டளை போன்றே இருக்கும்.

வால்மீகி இராமாயணமும் கம்பராமாயணமும்

இலக்கிய நயத்தில் வால்மீகி இராமாயணமும் சிறந்ததே. கம்பர் எவ்விதம் தனித்தன்மையை முன்வைக்கிறார் என்பதைச் சுந்தர காண்டத்தின் இரு உதாரணங்களின் மூலமாகப் பார்ப்போம்.

அசோகவனத்தில், அரக்கியரின் இடையே சீதையிருக்க, மரக்கிளை ஒன்றின்மேல் அனுமன் இருக்க, அங்கே இராவணன் வந்து கோபமும் காதலுமாய்ப் பேசிப் போகிறான். பின் அரக்கியர் உறங்கிக் கிடக்க, சீதை பலவாறு சிந்தித்து உயிரை மாய்த்துக்கொள்வதே சரி எனக்கருதி ஒரு மரத்தை அடைகிறாள். இப்போது அனுமன் சீதையின் தற்கொலையைத் தடுத்தாக வேண்டும்.

வால்மீகி இங்கே, அனுமன் இனியகுரலில் மரக்கிளையில் இருந்தபடியே இராமகதையை முழுமையாகச் சொல்வதாக அமைத்திருக்கிறார். குழப்பமோ திகிலோ அடையச் செய்யாமல் அனுமன் தான்யார் என்பதை விளக்குவது இனிமை.

ஆயின், கம்பர் இங்கே வால்மீகியைப்போல் நீண்ட உரையை அனுமன் அளிப்பதாய் அமைக்கவில்லை. அனுமன் 'வேகவான்', 'காரியவான்' என்பதால் சீதையின்முன் விரைவாகவே தோன்றி, ஒரே வரியில் 'அண்டர்நாயகன் அருள்தூதன் யான்' [சுந்தர:509] எனச் சொல்வதாய் அமைக்கிறார். 'நெய் உறு விளக்கு அனாய்' [சுந்தர:512] என்ற எழிலான உவமையோடு சீதையை அனுமன் விளித்து 'ஆரியன் மெய்உற உணர்த்திய உறையும் வேறு உள' [சுந்தர:512] என்கிறான்.

வால்மீகி, சீதை அனுமனை மாயையாகச் சந்தேகிப்பதைச் சொல்கிறார். கம்பரோ 'நிருதன் அல்லன் நெறி நின்று பொறிகள் ஐந்தும் வென்றவன்... தூயன் நவை இலன் போலும்' [சுந்தர:513] என்றெல்லாம் அனுமனைப் பற்றிச் சீதை எண்ணுவதாகச் சொல்கிறார்.

கம்பர் அனுமனையும் தெய்வத்தன்மை கொண்டவனாக சூட்சமமாக நிறுவும்போது சீதையின் சந்தேகம் அனாவசியம் என்று விலக்கியிருக்கக்கூடும். அல்லது அனுமனின் தோற்றத்தினாலேயே 'தூயன்' என்றறிந்ததாலும், இராமநாமத்தை சொன்னதாலும் சீதைக்குச் சந்தேகம் ஏற்படாமல் இருந்திருக்கலாம். மேலும், 'இவன் அரக்கனேயானாலும் என் தலைவன் பெயரை உரைத்து என் தற்கொலையைத் தடுத்தானே, அதுவே பெரிய உதவி' என்றும் கருதுகிறாள். [சுந்தர:514]

கம்பரின் தனித்துவத்தை, கற்பனையைச் சொல்லும் மற்றொரு பகுதி, இராமனிடம் அனுமன் சீதையை கண்ட சேதி சொல்லும் சுவையான பகுதி. வால்மீகியின் காவியத்தில் அனுமன் சுக்கிரீவனையும், இராம இலக்குவர்களை வணங்கியபின் சீதையை, 'கண்டேன்' எனச் சொல்கிறான்.

ஆனால், கம்பரின் கதையிலோ அனுமன் 'கண்டனென் கற்பினுக்கு அணியைக் கண்களால்' [சுந்தர:1271] என்று வாய்மொழியால் சொல்லும் முன் சைகையாலேயே தெரிவிக்கிறான். இராமன் இருக்கும் இடத்திற்கு முந்திப் பறந்துவரும் அனுமன், இராமனை வணங்காது 'தென்திசையை' வணங்குகிறான். இதைக்கண்ட இராமனுக்கு ஒரேநொடியில் 'சீதை உயிருடன் தென்திசையில் இருக்கிறாள் என்றும் வணங்கத்தக்க கற்புநெறியோடு விளங்குகிறாள்' என்றும் புரிந்துவிடுகிறது.[சுந்தர:1269] கம்பர் அனுமனின் வேகத்தையும் விவேகத்தையும் ஒருங்கே கவினுறக் காட்டியிருக்கும் கட்டம் இது. இங்கே வால்மீகியும் வேகத்தைச் சொல்லிருப்பினும் கம்பரின் உத்தி இன்னும் எழிலாக அமைந்திருக்கிறது.

நிறைவுரை

உலகின் தலைசிறந்த காவியங்களில் ஒன்று கம்பராமாயணம் எனப் பலசான்றுகளால் மேலே நிறுவப்பட்டது. ஆங்கிலக் கவிஞர் டென்னிசனுக்கு முன்பாகவே, படகோட்டத்தை மடஅன்னத்துடன் கம்பர் உவமைப்படுத்தியதை [அயோத்தியா:668] பரிதிமாற் கலைஞர் எடுத்துக்காட்டியிருக்கிறார். In 'Morte D'Arthur', Lord Tennyson uses as

a simile for a rowing boat in motion which Kamban had used centuries before (Govindan V.S. Pg:5) தமிழ்கூறும் நல்லுலகில் கம்பர் மிகவும் கொண்டாடப்படும் கவிஞராக விளங்குகிறார்.

உலக இலக்கிய வரிசையில் இந்தியாவைப் பொறுத்தவரை வால்மீகி, காளிதாசர், துளசிதாசர், தாகூர் போன்றவர்கள் இடம்பெற்ற அளவில் கம்பர் இடம் பெற்றிருக்கிறாரா என்பது கேள்விக்குரியது.

இதற்குக் காரணம் தமிழர்களின் எண்ணிக்கை குறைவு என்பதும் இன்னும் கம்பர் சார்ந்த தரமான ஆங்கில மற்றும் இந்தி விமர்சன, மொழிமாற்ற நூல்களுக்கு இடமிருக்கின்றது என்பதுமே ஆகும். பல்கலைக்கழகங்களின் ஒப்பிலக்கிய ஆய்வுகளின் வாயிலாகவும் இதைச் செய்யலாம்.

அகில உலகின் தலைசிறந்த இலக்கியவரிசையில் இக்காவியத்தை உலகம் இருத்த ஆவன செய்தல் தமிழறிஞர்கள், நேசர்கள் கடன்.

வரலாற்றுப் பார்வையில் கம்பனின் கற்பனை வளம்

முனைவர் டி.எம்.சண்முகசுந்தரம்
வரலாற்றுத் துறை உதவிப்பேராசிரியர், திரு.வி.க அரசு கலைக்கல்லூரி,
திருவாரூர்.

ஏந்த ஒரு படைப்பிற்கும் கருத்து, வடிவம், கற்பனை, உணர்ச்சி என்ற நான்கும் அடிப்படைத்தளங்களாக அமைகின்றன. இவற்றுள் கற்பனை தனியிடத்தைப் பெறுகின்றது. கற்பனை என்பது கவிஞன் படைப்பில் மேற்கொள்ளப்படும் ஓர் இன்றியமையாத கூறும், அவன் கையாளும் யுக்தி முறைகளில் முக்கியமானதுமாகும். கற்பனை என்பது புலன்கள் நேரே ஒரு பொருளை அனுபவியாத காலத்திலும் அந்தப் பெருளை நினைவிற்குக் கொண்டு வந்து அப்பொருளினிடத்து மீண்டும் அனுபவத்தை ஏற்றவல்ல ஒரு வகை ஆற்றலாகும். தனிமனிதனின் கற்பனைமதி சமூகச்சந்தையில் விற்பனையாவதற்குப் பெரிதும் துணை புரிகிறது. அது கவிதைகளைக் கவனித்துக் கற்போரின் மனத்தை விரிந்த பார்வையில் செலுத்தவல்லது. கவிதைகளின் பிற பண்புகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைவதும் ஆதாரமாக இருப்பதும் கற்பனைவளமே ஆகும். இத்தகைய கற்பனையாற்றலை இன்னது எனச் சொற்களால் இனம் காட்டுவதும் எல்லை சுட்டிக்காட்டுவதும் இயலாது. வரலாற்றுப் பார்வையில் கம்பனின் கற்பனைவளம் என்னும் இக்கட்டுரையில் விண்ணைப் பற்றியும், மண்ணைப் பற்றியும் கம்பனால் கற்பனை செய்யப்பட்டுள்ளதை ஆய்ந்தறிந்து காணலாம்.

விண்ணைப் பற்றிய கற்பனை

விண்ணைப் பற்றிய கற்பனையில் ஞாயிறும், திங்களும் சிறப்பிடம் பெறுகின்றன. மேகம், இடி மின்னல், மழை, விண்மீன்கள் ஆகியவையும் கற்பனைக்குட்படுகின்றன. கவிஞனின் படைப்பில் கற்பனை என்பது பொதுமை. அக்கற்பனையானது இயற்கையையும், செயற்கையையும் மையப்படுத்தி எடுத்து இயம்புவது பாத்திரப் படைப்புக்கு வலுச்சேர்ப்பதாக அமையும். அந்தவகையில் கம்பனின் கற்பனை வளம் மேலோங்கி நிற்கிறது.

கதிரவனின் தோற்றமும் மறைவும்

கம்பன் கதிரவனின் தோற்றத்தையும், மறைவையும் இயற்கைப் பொருட்களுடன் இணைத்துக் காட்டுகின்றான். சூரியகுலத்

தோன்றலாம். இராமனைக் காப்பியத்தலைவனாகக் கொண்டிருப்பதால் கதிரவன் பற்றிய கற்பனைகள் மிகுந்துள்ளன. முதல் நாள் மறைந்த கதிரவன் அடுத்தநாள் தோன்றும் செயலை வருணிக்கும் கம்பன், கதிரவனின் நிலையாமையையும் எடுத்துக்கூறுகிறான். இதனை,

"துறக்கமே முதலவாய தூயன யாவையேனும்
மறக்குமா நினையல்அம்மா வரம்புஇல தோற்கும் மாக்கள்
இறக்குமாறு இது என்பான் போல் முன்னைநாள் இறந்தான், பின்நாள்
பிறக்குமாறு இது என்பான்போல் பிறந்தனன் பிறவா வெய்யோன்""
(1976)

என்ற பாடலால் அறியலாம். செல்வம் பெற்றவர்கள் செருக்குடன் செயல்பட, செல்வம் அழிவதும், புகழுடையார்முன் புகழ் இல்லாதவர்கள் நாணி மறைதலும், கதிரவன் குறித்த கற்பனையால் விளக்கப்படுகின்றன.

திங்களின் தோற்றமும் மறைவும்

கம்பனது காப்பியத் தலைவனின் திருமண திருவிழாவினைக் காணச்செல்லும் கோசலநாட்டு மக்களின் நீர் விளையாட்டைக் கூறுமிடத்தில் திங்களது அழகிய தோற்றம் வருணிக்கப்படுகிறது. திங்களின் ஒளி வெண்ணிறக்கல்லாகவும், ஒரு வடிவம் பெற்ற இசையாகவும், மக்கள் உள்ளத்தில் நிறைந்து வழியும் காமமாகவும் கற்பனை செய்யப்படுவதை,

"வெண்ணிற நறவு பாய்வெள்ளமெனவும்
பண்ணிறச் செறிந்திடை பரந்த தென்னவும்
உண்ணிறை காமிமிக் கொழுகிற்றென்னவும்
தண்ணிறை நெடுநிலாத் தழைத்தது எங்குமே"

என்ற பாடலால் அறியலாம். அரக்கரை அழிக்கச் செல்லும் இராம இலக்குவர்க்குத் துணைசெய்ய, வானம் கைவிளக்கு ஏந்தியதாகவும் (1887), சீதையின் முகம் தன்னை வென்றமையால் சீதையைத் தேடிப்பிடிக்க ஒளியாகிய வலையை எல்லாஇடத்திலும் திங்கள் விரித்ததாகவும் (6521) கற்பனை செய்யப்படுகிறது.

வானம் வசப்படும்

கற்பனைக்கு வானமே எல்லை என்பதற்கேற்ப கரிய யானைகள் வானில் வரிசையாக நிற்பதுபோல் மேகங்கள் விளங்குவதாகவும் (4153) அரிந்து வைக்கப்பட்ட கதிரவனின் கதிர்களாகவும், இடியின் நாக்காக மின்னல் விளங்குவதாகவும் (4157) கற்களிடையே விழும் மழைத்துளிகள் இந்திர வில்லில் இருந்து பாயும் அம்புகளாகவும்

மேகத்தில் இருந்து தோன்றிய இடி, மலையில் இருந்து சிதறும் மணியாகவும் (4163) கம்பனால் ஆக்கம் செய்யப்படுகின்றது.

இமயமலை பிற மலைகளைப் போலன்றிப் பொன்மலையாக விளங்குவதால் அதனைக் காக்கும்பொருட்டு இடப்பட்ட வெள்ளிக் கம்பிகளாக மழைத்தாரைகள் விளங்குகின்றன என்று கூறும் கம்பனின் கற்பனை வளத்தைப் "புள்ளி மால்வரை பொன்எனல் நோக்கி வான் வெள்ளி வீழ்இடை வீழ்த்தெனத் தாரைகள்" என்ற பாடலால் அறியலாம். இந்திரன் முதலான தேவர்கள் அணியும் அணிகலன்களின் ஒளியைப் போலவும், மலைமீது எரியும் நெருப்பைப் போலவும் (4154) மின்னல் கற்பனை செய்யப்படுகின்றது.

நீர்நிலைகள்

கம்பனின் கதைத் தொடக்கமே ஆற்றுப்படலத்தில் தொடங்குகின்றது. ஆறுகளையும் அதன் நீரோட்டங்களையும் ஆழ்ந்து பார்க்கின்றபொழுது ஒரு ஆனந்தமயம் ஏற்படுவது அனைவருக்கும் பொதுவானது. அதே ஆற்றை, கம்பனைப்போன்ற கற்பனைவாதிகள் போற்றுகின்றபோது ஆற்றுப்புனைவுகள் அதிகம் இடம்பெறத்தான் செய்யும். கம்பர் சரயு, கோதாவரி, பெண்ணை ஆகிய ஆறுகளைச் சிறந்த கற்பனைப் படைப்பாகக் காட்டுகின்றார். சரயுநதியின் தன்மையும் போக்கையும் கூறும் கம்பர், "சரயு என்பது தாய்முலை அன்னது இவ்உரவு நீர் நிலத்து ஓங்கும் உயிர்க்கு எலாம்" என்கிறார். உலக உயிர்களைக் காக்கும் தாயாகச் சரயு நதி வருணிக்கப்படுகிறது. சரயு ஆற்றுவெள்ளம் சிற்றாறு வாய்க்கால், ஏரி, குளம் எனப் பலவாகப் பிரிந்த செயல் ஒரே பரம்பொருள் பல்வேறு உருவமும் பெயரும் பெற்று விளங்கும் தத்துவமாகவும் (30) கருத்து விளக்கக் கற்பனையாகவும் அமைகின்றது.

பொய்கை

கார்கால வருணனையை, கம்பன் விரிவாகப் பாடியதுபோலப் பொய்கையையும் ஒரு பாடுபொருளாகக்கொண்டு பாடுகின்றார். பம்பைப்படலத்தில் பொய்கை பற்றிய கற்பனைகள் மிகுதியாக இடம்பெறுகின்றன. எதையும் தாமாகஅறிந்து உணருந்திறன் இல்லாதவர்களின் உள்ளம் பொய்கையில் படிந்திருக்கும் பல்வேறு மணிகளின் ஒளியால் பல நிறம் காட்டும் புனலுடன் ஒப்பிடப்படுகிறது. பொய்கையில் பரவியுள்ள பாசியை அறிவை மயக்கும் மாயையுடன் தொடர்புபடுத்தும் கம்பர்.

"காசடை விளங்கிய காட்சித் தாயினும்
மாசடை பேதைமை இடை மயக்கலால்
ஆசடை நல்லுணர் வனைய தாமெனப்
பாசடை வயன்தொறும் பரந்தமான்பது"

என்ற பாடல் வரிகளால் விவரிக்கின்றார். பொய்கையில் வாழும் மீன்களின் செயல்களைக் கம்பர் கூறும் இடங்கள் நினைத்து மகிழ்தற்குரியன. சீதையைப் பிரிந்து வருந்தும் இராமன், தம்மைக் கண்டால் சீதையின் கண்களை நினைவுபடுத்திக் கொண்டு வருந்துவான் எனக் கருதி மீன்கள் நீருக்குள் ஒளிந்து கொண்டன (3717) என்பதும் இராமனுக்காகச் சீதையைத் தேடிக் கொடுக்க முடியவில்லை என்றாலும், நம்மால் ஆன உதவிகளைச் செய்வோம் எனக் கருதி, பொய்கையில் இருக்கும் அன்னங்கள் சீதையின் நடையையும் குவளை மலர் போன்ற கண்களையும், செவ்வல்லி மலர் போன்ற இதழ்களையும், இராமனுக்குக் காட்டி மகிழ்வித்தன என்பதும் (3725) கம்பரின் உயரிய கற்பனை! இது கம்பனுக்கே உரிய கற்பனை வளத்தின் உலகறிந்த நிலை.

வெள்ளப்பெருக்கு

பார் போற்றும் ஆற்றுப்படலத்தில் வெள்ளப்பெருக்கைச் சுட்டும் கம்பர், அப்பெருக்கை விலைமகளிர் செயலோடு தொடர்புபடுத்துகின்றார். ஆற்றுவெள்ளம் பல்வேறு பொருள்களை வாரிச்செல்வதுபோல, விலைமகளும் நாடி வருபவனிடம் உள்ள பொருள்களை முற்றிலும் கவர்ந்தபின் அவனை வெறுப்பாள் என விளக்கமாகத் தம் கற்பனையால் அறிவிக்கின்றார். வெள்ளம் அறவழியில் நெறிதவறாது நாடாளும் மன்னவனின் புகழ்போல் மேன்மேலும் பெருகியதாகவும் (161) கம்பர் வருணிக்கின்றார். கம்பர் கற்பனைத்திறம் பெற்றிருக்காவிடினும் அவர் எதையும், உயர்த்தியும் தாழ்த்தியும் உரைப்பதில் எப்போதும் இரு வேறு கருத்துக்கள் கொண்டிருந்ததில்லை என்பதற்கு இது ஓர் சிறந்த வரலாற்று எடுத்துக்காட்டாகும்.

நிலவருணணை

மண்ணாசை இல்லாத மனிதனை காண்பதரிது. மண் மீதுகொண்ட பேராசையின் காரணமாகக் கம்பரும் கொஞ்சம் கூடுதலாகவே மண்ணைப்பற்றி வருணிக்கின்றார். தாடகை வதைப்படலத்தில் பாலைநிலத்தின் தன்மையைக் கூறும்போது, "மண் கிழித்திட எழும் சுடர்கள் மண்மகள் உடல் புண் கிழித்திட எழும் குருதியே போலாம்"" என்கிறார். வெம்மையால் வெடித்துள்ள நிலப்பிளவை

நிலமகளிர் புண்ணாகவும், அப்பிளவின் வழியே வெளியாகும் மணிகளின் ஒளியைப் புண்ணிலிருந்து எழும் குருதியாகவும் புலன் வியக்கப் புனைகிறார். கானகம் செல்லும் இராமன் தன்னை ஈன்ற அன்னை கோசலையிடம் விடைபெறச் சென்றதை அறிந்து நிலமகள் வருந்தியதாகவும்(1605) முடிசூடாது கானகம் செல்வதை, நிலமகள் செய்த தீவினையாகக் கூறுவதும்(1706) கைகேயியின் சொற்களால் நிலமகள் நடுங்கியதாகவும்(1758) அமையும் பகுதிகள் மண்ணைப் பற்றிய மகத்தான கற்பனைகளாக அமைந்துள்ளன.

நகரமைப்பு

நகரங்களையும், நரகங்களையும் நயத்தோடு படைத்துக் காட்டும் கம்பர், கற்பனையால் தான்காண விரும்பிய நகரங்களை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார். அயோத்தியும், இலங்கையும் கற்பனையில் மலர்ந்த நகரங்களாக- அதேசமயத்தில், உண்மையில் அந்த நகர்களைக் காணாத மக்களும் நேரில் பார்க்கின்ற வகையில் விளக்குகின்றார். அயோத்தி நகர வருணனை காப்பியத் தொடக்கத்தில் அமைந்து இருப்பதாலும் கதைத்தலைவனின் பிறப்பிடமாக இருப்பதால் தன்னிகரற்றதாகப் படைக்கப்படுகிறது.

"நிலமகள் முகமோ, திலகமோ, கண்ணோ, நிறைநெடு மங்கல நாணோ, மாயோன் மார்பின் நன்மணிகள் வைத்த பொற்பெட்டியோ, வானோர் உலகின் மேல் உலகோ" என்றெல்லாம் அயோத்திநகரம் கம்பரின் கற்பனைத்திறத்தால் உயர்வாகப் பேசப்படுகின்றது. செல்வமும், கல்வியும் நிறைந்த செல்வநகரமாக அயோத்திநகர் அமைத்துக் காட்டப்படுகிறது. களவை உள்ளத்தாலும் நினையாதவர்கள் அயோத்திநகர மக்கள் என்றும், கல்லாதவரே இல்லை எனவும், எல்லோரும் சிறந்த அறிவைப் பெற்றவர் எனவும், எல்லோரும் எல்லாப் பெருஞ்செல்வமும் பெற்று விளங்குவதால் ஏற்றத்தாழ்வு இல்லை எனவும் (84) (166) கற்பனைசெய்து காவியப்படைப்பின் மூத்த மகன் எனத் தன்னைப் போற்றும்படி கம்பர் நிலைபெறுகின்றார்.

கற்பனையும் கதையும் வேகம் பிடித்த பின்னர் அதற்குக் கடிவாளம் என்ற ஒன்றை நினைத்துப்பார்க்க முடியாது. அந்தவகையில் ஊர்தேடு படலத்தில் இலங்கையை மாட்சிமை மிக்க நாடாகக் குறிப்பிடுகின்றார். இலங்கைநகரில் உள்ள மாடங்கள் பொன்னால் ஆனவை என்றும், மேகமண்டலத்தைக் கடந்து நிலவைத் தொடுகின்றன என்றும் (4835) குறிப்பிடுவன கற்பனையின் உச்சமாகும்.

மதிலும் கொடியும்

பொதுவாக, அயோத்தியும், இலங்கையும் இயற்கையிலேயே அழகான நகரங்கள். அந்த அழகான நகரங்கள் கம்பனின் கற்பனையால் அழகியல் நகரங்களாகப் பொலிவு பெற்றுள்ளன. மதில்கள் பற்றிய கம்பருடைய கற்பனைகள் நுண்பொருளுடன் தெய்வத்துடனும், தேவருலகத்துடனும் இயைவுபடுத்தப்படுகின்றன. நகரப்படலத்தில் கம்பர் மதிலின் மாட்சியை (100- 105) விரிவாகக் காட்டுகிறார். அழகு மிகுந்த பெண்களைப் பெற்று விளங்கும் அயோத்தி நகரைப் போல் தேவர்களின் உலகும் அழகுடன் னிழிர்கிறதா என்பதைக் காணும் ஆவலால் மதில் உயர்ந்து சென்றதாக, "அயோத்தி மாநகரின் அழகுடைத்து அன்று என அறிவான் அஞ்சிவான் ஓங்கி இமையவர் உலகம் காணிய எழுந்தது ஒத்துளதே" எனக் குறிப்பிடுவதும், மதில் ஏழுலகிற்கும் மேல் உயர்ந்து விளங்குவதாக (4896) குறிப்பிடுவதும் மிகைக் கற்பனைகளாக அமைந்துள்ளன.

கொடிகள் வானத்தைப் பாற்கடலாகத் தோன்றச் செய்ததாகவும் மேகத்தைத் தடவி நனைந்து, பின் அகிற்புகையால் உலர்ந்ததாகவும் (482) குறிப்பிடுகின்றார். கடிநகரின் உருவம் கற்பனை செய்யப்பட்டுக் காப்பியத்துடன் இயைபுபடுத்தப்படுகின்றது.

"கொடிகளென்னும் கைகளை நீட்டி அந்தக் கடிநகர்
கமலச் செங்கண் ஐயனை ஒல்லை வாவென்றழைப்பது போன்றதன்றே"

என்று கொடி மிதிலை நகரின் கையாகவும், கொடி அசைவது இராமனை இருகரம் நீட்டி அழைப்பதாகவும் கற்பனையாக்கப்படுகின்றது. சீதையை மணக்க இராமன் மிதிலைநகருக்கு வருவதறிந்து அரம்பையர் ஒன்றாகக் கூடி மகிழ்ச்சியால் நாட்டியமாடுவதைக் கொடிகள் பறப்பதற்கு உவமையாக்கி(482) காப்பியக்கதையுடன் கம்பர் தொடர்புபடுத்துகிறார். இப்படி இயற்கையையும், இயற்கை தோன்றலையும் நேரடியாகக் காப்பியக் கதைக்குள் கொண்டுவரும் கற்பனைத்திறன் கம்பருக்கு மட்டுமே சாத்தியமாகும்.

கம்பரின் காப்பியத்திற்கு அழகும், பொருளும் அணி சேர்ப்பது இயல்பாய் அமைந்த ஒன்று. கம்பரையும், கம்பரது படைப்பையும் நீண்ட நெடுங்காலமாக ஆய்வுசெய்யும் அறிஞர் பெருமக்கள் அனைவரும் அங்கீகரிப்பதும் அதைத்தான்; எனினும், இதுகாறும் யாம் ஆய்ந்தறிகின்றபோது வெற்றுக் கற்பனைகளை நம்பி, கம்பர்

காப்பியம் புனையப் புகவில்லை என்பது புலனாகின்றது. சூரியனின் தோற்றத்தையும், மறைவையும் கொண்டு உயிர்களின் பிறப்பு, இறப்பு நிலையை விளக்கிஇருப்பது அவரின் கற்பனை ஆளுமை புலப்படுகின்றது. மண் பற்றிய கற்பனையிலிருந்து கம்பர் இயற்கைமீது ஈடுபாடு கொண்டவர் என அறிய முடிகின்றது. கலைமகள் நடனமிடும் கம்பன் நாவில் வலம் வரும் கற்பனைகள் படிக்குந்தோறும் இன்பம் பயப்பன.

கம்பர் தொலைநோக்குக்கொண்ட படைப்பாளிதான்; ஐயமில்லை. ஆனால் அவரோ இயற்கை ரசிகர். இயற்கையை ஒரு கலைவடிவமாகக்கொண்டு அதை வாசிப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல் சுவாசிக்கவும் செய்திருக்கின்றாரேயானால் உண்மையில் கம்பரை ஒரு கலா ரசிகராகத்தான் வரலாற்றுப்பார்வையில் பார்க்கமுடிகிறது. ஏனெனில் ரசிக்கத் தெரிந்தவனால்தான் ரசிக்க வைக்க முடியும் என்பது காலங்காலமாகக் காப்பியங்கள் புலப்படுத்தும் பொதுநியதி. கற்பனை ஊற்றெடுத்துப் பீறிட்டுக் கிளம்பி அயோத்தி தொடங்கி இலங்கை ஈறாக ஏராளமான பாத்திரப்படைப்புகளை மிகச் சாதாரணமாக உருவாக்கி இருக்க முடியாது. கம்பர் என்ற அந்த மகா புருஷருக்குள் புதைந்திருந்த ஆளுமைத் திறனே அவரை அடுத்த தலைமுறைக்கு அடையாளம் காட்டுகிறது.

கம்பர் வெறும் கதைசொல்லி மட்டுமல்லர். கதையின் கருவை கதையோட்டமெங்கும் இழையோடச் செய்யும் காப்பிய வித்தகர். எளிய நடைபோக்கில் மிக அழுத்தமான பொருண்மையை புரிதலுக்கு எந்த இடையூறும் இல்லாமல் நேர்த்திப்பட உரைப்பதில் கம்பருக்கு நிகர் கம்பரே! கம்பர் கதைசொல்லும் விதத்தில் கையாண்டது வேண்டுமானால் கற்பனையாக இருக்கலாம். ஆனால், கதையின் சாரம், மையப்பொருள் சென்று அடையவேண்டிய இலக்கைப் பொறுத்தவரை கம்பர் கண்டு கொண்டது நிதர்சனமான உண்மையே ஆகும். உண்மையை உண்மைத்தன்மையோடு கதையெங்கும் உலாவ விட்ட தைரியம் வரலாற்றில் அறிந்த வகையில் கம்பரைத் தவிர வேறு யாருக்கும் இருப்பதாக தெரியவில்லை.

படைப்பாற்றல் திறனும், கற்பனைவளமும் இருவேறு துருவங்களாக இருந்தாலும் கம்பரைப் பொறுத்தவரை வேறுபட்ட இரண்டு துருவங்கள் ஒரு சேர அமைந்திருந்தது ஒரு பெருவியப்பு. கம்பரின் படைப்பு, காலத்தால் அழியாமல் இருப்பதற்குக் கற்பனை மட்டுமே காரணம்

அல்ல. கம்பனின் ஒரு எழுத்து, ஒரு சொல், ஒரு வாக்கியம் யாவும் அசைக்க முடியாத தூண். அத்தகைய அடித்தளத்தின் மீது போடப்பட்டதால்தான் அந்த காப்பிய மாளிகையிலிருந்து கற்பூரம் கமகமக்கின்றது.

கம்பனில் கனவு - (ஃபிராய்டை முன்வைத்து)

முனைவர் யாழ்.சு.சந்திரா
தமிழ்த்துறை இணைப்பேராசிரியர், அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி, மதுரை.

காசில் கொற்றத்து இராமன் கதையைக் கன்னித் தமிழில் தந்தவர் கம்பர். அவரது காப்பியத்தில் இடம்பெறும் கனவை ஃப்ராய்டை முன்வைத்துக் காண்பது இவ்வரைவின் செல்நெறி ஆகும்.

கம்பனில் 'கனவு'

பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை உடைய கம்பராமாயணத்தில் 'கனவு' என்ற நிகழ்வும் கம்பரால் கையாளப்படுகிறது. இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதை அசோகவனத்தில் அரக்கியர் சூழ சிறை வைக்கப்படுகிறாள். அவளுக்கு விபீடணன் மகளாகிய திரிசடை ஆறுதல் கூறும்போது தான் கண்ட கனவை எடுத்துரைக்கிறாள்.

கிட்டத்தட்ட பதினைந்துபாடல்களில் விரியும் இக்கனவை ஃபிராய்டின் கொள்கைவழி ஆய்வது இராமகாதைக்கு வெளிச்சத்தை நல்கும் என்பது ஆய்வுரையின் கருதுகோள் ஆகும்.

ஃபிராய்டின் கனவுக்கோட்பாடு

ஃபிராய்டு இலக்கியத்திறனாய்வாளரோ, இலக்கியவாதியோ இல்லை. அவர் மனநோய் மருத்துவர்! நோயாளிகளை அறிய ஃபிராய்டு தடையில் இயைபுமுறை, தடையியைபு முறை, கனவு விளக்கமுறை, மாற்றீடு விளக்கமுறை ஆகிய நான்கு முறைகளைப் பயன்படுத்துகிறார். இவற்றுள் கனவுவிளக்கமுறை நாளடைவில் ஃபிராய்டுக்கு இலக்கியத்தின் உளவியலைப் பார்க்க வழிகோலியது (நலங்கிள்ளி அரங்க, இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், ப.10) நனவு மனம் ஓயும்போது நனவிலிமனம் தன்னை வெளிப்படுத்திக் கொள்வதைக் கனவு என்கிறது ஃபிராய்டியம். நனவிலி மனவேட்கைகள் கனவில் வெளிப்படும்வேளையில் நனவு மனத்தின் ஆதிக்கமும் இருப்பதால் பெரும்பாலான கனவுகள் உறைவும், இடப்பெயர்வும், குறியீடுகளாகவும் வெளிப்படுகின்றன என்பர்.

கனவு என்பது மனித மனத்தின் நனவிலிமன வேட்கைகள் என்பர். இக்கனவுகளை 1.வெளிப்படைக் கனவு, 2. குறியீட்டுக் கனவு என இருவகைப்படுத்துவார் ஃபிராய்டு. (மேலது. ப. 105)

கனவு இலக்கிய உத்தியாதல்

கனவைப் பகுத்தாய்ந்து அதன் உண்மைப்பொருள் நனவிலி மனத்தின் வேட்கை எனச் சுட்டிய ஃபிராய்டு- படைப்பாக்கத்தையும் கனவோடு இணைத்துப் பேசுவார்.

கனவு காணாத மனிதர்களே இல்லை. அவர்கள் படைக்கும் இலக்கியங்களிலும் கனவு இடம்பெறுகின்றது. இக்கனவு இலக்கியப் படைப்பாளியின் நனவிலி மனவேட்கையாவும் அமைகின்றது. சிலம்பின் உத்திகளை ஆராய்ந்த திறனாய்வாளர், அக்கனவு காப்பிய உத்தியாவதனை விளக்குவார். (சுப்பிரமணியன். ச. வே, இளங்கோவின் இலக்கிய உத்திகள், பக் 43, 44)

திரிசடை கனவு

அசோகவனத்தில் அரக்கியர் சூழ, அவலத்தின்பிடியில் தவித்துக் கொண்டிருக்கும் சீதை, தனது உடலில் இடப்பக்கம் துடித்தமையைத் திரிசடையிடம் எடுத்துக்கூறுகிறாள். அதற்குப் பதிலிறுக்கும் திரிசடை, சீதையிடம்,

துயில் இலை ஆதலின், கனவு தோன்றல:
அயில் விழி அனைய கண் அமைந்து நோக்கினேன்,
பயில்வன பழுதுஇல பழுதின் நாடு என
வெயிலினும் மெய்யன விளம்பக் கேட்டியால் (கம்ப. 5107)

என உரைக்கின்றாள். சீதை உறங்கவில்லை . அதனால் அவளுக்குக் கனவு தோன்றவில்லை. திரிசடை கண் உறங்கியமையால் அவளுக்குக் கனவு வருகிறது. அதாவது, ஃபிராய்டு கனவுகளை, நனவிலி மற்றும் நனவு மனத்தின் முரண்பாடான செயல்பாடுகளால் உருவாகும் தூண்டுதல்கள் என்டார். அவ்வகையில் உறங்கும்போது நனவிலி மனதின் உணர்வுத்தூண்டலாகத் திரிசடைக்குக் கனவு தோன்றுகிறது எனலாம்.

கனவு நிலை உரைத்தலும் நனவு நிலையும்

உறங்கும்போது தான்கண்ட கனவைத் திரிசடை நனவுநிலையில் சீதைக்கு எடுத்துரைக்கின்றாள். அதாவது, கனவு என்ற உறக்க நிலையில் உள்ள ஆழ்மன உணர்வுகளும் நனவு என்ற விழிப்பு நிலையில் உள்ள மனவுணர்களும் கம்பரால் பேசப்படுகின்றன எனலாம்.

'தனது பத்துத் தலைகளிலும் எண்ணெய் பூசிக்கொண்டு கழுதைகள் பூட்டிய தேரில் ஏறியவனாய்- செவ்வாடை பூண்டு தென்புலம் அடைகின்றான் இராவணன். அவனது புதல்வர்களும்

சுற்றத்தார்களும் ஏனைய அரக்கர்களும் தென்புலம் அடைந்தனர்' (கம்ப. 5108-5109) என உரைக்கும் திரிசடை, மேலும் சீதை மனம் மகிழுமாறு தான் கனவில் கண்ட நிமித்தங்களை விவரிக்கின்றாள்.

கனவு எடுத்துரைத்தல் செயற்பாடு

கனவின் உளவியல் கோட்பாடுகளை எடுத்து உரைக்கும் ஃபிராய்டு அவற்றின் பகுதிகளுள் ஒன்றாகக் கனவு எடுத்துரைத்தல் செயல்பாட்டினையும் குறிப்பிடுவார். இவ்வாறு கனவு எடுத்துரைத்தல் என்பதனை இலக்கியப்படைப்பாளிகள் ஓர் உத்தியாகக் கையாளுகின்றனர்.

'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' என்ற காப்பியத்தின் நோக்கத்தினை இக்கனவின்மூலம் கம்பர் சுட்ட முற்படுகின்றார். அந்நோக்கத்திற்கு ஏற்ப, கனவு இராவணன் அழிவினை விவரிக்கும் முறையில் தொடங்குகிறது: இராவணன் புதல்வர்கள், சுற்றத்தார்கள், சூழல் முதலியனவற்றிற்கு ஏற்படும் அழிவில் தொடர்கிறது, திரிசடையின் கனவு. இவ்வாறான அழிவு யாரால் ஏற்பட்டது? (இராம இலக்குவரால்) என்ற விவரணத்தோடு கனவு முடிகிறது. இவ்வாறான எடுத்துரைத்தல் செயற்பாட்டில் கம்பனது காப்பியக் கனவின் அமைப்பும், ஃபிராய்டு சுட்டும் கனவுப்பகுப்பின் விவரிப்பான எடுத்துரைத்தலும் தொடர்புகொள்ள வாய்ப்பாகிறது எனலாம்.

கனவின் தொடக்கமும் உறைவு நிலையும்

திரிசடைகனவின் நோக்கம் இராவணன் அழிவைச் சுட்டுவதாகும். அதனைக் கனவு விவரிப்பின் தொடக்கத்தில் அமைத்து, திரிசடை சுட்டுகிறாள்.

"எண்ணெய் பொன்முடிதொறும் இழுகி, ஈறுஇலாத்
திண்நெடுங் கழுதைபேய் பூண்ட தேரின்மேல்
அண்ணல் அவ் இராவணன், அரத்த ஆடையன்,
நண்ணினன், தென்புலம்-நவை இல்கற்பினாய்" (கம்ப. 5108)

எனக் கனவின் காட்சிகளை விவரிப்பாள். இக்காட்சி, ஃபிராய்டு விவரிக்கும் 'உறைவு' எனலாம். 'இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட படிமங்கள் அல்லது கூறுகள் பின்னிப்பிணைந்து உருப் பெற்ற ஒரே படிமமாக வெளிப்படுவதனை உறைவு' என்பார் ஃபிராய்டு. (நலங்கிள்ளி- அரங்க. மு. நூ. பக்-104 - 105) அவ்வகையில்,

1. முடிதொறும் எண்ணெய் தேய்த்தல்
2. கழுதை, பேய் பூட்டிய தேரில் செல்லல்

3. செவ்வாடை அணிந்திருந்தல்
4. தென்புலம் நண்ணுதல்

ஆகிய நான்குகூறுகளும் இணைந்த அமைவு கனவின் உறை நிலையாக அமைகின்றது. 'தென்புலத்தார்' எனக் குறளும் இறப்பினை -இறந்தவர் இறப்பின் திசையைச் சுட்டல் எண்ணத்தக்கது ஆகும்.

கனவின் நிமித்தங்களும் இடப்பெயர்ச்சியும்

இராவணன் நிலையைக் கனவில் கண்டபடி உரைக்கும் திரிசடை, தொடர்ந்து தான்கண்ட தீநிமித்தங்களை அடுக்கிக்கூறத் தொடங்குகிறாள். கிட்டத்தட்ட இலங்கைநகரின் ஒட்டுமொத்த அழிவையும் தீநிமித்தங்களாகத் திரிசடை சீதையிடம் உரைக்கின்றாள்.

'இராவணன் வளர்க்கின்ற வேள்விக்கனல் அறிந்து செங்கரையான்கள் தோன்றுகின்றன. தீபங்களோடு ஒளிவீசும் அரண்மனை இடியால் தாக்கப்பட்டு இடிந்து வீழ்கிறது' எனத் தொடங்கும் தீநிமித்தங்களை, கிட்டத்தட்ட பாடல்களில் திரிசடை விவரிக்கின்றாள். இங்கு 'ஒருணர்ச்சி பிறிதோர் உணர்ச்சியாக மாறுவது இடப்பெயர்வு' எனத் திறனாய்வாளர் (செல்வராசு, சிலம்பு, மு. நூ. ப.102) குறிப்பிடுவார். இங்கு சீதையின் நல்வாழ்வு எனும் இச்சையுணர்வு, திரிசடையின் தீநிமித்தங்கள் இணைந்த கனவாகின்றது.

கனவின் இறுதிப்பகுதியும் குறியீட்டாக்கமும்

திரிசடை கனவின் இறுதிப்பகுதியில் படிமங்களைக் கொண்டு முடிவினைச் சுட்டுகிறாள். வனத்தில் உள்ள மதகரியை இருசிங்கங்கள் உழுவைகளின் துணைகொண்டு வெற்றிகொள்ள, மயில் ஒன்றுபுரம் புகுந்தது.(கம்பர். 5118-5119) என்பாள். அதாவது வனம்- இலங்கை, மதகரி- இராவணன், கோள் அரி இரண்டு- இராம, இலக்கவர், :உழுவை அக்குழு- வானரர்கள்: மயில்-சீதை என்ற குறியீடுகள், இணைந்து படிமமாகின்றன. இவ்விதமான குறியீட்டாக்கச் செயற்பாடு என்பது மனதின் தற்காப்பு நடவடிக்கைகளில் ஒன்று என்பார் ஃப்ராய்டு(மேலது.ப.106) அவ்விதத்தில், சீதையின் மன இறுக்கத்தையும் துயரத்தையும் தடுத்து நிறுத்தும்விதமாக, திரிசடை கனவில் இக்குறியீட்டாக்கத்தைப் படைப்பாளி கையாளுகின்றார். இதனைத் தொடர்ந்து , 'சேயொழி விளக்கம் ஒன்று ஏந்தி, விசிடணன் கோயில் நண்ணுதல் மேயினாள்' (கம்ப. 5120) என்றும் திரிசடை உரைக்கின்றாள். இவ்விதமாகக் குறியீட்டாக்கவழி சீதையின் மீட்பு உறுதி செய்யப்படுகிறது.

குறியீட்டுக்கனவு

ஃபிராய்டு கனவினை இரண்டு வகைகளாக்கிச் சுட்டுவார். அவை 1. வெளிப்படைக்கனவு, 2. குறியீட்டுக்கனவு. அவற்றுள் குறியீட்டுக்கனவு இருவகைப் பொருள்தளங்களை உடையது. அவை வெளிப்படைப்பொருள்(உட்பொருள் என்பார். (நலங்கிள்ளி. அரங்க.ப. 105)

அவ்வகையில் திரிசடைகண்ட கனவின் வெளிப்படைப்பொருள் இராவணன் அழிவு. அவ்வழிவு, திரிசடை அடுக்கிக் கூறும் நிமித்தங்களில் உட்பொருளாகிறது. அதாவது மறைக்கப்பட்ட வேட்கையாகும்! திரிசடை இராவணனது சகோதரனான விபீடணனின் புதல்வி ஆவாள். இராவணன் அழிவு சீதையின் சிறைமீட்டலுக்கு வழிகாட்டுதல் என்பதனைவிட, விசிடணன் அரசபதவியை அடைதல் வேண்டும் என்ற விழைவின் வெளிப்பாடு ஆகும்.

'அறம் வெல்லும் பாவம் தோற்கும்! என்பது கம்பன் என்ற படைப்பாளியின் வெளிப்படையான விழைவு (பொருள்) ஆகும். ஆயின், அரசபதவி (உயர்வு) என்பது பிறப்பால் அன்றி, அவரவர் நடத்தையால் வாய்க்கும்! அவ்வகையில், அயோத்தி அரசு, பரதனுக்கும் (பின்னர் இராமன் பட்டம் சூடினாலும்) கிஷ்கிந்தை அரசு, சுக்ரீவனுக்கும், இலங்கை அரசு விபீடணனுக்கும் உரியதாகின்றன

இவ்வாறு இளையவற்கு அரசு உரிமையாவதனை, குறியீட்டுக் கனவின்வழி படைப்பாளி கம்பர் வெளிப்படுத்துகிறார். அதாவது நனவுமனதால் தணிக்கை செய்யப்பட்ட நனவிலி மனதின் இச்சை உணர்வுகள் இவ்வாறு வெளிப்படுகின்றன. இராமாயணத்தின் மையப் பொருளான 'இளையவதற்கு அரசு' என்பதான கனவின்வழி படைப்பாளி வெளிப்படுத்துகிறார் எனலாம்.

பாரதி காண விரும்பிய கம்பநாடனின் தமிழகம்

திருமிகு க.வினோத்குமார்
முனைவர் பட்ட ஆய்வாளர், சுப்பிரமணியபாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப்பல்கலைக்கழகம், புதுச்சேரி.

முன்னுரை

பன்னெடுங்காலந்தொட்டு சீர்மையான இலக்கண இலக்கியங்களையுடைய தமிழ்மொழியானது செம்மொழி என்று பெருமைப்பட்டாலும் பாரதியார் பாடியதால்தான் தமிழ்மொழி தன்தகுதியைப்பெற்றது என்று பாரதிதாசன் தமிழ்மொழிக்கும், பாரதியாருக்கும் சான்று பகருவார்.

பாரதியார் சமுதாயச் சீர்திருத்தச் சித்தாந்தங்களையும், சுதந்திரப் போராட்டக்கருத்துக்களையும் இந்தியமண்ணில் விதைத்து காலத்தின் தேவையைப் பொருத்தமுடன் நிறைவேற்றினார். சுதந்திர மனநிலையை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே தொன்மம் மற்றும் வரலாற்று விழுமியங்களைப் பாடுபொருள்களாக்கி இலக்கியங்களைப் படைத்தார். அதன்வழி தமிழ்மொழியின் சீர்மை, தமிழ்ப்பண்பாடு, ஆறுகள், மலைகள் போன்ற இயற்கையமைப்புகள், பாரத, இராமாயணக் கதைகள் போன்றவற்றைக் கூறி அவை மண்ணின் பெருமைகளெனப் பழமை போற்றினார்.

சாதி என்ற பாகுபாட்டில் சண்டையிட்டுப் பிரிந்தும், மதம் என்ற போர்வையில் எல்லைகள் வகுத்துக்கொண்டும் நிலவுடைமைச் சமூகம் மறையும் நேரத்தில், முதலாளித்துவச் சமூகம் தோன்றும் சமயத்தில் தோன்றிய கவிஞர் மற்றும் தேசியவாதியான பாரதி அரசியல் விடுதலை, சமூக விடுதலை, ஆன்ம விடுதலை ஆகியவை மலரக் 'கலியுகம்' என்ற அடிமைச் சமூகம் மறைந்து, 'கிருதயுகம்;' என்ற பொதுவுடைமைச் சமூகம் தோன்ற விரும்பினார். நன்மை சேர்க்கும் பான்மையில் மனத்தில் நினைத்தது நடைபெறக்கூடிய புதுயுகத்தை வேண்டிப் பாடல்களைப் பாடினார். ஆதலால் பாரதியார் எண்ணிய 'கிருதயுகம்' என்பது கம்பன் எழுதிய இராமாயணத்தில் கூறப்பட்டுள்ள நாடு மற்றும் மக்களின் செம்மாந்த வாழ்க்கையைக் குறிக்கிறதா என்று ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பாரதியார் குறிப்பிடும் களவு வாழ்க்கை

ஒரு மனிதன் காதலில்லாமல் வாழ முடியாது. ஒரு ஆணுக்கோ

அல்லது பெண்ணுக்கோ தங்களின் இளமைப்பருவத்தில் தோன்றுகின்ற முதல் காதலே உண்மையானதும், மனதில் நிலைத்திருக்கக் கூடியதுமாகும் என்பது உளவியலாளர்களின் கருத்தாகும். சமுதாயக் கட்டுப்பாடுகளால் விதிக்கப்பட்ட சாதி, சமயம், கல்வி, பொருளாதாரம் ஆகியவை காதலுக்குப் பெருந்தடையாக உள்ளன. நடப்புநிலையில் தலைவனுக்கும், தலைவிக்கும் உண்டாகும் காதலானது களவுக் காலத்தில் சிறப்புற்று, கற்புக்காலத்தில் நுழைய முடியாமல் போனாலும் உண்மைக்காதலர்களின் காதல் உணர்வு என்றும் அழிவதில்லை. பாரதியார் குயில்பாட்டில் இதனை,

'காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல்'

என்று காதலின் இன்றியமையாமையைக் குறிப்பிடுகிறார். களவுக் காலத்தில் தோன்றுகின்ற காதலானது கற்புக்காலத்தில் வளர்ந்து சமுதாயத்தின் அனைத்து நிறுவனங்களும் அன்புவழிபட்டு இயங்குவதற்குத் துணைபுரிகின்றது. அதனால்தான் காதல் என்ற சொல்லாடலை மூன்றுமுறை தொடர்ந்து பயன்படுத்துகிறார். இது தாம் பெற்ற அனுபவத்திலிருந்தும், பழமைக்காப்பியங்களிலிருந்தும் பெற்ற அறிவாகும். கம்பன் படைத்த இராமனும், சீதையும் இளமைப்பருவத்தில் மிதிலையில் சந்தித்து அறிமுகமாகின்றனர். களவு வாழ்வில் இருவரும் தங்களுக்குள் அன்பைப் பரிமாறிக் காதலில் இன்புற்ற பின்பு கற்பு வாழ்வில் இணைவதாகக் காட்டி விடுகிறார்.

பாரதி காண விரும்பிய கற்பு வாழ்க்கை

கற்புவாழ்க்கைக்கு வேண்டிய அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றுகின்ற தேவையும், பொறுப்பும் பெண்களுக்கு நிறைய இருக்கின்றதெனப் பாரதியார் தன் கட்டுரைகளில் குறிப்பிட்டிருக்கிறார். தந்தையார் சொத்தில் மகளுக்குப் பங்கு உண்டு என்று வலியுறுத்திய பாரதி, இல்லறத்தில் குழந்தைகளைப் பேண வேண்டிய கடமையும் பெண்களுக்கு உள்ளது என்கிறார். ஆதலால் இல்லறம் நடைபெறுவதற்குரிய அனைத்துச் செயல்களிலும் பெண்களின் பங்கு மிகவும் அவசியமென்கிறார். இதனைப் 'பேணுநற்குடிப் பெண்களின் குணங்களாம்' என்று 'புதுமைப்பெண்' கவிதையில் குறிப்பிடுகிறார். கோசலநாட்டுப் பெண்களின் வாழ்க்கையைக் கம்பரின் வாயிலாக அறியும் நிலையில் பாரதியின் கனவைக் கம்பர் முன்பே உரைத்ததாகக் காண முடிகிறது.

'பெரும்தடம்கண் பிறைநுதலார்க் கெல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்தும் அன்றி, விளைவன யாவையே' (பால நாட்டுப்பகுதி - 36)

அழகுபொருந்திய பெரிய கண்களையுடைய கோசலைநாட்டுப் பெண்கள் தேவைக்குரிய கல்வியறிவும் வாழ்வதற்குரிய பொருட் செல்வமும் பெற்று விளங்கினர். 'மருந்தேயாயினும் விருந்தோடு உண்' என்ற பண்பாட்டினடிப்படையில் கோசலை நாட்டுப் பெண்கள் பசியால் வருந்தியோருக்கு உணவு அளித்துத் தங்களின் கடமைகளை இனிதே நிறைவேற்றுகின்றனர். இல்லறப் பெண்டிரின் கடமை எது என்பதைச் சிலப்பதிகாரக் கண்ணகிக் கூற்றின்வழியேயும் அறிய முடிகிறது. தன்னோடு வந்து சேரும் காலத்தில் கண்ணகி தான் இழந்த இல்லறவாழ்வைப் பற்றிக் கோவலனிடம் புலம்புவாள்.

'அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்த வென்னை'

என்று இல்லறத்தின் இலக்கணமான விருந்தோம்பல் செயல் மேற்கொள்ளப்படவில்லை என்ற வருத்தத்தைப் பதிவுசெய்வாள்.

பாரதி காண விரும்பிய நாடு

ஒருநாடு தன் நாட்டுமக்களுக்கு முழுமையான அரணாக இருப்பதோடல்லாமல் அனைத்து உரிமைகளையும் வழங்கும் நிலையில்தான் 'நல்லரசு' என்ற பெயரைப் பெறுகிறது. புறநானூற்றுப் பாடலொன்று நாடு சிறப்புற விளங்கப் பின்வருமாறு விளக்கம் கூறுகிறது.

'நாடு ஆகு ஒன்றோ! காடு ஆகு ஒன்றோ!
அவல் ஆகு ஒன்றோ! மிசை ஆகு ஒன்றோ!
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை! வாழிய நிலனே!'

ஆடவர் என்ற ஆண்பாலால் சுட்டப்பட்ட மக்கள் நல்லவராக இருக்கும் நிலையில்தான் நல்லரசு மெய்ப்பிக்கப்படுகிறது. அவ்வாறு நல்லவராக வாழவேண்டுமெனில் கல்வி, பொருள், வீரம் ஆகிய செல்வங்களில் நிறைவு பெற வேண்டும். அதோடு இம்மூன்று செல்வங்களில் முழுமையான அறிவும் வேண்டும். பாரதியார் விநாயகர்

நான்மணிமாலையில் கடவுளிடம் வேண்டப்படும் வேண்டுதல் உலக நன்மைக்கானதாகும். பாரதி தான்காண விரும்பிய உலகத்தில் மக்களிடையேயுள்ள துன்பமும் மிடிமையும் நீங்கி அன்பும் பொறையும் நிலவ வேண்டும் என்கிறார். இவ்வரத்தினை இந்நாளே இப்பொழுதே தந்தருள வேண்டும் என்று வேண்டுகிறார். இவ்வேண்டுதலுக்குப் பதிலளிக்கும் வகையில் இறைவன் 'அங்ஙனே ஆகுக' என்பாராம். 'விடுதலை' கவிதையில் 'ஏழையென்றும் அடிமையென்றும் எவனும் இல்லை ஜாதியில்' என்று மறுமலர்ச்சியுடைய மார்க்சிய உலகத்தை வேண்டியுள்ளார். பாரதியார் காண விரும்பிய சரிநிகர் சமான வாழ்வினை முன்னரே மொழிவதுபோலக் கம்பர் தன் கற்பனை நயத்தினால் உருவாக்குகிறார்.

'வண்மை இல்லை, ஓர்; வறுமை இன்மையால்
திண்மை இல்லை, நேர்செறுநர் இன்மையால்
உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்
வெண்மை இல்லை, பல்கேள்வி மேவலால்' (நா.படலம் 3953)

என்ற பாடல் குறிக்கத்தக்கது.

கோசலை நாட்டில் வள்ளல்கள் பரிசில்கள் வழங்குகின்ற தன்மையே இல்லை. ஏனெனில் அங்கே வறுமை என்பதே இல்லை. வலிமைக்குணமே காணப்படவில்லை. ஏனெனில் அங்கே துன்பம் தரும் பகைமை இல்லை. உண்மைத்தன்மை என்பது தனியே காட்டப்படும் நிலையில்லை. ஏனெனில் பொய்மையே இல்லை. அறியாமை என்பதைக் காண முடியவில்லை. ஏனெனில் மக்கள் அனைவரும் பல்துறையறிவைப் பெற்றிருந்தார்கள்.

மற்றொரு சான்றுக்குப் பாரதியார் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஒரு நிகழ்வைக் குறிப்பிடலாம். வ.வே.சு ஐயர் ஒரு முறை அணிகலன்கள் அணியப்பெறாத 'பாரதமாதா' திருவுருவச்சிலையைப் பாரதியாரிடம் காண்பித்தாராம். அதைக் கண்ட பாரதி பாரதமாதாவிற்கு அணிகலன்கள் பூணாமல் போனதற்கான காரணமென்ன? என்று வினவினாராம். அதற்கு வ.வே.சு. ஐயர், இந்தியாவிலுள்ள அனைத்துச் செல்வங்களையும் வெள்ளையர்கள் கொள்ளைகொண்டு சென்றுவிட்டனர். அதனால் இந்தியத்தாய் வறுமையைப் பூண்டிருக்கிறாள் என்று பதிலளித்தாராம். அதற்குப் பாரதி, 'இந்தியாவிலிருந்து பொருட்செல்வத்தை மட்டும்தானே சுரண்டிச் சென்றனர். ஆனால் இமயமலை, இன்னரு கங்கை, பன்னருங் உபநிடதங்கள் ஆகிய

அரிய செல்வங்கள் நம்மிடையேதானே இருக்கின்றன' என்றாராம். இந்தியநாட்டை எப்பொழுதும் வளம் பொருந்திய நாடாகக் குறிப்பிடுவதில் பாரதி முதன்மை இடம் பெறுகிறார். இதனை 'பாரத சமுதாயம்' என்ற கவிதையில் பதிவுசெய்கிறார்.

'இனிய பொழில்கள் நெடிய வயல்கள் எண்ணரும் பெருநாடு
கனியும் கிழங்கும் தானியங்களும் கணக்கின்றித் தரு நாடு-இது
கணக்கின்றித் தரு நாடு'

இக்கருத்தின் வேர்க்கருத்தாக நாட்டுப்படலக் காட்சியாகக் கம்பர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'நீரிடை உறங்கும் சங்கு
நிழலிடை உறங்கும் மேதி
தாரிடை உறங்கும் வண்டு
தாமரை உறையும் செய்யாள்' (நாட்டுப்படலம்)

சங்கு, எருமை, வண்டு, திருமகள் போன்ற உயிர்கள் தங்கள் தொழில்களைத் செய்யாமல் உறங்கினர். கோசல நாட்டிலுள்ள மனிதர்களும், மற்றவைகளும் அனைத்துத் தன்மைகளிலும் நிறைவுபெற்று வாழ்கின்றனர். மேற்கூறப்பட்ட அஃறிணை மற்றும் உயர்திணைச் செயல்களினால் மிகுஉழைப்பின்மை உருவானதா-யிருக்கலாம். தன்னிறைவை மிஞ்சிய மிகைக்கோட்பாட்டைக் காட்டுகிறார்.

முடிவுரை

கம்பரின் இராமாவதாரத்தை பாரதியார் போற்றுவதற்குக் காரணங்களாகப் பின்வருபவை; 1). தமிழின் தொன்மப் பழக்க வழக்கங்களைப் போற்றிடும் நூல் 2). வடஇந்தியா-தென் இந்தியா என இருதுருவ மாந்தர்கள் பங்கேற்ற நூலாதலால் இந்நூலை தேசியக் கொள்கைக்குச் சான்றாக அமையும் 3). ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயர்ந்த இல்லறக்குறிக்கோளை உணர்த்துகிறது 4). நட்பு, சகோதரத்தன்மை, கற்பு, நல்ல மாந்தர்கள் ஆகிய பொருண்மைகளுக்குச் சான்றான நூல். காதல் என்ற சொல்லாடலை மிக ஆழமாக விளக்கிய பாரதி அதன் இன்றியமையாமையை வலியுறுத்திக் கூறுவதற்கு இராமன்-சீதையின் களவுக் காதலின் வெளிப்பாடுகளே காரணங்களாகும்.

கடவுள் வாழ்த்துப் பாடல்கள் கம்பன் பாடியவைதானா?

கம்பன் அடிசூடி பழ.பழனியப்பன்
செயலர், கம்பன் கழகம், காரைக்குடி

உலகம் இன்றளவும், என்றளவும் உவந்து வியக்கும் ஒப்பற்ற ஒரு காவியம் படைத்தவன் கம்பன். அவனுடைய மாபெரும் காவியஓவியம் ஓங்கி நின்று உலகும் உளமும் அளக்கும் தன்மையது; அதற்குக் கட்டியம் கூறுமாப்போலே அவன் வடித்திட்ட கடவுள் வாழ்த்துப்பாடலின் குன்றாத இளமையையும் கன்றாத வளமையையும் கோடிட்டுக்காட்ட முயலும் முயற்சியே இச்சிறு கண்ணிநுண் தாம்பு முயற்சி.

ஆறுகாண்டங்கள், நூற்றுப்பதினெட்டுப் படலங்கள், இருபத்தி மூன்று கிளைக்கதைகள், பத்தாயிரத்து முந்நூற்றுப் பதினெட்டுப் பாடல்கள், இருநூறு கதைமாந்தர், முப்பத்தியேழு தொகை மாந்தர், முப்பத்திரெண்டு விலங்குவகைகள், பதினான்கு ஊர்வன, இருபத்தி யேழு பாலூட்டிகள், நாற்பத்திஆறு பறவை இனங்கள், பதினான்கு முதுகெலும்பு அற்ற உயிரினங்கள், எட்டு மீன்வகைகள், அறுபது பூவகைகள், நாற்பத்திரெண்டு மரவகைகள், எழுபத்தியாறு இரட்டைவிதை இலைத்தாவரங்கள், இருபத்தியேழு ஒற்றை விதை இலைத்தாவரங்கள் என கம்பக் காவியக்கடலின் ஆழ்பொருள்களை ஆய்ந்து கண்டறிந்துள்ளனர் அறிஞர் பெருமக்கள் பல்லோர்.

இத்தகு காவியக் கடலுள் 'உலகம் யாவையும்' என்று தொடங்கும் கடவுள் வணக்கப்பாடலாம் சிறுபடகுடன் கம்பன்தன் நெடுங் காவியப் பயணத்தைத் தொடங்குகின்றான். முதற்காண்டமாகிய பால காண்டத்துள் இஃதொன்று தவிர 'சிற்குணத்தர்', 'ஆதி அந்தம்' என இரண்டு பாடல்கள், எஞ்சிய ஐந்து காண்டத்திலும் ஒவ்வொரு பாடல் என எட்டுப்பாடல்கள் கம்பராமாயணத்தின் கடவுள் பாடல்கள் என்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தனிச் சிறப்பு வாய்ந்த பாடபேதப் பதிப்பு முதல், வை.மு.கோ., உ.வே.சா.நூல் நிலையம்,தெ. பொ.மீ தலைமையில் ஆய்ந்த சென்னைக் கம்பன் கழகம், அ.ச.ஞா. தலைமையில் ஆய்ந்த கோவைக் கம்பன் கழகம், டி.கே.சி யின் 'கம்பர் தரும் இராமாயணம்', சொ.முருகப்பரின் 'இராமகாதை'ப் பதிப்பு உள்ளிட்டன எடுத்தாண்டு உரை கண்டுள்ளன.

இச்சிறு முயற்சியில் கம்பன் அச்சிறு படகு கைக்கொண்டு பயணிக்க முயலும் கடலாழம் காண முயன்றுள்ளோம் அவ்வளவே! இந்த ஒரு கடவுள் வாழ்த்துப் பாடலின் ஆழ, அகலம் கண்டால் கம்பன் எட்டுக் கடவுள் வாழ்த்துக்கள் பாடியிருப்பான் என்ற கருத்து ஆட்டங்கண்டிடும் என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை. எனினும் அது தனியே ஆழ்ந்து தோய்ந்து நுணுகி ஆயப் படவேண்டியதொன்றாகும். அடியேன் அப்படிக் கண்டு கொண்டதும் உண்டு; உறுதிப்பட்டதும் உண்டு; அதைத் தக்க இடத்தே ஈண்டு விண்டு விரிவாகக் காண்பதே இம்முயற்சி.

“கரைசெவி காண்டம் ஏழு; கதைகள் ஆயிரத்து எண்ணூறு;
பரவுறு சமரம் பத்து; படலம் நூற்று இருபத்தெட்டே;
உரைசெயும் விருத்தம் பன்றிராயிரத்து ஒரு பத்தாறு;
வரம் மிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற்று ஆறே.”

என்று பழைய தனிப்பாடல் ஒன்று இதனை விரித்து விளக்கிடும்! இப்பாடல் ஒட்டக்கூத்தர் எழுதிய உத்தரகாண்டத்தையும் சேர்த்து காண்டங்கள் ஏழு என்றிடும்! கம்பன் விவரிக்கும் போர்கள் பத்து என்றும், பாடிய வண்ணம் தொண்ணூற்று ஆறு என்றும் பட்டியலிடும் இப்பாடல் கம்பன் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல்களின் எண்ணிக்கை ஒன்றுக்கு மேற்பட்டிருக்க, அதனைக் குறித்து ஏதும் சொல்லாதது ஆச்சரியமே!

இவை தவிர, கம்பனில் காணக் கிடைக்கும் கடவுள்துதிப் பாடல்கள் என்று பார்த்தால், அவை நிரம்பவே உள்ளன.

வ.எ	பாடல்கள்	எண்ணிக்கை
1	விராதன் துதி	13
2	இந்திரன் துதி	5
3	கவந்தன் துதி	9
4	வாலி காட்சி	1
5	வாலி போற்றல்	2
6	அனுமன் போற்றல்	4
7	பிரகலாதன் போற்றல்	22

8	பிரகலாதன் துதி	9
9	பிரமன் துதி	5
10	வருணன் துதி	5
11	கருடன் துதி	11
12	தேவர்கள் துதி	7
13	பிரமன் போற்றல்	11

இவை அனைத்தும் கம்பன் கல்வியில் பெரியன் என்பதை நிலை நாட்டுவனவாகும். 'தென்சொல்லும், வடசொல்கலையும் நிரம்பக் கற்ற பண்டிதன் அவன்' என்று சான்று பகரும். ஆம். அவை வேத, உபநிடதங்களின் சாரத்தைப் பிழிந்து தருவன. கம்பன் கல்லாத கலையும் வேதக்கடலும் இல்லை என்னுமாப்போலே கற்பவரை அறிவுக் கடலுள் ஆழ்த்துவனவாகும்.

இந்தத் துதிப்பாடல்கள் யாவும் கம்பன் பாடியவை; ஆதி காவியத்தில் கிடையாது. கதைப்போக்கிற்கு இயைய, கதைப்போக்கைத் தடைப்படுத்தாது இத்தகு துதிப்பாடல்களை காவியத்தினிடையே கம்பன் நிரம்பப் பாடிய பிறகு, காண்டத்திற்கு ஒரு கடவுள் வாழ்த்தைத் தனியே பாடத் தேவைதான் எழுமா? கவிச்சக்கரவர்த்தி கம்பன் அப்படிப் பாடியிருப்பானா?

இப்போது, ஆய்வுக் களம் ஏதும் அமைத்து உட்புகாது, புறத்தே நின்று ஒரு கேள்வி! இப்படியான எட்டுப்பாடல்களும் கம்பனே பாடியனவா? ஒரு பெரும் பேரிலக்கியத்தின் மிக முக்கியமான அங்கமாகிய கடவுள் வாழ்த்துப் பகுதி பற்றி, பேரிலக்கியத்திற்கான ஆய்வுப்புலம் அமைத்து அதன் வழிநின்று ஆயப்புகாது, மேலோட்டமாக இப்படி ஒரு கேள்வியை எழுப்பி விடை காண முயல்வது முறையாகாது; என்றாலும் ஐயம் ஒன்றினை மனதில் தோன்றியபிறகு ஆறப்போடாது, அறிஞர் பெருமக்கள் முன் படைத்து, அவர்கள் சிந்தனையைத் தூண்டி விரிவான விவாதத்திற்கு வழிவகுப்பதுவே நலம் பயக்கும்; வினாவிற்கான நிரந்தரமான விடை கிடைக்க ஏதுவாகும், இல்லையா?

கடவுள் வாழ்த்துப் பாடல்கள் எட்டும் ஒரே மாதிரியன அன்று. 'உலகம் யாவையும்' என்ற முதற் பாடலும், ஆரணிய, கிஷ்கிந்தா, யுத்த காண்டப் பாடல்களும் அகப் பாடல்கள் போன்று ஒருவர் பெயர் சுட்டிச்சொல்லாது தலைவர், ஆதிதேவர், அம்முதல், ஒன்று என்பன

போன்ற பொதுவான சொற்றொடர்களால் சுட்டாது சுட்டி நிற்கும். பால காண்டத்தின் மீதி இரு கடவுள் வணக்கப்பாடல்களும் அவதார புருஷனாகிய இராமபிரானின் மூலமாகிய திருமாலை இனங்காட்டும். அயோத்தியா, சுந்தரகாண்டப் பாடல்கள் இரண்டும் இராமகாதைத் தலைவனாகிய இராமனையே வாழ்த்திநிற்கும். இப்படியாக எட்டுப் பாடல்களும் ஒன்றோடு ஒன்று வேறுபட்டு நிற்கும்.

ஒப்பாய்வு என்று பார்த்தால், ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய கம்பனுக்கு முற்பட்ட எந்தக் காப்பியத்திலும், இப்படி காண்டந்தோறும் அல்லது பேருறுப்புத் தோறும் கடவுள் வணக்கம் பாடப்பெறவில்லை என்பதே உண்மையாகும். தமிழில் எழுந்த முதற்காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் முதல்காண்டமாகிய புகார்க்காண்டத்தில் ஞாயிறு, திங்கள், மழை என இயற்கை வாழ்த்து கடவுள் வாழ்த்துப் போன்று அமைந்துள்ளது, மற்ற இரு காண்டங்களின் ஆரம்பத்தில் அதுவும் இல்லை. சீவகசிந்தாமணியில் முதல் இலம்பகத்தில் "மூவா முதலா" என்ற கடவுள் வாழ்த்துப்பாடல் அமைந்துள்ளது. மற்ற இலம்பகங்களில் அப்படி எதுவும் இடம் பெறவில்லை.

கம்பனுக்குப்பின் பனிரெண்டாம் நூற்றாண்டில் எழுந்த காப்பிய மாகிய சேக்கிழாரின் பெரியபுராணத்தில் "உலகெலாம் உணர்ந்து" என்ற தில்லைத்திருச்சிற்றம்பலவன் வாழ்த்தே கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது. ஆனால், வில்லிபுத்தூரார்தம் பாரதத்தில் பேருறுப்பாகிய பருவ ஆரம்பத்தில் "ஆக்குமாறு அயனாம்" என்று தொடங்கும் கடவுள் வாழ்த்துப்பாடலில் முத்தொழில் ஆற்றும் மூவரையும் பாடியதோடு, சிற்றுறுப்பாகிய சருக்கங்களில் சிலவற்றின் தொடக்கத்திலும் கடவுள்வாழ்த்து அமைத்துப் பாடியுள்ளார். 45 சருக்கங்களில் முதல் 26ல் எழு சருக்கங்களிலும், 18 நாள் போர் நிகழும் 27 முதல் 45 ஆம் சருக்கங்களாகிய 18லும் ஆக மொத்தம் 25 சருக்கங்களில் மட்டுமே உள்ளன. எல்லாச் சருக்கங்களிலும் அமைக்கப்படாததோடு, அவ்வாழ்த்துக்கள் சருக்க உட்பொதி பொருளோடு தொடர்பின்றி அமைந்துள்ளன. கண்ணன் புகழ் பாடுபவர் 14ஆம் சருக்கத்தின் வாழ்த்தில் "விண்ணவர் தம் துயர் தீர்த்த மிராமன், கல்கொண்ட அகலிகையை தன் உருவம் மீளக் கவின் கொள்ளக் கொடுத்த திருக் கமல பாதம்" என இராமனை வாழ்த்துவதாக அமைந்துள்ளது. இத்தகு பாடல்கள் அவருடைய முதற் கடவுள்வாழ்த்துப் பாடலோடு எவ்விதத்திலும் ஒப்புமை இன்றி

தனித்து நிற்கின்றன. எனவே இடையில் வரும் சருக்க வாழ்த்துக்கள் அவர் பாடியவைதானா என்ற கேள்விக்குறி எழவே செய்கிறது.

அவர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டுக் கம்பனுக்கு மிகமிகப் பிந்திய பதினான்காம் நூற்றாண்டாகும் என்பதால் செருகுகவிகள் மலிந்த காலத்தே எழுந்தனவாயிருக்கலாம். இஃது நம் இந்த ஆய்வுக்கு தொடர்புடையது அன்று என்றாலும், முன்னர்த் தோன்றிய கம்பனுக்கும் அதே கதி தோன்றியிருக்க வாய்ப்பு உண்டென்பதற்கு இஃது துணை நிற்கும்!

காண்டந்தோறும் கம்பன் பாடியனவற்றைத் தனியே எடுத்துப் பொருளை நோக்கினால் கம்பன்தான் பாடினானா என்ற வினா எழவே செய்யும். கம்பனுடைய முதற்கடவுள்வாழ்த்துப் பாடலாகிய 'உலகம் யாவையும்' உலக இலக்கியங்களிலேயே தனித்து நிற்கும் ஒப்புயர்வற்ற வாழ்த்தாகும். இவன்தான் இறைவன் என்று திருமாலையோ அல்லது இவன்தான் இறைவன் என்று தன் பாட்டுடைத் தலைவனாகிய இராமனையோ கம்பன் சுட்டிகாட்டினானன்று. மாறாகச் சைவரோ, வைணவரோ அன்றி, பிற சமயத்தவர் எவரும் கொஞ்சமும் தயக்கமின்றி தம் சமயக் கடவுள் வாழ்த்தாகவே கொள்ளுமாப்போலவே இப்பாடல் அமைந்துள்ளது ஒரு கிறித்துவரோ, இஸ்லாமியரோ அல்லது புத்த, சமண மதத்தவரோ கூட இக்கடவுள் வாழ்த்தைத் தத்தம் கடவுள் வாழ்த்தாகவே கொள்ளத் தயங்கார்; கொள்ளுவர். இது கம்பனுடைய மாபெரும் கவித்துவமேன்மையாகும்.

வள்ளுவருடைய பாயிரத்திற்கும், சிறப்பாக 'அகர முதல' என்று தொடங்கும் கடவுள் வாழ்த்துக் குறளுக்கும் திரு.வி.க. அவர்கள் ஒரு தனி நூலே எழுதியது போன்று 'உலகம் யாவையும்' பாடலுக்கும் ஒரு தனி ஆய்வு நூலே எழுதும் அளவிற்கு மிக நுட்பமான ஆழமான பொருள் பொதிந்ததாகும். எந்த ஒரு சமயத்தையும் குறிப்பிடாததோடு, அச்சமயக்கடவுளுக்குரிய பெயரையும் சுட்டாது, திணை, எண், பால் கூடச் சுட்டாது கடவுள் வாழ்த்து கம்பன் ஒருவனால் தான் பாட முடியும்; முடிந்தது! உலக இலக்கியம் வேறு எதுவும் செய்திராத தனிப்பெரும் முயற்சி.

இப்படிப்பட்ட கடவுள் வாழ்த்தோடு, ஏனைய கடவுள் வாழ்த்துப்பாடல்கள் ஒரு சிறிதும் ஒப்பாய்வு செய்ய முடியாதனவாகும். அயோத்தியா காண்ட வாழ்த்துப் பாடலாகிய 'வான் நின்று இழிந்து' என்று தொடங்கும் பாடலில் - 'உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும்

பரந்துளான்' என்ற நம்மாழ்வாரின் தாக்கத்தால் - 'ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளன்' என்று பரம்பொருளின் இயல்பொன்றை முன் இரண்டு அடிகளில் பாடினாலும், பின் இரண்டு அடிகளில் அப்பரம்பொருள் இராமனாக வடிவெடுத்துச் செய்த செயல்களைக் குறிப்பிட்டு இராமனைத் தெய்வமாகக் குறிப்பிட்டுக் காட்டிவிடுகிறான். பொதுப்படக் கடவுளை வாழ்த்தியவன் இங்கே பிற சமயத்தவர் ஒப்பத் தயக்கம் காட்டக்கூடிய பெயரைச் சுட்டுவானா? அத்தோடு இராமஅவதார வரலாறாய் அனைத்துக் காண்ட நிகழ்வுகளும் ஒருசேர அல்லவா இங்கே பேசப்பெறுகின்றது? பல காண்டச் செயல்களின் தொகுப்பான இப்பாடல் முதற்காண்டத்தே இடம்பெறாது இரண்டாவது காண்டத்தில் சொல்லப் பெறுவதும் பொருத்தமாக இல்லை.

மூன்றாவதாகிய ஆரணிய காண்டம் 'பேதியாது நிமிர்பேத உருவம்' என்ற வாழ்த்துப்பாடல் 'உலகம் யாவையும்' போன்று பொதுப்படப் பொருள் இயல்பைச் சுட்டினாலும், காண்ட நிகழ்வோடு தொடர்பின்றி உள்ளது. கொஞ்சம் சிக்கலான பொருள் கொண்டது. பின் இரண்டடிப் பொருள் வேதம், வேதியர், பிரமன் முதலானவர்களும் அறிந்துகொள்ள இயலாததாகிய பரம்பொருள் நம் சிற்றறி-வினால் அறியப்படக் கூடியதன்று என்னும். முன் இரண்டடியோ பிரிக்கப்படமுடியாத ஒரு பொருளிலிருந்து பல்வேறு பொருள்கள் தோன்றினாலும், ஓதி ஓதி உணரும்தோறும் அவ்வுணர்வினால் உணரப்பட முடியக் கூடியது என்று பின் இரண்டடிக்கு விதிவிலக்கைக் காட்டும். முன்னே அயோத்தியா காண்டத்தே அவதார வரலாறு கூறியதின் பின் கவிஞன் அடுத்து இவ்வளவு பெரிய தத்துவத்தை அதிலும் ஆரணிய காண்டத்து வரும் பாத்திரங்களாகிய விராதன், இந்திரன், கவந்தன் முதலானோர் இறைவன் ஓயாத பெரு மாயம் நிரம்பியவன் என்று தோத்திரம் பாட அதனை விஞ்சிய கருத்துடைப் பாடலாக இதனை வாழ்த்தாகப் பாடுவானா என்று எழும் ஐயம் நியாயமானதே.

அடுத்த காண்டமாகிய கிஷ்கிந்தா காண்டப் பாடலாகிய 'மூன்று உரு எனக் குணம் மும்மை ஆம்' என்பதும் பொதுப்பட பொருள் உடையதாயினும், காண்டச் செய்திகளோடு இணைப்புடையதாக இல்லை. மும்மூர்த்திகள் எனவும், முக்குணங்கள் எனவும் காணப்பெறும் வடிவங்களும் மூலப் பரம்பொருளின் பல்வேறு வகையான நிலையே

எனும் இக்கருத்தைக் கம்பன் பலப்பல இடங்களிலும், கவந்தன், பிரகலாதன் கூற்றாகவும் காட்டுகிறான். 'உலகம் யாவையும்' பாடலிலும் இம் முத்தொழில் கருத்தைக் கோடிட்டுக் காட்டியபிறகு அதற்காக மீண்டும் ஒரு கடவுள் வாழ்த்தியற்ற வேண்டிய அவசியம் எழாது என்பதால் இது கம்பன் பாடியதுதானா என்று சிந்திக்க வைக்கிறது.

சுந்தர காண்டச் செய்யுளாகிய 'அலங்கலில் தோன்றும் பொய்மை அரவு' பொதுப்படப் பொருள் கொண்டதுவாய்த் தொடங்கி, பின்னே பரம்பொருள் இராமனே என்று அடையாளம் காட்டி நிற்கும். பஞ்ச பூதங்களின் தன்மையும் முரண்பாடாகத் தோன்றி ஏற்படுத்தும் கலக்கம் பரம்பொருளின் தரிசனத்தால் விலகும் என்று சொல்ல வந்த கவிஞன், அப்பரம்பொருள். இராமனே என்று அடையாளம் காட்டிவிடும் கடவுள் வாழ்த்து கம்பனுடைய முதன்மைக் கடவுள் வாழ்த்துப் பொருளோடு ஒட்டிவராதே!

ஆறாவது காண்டமாகிய யுத்த காண்டப் பாடல் நம்மைக் கொஞ்சம் இடர்ப்படுத்தும். கம்பன் பாடியது என்றே கொள்ளுமாப்போலே வடிவம், நடை, பொருள் கொண்டதாய்க் காட்டி நின்று மயக்கும். மிகப் பெரிய உண்மையை மிக எளிய சொற்களில் வடிக்கும் இப்பாடல் கருத்து கம்பன் பிற இடங்களில், பல பாத்திரங்களின் வாயிலாய் கூறியதுதான். அதையே ஒரு கடவுள் வாழ்த்தாய் அவன், அதுவும் கொஞ்சமும் தொடர்பில்லாத யுத்த காண்டத்தே வைத்துச் சொல்வதேன் என்பது நெஞ்சில் நெருடுகிறது.

இப்படி காண்டம்தொறும் கடவுள் வாழ்த்துக்கள் கம்பன் பாடியதுதானா என்ற ஓர்ஐயம் எழச் சில காரணங்கள் தோன்றுகின்றன. முதற்காரணம் கம்பன் காவியம் மக்கள் இலக்கியமாக செல்வாக்குடன் விளங்கிவந்ததே ஆகும். பலர் இராமாயணப் பிரசங்கம் செய்வதையே தம்வாழ்க்கைப் பணியாய்க் கொண்டனர். சுவடி பெயர்த்து எழுதுபவரும், படி எடுப்போரும் பெருகினர். இவ்வாறு பேசியும், எழுதியும் வந்தவர்கள் எண்ணிக்கை கூடவே, காலக்கிரமத்தில் நூலுள் மாறுதல்கள் உண்டாயின.

கம்பராமாயணத்தின் இத்தகைய அசுரவேகச் செல்வாக்கு பலரையும் கம்பனது காவியத்தோடு ஒட்டி ஒரு பாடலைப்பாடி அதனையும் கம்பன் பாடல்களோடு சொருகிவிடும் ஆசையை மூட்டிவிட்டதும் ஒரு காரணம். 'கம்பகாவியத்தில் எண்ணற்ற சொருகு கவிகள் ஏற்பட்டது இப்படித்தான்' என்பர் ரசிகமணி டி.கே.சியும்,

அறிஞர் சொ. முருகப்பாவும். ஓரளவிற்கு இது உண்மை என்பதால் காண்டத்திற்கு காண்டம் ஏற்பட்ட கடவுள் வாழ்த்துப் பாடல்களும் இதே ரகத்தனவாயிருக்கலாம் என்று கருதவும் இடங்கொடுக்கிறது. இவ்வாறு நுழைக்கப்பெற்ற கவிதைகள் கம்பனது கவிதை ஓசை ஒழுக்கிற்கும், சொல்லாட்சிக்கும் முரண்பட்டு நின்றமையை எளிதில் கண்டுவிடலாம். முதன்முதலில் பதிப்பித்தவர்கள் இத்தகைய பாடல்களைத் தனியே குறிப்பிடாது, மூலத்துடன் சேர்த்து விட்டனர். பின்னர்வந்த சிலர் இவற்றை மிகைப்பாடல்கள் என்று தனியே காட்டினர். ஆனாலும் கம்பனுக்கு ஒரு செம்மையான பாடப் பதிப்புக் காண வேண்டும் என்ற பேரவாவினால் உந்தப்பட்டவர்கள், கம்பனில் செம்பாதிக்குமேல் ‘செருகு கவிகள்’ என்று தள்ளிவிட்டனர். அது மிகப் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது. அவர்களும் கூட காண்டக் கடவுள் வாழ்த்துப்பாடல்களை கம்பன் பாடியதாய் இருக்கக்கூடும் என்று ஏற்றது ஆச்சரியமே. காசைச் சுண்டிப் பார்ப்பதுபோல் கம்பன் பாடல்களையும் சுண்டிச் சுண்டிப் பார்த்த ரசிகமணியிடமும், சொ. முருகப்பரிடமும் இவை தப்ப இன்னுமொரு காரணமும் உண்டு.

கம்பன் எழுதியதைத் தாய் ஏடு என்று கொண்டால், பிறகு படி எடுத்தவர்கள் எழுதியன மகள் ஏடு, பேத்தி ஏடு, கொள்ளுப் பேத்தி ஏடு என பிரதி எடுத்தபோது சொற்கள் மாறிவிட வாய்ப்பு மிகவுண்டு. ஒரு தலைமுறை ஏடுகளுக்குள்ளும் அவை எழுந்த இடம், மண்டலம் காரணமாய் வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்புண்டே! அதோடுகூட கம்பராமாயணத் தனியன்களாய் மிகப் பலர் எழுதிய தனியன் பாடல்களையும் ஏட்டில் சேர்த்து எழுதத் தொடங்கினர். அத்தனியன்களில் மனம் பறிகொடுத்த படிஎடுப்போர் பலர் அவற்றுக்கும் முக்கியத்துவம் தரக் கருதி, கம்பன் பாடிய கடவுள் வாழ்த்துப்போலவே புதுமைசெய்வதாய் காண்டம்தொறும் புகுத்தியிருக்கலாம். அதனால்தான் அவற்றில் தொடர்பின்மையும், காண்டச்செய்தியோடு பொருந்தி வராமையும், கூறியது கூறலுமாயும், கம்பனது கடவுள் வாழ்த்துக் கொள்கையோடு இயையாமையும் தென்படுகிறது.

அதுமட்டுமன்று; ஒவ்வொரு காண்ட, படலங்களின் எண்ணிக்கையும், படலப்பெயர்களும், படலத்தின் தொடக்கப் பாடலும், முடிவுப் பாடலும் பெரும்பாலான பிரதிகளில் வெவ்வேறாய் உள்ளன படி எடுத்த பிரதேசச் சூழல் காரணமாயும் இவை ஏற்பட்டன. எனவே கம்பனில் காண்டப் பிரிவினை, படலப் பிரிவினை எல்லாம்

கம்பன் காலத்திற்குப் பிற்பட்டே இருந்திருக்கலாம். பெரும்பாலான காண்டங்களில் முந்திய காண்டத்தின் இறுதிப்பாடலும், அடுத்து வரும் காண்டத்தின் தொடக்கப்பாடலும் சந்த வேறுபாடின்றி இருப்பதை அறிஞர்கள் சுட்டுகின்றனர். காண்டத்தின் பொருளும் ஒவ்வொரு காண்டத்திலும் முடிவுற்று அடுத்த காண்டத்தில் புதிய தொடக்கத்தைப் பெறவில்லை என்பதும் கண்கூடாகிறது. பொருள் இடையறவின்றித் தொடர்ந்து செல்கிறது. சில காண்டத்தொடக்கங்கள் முன்னையதுடன் குளகம்போல இயைந்து உள்ளதையும் காண முடிகிறது. இத்தகைய தொடர் அமைப்பில் கடவுள் வாழ்த்தென்று சில பாடல்கள் வேறு சந்த அமைப்பில் இடைஇடையே வருதல் அவை கம்பன் எழுதியதுதானா என்ற ஐயத்தை ஏற்படுத்துவதில் வியப்பொன்றுமில்லையே.

மரபுகளில் ஊறிய உறைப்புடைய பண்டிதர்களும், பதிப்பாசிரியர்களும் மாற்றம் செய்ய அச்சங்கொண்டு, இருந்ததனை இருந்தபடியே இருத்திவிட்டமையே காரணமாய் அமைந்துவிட்டது எனலாமோ? கம்பராமாயணத்திற்கு ஒரு செம்பதிப்புக் கொண்டு வரவேண்டும் என்று முயன்றோர் பலருண்டு; அவர்கள் முயற்சிகள் உருப்பெற்றாலும், முற்றுப் பெறாதொழிந்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பதிப்பு முயற்சி மிகச் சீரியது. அன்று வாழ்ந்த பெரும் பெரும் தமிழறிஞர்கள் ஒன்றுகூடிப் பல்லாண்டு முயன்றதன் பயனாய்ச் சிறந்த பாடபேதப் பதிப்பாய் வெளிவந்தது; என்றாலும் அதில் அவர்கள் கைக்கொண்ட பாடத்திற்கான விளக்கம் இன்மையாலும், சிலஇடங்களில் அறுதிப்பெரும்பான்மைச்சுவடிகளிலும், பதிப்புகளிலும் இடங்கொண்ட பாடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டிய காலக் கட்டாயம் நேர்ந்ததும் பதிப்பின் செம்மையைப் பாதித்தது. சொ.முருகப்பாவும் அறிஞர் பலரையும் சுவடிகளையும் கொண்டு முயன்றபோதிலும், காலன் முந்திக்கொண்டதால் அவரது முயற்சியும் தடைப்பட்டுப் போயிற்று.

மர்ரே ராஜம் பதிப்பில், கம்பனைப் பரவலாக எளிய முறையில் பொருள்புரிதலுடன் எல்லோரிடமும் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற ஆவலில், கம்பன் அடிப்பொடி உள்ளிட்ட அன்று இருந்த அறிஞர் பலர் ஈடுபட்டனர்; அவர்களும், காலத்தின் கட்டாயத்திற்குட்பட்ட - வரையறுத்துக் கொண்ட - கொள்கையால் குறிப்பிட்ட எல்லையைத் தாண்ட முடியாது போயிற்று. தெ.பொ.மீ

தலைமையில் சென்னைக் கம்பன் கழகம் கண்ட பதிப்பும், அ.ச.ஞா. தலைமையில் கோவைக் கம்பன் கழகம் கண்ட பதிப்பும் மேற்படி காரணத்தாலேயே எல்லைக்குட்பட நேர்ந்தது. பெரும்பான்மையான கொள்கை என்ற ஒன்றினைக்கொண்டு பின்பற்றும்போது அது முற்றிலும் ஏற்புடையதாகும் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பெற்ற சுவடிகள், பிரதிகள் இரண்டு அல்லது மூன்று நூற்றாண்டுக்கு உட்பட்டனவாகத்தான் இருக்கின்றன. ஆகவே எடுக்கப்பெறும் பாடங்களும், மரபும் பிற்கால வழக்காகவேதான் இருக்க முடியும், இல்லையா? கம்பன் காலத்தை ஒட்டியதாக இருக்க வாய்ப்பு இல்லை.

மேற்சொன்ன பேரறிஞர்கள் எல்லாம் மரபு வழாமையின் காரணமாய் ஏற்ற கம்பராமாயணக் காண்டங்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்களைக் குறித்து, கம்பன் மாட்டுக் கொண்ட அச்சங் கலந்த காதலாலும் சிற்றறிவினாலும், இச்சிறியவன் ஐய வினா எழுப்பியமையை அறிஞருலகம் பொறுத்தருள வேண்டிப் பணிகின்றேன். கம்பனின் திருவுளப் பாங்கினை தமிழ் இலக்கிய உலகம் கூடி ஆய்ந்து தெளிவுறுத்த மெத்தப் பணிவன்புடன் கம்பன் அடிப்பொடியின் மாணாக்கன் என்ற முறையில் வேண்டுகிறேன்.

சித்திர நகரமான இலங்கைதான் சுந்தரமா?

பேராசிரியர் வ.இராசரத்தினம்
தமிழ்த்துறை, கிராமியப் பல்கலைக்கழகம், காந்திகிராமம்

கம்பர் தன் காப்பியத்தில் காண்டப் பெயர்களை எல்லாம் வால்மீகத்தை அடியொற்றியே அமைத்துக் கொண்டதனால் ஐந்தாவது காண்டத்திற்கும் சுந்தர காண்டம் என்னும் பெயரை அப்படியே ஏற்றுக் கொள்கின்றார். இக்காண்டத்தில் இடம்பெறும் சுந்தரன் யார் என்று நிறுவுவதில்தான் அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிலவுகின்றது. இச்சுந்தரத்திற்குக் காரணமாக அறிஞர்கள் முன்வைக்கும் கருத்துக்கு மாற்றான ஒரு சிந்தனையை முன்வைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

கோவை கம்பன் அறநிலைய வெளியீடாக வந்த கம்பராமாயண சுந்தரகாண்டத்துக்கு முன்னுரை எழுதிய பேரா.அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் சுந்தரகாண்டத்தின் பதினான்கு படலங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பவன் வீரசௌந்தரியம், பக்தி சௌந்தரியம், புலனடக்க சௌந்தரியம் ஆகிய மூன்றும் மிளிரும் அனுமன் சுந்தரனாகக் காட்சியளிக்கிறார். பிராட்டியைப் பொறுத்தவரை காட்சி, உருக்காட்டு, சூடாமணி ஆகிய மூன்று படலங்களில் தவசௌந்தரியத்துடன் காணப்படுகிறாள். எனவே, இக்காண்டம் சுந்தரகாண்டம் எனப் பெயர் பெறுவதற்கு முறையே அனுமனும் பிராட்டியும் காரணமாகின்றனர் என்கிறார்.

திருமகள் நிலையப் பதிப்பாக வந்த சுந்தரகாண்டத்திற்கு முன்னுரை எழுதிய துரை இராசாராம் அவர்கள் "கம்பராமாயணத்தில் கிட்கிந்தா காண்டத்திற்கு அடுத்து வருகிறது. இக்காண்டம், ஏனைய காண்டங்களுக்கு அக்காண்டத்தில் வரும் நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு பெயரிடப்பட்டது. இக்காண்டத்திற்கு "அழகு" என்ற பொருளில் சுந்தரகாண்டம் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. இராமன், சீதாப்பிராட்டி ஆகியோர் அழகு இக்காண்டத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதனால் இப்பெயர் வந்துள்ளது எனலாம். இராமாயணம் என்ற அழகான மணிமாலையில் நடுநாயகமாக இரத்தினப்பதக்கம் போன்று விளங்கும் இக்காண்டத்தில் அனுமன் பிரகாசிக்கிறான் என்பர். இக்காண்டத்தின் முதலிலிருந்து

இறுதிவரை அனுமனின் அறிவுக் கூர்மை, சாதூரியம், வீரம், வலிமை, பெருமை முதலியவைகளே மிக அழகாக வருணித்துச் சொல்லப்பட்டுள்ளன. மேலும் பகவானே அனுமனின் உதவியை நாடி செயல்புரிந்தான் என்பதும் இராம மந்திரத்தால் சீதாப்பிராட்டியின் உயிரைத் தந்தவன் என்பதும் ஆகிய அனுமனுடைய சிறப்புக்கள் இந்தக் காண்டத்தில் தான் சொல்லப்பட்டுள்ளன. இக்காண்டத்தின் காவிய நாயகன் அனுமனே. ஏனைய காண்டங்களில் காவியத் தலைவன் பகவான் இராமபிரான் எனின் இக்காண்டத்தின் கதைத் தலைவன் பாகவத உத்தமனான அனுமன் ஆவான் என்பர்.

ஆக, அனுமனைச் சுந்தரகாண்டத்தின் தலைவனாகக் கூறுவதற்கு இவர்கள் முன்வைக்கும் காரணங்கள் இரண்டு; ஒன்று இக்காண்டம் முழுவதும் நீக்கமற நிறைந்திருத்தல்; இரண்டு- பக்திச் சௌந்தரியம், தவச் சௌந்தரியம், வீரச் சௌந்தரியம் கொண்டு அனுமன் சுந்தரனாகத் திகழ்தல்.

கம்பராமாயணத்தைப் பொருத்தமட்டில் அனுமன் ஒரு தூதுவன். முதன் முதலில் திரிசடையின் கனவின் வழி புறநிலையில் இருந்த அனுமன் பாத்திரத்தை அகநிலைக்கு நகர்த்துகின்றார் கம்பர். செவியில் மெல்லென பொன் நிறத் தும்பி வந்து ஊதிப் போயதால் அந்த தும்பி 'உன் ஆவி நாயகன் தூது வந்து எதிரும் என்னுமால்' என்று உன் தலைவனின் தூதுவன் வருவதற்கான நற்குறி அடையாளமே இத்தும்பி என்று திரிசடை கூறுகின்றாள். தன்னை மாய்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சீதையைத் தடுக்கும் சூழலிலும் 'அண்டர் நாயகன் அருள் தூதன் யான்' (5249) என்றே அறிமுகப்படுத்திக் கொள்கின்றான்.

இராவணனையும் அவனது படையையும் அழித்துவிட்டு சீதையைக் கொண்டு அகல்தலே ஏற்புடையது என்று எண்ணிய அனுமன் தீர ஆலோசித்து 'ஆதலான் அமர்த்தொழில் அழகிற்று அன்று அருந்தூதன் ஆம் தன்மையே தூயது' என்ற முடிவுக்கு வருகின்றான்.

இராவணன் மனங்கொள்ளும்படி பல்வேறு அறங்களை எடுத்துக் காட்டிய பின்னர் "ஆதலால், தன் அரும்பெறல் செல்வமும், ஓது பல் கிளையும், உயிரும் பெற, சீதையைத் தருக" (5910) என அனுமன் தூதுரைத்த செய்தியைக் கம்பர் சிறப்பாகப் பதிவு செய்கின்றார். இராவணன் அனுமனைக் கொலை செய்ய துணிந்தபோதும் வீடணன் இராவணனைத் தடுத்து,

"மாதரைக் கொலை செய்தார்கள் உளர் எனவரினும் வந்த
தூதரைக் கொன்றுள்ளார்கள் யாவரே தொல்லை நல்லோர்"

என்று கூறுகின்றான்.

எனவே, அனுமன் ஒரு தூதுவன் மட்டுமே. தலைவன் எதிர்நிலை தலைவனிடம் தூதனுப்பி விட்டு தூதுவன் உடன் செல்லுதல் என்பது ஏற்புடையது ஆகாது. எனவே இராமனின் ஏவலைச் சிரமேற்கொண்டு அதைச் செவ்வனே செய்து முடித்த அனுமனை இக்காண்டத்தின் தலைவன் என்பது பொருந்துவதாக இல்லை.

சுந்தரகாண்டத்தின் பதினான்கு படலங்களில் காட்சிப்படலம், உருக்காட்டுப் படலம், சூடாமணிப்படலம் ஆகிய மூன்று படலங்களில் மட்டுமே சீதை காட்சியளிக்கின்றாள். காட்சிப் படலத்தில் சீதையின் தவசௌந்தரியத்தைக் கண்டு வியக்கும் அனுமன் இராமனிடமும் அதைக் குறிப்பிட்டுச் சொல்கின்றான். சீதையின் தவக்கோலம் என்பது கற்புக்கு அவள் வகுத்துக்கொண்ட காவல். அனுமன் இராமனிடம் கூறும்போது 'கனகக் கற்பகச் சோலை அங்கு அதனில் உம்பி புல்லினால் தொடுத்த தூய சாலையில் இருந்தாள். ஐய! 'தவம் செய்த தவமாம் தையல்' (6037) என்கிறான். இங்கு அனுமன் 'தவம் செய்த தவமாம் தையல்' என்று மட்டும் கூறியிருந்தால் சீதையின் தவசௌந்தரியத்தை வியந்ததாகக் கொண்டிருக்கலாம். ஆனால் அனுமன் 'உம்பி புல்லினால் தொடுத்த தூய சாலையில் இருந்தாள்' என்று கூறுவது இங்கு சிந்திக்கத்தக்கது.

இலக்குவன் புல்லினால் அமைத்த சாலையில் அவள் இருந்ததே அவளது தூய்மைக்கான அடையாளமாகப் பேசப்படுகிறது. ஆதனால்தான் தூயசாலை என்று அதற்கு அடைகொடுத்து தூய்மையைச் சாலைக்கு ஏற்றி அத்தகு சாலையில் இருந்த சீதை தூய்மையுடையவள் என்பதை அனுமன் குறிப்பிடுகின்றான்.

சீதையின் வடிவழகைக் குறிப்பிடும் சூழல் சுந்தரகாண்டத்தில் கம்பருக்கு வாய்க்கவே இல்லை. அதற்கு மாறாக, 'தேவுதெண் கடல் அமிழ்துகொண்டு அனங்கவேல் செய்த ஓவியம் புகையுண்டதே ஒக்கின்ற உருவாள்' என சீதையின் அழகை மறைத்துக் கூறவே விழைகின்றார். கணவனைப் பிரிந்திருக்கும் பெண்ணின் அலங்கோலமே அவளது அகத்தூய்மைக்கான அடையாளமாகக் கருதப்படுவதால் கம்பரும் இதனை மிகக் கவனமாகவே கையாள்கின்றார்.

மேற்கூறியவற்றை நோக்க சீதையின் இயற்கை அழகை மறைப்பதில் கம்பர் மிகவும் கவனமாக இருந்துள்ளார் என்பது புலனாகிறது. அசோகவனத்தில் சீதையின் இயற்கை அழகின் வெளிப்பாடு என்பது அவளது ஒழுக்கத்திற்கான இழுக்காக அமையும். எனவே எந்தச் சூழலிலும் சீதையின் அழகைக் காட்டும் முயற்சியைக் கம்பர் மேற்கொள்ளவில்லை. எனவே சுந்தரகாண்டம் என்னும் பெயருக்குக் காரணம் சீதையும் அல்லள் என்பது புலனாகும்.

அப்படியானால் சுந்தரகாண்டம் என்னும் பெயர்வரக் காரணமான சுந்தரம் எது? சேய்மையிலிருந்து இலங்கையை நோக்கும் அனுமனுக்கு விண்ணாட்டிற்கும் இலங்கைக்கும் எவ்வித வேறுபாடும் தென்படவில்லை. எனவேதான் தேவர் உலகு என்னும் மெல்லியள் தன்மேனி நோக்க வைக்கப்பட்ட கண்ணாடி என்று இலங்கையைக் கூறுகின்றான். தேவர் உலகின் பிம்பமாக இலங்கை அனுமனுக்குக் காட்சியளிக்கின்றது.

அடுத்து இலங்கை அழகைக் கூர்ந்து நோக்கி,

நல்நகர் அதனை நோக்கி பொன்னகர் இதனை ஒக்கும்
என்பது புல்லிது அம்மா (4832)

என்று கூறுகின்றான். நல்நகர் என்னும் சொல்லுக்கு உரையாசிரியர்கள் அழகிய நகரம் என்றே பொருள் கூறியிருப்பதும் இங்கு எண்ணத் தக்கது. 'தேவர்களின் அமராவதி நகரமானது இந்த இலங்கையைப் போன்றிருக்கும் என்று கூறுவது அறிவற்றது' என்கின்றான். அனுமன் முதலில் கண்டது விண்ணாடு அதனோடு தான் இலங்கையை ஒப்பிட்டுக் காட்டியிருக்க வேண்டும். ஆனால் 'இலங்கையைத் தேவர் பொன்னகர் ஒக்கும் என்பது புல்லிது அம்மா' என்று கூறுகின்றான்.

இலங்கையைக் கண்டபிறகுதான் துறக்க நாட்டிற்கான இலக்கணம் புரிகிறது அனுமனுக்கு. விரும்பிய பொருளை விரும்பியபடி பெற்று வெறுப்பில்லாமல் துய்த்து முடிவில்லா போக இன்பத்தைத் துய்க்கும் இடமே சுவர்க்க நகர். 'அருமறை துணிவும் அஃது. அப்படியானால் அந்த சுவர்க்கம் இலங்கைதான்.

வேண்டிய வேண்டின் எய்தி
வெறுப்பு இன்றி விழைந்து துய்க்கும்
ஈண்ட அரும் போக இன்பம்
ஈறு இலது யாண்டுக் கண்டம்?

ஆண்டது துறக்கம் அஃதே
அருமறைத் துணிவும் அம்மா (4833)

என்பது கம்பர் எண்ணம். அடுத்து இலங்கை நகரத்து மாடங்களைக் கண்ணுற்ற அனுமன் இனைய மாடங்கள் இந்திரற்கு அமைவர எடுத்த மனையின் மாட்சிய என்னின் அச்சொல்லும் மாசுண்ணும் (48141) என்கிறான். இங்கு இராவணனுடைய அரண்மனையை இந்திரன் அரண்மனைக்கு ஒப்பிடவில்லை. இலங்கையில் உள்ள சாதாரண மக்கள் வாழும் மாடிவீடுகள் இந்திரன் இருப்பதற்கு ஏற்ப கட்டப்பட்ட மாட்சிமை உடைய என்றால் அச்சொல் மாசுண்ணும். எனவே ஈரேழ் உலகங்களிலும் மாட்சிமையுடையதாகப் பேசப்பட்ட இந்திரன் அமராவதி இலங்கையின் சாமான்யரின் வீடுகளுக்கும் இணையாகாது என்கிறான். இந்நகரின் அமைப்பைக் கூறப்புகுந்த கம்பர். "பண்டு அராஅணைப் பள்ளியான் உந்தியில் பயந்த அண்டமேயும் ஒத்து இருந்தது இவ்அணிநகர் அமைதி" (4858) பாம்புப் படுக்கையில் உள்ள திருமால் முற்காலத்தில் தன்னுடைய உந்தியாலிருந்து வெளிப்படுத்திய பொன் முட்டையை ஒத்திருந்தது. அந்த அழகிய இலங்கை நகரம் என்கிறார்.

எவ்வளவு யதார்த்தமான பொருத்தமான உவமை. நீலக் கடலின் இடையிலே முட்டை வடிவில் பொன் மாடங்கள் கொண்ட இலங்கையைக் கார்வண்ணன் உந்தியில் எழுந்த பொன்முட்டை வடிவிலான அண்டத்திற்கு ஒப்பிட்டிருப்பது இங்கு எண்ணத்தக்கது. இவ்வழகிய நகரம் பிரம்ம தேவனின் மேற்பார்வையில் தேவதச்சன் பலநாள் உழன்று கட்டியது என்று குறிப்பிடுகின்றார். இலங்கையின் பேரழகை எல்லாம் கண்டு தெளிந்த பின் அனுமன் ஒரு முடிவுக்கு வருகின்றான்.

நரகம் ஒக்குமால் நல்நெடுந் துறக்கம் இந்நகர்க்கு(4848) என்கிறான்.

அழகிலே போகத்திலே தன்னிகரற்றதாக உலகங்கள் போற்றும் அமராவதியை இலங்கையோடு ஒப்பிட்டு அது நரகத்தை ஒத்திருக்கிறது என்கிறான் என்றால் ஒப்புயா;வற்ற பேரழகுடையது இலங்கை என்பதே அனுமன் வாயிலாக கம்பர் புலப்படுத்தும் பேருண்மை. இலங்கையின் அழகுக்கும் அம்மக்களின் பேரின்ப வாழ்வுக்கும் 'தவம்செய்த தவமால்' என்று கூறுகின்றார். ஆக தவங்கள் எல்லாம் கூடி தவம் செய்ததின் விளைவாக இலங்கை உருவானது என்று கூறி ஒருவாறு முடிக்கின்றார். அனைத்துக்கும் மேலாக ஊர்தேடும் படலத்தில் இலங்கைத்தேவி வாயிலாக இலங்கையைச்

சித்திர நகரம் என்று கம்பர் கூறுகின்றார். இதற்கு உரை கூறும் உரையாசிரியர் 'அழகிய நகரம்' என்றே கூறுகின்றார்.

இலங்கையின் அழகைக் கூறுவதில் ஓர் அழகிய படிமுறை வளர்ச்சியைக் கம்பர் படைத்துக் காட்டுகின்றார். முதல்நிலையில் 'விண்ணுலகு மெல்லியள் மேனி நோக்கும் கண்ணாடி இலங்கை என்று விண்ணுலகுக்கு இணையானதாக இலங்கையையும் காட்டுகின்றார்.

இரண்டாவது நிலையில் 'நாகர் பொன் நகர் இலங்கையை ஒக்கும் என்பது புல்லிது அம்ம' என்று இலங்கையோடு ஒப்பிடத் தக்கது அல்ல தேவர் உலகு என்று கூறுகின்றார். மூன்றாவது நிலையில் 'நரகம் ஒக்கும் நல்நெடும் துறக்கம் இந்நகர்க்கு' என்று முடிக்கின்றார்.

எனவே, மேற்கூறியவற்றை நோக்க ஒப்புவமையற்ற அழகும் ஈடுஇணையில்லா போகவாழ்வும் கொண்ட சித்திர நகரமான இலங்கைதான் கம்பர் கண்ட சுந்தரம்.

வால்மீகியும் கம்பரும் முதல் மற்றும் இறுதி காண்டங்களுக்கு நிகழ்வுகளின் அடிப்படையிலும் இடைநின்ற நான்கு காண்டங்களுக்குக் கதை நிகழ்களங்களின் அடிப்படையிலும் பெயரிட்டுள்ளனர். அயோத்தியில் நடந்த சம்பவங்களைக் கொண்ட காண்டம் அயோத்தி-காண்டம் என்றும், ஆரண்யத்தில் நடந்த சம்பவங்களைக் கூறும் காண்டம் ஆரண்ய காண்டம் என்று கிட்கிந்தை சம்பவங்களைப் பகரும் காண்டம் கிட்கிந்தா காண்டம் எனவும் வழங்கப்படுவது போல் இலங்கையில் நடந்த சம்பவங்களை உள்ளடக்கிய காண்டம் இலங்கை காண்டம் என்றுதான் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இலங்கை என்று எண்ணும்போது கம்பருக்கும் வால்மீகிக்கும் அதன் எழிலும் சௌந்தரியமும்தான் நினைவுக்கு வருகின்றன. எனவே இலங்கைக்காண்டம் எனப் பெயர் சூட்டுவதைக் காட்டிலும் சுந்தரகாண்டம் எனப் பெயர் சூட்டுவதே பொருத்தப்பாடுடையதாக இருக்கும் என்ற அவர்களுடைய எண்ணமே சுந்தரகாண்டம் எனப்பெயர் அமைவதற்குக் காரணம் எனலாம்.

கம்பன் 'இரணியன்கதை' பாடியதேன்?

முனைவர் அ.அறிவுநம்பி
பேராசிரியர், சுப்பிரமணியபாரதியார் தமிழியற்புலம், புதுவைப்பல்கலைக்கழகம்,
புதுச்சேரி.

தமிழ்க் கவிஞர்களுக்குள் 'கவிச்சக்கரவர்த்தி' என்ற அடைமொழிக்குரியவர் கம்பர். "புகழ்க்கம்பன் பிறந்த தமிழ்நாடு" எனப் பாட்டுக்கொரு புலவன் பாரதியும் போற்றுவார். வால்மீகி யாத்த வடபுல இராமாயணத்தைத் 'தழுவல்' நிலையில் தமிழுக்கு ஆக்கியவன் கம்பன். இது வழிநூலென்றபோதும் வெறும் மொழிபெயர்ப்பில்லை என்பதால், கம்பனுக்கு மூலநூலிலிருக்கும் பகுதிகள் சிலவற்றைச் சுருக்கவும், சிலவற்றைப் பெருக்கவும், சிலவற்றை நீக்கவும், தேவை கருதிப் புதிய பகுதிகளை இணைக்கவும் வாய்ப்புகள் அமைந்தன. கம்பன் தீட்டிய இராமகாதைச் சித்திரத்தில் காணப்பெறும் நாட்டு, நகர வருணனைகள் சோழநாட்டையும், தமிழக நகர்களையுமே முன்நிறுத்துகின்றன என்பர்.

எனவே, தமிழ் உள்ளங்கொண்டு கம்பன் காப்பியத்தை நெய்திருப்பதைப் பாரறியும். ஆதிகாவியமாக வான்மீகி தீட்டிய நூலில் இடம்பெறாத தமிழ்மரபுகள் கம்பராமாயணத்தில் பல உள. களவு - கற்புமுறையிலான தலைமக்கள் திருமணம், ஆசிரமத்துடன் சீதையை இராவணன் பெயர்த்துச் செல்வது போன்றவை பதச்சோறுகள். வான்மீகம் பாடாத 'இரணியன் கதை' கம்பனின் புது(மை)ப் படைப்பு. தமிழ் உளத்தனாகக் காப்பியத்தை உருவாக்கும் கம்பன் இரணியன் கதையை இணைத்திருப்பதைத் தமிழ்மயச் சிந்தனைகளுடன் உற்றுநோக்கினால் பல புதிய வெளிச்சங்கள் கிட்டும். அவற்றை இக்கட்டுரை முன்நிறுத்துகிறது.

தமிழ் மரபுகளுக்கு இணையான கதை

இராமகாதையின் பாவிகமாக 'அறம் வெல்லும்; பாவம் தோற்கும்' என்ற சொல்லாடலை முன்வைப்பர். ஆணவம் கொண்டு பாவம் செய்பவன் வயது, பட்டம், பதவி, புகழ் போன்றவற்றில் பெரியவனாக இருக்கலாம்; அறம் கூறுபவன் இவை ஏதுமில்லாதவனாகக்கூட இருக்கலாம். ஆனால் அறத்திற்கே வெற்றி என்பதைப் பழந்தமிழ்த் தொன்மங்கள், திருத்தலங்கள், தொண்டர்வாழ்வியல் போன்றவை முதன்மைப்படுத்தியுள்ளன. சில வருமாறு:

1. கற்றதினாலும், கவிவல்லமையாலும் ஓர் இனந்தெரியாத ஆணவத்தை ஔவைப்பிராட்டி சேகரித்திருந்தார். அந்த அகங்காரத்தை நீக்க முருகன் மாடுமேய்க்கும் சிறுவனாக வேடனிட்டமை புராணச் செய்தி. சூரபதுமனின் ஆணவத்தைப் போக்கக் கட்டிளம் காளையாக முருகன் தோன்றுவான். ஆனால் தமிழ்மூதாட்டிக்கு 'நாவற்கனி' மூலம் 'சுட்ட பழத்தை'ச் சுட்டிக் காட்டியவன் ஒரு சிறுவன். வயது முதிர்ந்த மூதாட்டியின் ஆணவம், குறைந்த வயதுடையவனால் அகற்றப்படுவது தமிழ்த்தொன்மம் ஆகும்.

2. 'தோடுடைய செவியனை' நேரிற்கண்டு, பதிகம் பாடியபோது திருஞானசம்பந்தர் மழலைச்சொல் மாறாத இளம்பிள்ளை. நிறைந்த வயதுடைய திருநாவுக்கரசருடன் தேவார அமுதத்தைப் பரிமாறியவர். தம் மதத்தைத் தூக்கிப்பிடித்த சமணர்களின் ஆணவத்தை 'வாதுப்போர்' வழியே துடைத்தெறிந்தவர். மதுரைமன்னனின் நோயினைச் சமணமுதியவர்களால் சரிப்படுத்த முடியாதபோது 'திருநீற்றுப் பெருமை' கூறிய பாலகனான சம்பந்தரே நோய்நீக்கினார் என்பது தமிழகப் புராணம்.

3. முருகனுக்குரிய ஆறுபடைவீடுகள் தமிழகத்தில் மட்டுமே உள. முருகனின் அளப்பரிய ஆற்றலைக்காட்ட அவை உதவும். உலகைப் புரக்கும் பரமசிவனுக்குப் பிரணவமந்திரத்தின் உட்பொருள் தெரியவில்லை என்னும்போது பாலகனாயிருக்கும் முருகன் ஆசான் ஆகிறான்; தந்தை மாணவன் ஆகிறார். சுவாமிக்குத் தெரியாததைப் பயிற்றுவிக்கும் நாதனாக இளஞ்சிறுவன் அமைய உருவான பதியே சுவாமிமலை. அப்பனுக்கே பாடம்சொன்ன சுப்பன் பாலபருவத்தான். இதுவும் தமிழ் மரபுக் கதையாடல்தான்.

இந்தத் தமிழ்மரபுச் சிந்தனைகளைக் கற்றவன் கம்பன். எனவே, தந்தையாயினும் வேறுமூத்தோராயினும், பழிவழி நடப்பின், பெற்றிமைமிக்க திருமகனோ, ஏனைய சிறுவனோ உண்மையை உணர்த்தலாமென்ற கருத்துருவைக் கம்பனால் உணரமுடிந்துள்ளது. எனவே மக்களுக்குப் பழகிப்போன கதைமுறைமையில் பாடஞ் சொல்லக் கவிச்சக்கரவர்த்தி முயல்கிறார். அவ்வாறான ஒரு கதையைத் தம் காப்பியத்தில் கம்பன் பதியனிட முயற்சிக்கும்போது வாய்ப்பாயமைந்த கதைதான் 'இரணியன் கதை'. நரசிம்மர் அவதாரக்கதை வேற்றுமொழியில் அமைந்திருந்தாலும் தமிழ்மரபின் பின்புலத்தில் அக்கதை - கறையுடைப் பெரியோரைக் குறுவயதினர்

திருத்தும் முறைமைகொண்டு - செதுக்கப் பெற்றிருப்பதை உய்த்துணர வேண்டும்.

ஆழ்வார் முன்னோடி; கம்பன் பின்னோடி

அருந்தமிழை அதன் முனைமுறியாமல் பாடியவர்கள் ஆழ்வார்கள். தமிழ்மயமாக ஒளிர்ந்த ஆழ்வார்களில் ஆழ்ந்தவன் கம்பன். இப்படி ஆழ்வார்கடலில் ஆழ்வாரான கம்பன் கண்டெடுத்த நன்முத்தே இரணியன் கதை. கம்பனுக்கு முன் சிலம்பில், பரிபாடல் போன்றவற்றில் ஆணவத்தையழித்த கண்ணன் உண்டு; மூன்றடி மண்கேட்ட வாமனன் உண்டு. பிறவும் உண்டு. இவற்றையெல்லாம் புறந்தள்ளிய கம்பன் ஆழ்வார்கள் பாடியதாகவும், தமிழ்மரபை ஒட்டியதாகவும் அமையும் இரணியன் கதையைத் தேர்ந்தமை ஒரு தற்செயல் நிகழ்வில்லை. தமிழாய் ஒளிரும் கம்பனின் செய்நேர்த்தி என்றே சொல்ல வேண்டும்.

சிலப்பதிகாரத்தின் ஆய்ச்சியர்குரவையே ஆண்டாள் திருப்பாவையை எழுத வழிகாட்டியது என வ.சுப. மாணிக்கனார் கூறுவார். அவ்வகையில் கூறுவதானால் ஆழ்வார்களின் இரணியன் கதையாடலே இரணியன் - பிரகலாதன் பற்றிய கம்பனின் படலங்களுக்கு வித்திட்டது எனலாம். கம்பனுக்கு முன்னும் பின்னும் தமிழிலக்கியங்களில் பதிவாகியுள்ள ஓர் உத்தியை இங்கே கவனிக்க வேண்டும். மணிமேகலையில் அமுதசுரபியில் முதற்பிச்சையிட்டவளாக ஆதிரையை அறிமுகம் செய்குவார் சாத்தனார். அத்தோடு நிற்காமல் சாதுவன் பற்றி நிரம்பப் பேசுவது கூடுதற்பணி. சாதுவன் பற்றிய புனைவுகளை நீக்கிவிட்டாற்கூடக் காப்பியத்திற்கு ஏதும் சேதாரமில்லை. ஓட்டம் எதுவும் தடைபெறாது. ஆனால் கள்ளுண்ணாமை, புலால் மறுப்பின் தேவை, பிற உயிர்க்கும் தீமை தாராமை போன்ற சிந்தனைகளை ஆணித்தரமாக மொழியச் சாதுவனின் நாகர்வாழ்மலைப் பயணம் சித்திரிக்கப்பெறும். கம்பனுக்குப்பின் மனோன்மணீயம் நாடகத்தின் உள்ளே 'சிவகாமி சரிதம்' இடம்பெறுவதும் அப்படியே. சுந்தரனாரின் சிவம்பெருக்கும் சீலத்துக்காகவே அப்பகுதி இணைவானது. கம்பனுக்கு ஆழ்வார்கள் விருந்து தந்தவை பல. ஓரிரு சொற்களில் அல்லது ஓரிரு வரிகளில் மட்டுமே தமிழ் இலக்கியங்கள் சுட்டிக்காட்டிய நரசிம்மப் பிறப்பை நீண்டதாகக் கம்பன் பாட நேர்ந்ததைக் கணக்கிலெடுக்க வேண்டும். ஆழ்வார் தமிழை முகர்ந்த கம்பனின் ஓர் அகப்பைப் பரிமாறலே இரணியன் கதை.

கம்பன் – ஒரு புதிய முன் மாதிரி

ஆணவம்கூட ஒருவகையில் பாவம்தான். அதைவேரறுப்பதற்கு முன்நிற்பது அறம்தான். இதனை ஒப்பீட்டு நிலையில் புரியவைத்தவன் கம்பன். காப்பியத்தில் அமைந்துள்ள நான்கு குடும்பங்களின் தந்தை - மகன் உறவை அடுக்கிவைத்துப் பார்த்தால் இஃது எளிதில் புலனாகும். தயரதன் ஆணவத்தானில்லை. எனவே இராமனுக்கு எதிர்வினையாற்ற வேண்டிய தேவையில்லாமல் போனது. வாலி - அங்கதன் உறவு குறிக்கத்தக்கது. தந்தையின் முறையற்ற செயல்பாடுகளை நேரிற்கண்டும் அவற்றைக் கருதத் துணியாதவனாக அங்கதன் உள்ளான். அரசுப் பதவிக்காகத் தம்பியை விரட்டுவதுகூடக் குரக்கினத் தன்மை எனக் கொள்ளலாம். தம்பியின் மனைவியைக் கவருவது ஏற்புடையதன்று. குரக்கினமானாலும் கவிக்குநாயகனாக இலங்கும் அனுமனைப் போன்றிருக்க அங்கதனுக்கு வாய்ப்பிருந்தது. ஆனால் தந்தையை நோக்கி ஒருசொல்கூட எதிர்ப்பாக உதிர்க்காதவனாகிப் போனான் அங்கதன். விவாதத்திற்குரிய அடுத்த இணை: இராவணன் - இந்திரசித்து. தந்தையின் தவறுகளைத் தவறென எண்ணாமையும் தந்தைக்கு ஆதரவாகச் செயலாற்றியமையும் இந்திரசித்தின் சரிவுக்குக் காரணங்கள் எனலாம். இராவணனுக்காக இந்திரசித்து போரிட்டதற்கும் செஞ்சோற்றுக்கடனுக்காகக் கும்பகருணன் போரிட்டதற்கும் வேறுபாடுண்டு. முன்னது உடல் பலத்தையும், செருக்கையும் மூலதனமாகக் கொண்டது. பாசத்தையும் கடமையையும் அடிநாதமாகக் கொண்டது பின்னது. சொந்த அறிவு தடுமாறும்போது நல்லோரின் கருத்துரைகளால் ஒருவன் நற்பாதையைத் தேரமுடியும். மாலியவான் ஒருபக்கம்; வீடணன் மறுபக்கம். இப்படித் திசைதோறும் வழிகாட்டுநர் இருந்தும் தீயவழித் தந்தைக்குத் துணைபோனான் இந்திரசித்தன். ஆணவம் நிறைந்த தந்தையரின் பிழைகளைத் திருத்த வேண்டிய மகன்கள் முறையாகச் செயல்படாமையே அப்பேரரசர்களின் நிழ்ச்சிக்குக் காரணமானது.

தமிழாழ்வார் வார்த்துத்தந்த இரணியன்வதைக் கதை கம்பனுக்கு வழிதந்தது. ஏனைய மகன்கள் வயதில் மூத்தோராக உள்ள நிலையில் மழலை மாறாப் பள்ளிச்சிறுவனான பிரகலாதன் தந்தைக்கு அறத்தை, அறமூர்த்தியை உணர்த்துவது முற்றிலும் புதிய படலம். 'தந்தைசொல் மிக்க மந்திரமில்லை' என்பதை மறுதலிக்க வேண்டிய தேவை பிரகலாதனுக்கு ஏற்பட்டது. 'தன்னை மகேசனாகக் கருதித் தன் பெயரை மந்திரமாக ஒலிக்க வேண்டுமென' வற்புறுத்திய தந்தைக்கு எதிரணியில்;

அறத்தின் சார்புடன் நிற்கவேண்டியதானது. 'ஞானி' எனவும் நிறை அறிவாளன் எனவும் பிரகலாதனைப் புனையும் கம்பனின் எழுதுகோல் சிவனுக்குப் பாடம் சொன்ன செவ்வேளையும், ஔவைக்குப் பாடம் கூறிய வேலனையும், தீட்டிய எழுதுகோலாகவே தென்படுகின்றது. நன்மை தீமைகளை இனங்காணக்கூடிய காளைப்பருவ மகன்கள் தடுமாறிய காப்பியத்தில் ஐந்துவயதுப் பாலகனின் அரும்பணியை அழுத்தமாகவும் அடர்த்தியாகவும் உணர்த்திக்காட்டக் கம்பன் கரம் தீட்டிய புதிய சித்திரமாகவே இரணியன் கதை பொதியப்பெற்றுள்ளது.

கம்பனின் புலப்படுத்தம்

அருளாளர் பக்கம் இறைவன் இருப்பானேயன்றி அக்கிரமத்தார் பக்கம் உறைவதில்லை. இதனை உணரக் கம்பனுக்குத் தமிழ்ப் புராணங்கள் உதவின. அதிகாரம், ஆட்சி, அளக்கமுடியாச் செல்வம் ஆகியவற்றைப் பெற்ற அரசனொருவன் வைரத்தை இழைத்து, மாணிக்கம் சேர்த்து அழகுறு ஆலயம் எழுப்பினான். ஊனுடம்பு ஆலயமென்பதால் உள்ளத்தில் ஒருவன் கோயில் கட்டினான். ஒரே நாளில் குடமுழுக்கு. ஆலவாயண்ணல் அரசன் கோவிலைவிட்டுவிட்டுப் பூசலாரின் அகக்கோவிலுக்குள் எழுந்தருளியதாக வரும் புராணஓவியம் கம்பனின் மனத்துக்குள் படியிறக்கம் செய்யப்பெற்றது. 'ஆதிமூலமே' என்று விலங்கினம் அழைத்தவுடனேயே அங்கே தோன்றி இடுக்கண் களைந்தவன் இறைவன். பாலகன் அழைத்தால் தூணுக்குள்ளேயும் தோன்றுவான் என்பதுதான் பிரகலாதத் தத்துவம். எனவேதான் சீர்காழியில் ஞானக்கொழுந்து அழுதபோது தோன்றிய பிறைசூடனைப்போலத் தூணுக்கு முன்நின்று அறம்பேசியவனுக்காகப் புதுஅவதாரத்தில் திருமால் தோன்றும் காட்சி இடம் பெறுகின்றது.

மெய்யன்பர் அழைப்பை ஏற்பவன் இறைவன் எனக்காட்டக் கம்பன் சிவனை எடுத்துரைக்க வாய்ப்பிருந்தது. ஆனால், திருமாலின் ஓர் அவதாரத்தைப் புனைய என்ன காரணம்? இராவணன் சிவத் தொண்டன். ஏற்கனவே அகந்தையால் கயிலையைத் தூக்க நினைத்து அகப்பட்டவன். சிவன் கண்டிப்பானே தவிரத் தண்டிக்க மாட்டான் என எண்ணுபவன். எனவே சிவபெருமானைப் பற்றியவை அவன் காதில் ஏறா. சங்கரன் தந்த வாளுடன் உலவிய இராவணன் அச்சப்பட வேண்டுமாயின் வேறோர் எடுத்துக்காட்டலே உகந்தது என்பது கம்பனியம். அதனால் கடவுளர் துணைகொண்ட இராவணனின் ஆணவத்தைவிடவும் கடவுளாகவே தன்னை எண்ணிய இரணியனின்

ஆணவம் விரிந்தது பரந்தது என்பதைச் சுட்டிக்காட்டும் கருவியாகவே இராவணனுக்கு இரணியன் கதை இயம்பப்பெற்றது. மனிதனாகவும் மிருகமாகவும் அல்லாமல் தோன்றி, ஆயுதங்கள் எதனையும் கையாளாமல், பகலுமாயும் இரவாயும் அல்லாத காலத்தில் இரணியன் பலியாகிறான். இப்படிச் 'சாதுர்யமான' வரங்களைப் பெறாத இராவணன், இரணியன் கதையைச் செவியுற்றாலாவது மனம் மாற வேண்டுமென்பதே காப்பியத்தின் விழைவு. எப்படி வேண்டுமானாலும், எந்தக்காலத்தில் வேண்டுமானாலும், எப்பொருளுக்குள்ளிருந்தும் இறைவன் தோற்றங்காட்டுவான் என்பதை "எல்லையொன்றின்மை எனும் பொருளாகக்" கம்பன் வரைந்து காட்டும் பகுதியே இரணியன் கதை. அணுவைச் சதகூறாக்கினாலும் அவற்றில் உறைபவன் ஆண்டவன் எனும் மெய்ப்பொருளைக் கம்பன் நல்குகிறான். 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டியதாகப்' பாடும் வரியும், 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்ற தொடரும் தமிழ்ச் சான்றோரின் பங்களிப்புகள்தாமே. தமிழ் மரபு ஒளிபாய்ச்சிய பாதையில் கம்பனின் பயணம் தொடர்ந்துள்ளது என்பதற்கு இரணியன் கதை ஒரு நற்சான்று. தேனில் பலவகை உண்டு - கொம்புத்தேன், மலைத்தேன் என்றவாறு; அப்படி தமிழ்ப்பூக்களில் கம்பன் திரட்டிய தேன் ஒருவகை. அதுவே, கம்பன் இரணியன்கதை பாடிய தேன்.

வளைந்த வில்லும் வளையாத மரபும்

திருமிகு. சு.சிவசந்திரகுமார்
முனைவர் பட்ட ஆய்வாளர், சுப்பிரமணியபாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப்பல்கலைக்கழகம், புதுச்சேரி.

நுழைவு

பெண்டிருக்கும், பொன்போற்புதல்வரைப் பெறாதிருப்போருக்கும் போரிலிருந்து விலக்கமளித்தது தமிழகப் போர்மரபு; அதனால் பெண்கொலை புரிந்த நன்னனைப் பாடாத பெருமைக்குரியது பாண்மரபு; கண்ணகியின் கற்புக்கனலில் இருந்து பெண்களைப் காப்பாற்றியது காப்பிய மரபு; இத்தகைய மரபுகளை உள்வாங்கிய கம்பனா காப்பியத்தலைவனைப் பெண்கொலை புரியச் செய்தான் என்று எண்ணும்போது வியப்பளிக்கிறது.

அரைக்குமேல் ஆடையில்லாத ஆதவன் மனைவியை ஆன்ற கற்பினள் ஆக்கிய கம்பனுக்குத் தாடகையைத் தயரதன் மகன் கொல்லவில்லை என்று சொல்ல எத்தனை நேரமாகிவிடும்? இருப்பினும் உன்னத இராமனைப் பெண் கொலை புரியச் செய்ததாகக் கம்பன் பாட ஏதேனும் காரணம் இருக்கவேண்டும். அது என்ன என்பதை எடுத்துச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தோரணம்

'உலகம் யாவையும்' எனத் தொடங்கும் முதற்பா, பாட்டியல் மரபைக் காக்கின்றது. சீதை இராமன் காதல் மணம், தாரையின் விதவை நிலை போன்ற இன்னும் பிற கம்பராமாயணத்தில் இடம் பெறும் சங்க இலக்கிய மரபுகள் எனக் குறிப்பிடுகிறார் மா.சுசீலா.(மா.சுசீலா, கம்பராமாயணத்தில் சங்க இலக்கிய மரபுகள், ப. 51.)

கம்பராமாயணத்தில் தாடகை வதைப் படலம் கன்னிப் போர். இங்குத் தாடகை பெண் என்பதைக் கம்பன் மறந்தான் என்று கொள்வதற்கில்லை. ஆனால் பெண்ணிற்கான இலக்கணம் தாடகைக்குப் பொருந்தாது அவள் முனிவர்களையும், மனிதர்களையும் உண்ணும் கொடிய செயலைச் செய்பவள். எனவே, அவளைக் கொல்லலாம் என்பதுதான் கம்பனின் அறம்.

தாடகை வதைப்படலத்தின் மிகைப் பாடல்களில் விசுவாமித்திரன் தருவதாக வரும் பெண் கொலைக்குரிய பட்டியல் குறிக்கத்தக்கது

அதாவது, இராமனே முன்பு நேமியனாக இருந்தபோது கியாதியைக் கொன்றதும், இந்திரன் குமதியைக் கொன்றதும், பரசுராமன் தன்னுடைய தாயைக் , கொன்றதும், கண்ணன் பெண் கொலையைச் செய்ததும் ஆரியமரபுடன் தொடர்புடையன. தமிழில் இந்தப் பின்னணியிலேயே தொல்காப்பியர் குறிப்பிடும் "மகன் வினை கிளப்பின் முதனிலை யியற்றே" என்ற நூற்பவை(தொல்.எழுத்து:356) நோக்கவேண்டுமென்பார் நா.செல்வராசு. (பக்தவத்சல பாரதி, இரா.சம்பத் (பதி.ஆ)., பெண்ணிய ஆய்வுகள், ப.97.)

இதனைத் 'தாய்க் கொலை' 'மகன்றாய்க் கலகம்' என்றெல்லாம் உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனரேயன்றித் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. எனில் இங்கு இடர்ப்பாடான விடயம் என்னவென்றால் தாடகை அரக்கியர் குலம், அவளைக் கொல்வதில் எந்தவொரு அறமும் குறைபடாது. என்பது கம்பனின் கருத்தாகக் கருதுகின்றனர் ஆய்வாளர்கள். ஆயினும் இதே கம்பன் சுந்தரகாண்டத்தில் வரும் சூடாமணிப்படலத்தில் அனுமன் சீதையிடம்,

'அடியேன் தோள்மிசை கடிது ஏறு'(5354) என்று குறிப்பிடுவதாகச் சொல்கிறார். இதற்குப் பல காரணங்களால் மறுப்புச் செய்த சீதை இறுதியாக ஒன்றைக் குறிப்பிடுவதாகக் கம்பர் சொல்கிறார்.

"வேறும் உரை உண்டு; கேள் அது மெய்ம்மையோர்!
ஏறு சேவகன் மேனி அல்லால்; இடை
ஆறும் ஐம்பொறி நின்னையும் 'ஆண்' எனக்
கூறும், இவ் உருத் தீண்டுதல் கூடுமோ?" (5363)

இப்பாடலிலிருந்து குரங்கினமே ஆனாலும் நீயும் ஓர்ஆணாகவே கொள்ளப் பெறுவாய் என்று காப்பியத் தலைவியின் கற்புத் திறத்தைக் காப்பாற்றுகிறார் கம்பர். அதே கம்பர் காப்பியத் தலைவன் தயரதன் மகனுக்குத் தாடகை வதைப்படலத்தில் அரக்கியே ஆனாலும் அவளும் பெண் என்று சொல்லவில்லை என்ற கருத்து உற்று நோக்குதற்குரியது.

தாடகை வதைப்படலத்தின்போது வேள்வி காக்க இராமனை அழைத்துச் சென்ற கௌசிகன் தாடகையைக் காட்டி 'இவளைக் கொல்' என்று பணித்தார். இவ்வாணையைக் கேட்ட பிறகும் இராமன், 'இவள் ஒரு பெண்' என்று தயக்கம் காட்டுகிறான் அத்தயக்கத்தைக் கண்ட கௌசிகன் 'தீமை யாவற்றையும் செய்தவள் இவள்; எம் போன்ற முனிவரைக் கொல்லாமல் விட்டு வைப்பதற்குக் காரணம் யாதெனில் எங்களை எல்லாம் 'சக்கை' என்று கருதி விட்டாள். இக்கொடியவளைப்

பெண் என்று சொல்லுதல் கூடாது. இந்தப் பூமியில் அறத்தைக் கெடுத்து நின்றவருக்குப் பெண்மை என்பதுவும் வேண்டுமோ. உயிர்களைத் தின்னும் இவளைப் பெண் என இரக்கம் காட்டுவது இழிவாகும். நான் இவள் மீது கோபம் கொண்டு சொல்லவில்லை. அறத்தை ஆராய்ந்தே கூறுகிறேன். 'இவளைக் கொல்க' என்று கூறினான். எனவே பழியை முனிவன் மீது இராமன் மூலம் தள்ளி விட்டே கம்பன் தாடகை மீது கணை தொடுக்க ஆவண செய்கிறான். இதைக் கூறிக் கணை தொடுக்கும் இராமன் எப்படிப்பட்டவன் என்பதை வேள்விப் படலத்தில் குறிப்பிடும் போது,

"கண்டதிறத்து இது கைதவம்; ஐயா!
கொண்டல் நிறக் குறள் என்பது கொள்ளேல்;
அண்டமும் முற்றும் அகண்டமும் மேல்நாள்;
உண்டவன் ஆம்; இது உணர்ந்து கொள் என்றான்" (418)

என்று குறிப்பிடுகின்றார். சில உயிர்களை உண்ட குற்றத்திற்காகத் தாடகையை வதம் செய்த இராமன் அண்டமும் முற்றும் அகண்டமும் மேல்நாள் உண்டவன் ஆம்; என்று எதிர் கேள்வி கேட்பவர்கள் கம்பனிடம் தோற்கத்தான் வேண்டும். தொல்காப்பியரின் மாட்டேற்று உத்தியை மாசறக் கற்ற கம்பன் இதற்கான காரணத்தைத் தன் கிட்கிந்தா காண்ட வாலி வதைப்படலத்தில் கூறுகிறான்.

விளைவு

"இணையது ஆதலின், எக்குலத்து யாவர்க்கும்
வினையினால் வரும் மேன்மையும், கீழ்மையும்
அனைய தன்மை அறிந்தும் அழித்தனை
மனையின் மாட்சி என்றான் மனு நீதியான்" (4057)

இப்பாடலில் வரும் "எக்குலத்து யாவர்க்கும்' என்னும் தொடரானது சிந்திக்கத்தக்கது. இதன் மூலமாக முன்பு பால காண்டத்தில் தாடகையைக் கொன்றதற்கான நியாயத்தை இங்கே குறிப்பிடுகின்றார். "எக்குலத்து யாவர்க்கும்" எனும் சொல்லில் சூக்குமத்தை வைத்துள்ளார் கம்பர். 'எக்குலத்தும்' இணையாத இறையருளின் தெய்வத்தன்மையைக் கருடன் இராமனைத் துதித்து வெளியிடுவதாக அமையும் பகுதியால் உணரலாம்.

இப்பகுதியில் இருந்து இராமனது தெய்வத்தன்மை அவனுக்குத் தெரியாது. பிறர் அவன் பெருமையைப் பேசும்போதுதான் அது அவனுக்குப் புரியும். இது கம்பராமாயணம் முழுவதிலும் அமைந்ததொரு

தன்மை என உணரலாம். இப்பகுதியில் கம்பனால் 'அதிரேகமாயைப்' பேசப்படுவதாகக் குறிப்பிடுவார் பிரணதார்த்திஹரன். (முதுகலை வகுப்பில் கூறக் கேட்டது-அமெரிக்கன் கல்லூரி, மதுரை)

இதன்படி இறைவனுக்கு உயிர்களாகிய நம்மைத் தெரியும். ஆனால் உயிர்களாகிய நமக்கு இறைவனைத் தெரியாது. இதுதான் அதிரேகமாயை எனப்படும். இதனை, அறிந்த வாலிதான் தாடகைக்கும் சேர்த்துப் பதில் கூறுகிறான்.

"இரந்தனன் பின்னு மெந்தை யாவது மெண்ணல் தேற்றாக்
குரங்கெனக் கருதி நாயேன் கூறிய மனத்துக் கொள்ளேல்,
அரந்தைவெம் பிறவி யெம்னோய்க கருமருந் தனையவையா
வரந்தரு வள்ளா லொன்று கேளென மறித்துக் சொல்வான்"(365)

மேற்கண்ட பாடலின் மூன்றாம்அடியின் பொருள் "வருத்தத்தைச் செய்கின்ற எனது பிறப்பாகிய கொடிய வியாதிக்கு அருமையான ஔடதம் போன்ற ஐயா! என்பதாம். தயங்கியும், மறைந்தும் பிறப்பாகிய கொடிய வியாதிக்கு அருமந்தாவது ஆதவனின் அம்புதான் என்பதை அறிந்தே அடிக்கு அடி, வரிக்குவரி, சொல்லுக்குச் சொல் சொற் செட்டுகளைச் செருகி வைத்துள்ளான் கம்பன் என்பது இதன் மூலம் புலப்படும்.

அடைவு

தாடகை வதைப் படலத்தில் பெண்கொலை செய்பவனாக இராமன் படைக்கப்பட்டுள்ளான் என்பர். அதற்குக் கம்பன் 'இவள் பெண் அல்லள்;' பெண்ணுக்கான இலக்கணம் இவளுக்குப் பொருந்தாது இவள் ஓர் அரக்கி; இவளைக் கொல்லலாம் என்று விசுவாமித்திரன் குறிப்பிடுவதாகக் காட்சிகள் இடம்பெறும். இருப்பினும் முனிவர் சொல்வதாலே தாடகையைக் கொல்கிறேன் என்று கூறித் தயங்கியே அம்பெய்தி இராமன் வதம் செய்வதாகக் காட்டியுள்ளார் கம்பர். பின் வாலி வதைப்படலத்தின்போது தான் 'எக்குலத்து யாவர்க்கும்' என்னும் உன்னதக் கருத்தை வெளியிடுகின்றார். இதை ஏன் தாடகை வதைப் படலத்திலேயே சொல்லியிருக்கக்கூடாது எனில் வதைப்பதற்குரிய பாத்திரங்களில் முரண்பாடான இரு பாத்திரங்கள் 1)தாடகை 2)வாலி எனவே அதற்கான காரணத்தைப் பாலகாண்டத்தில் கூறிவிட்டால் அதே காரணத்தை மீளவும் வாலிவதைக்குப்பின் எடுத்துரைக்க வேண்டி வரும். எனவேதான் கிட்கிந்தாகாண்டத்தில் இன்னொரு வதையையும் இராமன் நடத்திக் காட்டிய பின் கம்பன் விளக்கம் தருகின்றார்.

கம்பனில் பெண்ணியம்

திருமிகு. ஜோ.ஜெயசீலி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
திருவண்ணாமலை.

"கம்பனில் பெண்ணியம்" என்ற இவ்வாய்வு கம்பராமாயணத்தில் இடம் பெற்றுள்ள பெண்மை பற்றிய, கம்பனின் மதிப்பீடுகளைப் பகுப்பாய்வு செய்து நிறுவும் நோக்கில் அமைகிறது.

கம்பனின் பார்வை

தமிழகத்தின் சமூகஅமைப்பில் நீண்ட நெடுங்காலம் பெண்மைக்கு எவ்வித உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதும், பெண் என்பவள் ஆண்களின் இன்பத்திற்கு இரை போடுபவளாகவே கருதப்பட்டு வந்தாள் என்பதும் கல்வி உரிமை, சொத்துரிமை, கணவனைத் தேர்ந்துகொள்ளும் உரிமை எதுவும் சமூகத்தில் வழங்கப்பட்டிருக்கவில்லை என்பதும், இதற்கான முயற்சியாக பெண் உரிமை வேண்டும் என்ற எண்ணம் சில கவிஞர்கள் உள்ளத்தில் வேர்விட்டிருந்தாலும் சமூகமரபு மற்றும் போக்கில் அவர்களால் பெரிதாக எதுவும் சாதிக்க முடியவில்லை.

வள்ளுவரும், இளங்கோவும் தங்களின் பல்வேறு சிந்தனைகளிடையே பெண்மை வாழ்வில் சிறு ஒளிக்கீற்றுகள் பாய்ச்ச முயன்றனர். ஆயினும் கம்பன் மட்டும்தான் பெண்மையைத் தன் கருத்தில் முன்னிறுத்தி அதற்கு ஒளியூட்டும் காவியக் களமாக கம்பராமாயணத்தை அமைத்துக்கொண்டான். ஆடவர்களின் ஒழுக்கத்தை நிலைநிறுத்தவும், பெண்மைக்கு உரிமைகள் வழங்கவும் ஏற்ற கதை இதுவென கருதினான்.

கம்பனின் பெண்ணியக் கூறுகள்

கம்பன் தன் காவியத்தில் வடித்த சீதை எனும் பாத்திரம் பயின்றுவரும் சில பகுதிகளின் பெண்ணிய ஆய்வுக் கூறுகளை காணலாம்.

பெண்ணின உரிமைகள்

நகரப் படலத்தில் "கல்லாது நிற்பார் பிறர் இன்மையின்" (க.166) என்ற பதிவால் ஆண்பெண் பேதமின்றி அனைவரும் கற்றவர் என்பது தெளிவாகிறது. அவ்வாறே, 'கல்லாது நிற்பார்" என்ற தொடர்

ஆண்களை மட்டுமே குறித்துவிடக் கூடுமென்றெண்ணி நாட்டுப் படலத்தில்,

"பெருந்த டங்கண் பிறை நுதலார்க்கு எலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்" (க. 69)

என்ற வரிகளில், 'பிறை நுதலார்க்கு எலாம்' என்பதன்வழி பெண்கள் எல்லார்க்கும் கல்வி நிரம்பியிருந்தமையும் கல்வியோடு சொத்துரிமையிலும் அவர்கள் உரிய பங்கு பெற்றிருந்தமையையும் 'பொருந்து செல்வமும்' என்ற தொடரால் நிலைநாட்டுகின்றான்.

மேலும் 'எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாமே' என்ற வரிகளும் இவற்றுக்கு அரண் சேர்ப்பவையாக நிற்கிறது.

பெண்ணின் குணநலன்கள்

பேதமை

சுந்தர காண்டம் காட்சிப் படலத்தில் துயருற்றிருந்த சீதைக்கு விரைவில் நன்மைகள் வந்து சேரவுள்ளன எனத் திரிசடை, தான் கண்ட கனவின் பலனை கூறும்போது அக்கனவின் முழு விவரம் அறியமுற்பட்டு, திரிசடை சீதை துயிலெழுப்பியதால் தான், தொடர்ந்து கனவு காண வாய்ப்பில்லாமல் போயிற்று என்றாள். இதைக் கேட்ட சீதை போய் படுத்துறங்கி மீதிக் கனவுகளை கண்டு சொல் என வேண்டுகிறாள்.

'இன்னமும் துயில்க என இருகை கூப்பினாள்" (க.5121)

இதில் சீதையின் பேதமை தெளிவாக தெரிவதை காணலாம்.

அறிவு நிறைந்த பெண்மை

ஆயிரம் துன்பங்களிடையே மாற்றான் சிறையிலிருந்து விடுபட்டு, எங்ஙனமாயினும் தன் கணவனைச் சென்று சேர்தல் வேண்டும் என்று துடித்து நிற்பவள் சீதை. அக்கணத்தில் அனுமன் வேண்டிய நிலை, சிறை மீளும் அரிய வாய்ப்பு மற்றும் எளிதில் அதை நிறைவேற்றும் ஆற்றலுடையவன் அனுமன் என்ற நிலை இருப்பினும், பெண்ணின் பேதைமையிலிருந்து அறிவு புறப்பட்டு மேல் எழுதலை கம்பன் இனம் காட்டுகிறான்.

'உரியது அன்று என ஓர்கின்றது உண்டு அது என்
பெரிய பேதைமைச் சில்மதிப் பெண்மையால்" (க.5356)

என்ற கம்பன் வரிகள் அழகும் ஆழமும் நுட்பமும் செறிந்தனவாக

அமைகின்றன. பேரறிவு படைத்த ஆண்மகன் அனுமனுக்கு, பெரிய பேதைமையும், சிறிய அறிவும் படைத்த பெண்மை அறிவுரை கூறும் அழகைக் காண முடிகிறது.

நல்லெண்ணம்

'வேலையின் இடையே வந்து வெய்யவர்
------------ சாலவும் தருமாறும் தனிமையோய்" (க.5357)

என்ற கவிவரிகளில் தனக்கு உதவவரும் அனுமனை அரக்கர்கள் தாக்க முனைந்தால் தனிமையாய்த் தடுமாறும் நிலை ஏற்படும் என்ற குறிப்பால் பெண்மையின் நல்லெண்ணம் மேலோங்கி இருப்பதை காண முடிகிறது.

அறிவு தடுமாறும் பெருங்குணம்

அனுமனுக்கு அறிவு புகட்டும்விதமாக, "நீ என்னைப் பத்திரமாக மீட்டாலும், அப்போதும் குறைகள் வந்து சேரும். என்னை மீட்கும் ஆற்றலும், பொறுப்பும் என் கணவன் இராமனுக்கு உண்டு. அச்செயலை நீ நிகழ்த்தினால் மனைவியை மீட்க இயலாதவன் என்ற தாழ்வு வந்து சேரும்" என அன்புடன் அறிவுரை கூறி, தன் கணவனின் பெருமையையும், அறிவு தடுமாறாத தன் பெருங்குணத்தையும் சீதை தற்காத்துக் கொண்டதைப் பின்வரும்

'அன்றியும் பிறிது உள்ளது ஒன்று ஆரியன்
-------------------- நின்ற வஞ்சம் நீயும் நினைத்தியோ?" (க.5358)

என்ற கம்பனின் வரிகளினால் அறியலாம்.

பெண்மையின் பெருமிதம்

'தோள் மேல் ஏறுக" என்று அனுமன் வேண்டிய உடன் சீதை நெஞ்சில் தோன்றிய பெண்மை உணர்வை உடனே வெளிக்காட்டாது பக்குவமாக, பல கூற்றுகளை கூறிய பிறகு என் கணவனை மட்டுமே தீண்டிய யான், உலகத்தார் பார்வையில் ஐம்பொறிகளும் வளர்ச்சி பெற்ற ஓர் ஆண்மகனாகத் திகழும் உன் மேனியை தீண்டக் கூசுகிறேன்" என்கிறாள்.

'ஏறு சேவகன் மேனி அல்லால் இடை......
இவ்வுருவத் தீண்டுதல் கூடுமோ" (க.5663)

என்ற கவி வரிகளில் உளவியல் சார்ந்த சீதையின் மறுப்புரை பெண்மையின் பெருமிதத்தைச் சித்திரிப்பதாகக் காண முடிகிறது.

பண்பாடு போற்றும் பண்பு

தீமை வாழ்வு வாழும் இலங்கையை மட்டுமன்றி, அளவின்றி நீண்டு கிடக்கும் எல்லா உலகங்களையும் கற்புத்திறம் கொண்ட என்னால் ஒரு சொல் கூறிச் சுட்டெரிக்க முடியும். அவ்வாறு செய்தல் என்னை இலங்கையிலிருந்து மீட்கும் கடமை உடைய என் கணவன் இராமனின் வில்லாற்றலுக்கு இழுக்காக முடியும் என நான் அமைதி காத்துள்ளேன் என்கிறாள் சீதை. ஆண்மைக்கு நிகரான பெண்மையின் ஆற்றல் சமூகம் சார்ந்த மரபைக் காத்து நிற்பதை

'அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ
------- வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்" (க.5362)

என்ற வரிகளால் அறிய முடிகிறது.

மனைவியின் உரிமைக் குரல்

'இந்த இப்பிறவிக்கு இருமாதரை --------------
------------- திருச் செவி சாற்றுவாய்" (க.5378)

என்ற வரிகளில்' ஆடவர் ஒழுக்கத்தை வற்புறுத்தும் பெண்ணாக பணிவு கலந்த மென்மொழிகளாக, திருமணக்காலத்தில் இராமன் தனக்கு அளித்த உறுதிமொழியை மறவாது நினைவுகூர்ந்து ஒருத்திக்கு ஒருவன் என்ற ஆடவர் கற்பை எடுத்துரைக்கும் பெண்மையின் உரிமைக்குரல் கம்பனின் சொல்லாற்றலுக்கும் பெண்ணியத்திற்கும் பெருமை சேர்க்கக் கூடியதொன்றாகிறது. மேலும்

"ஈரம்தான் அகத்து இல்லை என்றாலும் தன்
வீரம் காத்தலை வேண்டும்" (க.5374)

என்ற வரிகளால் இராமன் தன் வீரம் காக்கவாவது புறப்பட்டு வர வேண்டும் என குரல் கொடுக்கிறாள்.

நிமிர்ந்தெழும் பெண்மை

தோற்றத்தால் பெண்மையை ஏமாற்ற முயன்ற இராவணனின் மாயாசனகனின் சூழ்ச்சியோடு உடல் வியர்த்துத் தள்ளாடி பெருஞ் சினம் கொண்டு,

'இவ்வுரை எந்தை கூறான்" (க.7695)

எனக் கூறி, "நீ என் தந்தை அல்லன், ஒருவேளை அப்படியே இருந்தாலும் ஒருநாள் உன் உரைக்கு நான் ஒருப்படமாட்டேன்" எனக் கூறி, சீதை தன் பெண்மையில் நிமிர்கிறாள்.

காதல் திருமணம்

பாலகாண்டம் மிதிலைக் காட்சிப் படலத்தை சீதையின் மணம் காதல் மணமே என நிலைநாட்ட,

'எண்ணரும் நலத்தினாள் --------------------------
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" (க.514)

என்ற வரிகளில் ஆடவனின் காதல் பார்வைக்கு 'அவளும் நோக்கினாள்' என்ற வரிகளால் பெண்ணும் தான் கருத்துக் கூற உரிமைப்பட்டவள் என்ற புரட்சிக் கருத்தை கம்பன் நிலை நிறுத்தியதும், தன் கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெண்ணுக்கு உண்டு என கூற விழைவதும் கம்பன் பேசும் பெண்ணியச் சிறப்பாகும்.

தாய்மையில் பெண்மை

பெண்மையின் நிலைப்பாடுகளை நான்காகப் பகுக்கலாம். மகள், சகோதரி, மனைவி, தாய் மற்ற மூன்று நிலையில் இல்லாத வெற்றி பெண்ணிற்குத் தாய்மையில் உண்டு.

கம்பன், தயரதன் அரசியல் பண்புரைக்கும்போது 'தாய் ஒக்கும் அன்பில்" என்று அன்புடைமைக்குத் தாயை உவமை காட்டுகிறான். கோசல நாட்டை வளப்படுத்தும் சரயு நதி தன் குழந்தைக்குப் பாலூட்டும் தாயை உவமைப்படுத்தி வற்றாத நதியாக, ஒரு தாயின் பால் சுரக்கும் மார்பகங்களுக்கு ஒப்பிட்டுக் கூறுவதை காணலாம்.

'சரயு என்பது தாய் முலை அன்னது" (க.23)

மேலும் கம்பன், வீடனன் பேசும் வாய்ப்பில் பல நல்லறங்களைத்தான் அண்ணனுக்கு எடுத்துரைக்கிறான். அப்போது சீதையை உலகத்தவர் போற்றும் தாய் என்று குறிக்கிறான்.

'------சானகி எனும் பெயர் உலகின் தம்மனை ஆனவள்"(க.6146)

பிரியா வாழ்வு

கம்பன் காவியத்தில் மறக்க முடியாத ஒரு தொடர், 'நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு"(க.1827) என்பதன்மூலம் மனைவி ஒருத்தியின் ஆழ்மனவிருப்பம் இன்னதாகத்தான் இருக்கும் என்பதை சீதையின் அன்பும், இன்பத்துன்பம், செல்வவறுமை, ஏற்றத்தாழ்வு எதுவாயினும் கணவனை விட்டுப் பிரியா வாழ்வே பெண்மைக்கு உயர்வு எனக் கம்பனின் காவியம் சுட்டுகிறது.

இல்லறப்பண்பு

துயரின் உச்சத்தில்கூடத் தன் இல்லறக்கடமைகளை இயற்ற இலாதுபோனமை பற்றி வாடும் சீதையின் விருந்தோம்பும் இல்லறப்பண்பு மகளிர்க்கு முன் உதாரணமாக அமைகிறது.

'அருந்தும் மெல்லடகு ஆர் இட அருந்தும் ----------
என்று விம்மும்" (க.5083)

என்ற வரிகளில் பெண்மையில் உள்ளார்ந்த விழைவைக் கம்பன் இனங்காட்டி மகிழ்கிறான்.

சமூக உறவு

தன் கணவன் உயர் பண்புகள் பலவற்றுள் அவன் கொள்ளும் சமூக நல்லுறவில் பெண் மனம் பெரிதும் மகிழும், குகனுக்கு இராமன் கற்பித்த உறவு முறையை எண்ணி பெருமிதம் கொள்வதாக,

'ஆழ நீர் கங்கை அம்பி கடாவிய.....
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்" (க.5091)

என்ற வரிகள் கூறுகின்றன.

அனுமன் கருத்து

இராமனைப் பலவாறு ஐயுற்று நின்ற வேளையில் சீதையைத் திருமகள் என்று உறுதி செய்த உடனே மின்னல் வெட்டுப் போல் அனுமன் உள்ளத்தில் ஓர் ஒளி பிறக்கிறது. இவள் திருமகள் என்பதால் இவளை மணந்த இராமன் திருமால் என்பது உறுதிஎன்று ஐயம் தெளிகிறான்.

'---------------- அரவணைத்துயிலின் நீங்கிய
தேவனே அவன் இவள் கமலச் செல்வியே" (க.5134)

என்ற இவ்வனுமன் கூற்று, கவிஞன் மனக்கூற்றானதால் பெண்மைக்குப் பெருமை சேர்க்கக் கூடியதொன்றாக இவ்வரிகள் கருதப்படுகின்றன.

பெருமித சார்புகள்

'புனைகழல் இராகவன் பொன் புயத்தையோ....
சனகர் தம் குலத்தையோ யாதைச் சாற்றுவேன்" (க.5137)

என்ற கவியின் வரிகள் பெண்ணின் பெருமிதங்கள் அவள் கைப் பிடிக்கும் கணவன் ஆற்றலால் உருவாதல் கூடும், பெண்ணின் மன உறுதியாலும் அவை அமைதல் கூடும், பெண் பிறந்து வந்த குலப்

பெருமிதங்கள் கூட அவள் உருவாகக் காரணமாக அமையலாம். மேற்கூறிய ஒன்றினால்கூட, சீதை சிறந்துள்ளதால் அவள் பண்பில் தலைநிற்பதில் வியப்பில்லை.

தவநிலை

'நங்கையர் மனத்தவம் நவிலற் பாலதோ' (க.5140)

என்ற வரிகளால் அனுமன் பார்வையில் கம்பன் பெண்மையைத் தவ முனிவர்களின் ஆற்றல்களுக்கு மேலான ஆற்றல் மிக்கது என நிறுவிக் காட்டி மகிழ்கிறார்.

கம்பனின் மதிப்பீடு

'பேண நோற்றது மனைப்பிறவி பெண்மைபோல்.......
காண நோற்றிலன் அவன் கமலக்கண்களால்" (க.5141)

சீதை மட்டும் அல்லள்; இங்கே குடிப்பிறப்பு, நாணம் முதலியவும் சீதையோடு இணைந்து கடுந்தவம் புரிந்து உயர்கின்றன. இவற்றை கண்டுகளிக்கும் பேறு இராமன் தூதனாகிய எனக்குக் கிடைத்தது என கூறும் அனுமனின் மதிப்பீடு கம்பனின் மதிப்பீடாகவே தெரிகிறது. அதோடு, பெண்மையின் பெருஞ்சிறப்புக்கு எது காவல் அரண் என ஆராய முற்படும்போது,

'தருமம் காத்ததோ சனகன் நல்வினைக்
கருமம் காத்ததோ கற்பின் காவலோ ------" (க.5143)

எனக் கூற முற்படும்போது அறம், பெற்றோரின் நல்வினை, கற்பு என்று மூன்று வினைகள் துணைநின்றாலும், இவற்றைப் பற்றுக்கோடாக கொண்டு ஒருமை மனதோடு எழுந்து நிற்கும் ஆற்றல் பெண்ணின் மன உறுதியைச் சார்ந்ததாகிறது.

சீதையின் வணக்கம்

மாமியார் மூவர்க்கும் சீதை மரணத்தைத் தழுவும் நிலையில் தன் வணக்கங்களைத் தெரிவித்தாள் என தன் கணவனிடம் கூறச் சொல்கிறாள்.

'சிறக்கும் மாமியார் மூவர்க்கும் சீதை ஆண்டு
இறக்கின்றாள் தொழுதாள் ---------------" (க. 5375)

மேலும் தன் தந்தை, தாயார் மற்றும் உறவினர்களுக்கும் வணக்கம் கூறித் தன் மரியாதையை வெளிப்படுத்துவதாக,

'எந்தை யாய் உதவிய கிளைஞர் யார்க்கும் என்
வந்தனை விளம்புதி -------------" (க. 5382)

என்ற பாடல் வரிகள் கூறுகின்றன.

மறுமையிலும் அவனே

'ஈண்டு நான் இருந்து இன் உயிர் மாயினும்
மீண்டு வந்து பிறந்து ---------------------" (க.5379)

என்ற வரிகளால் 'அவன் வந்து என்னை மீட்காது போனால் நான் மடிவது திண்ணம் தீவினை உடையவளாகிய நான் மீண்டும் பிறந்து வந்து அவன் திருமேனியைத் தீண்டி என் தீவினை தீர வணங்கிட' வேண்டியதாக அனுமனிடம் தூதுரைத்தாள்.

பெண்மைக் காவல்

இராமன் அம்பினால் உயிர் தடுமாறி வீழ்ந்த வாலி இராமனைப் பலபட ஏச்சுரைக்கிறான். அதில் 'உன்னருகில் சீதை இருந்தாள் அவளை இராவணன் பிரித்தெடுத்துச் சென்ற பின் நீ என்னை அம்பெய்து வீழ்த்தியிருக்கிறாய். இத்தவறு சீதை உன் அருகில் இல்லாமையால் நிகழ்ந்தது' என

"....தேவியைப் பிரிந்த பின்னை
திகைத்தனை போலும் செய்கை" (க.4020)

என்ற வரிகளால் கம்பன் கூறுவதைக் காண முடிகிறது.

கம்பன் பேசும் பெண்ணியம்

பெண்மையை உயர்த்தி, புகழ்மகுடம் சூட்டியதோடு சில முரண்பாடுகளிலும் பெண்மையைச் சுட்டிக் காட்டியுள்ளார். சீதையின் பாத்திரப் படைப்பில் கம்பனின் பெண்ணியம் அறிவும், ஆற்றலும், உரிமையும் வழங்கும் தடங்களைப் பதித்து, பெண்கள் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்துள்ளது என்பதில் ஐயமில்லை.

கம்பன் பேசும் பெண்ணியம்

முனைவர் சரோஜினி செல்லக்கிருஷ்ணன்
தமிழ்மொழி ஒருங்கிணைப்பாளர், குவாங்யாங் தமிழ்மொழி நிலையம்,
சிங்கப்பூர்.

இலக்கியம் வாழ்க்கையின் பிரதிபலிப்பு. அந்தந்த நாட்டின் கலாச்சார வளர்ச்சிக்கு ஏற்ப, சமயப் பிடிப்புகளுக்கேற்ப இலக்கியங்கள் பிறந்து வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. தமிழிலக்கியம் மிகத் தொன்மையானது; பழமையானது. தமிழரின் சமயக்கொள்கைகள், சமூக நெறிகள், வாழ்க்கை முறைகள், கருத்தோட்டங்கள் முதலியன தமிழிலக்கியங்களைப் பெரிதும் பாதித்துள்ளன. அந்தவகையில் கம்பராமாயணத்தில் கம்பன் எவ்வாறு பெண்மையை அணுகியுள்ளான் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

கம்பனும் காப்பியமும்

கம்பன் தனது காப்பியத்திற்கு வான்மீகத்தையே முதன் நூலாகக் கொண்டான். கம்பன் பற்பல மாற்றங்களைச் செய்திருந்தாலும் அவனது காவியம் வான்மீகத்தின் வழிநூலாக அமைந்ததால் அவனுக்கு மூலக்கதைக் கூறுகளை முற்றிலும் மாற்றத் தடை இருந்தது. எனவே, பெண்களைப் பற்றிய அவனது உண்மையான மதிப்பீட்டை அறிவதற்குக் கம்பராமாயணம் மட்டுமே அளவுகோல் என்று கூறிவிட முடியாது. ஆனாலும், அவன் வான்மீகத்திலிருந்து மாறுபட்டு நிற்கும் இடங்களை ஆராய்ந்து அவ்விடங்களில் அவன் பேசும் பெண்ணியத்தை, இக்கட்டுரை ஆராய முயலுகின்றது.

கம்பனும் பெண்கல்வியும்

"கல்வியில்லாத பெண்கள் களர்நிலம்; அந் நிலத்தில்
புல் விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை"

என்று பாரதிதாசன் பெண்கல்வியை வலியுறுத்திக் கூறுகிறார். இதே போக்கில்,

"பெருந் தடங்கண் பிறை நுதலார்க்கு எல்லாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்' (பா.68)

என்று, கம்பன் கூறுவதிலிருந்து பெண்கல்வி பற்றிய கம்பனது மனநிலையை அறிய முடிகின்றது.

'கல்லாது நிற்பார் பிறர் இன்மையின் கல்விமுற்ற .
வல்லாரும் இல்லை; அவை வல்லவர் அல்லரும் இல்லை'

என்று, கோசல நாட்டில் ஆண் - பெண் அனைவருமே சரி சமமாகக் கல்வி பயின்றவர்கள் என்று கம்பன் கூறுவதும்,

'மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனம் என்பது ஒன்றே அன்றோ'

என்று ஆண் - பெண் சமத்துவம் பேசுவதும் பெண்களைக் குறித்த கம்பனின் மதிப்பீட்டை நமக்கு உணர்த்துகின்றது.

கம்பனும் தாடகை வதமும்

வான்மீகி இராமன், கோசிகமுனிவன் தாடகையைக் கொல்லுமாறு ஏவிய உடனேயே எவ்விதத் தடையும் சொல்லாது அவள் மீது அம்பு எய்திக் கொன்று விடுகின்றான். ஆனால், கம்பனின் 'பெருந்தகை' இராமனோ, 'பெண்' என மனத்திடை நினைத்து வில் தொடாது நிற்கின்றான். திகைத்துப்போன கோசிகமுனி இராமனுக்கு 7 பாடல்களில் அறிவுரை கூறித் 'தாடகையைப், 'பெண் என நினையாதே' என அறிவுறுத்துகின்றான்.

"ஐயன் அங்கு அது கேட்டு, அறன் அல்லவும்
எய்தினால், அது செய்க என்று ஏவினால்
மெய்ய நின் உரை வேதம் எனக் கொடு
செய்கை அன்றோ அறம் செயும் ஆறு"

என்று கூறி, இராமன் அவனைக் கோறுகின்றான். இராமனின் அறமற்ற இந்தச் செயலை,

"ஆடவர் நகை உற, ஆண்மை மாசு உற,
தாடகை எனும் பெயர்த் தையலாள் பட,
கோடிய வரிசிலை இராமன்"

எனக் கூனி வாயிலாகக் கண்டித்துக் கம்பன் தனது மனக் குமுறலைத் தீர்த்துக் கொள்கின்றான்.

கம்பனும் அகலிகையும்

இந்திரனால் வன்பாலியல் கொடுமைக்கு உள்ளான வான்மீகியின் அகலிகை பலவாறு இகழப்படுகின்றாள். வந்தவன் தன் கணவன் அல்லன்; இந்திரன் என நன்கு தெரிந்தே அவனது இழிசெயலுக்கு அவள் உடன்பட்டாள் என்றும் தூற்றப்படுகின்றாள். ஆனால், கம்பன் இந்த நிகழ்வை மாற்றி அகலிகையை ஓர் அபலையாக ஏதுமறியாத

அப்பாவியாகச் சித்திரிக்கின்றான். ஆண் இனத்தால் வன்பாலியல் கொடுமைக்கு உள்ளாகும் ஒரு பலவீனமான பெண்ணாக அகலிகையைக் காட்டி அவளைக் குற்றமற்ற ஒரு பெண்ணாகச் சித்திரிக்கின்றான். அதோடு கம்பன் அமையாது, இராமனது திருவாயால், 'படர் உறாதே! போது நீ, அன்னை!' என அகலிகையை நோக்கிக் கூறவும் வைக்கின்றான். காலங்காலமாக ஆண்களால் பாலியல்கொடுமைக்கு உள்ளாகும் அப்பாவிப் பெண்களின் நிலைமைக்கு வருந்தியே கம்பன் இக்காட்சியை இவ்வாறு அமைத்துள்ளான்.

கம்பனும் கூனியும்

வான்மீகி காட்டும் கூனி, இராமனின் மீது பொறாமையும் கோபமும் கொண்டதற்குக் காரணம் ஏதும் கூறப்படவில்லை. எந்தக் காரணமும் இன்றியே வான்மீகிக்கூனி இராமனுக்குத் தீங்கு செய்கின்றாள். ஆனால், கம்பனுக்குக் கூனி என்ற பெண்ணை அவ்வாறு சித்திரிக்க மனமில்லை. கூனி, இராமன்மீது கொண்ட சினத்திற்கு ஆதாரமாய் ஒரு செய்தியைத் தனது பாடலில் தெரிவிக்கின்றான்.

"பண்டை நாள் இராகவன் பாணி வில் உமிழ்
உண்டை உண்டதனை தன் உள்ளத்தே உள்ளுவாள்"

என்பதே அப்பாடல். உடற்குறை உடைய தன்மீது சிறிதும் இரக்கம் இலாது ஆயுதத்தால் தாக்கிய இராமன் மீது கூனி கொண்ட கோபமும் அவமான உணர்வுமே கூனியைப் பழி செய்ய வைத்தது என்று நியாயப்படுத்திக் கம்பன், கூனியின் மீது அனுதாபத்தை ஏற்றுகின்றான்.

"சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல்; மற்றுஇந்
நெறி இகழ்ந்து, யான் ஓர் தீமை இழைத்தலால் , உணர்ச்சி நீண்டு,
குறியது ஆம் மேனி ஆய கூனியால், குவவுத் தோளாய்!
வெறியன எய்தி, நொய்தின் வெந்துயர்க் கடலில் வீழ்ந்தேன்"

என்று, சுக்ரீவனிடம் கூனிக்குத் தான் செய்த தவற்றை எண்ணி இராமனை வருந்த வைக்கும் கம்பன், கூனியின் மீது உள்ள பழியை முற்றிலும் துடைத்தெறிய முற்படுகின்றான்.

கம்பனும் கைகேயியும்

வான்மீகத்தில் தயரதன் கைகேயியை மணமுடித்த வேளையில் தயரதன் கேகயனுக்குக் கொடுத்த 'கன்யாசுல்கம்' அடிப்படையில் கைகேயி மகன் பரதனே பட்டத்துக்கு உரியவன். எனவே, அந்த வழியில் கைகேயி, பரதனே அரசனாக வேண்டும் என்று விரும்பியது

நியாயமே! ஆனால், வான்மீகத்திலும் கம்பனிலும் சம்பராசுர யுத்தத்தில் தயரதன் கைகேயிக்குக் கொடுத்த வரமே முதன்மைப்படுத்தப்பட்டு இந்த நியாயம் அடிபட்டுப்போகின்றது. ஆனாலும், 'வரன் நில் உந்தை சொல் மரபினால், உடைத்தரணி நின்னதே' என்று இந்தக் கன்யாசுல்க நியாயத்தைக் கம்பன் 'திருவடி சூட்டுப் படலத்தில்' இராமனைப் பரதன் முன்மொழிய வைக்கின்றான். எனவேதான், 'தன் நேர் இலாத் தீயவள்' என்றும், 'மா கயத்தி என்றும், 'தீ அடங்கிய சிந்தையாள்' என்றும், 'படர் எலாம் படைத்தாள்' என்றும், 'பழி வளர்க்கும் செவிலி' என்றும் பாத்திரங்கள் வாயிலாகவும் கவிக்கூற்றாகவும் கைகேயி மீது புழுதி வாரித் தூற்றும் கம்பன், கைகேயி மீதுள்ள நியாத்தை அடி மனத்தில் உணர்ந்த காரணத்தால்,

"அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல் அருள் துறந்தனள் தூமொழி மடமான்"

என்றும், 'கடைக்கண் அளி பொழியும் கண்ணினாள்' என்றும், 'தெய்வக் கற்பினாள்' என்றும், 'தீயள் என்று நீ துறந்த என் தெய்வம்' என்றும் பல இடங்களில் பேசிக் கைகேயியின் மீதுள்ள நியாயத்தை நமக்கு உணர்த்த முற்படுகின்றான்.

கம்பனும் சூர்ப்பணகையும்

சூர்ப்பணகை பற்றிய செய்திகள் வான்மீகத்திலும் கம்பனிலும் நிறைய வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. வான்மீகி சூர்ப்பணகை பார்க்கப் பயங்கரமான அரக்கி வடிவினள். ஆனால், கம்பனின் சூர்ப்பணகை பேரழகி. ஆடவர் அவாவுறும் தோளழகும் ஓவியத்தில் எழுத முடியாத உருவ அழகும் உடைய ஒருவன் முன் தனது காதலைத் தெரிவிக்கும் பெண்ணின் காதலை நியாயப்படுத்தவே கம்பன் இக்காட்சியை மாற்றியிருக்கலாம். அழகிய வாலிபனைக் கண்டு காதல் கொண்ட நங்கையை 'உண்டாட்டு' என்ற முறையில் இராமன் அலைக்கழித்ததும் அவளது அங்கங்கள் கொடிய முறையில் இலக்குவனால் அறுபடக் காரணமாக அமைந்ததும் கம்பனைப் பெரிதும் வருத்தியிருக்கும் போலும்!

"பெய்தவத்தினோர் பெண்கொடி, எம்முடன் பிறந்தாள்
செய்த குற்றம் ஒன்று இல்லவள், நாசி வெஞ்சினத்தால்
கொய்த கொற்றவ"

என்று கும்பகர்ணனைப் பேசவைத்துச் சூர்ப்பணகை 'செய்த

குற்றம் ஒன்றும் இல்லவள்' என்று கம்பன் தனது வருத்தத்தை வெளிக்காட்டுகின்றான்.

கம்பனும் சீதையும்

கம்பனின் சீதை வான்மீகிச் சீதையினின்று மாறுபட்டவளாகவே விளங்குகின்றாள். 'கல் சுரக்கும் கடுமைய அல்ல - நின் வில் அரக்குண்ட சேவடி' என்று வருந்தும் கணவனாக இராமன் விளங்க, 'நின் பிரிவினும் சுடுமோ, பெருங்காடு' என்று கணவன் மீது தீராக்காதல் கொண்ட அன்பு மனையாளாகச் சீதை விளங்குகின்றாள். சீதையைப் பிரிந்து நின்ற 'இராமன் உயிர் மட்டுமே ஊசலாடும் உடலோடு மட்டுமே இருந்தான்'. 'வைத்த மாநிதி மண்ணொடும் மறைந்தன, வாங்கிப் பொய்த்துளோர் கொள, திகைத்து நின்றானைப் போன்றான்'. ஆனால், கம்பன் காட்டும் இந்த நிகழ்வுகள் யாவும் கணவனுக்கு அடங்கிக் கட்டுப்பட்டு அவன் ஒருவனையே தெய்வமாக நினைத்துப் போற்றி அவன் உதாசீனப்படுத்தினாலும் அவன் அன்பிற்காகவே ஏங்கி வாழும் மரபுநிலைச் சார்ந்த அடிமைப்பெண் வாழ்க்கையையே சீதை வாயிலாகக் காட்டுகின்றன.

'அசோகவனத்தில் அனுமன் ஓர் ஆண்மகன் என்றும் அவனைத் தீண்டி அவன் முதுகின்மீது ஏறுதல் பெண்மைக்கு அழகல்ல என்றும் சீதை மறுக்கின்றாள்'. 'இலங்கையைத் தனது சொல் ஒன்றினாலேயே சுட்டுவிடும் ஆற்றல் இருந்தும் அவ்வாறு செய்யாமைக்குக் காரணம் கணவன் வில்லிற்கு மாசு வரக்கூடாது என்பதற்காகவே' என்றும், அனுமனிடம் கூறுகின்றாள். 'ஊன்திறம் உவந்தாய், ஒழுக்கம் பாழ்பட்டும் இன்னும் மாளாமல் நிற்கின்றாய்'; 'என் குலப்பெருமையை அழித்தாய். சீதையாகிய நீ தோன்றியதால் பெண்மை, பெருமை, பிறப்பு, கற்பு, திண்மை, ஒழுக்கம், உண்மை எல்லாம் அழிந்தன'. 'சீதையே! உன்னை மீட்பதற்காக நான் இலங்கை வரவில்லை. என்னை மீட்பான் பொருட்டே இழந்த என் புகழை மீட்பான் பொருட்டே இலங்கை வந்தேன்' என்று, இராமன் சீதையை நோக்கி அடாது கூறுகின்றான். 'என் தவம் என் நலம், என் கற்பு, என் துன்பம் ஈது எலாம் வீணாகப் போய்விட்டதே! எனது நிலையை இராமன் உணரவில்லையே'! எனக் கூறிச் சீதை தீ மூழ்குகின்றாள். அக்காலத்தில், பெண் இனத்தின் மீது ஆண் இனம் கொண்ட அடக்கு முறையையும் அநீதியையும் எடுத்துக் காட்டும் மிக முக்கியக் காட்சி இது. இக்காட்சிக்குக் கம்பன் பொறுப்பு அல்லன்; முழுக்க முழுக்க இது வான்மீகியின் கைவண்ணம்.

ஆனால், சீதைக்கு இராமன் இழைக்கும் கொடுமை கண்டு கம்பன் மனம் புழுங்குகின்றான்.

"பங்கயத்து ஒருவனும் விடையின் பாகனும்
சங்கு கைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையின் நெல்லிபோல் அனைத்து நோக்கினும்
மங்கையர் மனநிலை உணர வல்லரோ?"

என்று, சீதையைப் பேசவைத்துக் கம்பன் ஆண் இனத்து மீது உள்ள தனது மனக்குமுறலை வெளிப்படுத்துகின்றான். அதுவும் போதாது என்று சிவபெருமானையே வரவழைத்து இராமனுக்கு அறிவுரை புகட்டவும் வைக்கின்றான்.

'மூவகை உலகின் அன்னை சீதை ஆம் மாது நின்
மார்பின் வந்து அமைந்தாள்'

என்றும், 'தொல்லை எவ்வுலகும் பிறக்கும் பொன்வயிற்று அன்னை; இப்பெய்வளை பிழைக்கின் இறக்கும் பல் உயிர்' என்று இராமனை எச்சரிக்கை செய்யவும் வைக்கின்றான்.

கம்பனும் பெண்ணியமும்

காவியம் முழுவதும் கம்பன் மரபு வழிச் சார்ந்த பெண்ணியத்தையே பெரிதாகக் காட்டியிருந்தாலும் பெண்களைப் பெரிதும் மதிக்கின்றவனாகவும் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டு மனம் பொறுக்காதவனாகவுமே விளங்குகின்றான். சீதையின் தீக்குளிப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்ட கம்பன் பெண்கள் பாதிக்கப்பட்டால் உலகமே அழியும் என்று சிவபெருமானைக் கொண்டு சாபம் இடவும் வைக்கின்றான். அந்தக் கோபத்தின் வெளிப்பாடே அவன் 'உத்திர காண்டம்' பாடாமல் போனதாகும். குடிமகன் ஒருவன் சொன்ன சொல்லைக் கேட்டுச் சீதையைக் காட்டுக்கு அனுப்பிய உத்தரகாண்டத்தைப் பாடாது கம்பன் புறக்கணித்ததற்கு அவன் பெண்மையைப் பெரிதாகப் போற்றியதே உண்மைக் காரணமாகும்.

மறுவாசிப்பில் அகலிகைக் கதை

திருமிகு. சு.இரமேஷ்
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், இந்துக்கல்லூரி, பட்டாபிராம், சென்னை.

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலின் பத்தொன்பதாவது பாடல், செவ்வேளைப் பற்றியது; பாடியவர் நப்பண்ணனார். திருப்பரங்குன்றத்தில் வள்ளியை மணக்கவிருக்கும் முருகப்பெருமானைக் காண மதுரையிலிருந்து முருக பக்தர்கள் திருப்பரங்குன்றத்தில் பெருமளவில் குவிகின்றனர். மலையின் இயற்கை அழகைக் கண்டு மகிழ்ந்த அவர்கள், சித்திரக்கூடத்திற்கு வருகின்றனர். சுவர்களில் வரையப்பட்டுள்ள சித்திரங்களுக்கு ஒருவருக்கொருவர் விளக்கம் கூறிக்கொள்கின்றனர். அதில் ஒரு சித்திரம் அவர்களை ஈர்க்கிறது; அது அகலிகை வரலாறு தொடர்பான சித்திரம். சிலர் இப்பூனையே இந்திரன்; இவன் அவ்விடத்தே சென்ற கௌதம முனிவர்; இவள்தான் அம்முனிவர் மனைவியான அகலிகை; அம்முனிவன் சினத்தால் அவள் கல்லுருவடைந்த வகை இது என்றவாறு விளக்கம் தருவர் சிலர். 'இந்திரன், பூசை; இவள்அகலிகை; இவன் / சென்ற கௌதமன்; சினன் உறக் கல் உரு / ஒன்றிய படிஇது என்று உரை செய்குவோரும்'(பரி. பா.எண்.19; 50&52) என்ற பாடல் அடிகள்மூலம் மேற்கண்ட கருத்தை அறியலாம். இப்பாடலின் மூலம் கம்பராமாயணத்தின் வாயிலாக பொதுமைப்படுத்தப்பட்ட அகலிகையின் சாப வரலாறென்பது ஒரு கர்ண பரம்பரைக் கதை என்பது தெளிவாகிறது. இப்பாடலாசிரியர் இக்கதையை ஏதாவது புராணங்களில் இருந்து எடுத்துக்கையாண்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்களின் முடிவு.

இராமாயணத்தின் ஒரு கிளைக்கதையாக விளங்கும் அகலிகை என்கிற பெண்ணின் புராதன வரலாற்றை, கற்பு என்கிற புனைவோடு பிற்காலத்தில் கற்பிக்கத் தொடங்கினர். அகலிகை கதை ஆண்&பெண் ஒழுக்கம் தொடர்பான கதை. இக்கதையில் அகலிகை ஒழுக்கம் தவறிக் கீழ்மகளாக நடந்துகொள்கிறாள். எனவே, சமண பௌத்த இராமாயணங்களில் அகலிகை வரலாறு தவிர்க்கப்பட வேண்டியதாகின்றது. ஒழுக்கத்தை வற்புறுத்தும் சமண பௌத்த சமயக்கொள்கைகளுக்கு எதிராக அகலிகை கதை அமைவதால்

அக்கதை தவிர்க்கப்பட்டுள்ளது (இராமகாதையும் இராமாயணங்களும். பக்.141&43) என்று அ.அ.மணவாளன் குறிப்பிட்டுள்ளார். தொல் பழங்காலத்திலிருந்து கற்பு சார்ந்து தொடர்ந்துவரும் அகலிகை வரலாறென்பது இருபதாம் நூற்றாண்டில் பெண்ணியம் சார்ந்த ஒரு பிரதியாக அணுகப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டில் அகலிகை கதை மறுவாசிப்புக்கு உட்படுத்தப்படுகிறது. அகலிகை என்கிற ஒரு புராதனப் பெண்ணுக்கு நேர்ந்த அவமானத்தை மறுவாசிப்புக்கு உட்படுத்துவதனூடாக இராமாயணப் பிரதிகளில் ஏற்பட்டுள்ள இடைவெளிகளை நிரப்பிக்கொள்ள முடிகிறது. அந்த வகையில் புதுமைப்பித்தன் அகலிகை குறித்து எழுதியுள்ள சாபவிமோசனம் என்கிற சிறுகதை ஒரு முக்கியமான கதை.

படைப்புக் கடவுளான பிரம்மன் முன்பு படைத்த மக்களின் உடம்பிலுள்ள அழகான உறுப்புகளை எடுத்து, ஒரு பெண்ணைப் படைத்தான். அவளுக்கு அஹல்யா என்று பெயரிட்டான். அஹல்யா என்றால் அழகின்மை இல்லாதவள் என்று பொருள். அகலிகையை இந்திரன் தன்னுடைய தாரமாகக் கருதினான்; ஆனால் பிரம்மன் அவனது எண்ணத்தோடு மாறுபாடு கொண்டான். அதனால் அவளைக் கௌதமனிடம் தந்து, 'இவளை நீதான் பாதுகாக்க வேண்டும்' எனக்கூறி ஒப்படைத்தான். முனிவனும் அவளைப் பலகாலம் காத்துப் பிரம்மனிடம் சேர்த்தான். பிரம்மனோ அம்முனிவனின் சபலமின்மையையும், உயர்ந்த தவத்தையும் அறிந்து அவளை அம்முனிவனுக்கே மணம் புரிவித்தான். அதனால் பொறாமைகொண்ட இந்திரன் வேற்று வடிவத்திலே அவளைச் சேர முற்பட்டான் என்பது இராமாயணப் பதிப்பு கூறும் அகலிகை&கௌதமர் திருமண வரலாறு.

சிறுவயதிலிருந்தே இந்திரனுக்கு அகலிகையைத் தெரியும்; அவள் முத்கலா முனிவரின் மகளாக இருந்தபோதே இருவரும் ஒன்றாக விளையாடியவர்கள். பருவமெய்திய இருவரும் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். 'நீயே என் இந்திராணி' என்று அகலிகையிடம் வாக்குக்கொடுக்கிறான் இந்திரன். பிரம்மனும் அளவில்லாத அழகுகொண்ட இவளை மணம் முடித்துக்கொள்ள இந்திரன் மட்டுமே தகுதியானவன் என்று அறிவிக்கிறார். அதற்கு வாயு, அக்னி, எமன், கௌதமன் உள்ளிட்டோர் மறுப்பு தெரிவிக்கின்றனர். பிரம்மன் தேவர்களின் மனநிலையை நன்கு அறிந்தவனாக, உங்களில் எவர் உலகைச் சுற்றிக்கொண்டு முதலில் வருகிறீர்களோ அவரே

அகல்யாவைத் திருமணம் செய்துகொள்ள தகுதியுடையவராவர் என்கிறான். இந்திரன் தன் பேராண்மைக்கு இடப்பட்ட சவால் என்று கருதி ஐராவதத்தின்மீது ஏறி உலகைச் சுற்றப் புறப்படுகிறான். நாரதனின் சூழ்ச்சியின் காரணமாக கருவுற்ற பசுவைச் சுற்றிவந்த கௌதமன், வெற்றி பெற்றவனாக பிரம்மனால் அறிவிக்கப்படுகிறான். அகலிகை கௌதமனுக்கு மாலை சூடுகிறாள். அகலிகை கௌதம முனிவனுக்கு மனைவியான இந்த இரண்டு கதைகளில் முதலாவது கதை கம்பராமாயணப்பதிப்பில் உள்ளது; இரண்டாவது ரிக்வேதக் கவிதைகளையும் வால்மீகி இராமாயணத்தையும் தரவுகளாகக் கொண்டு எழுத்தாளர் பிரபஞ்சன் எழுதியது. இதுபோன்று அகலிகை குறித்து பல புனைவுகள் வெவ்வேறு வடிவங்களில் உலகம் முழுக்க வெவ்வேறு மொழிகளில் பரவியுள்ளன.

அகலிகை வரலாறு வால்மீகி இராமாயணத்தில் நாற்பது ஸ்லோகங்களில் சொல்லப்படுகிறது; கம்பர் இதனைப் பதினேழு விருத்தங்களில் பாடியுள்ளார். யாகத்துக்கு ஊறு விளைவிப்பர்களை அழிக்க விசுவாமித்திரர் இராமனையும் இலக்குவனையும் காட்டுக்கு அழைத்துச் செல்கிறார்; யாகம் முடிந்தபிறகு, மிதிலை நகரத்தில் ஜனக மகாராஜா நடத்தப்போகும் யாகத்துக்கு விசுவாமித்திரர் இருவரையும் அழைத்துச் செல்கிறார். மிதிலை நகரத்துக்கு வெளியில் மூவரும் தங்கி-யிருந்தபோது அகலிகை கல்லாகக் கிடக்கும் இடத்தைப் பார்க்கின்றனர். அப்போது இராமனின் திருவடித்துகள் அந்த கல்லின்மீது படுகிறது; அகலிகை உயிர்த்தெழுகிறாள். இராமன் அகலிகையின் வரலாற்றை விசுவாமித்திரரிடம் கேட்கிறான். விசுவாமித்திரன் இராமனுக்குச் சொல்வதாக அகலிகைப் படலம் அமைந்துள்ளது.

பெருமைமிக்க இந்திரன், தீய குணங்களை நீக்கிய கௌதம முனிவர் இல்லாதபோது மான் விழியாளாகிய அகலிகையைச் சேர விரும்பினான். இந்திரன், கௌதம முனிவரைத் தந்திரம் செய்து ஆசிரமத்திலிருந்து வெளியேற்றுகிறான். கௌதம முனிவர் வெளியேறிய பிறகு இந்திரன் அவருடைய உருவத்தில் ஆசிரமத்திற்குள் நுழைகிறான். கௌதமன் உருவத்திலுள்ள இந்திரனோடு சேர்ந்து அகலிகை இன்பத்தை நுகர்ந்துகொண்டிருக்கும்போது, வந்திருப்பவன் இந்திரன் என்பதைப் புரிந்துகொள்கிறாள். உணர்ச்சியின் உந்துதலால் அத்தவறை அகலிகை அனுமதிக்கிறாள். இந்நேரத்தில் கௌதமமுனிவர் ஆசிரமம் திரும்புகிறார்; பெரும்பாவத்தைச் செய்துவிட்டதாகக் கருதிய அகலிகை, நடுக்கமடைகிறாள். இந்திரன் பூனைஉருவத்தில்

வெளியே செல்ல முயற்சி செய்கிறான். 'ஆயிரம் மாதர்க்குள்ள குறிகள் உனக்கும் உண்டாகட்டும்' என்று இந்திரனுக்குச் சாபமிட்டார் கௌதமர்; 'விலைமகளைப் போன்று நடந்துகொண்டதால் கல் வடிவம் ஆகுக' என்று அகலிகைக்கும் சாபமிட்டார். தன் தவறை உணர்ந்த அகலிகை கௌதம முனிவரிடம் சாப விமோசனம் கேட்கிறாள்; 'தசரத குமாரனின் திருவடித்துகள் உன்மீது படியும்போது சாபம் நீங்குவாய்' என்று கூறிவிட்டு இமயமலைக்குச் சென்றுவிட்டார் கௌதம முனிவர் என்று விசுவாமித்திரர் இராமனிடம் கூறினார்.

கௌதம முனிவர் தன்னுடைய தவ வலிமையின் காரணமாக அகலிகையின் சாபவிமோசனத்தை உணர்ந்து, இமயமலையிலிருந்து தன் ஆசிரமத்திற்குத் திரும்பியிருந்தார். விசுவாமித்திரர் கௌதம முனிவரிடம், 'நெஞ்சினால் பிழைப்பு இலாளை நீ அழைத்திடுக!' என்று கூறுகின்றார். இராமனும் கௌதமரின் பாதங்களில் வீழ்ந்து, 'மாசு அறு கற்பின் மிக்க அணங்கினை அவன்கை ஈந்தார்' என்பது கம்பராமாயணம் கூறும் அகலிகையின் சாப வரலாறு. கற்பு பற்றிப் பேசும்போதெல்லாம் அகலிகை குறித்தும் பேசவேண்டி இருக்கிறது; இராமனை நினைவு கூரும்போதெல்லாம் அவன் பாதத்துகள் பட்டு உயிர்த்தெழுந்த அகலிகையையும் நினைவுகூர வேண்டி இருக்கிறது. அகலிகை கதை வினோதமானது; ஆச்சரியகரமானது; பலப்பல பரிமாணங்களை தாங்கியது. அகலிகையின் வாழ்க்கை சாபவிமோசனம் பெற்றதோடு முடிந்துவிடவில்லை. அதன்பிறகும் அவளுக்கு ஒரு வாழ்க்கை இருந்தது; சாபவிமோசனத்திற்குப் பிந்தைய அகலிகையின் வாழ்க்கை என்னமாதிரி இருந்ததென்பது மிக முக்கியமான ஒரு கேள்வி. இந்தக் கேள்விக்கு புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் என்கிற சிறுகதை முன்வைக்கும் பதில் யாரும் எதிர்ப்பார்க்காத ஒன்று; இந்த நனினத்துவப் பார்வையில் உண்மை-யில்லை என்பதையும் மறுக்க முடியாது. சாபவிமோசனம் கலைமகள் இதழில் மார்ச், 1943ஆம் ஆண்டு பிரசுரமானது. பிரசுரமானபோதே பல்வேறு எதிர்வினைகளை இக்கதை உருவாக்கியது.

சிலையாகக் கிடக்கிறாள் அகலிகை; அவளுக்குச் சற்று தூரத்தில் கௌதமன் நிஷ்டையில் ஆழ்ந்து தவம் கிடக்கிறான். இராம லக்ஷ்மணர்கள் ஓடிப்பிடித்து விளையாடுகிறார்கள். அவர்கள் எழுப்பிய புழுதிப்படலம் அந்தச் சிலையின்மீது படிகிறது; சிலை உயிர் பெறுகிறது. இராமனின் பாதத்தில் வீழ்ந்து வணங்குகிறாள் அகலிகை. விசுவாமித்திரர் இராமனுக்கு அவள் வரலாறு சொல்கிறார். 'அம்மா'

என்று சொல்லி அவள் காலில் வீழ்ந்து வணங்குகிறான் இராமன். 'நெஞ்சினால் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக்கொள்ளுவதுதான் பொருந்தும்' என்கிறார் விசுவாமித்திரர். சரயூ நதிக்கரையில் ஒரு குடிசைக் கட்டிக்கொண்டு இருவரும் வாழ்கின்றனர். ஒரு சில நெருடல்களுக்குப் பிறகு இருவரும் அன்பாக வாழ முயற்சி செய்கின்றனர். இக்காலகட்டத்தில் சீதை அகலிகைக்கு மிகச்சிறந்த தோழியாக இருக்கிறாள். கால மாற்றத்தில் இராமனும் சீதையும் காட்டுக்குச் செல்கின்றனர். சீதையின் பிரிவு அகலிகையை வருத்துகிறது. இருவரும் மிதிலைக்குக் குடிபெயர்கின்றனர். அகலிகை நீராடச் செல்கிறாள்; அவளைக் கண்டு நீராட வந்த பெண்கள் ஒதுங்கி ஒளிகின்றனர். 'அவள்தான் அகலிகை' என்று அவர்கள் சொன்னது கௌதமனிடம் பெற்ற சாபத்தைவிட தீயாகச் சுடுகிறது.

கௌதமருடன் அகலிகை தீர்த்த யாத்திரைச் செல்கிறாள். அயோத்திநகரை அடைந்த அவர்கள் இரவோடு இரவாக பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு தாங்கள் வாழ்ந்த குடிசையைச் செப்பனிடுகின்றனர். பதினான்கு வருட ஆரண்ய வாழ்க்கைக்குப் பிறகு சீதை அகலிகையைச் சந்திக்க வருகிறாள். கௌதமரும் இராமனும் ஆசிரமத்தைவிட்டு வெளியே செல்கின்றனர். பதினான்கு வருடக் கதையை அகலிகையும் சீதையும் பேசுகின்றனர். சீதை மேற்கொண்ட அக்கினிப் பிரவேசம் பற்றி அகலிகையிடம் சொல்கிறாள்; அகலிகை துடிக்கிறாள். 'அவர் கேட்டார்; நான் செய்தேன்' என்று சீதை சொல்கிறாள். 'அவன் கேட்டானா?' என்று கத்துகிறாள் அகலிகை. 'அகலிகைக்கு ஒரு நீதி, அவனுக்கு ஒரு நீதியா?' என்று கேட்கிறாள் அகலிகை. ஒரு குழந்தை இருந்தால் அகலிகையின் மனம் மாறுமென்று நினைத்த கௌதமர், அவளைத் தழுவுகிறார்; மீண்டும் ஓர் இந்திர நாடகமென நினைத்த அகலிகை, மீண்டும் தன்னைக் கல்லாக உணர்கிறாள் என்பது புதுமைப்பித்தனின் கதை.

கற்பு என்னும் கனலுக்கு சனாதன தர்மத்தில் சரியான இலக்கணம் என்ன என்பதை புதுமைப்பித்தனின் கதை நமக்கு உணர்த்துகிறது. பெங்காலி, கம்போடியன், சீனம், குஜராத்தி, ஜாவனிஸ், கன்னடம், காஷ்மீரி, லாவோஷியன், மலாய், மராத்தி, ஒரியா, பிராகிருதம், சமஸ்கிருதம், சந்தாலி, சிங்களம், தமிழ், தெலுங்கு, தாய், திபெத்தன் உள்ளிட்ட பல மொழிகளில் இராமாயணம் சொல்லப்பட்டு வருகிறது என்று ஏ.கே.ராமானுஜம் (தீராநதி, டிச.2011) குறிப்பிடுகிறார். மேற்குறிப்பிட்ட எல்லா மொழிகளிலும் அகலிகை

கதையும் இராமாயணத்தோடு பல மாற்றங்களோடு சொல்லப்பட்டு வருகிறது. புதுமைப்பித்தனே தான் எழுதியிருக்கிற 'அகல்யை' என்ற மற்றொரு கதையில் அகலிகை இந்திரனிடம் சோரம்போன கதையை வேறொரு பார்வையில் நோக்குகிறார். 'அப்பா இந்திரா! உலகத்துப் பெண்களைச் சற்று சகோதரிகளாக நினைக்கக்கூடாதா?' என்று மட்டும் இந்திரனைப்பார்த்துக் கேட்கிறார் கௌதமர். 'கண்ணே அகல்யா, அந்தச்சமயத்தில் உனது உடலுமா உணர்ச்சியற்ற கல்லாய்ச் சமைந்துவிட்டது' என்று அகலிகையின் தலையைத் தடவிக்கொடுக்கிறார். உணர்ச்சி தேவனையும் மிருகமாக்கிவிடுகிறது; மனத்தூய்மைதான் கற்பு, சந்தர்ப்பவசத்தால் உடல் களங்கமானால் அபலை என்ன செய்ய முடியும் என்ற முற்போக்கான சிந்தனையைக் கௌதமர் கொண்டிருப்பதாக படைத்திருக்கிறார் புதுமைப்பித்தன்.

கம்பனில் வரும் அகலிகைக்கும் வால்மீகியின் அகலிகைக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன; குறிப்பாக, வால்மீகி இராமாயணத்தில் வரும் அகலிகை விருப்பத்தோடு இந்திரனைக் கூடுகிறாள்; கம்பரின் அகலிகை இந்திரனோடு கூடியிருக்கும்போதுதான் அவன் இந்திரன் என்பதை உணர்கிறாள். கம்பரும் வால்மீகியும் வேறுபடும் முக்கியமான இடம் இது. அதேபோலத்தான் கம்பனின் அகலிகைக்கும் புதுமைப்பித்தனின் சாபவிமோசனத்தில் வரும் அகலிகைக்கும் நிறைய வித்தியாசங்கள் உள்ளன. புதுமைப்பித்தன் தன்னுடைய கதையில் அகலிகை சாபம்பெற்ற கதையைச் சொல்லவில்லை; மாறாக அவள் சாபவிமோசனம் பெற்றபிறகு என்னவாக இருந்தாள் என்பதைத்தான் சொல்கிறார். கம்பன், அகலிகையின் சாபவிமோசன வரலாற்றை ஓர் ஆண் பார்வையில் பதிவுசெய்கிறார். அகலிகை படலத்தில்கூட இராமனின் திருவடிப்பெருமையையே கம்பர் பேசுகிறார்; அகலிகை, தன் தரப்பு நியாயங்களைக் எடுத்துக்கூறுவதற்கு கம்பர் இடம் ஒதுக்கித் தரவில்லை. தவிர, இராமனின் உயர்ந்த குணங்களை மேலும் அடுக்குவதற்காக அகலிகை பயன்படுகிறாள். ஆனாலும் வால்மீகியின் அகலிகையைவிட கம்பரின் அகலிகை மேம்பட்டவள் என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

அகலிகை சாபம்பெற இந்திரன் காரணமாக இருக்கிறான்; கௌதமர் சாபம் கொடுக்கிறார்; இராமன் சாபவிமோசனம் அளிக்கிறான். இதில் அகலிகையின் பங்கென்ன என்பதுதான் கேள்வி. இந்திரனின் காமத்தைத் தீர்க்கவும் கௌதமரின் தவவலிமையை நிரூபிக்கவும் இராமனை தெய்வ நிலைக்கு உயர்த்தவும்தான் அகலிகை கம்பருக்குப் பயன்பட்டிருக்கிறாள்.

இந்திரன் கோழிக்குரல் எழுப்பியபோது முக்காலம் உணரும் முனிவரே ஏமாந்து போனபோது, அவர் வடிவில் வந்தவனை அகலிகை கூடியது எவ்வாறு குற்றமாகும் (அடியும் முடியும், பக்.142) என்ற வினாவினை ஆய்வாளர்கள் முன்வைக்கின்றனர். இதுபோன்ற ஒரு பார்வையைத்தான் புதுமைப்பித்தனின் கதையும் முன்வைக்கிறது. அகலிகையை கௌதமருடன் சேர்த்துவிட்டு இராமன் சென்றுவிடுகிறான். ஆனால் ஒருமுறைத் தவறிழைத்ததாகக் கருதப்படுபவள் வாழ்க்கையை அவ்வளவு எளிதாக தக்கவைத்துக்கொள்ள முடியுமா? என்பதுதான் புதுமைப்பித்தனின் கேள்வி. வாழ்க்கையில் எதிர்பாராமல் வழுக்கி விழுந்தவளின் மன அவத்தைகளைத்தான் புதுமைப்பித்தனின் கதை கோடிட்டுக் காட்டுகிறது.

'முனிவர் பெருமானே இவளோ உலகத்தாய் போன்று குற்றமற்றவளாகத் தோன்றுகிறார். இப்படிப்பட்டவளுக்கும் கல்லாக மாறும் நிலை நேரிட்டதென்றால் இந்த உலகின் நடப்பை என்னவென்று சொல்வது' என இராமன் விசுவாமித்திரரிடம் கூறுகிறான். ஆனால் பிற்காலத்தில் இராமனுக்கென்று வரும்போது அவனுடைய நிலைப்பாடு என்னவாக இருந்ததென்பதும் அகலிகையின்மூலமாக புதுமைப்பித்தன் விமர்சிக்கிறார். ஊருக்காகத்தான் சீதையின் கற்பை நிரூபிக்கச் சொன்னார் என்ற ஆண் மையக் கருத்தையும் அகலிகை நிராகரிக்கிறாள். உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா? என்று சீதையோடு எதிர்வாதம் செய்கிறாள். இது சீதையை நோக்கி மட்டும் கேட்கப்பட்ட கேள்வியல்ல என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

சாபவிமோசனம் என்ற இக்கதை அகலிகையைப் பற்றி மட்டும் பேசவில்லை; இராமனையும் சேர்த்துத்தான் பேசுகிறது. இராமனால் உயிர்ப்பிக்கப்பட்ட ஒரு பெண், இராமன் தவறு செய்த இடத்தை அடையாளங்கண்டு கேள்வி கேட்கிறாள். அகலிகைக்கு இராமன் மீதிருந்த மதிப்பு கொஞ்சம் கொஞ்சமாக சரிவதை புதுமைப்பித்தன் அழகாகச் செதுக்கியுள்ளார். அகலிகையின் கேள்விக்குள் இருக்கும் நியாயத்தை எளிதில் ஒதுக்கிவிட முடியாது. ஆண்கள் ஒழுக்கத்தோடு இருக்கும்வரைதான் பெண்ணிடமும் அதனை எதிர்ப்பார்க்க முடியும் என்ற வாதத்தை அகலிகையின் கதை வழியாக மீட்டெடுக்க வேண்டும்; இதைத்தான் புதுமைப்பித்தனின் அகலிகை நமக்குக் கற்றுத் தருகிறாள்.

கம்பன் மாற்றமும் மறுவாசிப்பும்

முனைவர் மா.சிதம்பரம்
உதவிப் பேராசிரியர், அழகப்பா அரசு கலைக்கல்லூரி,
காரைக்குடி.

தமிழ் இலக்கிய வரலாற்றில் தம் கவியாற்றல் மூலம் தனி இடம் பெற்றோர் வரிசையில் முன்நிற்பவர் கம்பர். வால்மீகியிடமிருந்து தன் காப்பியத்திற்கான கதைக் கருவினைப் பெற்றுக் கொண்டாலும் தேவையான இடத்து மாற்றங்கள் செய்து காப்பியத்திற்கு மதிப்பு கூட்டிய பெருமை கம்பரையே சாரும். காப்பியத்துள் இடம்பெற்றுள்ள சில மாற்றங்களை மறுவாசிப்புச் செய்தலே இக்கட்டுரையின் நோக்கம்.

அகலிகை சாப விமோசனம்

கம்பர் வான்மீகத்தினின்று மாற்றம் செய்த காப்பிய நிகழ்வுகளுள் முன்நிற்பது அகலிகை சாபவிமோசனம். கௌதமமுனிவரால் கல்லாய்க் கிடக்குமாறு சபிக்கப்பட்ட அகலிகை இராமனின் பாதம் பட்டு பெண்ணானாள் என்பது வான்மீகம். கம்பரோ இதனில் மாற்றம் செய்து காகுத்தனின் கால் தூசிபட்டு அகலிகை சாப நீக்கம் பெற்றாள் எனக் குறிப்பார். கம்பரின் இத்தகைய கருத்துக்குச் சான்றாய்,

"தழைத்து வண்டுஇமிரும் தண்தார்த் தசரத ராமன் என்பான்
கழல்துகள் கதுவ இந்தக் கல்உருத் தவிர்தி என்றான்"

(பால:556: -4)

எனக் கௌதம முனிவன் உரையும் அகலிகை கல் உரு நீங்கி பெண்ணாகிய நிகழ்வைக் குறிக்குமிடத்து, விசுவாமித்திரன் கூறும்,

"அஞ்சன வண்ணத் தான்ற னடித்துகள் கதுவா முன்னம்
வஞ்சிபோ லிடையாள் முன்னை வண்ணத்தளாகி நின்றாள்"

(பால:561:1-2)

என்ற அடிகளும் சான்றாய் அமையும். கம்பனால் செய்யப் பெற்ற இந்த மாற்றம் மாற்றான் மனைவியை, அயலான் ஒருவன் தீண்டுதல் தமிழ்மரபன்று எனும் கருத்தியல் சார்ந்து அமைந்தது என்பது ஆன்றோர் வாக்கு. இக்கூற்று ஒருபுடை உண்மைத்தன்மை உடையது எனினும், இதுவே முற்றுமான முடிவும் அன்று. இது மீண்டும் வாசிப்பதற்கு உரியதே. ஆன்றோர் உரைத்தார் போன்று இம்மாற்றம் அகலியையும் தமிழ்மரபையும் நோக்கி மட்டும்

செய்யப்பட்டதன்று. காப்பிய நோக்கத்தினையும் இராமனின் பாத்திர நோக்கத்தினையும் கருத்தில்கொண்டு அமைக்கப்பட்டதே ஆகும். இதற்கு அகலிகை வாழ்வியல் நிகழ்வுகள் அரணாகும்.

தன் கணவன் நீங்கியவிடத்து, அவன் உருவில் வந்து தன்னைச் சேர்ந்தவன் இந்திரன் என்பதனை அகலிகை முதற்கண் அறிந்தாள் இல்லை. எனினும், பின் அறிந்தவழியும், அத்தீச்செயலுக்கு உடன்பட்டாள் என்பார் கம்பர். இதனை,

"புக்கு அவளோடும் காமப் புதுமண மதுவின் தேறல்
ஒக்க உண்டு இருத்தலோடும் உணர்ந்தனள் உணர்ந்த பின்னும்
தக்கது அன்று என்னஓராள் தாழ்ந்தாள் இருப்பத் தாழா
முக்கணான் அனைய ஆற்றல் முனிவனும் முடுகி வந்தான்"

(பால:552)

என்ற பாடல் காட்டும். இப்பாடல் அகலிகை தேறல் உண்டிருந்தமையால், தான் செய்யும் செயல் தக்கதன்று என ஆராய்ந்து விலக்கக்கூடிய அறிவுத் திறனை பெறாமல் இருந்தாள் என்பதைக் காட்சிப்படுத்தும். அகலிகையின் இத்தகைய செயலின் தன்மையை அறிந்தே கௌதம முனிவனும் அவளை,

"மெல்லிய லாளை நோக்கி விலைமகளென நீயும்
கல்லியலாதி யென்றான் ...." (பால:555:3-4)

எனக் குறிப்பான். இத்தகைய நிலையில் "நிரந்திர உலகினிற்கு நெடும் பழி பூண்டாள்' (பால : 553 :3) ஆகிய அகலிகையின்மீது நடையின் நின்றுயர் நாயகனாகிய இராமனின் பாதம் படும்ஆகில், இம்மையில் இருமாதரைச் சிந்தையில் தொடேன் என்ற வாழ்வியல் அறத்தினை வலியுறுத்த வந்த இராமனின் பாத்திர மாண்பிற்கு மாசு சேர்க்கும் என்பதாலே, கம்பர் இம்மாற்றம் செய்தார். எனவே தான் அகலிகை பெண்ணாய் எழுந்த நிகழ்வைக் குறிக்குமிடத்து, 'தீதிலா உதவி செய்த சேவடிக் கரிய செம்மல்' (பால 559 -1) என இராமனைப் புகழ்வார் கம்பர். இவ்விடத்து, 'தீதிலாஉதவி' என்பது இராமன் அகலிகைக்குச் செய்தது மட்டுமன்று; தன் பாத்திரப்படைப்பு மாசுறாமல் காப்பியநோக்கிற்குச் செய்ததுமாகும்.

சீதை சிறையெடுப்பு

கம்பர் வான்மீகத்தினின்று தன் கதைப் போக்கினை மாற்றியமைத்த பிறிதோர் இடம் சீதையை இராவணன் சிறையெடுத்த நிகழ்வாகும்.

தனித்திருந்த சீதையினை இராவணனன் மெய்தொட்டு எடுத்துப் போனான் என வால்மீகி குறிக்கக் கம்பரோ, இந்நிகழ்வினை மாற்றிப் பர்ணசாலையுடன் பெயர்த்துப்போனான் எனக் குறிப்பார். இத்தகைய செய்தியினைக் குறிக்கும் பாடல்,

"ஆண்டு ஆயிடைத் தீயவன் ஆய்இழையைத்
தீண்டான், அயன் முன்உரை சிந்தை செயாத்
தூண்தான் எனலாம் உயர்தோள் வலியால்
கீண்டான் நிலம்! ஓசனை கீழ்புடையே" (ஆரண்ய:884)

என்பதாம். இந்நிகழ்வே பிறிதோர் இடத்தும் பேசப்படும். இராமனின் ஏவலால் தென்திசை இலங்கையில் சீதையைத் தேடிச் செல்லும் அனுமன் அசோவனத்தின்கண் அவளைக் காண்பான். அண்டர் நாயகன் அருட்தூதன் தானெனச் சீதைக்குத் தெரிவித்து, அவளது கலக்கம் தீர்த்தபின் அவளை இராமனிடம் சேர்ப்பிக்க விரும்புவான். அனுமனின் இவ்விருப்பத்தினை,

"வேறினி விளம்பவுளது அன்று; விதியால்இப்
பேறுபெற என்கண் அருள்தந்தருளு; பின்போய்
ஆறுதுயர் அஞ்சொல் இளவஞ்சி! அடியேன் தோள்
ஏறுகடிது என்று தொழுதுஇன்அடிபணிந்தான்" (சுந்தர:616)

என்ற பாடல் விளக்கி நிற்கும்.

அனுமனின் இவ்வுரையைக் கேட்ட சீதையோ, அனுமனின் ஆற்றலுக்குத் தன்னை இராமனிடம் சேர்க்கும் செயல் அரியதன்று என உரைப்பதுடன், காகுத்தனின் வில்லாற்றலுக்குக் களங்கம் ஏற்படல் ஆகாது என்பதனாலே அல்லல் மாக்கள் இலங்கையைத் தன் சொல்லினால் சுடாது இருப்பதாய் விரித்துரைப்பாள். இத்தகைய காரணம் இயல்பாய்அமையினும், இவற்றுள் தனித்து நிற்பது அனுமனை மையப்படுத்தி சீதை உரைக்கும் அடுத்த காரணம் ஆகும். அக்காரணம், அனுமன் ஆண்மகன் ஆதலின் தீண்டல் இயலாது என்பதாம். இத்தகு கருத்திற்கு,

"வேறும் உண்டுஉரை கேள்அது மெய்மையோய்
ஏறு சேவகன் மேனி அல்லால் இடை
ஆறும் ஐம்பொறி நன்மையும் 'ஆண்' எனக்
கூறும் இவ்உருத் தீண்டுதல் கூடுமோ...." (சுந்தர:625)

என்ற பாடல் அரணாகும். சீதை இத்தகைய காரணத்தோடு அனுமனை

மறுத்துரைப்பதுடன், இராவணன் சிறையெடுத்த நிகழ்வினையும் இவ்விடத்து வலிந்தே சுட்டுவாள் இதற்கான பாடல்,

"தீண்டுவான் எனின் இத்தனைச் சேண்பகல்
ஈண்டுமோ உயிர்மெய்யின்! இமைப்பின் முன்
மாண்டு தீர்வனென்றே நிலம் வன்மையால்
தீண்டு கொண்டு எழுந்து ஏகினான் கீழ்மையான்" (சுந்தர:626)

என்பதாம். காமவயப்பட்டவனாகிய இராவணன் தன்னைத் 'தீண்டலன்' எனச் சீதை குறிப்பது பொருத்தமுடையதாகும். ஆனால் இச்செய்தியை அனுமனைத் தான் தீண்டுதல் தகாது, எனக் குறிக்குமிடத்து இணைத்துக் கூறுதல் பொருத்தம்தானா? சீதையைத் தாயெனப் போற்றியவன் அனுமன் என்பதற்கு,

"ஏயநல் மொழி எய்த விளம்பிய
தாயை முன்னிய கன்று அனையான் தனக்கு
தூய தன்மை அரிய தன்றால்! எனத்
தூயமென் சொல் இனையன சொல்லினாள்" (சுந்தர:617)

என்ற கம்பராமாயண அடிகள் சான்றாகும்.

இத்தகைய அனுமனிடத்து சீதை கூறிய கருத்து தேவைதானா? என்ற வினா எழுவது இயல்பு. இத்தகு வினாவிற்கு விடைகள் இரண்டாய் அமையலாம். முதல்நிலையில் சீதை அனுமனுடன் வர மறுத்ததற்கு உண்மையான காரணம், சீதை, தான் நோற்ற தவமாம் கோலத்தினை இராமன் காணவேண்டும் என விழைந்ததே ஆகும். கற்பினை எப்பரிசு இழைத்துக் காட்டுவேன் என வருந்தியவளுக்கு இராமன் தன்கோலம் கண்டு சிறைமீட்பதே அறம் எனத் தோன்றி இருக்க வேண்டும். காப்பியத்தின் இறுதிப்பகுதியிலும் சீதை வீடணனிடத்து ராமனைக் காணத் தவக்கோலத்துடன் வருவதாய்க் கூறும் கூற்றும் இதற்குச் சான்றாகும். பின் அனுமனிடம் கூறியதற்கான காரணம் " கண்ட பொருளை கொண்டு செல்ல வேண்டும் ' என்ற வானரத்தின் உளவியல் நிலையினைத் தெரிந்துகொண்டு அனுமனை அமைதியுறச் செய்வதற்கான முயற்சியே ஆகும்.

இரண்டாம் நிலை சீதையின் உளவியல் சார்ந்தது. இராவணனை "கீழ்மையான்" எனச் சீதை குறிப்பதினின்று அவளின் உளவியல் வெளிப்படும். இராவணன் என்ற ஆண் உருவினைக் 'கண்ட நாள் முதல் சீதையின் வாழ்வில் ஏற்பட்ட துன்பங்கள் "ஆண் உருவின் மீதே" அவளுக்கு கோபத்தினை உருவாக்கியது. எனவேதான்

அவள் இவ்வுருத் தீண்டுதல் கூடுமோ? எனக் குறிக்கின்றாள். எனவே இத்தகைய கூற்றினை அனுமனை நோக்கி கூறியதாய்க் கொள்ளாது இராவணன் போன்று ஆண் உருக்கொண்டு அமைந்தோரைக் கூறியதாய்க்கொள்ளலே பொருத்தமுடையதாகும்.

விராதன் சீதையைக் கவர்தல்

கம்பராமாயணத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளுள் ஒன்று விராதன் வதையாகும். ஆரண்யத்திற்குள் புகும் இராம இலக்குவனருடன் போர் புரியும் முதல் பாத்திரம் விராதன் என்பதாம். இராமயணத்துள் சீதையினை முதன் முதலில் கவர்ந்துகொண்டு வான் ஏறும் பாத்திரமும் இதுவே ஆகும். அகலிகை சாப விமோசனத்திலும், சீதை இராவணனால் சிறை எடுக்கப்பட்ட நிகழ்வுகளிலும் வான்மீகத்தை மாற்றிக் கதை நகர்த்தும் கம்பர், விராதன் சீதையைக் கவரும் நிகழ்வில் மாற்றம் செய்தாரில்லை. விராதன் சீதையை கவர்ந்து சென்றதை ,

“நில்லு நில்லுமென வந்து நிணமுண்ட நெடுவன்
பல்லும் வல்லெயிறு மின்னு பகுவாய் முழைதிறக்
தல்லி புல்லு மலரன்ன மனையாளை யொருகைச்
சொல்லு மெல்லையின் முகந்துயர் விசும்பு தொடா” (ஆரண்ய:19)

என்ற பாடல்வழி விளக்கும் கம்பர், விராதன் கையினால் பற்றிச் சென்றான் எனக்குறிப்பார். கம்பர் இவ்விடத்து மாற்றம் செய்யாமைக்கான காரணம் அறிதற்குரியது. விராதன் சீதையைக் கவர்ந்து சென்றவிடத்து, விராதன் மனத்தினுள் எழுந்து நின்றது இராம இலக்குவனர்மீதான சினமேயன்றி இராவணன் போன்று சீதையின்பால் எழுந்த காமமன்று. இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற அடிப்படை நோக்கமும், விராதன் கவர்ந்து சென்ற அடிப்படை நோக்கமும் முரண்பட்டவை. காமவயப்பட்டவன் அச்சிந்தனையோடு பெண்ணைத் தீண்டுதல் தவறானது என்பதால் அங்கு மாற்றம் செய்த கம்பர், இவ்விடத்து மாற்றம் செய்யாது கதைப்போக்கினை நிகழ்த்திச் செல்கிறார்.

கம்பர் தம் காப்பியத்துள் செய்த மாற்றங்கள் ஆண்மகன் பிறன் மனைவியைத் தீண்டுதல் தகாது என்ற பொதுவிதியினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அமைந்ததல்ல. காப்பிய நோக்கினையும் பாத்திரமாண்பினையும் காக்கும் வண்ணம் கதை நிகழ்வை நகர்த்திச் செல்லுதலை அடிப்படையாகக் கொண்டும் அமைந்ததுமாகும் என்பது ஆய்வின்வழி அறியலாகிறது.

கம்பன் 'மருட்பா' பாடிய இயக்கங்கள் - ஒரு மீள்பார்வை

கவிஞர் இராசா முகம்மது
தென்காசி.

கம்பன் மருட்பா இயக்கங்கள் தமிழ்நாட்டின் வடக்கே முளைத்தனவென்றால், தெற்கே நெல்லைச்சீமையில் தோன்றிய ரசிகமணி டி.கே.சி. சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை, பாஸ்கர தொண்டைமான், ஜஸ்டிஸ் மகராஜன், பட்சிராஜன், பால்நாடார். பி.ஸ்ரீ. சதாவதானி செய்குதம்பிப்பாவலர், மக்கள் தலைவர் ஜீவானந்தம், வையாபுரிப்பிள்ளை, வெ.ப.சுப்பிரமணியமுதலியார், ஜகவீரபாண்டியனார், இராமானுஜ கவிராயர் என்று மிகப் பெரும் அறிஞர்கூட்டத்தின் எழுச்சியும், அதற்குத் துணையாக நின்ற மூதறிஞர் ராஜாஜி, கல்கி, கம்பனடிப்பொடி, நீதியரசர் மு.மு.இஸ்மாயில் போன்ற பெருமக்களின் இடையறாத உழைப்பும், திருமுருக கிருபானந்தவாரியார், டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர், பேரா. அ.ச.ஞானசம்பந்தன், புலவர் கீரன் போன்றவர்களின் பேச்சாற்றலும் நாடெங்கும் கம்பன் கழகங்கள் உருவாகிக் கன்னித்தமிழ் வளர்க்கும் கடும் தவத்தைப் புரியக் காரணமாயின.

திருவருட்பாவை மருட்பா எனக் கூறி ஆன்மீக உலகில் எழுந்த கலகக்குரல், நீதிமன்றங்களின் நெடிய படிக்கட்டுகளில் ஏறிஇறங்கி ஒரு முடிவுக்கு வந்த சற்றொப்ப அதே காலகட்டத்தில், அரசியல் செல்வாக்குடன் இலக்கிய உலகில் எழுந்தது இக்கல(ழ)கக்குரல்.

"வால்மீகி இராமாயணத்திற்குத் தரப்பட்ட ஆன்மீக அந்தஸ்து கம்பராமாயணத்திற்கு அப்போது தரப்படவில்லை.. வைகுந்தவாசல் வால்மீகி இராமாயணம் கேட்பருக்கு மட்டுமே திறக்கும், கம்பராமாயணம் கேட்டவருக்குக் கதவுகள் அடைபடும்..இராமாயணத்தில் சத்ருகனுக்குக் கிடைத்த இடம் கூட கம்பனுக்குக் கிடைத்ததில்லை. கதாகாலட்சேபம் உபந்யாசம் என்று வாடகை வீடுகளில் வசித்து வந்த கம்பராமாயணத்தை கம்பன் கழகங்கள் என்ற சொந்த வீட்டில் குடியமர்த்திய பெருந்தகை அமரர் கம்பனடிப் பொடியாவார்... சமய மேடைகளிலிருந்து கம்பராமாயணம் கம்பன் கழக மேடைகளுக்கு மாறியதால் முதன்மை இராமனிலிருந்து கம்பனுக்கு மாறியது." (சுகி சிவம், கம்பன் நேற்று - இன்று - நாளை பக்கம் 16)

காரைக்குடியில் மோகனூர் கோவிந்தராஜ ஐயங்கார் கம்பனில் கொண்ட ஈடுபாட்டால் 'கம்ப நாடர்' என்ற பெயரில் பத்திரிகை நடத்தினார். (மேலது, ப. 25)

இந்நிலையில், "அண்ணாவைப் போன்றவர்களே, கம்பராமாயணத்தில் தேடித் தேடிக் குறை கண்டுபிடித்துப் பேசத் தொடங்கினர். மிகச்சிரமப்பட்டு சமய அங்கீகாரம் பெற்ற கம்பராமாயணத்தின் தெய்வீகம் காயப்படுத்தப்பட்டது. அதில் உள்ள சிருங்காரசுவை மேடைகளில் பேசப்பட்டு கம்பரசம் பாயத் தொடங்கியது. கம்பனுக்குத் தர்மசங்கடமான காலம் தோன்றிவிட்டது. வேடிக்கையாகச் சொன்னால் கம்பனுக்கு ஏழரைச் சனி பிடித்த காலம் அது. இலக்கிய சமய விவாதங்களோடு கம்பராமாயண எதிர்ப்பை நிறுத்த விரும்பாத திராவிட இயக்கங்கள் அரசியலாக்கும் அடுத்த கட்ட நடவடிக்கைகளில் இறங்கினார்கள். எரியூட்டுப் படலம் தொடங்கியது. மிகக்கடுமையான தாக்குதல்கள், விமர்சனங்கள், கண்டனங்கள் என்னும் அரசியல் படலம் ஆரம்பமானது. தேசிய எதிர்ப்பும் கம்பன் எதிர்ப்பும் ஒன்றாக அடையாளம் காணப்பட்டது. இராமபக்தி கொடுமையாகக் கேலி செய்யப்பட்டது"(மேலது, ப. 22)

கம்பனை மட்டுமா கடவுளையும் வம்பிக்கிழுத்த இந்தக் கொம்பர்களால் தமிழ் கலை பண்பாடு பக்தி எல்லாமே பாழாகிவிடுமோ என்று பதைபதைத்தவர்கள் உண்டு. அவர்கள் கம்பனை மட்டும் பழிக்கவில்லை, அயோத்தி மக்களைப் பழித்தனர்

"மாதரில் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்"

என்ற அடிகளை வைத்துக்கொண்டு மற்ற பெண்கள் கற்பற்றவர்கள் என்றனர். ரசிகமணியோ,

"மாதரில் வயதின் மிக்கார் கோசலை மனத்தை ஒத்தார்"

என்றே அவ்வடி இருக்க முடியும் என திருத்தம் செய்தார். பின்னர் "மாதரில் ஆண்டின் மிக்கார்" எனப் பாடபேதத்துடன் ஏடும் கிடைத்தது.

சீதையைப் பழிக்க,

"மனத்தினால் வாக்கினால் மருவுற்றேன் எனில்"

என்று சீதை கூறி, தீப்புகுந்ததாக கம்பன் கூறியதாகக் கதைவிட்டனர்.

இதைச் செருகுகவி என்று கம்பனைக் குடல் விளக்கம் செய்தார் ரசிகமணி. இப்படிக் கம்பன் மீதும் மகளிர் மீதும், சீதை மீதும்

இராமன் மீதும் வீசப்பட்ட சொல்லம்புகளைத் தம் ஆய்வில் தோய்ந்த அறிவுப்பாணங்களால் ரசிகமணி முறியடித்தார்.

"கம்பராமாயணம் தமிழின் விசுவரூபம். தன்னை நோக்கி - மண்ணை நோக்கி - மேலிருந்து கீழாகப் பொருட்களை இழுக்கும் புவிஈர்ப்புமையம். மக்களை அனைத்துக் கீழ்மைகளிலிருந்தும் விடுவித்து மேல்நோக்கித் தூக்கும் கவிஈர்ப்புமையம் கம்பன். அன்னைத் தமிழின் அனைத்து ஆற்றலையும் அத்துணை அழகுகளையும் ஒருசேர வெளிப்படுத்திக் காலம் வழங்கிய காவியக்கொடைக் கம்பன். விளக்காக வந்த படைப்புகளிடையே கிழக்காக வந்தவன் கம்பன். நோய்களைத் தீர்க்கும் நாட்டு மூலிகைகளின் பாட்டுப் பண்ணையாகக் கம்பன் காவியம் கண் விழித்தது"(கவிமாமணி தி.மு.அப்துல் காதர், தமிழும் கம்பனும் - பக்கம் 14) என்று கம்பனின் மகத்துவத்தைப் பாராட்டும் கவிமாமணி தி.மு.அப்துல்காதர் கம்பன் மருட்பா இயக்கமாகக் கடந்த நூற்றாண்டின் நாற்பதுகளில் முழக்கமிட்ட திராவிட இயக்கப் பாசறையில் 65 மொழிப்போரின் மூலம் ஒரு போராளியாகத் தம் பொதுவாழ்வைத் தொடங்கியவர்.

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் மருட்பா என்று உரைக்கப்பட்ட கம்பனின் திருப்பாவைப் பற்றி அந்நூற்றாண்டின் இறுதிக்குள் எப்படிப்பட்ட கருத்தியல் மாற்றம் ஏற்பட்டது என்பதற்கான அத்தாட்சியாகக் "கவிமாமணியின் "கம்பனும் தனிழும்" கம்பனுக்குச் சூட்டப்பட்ட சந்தன மாலை" என்று தினமணி தமிழ்மணி கலாரசிகன் (தினமணி 04.11.2012) பாராட்டுவது மருட்பா இயக்கத்தில் கூட எப்படி ஒரு மீள்பார்வை ஏற்பட்டுள்ளது என்பதற்கான வரலாற்றுப் பட்டயம் ஆகும்.

வானமளந்த தனைத்தும் அளந்த வண்டமிழில், ஊனை உணர்வை உயிரை உருக்கி உள்ளொளி பெருக்கும் கம்பனின் காவியம், அண்ணா முதல்வரான பிறகு சட்டமன்றத்தில் ஓர் எதிர்க்கட்சி உறுப்பினர் "நீங்கள் கம்பராமாயணத்தைக் கொளுத்தச் சொன்னவர் தானே" என்று கூற,

"நாங்கள் அந்த நாட்களைக்கடந்து வெகுதூரம் வந்து விட்டோம், நீங்கள் ஏன் அங்கேயே நின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்று வினவினார்.

ஆக மூலவரே அதை நினைவுகூர விரும்பாத நிலையில், பின்னர் அவர்வழி வந்தோரும் கம்பன் கழக விழாக்களில் பங்கேற்றனர். கம்பனைப் புகழ்வதில் நாங்கள் சளைத்தவர்கள் அல்ல என

நிலைநாட்டினர். இதோ, அவர் போன்றோரே "கம்பன் வேறு தமிழ் வேறு அன்று. கம்பனும் தமிழும் தனித்தனிச் சொற்களல்ல, ஒன்றையே உணர்த்தும் ஒரு பொருட் பன்மொழி எனலாம். தமிழும் கம்பனும் 'அர்த்தநாரி' என்றால் மிகையில்லை. நிலத்தை அபகரித்துவிட்டு நெடில் நதிகள் நடக்கமுடியுமா? வற்றாத கம்ப வரலாற்றைத் தமிழ்நிலத்தை விட்டுத் தனியே பிரிக்க முடியுமா?" (கவிமாமணி தி.மு.அப்துல் காதர். தமிழும் கம்பனும் - பக்கம் 165-166) இப்படிப் போற்றுபவர்,

கம்பனடிப் பொடியின் - கம்பனின் ரசிகமணியின் வழிவந்தவர் அல்ல. கம்பரசம் நீதிதேவனின் மயக்கம், தீ பரவட்டும் என்று 20ஆம் நூற்றாண்டின் நாற்பதுகளில் சொற்போர் என்ற பெயரால், அரசியல் பின்பக்கத்தோடும் மற்போருக்கு முற்பட்டு, நாவலர் சோமசுந்தர பாரதியாரையும், சொல்லின் சல்வர் இரா.பி.சேதுப்பிள்ளையையும் வம்புக்கிழுத்து தெம்புடன் வாதிட்டவரின் அரசியல் பிறங்கடைகள், ஒரு முப்பதாண்டுகளுக்குள் தங்கள் காட்சிப்பிழையைத் திருத்திக் கொண்டு மீட்சி பெற்றதற்கான வரலாற்றுப் பட்டயம் இது.(கோவை இளஞ்சேகரன், பட்டிமண்டப வரலாறு - பக்கம் 236)

"யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்
போரொடுங்கும் புகழ் ஒடுங்காது"

என்று கம்பனே கூறும் வாழ்வியல் நெறியைப் பின்பற்றி வாழ்ந்த ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார்கூடத் தம் பொதுவாழ்வை நீதிக்கட்சியில் தொடங்கியவர்தாம்.

மருட்பாவின் உச்சமாக இராவணகாவியம் கூட வெளிவந்தது. மூதறிஞர் இராஜாஜி கூறுகிறார் "இராமாயணக்கதை நம்முடைய நாட்டின் தங்கச்சுரங்கம். அதிலும் கம்பன் பாடிய இராமகாதை 24 மாற்று அபரஞ்சி." "கம்பனை வெற்றி பெறச் செய்ய ஒரு சத்தியயுகம் நடந்தது. இப்படி ஒரு யுகத்தை நடத்தியவர் டி.கே.சி. எனும்போது அவரைப் பொதிகை முனிவர் என்றோ அப்பொதிகை முனிவரின் சன்னதியில் ஒரு சத்திய யுகம் நடந்தது என்றோ கூறலாம்." (காவ்யா சண்முகசுந்தரம் (தொ.ஆ)இரசிகமணி ரசனைத் தடம் - ப. 20)

கம்பனும் கடவுளும் இன்று தமிழ்மக்கள் உள்ளத்தில் தங்கச் சிம்மாசனம் இட்டு அமர்ந்திருப்பதற்குச் சாட்சி, நீதிபதி மு.மு.இஸ்மாயில் உருவாக்கிய சென்னை கம்பன் கழகத் தலைவர்; ஆர்.எம்.வீரப்பன்;, வைணவத் தமிழ் மையம் வளர்க்கும் மத்திய அமைச்சர் ஜகத்ரட்சகன்,

தி.மு.அப்துல் காதர் போன்றோர் திராவிட இயக்கப் பரிணாம வளர்ச்சியின் இன்றைய எச்சங்கள்! இவர்கள் மருட்பா இயக்கங்களில் நேர்ந்த மீள்பார்வைக்கு இரத்தசாட்சிகள் ஆவர்.

இன்று எவரும் கம்பனிடம் வம்பு பேசும் தெம்புடன் இல்லாதது மட்டுமல்ல கம்பன் புகழ்பாடி கன்னித் தமிழ் வளர்க்கும் பணியில் அணியாக இருக்கிறார்கள். ஆம்;: இதைத்தான் 'மானுடம் வென்றதம்மா' என்று கம்பன் அன்றே, நன்றே குறிப்புக் காட்டினானோ?

மருட்பா இயக்கங்களின் எதிர்வினையாய், தமிழ்கூறும் நல்லுலகெங்கும் ஓர் இலக்கிய எழுச்சி ஆழிப்பேரலையாய் எழுந்து ஏற்படுத்திய தாக்கம், இன்றளவும் நின்று நிலவி என்றுமுள தென்றமிழில் கம்பன் வென்று முடிசூடிக் கவிச்சக்கரவர்த்தியாக அரசோச்சக் காரணமாயிற்று என்று காலம் கட்டியம் கூறி நிற்கிறது.

கம்பராமாயணம் - ஆரியமான திராவிடம்

திருமிகு. ம.சந்திரகுமார்
முனைவர் பட்ட ஆய்வாளர், சுப்பிரமணியபாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப்பல்கலைக்கழகம், புதுச்சேரி.

முன்னுரை

திசையெங்கும் இராமன்- இராவணன் வீர மாண்பினைப் பரப்பும் இராமாயணக் கதைகள் பல இருப்பினும் தமிழகத்தில் பக்தி இலக்கியத்திற்குப் பின் தோன்றிய இலக்கியங்களுள் பாட்டிற்குரிய சொல்லழகு, நடையழகு உவமையழகு, இயற்கையழகு இவை போன்ற எல்லா அழகுநயங்களையும்; பெற்றிருப்பது கம்பராமாயணம்; எனில் மிகையன்று, எனவேதான் கம்பர் தான் கொண்ட பெயரான இராமாவதாரம் எனும் பெயர் நிலையில்லாமல் ஆயிற்று. கம்பரின் கவிதையழகில் தம்உள்ளங்களைப் பறிகொடுத்த புலவர்களின் பொருட்டே சக்கரவர்த்தியானார். அவ்வகையில் ஏற்றம் பெற்றிருந்த கம்பர் தனது காப்பியத்தில் ஆரியச் சமயக்கொள்கைகளைக் கூறியுள்ளார். அவதார புருடர்களாகக் கருதப்படும் வட பெருவேந்தர்களில் ஒருவனான இராமன் (வால்மீகி) சிலரின் துணை கொண்டு தென்திராவிட (சைவ) சமய நெறியினைப் பின்பற்றி வாழ்ந்த பெருவேந்தனான இராவணனையும், அவரைச் சார்ந்த திராவிட மக்களையும் அழித்து ஆரியச்சாயலை நிலைநிறுத்தியமையைப் பகரும் முகமாகவே இக்கட்டுரை அமைகிறது.

திராவிட நாடும் திராவிடரும்

மிகத் தொன்மைவாய்ந்த நாகரிகமக்களாக விளங்கும் திராவிடர்கள் விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள இந்திய நிலப்பரப்பு முழுவதிலும் வாழ்ந்து வருகின்றனர் எனலாம். மேலும் இந்தியாவின் வடகிழக்கு- வடமேற்கு போன்ற இடங்களில் வாழ்ந்துவரும் மக்கள் கூடத் திராவிடக் கலப்பினமாகவே காணப்படுகின்றனர். திராவிட-ஆரியன், திராவிட-மங்கோலியன், திராவிட-விந்தியன் இவையேயன்றி இன்னபிற திராவிடக்கூறுகளும் காணப்படுகின்றன. அவ்வகையில் இன்றும் இந்தியாவிற்கு அடுத்த வடமேற்கில் திராவிட இனமாகக் கருதப்படுகின்ற பிராகூயி மொழியொன்று பேசப்படுகிறது. சிந்துவெளிநாகரிகமே திராவிடர் நாகரிகம் என்பது பல ஆய்வாளர்களின் கருத்தாக அமைந்திருப்பதையும் காண முடியும். ஹரப்பா,மொகஞ்சதாரோ போன்ற

அகழ்வாராய்ச்சியின் முடிவும் திராவிடர்களே பெருத்த நாகரிகத்தோடு வாழ்ந்தாரெனச் சர்ஜான் மார்ல் அவர்களும் உலகத்தாருக்குப் பறைசாற்றி இருக்கிறார். திராவிடர் என்போர் இந்தியா முழுவதும் அவற்றைச் சார்ந்த பிற பகுதிகளிலும் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதைப் பல நிலையில் ஆய்வுக்குட்படுத்திய மேனாட்டாசிரியர்களின் கருத்துகளும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அமைகின்றன.

"மக்கள் கூட்டத்தாரைப் பல வகுப்பினராய்ப் பிரித்தறிவதற்கு மேனாட்டாசிரியர்கள் சில திட்டமான அடையாளங்களைக் கண்டு பிடித்திருக்கின்றனர். அவை உடம்பின் உயரம், நிறம், தலைமயிரின் வடிவம் நிறம், கண்களின் அமைப்பு நிறம், தலையின் அமைப்பு, மூக்கின் அமைப்பு முதலியனவாகும். இவ்வடையாளங்களில் பெரும்பாலும் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைக் கொண்டும் அவ்வவற்றால் வெவ்வேறு குழுவினராகத் துணியப்பட்ட மக்கள் பகுப்பினர் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னே தொட்டுத் தமக்குள்ளே வழங்கி வந்த மொழிகளின் அமைப்பைக்கொண்டும் அவ்வாசிரியர்கள் நுணுக்கமாக ஆராய்ந்துபார்த்ததில் தமிழர்களும் அவர்களோடு இனமான திராவிட மக்களும் பெரும்பாலும் குள்ளமான வடிவினரென்றும், கரிய நிறத்தினரென்றும் தழைத்த கூந்தலும் அதில் ஒரோவொருகாற் சுருண்ட மயிரும் வாய்த்தவரென்றும், கரிய விழியினரென்றும், நீண்ட மண்டையோட்டினரென்றும், ஒரோவொருகால் அடியிற் குழிந்த அகன்ற மூக்கினரென்றும், என்றாலும் அதனால் தட்டையாகக் காணப்படாத முகத்தினரென்னும் திட்டமாய் அறியலாயினர். இங்ஙனம் அறியப்பட்ட உறுப்படையாளங்கள் உடைய தமிழரும் அவர் இனத்தவருமே இப்போது இலங்கை முதல் இமயம் வரையில் பரவியிருக்கும் மக்கள் கூட்டத்தாரில் பெரும் பகுதியினராய்க் காணப்படுகின்றனர் என ரிசிலி என்பாரும், ராப்சன் என்பாரும் கருதுவதாக மறைமலையடிகள் தமிழர் மதம் என்னும் நூலில் திராவிடர்கள் பற்றிய செய்திகளைக் கூறியுள்ளார்" (மறைமலையடிகள், தமிழர் மதம்,2008,ப.43-44)

திராவிடர் என்போர் உடம்பின் அமைப்பிலும் மொழியின் அமைப்பிலும் இந்தியா முழுவதும் அதற்கப்பாலும் வாழ்ந்தாரெனக் கருத இடமளிக்கிறது.

ஆரியர் வருகையும் நாடு பிடிப்பும்

இந்தியமக்கள் பன்னெடுங்காலந்தொட்டே திராவிட இனத்தவர்களாக வாழ்ந்தார்கள் என்பதைப் பல்வேறு சான்றுகள்

பறைசாற்றியவண்ணம் இருக்கின்றன. இந்தியா முழுவதும் கோலோச்சிய திராவிடர்கள் ஆரியர் வருகைக்குப் பின் அவர்களின் சூழ்ச்சியால் தம்மை மறந்து அவர்களுக்குத் துதிபாடும் மாந்தராய் வாழ்ந்தார்கள், ஆடு, மாடு, மேய்க்க வந்த ஆரியர் நம் நாட்டுச் செல்வச்செழிப்பினைக் கண்டு வியந்து, இங்கேயே தங்குவதற்கு ஆயத்தமானார்கள், பின்னர் மெல்ல மெல்ல நாடு பிடிக்கும்பொருட்டுத் தன்மொழியினையும் பண்பாட்டுக் கலாச்சாரத்தினையும் பரவச் செய்து அடிமைப்படுத்தினர்.

"வந்தேறிய குடிகளான ஆரியர்களின் உருவத் தோற்ற அமைப்பினை இந்திய ஆரியர் என்பார் பெரும்பாலும், நீண்டுயர்ந்த யாக்கையினரென்றும், வெள்ளைநிறத்தினரென்றும், கரிய அல்லது நீளவிழியினரென்றும் முகத்தின் மேல் மிகுந்த மயிரினரென்றும், நீண்ட மண்டையினரென்றும், ஒடுங்கி உயர்ந்திருந்தாலும் தனிப்பட்ட நீளாத மூக்கினரென்றும் மேனாட்டாசிரியரான ரிசிலி, என்பாரும் ராப்சன் என்பாரும் கருதுவார் என மறைமலையடிகள் ஆரியர் இன்னாரென்பதை விவரித்திருப்பார். (மேலது, ப.46)

"வெள்ளை நிறத்தினரான ஆரியர்கள் அளவிற் சுருங்கியிருந்தாலும் பல திராவிடக்கூட்டத்தாரிடையே தங்களுடைய மொழியையும், பண்பாடுகளையும் பரவச்செய்து, அவர்களைத் தங்களோடு சேர்த்து தங்கள் நிலையைப் பலப்படுத்திக் கொண்டனர்"(வித்துவான் சுப்பிரமணிய பிள்ளை. *G* எம்.ஏ., திராவிடர் வீர வரலாறு.,2001,ப.10 - மொழிபெயர்ப்பு)என்பதை மட்டக்களப்பு *E.L* தம்பிமுத்து அவர்களும் கூறியிருப்பது சான்றாக்கப்படுகிறது.

கம்பராமாயணம் – ஆரிய கட்டமைப்பு

கம்பர் வால்மீகி இராமாயணத்தைவிட இராமனை உயர்ந்த இடத்தில் அவதாரமாகக் காட்டுவதாகவே அமைத்திருக்கிறார். அதாவது திருமாலின் அவதாரம் இராமன், இலட்சுமியின் அவதாரம் சீதை திருமாலின் பிறஅம்சங்களாக இராமனின் தம்பிமார்கள் உள்ளார் என்பது கம்பரின் கவித்திறமையால் விளைந்தவை(1.5.22) பாலகாண்டம் தொடங்கி யுத்தகாண்ட இறுதிவரையிலும் ஆரியச் சாயலை அல்லது ஆரியமாயைக் கருத்துகளை அடுக்கிக்கொண்டே சென்றிருக்கிறார். வருணாசிரமம் தர்மத்திற்கு ஒப்பற்ற நூலாகவும் இவற்றைக் கருதலாம். ஆரிய மாந்தர்களின் படைப்பு, ஆரியர் தவறு செய்தால் பாவ மன்னிப்பு வழங்குதல், ஆரியனை அழித்தால் வருந்துவது, வேள்வி செய்வித்தல், அதற்குரிய பலன்களைக் கூறல்;, தவமுனிகளின் செயலைக் கூறி

அவற்றிற்கு ஒட்பாக நடத்தல், இவை போன்ற செய்திகளின்வாயிலாகவே ஆரியக்கொள்கைகளைத் தாங்கிப் பிடித்திருக்கிறது கம்பராமாயணம். மேலும் ஆரிய மாந்தர்களை அழிக்காதவையாகவே காட்டுகிறது. எ.கா. இந்திரன் - அகலிகை கதை (1-9-14-25) இக்கதையில் பிறன்மனை விழைவு என்பது தெளிவுபடக் காணப்படுகிறது. எனினும் சாபத்தோடு இருந்தவர்க்கு விமோசனம் அளிப்பவராகவே காட்டப்பட்டிருக்கிறார். இந்திரன் - அகலிகை இருவரும் ஆரியர்களாக இருந்தமையே காரணமாக இருக்கலாம். மேலும் பரசுராமரை அந்தண முனிவரின் மகன் என்றதனாலே கொல்லவில்லை என்று இராமன் பாலகாண்டத்தில் கூறுவதாகக் கம்பர் படைத்திருக்கிறார்." "சம்புகன் என்ற சூத்திரன் தவமியற்றியதால் பார்ப்பான் ஒருவன் இறந்துவிட்டான் என்று அச்சூத்திரனைக் கொன்றுவிடும் இராமன்" (பெரியார்.குடியரசு, மாலை 4, மலர் 10.1.7.1928, ப.6) ஆரியரின் நலன் காப்பவராகவே காட்டப்படுகிறார். இராமரின் அவதாரநிலையினை,

> "தன்னின் முன்னிய பொருவிலா ஒருதனித் தலைவன்
> அன்ன மானுடன் ஆகிவந்து அவதரித்து அமைந்தான்" (2.11)
> சிவனோ அல்லன் நான்முகன் அல்லன், திருமாலாம்
> அவனோ அல்லன், மெய்வரம் எல்லாம் சுடுகின்றான்
> தவனோ என்னின் செய்து முடிக்கும் தரனல்லன்
> இவனோ தான் அவ்வேத முதற் காரணன் என்றான் (36.133-.34)

கம்பர் வீடணன், இராவணன் ஆகிய திராவிடர்களைக் கொண்டே ஆரியச்செல்வாக்கினை நிலைநிறுத்தியிருப்பது புலப்படுகிறது. எனினும் ஆரியப்பாத்திரங்களாக இராமன், இலக்குமணன், பரதன், சத்துருக்கன், தசரதன், சுமந்திரன், சனகன், பரசுராமர், கலைக்கோட்டு முனிவர், வசிட்டர், விசுவாமித்திரர், பரத்துவாசகர், சதானந்தனர், சீதை, கோசலை, சுமத்திரை, கைகேயி, கூனி போன்றோரின் வாயிலாகவும் ஆரிய சமயக் கருத்துக்களை வலியுறுத்தி அவற்றைக் கம்பர் காப்பியத்தில் புலப்படுத்தியிருக்கிறார்.

கம்பராமாயணத்தில்- திராவிட அழிப்பு

திராவிட நாட்டில் தோன்றிய கம்பரின் கவிதையாற்றலைக் கண்டு வியப்பாக இருந்தாலும் அவரது காப்பியத்தில் திராவிடர் அழிப்பு என்பது இன்றியமையாதவொன்றாக அமைந்திருப்பதை வேதனைக்குரிய செய்தியாகக் கருதலாம்.

கம்பர் கம்பராமாயணத்தின்வழி ஆரியச் செல்வாக்கினையும் திராவிடர்களை அழித்தமையும் மிகத் தெளிவிய நிலையில்

எடுத்தோதியிருக்கிறார். திராவிட மாந்தர்களாக இராவணன், கும்பகர்ணன், வீடணன், இந்திரசித்து, அதிகாயன், அட்சயன், கரன், மாரிசன், மாலியவான், மகோதரன், சூர்ப்பனகை, அயோமுகி, மண்டோதரி, தாடகை, சடாயு, குகன், வாலி, சுக்ரிவன், அனுமான், அங்கதன், சாம்புவான், தாரை போன்றோர் திராவிட மாந்தர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்களில் இராமன்பின் சென்று உயிர்ப்பிச்சை வாங்கிய நயவஞ்சகர்களைத் தவிர்த்த அனைத்துத் திராவிட மக்களும் இராம-இலக்குமணன் போன்றோர்களால் அவமானப்படுத்தப்பட்டும், கொல்லப்பட்டும் இருத்தலை கம்பராமாயணம் மிகச் சிறப்பாக எடுத்தோதுகிறது. ஆரியர்களின் இழிசெயல்களை (பலிஇடுதல்) (யாகம் செய்தல்) தடுத்து நிறுத்தியதால் இராவணனின் பாட்டி தாடகை இறந்தாள். திராவிட மானிடர்களை ஆரியர் மணத்தல் பொருத்தமற்றது எனக் கூறிச் சூர்ப்பணகையின் மூக்கு, காது, நகில், போன்றவற்றை அறுத்து இழிசெயலைச் செய்தனர். இராம - இலக்குவனர், இச்செயலைக் கண்டித்துக் கேட்டோரையும் அழித்தனர். சூர்ப்பணகை அறுபட்ட உருவத்தோடு தன் அண்ணன் இராவணனைச் சந்தித்து நிலை கூறினாள். தன் தங்கையை இந்நிலைக்கு ஆட்படுத்திய அவர்களைப் போருக்கு அழைத்தல் (பழிவாங்குதல்) பொருட்டே சீதையை அசோகவனத்திற்குத் தூக்கிவருகிறான். சங்ககாலத்தில் போர்முறையில் பசுக்களைக் கவர்ந்து வரும் பழக்கமுடையவராக இருந்திருக்கிறோம். அதேவழியில் பெண்களையும், அரசன் மனைவியையும் கவர்ந்து போருக்கு அழைத்திருக்கின்றனர்.

"பிற அரசனின் மனைவியைக் கபடமாகக் கவர்ந்து வருதலையும் கன்னிப்பெண்டிரைக் கபடமாகக் கவர்ந்து வருதலையும் எதிரியைத் தோல்வியுறச்செய்ய ஏற்ற அரசியல் தந்திரங்கள் என வடமொழி காமச்சாத்திரங்கள் பரிந்துரைக்கின்றன" பிறன் மனைவியைக் கவர்ந்து (வருதல்) செல்லல் அரசியல் சாத்திரப்படிக் குற்றமாகக் கொள்ளப்பெறவில்லை. (நடுவாலியூர் நடராஜன் - வடமொழி இலக்கிய வரலாறு 1979 - ப.358) போருக்காக வேண்டியே இராவணன் சீதையைக் கவர்ந்தானேயொழிய காமஇச்சைக்காக அன்று; இராவணன் சீதையைக் கவர்ந்தான் என்ற காரணத்திற்காக மட்டுமே இராமன் இராவணனை அழித்ததாக எண்ணமுடியாது, இதற்குமுன்பே அரக்கர்களைக் கொல்வதற்காகவே காட்டிற்குள் வந்ததாக ஆரண்ய காண்டத்தில் கூறியிருப்பது புலப்படும், இராமன் சூழ்ச்சிமுறையால் சுக்கிரீவன், அனுமன், அங்கதன், சடாயு, சாம்புவான், வீடணன் போன்ற

தென்திராவிட (மாந்தர்களை) துரோகிகளைக்கொண்டே திராவிடர் அழிப்பினை நிலைநாட்டியவன், பிறன்மனை விழைதல்பொருட்டே வாலி, இராவணன் போன்ற சிறந்த திராவிடர்களைக் கொன்றதாகக் கூறும் இராமன், பிறன்மனை விழைவு சிறப்பாய் அரங்கேறிய இந்திரன் - அகலிகை, சுக்ரீவன் - தாரை போன்றோரையும் கொன்றிருக்க வேண்டும். இதில் இந்திரன் தேவலோகத்தான் என்றதால் கொல்லவில்லையோ என்ற ஐயம் தோன்றுகிறது எது எப்படி-யிருப்பினும் இராமனின் ஆரிய மார்க்கமானது திராவிடத்துள் மிகச் சிறப்பாக நுழைக்கப்பட்டிருக்கிறது என்பது கம்பராமாயணத்தின்வழி மிகத் தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது.

ஆரியரின் மேன்மைகூறும் நூல் கம்பராமாயணம்

ஆரியர்களின் நாடு பிடிப்புக்கொள்கைக்கு இராமாயணம் துணைபோனமையைப் பல்வேறு அறிஞர்கள் கூறியிருக்கின்றனர். ஆரியர்களின் கலப்பினாலேயே தமிழர்கள் சாதி, மத வேறுபாடுகளால் தாழ்வுற்றனர் என்றும் அந்த ஆரியர்களின் மேன்மைக்காக எழுதப்பட்டதே கம்பராமாயணம் என்றும் திராவிட இயக்கத்தார் விமர்சனம் செய்தனர்.

'ஆரிய மக்கள் தென்னாடு புகுந்து அங்கே பரவிக்குடியேறி அங்கிருந்த மக்கள் தங்கள் சமயத்தைத் தழுவும்படிச் செய்து பரதகண்ட முழுவதிலும் ஒரேவகைப்பட்ட பண்பாட்டினை நிறுவி ஒற்றுமையுணர்ச்சியை உண்டுபண்ணிய செய்தியை இராமாயணப் பேரிதிகாசம் பொதுப்படையாகக் கூறுகின்றது." (வையாபுரிப்பிள்ளை, தமிழர் பண்பாடு, கம்பன்; காவியம், ப.175) பாரதியார் கம்பராமாயணத்தை 'ஆரியசம்பத்து" (பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பிரசுரம், ப.364) என்றே தமது கட்டுரையில் எழுதுகிறார்.

'இராமாயணம் தென்னிந்தியாவில் ஆரியர் பரவியதையும் அதனைக் கைப்பற்றியதையும் உணர்த்தும் நூல்" (பகுத்தறிவு, மலர் 5, இதழ் 2, 10.1.1955) என்பது பி.ஏ.வர்க்கி என்பாரின் கருத்தாக அமைகிறது.

ஆரியர்கள் திராவிடர்களை வென்ற வரலாற்றையே பார்ப்பனர்கள் இராமாயணமாக எழுதியிருக்கின்றனர் என்பதற்கு ஆதாரமாகவே

1. தென்னிந்தியாவில் வசித்து வந்த ஆரியரல்லாதவர்களையே குரங்குகள் என்றும் அசுரர்கள் என்றும் இராமாயணக்கதையில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. -டாக்டர் ரோமேஷ்சந்திர மஜூம்தார் எம்.ஏ.,

2. தென்இந்தியாவில் இருந்த மக்களேதான் இராமாயணத்தில் குரங்குகள் என்றும் அரக்கர்கள் என்றும் அழைக்கப்பட்டிருக்கின்றனர். -சுவாமி விவேகானந்தர்.

3. திராவிடர்களை ஆரியர்கள் வென்றுவிட்ட அகங்காரத்தால்; குரங்குகள் என்றும், கரடிகள் என்றும் இராட்சதர்கள் என்றும் எழுதிவைத்தார்கள், ஆனால் இப்படி இழிவுப்படுத்தப்பட்ட வகுப்பினரிடனிருந்தே பல நாகரிகங்களை இந்தப் பிராமணர்கள் கற்றுக்கொண்டனர். - ஜோதி சந்தர் பட்

4. இராமாயணம் என்பது தென்னிந்தியாவில் ஆரியர் பரவியதைக் குறிப்பதாகும். - ஜவகர்லால் நேரு.

5. இராமாயணம் ஒரு கட்டுக்கதைதான் வால்மீகியின் கற்பனையின் விளைவே இராமாயணம் உண்டாயிற்று. - திரு. நீலகண்ட சாஸ்திரி.

6. இராமாயணம் என்ற கற்பனைக்கதையின் அடிப்படை யாதெனில் திராவிடப் பழங்குடி மக்களுக்கும், ஆரியப்படையெடுப்பாளர்களுக்கும் இடையே நடந்த போராட்டமே தவிர வேறல்ல.- சர்ஃபிரோஸ்கான் நூன்.

7. ஆரியரின் இத்தகைய வெறியாட்டு வேள்விகளை அழித்துவந்த சூரன் - இராவணன் முதலான நிகரற்ற தமிழ்வேந்தர்களே ஆரியர்களால் அரக்கர் என்று இகழ்ந்து பேசப்படுவராயினர். - மறைமலையடிகள்.

8. மகாபாரதத்தில் இருப்பது போலவே இராமாயணத்திலும் கதாபாத்திரங்கள் யாவும் கற்பனைகளே இரண்டிலும் சரித்திர சம்பந்தமானது ஒன்றுமேயில்லை. -ஆர். சீ. தத். (பெரியார், இராமாயணப் பாத்திரங்கள், 1982,ப.83-94)

இக்கருத்துகளின் அடிப்படையில் ஆரியர்களின் புகழ் பரப்புவதாகவே கம்பராமாயணம் அமைந்திருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது.

முடிவுரை

வால்மீகி இராமாயணம் இராமனை மனிதனாகப் படைத்திருக்க கம்பன் சங்க இலக்கியம், திருமுறை, பிரபந்தம் போன்ற பாடல்களில் ஈடுபாடுகொண்டமையாலும் வழிநூல் என்பதாலும் கலைமாற்றம் தேவை, கருதியே அவதாரமாகப் (தெய்வம்) படைத்திருக்கலாம்.

கம்பனின் கவிதையழகினைக் கண்டு வியந்து போகின்ற நாம் அதில் ஊடாடியிருக்கும் அரசியலைப் புரிந்துகொள்ளாமல்; இருக்கின்றோம்.

கம்பராமாயணம் தமிழ் இனம் வீழ்ச்சியுற்றதையும், ஆரியர் வெற்றிபெற்று நம்மை அடிமைப்படுத்தியதையும் மிகத் தெளிவாகக் காட்டுவனவாக உள்ளன.

"தென்னிலங்கை யிராவணன் தன்னையும்
தீய னென்னும் துரியனையும் பிறர்
என்ன சொல்லி யெவ்வாறு கசப்பினும்
இன்று நானவர் ஏற்றத்தைப் பாடுவேன்"

என்று பாரதிதாசன் கூறியதற்கேற்ப, தமிழன் இராவணன் புகழினைக் கம்பர் வழி நின்றே காணலாம்.

தீ பரவட்டும் - அறியாமை அழியட்டும்

திருமிகு. ச.சிவகாமி
பேராசிரியர் (ப.நி.) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மிகச் சிறுபான்மையினரால், 'சுயமரியாதை' எனும் பெயரில் கம்பராமாயணத்தையும் பெரியபுராணத்தையும் அழிக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதற்கான காரணத்தை முன்வைத்து 9-2-43, 14-3-48 ஆகிய இரு நாட்களில் நிகழ்ந்த இராமாயணச்சொற்போர் 'தீ பரவட்டும்' என நூலாக்கம்பெற்றுள்ளது. அதில் பேரறிஞர் வெளிப்படுத்தியுள்ள முதன்மையான மூன்று கூற்றுகளுக்கு முரண்களுக்கு அவற்றின் பொருத்தமின்மையை எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

கம்பருக்கு உலகளாவிய நிலையில் ஆய்வரங்கம் நிகழும்பொழுது, கம்பன் கழகங்கள் மற்றும் ஆர்வலர்களால் பட்டிதொட்டி எங்கும் அவர் புகழ்ஓங்கி ஒலிக்கும்பொழுது, சுமார் எழுபது ஆண்டுகள் கழிந்தபின் அதற்கு ஓர் மறுப்புரை தேவையா என்ற வினா எழுதல் இயல்பு இன்னும் அவரது பின்காமிகளால் கம்பராமாயணம் புறக்கணிக்கப்படுவதாலும் மாணவர் உலகிலும் அதன் நிழல் படிந்துள்ளதாலும் இம்முயற்சி தேவையாகிறது (கம்பராமாயணக் காப்பியம், இலக்கியநோக்கிற்குப் புறம்பான ஆரிய - திராவிட இனப்பூசல்களில் சிக்குண்டு தன் பெருமை குன்றி நிற்கிறது. இளைஞர்களில் பலர் கம்பனைக் கற்பதற்கு இப்பூசல்கள் பெருந்தடையாக இருக்கின்றன என்பதில் ஐயமில்லை.- அ. பாண்டுரங்கன், காப்பிய நோக்கில் கம்பராமாயணம், என்சிபிஎச், சென்னை, 1989.)

1. இராமாயணம் ஆரிய – திராவிடப் போராட்டம் இல்லை

"ஆராய்ச்சியாளர்களின் முடிவு, இராமாயணம் ஆரியக்கதை என்பதும், ஆரிய திராவிடப் பேராட்ட விவரம் என்பதுமாகும். அதனைக் கம்பர் எழுதியுள்ள முறை தமிழர் ஆரியத்தை ஏற்றுக்கொள்ளும் தூண்டுகோலாகவும் தமிழ்இனம், ஆரிய இனத்தலைவனிடம் தோற்றுவிட்டது என்பதை ஒப்புக்கொள்ளச் செய்வதாகவும் இருப்பதனால் அந்நூலைப் (கம்பராமாயணம்) படித்திடும் தமிழ் இனம், தன்னம்பிக்கை, தன்மானம் இழந்து கெடுகின்றது என்று

கூறுகின்றோம். தமிழ் இனம் புத்துயிர் பெற, இத்தகைய ஆரியக் கலையை அழிப்போம் என்றுரைக்கிறோம். இது, இன எழுச்சியின் விளைவு" (ப.12) என மற்றவர் (மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, வி.பி. சுப்பிரமணிய முதலியார், மறைமலை அடிகள், ஜவகர்லால் நேரு) கூற்றை ஏற்றியுரைக்கிறார். இதற்கான மறுப்பு:

1. இலக்கிய ஆய்வில் குறிப்பிட்ட நூல் எழுந்த காலமும் சூழலும் நோக்கப்படல் இன்றியமையாதது; முதன்மையானது. அவ்வகையில் இராமாயணமூலம் எழுந்த காலம். புத்தர் காலத்திற்கும் முன்பாக கி.மு. 8-11 ஆம் நூற்றாண்டினதாகக் குறிக்கப்பட்டுள்ளது.(இந்திய இலக்கியச் சிற்பிகள் - வான்மீகி; ஐ. பாண்டுரங்கராய், சாகித்திய அகாதெமி, மு.ப. 2001.) இக்காலத்தே ஆரியர், திராவிடர் என்ற சொல்லாக்கங்களும் பிரிவினைகளும் இருந்தனவா என்பது கேள்விக்குரியது.

2. கி.மு. 2 முதல் கி.பி.2 ஆம் நூற்றாண்டினவாகக் கருதப்படும் சங்கப் பாக்களிலேயே இராமகாதை இடம் பெற்றுள்ளமை (அகநானூறு 70:13-16; புறநானூறு 378:18-21; கலித்தொகை 38:1-5) தமிழகத்தில் அதன் தொன்மையையும் அன்றே நன்கு வேரூன்றியிருந்ததையும் வெளிப்படுத்தும். இராமாயணம் ஆரிய திராவிடப் போராட்டமெனில் அதுபற்றிய குறிப்பு இதில் இன்மையும் கூறத்தக்கது. தொடர்ந்து இன்றுவரையிலுமாகத் தன் ஆளுமையை இராமாயணம் இடையறாது தமிழிலக்கியப் பரப்பில் செலுத்தி வருதலும் சுட்டற்பாலது.

3. தமிழகத்தில் வழங்கப்படும் இராமாயணம் தொடர்பான சுமார் 100 வழக்குக்கதைகள்; 35 நாட்டுப்புற நாடகங்கள், கதைப்பாடல்கள்; 80 பழமொழிகள், 20 விடுகதைகள் மற்றும் ஊர்ப்பெயர்கள், சிற்பங்கள் ஆகியனவும் இணைத்துக் கருதத்தக்கன. பொதுவான நாட்டுப்புறக் கதைகளின் அமைப்போடு இராமாயணம் முழுமையாக ஒன்றிநிற்றலும் அறியத்தக்கது. (ச.சிவகாமி, இராமாயணமும் நாட்டுப்புறவியலும் - தமிழரங்க ஆய்வுகள், பக்.78-100.)

4. இந்திய மொழிகள் அனைத்திலும் திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம் உட்பட இராமாயணம் பெரும்பங்கு வகித்தலும் அனைவரும் அறிந்த ஒன்றாகும். அவை எண்ணிக்கைக்கு அடங்காவகையில் பரந்து விரிந்துள்ளன. வைதீகச் சமயங்களுக்கு எதிராகத் தோன்றிய சமண, பௌத்த சமயங்களும் மக்களிடம் இராமகாதைக்குள்ள செல்வாக்குணர்ந்து தம் வயப்படுத்திக் கொண்டன. இந்திய இலக்கியமாகப் பெருமைபெற்ற இராமாயணம் மொழி, இன,

நாடு கடந்து தன் ஆளுமையை நிலைநாட்டியுள்ளது. (The Ramayana Tradition in Asia, V.Raghavan (ed), Sahitya Akademi, 1980. Asian Variations in Ramayana, K.R.Srinivasan Iyenkar (ed), Sahitya Akademi, 1983. Mani Ramayanas - The diversity of a Narrative Tradition in South Asia, Paul Richman (ed) Oxford University Press, Delhi-1991) இரு இனப் போராட்டம் இத்தகைய பெருமை பெறல் இயலுமா?

5. வான்மீகி தன் காலத்தே வழங்கிய இராமாயணம் தொடர்பான பழங்கதைகளின் இணைப்பில் காப்பிய ஆக்கம் வழங்கியதே ஆதிகாவியம் எனப்படும் வான்மீகி இராமாயணம் என்பதும் குறிப்பிடத்தக்கது.(Umashankar Joshi, Welcome Address, Asian Variations, p.23) இதனால் இராமகாதையின் தோற்றம் வான்மீகிக்கும் மிகவும் முற்பட்டது என்பது தெளிவு. உலக மொழிகள் பலவற்றிலும் காப்பியங்களின் தோற்றம் இங்ஙனம் அமைதலை இரா.காசிராசன் எடுத்துக் காட்டுகிறார். (இரா. காசிராசன், காப்பியத் தோற்றமும் வளர்ச்சியும், மதி பதிப்பகம், மதுரை, டிச. 2008.)

6. தமிழ் தந்த அகத்திய முனியிடம் இராமன் அருள் பெறுவது கம்பரில் மட்டுமல்ல வான்மீகியிலும் இடம் பெறும் ஒன்றாகும். அதில் அகத்தியர் வாதாபி இல்வலரை அழித்த செய்தியையும், சூரியன் செல்லும் வழியைத் தடுக்கும் நோக்கத்துடன் வளர்ந்துகொண்டிருந்த விந்திய மலையை அடக்கிய செய்தியையும் இராமன் இலக்குவனுக்குக் கூறியதாகவுள்ளது. இலக்குவன் அம்முனிவனின் (அகத்தியன்) சீடர்மூலம் தம் வரலாற்றைக் கூறி அம்முனிவன் அனுமதி பெற்று வந்தபின், இராமன் சீதையுடன் உள்சென்று சூரியனைப் போன்ற ஒளிமிக்க அகத்திய முனிவனைக் கண்டு வணங்கியதாகவும் உள்ளது. (ஆரணிய காண்டம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் (பதி), 1963, ப. 115.) அவரது இருப்பிடமாகத் தாண்டகவனம், பொதியமலை, பிதிரர் உலகிற்கு அருகில் உள்ள ஆசிரமங்கள் என மூன்றினைச் சுட்டுகிறார். அவற்றின் பெருமையும் உயர்வாக மதிப்பிடப்பட்டுள்ளது.(கிட்கிந்தா காண்டம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (பதி), 1967, ப.198.) இராமாயணம் ஆரிய - திராவிடர் போராட்டமெனில் இவ்வாறு ஒரு தமிழ்முனியைப் பாராட்டவும், அவரை இராமன் வணங்கினான் என்று கூறவும் இயலுமா?

7. கி.பி. 1574 இல் 'இராம சரிதமானஸ்' படைத்த துளசிதாசருக்குத் துணையாகவும் உந்துதலாகவும் இருந்தனவற்றுள் கம்பராமாயணம் முதன்மையானது என்பது வரலாறு. (S. Shankarraju Naidu, Unique

Contribution of Kambar and Tulsidas - R.P.Sethupillai Silver Jubilee Commemoration Volume, Palaniappa Bros, 1961, pp.85-90) இங்கு, அன்றே கம்பராமாயணத்தின் பெருமை வடவர்களால் பாராட்டுப் பெற்றமையும் வெளிப்படை. பேரறிஞர் கூற்று உண்மையாயின் இந்திமொழியினர் துளசிதாசர் (வான்மீகியிலிருந்து பல இடங்களைத் தமிழ் மரபிற்கு ஏற்ப மாற்றிய) தமிழ் நூலான கம்பராமாயணத்தைத் தம் படைப்பிற்கு உறுதுணையாக்கி இருக்கக்கூடுமா? இந்தி மொழியினரால் அந்த ராமாயணம் மிகச் சிறப்புடன் போற்றப்படுதலும் எண்ணத்தக்கது.

8. பல்லாயிரம் ஆண்டுகள் கழித்து, ஓரிரு நூற்றாண்டுகளுக்குமுன் இதனை ஆரியர் - திராவிடர் போராகக் குறித்தது அவர் காலத்தியச் சூழலாகும். (நாங்கள் கூறுவதைக் காட்டிலும் கடுமையாகவே 'ஆரிய மன்னன் மகன் இராமனைத் தெய்வமாக்கித் தமிழரைச் சிறுதெய்வ வழிபாடாற்றும் சிறுமதியினராக்கிற்று ஆரியம்' என்று கூறினர் (மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம்பிள்ளை, வி.பி. சுப்பிரமணிய முதலியார், மறைமலை அடிகள்) அரசியலில் வேறுபாடான கருத்தைக்கொண்ட பண்டிதர் ஜவஹருங்கூட ஆரிய திராவிடப் போராட்டக் கதையே இராமாயணம் என்று உரைத்ததைக் கூற விழைகிறேன் - (தீ பரவட்டும், ப. 11) வடக்கு, தெற்கு என்ற பிரிவினை தோற்றம் பெற்ற காலம் அது. இப்பிரிவினையை வலுப்படுத்த விரும்பியோரின் சதியாகக் கூட இக்கூற்றைக் கருதலாம்.

இவற்றால் இராமாயணம் ஆரிய திராவிடப் போர் என்பது கட்டுக்கதை என்பது தெளிவு.

2. இராவணன் தமிழன் / திராவிடன் அல்லன்

"இராவணன் மிக்க வலிமைசாலி, திறமையுடையோன், வேதம் பயின்றோன், சிவபக்தன், இலங்கை சகல சுகமும் நிரம்பிய இடம் என்று வர்ணித்துவிட்டு, இவ்வளவு குணாளனும் திறமைசாலியுமான இராவணன் ஓர் ஆரிய மங்கையைக் கண்டு காமுற்றுக் கருத்தழிந்து அறம் விட்டு அழிந்தான் என்று முடிப்பது திராவிட இனப் பெருமைக்கே ஊறு தேடுவது ஆகும். திராவிட இன மக்கள், நாம் இவ்வளவு ஆற்றல் படைத்திருப்பினும் கல்வி கேள்வி இருப்பினும் ஆரிய மங்கையரிடம் சபலப்பட்டு சங்கடத்துக்குள்ளாவோமா? அழிந்துபடுவோமா? என்ற சந்தேகத்தையும் மண்டோதரி எனும் பேரழகியின் நாயகனாகவும், தேவமாதரும் ஏவலராக இருக்கும் நிலைபெற்ற சுந்தரனுமாகிய இராவணனா, சீதை எனும் ஆரிய மங்கையைக் கண்டதும் மையல் கொண்டான்! இராவணனுக்கே,

அந்நிலை வந்ததென்றால் நாம் தப்ப முடியுமா என்ற திகைப்பும் ஏற்படுமன்றோ!"(ப.15) என்று வினவுகிறார் பேரறிஞர். இதனைவிடவா பிறிதொருவர் தமிழரைக் கொச்சைப்படுத்த முடியும்? இதற்குப் பதில்:

1. சிவன் முதலான, தேவர்களிடமிருந்து பெற்ற வரங்களால் இந்திரன் முதலான தேவர்களை அடிமைப்படுத்தியவன் எப்படி வீரனாவான்? வாலியால் கட்டுண்டபோது அவனது வலிமை/ வீரம் எங்கே போயிற்று? முதல் நாட்போரில் தோல்வியுற்று நிராயுதபாணியாக நின்றபோது இராமனால் 'இன்று போய் நாளை வா' என அருளப்பட்டவன் (7271); அப்பொழுதுகூட, 'வான் நகும் மண்ணும் நகும்.... பகைஞர் எல்லாம் நகுவர் என்று அதற்கு நாணான், சானகி நகுவள் என்றே நாணத்தால் சாம்புகின்றான்' (7282) இப்பெருவீரன்.

2. இராவணன் மயன்மகள் மண்டோதரி மட்டுமல்ல; தானியமாலி முதலான பல மனைவியருடையவன். மனைவியரைத் தவிர, தான் விரும்பும் பிற பெண்களிடமும் காமக்களியாட்டம் கொண்டவன்; அவனின் காமவெறியால் வேதவதி எனும் பெண் தீக்குளித்தாள் (6151), விருப்பம் இல் மகளிரைத் தொடின் உன் தலை சிதறும்' எனப் பரமன் அளித்த வசைமொழியும் (5365), வேதவதி 'யான் உனக்கு நோய்' (6151) என வசைமொழியுரைத்தே தீக்குளித்ததும் அவனது நற்பண்புகளுக்குச் சான்று ஆகுமா? இவற்றை மறைத்து ஒருதலையாகத் தீர்ப்பு வழங்குவதுதான் பகுத்தறிவா? என்ற வினாவும் இங்கு எழுகிறது.

3. 'ஆரிய' பெற்றனன் விடை' எனக் கும்பகருணன் (7369) இராவணனை விளிப்பதும், அவன் பிரமனின் கொள்ளுப் பேரனாக அமைவதும் (விச்சுரவசு - கேகசியின் புதல்வன், புலத்தியன் மரபினன் 9244, அயன் மகன் மகன் மகன் 5715) இராமாயணம் தரும் அறிமுகங்களாகும். சொற்போரில் அகச்சான்றுவழி ரா.பி.சேதுப்பிள்ளை, சோமசுந்தர பாரதியார் எடுத்துக்காட்டவும் அதனை ஏற்க மறுத்துள்ளார்.

இராவணனை ஆரியன் என்று சுட்டிய கம்பர் அவனைப் புகழ்ந்துரைக்கும் இடங்கள் உட்பட மறந்தும் ஓரிடத்தில் கூட, தமிழன் என்றோ திராவிடன் என்றோ குறிக்காமையைப் பேரறிஞர் ஏன் அறியவில்லை? இல்பொருள் ஒன்றை வலியப் புகுத்தித் தமிழருக்குத் தானே இழிவு தேடியுள்ளார்.

ஆரியன் இராவணனைக் கொன்றதற்காகத் தன்மீது படிந்த பிரம்மஹத்தி தோசம் நீங்க இராமன் வழிபட்ட இராமேசுவரம்

தமிழருக்கு மட்டுமின்றி வடநாட்டினருக்கும் பெரும் புண்ணியத்தலமாக இன்றும் தொடர்வதும் எண்ணத்தக்கது

4. இங்கு மற்றொன்றும், ஓர் அரக்கனைத் தன் முன்னோன் ஆக்கிய விபரீதமும் நிகழ்ந்துள்ளது. அரக்கவடிவம் என்பது தீமையின் குறியீடு என்பது உலக மொழிகள் அனைத்திற்கும் பொதுவானது. (The Penguin Dictionary of Sumbols, 1996, p.286) இவர் கூற்றுப்படி இராவணன் தமிழன் / திராவிடன் என்றால் கடல்போல் விரிந்துநிற்கும் இந்தியப்புராணங்கள் அனைத்திலும் காணப்படும் எண்ணற்ற அரக்கர் யார்? உலக மொழிகளில் காணப்படும் அரக்கர் யார்? இங்கு ரா.பி.சேதுப்பிள்ளையின் 'அரக்கர் தமிழரா?' எனும் கட்டுரையும் (தமிழ்ப்பொழில், ஏப்.1943, பக்.18-20) இணைத்து எண்ணத்தக்கதாகும்.

5. அக்கால வழக்கப்படி இராவணன் சீதையைக் கவர்ந்தான் (ப.20) எனின் இராமனைப் போரில் வென்று அல்லவா சிறை பிடித்திருக்கவேண்டும்? மாரீசனை மாயமானாக்கி அவனை அழியவிட்டு தான் தவமுனிவன்போல் வேடமிட்டு அல்லவா சீதையைத் திருடிச் சென்றான். அன்று வெற்றி பெற்ற தமிழ்மன்னர்கள் பகைமன்னன் மகளிரைச் சிறைபிடித்து வந்து, தம் அரண்மனைப் பணிப்பெண்களாகக் கொண்டனரேயன்றிக் காமக்கிழத்தியராக்கவில்லை என்பதும் அறியத்தக்கது. (பட்டினப்பாலை 246-247) தன் காமவெறிக்காகத் தன் இனம் (உடன்பிறப்பு, மகன்கள் உட்பட) முழுவதையும் அழித்தான் என்பதனை மறைத்ததேன். கம்பனை முறையாகக் கற்றிருந்தால் இப்புறக்கணிப்பு ஏன்? அல்லது தன் கற்பிதத்தைக் கம்பனைப் பயிலாமலே முன்மொழிந்தாரா? எதுவாயினும் இது ஒரு நேர்மையற்ற ஆய்வுப்போக்காகும்.

6. இவர் வாதப்படியே இலங்கையை ஆண்ட திராவிட அரசன் இவன் என்றால் இலங்கையில் தமிழர் ஆட்சி நிலவத்தொடங்கியது எப்போது? தொடங்கிவைத்தவர் யார்? அப்பொழுது தமிழகத்தை ஆண்டவர் யார்? மூவேந்தரையும், குறுநில மன்னரையும், பெரும் வள்ளல்களையும் பாடிய சங்கப்புலவர் இவனைப் பாடாததேன்? ஈழத்துப் பூதன்தேவனார் கூட சிறப்பிக்கவில்லையே? இராவணன் கயிலையை எடுத்துத் துன்புற்ற தொன்மம் (கலி.38:1-5) இடம்பெற்றிருக்கும்போது அவனை அன்றைய புலவர் அறிந்திருக்கவில்லை என்ற அமைதியும் காட்ட இயலாதே.

7. "வானரர்கள் என்று இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டவர்கள் வாழ்ந்த இடம் விந்தியமலைக்குக் கீழே, கோதாவரி வரையிலே

உள்ள நிலப்பரப்பிலே ஒரு பகுதியாகவே இருக்கிறது. இங்கு ஆரியர்களோ, மற்றவரோ இல்லை; தமிழரே வாழ்ந்தனர். எனவே, அகச்சான்று புறச்சான்று எனும் எதன்படி நோக்கினும் வானரர் என்பது, பல அறிஞர்கள் கூறியுள்ளபடி, தமிழரையேதான் குறிக்கும். அதுபோலவே இலங்கை மன்னனும் திராவிடனே என்பதற்கும் இவ்வாராய்ச்சி சான்றாகும்" என்பதும் இவரது கண்டுபிடிப்பாகும். "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல் உலகத்து" எனத் தொல்காப்பியப் பாயிரம் பகர்வதும் இங்கு நினைவிற்கொள்ளத் தக்கதாகும்.

பழங்கதைகளில் விலங்குகளும், பறவைகளும் மானிடருடன் இடம்பெறல் பெருவழக்கு என்பது வெள்ளிடை மலை. இவரது கூற்றுப்படி குரக்கினம் தமிழினம் எனக்கொண்டால் இராமகாதையில் ஆரியன் வெற்றிக்குத் தமிழினம் தானே அடித்தளமாகிறது. இராமனும் சீதையும் அனுமனுக்குத் தரும் பாராட்டுரைகளும் வாழ்த்துரைகளும் இமயம் முதல் குமரிவரை பரவியுள்ள அனுமன் வழிபாடும் நோக்கத் தக்கன. ஆரியர் திராவிடர் போராட்டம் என்பது மாயையானது என்பதற்கு இதுவும் ஓர் வலிமையான சான்றாகும்.

8. தன் இனத்தின் பெருமைக்காக உயர்விற்காகப் போராடுவதாகப் பறைசாற்றும் இப்பெருமகனார், தன் இனத்தைத் 'தற்குறிகள்' என மொழிந்திருப்பது(ப.39) தகுமா? பின்காமிகள் யாரும் இதனை எதிர்த்ததாகக்கூடத் தெரியவில்லையே? இதுதான் சுயமரியாதையா?

9. ஒருவனுக்கு ஒருத்தி என்பதை வலியுறுத்துவது இராமாயணம். இதற்கு எதிர்நிலையாகப் பல மனைவியருடன் பிறன்மனை நயந்தவனாகவும் அமையும் இராவணனைச் சொந்தங் கொண்டாடுவது வியப்பானது.

3. கம்பர்மீது பொருந்தாக் குற்றச்சாட்டு

"கம்பரோ தாம் இராமாயணம் எழுதியதற்கு நோக்கம் கூறாது, நொந்தமனம் கொண்டு வையகம் என்னை இகழுமோ? மாசுவந்து எய்துமோ? என்று கூறுகிறார். ஆண்டவனின் அவதாரம் என்று ஆரியராலும் கம்பராலும் போற்றப்படும் இராமகாதை பாடுவதற்குக் கம்பர் ஏன் இவ்வளவு சஞ்சலப்படுகிறார்? இதனால் உலகு பழிக்குமோ என்ற சந்தேகம் ஏன் கொண்டார் என்று கேட்கிறேன். ஆரியக் கதையைப் பாடுவது அடாது என்பதையும் அதற்குப் பூச்சு வேலை செய்து வைப்பது தமிழுக்குத் தீங்காகும் என்பதையும் ஒருவாறு

உணர்ந்தே, இங்ஙனம் உரைத்தாரோ என்று கேட்கிறேன்"(ப.13) என்று குற்றம் சாட்டுகிறார். இக்குற்றச்சாட்டின் பொருத்தமின்மை:

1. கம்பரின் அவையடக்கப்பாடல்களை இங்ஙனம் கேலிக்குள்ளாக்குகிறார். இது தமிழ் இலக்கிய மரபு. இதனைத் தொல்காப்பியமே (1370) நவின்றிருப்பதை அவர் அறியாதது கம்பரின் பிழையன்று.

2. 'ஆசை பற்றி அறையலுற்றேன்' (4); 'முந்திய நாவினான் உரையின்படி நான், தமிழ்ப் பாவினால் இது உணர்த்திய பண்பு அரோ'(10) எனத் தன் விருப்பத்தைக் காப்பியப்படைப்பின் நோக்கமாக உணர்த்தியுள்ளார். இதில், இதுவரை படித்த இராமாயணங்களை ஆதாரமாகக்கொள்வதுடன் மேலும் அதனைச் சீர்செய்து செழுமைப் படுத்தவேண்டும் என்ற உள் நோக்கமும் புதைந்திருக்கக் காணலாம். இதனை 'நடையின் நின்று உயர் நாயகன் தோற்றத்தின்'(11) என்பதும் உறுதிப்படுத்துகிறது. எனவே, 'நல்லொழுக்க உயர்வினைப் பாராட்டுதல்' எனும் நோக்கமும் இங்கு வெளிப்படுகிறது.

காப்பியத்தைப் படிக்கும்பொழுதே 1. இராமன் மீது கொண்ட மாளாக் காதல்; 2. வைணவ - சைவ சமய ஒருமைப்பாடு; 3. அறம் வெல்லும் பாவம் தோற்கும்; 4. கற்பின் உயர்வு; 5. உறவுகளின் பெருமை ஆகியவற்றை உணர்த்துவதே இவரின் நோக்கம் என்பது தெளிவாகப் புலப்படும். ஆழ்ந்து நோக்கும்பொழுது இதனைப் பக்திக்காப்பியம் என்பதனைவிட 'வாழ்வியல் காப்பியம்' என்பதே பொருத்தமானது என்பதும் தெளிவாகும்.(ச. சிவகாமி, இருபதில் கம்பன், பக். 19-33.)

இளங்கோ தன் நோக்கத்தைச் சிலப்பதிகாரத்தில் சுட்டியுள்ளார் என்பதும் பிழைபட்ட கூற்றாகும். அவர் கூறுவன பிற்காலத்தில் இணைக்கப்பட்ட பதிகத்தின்பாற்பட்டதாகும். 'தேவபாடை' எனக் கம்பர் குறிப்பது அவரதுகாலச் சூழலின் ஆழ்ந்த நம்பிக்கை.

3. இவரது கருத்துப்படி கம்பர்தான் முதன்முதலில் இராமாயணத்தைத் தமிழில் படைத்தது போன்றுள்ளது. கம்பருக்கு முன்பே தமிழில் முழுமையான இராமாயணங்கள் இருந்தன என்பதும் அவையும் கம்பர் காவியச்சிறப்பிற்கு வழிவகுத்தன என்பதும் கூறத்தக்கது.(கு. திருமேனி, கம்பருக்குக் கதை கொடுத்தவர் வான்மீகரா? இலக்கிய நிலையம், திருச்சி, மு.ப. 1966.) இங்கு இவராலும் போற்றப்படும் சிலப்பதிகாரத்துள் இராமன் சிறப்பும் வழிபாடும், ஆய்ச்சியர் குரவையுள் (35) இடம்

பெற்றுள்ளது; காப்பியத் தலைவன் கோவலன் பெருமை இராமனுக்கு இணையாக ஒப்பிடப்பட்டுள்ளது (13:63-65); 'திருவரங்கத்தில் திருஅமர் மார்பன் கிடந்த வண்ணமும் திருவேங்கடத்தில் நெடியோன் நின்ற வண்ணமும் காணவந்த மாங்காட்டு மறையோன் (11:34-53) எனும் இவற்றில் பேரறிஞர் பார்வை படாததும் கூறத்தக்கது.

தமிழரின் நானிலப்பகுப்பைத் தரும் தொல்காப்பியம், அவற்றிற்குரிய தெய்வங்களைச் சுட்டும்பொழுது முதலில் 'மாயோன் மேயக் காடுறை (முல்லை) உலகமும்' (951) என நவின்றுள்ளது. பரிபாடலில் இடம்பெறும் திருமால் பாடல்கள் (1, 2, 3, 4, 13, 15) பெரியாழ்வார் முதலாய ஆழ்வார் பாடல்கள் போன்றவற்றின் மூலமாகக் கம்பருக்கு முன்பே தமிழகத்தில் இராமன் வழிபாடு ஆழ வேரூன்றியிருந்ததை அறியலாம். இவையே இராமன் வழிபாடு கம்பரால் புதிதாக உருவாக்கப்பட்டதல்ல என்பதற்குப் போதுமான சான்றுகளாகும். எனவே அவதார மகிமைக்காகவே கம்பராமாயணம் எழுதப்பட்டதனால்தான் இராமர் கோயில்கள் எழுந்தன (ப.46) என்ற கூற்றும் அடிபடக் காணலாம்.

5. கம்பர் இராமாயணம் படைக்கத் தேவையில்லை என்று அதற்கும் சில காரணங்களைக் கற்பித்துள்ளார். இது தனிமனித உரிமை மீறலாகவும் கருதத்தக்கது.

'தமிழுக்குத் தமிழ்நெறி, தமிழ்முறை, ஒழுக்கம், வீரம், கற்பு, காதல் எனும் பண்புகளைத் தரக்கூடியன கலையாக இருத்தல் வேண்டுமேயொழிய, வேறோர் இனத்தைப் புகழ்வதும் அதற்கு ஆதிக்கமழித்துத் தமிழ்மக்கள் மனத்திலே தன்னம்பிக்கையற்றுப் போகும்படியும்; தமது இனத்தைப்பற்றியே தாழ்வாகக் கருதிக் கொள்ளும்படியான நிலைமை உண்டாக்குவதுமான கதை, காவியம், இலக்கியம் என்பவைகளைக் கொளுத்த வேண்டுமென்று நாங்கள் கூறுகிறோம்" (ப.10) என்பது அவர் கூற்று.

கம்பருக்கு ஏற்றமே அவர் ஆரியர் அளித்த கதையின் முதன்மைப் பகுதிகளில் தமிழ் மரபைப் புகுத்தியதாகும். இது தொடர்பாகப் பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன(அ. பாண்டுரங்கன், தமிழில் வழங்கும் இராமாயணக் கதைகள், ஆறாவது கருத்தரங்க ஆய்வுக் கோவை, 1974, பக். 444-449.)

"யாரொடும் பகை கொள்ளலன் என்ற பின்
போர் ஒடுங்கும்; புகழ் ஒடுங்காது" (1419)

"பெருந்தடங்கண் பிறைநுதலார்க்கு எலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்" (67)

போன்ற கருத்துகள் நூல் நெடுகிலும் விரவிக் கிடக்கின்றன.

"தாய் ஒக்கும் அன்பின், தவம் ஒக்கும் நலம் பயப்பின்
சேய் ஒக்கும், முன் நின்று ஒரு செல்கதி உய்க்கும் நீரால்
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும்; நுணங்கு கேள்வி
ஆயப் புகுங்கால் அறிவு ஒக்கும்" (171)

என அமையும் தயரதன் அறிமுகம் அனைவருக்கும் ஓர் வாழ்க்கைப் பாடம் அல்லவா? இதில் தன்னம்பிக்கை இழப்பதற்கும் தாழ்வாக எண்ணுவதற்கும் இராமாயணம் எங்கே எப்படி இடளளிக்கிறது?

இதுபோன்று சுமார் நான்கு பக்க அளவில் (ப.15-19) கம்பராமாயணத்தை இழிவுபடுத்தியுள்ளார். இவற்றிற்கு மிக எளிதாக யாராலும் பதிலளிக்க முடியும் என்பதுடன் அது தனிநூலாக விரியும் இயல்பினது. ஆகவே சான்றுக்கு ஒன்று மட்டும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

நிறைவுரை

இவற்றை நோக்க இராமாயணம் ஆரிய - திராவிடப் போர் என்பதும் இராவணன் தமிழன் என்பதும் பொருந்தாக்கூற்றுகள் என்பது புலனாகும். கம்பனையும் கம்பராமாயணத்தையும் இழிவுபடுத்த வேண்டும் என்பதே இப்பகுத்தறிவாளரின் குறிக்கோள் என்பதும் வெளிப்படுகிறது. இவ்வாறே பேரறிஞரின் ஒவ்வொரு குற்றச் சாட்டுக்கும் நேர்மையான பதில்தரவியலும். அவ் எதிர்ப்பு நூல் விரிவாக அமையும்பொழுது அன்னாரின் பேச்சாற்றலில் மயங்கிக் கம்பரை வெறுத்து ஒதுக்குவார், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள் 423) எனும் தெளிவு பெறுவர். கம்பன் தமிழமுதைப் பருகிக் களிப்பர்.

தமிழ் இலக்கியங்களில் இராமாயணப் பதிவுகள்

முனைவர் சிவ.நடராசன்
தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர், ஸ்ரீமத் ஆண்டவன் கலைஅறிவியல் கல்லூரி, திருச்சி.

இலக்கிய உலகின் ஈடில்லா அருளாளர்கள் புலவர்கள் தங்களின் படைப்புகளில். முன்னோர் மொழிபொருளைப் பொன்னே போலப் போற்றி, தமது படைப்பிடையே மக்கட்சமுதாயம் அறிந்து உணர்ந்து உய்ந்திடும் வகையில் அமைத்திடுவர். அவ்வகையில் இராமாயணக் கருத்துகள் தமிழ் இலக்கிய நூல்களிடையே அமைந்த பாங்கினை இக்கட்டுரை சற்றே பகர்கின்றது.

சங்க நூலில் இராமாயணம்

பைந்தமிழ் நூல்களின் தொன்மையைப் பறைசாற்றும் சங்க நூல்களில் இராமாயணக் குறிப்புகளை உவமையாகக் கையாண்டுள்ளனர். இதனை,

"விறற் செறி மரபின் செவித்தொட குநரும்
செவித் தொடர் மரபின் விறற்செறிக் குநரும்
அரைக்கமை மரபின் மிடற்றியாக் குநரும்
மிடற்றமை மரபின் அரைக்கியாக் குநரும்
கடுந்தெறல் இராமன் உடன் புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வெளவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந்தா அங்கு
அறஅ அருநகை இனிதுபெற் றிகுமே" (புறப்பாட்டு - 378)

என்ற புறப்பாடல் பகுதியானது காட்டுகின்றது.

சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி என்பான் இரவலர்களுக்கு ஈந்த அணிகலப்பரிசானது அவர்கள் கண்டிராத தன்மையும் அதனைப் பயன்படுத்திய பாங்கினையும் சீதையை வனத்திடை இராவணன் கவர்ந்து செல்லுங்கால், சீதை தான் அணிந்திருந்த அணிகலன்களை பூமியில் வீசினாள். அதனைக் கண்ட வானரங்கள் நிலையோடு புறப்பாட்டுப் பகுதி விளக்குவதனைக் காண முடிகிறது.

இராமன் கோடிக்கரையில் தனக்குரிய குரங்கினங்களோடு இராவணனை வெல்ல ஆலமரநிழலில் கூடி ஆராயுங்கால், பறவைகள் ஒலி எழுப்புவதனை கையமைத்த இராமன் செயலை உவமித்து அகநானூற்றுப் பாடல் தோழிக்கூற்றாக பதிவு செய்து காட்டுகின்றது.

"வென்வேல் கவுரியர் தொன்முது கோடி
முழங்கிரும் பௌவம் இரங்கும் முன்துறை
வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம் போல
ஒலி அறிந் தன்றுஇவ் வழுங்கல் ஊரே" (அகம் - 70)

என்பது அப்பாவாகும்.

பெரியாரைத் துணைக்கோடலின் சிறப்பினை.

"பொலந்தார் இராமன் துணையாகத் தான் போந்து
இலங்கைக் கிழவேற்கு இளையான் இலங்கைக்கே
போந்து இறை யாயதூஉம் பெற்றான் பெரியாரைச்
சார்ந்து கெழீஇயிலார் இல்"

எனும் பழமொழி நானூறு பாடல் காட்டுகின்றது. இங்கு இராவணனை விட்டு வீடணன் இராமனிடம் சரண் புகுந்து இலங்கைச் செல்வத்தினைப் பெற்ற தன்மையை உவமித்துக் காட்டுவதனைக் காண முடிகின்றது. மேலும் இராவணன் அழிந்தமையை பழமொழி நானூறு பாடல் 291 பதிவு செய்து உள்ளது.

காப்பிய இலக்கியப் பதிவுகள்

முத்தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரம். தசரதன் ஆணைவழி இராமன் சீதை, இலக்குவன் கானகம் சென்றமையை,

"அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப் ' (புறஞ்சேரியிருத்தகாதை - 65)

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்" (ஊர்காண் காதை - 46, 47)

"தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவாணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே"
(ஆய்ச்சியர் குரவை - 35-37)

என்ற அடிகள் காட்டுகின்றன.

இராமன் இலங்கை சென்று இராவணனை வெல்ல குரங்குகள் பாலமிட்ட நிகழ்வினை,

"நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீர் அடைத்த ஞான்று
குரங்கு கொணர்ந்து எறிந்த நெடுமலை எல்லாம்
அணங்குடை அளக்கர் வயிறு புக்காங்கு
இட்டது ஆற்றக் கட்டடில் கடும்பசிப்
பட்டேன்......................" (உலகவறவி புக்க காதை - 9 - 14)

என்ற சேய்க்காப்பிய வடிகள் காட்டுகின்றன. இங்கு சாத்தனார் காயசண்டிகை பசி நீங்காத் தன்மைக்கு உவமிக்கிறார்.

பக்தி இலக்கியங்கள்

இந்து மதத்தில் இருபெரு சமயங்கள் மக்களை நன்னெறிக் கண் நடத்தி செல்கின்றன. அவை 1. சைவம், 2. வைணவம் என்பன. இச்சமயங்கள் முறையே பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்ய பிரபந்தம் என்ற நூல்களை தலைமை நூலாகக் கொண்டுள்ளன.

பன்னிரு திருமுறைகள்

இருபத்தேழு ஆச்சாரிய பெருமக்கள் பாடிய நூல்களில் முதல் ஏழு திருமுறைகளில் இராமாயணப்பதிவு சற்றே ஏறக்குறைய 634 பதிவுகளைக் கொண்டுள்ளது. பிற நூல்களில் அருகிக் காணப்படுகின்றது. இப்பகுதிகள் இராவணன் கயிலையைத் தூக்கித் துன்புற்று, பின்பு இறைவனருள் பெற்றமையையும் சீதையை வவ்விய நிகழ்வினை இராமேச்சுரம் பதிகமும் காட்டுகின்றது. இங்கு தேவார மூவர் இறைவனின் பேராற்றல் முன்பு உயிர்களின் ஆற்றல் தோற்றுப் போகும். இறைவனை வணங்கினால் வாழ்வு, இறையருள் பெற்றாலும் பிறன்மனை நயந்தவர் அழிவர் என்ற கருத்துகளை இராவணன் வழி எடுத்துக் காட்டுகின்றனர்.

நாலாயிர திவ்ய பிரபந்தம்

பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடல் திரட்டான பிரபந்தத்தின் பாடல்களில் இராமாயண நிகழ்வுகள் சுருக்கமாகவும், தெளிவாகவும் உள்ளமையினை பெரியவாச்சான் பிள்ளை இராமாயணம் எனும் பகுதி காட்டுகின்றது. இங்கு இறைவனின் சிறப்பும். சிற்றுயிர்களின் இழிவும் புலப்படுத்தப்படுகின்றது.

முடிப்பு

பண்டைய இலக்கியம் தொடங்கி சமய இலக்கியம் வரை இராமாயணச் செய்தியானது மக்களிடம் நற்சிந்தனைகளை உருவாக்கிட மேற்கோளாகக் கையாண்டு உள்ளமையினையும் முந்திய நாவினார் (பா-8) உரையினை கம்பன் கற்றுத் தெளிந்த தன்மையையும் காணுவதோடு முன்னோர் மொழி பொருளைப் போற்றி முழுமையான காவியத்தைக் கம்பன் யாத்தமையைக் காண முடிகின்றது.

கம்பனுக்கு முன் தமிழில் இராமகாதைக் குறிப்புகள்

திருமிகு. தீ.சண்முகப்பிரியா
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், கொன்சாகா மகளிர் கல்லூரி,
கிருட்டிணகிரி

கம்பர் இராமகாதையைப் பாடுவதற்கு முன் அக்கதை தமிழ் மக்களிடையே மிக நன்றாகப் பரவியிருந்திருக்கின்றது. கம்பர், வான்மீகி ராமாயணத்திலுள்ள கதைநிகழ்ச்சிகளுள் சிலவற்றை நீக்கியும், சிலவற்றைப் புதிதாக உருவாக்கிக் கொண்டும் தமிழர்களுடைய பண்பாட்டு, இலக்கிய மரபுகளுக்கேற்ப தமது இராமகாதையைப் புதுக்கியிருக்கிறார். கம்பராமாயணத்திற்கு முன் தமிழ் இலக்கியங்களில் இராமகாதைக் குறிப்புகள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன. அவற்றை வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

சங்க இலக்கியங்கள்

சங்க இலக்கியங்களான புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, பரிபாடல் ஆகியவற்றில் இராமாயணக் கதைக்குறிப்புகள் இடம் பெற்றுள்ளன.

புறநானூறு

சோழன் செருப்பாழி எறிந்த இளஞ்சேட்சென்னியை ஊன்பொதி பசுங்குடையார் பாடும் போது - நகையை உண்டாக்கத்தக்க ஒரு நிகழ்ச்சியை விளக்கும்போது, இராமாயணக் கதை நிகழ்ச்சி ஒன்றை உவமையாக எடுத்துக்காட்டி விளக்குகின்றார்.

சோழனுடைய அரசவையில் பாணர்கள் தடாரிப் பறையை முழக்கிக்கொண்டு, அவனுடைய சிறப்பைப் பாடிப் புகழ்ந்தனர். சோழன் சிறந்த அணிகலன்களை அவர்களுக்குக் கொடுத்தான். அதுவரையில் அணிகலன்களையே அணிந்தறியாத பாணர்களின் மனைவியர்கள் விரல்களில் அணிய வேண்டியதைக் காதுகளிலும், காதுகளில் அணிய வேண்டியவற்றை விரல்களிலும், இடையில் அணிய வேண்டியதைக் கழுத்திலும், கழுத்தில் அணிய வேண்டியதை இடையிலும் அணிந்து மகிழ்ந்தனராம். இந்நிகழ்வை ஊன்பொதி பசுங்குடையார், 'சீதையை இராவணன் கவர்ந்து சென்றபோது, சீதை-யிடத்திலிருந்து நிலத்தில் விழுந்த அணிகலன்களை அங்கிருந்த

குரங்குகள் எடுத்துக்கொண்டு, எந்தெந்த அணிகளை எவ்வெவ் உறுப்புகளில் அணிந்து கொள்வது என்று தெரியாமல் மாற்றி மாற்றி அணிந்து கொண்டன'. இந்நிகழ்ச்சியைப் போன்றிருந்தது விறலியரின் செய்கை என்பதை,

"கடுந்தெறல் இராமன் உடன் புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வௌவிய ஞான்றை,
நிலம்சேர் மதர் அணி கண்ட குரங்கின்
செம் முகப் பெருங் கிளை இழைப் பொலிந்தாஅங்கு
அறாஅ அருநகை இனிது பெற்றிகுமே" (புறம். 378) - எனும் பாடலில் கூறுகிறார்.

அகநானூறு

பாண்டியர்களின் கடற்கரை நகராகிய தனுஷ்கோடியில் கடற்கரைக்கு மிக அருகில் உள்ள ஓர் ஆலமரத்தின் அடியில், இலங்கைக்குப் படையெடுத்துச் செல்லவேண்டி, தன் உடன் வந்தோர்களுடன் இராமன் மந்திராலோசனை நிகழ்த்துகிறான். அப்போது, அதுவரை அவ்ஆலமரத்தில் ஓயாது ஒலி செய்து கொண்டிருந்த பறவைக்கூட்டங்கள், மந்திராலோசனைக் கூட்டம்; தொடங்கிய உடன் 'கப்' என்று தம் சப்தத்தை அடக்கிக் கொண்டனவாம். இந்த இராமாயணக் கதை நிகழ்ச்சியை, களவுக் காலத்தில் தலைவியைப் பற்றி அலர் தூற்றிக் கொண்டிருந்த ஊரார்கள் அத்தலைவி தனது தலைவனைத் திருமணம் செய்து கொண்டவுடன் அலா; தூற்றாது வாய் அடங்கிப் போனதற்கு உவமையாகக் கையாள்கின்றார்.

"வெல்வேல் கவுரியர் தொன்முது கோடி
முழங்கு இரும்பௌவம் இரங்கும் முன் துறை,
வெல்போர்இராமன் அருமறைக்கவித்த பல்வீழ் ஆலம்போல,
ஒலிஅறிந்தன்றுஇவ்அழுங்கல்ஊரே" (அகம்.70)

கலித்தொகை

இரவுக்குறி வந்து நீங்கும் தலைவனை எதிர்பட்டுத் தோழி, அவனை வரைவு கடாவி, அவனது செயலை விளக்கும்போது, "புலியின் நிறத்தைப் போன்று பூத்த வேங்கை மரத்தை புலியெனக் கருதி பகை கொண்டு அம்மரத்தின் அடியில் குத்தியது ஒரு மதயானை. அதன் தந்தங்கள் மரத்திலே ஆழமாகப் புதைந்தன. தந்தத்தை எடுக்க முடியாமல் வருந்திய யானை மலையெல்லாம்

எதிரொலிக்கும்படி பிளிறுகிறது. இந்தச் செயலை சிவபெருமான் உமையாளுடன் கயிலை மலையில் வீற்றிருக்கும்போது, இராவணன், அம்மலையைப் பெயர்த்தெடுக்க தனது பெரிய கையைக் கீழே செலுத்தி எடுக்க முயல்கிறான். அம்மலையை எடுக்க முடியாமல், கை இடையில் செருகிக் கொண்டதால், கையையும் எடுக்க இயலாமல் வருந்தியதைப் போன்று, தலைவனின் செயல் உள்ளதாகத் தோழி கூறுகின்றாள்.

"இமையவில் வாங்கிய ஈர்ஞ் சடை அந்தணன்
உமை அமர்ந்து உயர்மலை இருந்தனன்ஆக
ஐ-யிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப் பொலி தடக்கையின் கீழ்புகுந்து, அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல
உறு புலி உரு ஏய்ப்பப் பூத்த வேங்கையைக்
கறுவு கொண்டு, அதன் முதல் குத்திய மதயானை
நீடு இருவிடர் அகம் சிலம்பக் கூய்" (கலித்.38)

பரிபாடல்

கௌதம முனிவரின் சாபத்தால் அகலிகை கல்லான செய்தியைப் பரிபாடல்,

"இந்திரன், பூசை; இவள் அகலிகை; இவன் சென்ற கவுதமன்; சினன் உறக் கல் உரு ஒன்றிய படியிது" என்று உரை செய்வோரும் (19,வரி50-52) - எனும் அடிகளில் குறிப்பிடுகின்றது.

இராமாயணக் கதை நிகழ்ச்சிகளைச் சங்க இலக்கியப் பாடல்கள், போகிற போக்கில் உவமையாகக் குறிப்பிடுவதன் மூலம் இராமகாதை மக்களுக்கு நன்கு தெரிந்த கதையாக இருந்திருக்க வேண்டும். சங்க காலத்தில் ஓர் இராமாயண நூல் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிய வருகிறது.

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரத்தில் இராமகாதையின் மிக முக்கியமான நிகழ்ச்சிகள் சற்று விரிவான அளவில் இடம் பெற்றுள்ளன. இராமன், தன் தந்தையாகிய தயரதன் ஆணையை ஏற்றுத் தன் மனைவியுடன் காட்டிற்குச் சென்றதையும்; அங்குச் சீதையை இழந்து கடுமையான துயரம் அடைந்ததையும்; இத்தகைய இராமன் வேத முதல்வனாகிய நான்முகனைப் பெற்றெடுத்தவன் என்பதையும்,

"தாதை ஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேதமுதல்வன் பயந்தோன் என்பதுநீ அறிந்திலையோ?
நெடுமொழி யன்றோ! (ஊர்காண்.46-49)

எனும் அடிகள் குறிப்பிடுகின்றன. இராமன், சீதையை இழந்து மிகுந்த துயரம் அடைந்ததைக் குறிப்பிட்டு, 'நீஅறிந்திலையோ?', 'நெடுமொழியன்றோ?' எனக் கூறுவதன் மூலம், சிலப்பதிகாரக் காலத்திற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இராமகாதை தமிழ் மக்களிடம் வழங்கி வந்துள்ளது என்பதும், அதில் இராமன் திருமாலின் அவதாரமாகக் கூறப்பட்டுள்ளான் என்பதும் தெரிய வருகின்றன. இராமன் இலக்குவனுடன் காட்டிற்குச் சென்ற செய்தியையும்; இலங்கையை அழித்த செய்தியையும்; இராமன், வாமனாவதாரமாக வந்த திருமாலின் அவதாரமே என்ற குறிப்பையும்,

"மூவுலகும் ஈரடியான்முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோஅரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவிஎன்ன செவியே?"
(ஆய்ச்சியர் குரவை, படர்க்கைப்பரவல் 1-4)

எனும் சிலப்பதிகார அடிகள் உணர்த்துகின்றன.

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகளுடன் மதுரையை நெருங்கிக் கொண்டிருந்த போது, கோசிகன், கோவலனைக் கண்டு, அவனைப் பிரிந்த தாய்தந்தையர், புகார் நகரத்தின் நிலைமையைக் கூறும்போது,

"அரசே தஞ்சமென் றருங்கான் அடைந்த அருந்திறல் பிரிந்த அயோத்திபோல" (புறஞ்சேரியிருத்த.64-65)

என்ற அடிகளில், தந்தையின் கட்டளைப்படி கானகம் சென்ற இராமனைப் பிரிந்து துன்புற்ற அயோத்தி போல, கோவலன் பிரிவினால் புகார் துன்புறுகிறது என்று கூறுகின்றான்.

மணிமேகலை

இராமன், பாலம் அமைத்து இலங்கை சென்றடைந்த செய்தியையும், இராமன் வென்று இராவணன் தோற்றான் என்ற செய்தியையும் மணிமேகலையில் உள்ள இராமகாதைக் குறிப்புகள் உணர்த்துகின்றன. இராமன் இலங்கைக்குப் படையெடுத்துச் செல்லும் போது, கடலைக் கடந்து செல்ல வேண்டி, சேதுவில் அணை

கட்டியபோது, குரங்குகள் எடுத்துக் கொண்டு வந்து எறிந்த நெடிய மலைகள் எல்லாம் கடலினுள் சென்று மறைந்து விட்டனவாம். இந்த நிகழ்ச்சியை,

"அடல்அரு முந்நீர் அடைத்த ஞான்றுகுரங்கு கொணா;ந்து எறிந்த நெடுமலை எல்லாம் அணங்கு உடை அளக்கர் வயிறு புக்காங்கு" (உலகஅறவி புக்க காதை 11-13) - எனும் அடிகள் கூறுகின்றன. இச்செய்தி, காயசண்டிகை யானைத்தீ என்னும் கடுமையான நோய்க்கு ஆட்பட்டு, எவ்வளவு உண்டாலும் பசி அடங்காது, அவள் உண்ட உணவு பசியை அடக்காது வயிற்றில் மறைந்த நிகழ்ச்சிக்கு உவமையாகக்காட்டப்பட்டுள்ளது. திருமால் மயக்கத்தினால்தான் இராமனாக அவதாரம் எடுத்தார் என்பதை,

"நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி" (உலகஅறவி புக்ககாதை,10)- எனச் சாத்தனார் கூறுகின்றார்.

இராவணன் மாட்சியில்லாதவன்; இராமன் வென்று, இராவணன் தோற்றான் என்பதை,

"மீட்சிஎன்பது இராமன் வென்றான் என மாட்சியில் இராவணன் தோற்றமை மதித்தல்" (சமயக்கணக்கர் திறம்கேட்ட காதை)- எனும் அடிகளில் சாத்தனார் குறிப்பிடுகின்றார்.

தேவாரம்

சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் பாடிய தேவாரப் பாடல்களிலும் இராமகாதை பற்றிய குறிப்புகள் காணக்கிடக்கின்றன.

சம்பந்தர்

திருஞானசம்பந்தர் சிவபெருமானைத் துதித்துப் பாடும்போது,

"எறியார் கடல்சூழ் இலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்தி" (1-ஆம் திருமுறை, திருகோலக்கா, 8)

என்று இராவணன் கயிலாயமலையைப் பெயர்த்தெடுக்க முற்படும்போது, அவனது தடக்கைகள் பெருமானால் கயிலாய மலையின்கீழ் அழுத்தப்பட்டன என்பதைக் குறிப்பிடுகின்றார்.

"அணையலை சூழ்கடல் அன்றடைத் துவழி செய்தவன்"
(3-ஆம் திருமுறை, திருஇராமேச்சுவரம், 6)

என்று இராமன் கடலை அடைத்து இலங்கைக்குப் பாலம் கட்டி, அதன் வழியே இலங்கை சென்றடைந்ததைக் குறிப்பிடுகின்றார்.

சீதையைக் கானகத்தில் மாயையினால் வஞ்சனை செய்து கவர்ந்தவன் இராவணன்; அவனைக் கொன்றவன் இராமன் என்பதை,

"மானன நோக்கியை தேவிதன் னையொரு மாயையால்
கானதில் வவ்விய காரரக் கன்னுயிர் செற்றவன்"

(3-ஆம் திருமுறை, திருஇராமேச்சுவரம்,3)

என்ற அடிகளில் குறிப்பிடுகின்றார்.

இராவணன் கயிலாய மலையைப் பெயர்த்தெடுக்கும்போது, அவனது வலிமையை அடக்கி ஒடுக்கியவர் சிவபெருமான் என்றும்; இராவணன் பத்து தலைகளையும் இருபது கரங்களையும் கொண்டவன் என்றும்; அவனது அடாத செயலையும் குறிப்பிடுகின்றார்.

"தலையொரு பத்துந் தடக்கை திரட்டி தானுடைய அரக்கனொண் கயிலை
அலைவது செய்த அவன்திறல் கெடுத்த ஆதியார்"

(3-ஆம் திருமுறை, திருவோமாம்புலியூர், 8)

இராமபிரான் இராவணனைக் கொன்ற பாவம் தீர இராமேசுரத்தில் சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து பூசித்த திறத்தினை,

"தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்
பூவிய லும்முடி பொன்றுவித் தபழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல்செய் தவிரா மேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கள்தம் மேல்வினை வீடுமே"

(3-ஆம் திருமுறை, திருஇராமேச்சுவரம், 2)

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார்.

திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசரும் தான்பாடியருளிய இராமேசுவரத் திருப் பதிகத்தில் இராமாயணக் கதைக்குறிப்புகளைக் கூறியுள்ளார்.

"குன்றுபோல் தோளுடைய குணமிலா அரக்கர் தம்மைக்
கொன்றுபோராழி யம்மால் வேட்கையால் செய்தகோயில்"

(4-ஆம் திருமுறை, திருஇராமேச்சுவரம், 4)

எனும் அடிகளில், திருஆழியைக் கரத்திலேந்திய திருமாலே இராமன் என்பதையும்; இராமன் இராவணனை முதலாக உடைய அரக்கர் அனைவரையும் கொன்றுவிட்டு, சீதையை மீட்டுக் கொண்டு அயோத்தி திரும்பும் வழியில் சேதுவை அணுகும்போது, மிகவும் அச்சமூட்டும் உருவத்தில் இராவணன் ஆவியாக வந்து அவர்களை வழிமறிக்கின்றான். அப்போது இராமன், பிராமணனாகிய

இராவணனைக் கொன்ற 'பிரம்மஹத்தி' தோஷம் நீங்க வேண்டி, இராமேசுவரம் கடற்கரையில். அங்குள்ள மணலைக்கொண்டே 'சிவலிங்கம்' தாபித்துச் சிவபூசை செய்து சிவனை வழிபட்டதையும் குறிப்பிடுகின்றார்.

"வரைகளொத் தேயுயர்ந்த மணிமுடிமீண்டுமால் செய்தகோயில்"
(4-ஆம்திருமுறை,திருஇராமேச்சுவரம்,11)

எனும் அடிகளிலும் இராமன் சிவபூசை இயற்றி வழிபட்ட செயலைக் குறிப்பிடுகிறார்.

இலங்கைக்குப் பாலம் அமைக்கும்போது, கடலில் மலைகளைப் போட்டுப் பாலம் அமைத்த செயலை,

"கடலிடை மலைகள் தம்மால் அமைத்துமால் கருமம் முற்றி"
(4-ஆம் திருமுறை,திருஇராமேச்சுவரம்,4)

எனும் அடியில் குறிப்பிடுகின்றார்.

சுந்தரர்

சுந்தரர், இராமாயணக் கதைக்குறிப்புகளை உள்ளடக்கிய பாடல்களை அதிகம் பாடியருளவில்லை. வலிமையான தேர்களையும், நீண்ட வீதிகளையும் உடைய இலங்கைக்கு அரசனாகிய இராவணனுடைய இருபது வலிமையான தோள்களையும் வெட்டி யருளியவன் திருமால் என்பதனை,

"திண்டேர்நெடுவீ தியிலங்கையர்கோன் திரடோளிருபது நெரித்தருளி"
(திருநெல்வாயில் அரத்துறை, 2)

என்ற அடிகளில் உணர்த்தி, இராவணனுடைய தோளாற்றலையும், தேர்ப்படைகளின் வலிமையையும், இலங்கை மாநகர வீதிகளின் அமைப்பையும் குறிப்பிடுகின்றார்.

தேவாரம் பாடியருளிய மூவர்முதலிகள் தமது திருப்பதிகங்களில், திருமாலின் அவதாரமாகிய இராமனாலும் வழிப்படப்பெற்றவன் சிவபெருமான் என்று சிவபெருமானுக்கு ஏற்றம் தந்து பாடியிருந்தாலும், அப்பாடல்களில் இராமாயணக் கதைக்குறிப்புகள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

திவ்வியப் பிரபந்தம்

ஆழ்வார்கள் பாடியருளிய திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களில் இராமாயணக் கதைக் குறிப்புகள் பல இடம் பெற்றுள்ளன. ஆழ்வார்கள் தமது பாசுரங்களில் ஒப்பற்ற பரம்பொருளாகிய திருமாலையே

பாடித் துதிப்பதால் திருமாலின் அவதாரமாகிய இராமாவதாரத்திலும் ஈடுபட்டு இராமாவதாரக் கதை தொடர்பான பல நிகழ்ச்சிகளைத் தமது பாசுரங்களில் குறிப்பிடுகின்றனர்.

நம்மாழ்வார்

"கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ?" (5ஆம் திருவாய்மொழி,3381) என்று நம்மாழ்வார் பாடியிருப்பதன் மூலம், இராமகாதை அவர் காலத்தில் வெகுவாக மக்கள் மத்தியில் வழங்கப்பெற்று வந்திருக்க வேண்டும் என்பதும்; இராமகாதையைக் கற்று நிறைவெய்துவதையே முழுமையாகக் கல்வி கற்றதன் அடையாளமாக அக்காலத்தில் கொண்டிருந்தனர் என்பதையும் அறிய முடிகிறது.

"மன்னுடையிலங்கை அரண்காய்ந்த மாயவனே" (2-ஆம் திருவாய்மொழி, 3238)- என்று, இராவணனுடைய கோட்டைகளை அழித்தவன் மாயவனாகிய திருமாலின் அவதாரமாகிய இராமன் என்று குறிப்பிடுகிறார்.

"கொம்புபோல் சீதை பொருட்டு இலங்கை நகர்
அம்பெரியுய்த்தவர் தாளிணைமேலணி"

(2-ஆம் திருவாய்மொழி, 3025)

எனும் அடியில், சீதையை மீட்பதற்காக இலங்கை மாநகரை அம்பால் எரித்து அழித்தவன் இராமன் என்று குறிப்பிடுகிறார்.

குலசேகர ஆழ்வார்

இவர் இராமாவதாரத்தில் மனத்தைப் பறி கொடுத்தவர். இராமாயணக் கதையையே பலமுறை பாடிப்பாடி திருமாலைத் துதிக்கின்றார்.

"வாலியைக்கொன்று அரசுஇளையவானரத்துக்கு அளித்தவனே" (8-ஆம் திருமொழி,725) என்று, இராமன் வாலியைக் கொன்று, கிட்கிந்தையின் அரச பதவியைச் சுக்கிரீவனுக்கு அளித்த செய்தியைக் கூறுகிறார்.

"மன்னுபுகழ்க்கௌசலைதன் மணிவயிறுவாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்"

(8-ஆம் திருமொழி, 719)

என்று, இராமன் கோசலையின் மகனாகப் பிறந்ததையும்; இராவணனது பத்து தலைகளும் சிதறி விழும்படி, இராமன் அவனை அழித்தொழித்தச் செயலையும் குறிப்பிடுகின்றார்.

"தங்கு பெரும்புகழ்ச் சனகன் திருமருகா!" (8-ஆம் திருமொழி,721) - என்று, இராமன் சீதையை மணந்து சனகனுக்கு மருமகனாக ஆனதைக் குறிப்பிடுகின்றார்.

"பாராளும் படர்செல்வம் பரதன் நம்பிக்கேயருளி
ஆராவன்பு இளையவனோடு அருங்கானம் அடைந்தவனே!"
(8-ஆம் திருமொழி,723)

என்று, இராமன் நாடாளும் பொறுப்பைப் பரதனுக்கு அருளிவிட்டு, தன்மீது ஆராஅன்பு கொண்டுள்ள இலக்குவனோடு கொடுங்கானம் சென்றடைந்த செயலைக் குறிப்பிடுகின்றார்.

"திண்திறலாள் தாடகைதன் உரமுருவச்சிலை வளைத்தாய்"
(8-ஆம் திருமொழி,720)

என்று, வலிமை வாய்ந்த அரக்கியாகிய தாடகையை அழித்தொழித்த இராமனின் வில்லாற்றலைப் புகழ்கின்றார். இன்னும் பலவாறு இராமாயணக் கதைகளையே பாடிப்பாடி இராமனைத் துதிக்கின்றார்.

திருமங்கையாழ்வார்

இவரும் இராமாயணக் கதைக்குறிப்புகளைத் தமது பாசுரங்களில் பொதித்து வைத்து திருமாலைப் போற்றித் துதிக்கின்றார்.

"பைங்கண் விறல் செம்முகத்து வாலிமாளப்
படர்வனத்துக் கவந்தனொடும், படையார் திண்கை
வெங்கண் விறல் விராதன் உக விற்குனித்த
விண்ணவர் கோன் தாளணைவீர்" (4-ஆம் திருமொழி,1183)

என்று, இராமன் வாலி, கவந்தன், விராதன் ஆகியோரைத் தம் வில்லாற்றலால் அழித்தொழித்த செயலைக் குறிப்பிடுகின்றார்.

"கலையிலங்கும் அகலல்குல் அரக்கர் குலக்கொடியைக்
காதொடுமூக்குடன் அரியக்கதறி அவளோடி
தலையில் அங்கை வைத்து மலையிலங்கை புகச்செய்த
தடந்தோளன்" (9-ஆம் திருமொழி,1231)

என்று சூர்ப்பணகையின் காதையும் மூக்கையும்அரிந்த செயலையும், அவள் கதறியழுது தலையிலடித்துக் கொண்டு இலங்கைக்கு ஓடிய செயலையும், அவளது தோற்றப் பொலிவையும் குறிப்பிடுகின்றார்.

தொகுப்புரை

புறநானூறு, அகநானூறு, கலித்தொகை, பரிபாடல் ஆகியவற்றில் சில பாடல்களில் இராமாயணக் கதைக்குறிப்புகள் உவமைகளாக இடம்பெற்றுள்ளன. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் இராமகாதைக் குறிப்புகள் உள்ளன. மூவர்முதலிகளின் தேவாரப் பனுவல்களிலும்; நம்மாழ்வார், குலசேகர ஆழ்வார், திருமங்கை ஆழ்வார் பாசுரங்களிலும் இராமாயணக் கதைக் குறிப்புகள் அதிக அளவில் இடம்பெற்றுள்ளன. கம்பர் இவற்றையெல்லாம் தமது இராமாவதாரத்தில் மிகுதியும் பயன்படுத்தியிருக்கின்றார்.

கம்பனில் சங்க இலக்கியத் தாக்கங்கள்

திருமிகு. கு.கண்ணன்
முனைவர் பட்ட ஆய்வாளர், பெரியார் பல்கலைக்கழகம்,
சேலம்.

முன்னுரை

உலக இலக்கிய அரங்கில் வெற்றிநடை போட்டு வருகின்ற கம்பனின் இராமாயணத்தில் சங்க இலக்கியங்களின் தாக்கம் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இராமாயணத்தில் சங்க இலக்கிய தாக்கம்

சங்க இலக்கியத்தில் காணப்படும் பரத்தையிற்பிரிவு கம்பராமாயணத்தில் காணப்படவில்லை. அன்பின் ஐந்திணைகளுள் ஒன்று மருதத்திணை மருதத்திணைக்குரிய ஒழுக்கம், ஊடல் ஆகும். அதாவது ஊடலும் ஊடல் நிமித்தமுமாம். ஒன்றி ஒருமித்த கருத்தைக்கொண்டு மனத்தால் பிணைந்த காதலர் இருவருள், ஆடவனின் பரத்தமை காணும் பெண்ணின் ஊடலே இத்திணை. தலைவனின் பரத்தமையைத் தலைவி தன் பெண்மைக்கு நேர்ந்த பெருந்தோல்வியாக மனதுள் என்னும் பொழுது அந்தப்பெண்ணின் மனம் அவளையும் அறியாமல் அத்தலைவன் மேல் ஊடல் கொள்ளும்.

கம்பர் காலத்தில் பரத்தையற் பிரிவு என்பது இல்லை. அதனால் தலைவனுக்குப் புறத்தொழுக்கம் என்பது இல்லை என்று கூறிவிட முடியாது. அவர் காலத்தில் ஆண், மனைவிகளாகப் பலரை மணக்கலாம் என்ற உரிமை வழங்கினபடியால் அவன் விரும்பிய பெண்ணை மணக்கலாம். அவளோடு வாழலாம். ஆதலால் ஊடலுக்கு காரணமான புறத்தொழுக்கம் என்பது பரத்தையற் பிரிவு என்றில்லாமல், மாற்றாளோடு அல்லது வேறு பெண்களோடு கணவன் ஒழுகியதென்று கொள்ளல் வேண்டும்.

சங்க இலக்கியத்தில் மருதப்பண்பு

சங்கஇலக்கியம் என்பது பாட்டும் தொகையும் கொண்டது. இத்தொகை நூல்களில் ஐந்திணைகள் இடம் பெற்றுள்ளன. இவ்வைந்திணைகளில் கட்டுரையின் எல்லை கருதி மருதத்திணையின் ஒழுக்கம் பற்றி மட்டும் பின்வருமாறு காண்போம்.

"சுரஞ்சொல் யானைக் கல்லுறு கோட்டின்
தெற்றென இறீஇயரே, ஐய, மற்றியாம்

....

நும்மும் பெறேஎம் இறீஇயரெம் முயிரே" (குறு. 1697)

எனும் இக்குறுந்தொகைப் பாடலில் என்று உம்மோடு நாம் நகையாடிய எமது மிகவும் வெண்மையான பற்கள், சுரத்திற் செல்லும் யானையின் பாறையில் குத்துண்ட கொம்பைப்போல விரைவின் முறிந்திடுவனவாக என்று பரத்தையிற்பிரிந்து மனைக்கு மீண்ட தலைவன் மீது ஊடலுற்ற தலைவியை அவன் ஊடலுணர்த்தித் தெளிவிக்க முயன்றதை மறுத்து விலக்கி அவள் புலந்து இவ்வாறு கூறுகிறாள். இத்தகைய ஊடல்கள் பல சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன. இனிக் கம்பன் படைப்பில் உள்ள ஊடல் செய்திகளைப் பின்வருமாறு காண்போம்.

கம்பன் கவியில் மருதப்பண்பு

ஊடல் தோற்றம்

கொள்ளையடிப்போரின் கொடிய வாளைப் போன்ற கண்களையுடைய ஒருத்தி அழகுடைய தன் கணவனது மார்பில் ஊடல் கொண்டு பாதத்தால் மிதிக்க, அந்த ஆடவன் தன் மார்பில் அணிந்திருக்கும் மாலையில் பட்டு அந்நங்கையின் பாதம் உறுத்தும் என எண்ணி, அன்புமிகுதியால் தன் கையினால் தன் மார்பை மறைத்துக்கொள்கிறான். இதைக்கண்ட அப்பெண் அவன் மனதிற்குள் வாழும் மற்றொரு பெண்ணின் மனம் புண்படும் என மறைப்பதாகக் கருதி அவனுடைய கள்ளத்தன்மையால் மார்பானது கைகளால் புதைக்கப்பட்டது என்றெண்ணி முன்பைவிட பெரும் கோபம் கொண்டு ஊடல் கொள்ளும் நிலையினை,

"கொள்ளைப் போர் வாட்கண் ணாள்அங்கு
ஒருத்தியோர் குமரன் அன்னான்
வள்ளல்தார் அகலம் தன்னை
மலர்க்கையால் புதைப்ப நோக்கி ." (கம்.பால.1104)

எனும் இப்பாடலில் ஊடலின் தோற்றத்தைக் கம்பர் நயம்பட எடுத்துரைக்கின்றார். மற்றுமோர் ஊடல் தோற்றத்திற்கானக் காட்சியைக் கம்பர் முன் வைக்கின்றார். ஊடல் தோற்றத்தில் பெண்களுக்கு கண்கள் சிவக்கும் மெய்ப்பாட்டினையும் அவர்கள் தாம் அணிந்திருக்கும் மாலை முதலானவற்றைப் பறித்தெறியும் செயல்பாட்டினைக் கூறுகின்றார்.

"ஆடவர் ஆவிசோர அஞ்சன வாரி சோர
ஊடலில் சிவந்த நாட்டத்து உம்பர்தம் அரம்பை மாதர்

தோடவிழ் கோதை நின்றும் துறந்தமந் தார மாலை
வாடல நறவ றாது வயின்வயின் வயங்கும் மாதோ"

(கம்ப.பால. 939)

என்று காமக் கலக்கத்திலுள்ள ஆடவரின் ஆவி சோறுமாறு அவர்களுடன் கூடலை மறுத்து ஊடுகின்ற பெண்டிர்க்கு உள்ளக் கொதிப்பினாலும் உணர்ச்சி மேலீட்டாலும் விழிகள் சிவக்கின்றன. தம் மாலைகளை அறுத்தெறிவதன்மூலம் அவர்களின் வெகுளியை உடனடியாக வெளிப்படுத்துகின்றனர். இதன்மூலம் ஊடலுக்கான தோற்றத்தை நம்மால் உணர முடிகின்றது.

உயர்வு மனப்பான்மை

பிறரால் நிந்தித்துக் குறைசொல்ல முடியாத வனப்புடைய அரசன் ஒருவன், மாலைநேரத்தில் விளங்கும் பிறை, சந்திரனைப் போன்று நெற்றியையுடைய தன் ஒரு மனைவிக்கும் பிறரால் வணங்கி பாராட்டப்பெறும் தன்மையுடைய தன் மற்றொரு மனைவிக்கும் கைகளில் உள்ள மென்மையான மலர்களைச் சரிசமமாகப் பங்கிட்டுக் கொடுக்க, அவர்கள் இருவரும் அப்பூக்களைத் தரையில் வீசி மயிலின் சாயல் போன்று விரைந்து சினத்துடன் அங்கிருந்து சென்று விடுகின்றனர். காரணம் மனைவியர் இருவரும் கணவன் தன்பால் தனி அன்பு கொண்டுள்ளவன் என கருதியிருக்க, அவன் கொடுத்த பூக்கள் சரிசமமாக இருந்தமையால் இருவரும் ஊடல் கொண்டு அவன் அளித்த பூக்களை வீசி எறிந்து விட்டுச்சென்றனர். இவ்வூடல் காட்சியைக் கம்பர்,

"சந்திக் கலாவென் மதிவாணுத லாள்த னக்கும்
வந்திக்க லாகும் மடவாட்கும் வகுத்து நல்கி
நித்திக்க லாகா உருவத்தினன் நிற்ப மென்பூச்" (கம்ப. பால. 995)

எனும் இப்பாடலில் விளக்குகிறார்.

மாலையுரிமை

தலைவனானவன் மணமானவன். இதுவரை தலைவி ஒருத்திக்கு மட்டுமே உரிமையாய் இருந்தவன். இப்போது தன் மனைவிக்கு மறைத்து மற்றொரு மங்கையுடன் களவு நிகழ்த்துகின்றான். தான் அணிந்திருந்த மாலையை அம்மங்கைக்கு அன்போடு சூட்டி, அவளுக்கும் தன்னை உரிமையாக்குகின்றான். இதைப் பார்க்கும் தலைவி எவற்றையும், எத்தகைய இழப்பையும் ஏற்பாள். தன் கணவனிடத்துக் கொண்ட உரிமையிழப்பை ஏற்கமாட்டாள். அதனைக் கண்டு அக்கணமே கண்ணீரைப் பொழிந்து கதிகலங்கி நிற்கின்றாள்.

"கோளுண்ட திங்கள் முகத்தாளொரு கொம்பொர் மன்னன்
தோளுண்ட மாலையொரு தோகையைச் சூட்ட நோக்கித்
(கம்ப.பால. 987)

என்று தலைவி தன் நிலையறிந்து வருந்தி நிற்கும் செய்தியை கவிச்சக்கரவர்த்தி கூறுகின்றார்.

தனக்குச் சொந்தமாய் இருந்தவன் மற்றொருத்திக்கும் சேர்ந்த பொதுவுடைமை ஆனானே என்று ஊடல்கொண்டு ஏக்கமாய் கண்ணீர் கண்களை கரைக்கின்றது.

இவனைப் போலவே மற்றொரு தலைவனும் தன் மனைவிக்குத் தெரியாது என்று எண்ணி மாலையை மாற்றாளுக்கு அணிவித்துவிட்டு வெறுந்தோளனாய் மீண்டு வருகின்றான். கணவனின் களவைத் தெரிந்து கொண்ட மனைவி, சினத்தோடு அவனை எதிர் கொள்ளவும், அவளது முகத்தை ஏறிட்டுநோக்கி, இதழ்கள் துடித்த துடிப்பினின்று உள்ளக்கொதிப்பை உணர்ந்து கொண்ட தலைவன் அவளின் ஊடலைத் தணிக்கும் வழியறியாது தடுமாறுகின்றான்.

"வண்டு வாழ்குல லாள்முகம் நோக்கியோர்
தண்டு போற்புயத் தான்தடு மாறினான்
உண்டு கோபமென்று உள்ளத் துணர்ந்தவன்
தொண்டை வாயின் துடிப்பொன்று சொல்லவே" (கம்ப.பால.1011)

எனக் கம்பர் பூக்கொய்படலத்தில் தலைவி ஊடல் கொள்ளும் காட்சியை விவரிக்கின்றார்.

பரத்தமையை இல்லாத தலைவனிடத்தும் தலைவி ஊடல் கொள்வதுண்டு. தலைவனின் இயல்பான சொல்லும் நிலையும் கூட கணவனுக்குப் பரத்தமை உண்டோ எனும் ஐயத்தை மனைவியிடம் தோற்றுவிப்பதாலேயே அவள் ஊடல் கொள்கின்றாள் என்பதற்கானச் சான்றுகளை மேலே கண்டோம்.

முடிவுரை

அகத்திணை நிறையிலக்கியமான சங்க இலக்கியங்களில் பெரும்பான்மையான மருதப்பாடல்கள் தலைவியின் ஊடற்பொருளாக உள்ளன. இவ்வூடல் காட்சியையே கம்பர் தன் கவியிலும் கூறி-யிருக்கின்றார். ஆதலால் கம்பனில், அவரது படைப்பில் சங்க இலக்கியத்தாக்கங்கள் உள்ளன என்று இக்கட்டுரையின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

கம்பனில் சங்க இலக்கியக் காட்சிகள்

புலவர் உ.தேவதாசு
செயலர், இலக்குவனார் இலக்கியப் பேரவை,
சென்னை.

கம்பன் தனது இராமகாதையில் கதைத்தொடர்பிற்குச் சற்றும் தொடர்பில்லாத இரண்டு நெறிகளைப் பதிவு செய்துவிட வேண்டும் என்பதில் குறியாக இருந்திருக்கிறான். தனது ஒப்பற்ற இராமகாதை முறையாக அரங்கேற்றப்படுமா? என்று அலமந்திருந்த வேளையில் கம்பரே வியக்கும்வண்ணம் வெண்ணெயூர்ச் சடையப்ப வள்ளல் அரங்கேற்றிய நிகழ்வை தமது காவியத்தில் தான்ஒரு செய்ந்நன்றி மறவாதவன் என்பதைப் பதிவு செய்துவிட வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்திருப்பான் போலும்! அதனால்தான் தாம் எழுதிய இராமாவதாரத்தில் இடையிடையே வாய்ப்பான இடத்திலெல்லாம் பதிவு செய்ததுடன் முதலிலும் முடிவிலும் தமது நன்றியறிதலைப் பதிவு செய்திருக்கிறான். பாயிரம் பாடி முடித்ததும்,

"தொடை நிரம்பிய தோமறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் வந்ததே" (பாயிரம்-11)

என முதற்காண்டமாம் பால காண்டத்திலும்

"வெண்ணெய் நல்லூர் மரபுளோர் கொடுக்க வாங்கி
வசிட்டனே புனைந்தான் மௌலி"

என்று இறுதிக்காண்டமாம் யுத்தகாண்டத்திலும் எழுதிமுடித்ததில் நிம்மதி என்பதைவிடத் தம் செய்ந்நன்றியறிதலை நிறைவாக முடித்ததில்தான் கம்பன் பெரு நிம்மதி-பெருமகிழ்வு கொண்டிருக்கிறான்.

அதேபோல், சங்ககால வாழ்வியல் நெறிகளை, சங்க இலக்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்ய வேண்டும் என்பதும் அவனது உள்ளக் கிடக்கையாக இருந்திருத்தல் வேண்டும். அதற்கு முதற்காண்டமாகிய பாலகாண்டத்தைக் களமாக அமைத்துத் தம் மண்வளப் பெருமையை இணைத்துள்ள பாங்கு படித்து இன்புறத்தக்கது.

ஆற்றுப் படலம் அயோத்தியின் சரயுநதிச் சிறப்பு சொல்வதுதான். ஆனால் காவிரியை உள் நினைக்கின்றான். கோசலத்தை நஞ்செய் குலுங்கும் தஞ்சைவள நாடாக எண்ணுகிறான். காவிரி நாடன்ன கழனி நாடு - என்பது கம்பனின் கூற்றல்லவா?

"முல்லையைக் குறிஞ்சியாக்கி மருதத்தை முல்லையாக்கி
புல்லிய நெய்தல் தன்னைப் பொருஅரு மருதம் ஆக்கி"

(இற்று-17-1,2)

எனத் தமிழகத்தை-நானிலவளத்தின் திணைமயக்கத்தை கோசலத்தில் புகுத்தும் அழகை என்னென்பது! முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்த எஞ்சிய பாலையை தாடகை வதையில் பாடியிருக்கும் பாங்கு சங்க இலக்கியக் காட்சிகளை நினைவு படுத்துகிறது. பாலை என்றாலே சுட்டெரிக்கும் வெயிலும் களிற்றுக் கூட்டங்களும் பாம்புகளின் நடமாட்டங்களும் மலையருவிகளும் என்றின்னோரன்ன ஆளரவமற்ற அச்சம் தரும் இடமாகத்தான் அது காட்சியளிக்கும். அப்படித்தான் சங்க இலக்கியங்கள் பாலைக் காட்சிகளை படம் எடுத்து வைத்துள்ளன.

"கதிர்கை யாக வாங்கி ஞாயிறு
பைதுஅறத் தெறுதலின் பயம்கரந்து மாறி
விடுவாய்ப் பட்ட வியன்கண் மாநிலம் (அகம் 164)

அகநானூற்றுப் பாலைக்காட்சி

ஞாயிறு தன்கதிரையே கையாகக் கொண்டு நிலத்தில் ஊள்ள உரத்தையெல்லாம் கவர்ந்து கொண்டதால் பசுமைத் தன்மை அற்றுக் காய்தலினால் நீர் சிறிதும் இன்றி நீங்க அப்பெருநிலம் விரிவோடிப் போய்ப் பிளந்து கிடக்கிறது என்பது அதன் பொருள்.

"நானிலம் வாய்க்கொண்டு நன்னீர் அறமென்று கோதுகொண்ட
வேனிலம் செல்வன் சுவைத்துமிழ் பாலை" (திருவிருத்தம் - 26- 1,2)

என்பது நம்மாழ்வார் படப்பிடிப்பு. இப்படி சங்க இலக்கியப் பாலைக் காட்சிகள் பல்வேறு வகைகளில் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன.

கம்பனின் பாலைக்காட்சியைக் காண ஆறலைக் கள்வரின் தொடர்ந்துயிர் வவ்வும் வாழ்வை, உரனில் நெஞ்சம் இன்னுயிர் கொன்று உழலும் பாலை வாழ்க்கையைக் கொண்ட தாடகையின் வனத்துள் புகுவோம் வாருங்கள்!.

"பருதி வானவன் நிலம் பசையறப் பருகுவான்
விருது மேற்கொண்டு உலாம்வேனிலே அல்லதுஓர்
இருது வேவின்மையால் எரிசுடர்க் கடவுளும்
கருதின் வேம் உள்ளமும்; காணின்வேம் நயனமும்"

(தாடகைவதை-5)

சூரியன் நிலத்தினது உரம் முழுதையும் பருகுவேன் எனச் சூளுரைத்து உலவுகின்ற அப்பாலை நிலத்தில் வேனிற்காலம் தவிர வேறு பருவமே நுழைய முடியாமையால் அப்பாலையின் வெப்பம் பற்றி நினைக்கும் தீக்கடவுளின் (அக்கினி) மனமும் வெந்துபோகும்; பார்த்த கண்களும் வெந்துபோகும் என்று பாடிய கம்பன் அடுத்து,

"படியின்மேல் வெம்மையைப் பகரினும் பகரும்நா
முடியவேம்; மூடிய மூடு இருளும் வாண்முகடும் வேம்"

(தாடகைவதை-6)

என்று கூறிவிட்டு மழையும் வேம் என்றது முத்தாய்ப்பு.

'வாய்சொலின் வேம்' என்றது சிந்தாமணி. கம்பருக்கும் திருத்தக்கதேவருக்கும் வந்த இச்சிந்தனை ஊற்றுக்கு மூலம் உள்ளின் உள்ளம்வேம் என்ற நற்றிணைத்தாயின் கூற்றாக அமைந்துள்ளது என்றால் அது மிகையன்று.

இனித் தாடகையின் அடர்த்தியான காட்டிற்குள் செல்வோம். அடர்த்தியான காட்டிடத்தில்தான் களிறு, பாம்பு போன்ற கொடிய விலங்கினங்கள் அதிகம் நடமாடும்.

களிறை விழுங்கிய மிகச்சினம் கொண்ட மாசுணம் அருகிருந்த வயிரம் பாய்ந்த சந்தன மரத்தின் அடிப்பகுதியில் தன் உடலைப் பிணித்து இரையைச் செரிக்கச் செய்யப் பெரும் பாடுபடுகிறது.

"களிறு அகப்படுத்த பெரும்சின மாசுணம்
வெளிறுஇல் காழ்மரம் பிணித்துநனி மிளிர்க்கும் சாந்தம்"

(நற் - 261)

என்பது நற்றிணை காட்டும் அரிய காட்சி

மற்றொரு காட்சி- வலிய யானையையும் வலிகெடுத்து விழுங்கிக் கிடக்கும் மலைப்பாம்பு வெட்டப்பட்டு வீழ்ந்து கிடக்கும் பெரியமரம் வீழ்ந்து கிடப்பதுபோலச் செயலற்றுக் கிடக்கும் காட்சியை மலைபடுகடாம் நமக்குக் காட்டுகிறது.

"மைந்துமலி சினத்த களிறுமதன் அழிக்கும்
துஞ்சுமரம் கடுக்கும் மாசுணம்" (மலைபடு-260,261)

என்பன அப்பாடலடிகள்.

இவ்விடத்தில் ஓர் உண்மை நிகழ்வு- தாய்லாந்து நாட்டு பாம்பு மனிதர் என்றழைக்கப்படும் மன்னாட் என்பவர் மலைப்பாம்பு எப்படி

இரையை விழுங்குகிறது என்பதை இரண்டு மூன்று திங்களுக்கு முன்பு தினத்தந்தி நாளிதழில் எழுதி வெளிவந்ததைக் கண்ணுற்று வியந்துபோனேன். சங்ககாலத்துப் புலவர்கள் பாடிய அந்த நிகழ்வுக் காட்சி கற்பனை அன்று, உண்மை நிகழ்வு என்பதை உணர்ந்தேன். அவர் கூறியதை அப்படியே தருகிறேன் படியுங்கள்.

"பாம்பு ஒரு மானைப் பிடிக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். முதலில் அது தலை முதல் வால்வரை இலாவகமாக இறுக்கமாகச் சுற்றி கயிறால் கட்டுவதுபோல் இறுக்கிப்பிடிக்கும். அப்படியே பிடித்து அதன் உயிர் போகும் வரை காத்திருக்கும் மானின் இதயத்துடிப்பை தனது உடலாலே உணரும். துடிப்பு நின்று போனதை உணர்ந்ததும் அடுத்தகட்ட வேலையைத் தொடங்கும். வாயைத் திறக்கும். நெகிழ்வுத் தன்மை கொண்ட அதன் வாயை அகல விரித்து முதலில் மானின் தலையை உள்ளே தள்ளும். அதன் உடலை உள்ளே இழுக்க இழுக்க இறுக்கி இருக்கும் தன் பிடியை கொஞ்சம் கொஞ் சமாக விட்டுக் கொண்டே இருக்க, பத்துப் பதினைந்து நிமிடங்களில் மானின் முழு உடலையும் உள்வாங்கிக் கொண்டு பின் அப்படியே படுத்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் என்று விளக்கமாக எழுதிச் செல்கிறார்.

இக்காட்சிகளையெல்லாம் உள்வாங்கிய கம்பன் தாடகையின் காட்டில் நிகழ்ந்த ஓர் காட்சியை - மலைப்பாம்பின் சூழ்ச்சியின் ஒரு மதயானை பாம்பின் வாய்க்குள் எப்படி தானே வலியச்சென்று அகப்பட்டது என்பதை அழகான சொல்லோவியமாக வரைந்திருப் பதைப் படித்து இன்புறுக.

கடுமையான வெயில்; அதனால் ஏற்படும் உடற்புழுக்கம் ஒருபுறம்; வெம்மை அதிகரிப்பால் உடற்பசி மறுபுறம்; இரண்டையும் ஒருசேரத்துய்க்கும் அம்மலைப்பாம்பு இப்படியும் அப்படியும் போட்டு உடலைப்புரட்டி எடுக்கிறது. சலித்துப்போய் அதாவது உணவு கிடைக்காதா என்று தன்வாயை அங்காந்த நிலையில் அகல விரித்தவண்ணம் வாய்பிளந்து நிற்கிறது. இது முதற்காட்சி

மற்றொருபக்கம் வெயிலின் கொடுமை தாழாமல் காடே அதிரும் வண்ணம் பிளிறுகிறது-முழக்கனிடுகிறது ஒரு கடுஞ்சினக் களிறு. அந்த அளவுக்கு வானத்திலிருந்து வெயில் சொரிகிறது; நிலத்திலிருந்து எழும் நிலச்சூடாகிய வெப்பம் மேல் நோக்கி எழுந்து சுடுகிறது.

அம்மலைப்பாம்பு இருவகைத் துன்பத்தால் தாக்குண்டுகிடப்பதுபோல் இக்களிறும் இருமுனை வெப்பத்தாக்குதலில் உடல் தாக்கப்படுதலால் ஏற்படும் துன்பம் தாங்க முடியாமல் எங்கே நிழல் தெரிகிறது என நிழல்தேடி அலைகிறது. இது அடுத்த காட்சி

மற்றொருகாட்சிதான் கம்பனின் உச்சக்கட்ட இலக்கிய அறிவை நமக்கு எடுத்துக் காட்டுவது. அப்படி நிழல்தேடி அலைந்துதிரிந்த யானைக்கு ஒருகுகை தென்படுகிறது. நல்ல வேளை நிழல் கிடைத்து விட்டது என்று அந்த குகைக்குள் விரைந்தோடிப் புகுந்தது. அது, யானை நினைத்ததுபோல் குகையன்று. பசியால் உணவுக்காக வாய்பிளந்து இருக்கும் மலைப்பாம்பின் பிளந்த வாய்தான் என்கிறான் கம்பன். என்ன அரிய கற்பனை பாருங்கள்! இப்பொழுது கம்பனின் பாடலைப்படியுங்கள்; கம்பனின் கவித்திறம் புரியும்.

"புழங்குவெம் பசியொடும் புரளும் பேர்ஆரா
விழுங்கவந் தெழுந்தெதிர் விரித்த வாயின்வாய்
முழங்கு திண் கரிபுகும் முடுகி மீமிசை
வழங்குவெங் கதிர்சுட மறைவு தேடியே" (தாடகைவதை-11)

அடுத்து தாடகையை இராமன் வீழ்த்திய செயலில் கம்பனின் சங்க இலக்கியத் தாக்கம் பற்றிக் காண்போம். புறநானூற்றுப் பாடலொன்று கம்பனை வழிநடத்தியிருக்க வேண்டுமென்று எண்ணுகிறேன்.

பெண்ணென மனத்திடை எண்ணிய பெருந்தகை-இராமனின் நினைப்பை மாற்றி அவள் உருவில் தான் பெண், உள்ளத்தாலல்லள் என்று விதந்துரைத்த கோசிக முனிவனின் உரையால் ஒருப்பட்டு தாடகையைத் தன் ஓர் அம்பால் வீழ்த்தி விடுகிறான்.

சனக மன்னனிடம் இராம இலக்குவரின் குலமரபைக் கிளத்தலாக அவர்தம் பிறப்பு, கல்வி கற்றவரலாறு, வேள்விகாத்தது, முதலியவற்றை எடுத்துக் கூறி இராமனது வில்லாற்றலை அடுத்துக் கூறும்பொழுது இராமன் விடுத்த அம்பு,

கல்லாப்-புல்லோர்க்கு நல்லோர் சொன்ன பொருளைப்போல தாடகையின் வயிரக்குன்றக் கல்லொத்த மார்பைத் துளைத்து அப்பாற் போயிற்றன்றே என்று மட்டும் தாடகையின் வதையில் கூறிய கவிப்பேரரசான கம்பன், வேள்விப்படலம், அகலிகைப்படலம், மிதிலைக்காட்சிப்படலம் ஆகியவற்றைத் தாண்டி குலமுறை

கிளத்துப்படலத்தில் தாடகை மார்பைத் துளைத்துச் சென்ற அம்பு எவ்வெவற்றையெல்லாம் ஊடுருவிச் சென்றதாகக் கூறி, இராமனின் வில்லாற்றலை விதந்துரைக்கிறார் பாருங்கள்.

"தாடகைதன் உரம் உருவியவாளி பின் மலை உருவி அடுத்துள்ள மரம் உருவி இறுதியில் மண் உருவிற்று" (பா.எண்.26 கார்முகம்) என்று வியந்துரைக்கின்றார். இவ்வரிய கற்பனை புறநானூற்றுப் புலவர் வன்பரணர், வல்வில் ஓரியின் வில்லாற்றல் பற்றிப் பாடிய புறப்பாட்டோடு ஒப்புநோக்கி அறியத்தக்கது.

கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய ஓரி மன்னன், வேட்டம் புரியுங்கால் யானை ஒன்றை வீழ்த்துதற்குப் புலியொன்று சமயம் நோக்கியிருப்பதைப் பார்த்து விடுகிறான். உடனே அவன் தனது வலிய வில்லில் அம்பு தொடுத்து யானைமேல் எய்கிறான். அவ்வம்பு யானையை வீழ்த்தி சமயம் பார்த்திருந்த புலியின் அகன்ற வாய்க்குள் தைத்து ஊடுருவிச் சென்று கொன்று வழியில் நின்ற கொம்புடைய புள்ளிக் கலைமானைச் சாய்த்து அருகிருந்த பன்றியை விழச்செய்து அதற்கு அயலதாகிய புற்றினுள் இருந்த உடும்பில் சென்று தைத்தது என்று பேசப்பட்ட ஓரியின் வில்லாற்றல் நிகழ்வுதான் கம்பனின் கற்பனைக்கு உரம் சேர்த்திருக்க வேண்டும்.

"வேழம் வீழ்த்த விழுத்தொடைப் பகளி
பேழ்வாய் உழுவையைப் பெரும் பிறிதுறீஇப்
புழற்றலைப் புகர்க்கலை ஊருட்டி, உரற்றலைக்
கேழல் பன்றி வீழ, ஆயல
தாழற் புற்றத்து உடும்பிற் செற்றும்
வல்வில் வேட்டம்" (புறம் 152:1-6)

என்பது வன்பரணரின் புறப்பாட்டு.

இனி முத்தாய்ப்பாக சங்கத் தமிழ் மக்களின் வாழ்வியலாகிய களவுவழிவந்த கற்பு மணமே சிறந்தது என்ற கருத்தை வலியுறுத்த கம்பர் வால்மீகத்தில் இல்லாத ஒரு நிகழ்வைக் காட்சிப்படுத்தி நிறுவும் பாங்கு தமிழரின் வாழ்வியலில் கம்பனின் தோய்வு எவ்வளவு ஆழப்பதித்துள்ளது என்பதைக் காட்டுகிறது. அதுதான் மிதிலைக் காட்சிப் படலம்.

வால்மீகத்தில் இராமன் வில்லொடித்த சமயத்தில் கூடச் சீதையைக் கண்டதாக வால்மீகி காட்டவில்லை.

சீதையை மணப்பந்தலில்தான் இராமன் முதன்முதலாகக் கண்டதாக வால்மீகி தன் கதையை நடத்திச் செல்வதாக நாமக்கல்லார் குறிப்பிடுகிறார். தொகையாகச் சொல்லப்பட்ட செய்தியை கம்பன் தொகைவிரியாக சீதை இராமன் திருமணத்துக்கு முன்பே அவர்களை ஒருவரை ஒருவர் காணவைத்து விடுகிறான் கம்பன்.

சனகனின் வேள்விச்சாலைக்குச் செல்லும் வால்மீகியின் விசுவாமித்திரன் மிதிலையில் வேறு எங்கும் செல்லாமல் நேரேடியாக வேள்விச்சாலைக்கே சென்று விடுகிறான்.

ஆனால் கம்பனின் கோசிகனோ காவல் நிறைந்த கன்னிமாடம் வழியே இராம இலக்குவரை அழைத்துச் செல்கிறான். செல்லும் வழியில் அரண்மனையின் கன்னிமாடத்தைக் கண்டு நிற்கிறார்கள்.

"கன்னிம் மாடத்து உம்பரின் மாடே களிபேடொடு
அன்னம் இடும் முன்துறை கண்டு ஆங்கு அயல் நின்றார்"
(மிதிலை-23)

என்பது கம்பன் கூற்று. கண்ணே காதற்களவுக்கு வாயில் என்பதற்கு

"நாட்டம் இரண்டும் ஆவிவுடம் படுத்தற்கு
கூட்டி உரைக்கும் குறிப்புரை யாகும்" (தொல்-1042)

என்று தொல்காப்பியம் நெறிவகுத்துள்ளது. எதிர்மறுத்து

"நின்மகள் உண்கண் பன்மாண் நோக்கிச் சென்றோன்" (அகம்-4820)

என்று அகநானூற்றுத் தலைவனும் தலைவியும் ஒன்றுபட்ட உள்ளக் குறிப்பைத் தங்களது காதற்பார்வையால் பரிமாறிக் கொண்டனராம். குறுந்தொகையோ, "கண்தர வந்த காம ஒள்ளெரி" (குறுந்-305) என்கிறது. பரிபாடலோ, "காதற்காமம்" என்கிறது. "காதல், உளப்பற்று; காமம், உடற்பற்று" என்று விதந்துரைக்கிறார் 'வள்ளுவம்' தந்த மூதறிஞர் வ.சுப.மா. அவர்கள். இந்தச் சங்ககாலக் காதல் நெறியை இராமகாதையில் இராமர்சீதையரது காதற் காமப்பார்வையாக வெளிப் படுத்தி உள்ளக்கலப்பையும் பதிவு செய்கிறான் கம்பன்.

"கண்ணொடு கண்ணினைக் கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" (மிதிலை-35)

எனவும்,

"இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்" (மிதிலை-37)

எனவும் பாடும்வகையில் கம்பனின் உள்ளத்தை ஈர்த்திருப்பது களவுவழிப்பட்ட கற்புமணத்தின் சிறப்புக்கூறும் கபிலர் பாடிய குறிஞ்சிப்பாட்டு என்ற ஒப்பற்ற நூல் என்றால் அது மிகையாகாது.

இதுபோல் நீர்விளையாட்டுப்படலம் பரிபாடலின் மதுரை மக்கள் புனலாடிய நிகழ்வையும் உண்டாட்டுப் படலம் நீராடிய மதுரை மக்கள் கள்ளுண்டு களித்ததுபோல் அயோத்தியின் இளம் பெண்டிர் கள்ளுண்டு களித்ததால் அறிவு அழிந்து அவர்கள் தன்னிலை மறந்து சொல்லிய மயக்க உரைகளும் கலவி செய்த நிகழ்வையும் சங்க இலக்கியம் கொண்டு கம்பனைக் காணலாம். அவை விரிப்பின் பெருகும் என்பதால் ஆர்வலர்கள் கம்பனது காவியத்தைக் கண்டு உணர்ந்து களிப்பு எய்துவாராக!.

கம்பனில் சங்க இலக்கிய அரசியல் தாக்கம்

திருமிகு. இரா.ஹேமலதா
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், அன்னை தெரசா கலை அறிவியல் கல்லூரி, திருக்கழுக்குன்றம்.

'மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது' என்கிறது கொன்றை வேந்தன் (73) தலைவன் இல்லா நிறுவனம் வேரில்லா மரம் போன்றது. அரசு என்னும் அமைப்பு மக்களிடையே தடம்பதித்த காலம் தொட்டு அரசனையும் அரசியலையும் அவ்வப்போது தோன்றிய அறிவாளிகள் நெறிப்படுத்த முயன்றனர். கிரேக்கத்தில் பிளேட்டோவும், சீனத்தில் கன்ஃபூசியசும், இஸ்ரேலில் மோசேயும், இந்தியாவில் சாணக்கியனும், தமிழகத்தில் திருவள்ளுவரும் கூறிப்போந்தனர்.

பண்டைய இலக்கியங்களில் வாழ்ந்துநின்ற அரசியல் காவியமானது இராமாயணத்தில். காவியம் கூறும் அரசியல் சங்க இலக்கியங்களிலும் பரந்து காணக்கிடக்கிறது. ஈண்டு கம்பரின் அரசியல் அறிவு சங்க இலக்கியத்தில் காணலாகும் அரசியல் கூற்றுகளோடு இயைந்த பாங்கினை ஆராய்வதே இம்முயற்சி.

தாயம்

ஆட்சியுரிமை 'தாயம்' எனப்பட்டது .'தாயத்தின் அடையா' என்ற தொல்காப்பியப் பகுதிக்கு நச்சினியார்க்கினியார் தந்தையிடமிருந்து மகன்பெறும் சொத்து எனப் பொருள் கூறுகிறார். தந்தைக்குப் பின் மகன் பட்டம் பெறும் மரபு சங்ககாலத்தில் இருந்த வழக்காறு.சோதிடம் கூறிய மொழியைப் பொய்யாக்கி நாடாள வழிவிட்டார் இளங்கோ. கம்பரும் .இராமனுக்கு முடிசூட்டுவிழா நடத்தத் தசரதன் ஏற்பாடு செய்யும்போதும், 'வஞ்சனையால் அரசெய்திய மன்னரும்' என்று பரதனைக் குகன் கூறுமிடத்தும் மூத்தவன் அரசுரிமை பெறல் மரபு என்கிறார்.

அரசபதவி தனக்குக் கிடைப்பதைப் பேறு என நினைத்தனர். விசுவாமித்திரர் தன் அவைக்கு வருவதை என்ன நினைக்கிறார் தசரதன், 'அரைசு எய்தி இருந்த பயன் எய்தினான்' என்கிறார் கம்பர். அவர் வருகையால் அரசாட்சியை அடைந்ததனால் உண்டான பயனைப் பெற்றாராம்.

நாட்டின் உயிர்

"நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே;
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;

அதனால், யானுயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே" (புறம் 186)

என்கிறார் மோசிகீரனார் .நாட்டின் உயிர் நெல்லோ நீரோ மட்டுமன்று மன்னனே என்று அழுத்தம்திருத்தமாக அறியப்படுகிறது கம்பர் .மந்தரை சூழ்ச்சிப் படலத்தில்,

'வையம் மன் உயிர் ஆக அம் மன் உயிர்
உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு' (110)

என்று நாட்டு மக்களே தனக்கு நிலைப்பெற்ற உயிராக, அம்மக்களை நல்வாழ்வு பெறும்படி அவற்றைத் தாங்கும் உடம்பைப் போன்றவன் மன்னன் என்கிறார். இதனால் தான் மன்னன் 'இறை' என்று வைக்கப்பட்டான்.

அரசியல் சுற்றம்

அவையில் ஆசான், பெருங்கணி, அமைச்சர், தானைத் தலைவர் முதலானோர் இருந்தனர் .நற்குடிப்பிறப்பு .கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுவுநிலைமை, அழுக்காறாமை, தன்னலமின்மை ஆகிய பண்புகள் அவையோற்கு இருக்க வேண்டும் என்று சங்கம் கற்பிக்கிறது. வசிட்டமுனிவன் இராமனுக்கு உறுதிப்பொருள் கூறும் போது 'அமைச்சர் சொல்வழி ஆற்றுதல்ஆற்றலே'என்கிறார். ஆற்றல் மிக்க ஆயுதம் ஏது? என்ற வினாவுக்கு,

"ஓர்வுஇன் நல்வினை ஊற்றத்தினார் உரை
பேர்வுஇல் தொல் விதி பற்று உளது என்று அரோ
தீர்வுஇல் அன்பு செலுத்தலின் செவ்யோர்
ஆர்வம் மன்னவற்கு ஆயுதம் ஆவதே" (மந்தரை சூழ்ச்சிப்படலம் 113)

என்று ஆராய்வதற்கு இடம் இல்லாத நற்செயல்களிலேயே ஊன்றி நிற்கும் சான்றோர்களின் சொற்களுக்கு அடங்கும் தன்மை, சான்றோர்களிடம் செலுத்தும் அன்பு ஆற்றல் மிகு ஆய்தமாம். 'அறநெறி மாறாத அன்புடையோற்குரிய அவை'யால் சிறந்த செங்கோலாட்சி அமையும் என்று ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் (புறம் 71) கூறுகிறார்.

சான்றோர் எப்போது பெருகுவர்? கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்தோர் சான்றோர் ஆவார். 'கோஒல் செம்மையில் சான்றோர் பல்கி' (புறம் 117) என்று ஆட்சி செம்மையால் சான்றோர் பெருகுவர் என்கிறார் கபிலர்.

இராமன் பரதனது வேண்டுகோளை ஏற்க மறுத்தவிடத்து,

'முறையும் வாய்மையும் முயலும் நீதியும்
அறையும் மேன்மையோடு அறனும் ஆதி ஆம்
துறையுள் யாவையும் கருதி நூல் விட
இறைவர் ஏவலால் இயைவ காண்டியால்'

என்று ஒழுக்கமும் ,வாய்மையும், யாவராலும் பின்பற்றப்பட வேண்டிய நீதியும், புகழ்ந்து கூறப்படும் உயர்வும், அறமும் ஆகிய நல்வழியில் சேர்ந்துள்ள இவையனைத்தும் வேதங்களில் சொல்லப்பட்ட கருத்துகளின்படி வழுவாது ஒழுகும் அரசனது ஆணையால் சான்றோர் பெருகுவர் என்கிறான்.

முரஞ்சியூர் முடிநாகனார் உதயன் சேரலாதனைப் பாடுமிடத்து,

"பாஅல் புளிப்பினும் பகல் இருளினும்
நாஅல் வேத நெறிதிரியினும்
திரியா சுற்றத்தோடு முழுதுசேண் விளங்கி" (புறம் 2)

என மாறாத அரசியல் சுற்றத்தோடு நெடுங்காலம் புகழோடு வாழ் என்கிறார். மாங்குடிக்கிழாரும் இவ்அரசியல் சுற்றத்தை விரும்புகிறார் (புறம்26).

அரசர்க்கு வேண்டும் குணங்கள்

ஓர் அரசனிடம் இருக்க வேண்டிய குணங்கள் என்ன? கம்பர் கூறுகிறார்.

"ஆதியும் மதியும் அருளும் அறனும் அமையும்
ஏதில் மிடல் வீரமும் ஈகையும் எண் இல் யாவும்
நீதி நிலையும் இவை நேமினோர்க்கு நின்ற" (அரசியல் படலம் 170)

என்பன. முதன்மையான அறிவு, கருணை, தருமம், (புறம் 119) சாந்தம், குற்றமற்ற வலிமையோடு கூடிய வீரம், கொடை நீதி நெறியில் நிலைத்து நிற்கும் தன்மை ஆகிய இவை அரசர்க்குத் தேவையான குணங்கள். 'தெருளும் நல் அறமும் மனச்செம்மையும் அருளும்....' (மந்தரை சூழ்ச்சிப் படலம் 104) அரசனுக்கு வேண்டும். ஐம்பொறிவாயிலாக வரும் ஆசைகள் அடங்க, நாட்டுக்குத் தேவையான பொருளை நாளும் நன்னெறியில் சேர்த்து நடுவுநிலைமையால் மன உறுதியுடனே ஆளும் அரசாட்சியை கம்பர் விரும்புகிறார். காரிகிழார், பெருவழுதியைப் பாடும்போது,

"உருவும் புகழும் ஆகி விரிசீர்த்
தெரியோன் ஞமன் போல ஒருதிறம்
பற்றல் இலியரோ....."

என்று அச்சமும், புகழும் ஆகிப் பெரிய அளவில் சமமாக ஆராயும் சமன் கோல் போல ஒரு பக்கம் சாயாது இருப்பாயாக. உன் படை ,குடி முதலியவை சிறப்பதாக என்கிறார்.

வசிட்ட முனிவன் இராமனுக்குக் கூறிய உறுதிப் பொருள்களில் இவ்வுலக மன்னன் சிறப்பைக் கூறுகிறார்.

"சீலம் அல்லன நீக்கிச் செம்பொன் துலைத்
தாலம் அன்ன தனி நிலை தாங்கிய"

என நல்லொழுக்கம் அல்லாதவற்றை அகற்றிச் சிறந்த பொன்னை நிறுக்கும் தராசின் நாக்கைப் போல ஒப்பற்ற நடுவுநிலைமையை ஏற்ற அரசன் என்கிறார்.

அரசநீதி

அறத்தின் முறையை அறிந்து அறமற்ற பொருளாசையைப் போக்கி சினம் கொள்ளவேண்டிய நேரத்தில் சினம் கொண்டு விரும்பத்தக்க வரிப் பொருள்(புறம் 184) இவ்வளவுதான் என அறிந்து தன் ஆட்சிக்கு உட்பட்ட உயிர்களிடம் இரக்கம் காட்டும் புகழ் பொருந்திய அரசனாக இருத்தல் அவசியம்.

"இனிய சொல்லினன் ஈகையன் எண்ணினன்
வினையன் தூயன் விழுமியன் வெற்றியன்
நினையும் நீதி நெறி கடவான் எனில்
அனைய மன்னற்கு அழிவும் உண்டாம்கொலோ"

என்கிறார் கம்பர்.

"அரசன் இன்சொல் பேசுபவனாய் இருத்தல் வேண்டும்" (புறம் 140)

"கொடைக்குணம் உடையவன்" (புறம் 91, 158,312)

- எதையும் ஆராய்ந்து பார்ப்பவன்
- செயல் திறம் பெற்றவன்
- அகமும் புறமும் அழுக்கற்று தூய்மை பெற்றவன்
- சிறப்பு மிக்கவன்
- வெற்றி பெற்றவன்

- எவரும் போற்றும் அரச நீதியிலிருந்து விலகாதவன் என்பவற்றை இலக்கியங்கள் அரச நீதிகளாகக் கூறுகின்றன.

பிசிராந்தையாரிடம் மூவாத இளமைக்குக் காரணம் கேட்கப்படும் போது, புறம் 191 நவில்கிறது 'மனைவியோடு மக்களும் அறிவில் நிரம்பியவர்கள்.சான்றோர் பலர் உள்ளனர். வேந்தனும் அல்லவை செய்யான் காக்கும் என்கிறார். இராமன் தன் குடி மக்களிடம் கேட்கிறான்,

'எதுவினை இடர் இலை இனிது நும் மனைவியும்
மதி தரு குமரரும் வலியர் கொல் எனவே'

நலம் விசாரிக்கிறான். மன்னன் சிறப்புற ஆட்சி செய்தால் குடிமக்கள் மகிழ்வுடன் வாழ்வர்.

மன்னர்கள் அறத்தை உணர்ந்து செங்கோலராகத் திகழவேண்டுமென வற்புறுத்தினர். சான்றோர்களால் பாராட்டப்படுவதைப் பேறாக கருதினர். ஈகை கடமையாகக் கருதப்பட்டது. சிறந்த கல்வியாளர்களாக மன்னர்கள் திகழ வேண்டும் என விரும்பியது சமுகம். குடை, காவல் தொழில், முடி, அரசியல், தலைமை, கோல், நீதி, அரசின் அதிகாரம் எனக் குறியீடுகள் ஒவ்வொரு காலக்கட்டத்தின் இலக்கியங்களும் பறைசாற்றின. கம்பர் காவியத்திலும் சங்க இலக்கிய அரசியல் தாக்கங்கள் பல இடங்களில் காணலாம்.

கம்பன் படைப்பில் இலக்கியப் பதிவுகள்

முனைவர் சோ.குமரேசமூர்த்தி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், திரு.வி.அரசு கலைக்கல்லூரி,
திருவாரூர்.

தமிழ் இலக்கிய நூல்களில் எண்ணற்ற இலக்கியங்கள் நாளும் முகிழ்த்த வண்ணம் உள்ளது. கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தே முன்தோன்றிய குடி தமிழ்க்குடி. அப்படித்தோன்றிய தமிழ்மக்கள் தங்கள் வாழ்வியல் நிலைகளை நமக்கு கண்முன்னே காட்டி நிற்பன இலக்கியங்கள். அவ்வகையில் தோன்றிய இலக்கியங்களில் காப்பிய நலன் யாவும் ஒருங்கே பெற்றது கம்பராமாயணம் அதில், 'ஒருசொல் ஒருவில் ஒருஇல்' என்று மனிதவாழ்வின் தத்துவத்தை உணர்த்தி நிற்கிறது.

உலகப்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகக்கருதும் மேன்மை பெற்றதும், வடமொழியில் வால்மீகியால் எழுதப்பட்டதுமான இராமாயணத்தை தமிழில் சிறப்புற இயற்றினார் கம்பர். அவர்தம் காப்பியத்தில் எடுத்தாண்டுள்ள பிற இலக்கியக்கருத்துக்களை ஒப்புநோக்கி காண்பதே இவ்ஆய்வின் நோக்கமாகும்.

விதியும் வில்லும்

கம்பர் "விதிக்கு விதியைப்" பற்றிப் பேசும்போது இலக்குவன் கூற்றாகத் தருகின்றார். 'காடு செல்லவேண்டும் என்று தந்தை கட்டளை-யிட்டுள்ளார்' என்று கைகேயி கூறியபோது இராமன், "தாயே தந்தை சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லை உங்களுடைய சொல்லுக்கு கட்டுப்பட்டு நடப்பேன்" என்று காடு செல்லத் தயாராகின்றான். இலக்குவனோ, 'இராமன் காடு செல்ல வேண்டும் என்பது விதி என்றால் அதனை என்னுடைய வில்லினால் மாற்றுவேன்' என்கிறான்.

"உதிக்கும் உலை உள்ளுறு தீயென ஊதை பொங்கக்
கொதிக்கும் மனம் எங்ஙனம் ஆற்றுவென் கோளிழைத்தாய்
மதிக்கும் மதியாய் முதல் வானவர்க்கும் வலிதாம்
விதிக்கும் விதியாகும் என் விற்றொழில் காண்டி யென்றான்"

என்ற கம்பர் கூற்றுக்கு இணைய,

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

என்னும் குறள்; கருத்தினை ஒத்துள்ளதை ஒப்புநோக்கிக்காண்க.

அரச நெறி

இராவணன் தனது விருப்பத்தை சீதையிடம் தெரிவிக்கின்றான். அதற்குச் சீதை இராவணனைப் பார்த்து. 'இடிக்குநர் இல்லையா உன் நாட்டில்?' என்று கேட்டு ஓர் அரசியல் நெறிமுறையை உணர்த்துகின்றாள்.

பொதுவாக அரசநெறி என்பது ஒரு நாட்டை ஆட்சிபுரியும் அரசர்கள் செய்யும் குற்றங்களைக் கடித்துரைத்து திருத்தச் சான்றோர்கள் ஒரு நாட்டில் இருக்கவேண்டும் அவர்கள் கூறுவதை அரசர்களுக்கு அடிபணிந்து கேட்டு நடக்க வேண்டும் இல்லையெனில் அந்த அரசு அழியும் என்பதைக் கம்பர் இவ்வாறு, உணர்த்துகின்றார். இதனையே திருவள்ளுவரும்,

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னர்
கெடுப்பாரிலானும் கெடும்"

என்று கூறுகின்றார்.

உடலும் உயிரும்

மக்களுக்காகவே மன்னன் என்பதையே உணர்ந்த மக்களை உடம்பாகவும் மன்னனை உயிராகவும் கொண்டு இருந்ததை, புறநானூறு

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்"

என்று விளம்புகிறது. ஆனால் கம்பர் குடிமக்களை உயிராகவும் அயோத்தியின் பேரரசன் தசரதனை உடம்பாகவும் கூறுகின்றார்.

"உயிர் எலாம் உறைவதோர் உடம்பு மாயினான்"

இதே கருத்தினை,

"மன்னுயிர்க் கெல்லாம் மண்ணாள் வேந்தன் தன்னுயிர்"

என்று மணிமேகலையும்,

"தன்னுயிர் போலத் தரீஇயுலகத்து
மன்னுயிர் காக்கும் மன்னனும்"

என்று கலித்தொகையும் மன்னுயிரையும் மன்னனுயிரையும் பற்றிப் பேசுகின்றன.

அமைச்சர்களின் பெருமை

தசரதனது அமைச்சர்களின் பெருமையைக் கூற வந்த கம்பன் முதலில் அமைச்சர்களின் குலப்பிறப்பு கல்வி கேள்வி அவற்றின்

பயன் முதலியவற்றையும் நடுநிலையையும் ஒன்றன்பின் ஒன்றாக விளக்குகின்றார்.

"குலம் முதல் தொன்மையும் கலையின் குப்பையும்
பல முதல் கேள்வியும் பயனும் எய்தினர்
நலம் முதல் நலியினும் நடுவு நோக்குவார்
சலம் முதல் அறுத்து அருந்தருமந் தாங்கினார்"

என்று கம்பர் கூறும் கருத்திற்கு ஏற்ப வள்ளுவமும்

"இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு"

என்றும்

"அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்"

என்றும் கூறுவதை ஒப்புநோக்கத்தக்கது.

தன்னிகரில்லாத் தலைவன் தலைவி மாண்பு

இராமனின் கம்பீரநடையினைச் சீதையும் சீதையின் மென்னடையினை இராமனும் கண்மொழியாலும் இதழ்மொழியாலும் பரிமாறிக் கொள்ளும் காட்சியினை.

"ஓதிம மொதுங்கக் கண்ட வுத்தமனுழையளாகுஞ்
சீதைதன் னடையை நோக்கிச் சிறியதோர் முறுவல்
மாதவடானு மாண்டு வந்து நீருண்டு மீளும்
போதக நடப்ப நோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தாள்"

எனக்கம்பர் காட்சிப்படுத்துகிறார். இராமன் அன்னத்தின் நடையினை நோக்கிப்பின் அன்ன நடையை விஞ்சும் சீதையின் நடையினைக்கண்டு நகைக்கிறான். சீதையோ யானைக்கன்றின் நடையை நோக்கிப்பின் யானையின் கம்பீர நடையினை விஞ்சும் இராமனின் நடையினைக்கண்டு புன்முறுவல் புரிகிறாள்.

காதல் உலகில் ஒரு பார்வைக்கு ஓராயிரம் வார்த்தைகளும் ஈடாகா. இதனைப்புரிந்து கொண்ட கம்பர் தனது காப்பியத்தலைமை மாந்தரின் காதலைப் புலப்படுத்த உடல்மொழி ஆகியவற்றையும் பயன்படுத்தினார். மௌனமான ஒரு காதல் நாடகத்தை அரங்கேற்றினார்.காதலுக்கும் கவிதைக்கும் சுவை கூட்டினார்.

கண்களே காதலையும் காமத்தையும் வெளிப்படுத்தும் முதன்மை வாயில். இதனை,

"கண்ணொடு கண்இணை நோக்குஒக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல"

"கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது"

என்னும் குறட்பாக்களின் கருத்துக்களும் உணர்த்தி நிற்கும் "கண்தர வந்த காமஒள்ளெரி" எனும் சங்க இலக்கிய பாடல்வரியும் இங்கு ஒப்புநோக்கற்பாலது.

காதல் மணம்

காதல் மணம் பழந்தமிழரின் பண்பு காதலற்ற திருமணம் தமிழர் இடையே நடைபெற்றதில்லை. ஆண்களும் பெண்களும் தாமே தம் விருப்பப்படி தான் விரும்பியவர்களை மணந்துகொண்டனர். இந்த வழக்கம் சிறிது சிறிதாக மாற்றம் அடைந்து ஆண் பெண் இருவருக்கும் மணம் செய்துவைக்கும் பொறுப்பை பெற்றோர்களே ஏற்றுக்கொண்டனர். தமிழரின் மணமுறை கம்பனுக்கு முன்னே மாற்றம்அடைந்திருந்தாலும் காதல் மணமே சிறந்தது என்பது கம்பனுடைய கருத்து. ஆதலால் இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் நடப்பதற்கு முன்பே அவர்கள் இருவரையும் சந்திக்க வைக்கிறான்.

"எண்ணரு நலத்தினாள் இணையள் நின்னுழி
கண்ணொடு கண் இணை கல்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"

மேலும், சீதை பார்த்த பார்வை இராமன் தோள்களில் பதிந்தன; இராமனுடைய கண்கள் சீதையின்மார்பில் படிந்தன. இதனை

"நோக்கிய நோக்கு எனும் நுதி கொள் வேல் இணை
ஆக்கிய மதுகையாள் தோளில் ஆழ்ந்தன
வீக்கிய இணை கழல் வீரன் செங்கனும்
தாக்கணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே"

மேலும், ஒருவர் அழகை ஒருவர் உண்டு சுவைப்பதற்குக் காரணமான அந்த பார்வை. ஒரு பாசக்கயிறாக நின்றது அதனால் ஒருவர் உள்ளத்தை மற்றொருவர் உள்ளம் இழுத்தது. இதனால் வில்லைத்

தோளில் பூண்ட ராமனும் வாட்படைகளையே கண்களாக கொண்ட சீதையும் ஒருவர் உள்ளத்திலே மற்றொருவர் மாறிக்குடியேறினர். இதனை,

"பருகிய நோக்கு எனும் பாசத்தால் பிணிந்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்"

என்ற பாடலின் மூலம் வெளிப்படுத்துகின்றார் இதனையே வள்ளுவரும்

"யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான்நோக்கி மெல்ல நகும்"

என்று குறிப்பதை ஒப்புநோக்கிக் காண வேண்டும்.

முடியரசன் கவிதைகளில் கம்பனின் தாக்கம்

திருமிகு. ஆர்.முல்லை
முனைவர் பட்ட ஆய்வாளர், இந்தியமொழிகள் பள்ளி, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

மரபுக்கவிதையின் யாப்பும் பொருளும் பழைய மரபுகளுக் கேற்ப அமைவதாகும். பத்தொன்பதின் இறுதியிலும், இருபதின் தொடக்கத்திலும் வாழ்ந்த கவிஞர் பெருமக்களில் சிலர், பழைய மரபு பிறழாமல் கவிதையாத்தனர். பழைய மரபில் எழுந்த இக்கவிதை நூல்களைப் படிப்போர் மிகச்சிலரே. பொதுமக்களிடம் இந்நூல்களுக்குச் செல்வாக்கு இல்லை. எனவே, பின்னால் வந்த கவிஞர்கள் இம் மரபுக்கவிதைகளின் புதுமையைப் புகுத்தினர்.

கவிதைகளில் எளிமை என்பது முன்பு இல்லாத ஒன்று. அதைத் தம் கவிதைகளில் புகுத்திப் புதுமை செய்தவர் இராமலிங்க அடிகள். இராமலிங்க அடிகளின் அருட்பாவினால் கவரப்பெற்ற பாரதியார், தம் கவிதையின் போக்கை எளிமையாக மாற்றிக்கொண்டார். இத்தகைய வழிகளில் பாரதியார், பாரதிதாசன் இவர்களின் பரம்பரையில் வந்தவர் முடியரசன் ஆவார்.

முடியரசன்

இவர் தேனி மாவட்டம் பெரியகுளத்தைச் சார்ந்தவர். இயற்பெயர் துரைராஜ். தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். கருத்தில் தெளிவும், உவமையில் புதுமையும், உணர்வில் ஆழமும் மிக்க கவிதைகளை யாத்தவர். இவரது கவிதைகள் 'முடியரசன் கவிதைகள்' என்ற பெயரில் வெளிவந்துள்ளன. அத்தொகுப்பு நூல் தமிழக அரசின் பரிசு பெற்றது. மேலும், 'பாடுங்குயில், காவியப்பாவை, கவியரங்கில் முடியரசன்' போன்ற நூல்களும் இவரது படைப்புகளே.

மொழிக்கு இலக்கணம் தேவை என்ற கருத்தினை ஆணித்தரமாகக் கூறுகிறார். இலக்கணத் தூய்மையே இலக்கிய இன்பம் தரமுடியும் என்பது முடியரசனின் அசைக்க முடியாத நம்பிக்கை ஆகும்.

முடியரசன் கவிதைகளில் கம்பனின் தாக்கம்

காதலனின் அன்பு

காதலியைக் காதலன் சிற்றூர்க்கு அழைத்துச் செல்கின்றான். வழி நடந்து செல்கையில் காதலியின் காலில் முள் தைத்தது. காதலன்

துடிக்கிறான். 'இனி இவ்வாறு சிற்றூர்க்கு அழைத்து வந்து உனக்குத் துன்பம் தரமாட்டேன்' என்கிறான் காதலன். காதலி அவனை மறுத்துச் "சீதை இராமன் இருக்கும் இடம் அயோத்தி" என்றது போல, 'அவன் இருக்குமிடமே அவளுக்கு இன்பப் பூங்கா' என்கிறாள்.

"வருந்தாதே மன்னிப்பாய் நீ என்மீது சினந்தனையோ?
இனிமேல் இங்கே வருமெண்ணம் இல்லை இல்லை என்றேன்;
பாவை "என்னென்ன சொல்லுகிறீர் அத்தான்,
நீங்கள் இருக்கின்ற இடமேதான் இன்பப்பூங்கா"

(முடியரசன் கவிதைகள்; பக்.79-80)

சமுதாயம்

ஊரார் சொல்லினைக் கேட்டு நடக்கும் மனிதர்கள் மனைவி-கணவன் இருவருக்குமிடையே நம்பிக்கை இல்லாமல் தங்களுடைய வாழ்வை வீணாக்கி விடுகின்றனர். இத்தகைய கருத்தினைத்தான் இராமனும் செய்தான் என்கிறார் முடியரசன்.

"என்னோடு சினந்தில்லாள் அயலான் வீட்டில்
இருந்ததனால் மனமொப்பி அவளை மீண்டும்
என்னோடு வாழவிடேன் மானம் மேலாம்"

....

என்னைச் சுட்டினனோ, கடலிலங்கைச்
சிறையிருந்த மின்னாளைக் கொடு வந்தேன்" (மேலது; ப.75)

கவிஞரின் உள்ளம்

கம்பனின் குரலாக ஒரு கவிதையினைப் படைத்துள்ளார் முடியரசன். இக்கவிதையில் கம்பராமாயணம் எனும் காவியத்தை எப்படிப் படைத்தார். அவருக்கு உதவியவர்கள் யார், அக்காப்பியத்தைப் போற்றியவர்கள் பற்றிக் குறிப்பிட்டு உள்ளார்.

"உள்ளம் மிக விரும்பி ஒவ்வோர் இடங்களிலே
வள்ளல் சடையப்பன் வளர்பெயரைப் பொறித்திருந்தேன்"

(மேலது; ப.143)

"கம்பன் கவி என்றும் காவியத்தின் பெருமை என்றும்
இம்பர் நலம் பயக்கும் எழில் ஓவியம் என்றும்" (மேலது; ப.145)

கம்பனுடைய காவியத்தினைப் போற்றுகின்றார். தேவர் உலகமே மயக்குகின்ற ஒரு அழகான ஓவியம் என்று புகழ்கின்றார்.

கற்பனையும், கவிதையும்

முழுநிலா நாள். இரவுப்பொழுது, தென்றல் மெல்ல வீசிக்கொண்டிருக்கின்றது. கவிஞர், கம்பன் பற்றிய கவிதை இயற்றுவது பற்றி எண்ணிக்கொண்டே கண்ணயர்கின்றார். கனவில் கம்பன் அவர் முன்னே வந்து நிற்கின்றார். வணக்கம் தெரிவிக்க; 'கருதியது யாது?' என்று கவிஞரிடம் கேட்கிறார் கம்பன்.

"ஆடவரைப் பாடென்றார் வழியைக் காணேன்
அரிவையரைப் பாடென்றால் நூறு நூறு
பாடல் வரும்; என் செய்வேன்?" (கவியரங்கில் முடியரசன்;ப.10)

என்கிறார் கவிஞர்.

'தம்பீ, பாடுதற்கு வழி சொல்வேன்' என்று சொல்லிக் கவிஞரைத் தன்னுடன் அழைத்துச்செல்கிறார் கம்பன். இருவரும் அயோத்தி நகரை அடைகின்றனர். அங்கே அனைத்து ஆடவரையும் சுட்டிக் காட்டி கம்பர் அறிமுகம் செய்கிறார்.

தந்தையின் எண்ணம்

மிதிலையில் இராமன் சனகனின் வில்லை ஒடித்துச் சீதையின் கைப்பிடிக்கும் செயலைக் கவிஞர் சுவையாகச் சொல்லில் வடிக்கின்றார்.

"உயர்பெரு வில்லும் சனகன் உளவேதனையும்
ஒடித்தான் ஒரு வீரன் மிதிலையிலே" (மேலது; ப.11)

வில்லை ஒடித்ததால், சனகன் மனத்துயரமும் விலகியது என்று நயமாகக் குறிக்கிறார் கவிஞர்.

தர்மத்தின் வலிமை

திருமணம் முடித்துத் திரும்பும் வழியில் பரசுராமனின் ஆணவத்தை அடக்கவில்லை, வளைத்துக் காட்டுகிறான் இராமன்.

"அருளும் தவமும் ஆண்டவன் வரமும் பொருளும் புகழும்
பிறவும் பெறினும் செருக்கும் தருக்கும் சேரின்,
ஒறுக்கும் ஒறுக்கும் உண்மை அறமே." (ப.12)

என்று அறத்தின் வலிமையைக் கவிஞர் எடுத்துரைக்கின்றார்.

உடன்பிறப்பு–பலவீனம்

வாலி-சுக்கிரீவன் என்னும் உடன்பிறந்தார் இருவர்க்குள் நேர்ந்த பகை உணர்த்தும் வாழ்வியல் பாடத்தையும் கவிஞர் சுட்டத் தவறவில்லை.

"உடன் பிறப்புள் பிளவிருந்தால்
வருபவர்க்கு நல்விருந்தாம் நமது நாடு" (ப.14)

உடன்பிறப்பு – பலம்

கும்பகருணனுக்கும் இராவணனுக்கும் இடையே நிகழும் உரையாடல் வாயிலாகத் தம்முடைய உள்ளக் கருத்தினை அழுத்தமாக வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

"அஞ்சேன் அண்ணன் என இடித்துரைத்தேன்!
செஞ் சோற்றுக் கடன் கழிப்பேன்; சேரார்தமைச்
சேர்ந்து உளவு சொல மாட்டேன்!
யான் ஓர் வீரன், வீணன் அலேன்" (ப.15)

என்று கும்பகருணன் முழங்கியதைக்கேட்டு பெருமையும், பெருமிதமும் கொள்கிறார் கவிஞர்.

"எவ்வழி ஆடவர் நல்லவர் உளரோ, அவ்வழி
நிலனும் நன்றெனஅவ்வை, ஓதியது உணர்க!
உயர் நிலை பெறுக! மேதினி ஓங்குக!" (ப.15)

எனக் கவிஞரை வாழ்த்தி விடைபெறுகின்றார் கம்பன்.

கம்பரும் கவிஞரும் கற்பனை உலகில் பறந்து செல்வது போலவும், கம்பர் ஒவ்வோர் ஆடவரையும் காட்டி விளக்கம் தருவது போலவும் கவிஞர் இக்கவிதையைப் பாடி இருப்பது நயமாக இருக்கிறது.

முடியரசன் கவிதைகளில் பல இடங்களில் கம்பனின் தாக்கம் விரவி இருப்பதை நம்மால் உணர முடிகின்றது. கம்பன் காப்பியத்தின் உட்பொருளை உணர்த்தி அதற்கேற்ப, பல கவிதைகளை அழகான நயத்துடன் தந்துள்ளார் முடியரசன்.

'அவதார புருஷ'னில் சீதை

திருமிகு. செ.அங்கயற்கண்ணி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், சரசுவதி நாராயணன் கல்லூரி,
பெருங்குடி.

முன்னுரை

அவதாரங்களுள் ஒன்றான இராமனைத் தலைவனாகக் கொண்டு தமிழ்ப் பண்பாடுகளுக்கேற்ப கம்பரால் எழுதப்பட்ட தழுவல் காப்பியம், கம்பராமாயணம். இவ் இதிகாசத்தில் இராமன் முதன்மை பெற்றுத் திகழும் வேளையிலும், பெண்மையின் இலக்கணமான 'சீதை'யைப் பற்றி அறிந்து கொள்ளும் செய்திகள் அதிகமாய் உள்ள காரணத்தால், இக்காலக் கவிதை நூலான கவிஞர் வாலி எழுதிய, 'அவதார புருஷனில்' சீதையின் நிலை பற்றி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

சீதை

வாலியால், புதுக்கவிதையில் வடிவமைக்கப்பட்டுள்ள கம்ப இராமாயணம் 'அவதார புருஷன்'. இதில், சீதையைச் சில இடங்களில் சோதரியாகவும், தாயாகவும், பெண்மையின் இலக்கணமாகவும் கண்டுள்ளார். விதேக நாட்டு மன்னனான சனகனின் மகள்.

"அந்த
சீதளத் தென்றலின் திருநாமம்
சீதை" (ப.30)

என்று வாலியால் அறிமுகப்படுத்தப்படுகிறாள்.

இதயப் பண்டமாற்று

மிதிலாபுரியின் மாளிகையில் நின்ற சீதையை, விசுவாமித்திரருடன் வந்த இராமன் கண்டு சற்று நின்றான். பாதம் நடக்க இயலாமல்,

"சீதையும் இராமனும்
ஒருவரை யொருவர்
விழியால் விழுங்கினர்" (ப.31)

"பார்வைகளின் வழியே
நடந்து முடிந்தது - இதயங்களின்
பண்டமாற்று." (ப.31)

இருவருக்குள்ளும் வேதியியல் உணர்வு வேலை செய்து (ஆண்-பெண்) காதல் பாதையில் பயணித்தன, விழிகள்.

சீதா – ராமன் கல்யாண வைபோகம்

சந்தித்த விழிகள் காதலில் பயணிக்க, திருமணம் நிகழ இராமன் வில்லை ஒடிக்க வேண்டும். அவதார புருஷனாகிய இராமன் அசாதாரணமாய் வில்லை ஒடித்தான். வானவில்லான சீதையை தன்னில் வளைத்துக் கொண்டான்.

"மஞ்சளில் தோய்த்த
மங்கல நாணை
வஞ்சியின் கழுத்தில்
வள்ளல் சூட்டினான்." (ப.33)

இரு வரங்கள்

கூனியின் கூன் போன்ற வார்த்தைகளால் கைகேயி வளைந்தாள். தசரதனிடம் இரு வரங்கள் பெற்று இராமனை அழைத்து,

"மணிமுடி தரித்து - பரதன்
நாடாள வேண்டும் !
ஈரேழு இண்டுகள்
சடைமுடி தரித்து - நீ
காடாள வேண்டும் !" (ப.52)

கைகேயியின் சொல்லுக்கு எதிர்வார்த்தை சொல்லாது, தந்தையின் ஆணையை ஏற்று, தந்தையிருக்கும் திசையை வணங்கி நடந்தான்.

சீதையின் காதல்

தாயிடம் பெற்ற வார்த்தைகளில் ஒன்றான காடு செல்வதற்கு இராமன் ஆயத்தமாக அதனைக் கண்டு அவன் முன் நின்றாள். பட்டத்து இளவரசனைத் திருமணம் செய்து பட்டாடைத் தரிக்க விரும்பாமல் மரவுரி தரிக்க விரும்பினாள் இந்த மங்கை. அவனிடம்,

"நாயகனே - என்னுடன்
நீயிருந்தால்
காடும் எனக்கும் வீடு !
நீயில்லையேல்
வீடும் எனக்குக் காடு." (ப.55)

கணவன் எங்கிருக்கிறானோ அவ்விடமே மனைவிக்கும்

உரித்தானது ஆகும். அதனை அறிந்தும், அவன்மீது கொண்ட காதலாலும் ஆரண்யத்திற்குத் தன் துணையோடு நடைபோட எண்ணினாள்.

இயற்கை நேசி

கண்ணகியைப் போலவே சீதையும் பேசா மடந்தையாகவே பல இடங்களில் காட்டப்பட்டுள்ளாள். ஆனால், இயற்கையை நேசிப்பவளாக இருக்கிறாள். பட்டத்து வாழ்க்கையைக் காட்டிலும் இயற்கை வரைந்த ஓவியங்களாகத் திகழும் காடு அவளுக்குப் பிடித்திருந்தது.

"அனைத்தையும் இயற்கை இங்கு
அந்தமும் சந்தமும் மிகுந்த
அழகிய கவிதையாய்
வடித்திருந்தது." (ப.58)

துயர உருவங்கள்

ஆரண்யத்தில் மூவரும் இருக்க, தந்தை இறந்த செய்தி தம்பியால் தெரிய இராமன் அசைவற்று நின்றான். உலகத்தையே அசைவிக்கும் ஆற்றல். வசிஷ்டரும், சுமந்திரரும் அவனின் துயரத்தை ஆற்றிட, நீர்க்கடன் செய்ய, சீதையும் இலட்சுமணனும் கண்ணீர்க் கடலில் மூழ்கியிருந்தனர் தலையில் தண்ணீர் விட்டு.

சீதையின் பதற்றம்

அத்திரி முனிவரின் ஆசிரமத்திலிருந்து தென்திசை நோக்கி நடக்க, விராதன் சீதையை இரு கரத்தில் ஏந்தி விண்ணில் பறந்தான். இராமனும் விராதனும் மோதிக்கொள்ளும் வேளையில் வாய் பேசா மடந்தை மெல்ல வாய் திறக்கிறாள் நெஞ்சத் துடித்துடிப்போடு.

"ஏ இராக்கதனே ! - ஏன்
இறைவனுக்கு உயிர்ப்பிச்சை
வழங்கு! - உன்
இரைப்பையை நிரப்ப -என்னை
விழுங்கு! என
வேண்டினாள் சீதை - நிலத்தில்
ஒற்றையாய் நின்ற கோதை."

'அவரை விடுத்து, உன் இரைப்பைக்கு என்னை எடுத்துக்கொள்' என வேண்டும் பெண்ணாய்க் காட்சியளிக்கிறாள். விராதன், சீதையை

எடுத்துச் செல்லும் நிலை, இராவணனால் எடுத்துச் செல்லப்படுவாள் என்பதை வருபொருள் உரைக்கும் நிலையினதாக அமைந்துள்ளது எனலாம்.

அழகும் ஆபத்தும்

அகத்தியரை வணங்கிவிட்டு மூவரும் பஞ்சவடி சென்றனர். பஞ் சவடி - கோதாவரி நதியின் கரையோரத்தில் இருக்க, இயற்கையோடு இயைந்து வாழ எண்ணும் வேளையில், குலத்தை நாசம் செய்யும் நாசக் காற்றாய் சூர்ப்பணகை நுழைந்தாள். இராமனின் அழகில் சொக்கிட அவளை அடைய நினைத்து, காமபாணங்களை விட, பர்ணசாலைக்குள் இருந்து அழகு சீதை வந்தாள். அவளைப் பார்த்து சூர்ப்பணகை பொறாமைப்பட்டாள்.

ஆனால் வார்த்தைகளைக் கக்க, சீதை பயந்தாளே தவிர, இராமனை ஒட்டி நின்றாளே ஒழிய, பேசவில்லை.

சூர்ப்பணகையின் சூழ்ச்சி

சீதை இடைஞ்சல் என்றெண்ணி அவளைக் கொல்ல நினைத்து, தூக்கிச் செல்ல எத்தனித்த போது லெட்சுமணன் அவளின் மூக்கை அரிந்தான். அதனால் கடுஞ்சினம் கொண்ட அவள் இராவணனிடம்,

'அண்ணா!

....

உடனிருப்பதோ - ஓர்
ஓவியப் பசுங்கிளி! (ப.95)

....

அத்தகு அழகி உனக்குத்தான்
பொருத்தம்!

....

அண்ணா!
அவள் பெயர் சீதை!
அழகிய பூங்கோதை!' (ப.95)

அவளின் வர்ணனையைக் கேட்டு மயங்கினான். அவளைக் கவர்ந்திட நினைத்து மாமனான மாரீசனை அணுகித் தன் நிலை கூறி உதவி செய்ய வேண்டும் என்கிறான்.

மாயமான்

வல்லரக்கனாய்த் திகழ்ந்து, காலத்தால் மாமனிதனாய் மாறிப்

போனவன் மாரீசன். இராவணனின் பேச்சை முதலில் மறுத்து, வேறு வழியில்லாமல் ஏற்றுக்கொண்டான்.

பொன்மானாக மாரீசன் வலம் வர, பூவைப் பறித்த பூவை வேண்டும் என இராமனிடம் கேட்க, அவன் பொய் வடிவுடையது என்று தெரிந்து சென்றான். அழகு மான் என்று நினைத்து, கேட்க சீதை தானே வலிய விதியைச் சென்றடைந்தாள். கணவனைப் பிரியக் கூடாது என்றெண்ணிக் காட்டிற்கு வந்தவள் மாயமானால் அழுகை நேரிடும் வகையில் அவதாரத்தைப் பிரிந்தாள்.

சீதையின் துடிச்சொல்

பேசாமடந்தை பேசலானாள். இராமன் மாயமானை நோக்கிச் சென்று வெகுநேரம் ஆகிவிட லெட்சுமணனிடம் நீ சென்று உன் அண்ணனைக் காப்பாற்று என்று கூற அவனோ தயங்கி நிற்க,

"நீ
என்னைக் காப்பது
இருக்கட்டும்! - என்
பொன்னைக் காப்பாற்று (ப.105)

"அண்ணல் போனால் என்னை ஆளலாம் ஏன்று நினைத்தாயோ?" என அவளின் வார்த்தைகளைக் கேட்டதும், ஓடிக் கொண்டு இருந்த இரத்தம் கட்டிப்பட்டு உடல் கனத்து நின்ற லெட்சுமணன் அவளை நோக்கி, உங்களைத் தாயாகவும் அண்ணனைத் தந்தையாகவும் நினைக்கின்ற எனக்கு இப்படியொரு பழிச்சொல்? செல்கிறேன் என அவ்விடத்தை விட்டு விரைந்தான்.

சீதை சிறைப்படுதல்

இலட்சுமணன் செல்லும் முன் கோடிட்டு இதனைத் தாண்டக் கூடாது என்ற சொல்லிச் சென்ற வேளையில் தீவினை ஒன்று வந்தது. ஆம், இராவணன் வந்தான் சிவநாமம் இட்ட முனிவர் போல

இராவணனைப் பார்த்து யாரென்று சீதை வினவ, "தான் ஒரு முனிவன்" என்று, தன்னைப் பற்றிக் கூறலானான்.

'நான் அசுரர்களை நாடி வாழ்கிறேன்' என்று இராவணன் கூற, 'கவலைப்படாதீர்கள், என் கணவர் அரக்கர் குலத்தையே அடியோடு இல்லாது செய்து விடுவார்' என்று கூறிட, கோபம் கொண்ட இராவணன் தன் சுய உருவைக் காட்டி காதல் மொழி பேசினான்.

அதனைக் கேட்டு அதிர்ந்த சீதை,

"என்னை நீ இச்சிப்பது
ஈனத்தனம்! ஓடிப்போ!
இல்லையேல்
இராக்கதர் இனம்" (ப.111)

அவளின் பேச்சைக் காதில் வாங்காது, அரக்கக்குணம் உடைய இராவணன் அவளை பர்ணசாலையோடு பெயர்த்தெடுத்துக் கொண்டு சென்றான்.

சீதையின் அழுகை

சீதையைக் கொண்டுசெல்லும் வேளையில் பறவையான ஜடாயு அவர்களைப் பார்த்து அவர்களைச் செல்ல விடாது இராவணனோடு சண்டை செய்தது. தன்னைத் தன் இராமனை, கொழுந்தனைக் குறித்தெல்லாம் எண்ணி வருந்தி அழுதாள்.

"குறைப்பட்டாளே உன்
குணத்தை யெண்ணி!" (ப.114)

எனத் தான் கொழுந்தனிடம் பேசியதை எண்ணி வெட்கினாள்.

சுக்கிரீவனோடு ஒப்பந்தம் செய்தல்

கவந்தன் சொல்லைக் கேட்டு, சீதையைக் கண்டு பிடிக்க குரங்கரசனான வாலியின் தம்பி சுக்கிரீவனோடு ஒப்பந்தம் செய்கிறான். 'உனக்குரிய அரசையும், தாரத்தையும் உன் அண்ணனிடம் பெற்றுத் தருகிறேன்; நீ என்னுடைய சீதையைத் தேடித் தா' என்பதாக ஒப்பந்தமிட்டுக் கொண்டனர்.

அனுமனிடம் அடையாளம் கூறுதல்

சீதையைக் கண்டுபிடிக்க, அவளைத் தேடிச் செல்லும் அனுமனிடம் அடையாளம் கூறுகிறார். சீதை தன் கணவனாலே புகழ்மொழிகளால் புகழப்படுவதைக் காணலாம் வாலியின் கவிதை வரிகளில்,

"என் -
பத்தினி சீதை
உத்தம மாதர்களுக்கு -
உரிய இலக்கணம் (ப.157)

....

அனைத்துப் பண்புகளும் -

அவளிடம் அடைக்கலம்;
ஆழமான கற்புநெறி -
அவளது படைக்கலம்!" (ப.157)

என்று கூறுகின்ற இராமன் மேலும், நானும் இலட்சுமணனும் வனம் வருகையில்,

"அவள் -
வண்ண விழிகளில் -
கண்ணீர் கண்டேன்!
என்னைப் பிரிந்தபின் -
வனத்திலுள்ள
எதுவும் உமக்கு இன்பமோ?"

என்றாள்!

"நான் வந்த போது என்னோடு வந்தவள், எனக்காக வந்தவள் என வார்த்தைகளை மனதிலிருந்து உதிர்த்து, கணையாழியை அனுமனிடம் கொடுத்து, அவளிருப்பதை எனக்கு உறுதி செய்தியை விரைவில் கொண்டுவா" எனக் கலங்கிய மனதோடு விடை கொடுக்கிறார்.

அசோகவனத்தில் சீதை

துளியும் உறக்கமின்றி சோக, சோர்வு நிலையில் சீதை இருந்தாள். தன் நிலை எண்ணி அழுத வண்ணமிருக்க, அரக்கியர்கள் கூட்டத்தின் இடையே மனத்தில் ஈர உணர்வு கொண்ட வீடணனின் மகள் திரிசடை இருந்தாள்.

அவளிடம் சீதை, 'இடக்கண் துடித்ததால் இராமன் கடைக்கண் பார்வை என்மேல் பட்டு அவரின் மனைவியானேன். சில காலங்களில் வலக்கண் துடித்ததால் இவனிடம் அகப்பட்டு அவதிப்படுகிறேன். ஆனால் தற்போது மீண்டும் இடக்கண் துடிப்பதால் இராமன் வந்து, என்னை மீட்டுச் செல்வான் என எண்ணுகிறேன்' என்றாள். அதனைக் கேட்ட திரிசடையும்,

"உன் -
மன்னவன் வந்து - உனை
மீட்பது உறுதி - நல்லோர்
இன்னலுக் கெல்லாம்
ஏற்படும் இறுதி" (ப.184)

என்கிறாள்.

இராவணன் – சீதை உரையாடல்

இராமன் வருவான் என, சீதை காத்திருக்கும் வேளையில் இராவணன் வருகிறான். அவளிடம் உன்னைப் பிடித்ததால் தான் உன்னைக் கொணர்ந்து வந்தேன் என்றான்.

"அன்பே!
'ஒருத்தனுக்கு ஒருத்தி'
என்பதெல்லாம் - நமக்கு
ஒவ்வாத மனுவிதி!
உன்னைத் தீண்ட
ஓவியமே! - நீ
என்னை அனுமதி! (ப.188)

என இராவணனின் பேச்சை அமைதியாகக் கேட்ட சீதை மெல்ல தலையை நிமிர்த்திப் பார்த்தாள்.

சீதையின் உக்கிர மொழிகள்

கணவன்மீதுள்ள பாசத்தால் காடு வந்தவள், மாற்றான் மல்லிகையை முகரத் துடிக்கும் இராவணனை நோக்கிப் பேசிய சீதையின் உக்கிர மொழிகள் பின்வருமாறு.

"கற்புக்கடலைக்
கவர்ந்து வந்து - நான்கு
உப்புக்கடல் நடுவே
ஒளித்து வைத்திருக்கும் -
தப்புக் கடலே - நீ
தூர்ந்து போகும் நாள் - வெகு
தூரத்திலே இல்லை ;
கேள்விப்பட்டிருக்கிறாயா
கோதண்டம் என்னும் வில்லை?" (ப.193)

எனவும்,

"அற்பனே ! - உனைக் கண்டா
அய்யன் அயர்வான்?
உனைக்கொன்று - அவன்
'உயர் வான்' என உயர்வான்!" (ப.194)

எனவும் கூறிய பின்னரும் அவளை நோக்கி காதல் மொழிகளைப் பேசி ஒத்துக் கொள்ள வைக்க வேண்டும் என்று அரக்கியர்க்கு ஆணையிட்டுச் சென்றான்.

நெஞ்சோடு கிளத்தல்

இராவணன் சென்ற பின்பு, சீதை தன் நெஞ்சோடு சில வார்த்தைகளைக் கிளத்துகிறாள்.

"எனை மீட்க -
ஐயன் வரலாம்; மீட்டான்
ஐயன் வரலாம்! - நான்
சிறை நீங்கினாலும் - என்
கறை நீங்குமா?
.... நான்
ஆதரித்த அவருங்கற்பு -
அப்பழுக்கு அற்றதென்று -
மூதரித்தல் எவ்வாறு? (ப.196)

....

இன்னும் -

உயிர்த்தென்ன புண்ணியம்

உயிர்நீப்பதே கண்ணியம்!" (ப.197)

கணையாழி

இராமனால் அனுப்பப்பெற்ற அனுமன் அவளைக்கண்டு ஆனந்தமடைந்து நான் இராமனின் பக்தன். அவர் தந்த கணையாழி என்று அவளிடம் காட்ட அவளோ சற்றுமுன் இருந்த சலனத்தை மாற்றிச் சந்தோசப்பட்டாள். அவனை வாழ்த்தி விட்டு நிற்க. 'தாயே தாங்கள் என் தோள்மீது அமர்ந்துகொள்ளுங்கள் நாம் இங்கிருந்து சென்று விடலாம்' என்று கூறிய வேளையில் 'உன்னோடு வந்தால்,

"அது என்
அண்ணலுக்கு இழுக்கு! - அவன்
ஆற்றலுக்கு அழுக்கு!"

எனக் கூறி வர மறுக்கிறாள். மேலும்,

"நான் -
நினைப்பேனாகில்
இந்த இலங்கை
இக்கணமே - என்
சொல்லுக்கு

இரையாகும்
அப்படி ஆனால்
அது என் அய்யனின்
வில்லுக்குக்
குறையாகும் !" (ப.200)

இன்னும் ஒரு மாதம் உயிர்த்திருப்பேன். வராவிட்டால் உயிர் இறப்பேன் எனக்கூறி, தன்னிடம் இருந்த சூடாமணியை அனுமனிடம் கொடுக்கிறாள்.

கண்டேன் சீதையை

சீதையைப் பார்த்த ஆனந்தத்தில் அனுமன் இராமனை அடைந்தான். அவனின் விழிகள் அவனின் வார்த்தையை எதிர்நோக்கியிருந்ததைக் கண்டு அனுமான், 'கண்டேன் சீதையை' என்றான்.

அதனைக் கேட்டு இராமன் ஆனந்தம் அடைந்தாலும் சூடாமணியைக் கண்டு திருமண எண்ணங்களில் ஆழ்ந்தான்.

தீ – தீக்குளித்தது

அசோகவனத்திலிருந்து இராமனால் மீட்கப்பட்ட சீதை இராமனின் தீச்சொல்லினால் கட்டப்பட்டாள்.

"சனகன் மகளே ! - நீ
சிறைப்பட்டவள் ; ஆதலால்
கறைப்பட்டவள் ; (ப.271)

....

உலகில் - உன்
ஒருத்தியின் பிறப்பால்
நசித்தது தொல்லறம்
நலிந்தது இல்லறம்
அழிந்தது கற்பறம்" (ப.271)

எனக் கூற, தீ மூட்டப்பட,

"தீ -
தீக்குளித்தது
தீயால் தீப்புண் கொண்டு

தீயே தத்தளித்தது; தேவி -
தீயனைய கற்பினள்! எனத்
தீயே தீர்ப்பளித்தது!" (ப.271)

இரக்கமே ஒரு பெண்ணின் வடிவாக, சீதையாக அமைந்திருந்த போதிலும் இராமன் சொல் அவளைத் தீயினும் சுட்டது என்றே கூறலாம்.

நிறைவுரை

நூற்றிருபத்து மூன்று படலங்களை உடைய கம்ப இராமாயணத்தை இருபத்தோராம் நூற்றாண்டுக் கவிஞரான வாலி அவர்கள், இவ் இதிகாசத்தில் இணைந்து, தோய்ந்து "அவதார புருஷன்" எனும் தலைப்பால் கவிதை நடையில் கொடுத்துள்ளார். இக்காவியத்தில், சீதை அழகு, அமைதி, அடக்கம் அனைத்தும் நிரம்பிய பெண்ணாகக் காட்டப்பட்டு உலகியல் தெரியாதவளாக, பேசாதவளாகக் காட்டப்பட்டுள்ளாள். ஆனால் சில இடங்களில் இராமன்மீதுள்ள பாசத்தால் அவனை முன்னிறுத்திப் பேசினாலும், இராமன் அவதாரமாய்க் காட்டப்பட்டிருந்தாலும் மனிதப்பாடுகளை அறிய வந்ததால் அவரும் சராசரி ஆண் மகனாய் சீதையைத் தீக்குளிக்கச் சொன்னது பெரும் பிழையென்றே ஆய்வாளர் என்ற முறையில், கருதுகிறேன்.

சிற்பி செதுக்கிய கம்ப அகலிகை

முனைவர் மு.பழனியப்பன்
தமிழ்த்துறைத் தலைவர், மா.மாமன்னர் கல்லூரி,
சிவகங்கை.

மானுடம் பாடிய வானம்பாடி இயக்கத்தின் முன்னோடிக் கவிஞர் சிற்பி ஆவார். காவிரியாற்றின் கரைப் பகுதியில் அவர் கல்வி கற்க வந்தபோது, அவரின் படைப்பு ஊற்றுக் கண்ணும் திறக்கத் தொடங்கியது. தன் கவிதைகளுக்கு மூலம் கம்ப ராமாயணமே என்பது அவரின் வாக்குமூலம் "எனது கல்லூரிக் காலம் என்பது கம்ப ராமாயணத்தின் முழுமையான பதிப்புக் கிடைக்காத காலம். ஆழ்வார் திருநகரி என்ற ஊரில் பெரியன் சீனிவாசன் ஒரு பதிப்புப் போட்டிருந்தார். அது ஒரு கரடு முரடான பதிப்பு. அதை நண்பர்கள் மூலம் வாங்கி ஒரு பத்து முறையாவது படித்திருப்பேன். அந்த அளவுக்கு அதன்மேல் ஈடுபாடு. இப்போது கேட்டால் கூட கம்ப ராமாயணத்திலிருந்து ஓராயிரம் பாடல்களை மனப்பாடமாகச் சொல்லமுடியும்" (சிற்பி கவிதைகள், முன்னுரை, பக் 9-10) என்ற அவரின் வெளிப்பாடு, அவரைக் கவிஞராக்கியது கம்பரின் பாடல்கள் என்பதைத் தெளிவுபடுத்தும். இவ்வகையில் கம்பரால் ஈர்க்கப் பெற்ற சிற்பி அவர்களின் கம்பராமாயணத் தாக்கத்தை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

கம்பர்

"பொன் விளைக்கும் செய்கதிரோன் பூவுதிர்க்கும் நற்கொடிகள்
புன்னகைக்கும் தேன்மதியம், பொங்கிவிழும் பொன்னருவி
ஆர்க்கும் இயந்திரங்கள் ஆயிரமாய் வாகனங்கள்
சேர்க்கும் சுவையுணவு, சித்திரம் பூம்பட்டாடை
பாயும் விசைவாணம் பல்கலையின் சாலையுடன்
மாய வழிகாட்டும் மாமாயப் போர்க்கலைகள்
அத்தனையும் சேர்ந்தும் அமைதி குலவுதற்கு
முத்தனைய பாடல் முகந்து முகந்தளித்த
காவிரியின் செல்வன்" (மேலது ப.83)

என்பன கம்பரைக் கம்பரின் கவித்திறத்தை எடுத்துரைக்கும் கவிஞர் சிற்பியின் கவியடிகள் ஆகும். இவ்வடிகளில் கம்பரின் இயற்கையைப் பாடும் அழகும், செயற்கையைப் பாடும் அழகும்

கவிஞரால் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. அவையே கம்பரின் புகழுக்குக் காரணம் எனக் கவிஞர் உணர்த்துகிறார்.

அகலிகை

கம்பர் படைத்த அகலிகை, தமிழ்ப் படைப்பாளர்கள் பலரின் பாடுபொருளுக்கு இலக்காகியது. கவிஞர் சிற்பியும் அகலிகை பற்றிப் பற்பல இடங்களில் தம் கவிதைகளில் பதிவு செய்துள்ளார். புதுமைப்பித்தன், கு.ப.ரா, யோகி, வெ.ப.சு போன்றோர்தம் தூண்டுதலால் அகலிகை என்ற பாடுபொருளைத் தான் பாட எடுத்துக் கொண்டதாக "இராமன் பார்வையில் அகலிகை" என்ற தலைப்பிட்ட கவிதையில் அடிக்குறிப்பாகக் கவிஞர் சிற்பி தருகிறார். அவரது முதல் தொகுதியில் "அகலிகை இன்னும் காத்திருக்கிறாள், இராமன் பார்வையில் அகலிகை, பிராயச்சித்தம்" ஆகிய தலைப்பிட்ட கவிதைகளில் அகலிகை பாத்திரம் விரிவாக ஆராயப் பெற்றுள்ளது.

"கௌதம சாபமென்னும் கருநாகம் தீண்ட வீழ்ந்து மௌனமாய் உறைந்துபோன மலர் அகல்யா"(மேலது.ப.669) என்ற அகலிகை பற்றிய மதிப்பீடு சிற்பியின் உள்ளத்தில் அகலிகையின் மீது இருக்கும் தன்னிரக்கத்தைக் காட்டுவதாக உள்ளது.

'அகலிகை'யைப் பந்தயப் பொருளாக, அவளின் தந்தை, பொதுவில் வைத்ததாகவும் இப்பந்தயத்தில் இந்திரனை மிஞ்சி, கௌதம முனிவர் அகலிகையை அடைந்து விட்டதாகவும் அகலிகைக்கு முன் கதைச் சுருக்கம் ஒன்றைப் புனைகின்றார்

சிற்பி. இவ்வடிப்படையில் இந்திரனுக்கு ஏமாற்றம் ஏற்பட இத்தோல்வியை அவன் வெற்றிகரமாக மாற்ற முயலுகின்றான்.

> "அடிவருடும் பெண் மனத்தில் அனற்சுகத்தின் கண்விழிப்பு,
> நடை தளர்ந்த முனி எழுந்து சந்திஜப வெளி
> நடப்பு, உடல் நடுங்கும் பனிவெளியில் ஒரு பூனை
> காத்திருப்பு" (மேலது,ப.309)

என்று இந்திரனின் திட்டத்தைச் சிற்பி எடுத்துரைக்கின்றார்.

> "அடுக்களையில் பால்பானை உறிஞ்சுகிறது ஒரு பூனை,
> தடை கடந்த ஆசையால்
> ஆவேசம் முதிர்கிறது,
> மடல் கிழிந்த தாழைக்குள் மதுரத்தேன் உதிர்கிறது" (மேலது,ப.310)

என்று அகலிகை வாழ்வில் நிகழ்ந்த அடுத்தடுத்த நடவடிக்கைகளைக் கவிஞர் சிற்பி பாடுகின்றார். கம்ப வழியில் நெஞ்சில் பிழைப்பிலாத வளாகவே அகலிகையைச் சிற்பியும் வடித்துள்ளார்.

"அஞ்சன வண்ணத்தான்ற னடித்துகள் கதுவாமுன்னம்
வஞ்சிபோ லிடையாண் முன்னை வண்ணத்தளாகி நின்றாள்
நெஞ்சினாற் பிழைப்பிலாளை நீயழைத்திடுக வென்னக்
கஞ்சமா முனிவனன்ன முனிவனும் கருத்துட் கொண்டான்"

(கம்பராமாயணம். பாலகாண்டம். பாடல்.85)

என்ற கம்பவாசகத்தை உள்வாங்கிச் சிற்பி,

"மனதினால் பிழைப்பில்லாத
மங்கையர்க்குற்ற தீமைக்கு
விடையறியாது
வானும் மண்ணுமே திகைத்திருக்கும்" (மேலது. ப. 602)

என்று அகலிகையை மனதினால் பிழைப்பற்றவளாகச் சிற்பி காண்கிறார். சிற்பியின் கவியடிகளால் அகலிகை என்ற பாத்திரம் மனதால் பிழைப்பிலாதவள், உடலால் அவள் பிழை ஏற்க வேண்டிய சூழலுக்குத் தள்ளப் பட்டாள் என்ற நெருக்கடி சுட்டப் பெறுகிறது.

"கண்களின் பேச்சுக்கும் பதவுரை தெரியாத
பெண் பெருமூச்சுக்கும் பொருள்புரிந்து கொள்ளாத மூடர்கள்
இன்று மட்டுமா? அன்றும் இருந்தனர்" (மேலது,ப.549)

என்று அகலிகை உடலினால் பிழைத்தற்கு கௌதமரின் நாட்டம் இன்மையைக் காரணம் காட்டுகிறார் சிற்பி. பந்தயப் பொருளைத் தனக்காக்கிக் கொண்ட கௌதம முனிவன் அதை நுகராமல் இருந்த தவறு, மற்றொருவனை நுகர வைத்து விட்டது என்பதே சிற்பியின் வாதம்.

கம்பரின் அடிப்படையிலே செல்லும் சிற்பியின் அகலிகை பற்றிய கவிதைகளும், இந்திரனுக்கும் அகலிகைக்கும் , கம்பர அளித்த சாபங்களையே கௌதம முனிவர் வாயிலாக வழங்குகின்றது. இருப்பினும் பின்வரும் வேறுபாடு சிற்பியால் உணரத்தப்பெறுகிறது. கோழியால் ஏமாற்றப் பட்டவர் கௌதமர். கௌதமர் வடிவில் வந்தவனைக் கண்டு ஏமாந்தவள் அகலிகை. இருவரும் ஏமாந்தது உண்மை. ஆனால்அகலிகைக்கு மட்டும் ஏன் சாபம்? என்று சிற்பியின் கவிதை வினாத்தொடுக்கிறது.

"மாமுனி மட்டுமந்த வானவன் கோழியால் ஏமாந்து
விடிந்ததென்றே ஏகலாம், ஆனால்
கோதமன் வடிவில் வந்த குருடனைத்
தெரியாவிட்டால் பாவைக்குச் சாபச் சூடு" (மேலது. ப.601)

என்று சிற்பி, தன் வினாவினை விளக்கிக் கவிதையாக்கி உள்ளார்.

சாபத்தின் காரணமாக உணர்விழந்த அகலிகை நிலையை,

"வாழ்க்கை வழுக்கல்,
மனத்தின் சறுக்கல், கோபக் கிறுக்கல்,
சாபக் கருங்கல், காலம் இவ்வாறு
விட்டெறிந்த கல்லெல்லாம்
பட்டழிந்த கல் அது,
மாதரசி அகலிகையின் மனம்
கனத்த புறத் தோற்றம்" (மேலது, ப. 596)

என்று காட்டி, அகலிகைக் கல்லுக்கு வருத்தம் சேர்க்கிறார் சிற்பி. அகலிகை சாபம் கழிந்த எழுந்த வரலாற்றை அப்படியே கம்ப வழியில் சித்திரிக்கிறார் கவிஞர்.

"கைவண்ணம் தாடகைமேல் அம்பால் காட்டிக்
கால்வண்ணம் பாறையில் பெண்உருவால் காட்டி
மைவண்ணன் அன்னை என்னும் சொல்லால்
தூய மனவண்ணம் உலகுக்குக் காட்டிநின்றான்" (மேலது, ப.604)

என்று கம்பக் கவி வழியில் கவிதை படைக்கின்றார் சிற்பி. கம்பவழியில் அகலிகையைச் சித்திரிக்கும் மரபு மீறாமல், ஆனால் அகலிகைக்குச் சார்பான பல கேள்விகளை உள் வைத்துத் தன் பாத்திரமாக அகலிகையை வடித்துக் கொள்ளுகிறார் சிற்பி.

சீதையின் அக்னிப்பிரவேசத்தினபோது அனைத்துப்படைப்பாளர் களும் இராமனை மறுமதிப்பீட்டுக்கு உள்ளாக்குவர். சிற்பியும்,

"கல் சொல்லும் கதை இங்கு முடிவதில்லை.
தானுமொரு பழிகார ஆண் குலத்தின்
சரியான பிரதிநிதி என்பான் போல
மானுடத்தின் வெற்றியெனும் சீதை
தன்னை நெருப்புக்குள் நடவந்துவர
ஆணை போட்டான்" (மேலது.ப. 605)

என்று மதிப்பிடுகிறார். இராமன் பார்வையில் ஏற்பட்ட இந்த இரண்டுவகை அளவு கோள்களை முன்வைத்து,

"காலடிகளுக்காக் காத்திருக்கும்
கற்பாறைக் கூட்டங்கள் குறையவில்லை"

எனக் காட்டி,

"இராமபாதம் அகலிகைக்கு விமோசனம்,
இராமபாவத்திற்கு எது விமோசனம்?"

என்று கவிதையை நிறைக்கிறார் சிற்பி.

கம்பவழியில் நடந்தாலும் தன் கவிதைக்குள் தற்கால சிந்தனை ஓட்டங்களுக்கு இடம் தந்து மரபும் மீறாமல் புதுமையும் குறையாமல் கம்பிமேல் பயணம் செய்யும் கவிதை சாகசக்காரர் சிற்பி என்பதற்கும், அகலிகைக் கதைகளுக்குள் இன்னும் காணவேண்டிய பெருவெளிகள் பல உள்ளன என்பதையும் அவரின் அகலிகைப் படைப்பு எடுத்துரைப்பதாக உள்ளது.

மு.மேத்தாவின் கவிதைகளில் இராமாயணத் தொன்மங்கள்

முனைவர் அ.அருள்சீலி
தமிழ்த்துறைத் தலைவர், நிர்மலா மகளிர் கல்லூரி, கோவை.

தமிழிலக்கியங்களில் இராமாயணம் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. அறத்திற்கும் பண்பாட்டிற்கும் ஒழுக்கத்திற்கும் ஊற்றாய் இவ்விலக்கியம் விளங்குகிறது. கம்பருக்குப் பிறகு பல்வேறு படைப்பாளிகள் அவற்றில் வரும் பாத்திரங்களை மையமாக வைத்துக் கவிதைகளும், கதைகளும், கட்டுரைகளும் நாடகங்களும் படைத்துள்ளனர். புதுக்கவிதைகளிலும் இராமாயண பாத்திரங்களின் சிறப்பினைப் புதிய கண்ணோட்டத்துடன் கவிஞர்கள் கையாளுகின்றனர். இவ்வரிசையில் புதிய விமர்சனப்பார்வையுடையவர் கவிஞர். மு.மேத்தா. இவர் இராமாயணத்தொன்மங்களை கையாண்டுள்ள முறையினைக் காண்போம்.

சீதையின் – தொன்மம்

கம்பன் சீதையை விதேகநாட்டு இளவரசியாதலால் 'வைதேகி' என்று அழைக்கின்றார். சீதையின் அழகும் கற்புமே இராவணனை அழித்து இராமாயண பாக்கியத்திற்கு வித்திட்டது எனலாம். சீதை கணவன் வழியை பின்பற்றி வாழ்ந்தவள். இன்று சீதைகளாகிய பெண்கள் சீதையைப்போல் பல பிரச்சனைகளுக்கு உள்ளாகிறார்கள். வாழ்க்கையே போராட்டமான நிலை, குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையே போராடி வாழும் நிலையைக் கண்கூடாகக் காண்கின்றோம். கவிஞர் மேத்தா சீதை தொன்மத்தைத் தனது கவிதைகளில் கையாண்டிருப்பது புதிய பெண்ணின் மரபினைச் சுட்டிக்காட்டுகிறது.

'அசோக வனத்தில் ஒரு சோகவனம்' என்னும் கவிதையில் காடுமேடாக இருந்த இலங்கையை நாடாக உருவாக்கியவர்கள் தமிழர்கள். இது இன்று வேட்டையாடப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையை, கவிஞர் மேத்தா கண்டிக்கின்றார்.

"இலங்கையில்
அசோகவனம் எரிகிறது....
செந்தமிழ்த் தாயாம்
சீதா தேவியோ
சிதையில் கிடக்கிறாள்"

என்று சிங்கள இனமக்களால் தமிழ் இனம் எரிகின்றது என்றும், இந்தத் தமிழ்ச் சீதைகளை மீட்க இந்தியா உதவ வேண்டும் என்று சுட்டிக்காட்டுவது புலனாகின்றது. சமாதானக்காரனாக, நடுநிலையாளனாக இராமன் காணப்படுவதை,

"அசோகவனத்தில் சீதை
ஆயுதம் சேகரிக்கிறாள்.
தலைநகரிலிருந்து
இராமன் தகவல் அனுப்புகிறான்
சண்டை வேண்டாம்
சமாதானமாகப் போ!"

என்று ஆயுதங்களை ஏந்திப் போராடும் போராளியான சீதைகளை மேத்தா சாடுகின்றார்.

அசோகவனத்தில் சீதை இருட்டறையில் வாழ்ந்ததை இன்றைய கல்வி முறைக்கு ஒப்பிட்டு, கவிஞர் மேத்தா "முதுகில் ஒரு மூட்டை" என்னும் கவிதையில் எடுத்துரைக்கின்றார். இனிமையான மாணவப்பருவம் இருட்டறை நிலைக்கு செல்கின்றது.

"மேதைகள்
இப்போது
சீதைகள் மாதிரி
அசோக வனத்திலல்ல....
சோக வனத்தில்
......
கல்வி இங்கே
இதயத்தில் சுமக்கும்
இனிமையாய் இல்லாமல்
முதுகில் சுமக்கும்
மூட்டையாகிவிட்டது"

என்று கூறுவதன்மூலம் மூட்டை தூக்கும் நிலையால் இளம் வயதிலேயே மாணவர்கள் கூனிக்குறுகி பல நோய்களுக்கு ஆளாகி சோகத்திற்கு உட்படும் நிலையினை உணர்த்துகிறார்.

இன்றைய பெண்களின் காதலைச் சீதையோடு* ஒப்பிட்டு 'மனச்சிறகு' என்ற தலைப்பில் படைத்துள்ளார்.

"உன்னுடன் வாழாமல்
உனக்காக வாழ்கின்ற பேதை நான்
உன்னை நினைத்திந்த
மண்ணில் தவம் செயும் சீதை"

என்று ராம காதலுடன் சேர்த்து பெண்ணின் ஏக்கத்தைச் சுட்டிக் காட்டுகின்றார்.

அக்னிபிரவேசமும் – சீதையும்

பழ.நெடுமாறன் அவர்களை 'அமுத நூலகம்' என்னும் கவிதையில் தன் அரசியல் கற்பை தூய்மையாக நிரூபிக்கும் நிலையைப் பின்வருமாறு ஒப்பிடுகிறார்,

"நெடுமாற இராமாயணத்திலும்
அக்னிப் பிரவேசம் உண்டு!
சீதைக்கல்ல - இராமனுக்கு!
ஆமாம்
அக்னிப் பிரவேசம் செய்து
தன்
அரசியல் கற்பை
நிரூபித்த இராமன் இவர்"

என்று இன்று அரசியலில் சீர்கேடுகளும், ஊழலும் சுயநலப்போக்கும் நிறைந்து காணப்படும் நிலையில் நெடுமாறன் அக்னி அரசியல்நெறியைத் தவறாது பாதுகாத்து வருவதாகப் புகழ்கின்றார். சீதையின் அக்னிப் பிரவேசத் தொன்மம் இக்கவிதையில், தெளிவுபடுத்தப்படுகின்றது.

சாதி – குறியீடு

கவிஞர் மேத்தா 'சாதி' என்னும் தலைப்பில், பெண்களின் காதல் திருமணத்திற்கு, சாதி தடையாக இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றார்.

"இந்த வில்லை முறிக்காமல்
காதல் சீதைகளுக்கு
கல்யாணம் ஆகாது
.....
இந்த வில்லை முறிக்க
இராமன்மார் வந்து
ரவுண்டடித்தால் போதாது
மாமன்மாரும் கொஞ்சம்
மனசு வைக்க வேண்டும்"

என்ற கவிதையின்மூலம் பெற்றோர்கள் இத்திருமணத்திற்கு மனம் வைத்தால் காதல் சீதைகளுக்குத் திருமணம் நடக்க வாய்ப்பாகும் என்று அறிவுறுத்துகிறார். சீதை, இராமன் இருக்கின்ற காட்டினை நாடாக்கும் பக்குவமுடையவர். ஆனால் இன்று சில பெண்கள் அழகான வீட்டினைக் காடாக்குகிறார்கள். இதனை 'இன்றைய இல்லறம்' என்ற தலைப்பில் எடுத்துரைக்கின்றார்.

"சீதையோ - ஒரு
நல்ல தலைவி
அதனால் தான் கணவனிருக்கும்
காடே
அவளுக்கு நாடாகியது
இங்கு சில
இல்லத்தலைவிகள்
இருக்கின்ற
வீடு கூடக்
காடாகி விடுகின்றது"

என்று இல்லறத்தில் பெண்கள் சீதையைப் போல் வாழவேண்டுமென அறிவுறுத்துகிறார்.

அரசியல் பிரச்சனைகளும் – சீதையும்

அரசியல் நிலையினைச் சுட்டிக்காட்டும் விதத்தில் மாமியார் மத்திய அரசுக்கும் மருமகள் மாநில அரசுக்கும் குறியீடாகப் பயன்படுத்துகிறார். 'ஒரு மருமகள் மறுதலிக்கிறாள்' எனும் கவிதையில் மாமியாரின் சுரண்டலைச் சுட்டிக்காட்டும் நிலையினை,

"சமையல் அறைகள்
நாங்கள் பணிபுரியும் ராம ராஜ்யம்
சாப்பாட்டு மேசையெல்லாம்
உன்னுடைய
தனியுடைமை சாம்ராஜ்யம்"

என்று அரசியலுடன் மாமியாரை மருமகளையும் குறியீடாகக் கையாள்கிறார். மருமகள் அதற்கு பதில் கூறுவதனை,

"உன்னுடைய
சட்டாம் பிள்ளைத்தனத்தை
சகிக்க முடியாமல் தான்

இந்தப் பட்டாம் பூச்சி
வெளியே பறக்கத் துடிக்கிறது"

என்று போராடுவதையும் மாநில அரசுக்கு அதிக உரிமைகள் வேண்டுமெனவும் மறைமுகமாக ஆசிரியர் வலியுறுத்துகிறார்.

சீதை கற்பிற்சிறந்தவள். அவளது சக்தியை 'கம்பன் கண்ட இல்லறம்' எனும் கவிதையில்,

"வாய்த்தீப் பெட்டியின் ஒரு
வார்த்தைக் குச்சியை
அவள்
உரசியிருந்தாலே போதும்
....
வில்லின் பெருமையை
விளக்க அல்லவா
வெந்து வெந்து நெருப்பில்
நொந்து கொண்டிருந்தாள்"

என்று பாராட்டிக் கூறுகின்றார். தன் கணவனின் நலனுக்காகவே இன்றைய பெண்கள் மாமியாரின் கொடுமையினைத் தாங்கிக் கொள்வதை மறைமுகமாக எடுத்துரைக்கின்றார்.

உலகமயமாக்குதல் குறியீடாக கையாளுதல்

'புதிய சிறைகள்' என்னும் கவிதையில் உலகமயமாக்கலால் சுயநலப் போக்குடன் வல்லரசு நாடுகள் திகழ்கின்றன. பலர் அடிமை நிலைக்கு தள்ளப்படும் நிலையினைக் கண்கூடாகக் காண முடிகிறது. இதனை,

"சீதைகளை மட்டுமல்ல
அயோத்தியையே
கடத்திச் செல்ல
ஆசைப்படும்
இராவண வல்லரசுகளால்
சில
தேசங்களும் இங்கே
சிறைவாசம்"

என்று இராவணன் தொன்மம் மூலம் ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

இலங்கைத் தமிழர்களுக்கு இன்று சமாதானமே இல்லை என்றும் ஈழப்பிரச்சனையில் இந்தியாவின் சமாதானம் எந்நிலையில் இருக்கின்றதென்றும் கேலி செய்து,

"இராவணனுடன்
சீதை
இணக்கமாய் வாழ்வது தான்
நாடுகள் இரண்டுக்குமே
நல்லது என்று
விஸ்வாமித்திரர்
தலைமையில் கூடிய
முனிவர்கள் சபை
முடிவெடுக்கிறது"

என்று சமுதாயத்திற்கு அறிவுறுத்துகிறார்.

காதல் குறியீடு

இராமன் போரில் இராவணனை நோக்கி, 'இன்று போய் நாளை வா' என்று கூறுவதை,

"நிராயுதபாணியாகத் தான்
நிற்கிறேன்
இன்று போய் நாளை வா
என்று சொல்லிவிடாதே
இன்றும் வா!
நாளையும் வா!
என்று சொல்"

என்று காதலியிடம் வேண்டுவதாகக் காட்டுகின்றார். இன்றைய இளைய சமுதாயம் காதலால் வாழும் நிலை சுட்டிக்காட்டப்படுகிறது.

இளைஞர்கள் காதலுக்காகக் கண்ணீர் சிந்தும் சோகநிலை அதிகமாகியுள்ளது வாழ்க்கையை மாய்த்துக் கொள்ளும் சுயநலப்போக்கு அதிகமாகிவிட்டது இதனை,

"கண்ணீர்
என்னைக் காதலிக்கிறது
இரவுகள் வருகின்றன
என்னுடைய
தூக்க சீதையை யாரோ
தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள்" —

என்று காதலால் தூக்கம் வராமல் புலம்புபவனின் ஏக்கத்தை இராவணனோடு தொடர்புபடுத்தி எடுத்துரைக்கின்றார்.

குடும்பத்தில் ஆணாதிக்க நிலையினைக் குறியீடாக்கி இராவணத் தொன்மத்தினை மேத்தா கையாளுகிறார்.

"அன்றைய இராவணன் சீதையை
பலாத்காரமாகக்
கடத்திச் சென்றான்
நவீன இராவணன்மார்களோ சீதைகளை
பக்குவமாகக் கடத்திச் செல்கிறார்கள்
திருமணம் செய்து கொண்டு"

என்று கூறுவதில் இன்று கடத்திச் சென்று இல்லறத்தை அவர்களே நிர்ணயம் செய்து விடுகின்றனர். இதில் ஆணாதிக்க இராவணர்களை அடையாளம் காட்டுகின்றார்.

சூர்ப்பநகை தொன்மம்

இராமாயண காப்பியத்தில் யுத்தம் ஏற்பட சூர்ப்பணகை தான் காரணம் என்பதை,

"ஒரு முத்தத்தை வரவழைக்க
முடியாமல் போனதால்
யுத்தத்தை வரவழைத்தவள்"

என்று யுத்தம் ஏற்பட்ட நிலையை எடுத்துரைக்கிறார். சூர்ப்பநகை-யினையும், கைகேயியையும் ஒன்றுபடுத்தி சொல் புத்தியாலும், சொந்த புத்தியாலும் இருவரும் கெட்டு போனார்கள் என்பதை,

"ஒருத்திக்கு ஒருத்தி
சளைத்தவர்களில்லை
ஒருத்திக்கு - காம ஜுரம்
இன்னொருத்திக்கு - இராம ஜுரம்"

என்று 'காவியத்தீ' எனும் கவிதையில் காதல் கொண்டதையும் காட்டிற்கு அனுப்பியதையும் எடுத்துரைக்கின்றார். மேலும் குற்றவாளிக் கூண்டில் இராமனை நிறுத்தி சூர்ப்பணகை விசாரிப்பதாக, கவிதைப் படைத்துள்ளார்.

"அவள் ஆபரணம் தான்
இராமன் அணிந்து கொண்டிருந்தால்

மறுத்ததனால்
ஆபரணம் ரணமாகி விட்டது!"

என்று சூர்ப்பணகையின் வழக்கவிஞர் அவளை இராமன் ஏன் திருமண செய்யவில்லையெனக் கேள்வி எழுப்புகிறார்.

இராமன் சார்பாக வாதிடும் வழக்கவிஞர் சூர்ப்பநகையைத் தங்க முலாம் பூசிய பிச்சைப் பாத்திரம் என்றும், சீதையென்னும் கற்பின் கேடயம் இராமனை தடுத்தது என்றும், அவள் காதலை இராமன் சரி என்றால், இராமன் முறிந்து போயிருப்பான் என்பதை,

"இராமன் தொடவேண்டும்
என்பதற்காகவே
அதிகமாய் வளைந்த
வில் இது!
தொட்டிருந்தால்
வில் நிமிர்ந்திருக்கும்...
இராமன் தான்
வளைந்திருப்பான்."

என்று ஆசிரியர் வாதங்களை எடுத்துரைக்கின்றார்.

தொகுப்புரை

இராமாயணச் செல்வாக்கு இன்று வரை தொடர்கின்றன. நவீன கவிதை படைத்த மேத்தா சீதை தொன்மத்தைக் கையாளுவதன் மூலம் இன்றைய பெண்களின் நிலைகளையும், அவர்களைப் பற்றிய புதிய சிந்தனைகளையும் சுட்டிக்காட்டுகிறார். சமூக அரசியல் பிரச்சனைகள், இலங்கைப் பிரச்சனைகள் போன்றவற்றை முன்வைக்கிறார். பெண்களின் இல்லற வாழ்வினையும், காதல் திருமணத்தையும், மாமியார் மருமகள் நிலையினையும், ஆணாதிக்க நிலையினையும் விமர்சனம் செய்கிறார். மேலும் சூர்ப்பநகை தன் காதலைத் தெரிவிக்க உரிமை உண்டு எனவும் சுட்டுகிறார். இங்ஙனம் கவிஞர் மேத்தா தொன்மங்களைக் கையாளுவது புலனாகின்றது.

கம்பனைக் கையாளும் கவிப்பேரரசு

முனைவர் ஜோ.அருணாதேவி
தமிழ்த்துறைப் பேராசிரியர், பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி,
தஞ்சாவூர்.

கவிதை என்பது உள்ளத்தில் எழுகின்ற உணர்ச்சியின் வேக வெளிப்பாடு. மனிதனின் மனநிலையைப் படம் பிடித்துக் காட்டும் ஓர் ஊடகம். புதுமையில் நாட்டங் கொள்வது மனித இயல்பு. எனவே தான் முற்காலத்தில் கதையாகப் பிறந்த கவிதை, இன்று மனித மனத்தின் குரலாக, மனத்தின் மெல்லிய அசைவுகளை வெளியிடும் முயற்சியாகப் பிறக்கின்றது. கவிதைகள் மூலம் சமுதாய நிகழ்வைப் படம்பிடித்துக் காட்டி மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருப்பவர் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களும் தன் படைப்புகளில் கம்பனையும், கம்பன் பாத்திரப்படைப்புகளையும் எந்த சூழலில், எந்த இடங்களில் கையாண்டுள்ளார் என்பதை இக்கட்டுரை வெளிப்படுத்துகின்றது.

சுதந்திரம்

"விழிதுயில் கின்றனை யின்னுமெந் தாயே
வியப்பிது காண்! பள்ளி யெழுந்தருளாயே!"

என்று நாம் அன்னியர் பிடியில் அகப்பட்டிருந்த அன்று பாரதி பாடினான். இன்று நாம் சுதந்திர இந்தியாவில் வாழுகின்றோம் என்றாலும் நம் பாரதநாடோ ஆதிக்கவாதிகளின் கைப்பிடியில். இவ் வருந்தத்தக்க நிலையைக் கம்பன் படைத்த சீதையின் வாழ்வோடு சுட்டிக்காட்டுகிறார் கவிஞர் வைரமுத்து. சீதைக்காவது இராவணன் சிறைப்படுத்திய அசோக வனத்திலிருந்து விடுதலை கிடைத்தது. ஆனால் பாரதத் தாயாகிய சீதையோ மீட்பின் பின்னும் யாரோ சிலரின் சிறையிலிருக்கின்றாள் என்பதை,

"எம் சுதந்திரச் சீதை
மீட்பின் பின்னும்
சிறையிலிருக்கிறாள்...
அசோக வனத்திலல்ல...
யாரோ சிலரின்
அந்தப் புரத்தில்..." (ப 143, உறக்கம் கலைவதெப்போ? மயக்கம் தெளிவதெப்போ?)

என்னும் வரிகள் நமக்கு உணர்த்துகின்றன.

மதக்கலவரம்

மதம், சமயம் போன்றவை எல்லாம் மனிதன் தன் வாழ்க்கையைச் சரியாக அமைத்துக் கொள்ள மனிதனால் உருவாக்கப்பட்டது. அயோத்தி நகரம், கடவுளாகவும் அரசனாகவும் கருதப்படும் இராமர் பிறந்த இடமென்றும், இந்தியாவின் புனிதத் தன்மை வாய்ந்த இடங்களுள் ஒன்றாகவும் கருதப்படுகிறது. அங்கிருந்த இராமர் கோயிலை இடித்த பின்னரே முகலாயப் பேரரசர் பாபரின் பெயரால் மசூதி கட்டப்பட்டதாக இந்துக்கள் நம்பினர். எனவே இராமர் பிறந்த இவ்விடத்தைக் கைப்பற்றும் பொருட்டு 1992 டிசம்பர் 6 இல் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இதன் பொருட்டு இந்து, முஸ்லீம் கலவரம், பல உயிர்கள் இழப்பு என அழிவுகள் தொடர்ந்தது. மதத்தின் பெயரால் மனிதர்கள் விலங்குகளாகிப் போன கதையைக் கண்டு கம்பன் படைத்த இராமனே கலங்குவான் என்கிறார் கவிஞர். இதனை,

"சீதை சிறைப்பட்ட பின்
இப்போது தான் ராமன்
இரண்டாம் முறை அழுகிறான்" (ப. 577, அயோத்தி ராமன் அழுகிறான்)

என்னும் வரிகள் புலப்படுத்துகின்றன.

வேலையில்லாத் திண்டாட்டம்

சுதந்திர இந்தியாவில் பெருகி வருவதோ மக்கள்தொகை. ஆனால் மக்கள் உழைப்பதற்குரிய வேலைவாய்ப்போ குறைவு. இதனால் மக்கள்படும் பெருந்துயர் கண்டு பொங்கியெழுந்து போராடுவோர் சிலர் என்றாலும், இன்று அவர்களின் போராட்டம் சமூகத்தில் ஆக்கத்தை விட அழிவையே பெற்றுத் தருகிறது. அன்றோ சீதையைத் தேடிச் சென்ற அனுமன் தன் நோக்கம் நிறைவேறியவுடன் பகைவர் நாடான இலங்கையைத் தான் எரியூட்டினான். ஆனால் இன்றைய போராட்டக்காரர்கள் வேலைவாய்ப்பின் நிலைகளனான சமூகத்தையே எரிக்கின்றார்கள் என்பதை,

"கலைமகள்: வேலை கிடைப்பதென்ன
அவ்வளவு அரிதா?
இதை எதிர்த்துப்
புதுயுகப் புலிகள்
போராடவில்லையா?

கவிஞன்: போராடுகிறார்கள்
இன்னும் போதிய தெளிவில்லை

இந்தக் கலியுக அனுமன்கள்
இலங்கையைக் கொளுத்தும் அவசரத்தில்
சீதையைக் கூடச் சேர்த்தெரிக்கிறார்கள்"

(ப. 209, அவன் கலைமகளுக்குப் பாடஞ்சொல்கிறான்)

என்ற கவிதை வரிகள் உணர்த்துகின்றன.

பெண் அடிமை

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள" என்று நல்லறம் பேசிய நாடு நம் பாரத நாடு. அத்தகு நாட்டில் பெருமை பெற்ற இப்பெண் இனம் அடுப்பூதிக் கொண்டும், கல்வியறிவற்றும், அடிமைகளாய், அறிவிலிகளாய், குழந்தை பெறும் இயந்திரங்களாய், கணவன் பேச்சிற்குத் தலையாட்டும் பொம்மைகளாய், வீட்டு வேலை செய்யும் கூலியில்லா வேலையாட்களாய் இருப்பதைக் கண்டு மனம் புழுங்கி, வேதனைப்பட்டு அன்று பாரதி பாடிய பெண்சுதந்திரத்திற்கான குரல் இன்று வரை தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது என்பதை வைரமுத்துவின் கவிதை காட்டுகிறது. இப்பெண் இனத்தை கம்பன் படைப்பான அகலிகையோடு ஒப்பிடுகிறார் கவிஞர். தேவர்குலத் தலைவன் இந்திரன் சூழ்ச்சியால் குற்றவாளியாகி தன் கணவன் கௌதம முனிவரால் சபிக்கப்பட்டு கல்லாகிப் போன அகலிகை போன்றவர்கள் இப்பெண்கள் என்பதை,

"இன்னும்
உன் சாபக்கல்
இங்கேதான் கிடக்கிறது
இங்கேதான்...
ஆலைகளில் ...... அலுவலகங்களில்
கழனிகளில்......கட்டில்களில்
சாலைகளில்...... இன்னும்
சமூகச் சந்திகளில்....
இன்னும் உன் சாபக்கல்
இங்கேதான் கிடக்கிறது."

(பக். 165-166, அது ஒரு கல்வெட்டு)

என்னும் வரிகள் புலப்படுத்துகின்றன.

வரதட்சணைக் கொடுமை

குழந்தைத் திருமணம் நடைபெற்ற காலத்தில், வாழப்போகும் வீட்டிற்குத் தம் பெண்ணை அனுப்பி வைப்பதற்காகப் பெற்றோர்கள் பெண்ணிற்குப் பிடித்ததை வாங்கிக் கொடுத்தால் பொருள்மீது உள்ள விருப்பம் அவளைப் புகுந்த இடம் போகத் தூண்டும் என நினைத்து

மேற்கொண்ட செயல், இன்று மணமகன் வீட்டார் கட்டாயப்படுத்திக் கேட்கும் வரதட்சணையாக உருவாகியுள்ளது. இதனால் பெண்ணிற்கு திருமண மறுப்பு, பெண்ணைப் பெற்றவர் துவண்டு போகும் நிலை போன்ற சமூக நிகழ்வுகளைக் குறிப்பிடவரும் கவிஞர் கம்பன் காவியத்தை நினைவு கூறுகிறார். அன்று அயோத்தி ராமன் பொன், பொருள் தேடாது தன் வலிமையைக் காட்டி சீதையைப் பெற்றான். சனகனோ திறமையை மதித்துத் தன் மகளைக் கொடுத்தார். இவ்விடத்தில் வரதட்சணைக்கு வேலை ஏது? என்பதை இன்றைய பெண்கள் சிந்திப்பதாகத் தம் கவிதையில் காட்டுகிறார். இதனை,

"அந்தச் சீதை சிந்திக்கிறாள்
இந்த வரதட்சணை வில்லை
வளைப்பது யார்?
ராமர்களுக்கு இன்று ரத்தமில்லை..
ஜனகனோ பாவம்
சாய்வு நாற்காலியில்.." (ப - 230, ராமர்களுக்கு இன்று ரத்தமில்லை)

என்னும் கவிதை வரிகள் உணர்த்துகின்றன.

கற்பு

கற்பு என்பது காலங்காலமாக பெண்ணிற்கு மட்டுமே உரியதுபோல், அதற்கான சோதனைகளும், தண்டனைகளும் பெண் இனத்திற்கே வழங்கப்பட்டது. இக்கற்பு சோதனைக்கு இன்றைய கால பெண்கள் மட்டுமல்ல, இதிகாசக்கால சீதையும் ஆட்பட்டாள் என்னும் வருத்தத்தை,

"குளிர்காய விலங்கு விரட்ட
சமைக்க சைகை புரிய
கருவி செய்ய களிமண் சுடப்
பயன்பட்ட நெருப்பை
கற்பைக் கண்டறியும் தர்மாமீட்டராய்
அழுக்குச் செய்தான் அயோத்தி மன்னன்" (ப. 605, ஞானத்தீ)

என, தன் கவிதைவரிகளில் வெளிக்காட்டுகிறார்.

முடிவுரை

தனிமனித உணர்வுகளையும், சமுதாயச்சிக்கல்களையும் படம் பிடித்துக் காட்டுவனவாக அமைவன வைரமுத்துவின் கவிதைகள். மக்கள் நன்கு அறிந்திருந்த கம்பனையும், அவன் படைப்பையும் நிகழ்காலத்திற்கு ஏற்றபடி தம் கவிதைகளில் புகுத்தியிருப்பது எதிர்கால சமுதாயத்திலும் கம்பன் வாழ வேண்டும் என்ற விருப்பமே.

தமிழ்ச் சிறுகதைகளில் இராமாயணத் தொன்மங்கள்

முனைவர் மு.அருணாசலம்
தமிழ் இணைப்பேராசிரியர், பெரியார் ஈ.வெ.ரா.கல்லூரி,
திருச்சி.

வான்மீகி முனிவரின் தாக்கத்தால் வடமொழியில் காவியங்களும், நாடகங்களும், கவிதைகளும் தோன்றியது போன்று தமிழில் கம்பராமாயணத்தின் தாக்கத்தால் காவியங்களும், நாடகங்களும், கவிதைகளும், நாவல்களும், சிறுகதைகளும், திறனாய்வுகளும் தோன்றியுள்ளன. கம்பராமாயணத்தின் தாக்கம் பெற்ற காவியங்களுக்குச் சான்றாக இராவண காவியம், கோவி இராமாயணம், வெள்ளக்கால் சுப்ரமணிய முதலியாரின் அகலிகை வெண்பா, வாலியின் அவதாரபுருஷன் போன்றவற்றைச் சுட்டலாம். நாடகங்களில் கு.ப. ராஜகோபாலனின் அகலிகை, ஏ.ஆர். ராஜகோபால செட்டியாரின் அகலியை நாடகம், பிரபஞ்சனின் அகல்யா, அறிஞர் அண்ணாவின் நீதிதேவன் மயக்கம், அம்பையின் ஆற்றைக் கடத்தல், நாஞ்சில் ஆனந்தனின் இந்திரஜித் போன்றவற்றைக் கூறலாம். கவிதையில் ச.து.சு.யோகியின் அகல்யா, ந. பிச்சமூர்த்தியின் உயிர்மகள், ஞானியின் கல்லிகை, தமிழ்நாடனின் அகல்யா, முருகு சுந்தரத்தின் வெள;ளையானை போன்றவைகளும், மேத்தா, ரகுமான், சிற்பி, பிரமிளாப் போன்ற புதுக்கவிஞர்களும் இராமாயணத் தொன்மப்பாத்திரங்களைக் கவிதையில் கையாண்டுள்ளனர். நாவலில் வராவின் கோதைத்தீவு, விந்தனின் பாலும் பாவையும், ஜெயகாந்தனின் சுந்தரகாண்டம், ராஜம்கிருஷ்னணின் வனதேவியின் மைந்தர்கள், அருணனின் சரயு போன்றவை குறிக்கத்தக்கவை. இராமாயணக்கதையும், பாத்திரங்களும் புதுக்கவிதைகளை அடுத்து தமிழ்ச் சிறுகதைகளிலே அதிகம் மீள் - உருவாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. தமிழ்ச் சிறுகதைகளில் ஜெயகாந்தனின் அக்னிப்பிரவேசம், தஞ்சைபிரகாசின் இராவணச் சீதை, ஜி. நாகராஜனின் அக்னிப்பிரவேசம், புதுமைப்பித்தனின் அகல்யை, சாப விமோசனம், எம்.வி. வெங்கட்ராமின் கோடாரி, பெ.கோ. சுந்தர்ராஜனின் மாசறு கற்பினாள் போன்றவை பதிவு செய்யத்தக்கவை. தமிழ்ச் சிறுகதைகளில் இராமாயணப் பாத்திரங்களின் செயல்கள் ஒவ்வொரு கோணத்தில், வேறு வேறு பார்வைகளில் கலைடாஸ்கோப் வண்ணப்பிரிகையாகப் பார்க்கப்பட்டு வருகின்றது.

தமிழ்ச் சிறுகதைகளில் அதிகம் மறுஉருவாக்கம் செய்யப்பட்ட தொன்ம பாத்திரமான அகலிகை குறித்த மூன்று சிறுகதைகளும், ஊர்மிளை பற்றிய இரண்டு சிறுகதைகளும், இராமனை மையமிட்ட ஒரு சிறுகதையும் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

அகலிகையை மையமிட்ட சிறுகதைகள்

அகலிகையின் கதை இந்திய இலக்கிய உலகிலும், தமிழ் இலக்கிய உலகிலும் பெருந்தாக்கத்தினைச் செலுத்தியுள்ளது. வான்மீகி இராமாயணத்தில் பாலகாண்டத்தில் 48ஆவது சருக்கமாக அகலிகை கதை அமைந்துள்ளது. வான்மீகியிடமிருந்து கதை பெற்ற கம்பர் காப்பியத்தில் மாறும் இடங்களில் அகலிகை வரலாறும் ஒன்று. இந்திரன் சேவல் போலக் கூவி கோதமரை வெளியேற்றுவது கம்பராமாயணத்தில் இல்லை. கோதமன் வருகையை உணர்ந்த இந்திரன் பூனை வடிவில் தப்பி ஓடிய செய்தி கம்பராமாயணத்தில் மட்டும் இடம்பெற்றுள்ளது. கம்பருக்கு முன்பே அகலிகைக் கதை தமிழகத்தில் வழங்கி வந்துள்ளதால் அதை கம்பர் தனது காவியத்தில் இணைத்துக் கொண்டார். அதேபோன்று 'ஆயிரம் மாதர்க்கு உள்ள அறிகுறி' என்றும் சாபம் வான்மீகியில் இல்லை. கம்பராமாயணத்திலே உள்ளது.

கம்பராமாயணத்தில் 28 பாடல்களைக் கொண்டதாக அகலிகைப் படலம் அமைகின்றது. இப்படலப் பாடல்களே தமிழ்ச்சிறுகதையில் அகலிகை பற்றிய மறுஉருவாக்க பார்வைகளுக்குக் களமாக அமைகின்றன.

கோதமமுனி வேடந்தாங்கி அகலிகையைத் துய்த்து பூனையாக மாறிஓடிய இந்திரனுக்கு ஆயிரம் மாதர்க்கு உள்ள அறிகுறி உண்டாகுமாறு கோதமன் இட்ட சாபமும், அகலிகைக்கு விலைமகள் என்ற ஏச்சுடன் கல்லாக மாறிப் போ என்று இட்ட சாபமும், பாவத்திலிருந்து மீட்சி பெற்ற அகலிகையின் செயலும் சிறுகதைகளில் மறுஉருவாக்கம் செய்யப்பட்டுள்ளன.

"எல்லையில் நாணம் எய்தி யாவர்க்கும் நகைவந் தெய்தப்
புல்லிய பழியினோடும் புரந்தரன் போய பின்னை
மெல்லிய லாளை நோக்கி விலைமகள் அனைய நீயும்
கல்லிய லாதி யென்றான் கருங்கலாய் மருங்கு வீழ்வான்"

(அகலிகைப்படலம், பாடல்- 22)

என்று வரும் கம்பராமாயணப்பாடலே டி.கே. சீனிவாசன் 'பாவமும் சாபமும்' என்னும் சிறுகதைக்குத் தூண்டுகோலாய் அமைந்துள்ளது. இச்சிறுகதையில் அகல்யா என்றால் உழப்படாதவள் என்று பொருள் அர்த்தம் கூறி அவளை விலைமகளாக மாற்றியதற்கு யார் காரணம்? என்னும் கேள்வியினை எழுப்புகின்றார். சிறுகதை ஆசிரியர்க்கு அகலிகையே கதை சொல்வது போன்று இக்கதை படைக்கப்பட்டுள்ளது.

விலைமகளாகத் தான் மாறியதற்குக் கோதமமுனிவர் தனக்குரிய பாலியல் இன்பத்தை தந்திடாத நிகழ்வே என்று குற்றஞ்சாட்டுகின்றாள். இதன்காரணமாகவே பாலியல்நோய்க்கு ஆளானதாகவும் கூறுகின்றாள். விலைமகளான தன்உடலை அனுபவிக்கவந்த இந்திரனை விரட்டி விடுகின்றாள். அப்போது இந்திரன் தந்திரமாக கோதமமுனி வடிவத்தில் வர கட்டிய கணவனின் பேச்சை மீறக்கூடாத நிலையில் அகலிகை அவனுடன் இன்பம் துய்த்திடுகின்றாள். "பாவத்துக்கு பரிகாரம் சாபம் ஆகாது. பாவம் கொடுமையின் விளைவு. சாபம் கொந்தளிப்பிலிருந்து பிறப்பது. கட்டுப்படுத்தி அடக்கவேண்டிய கொடுமைக்குத் தன்னாலே அடங்கிப் போகும் கொந்தளிப்பு சாந்தியாகாது "கண்ணாகவுமில்லை; மண்ணாகவுமில்லை; உடம்பெல்லாம் புண்ணாகத்தான் ஆனது" என்றுரைக்கின்றாள்.

இறுதியில், இந்திரனும், அகலிகையும் பாலியல் நோய்க்கு உள்ளாவதாகக் கதையின் முடிவு அமைகின்றது. எஸ். செந்தில்குமார் படைத்த 'இந்திரயோனி' என்னும் சிறுகதைக்கு அடிப்படையாக இருப்பது இந்திரன் உடம்பெல்லாம் ஆயிரம் பெண்குறிகள் பெறுமாறு கோதமனின் சாபம் தாங்கி இருக்கும் கம்பராமாயணப் பாடலாகும் (அகலிகைப் படலம் - 21)இப்பாடலில் இந்திரன் உடம்பெல்லாம் ஆயிரம் பெண்குறிகள் சாபமாக பெற்றமை சுட்டப்பெறுகின்றது.

இந்திரயோனி சிறுகதை தேவப்பன் என்பவனை மையமிட்டு படைக்கப்பட்டுள்ளது. சுந்தரி என்னும் பெண்ணை காதலிக்கும் தேவப்பன் அவளுடன் நடைபெற்ற மனத்தாங்கலால் பாண்டியராஜன் கட்டிய கல்மண்டபத்திற்குத் தனியாக வருகின்றான். தேவப்பன் அங்கு உடம்பு முழுவதும் புண்கள் தாங்கிய ஈக்கள் பொய்த்திடும் துறவி ஒருவனைப் பார்த்துத் திகைக்கின்றான். அந்த புண்கள்மேல் பெண்களின் யோனி வரையப்பட்டிருப்பதை பார்த்து மேலும் அதிர்ச்சிக்கு ஆளாகின்றான். மயக்கத்தில் இருந்து எழுந்த

துறவிக்கும், தேவப்பனுக்கும் இடையே உரையாடல் நடக்கின்றது. தேவப்பன் மனத்தில் எப்போதும் பெண் உறுப்புச் சிந்தனையே ஓடிக்கொண்டிருப்பதை அத்துறவி கூழாங்கல்மூலம் காட்ட தேவப்பன் வியப்படைகின்றாள். தேவப்பனை அத்துறவி யாரும் அறியாத சிற்பமண்டபங்களை நோக்கி அழைத்துச்சென்று தன் உடம்பில் இருக்கும் யோனியின், புண்களின் காரணத்தைச் சொல்கின்றார். இந்திரன்தான் பெற்ற சாபத்தால் உடலில் இருக்கும் யோனிகளை வைப்பதற்கு இடம் தெரியாமல் இவ்விடத்தில் வைத்துவிட்டுச் சென்றதாகவும், துறவியின் மூதாதையர் அதற்கு உதவியதால் தங்களுடைய பரம்பரை வம்சவழியாக இந்தப் புண்களும், யோனிகளும் தங்கள் உடலில் தொடர்ந்து வருவதாகக் கூறுகின்றார்.

"ஆம், இவை இந்திரயோனிகள்தாம். இங்கிருக்கும் ஒவ்வொரு யோனிக்கும் அர்த்தங்களும், நிராசைகளும், கோபங்களும், வெறுப்புகளும், தவிப்புகளும், ஏமாற்றங்களும் இருக்கின்றன என்பதை நீ தெரிந்துகொள்ள வேண்டும்" என்று கூறிவிட்டுத் தீயின் முன் நிற்கின்றார். அவர் உடம்பிலிருந்த புண்கள் மாயமாக வெளியேறுகின்றன. வாரத்தின் முதல்நாள் இங்கு வந்து பழைய உடலுடன் இருப்பதாகவும், அடுத்தநாள் நகருக்குள் சென்று பிச்சைக்காரனாக புண் சார்ந்த உடலுடன் மாறிவிடுவதாகவும் தெரிவிக்கின்றார். இச்சூழலில் சுந்தரியிடனிருந்து குறுஞ்செய்தி வர அவ்விடத்தைவிட்டு தேவப்பன் கிளம்புகின்றான். அவனது உள்ளங்கையின் மேற்புறம் புடவிற்குள் பார்த்த யோனி ஒட்டிக்கொண்டிருப்பதாகக் கதை முடிகின்றது.

இச்சிறுகதையில் இந்திரன் உடம்பெல்லாம் யோனியாகுமாறு பெற்ற சாபம் மறுஉருவாக்கம் செய்யப்பட்டு உள்ளது. தன் கண்களுக்கு மட்டுமே தெரியும்; யோனிகளை இந்திரன் கல்மண்டபத்திற்குள் இறக்கி வைத்துவிட்டு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்திரனுக்கு உடம்பிலிருந்த யோனிகளை இறக்கிவைப்பதற்கு துறவியின் மூதாதை உதவிய காரணத்தாற் வம்சவழியாக உடம்பில் புண்களைப் பெறும் சாபம் தங்களுக்கு அமைந்துவிட்டதாகத் துறவியின் மூலம் சிறுகதையில் சொல்லப்படுகின்றது. வாரத்தின் முதல்நாள் கல்மண்டபத்தில் நிற்கும்போது புண்கள் மறைவதும், வெளியேறிய பிறகு புண்கள் தோன்றுவதும் இச்சிறுகதையில் சித்திரிக்கப்பட்டு பாவத்தின் தொடர்ச்சி அறுபடாமல் இயங்கி வருவதாகக் காட்டப்படுகின்றது.

தேவிகா குலசேகரனின் 'இவளும் ஒரு அகலிகைதான்' என்னும் சிறுகதையில் யக்ஞும், தேன்மொழி இளம்பருவத்தில் இருந்து ஒன்றாக வளர்ந்து காதல்வயப்பட்டுத் திரிகின்றனர். இதில் யக்ஞும் பிராமண குலத்தைச் சேர்ந்தவன். தேன்மொழி முதலியார் குலத்தைச் சேர்ந்தவள். யக்ஞும் - தேன்மொழி இருவரும் தமக்குள் இருக்கும் காதலை வெளிப்படுத்த முடியாத காரணத்தால் தேன்மொழி பிறிதொருவனுக்குக் கல்யாணம் செய்து வைக்கப்படுகின்றாள். காதல் தோல்வியடைந்த யக்ஞும் துறவியாக மாற எத்தனிக்க பெற்றோர்கள் வற்புறுத்தலால் அதிலிருந்து மீண்டு அமெரிக்காவிற்குச் செல்கின்றான். வேறு எந்தப் பெண்ணையும் திருமணம் செய்வதைத் தவிர்க்கின்றான்.

தேன்மொழி யக்ஞத்தின் அம்மாவிற்குப் புற்றுநோய் என்பதை அறிந்தபோது பதறிக்கொண்டுவந்து பணிவிடை செய்கின்றாள். தாம் யக்ஞத்தைக் காதலித்து திருமணம் செய்யாத ஒரே காரணத்தால் அவள் அம்மாவிற்கு இதுபோன்ற தீராத நோய் உண்டாகி இருப்பதாக மனத்திற்குள் வருந்துகின்றாள். யக்ஞத்தின்மீது கொண்ட காதலையும் மறக்கமுடியாமல் மனத்திற்குள் புதைக்கின்றாள். இவளைப்பற்றி யக்ஞத்தின் அம்மா பின்வருமாறு கூறுகின்றாள். "தேன்மொழியும் யக்ஞாவும் ஒண்ணா வளர்ந்தவா. ஏதோ ஒரு கட்டத்துல ஒருத்தரை ஒருத்தர் விரும்பியிருக்கா. அவாத்துல ஒரு மாப்பிள்ளை பாத்தா. அப்போ, ரெண்டு பேருக்குமே தம் மனசுல இருக்குற ஆசையை வெளியே சொல்ல தைரியமில்லாம, அவ கல்யாணம் பண்ணிண்டு போய்ட்டா, …யக்ஞும் போன வருஷம்தான் அமெரிக்கா போனான். அதுவும் இந்த ஜென்மத்துல நேக்கு கல்யாணம் இல்லேம்மா. என்னை ஒருத்தரும் கம்பல் பண்ண வேண்டாம்னுட்டு சொல்லிண்டே போனான். அவன் போறவரைக்கும் இந்தப்பொன்னு இங்க வரவே இல்லையே… இப்ப நான் செத்துப்போயிடுவேனொன்னு பயந்துண்டு இவ வந்துருக்கா, பண்ணாத தப்புக்கு பாவம், பாவமன்னிப்பு கேக்கறா. இவளும் ஒரு அகலிகை மாதிரிதான் ஜானு!"

என்று தேன்மொழியை இன்னொரு அகலிகையாகக் காண்கின்றாள். இதிகாச அகலிகை காதலித்த இந்திரனை பெற்றோர் சொற்படி மறுத்துவிட்டு கோதமனை கல்யாணம் செய்ததுபோல், தேன்மொழி தான் காதலித்த யக்ஞத்தை, பெற்றோர் சொற்படி மறந்துவிட்டு வேறொருவனை திருமணம் செய்து கொள்கின்றாள்.

இதிகாச அகலிகை திருமணத்திற்குப்பிறகு இந்திரனோடு சேர்ந்து நடத்திய உடல் சார்ந்த தவவினை தேன்மொழி நிகழ்த்தவில்லை. காதலித்த குற்றத்திற்காக பாவமன்னிப்பு கோரி நிற்பவளாகவும், மனத்திற்குள் மட்டும் தனது காதலைப் பூட்டி வைத்திடும் இன்னொரு புதிய அகலிகையாகவும் இருக்கின்றாள். இந்திரன் சாபம் பெற்று மறைந்து வாழ்ந்தது போன்று தேன்மொழி மீதான காதல் நிறைவேறாத காரணத்தால் யக்ஞும் அமெரிக்க சென்று மறைந்து வாழ்வதாக சிறுகதையில் மாற்றம் செய்யப்படுகின்றது.

ஊர்மிளையை மையமிட்ட சிறுகதைகள்

ஊர்மிளை இலட்சுமணனின் மனைவி. அவளுடைய எண்ணங்களும், ஆசைகளும் இதிகாசத்தில் திரைமறைவாகவே காட்டப்படுகின்றன. அத்தகைய திரைமறைவுக் காட்சிகளை தி. ஜானகிராமனின் ஊர்மிளையும், எம்.ஏ. சுசீலாவின் ஊர்மிளையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதாக அமைகின்றன.

தி.ஜா. காட்டும் ஊர்மிளையில் ஊர்மிளையும், சேடிப்பெண்ணும் உரையாடும் வகையில் கதை நகர்த்தப்படுகின்றது. கைகேசியின் வரத்தால் இராமன் அயோத்தியின் அரசனாக மாற முடியாமல் வனவாசம் மேற்கொள்ள கிளம்புகின்றான். அரண்மனையும், அயோத்தி மாநகரும் சோகத்தால் முடங்கிப் போய்க் கிடக்கின்றன. தனது அந்தப்புர அறைநோக்கி மரவுரியுடன் குதூகலமாக ஓடி வருகின்றாள் ஊர்மிளை. சேடிப்பெண் மரவுரி எதற்கு என்று கேட்க, தானும் கணவன் இலக்குவனுடன் சேர்ந்து வனவாசம் செல்லப்போவதாகவும், என்னை அவர் அழைத்துச்செல்ல வரும்போது தயாராக இருப்பதற்காகத்தான் மரவுரியைக் கொண்டுவந்ததாகவும் கூறுகின்றாள். மரவுரியை அணிந்துகொண்டு காட்டிற்குக் கிளம்பத் தயாராக இருக்கும்போது சேடிப்பெண் நீங்கள் மரவுரி தரித்து கல்லும், முள்ளும்; நிரம்பிய காட்டில் கிடந்து ஏன் வேதனைப்படல் வேண்டும் என்கின்றாள். அதற்கு ஊர்மிளை காட்டு வாழ்வே சுதந்திர வாழ்வு. அரண்மனை வாழ்வு சிறைபட்ட வாழ்வு. என் பயணம் சுதந்திர வாழ்வை நோக்கி அமையட்டும் என்கின்றாள். கருச்சிட்டோடும், சண்பக பட்சியுடனும், செடிகளுடனும், கொடிகளுடனும் விளையாடிக் களிக்கும் இன்பவாழ்வே வனவாசம் என்கின்றாள். மரவுரி தரித்து அணிகலன்கள் அணியக்கூடாதென்பதால் சேடிப்பெண்களுக்கு

நகைகளைக் கொடுத்துவிடுகின்றாள். வனவாசம் செல்ல முடிவெடுத்த சீதை வலியுறுத்தலால் பட்டுப் புடவையுடன் கிளம்புகின்றாள். இராமனும், இலக்குவனும், சீதையும் வனவாசம் செல்லும் காட்சியினை பொறுக்கமுடியாமல் மக்களும், மன்னனும் அரற்றுகின்றனர். இச்செய்தியை சேடிப்பெண் ஒருத்தி ஊர்மிளையிடம் தெரிவிக்கின்றாள். இலக்குவன் தன்னிடம் விடைபெறாமலும், மரவுரி அணிந்து கிளம்பும் நிலையில் இருக்கும் தன்னை அழைத்துச் செல்லாமல் கிளம்பியது அவளுக்கு அதிர்ச்சியை அளிக்கின்றது.

"ஊர்மிளை : (பதட்டமாக ஓடி வருகிறாள்) போய்விட்டார்களா, யாரு?
தோழி: எல்லோரும் - ராமர், சீதை, லெட்சுமணர்
ஊர்மிளை: எல்லோருமா? அவர் கூடவா?

தோழி : எல்லோரும்
ஊர்மிளை: போய்விட்டாரா? அவருமா? நானில்லாமலா? நான்- நான்?"

என்று மயக்கமுற்று வீழ்வதுடன் சிறுகதை முடிகின்றது. இச்சிறுகதையில் அரண்மனை பெண்களுக்கு இருக்கும் கட்டுப்பாடுகள் ஊர்மிளை மூலம் பேசப்படுகின்றன. கணவன் - மனைவி இடையே புரிதல்தன்மை இன்மையை இலக்குவன் - ஊர்மிளை வழியாகத் திஜா. காட்டுகின்றார். பெண்கள் கட்டிய கணவர்களுக்காகக் துயரத்தினைத் தாங்கிடும் தன்மையுடன் இருக்க ஆண்கள் அவ்வாறு இருப்பதில்லை என்பதை ஊர்மிளை மூலம் சொல்கின்றார். வனவாசம் என்னும் இன்பவாய்ப்பு ஊர்மிளைக்குக் கிடைக்காமற்போவதை திஜா. புதுமைப்பார்வையுடன் தெரிவிக்கின்றார்.

எம்.ஏ. சுசீலா படைத்து ஊர்மிளை சிறுகதை தி.ஜா.வின் படைப்பிலிருந்து வேறுபடுகின்றது. இலக்குவனைப் பிரிந்த ஊர்மிளைக்கு சீதை ஆறுதல் கூறுவதுடன் கதை தொடங்குகின்றது. இராமன் நாட்டில் ஒருவன் சீதையின் கர்ப்பத்தினை சந்தேகப்பட அவளைக் காட்டில் விட்டுவிட்டு வருமாறு இலக்குவனைப் பணிக்கின்றான். இராமன் முடிவை, துயரத்துடன் ஏற்றுக் கொண்டவன் வனவாசம் சென்ற பாதையை பார்க்க ஆசைப்பட்ட சீதையினைத் தேரில் ஏற்றிக்கொண்டு கிளம்புகின்றான். இலக்குவனிடம் இராமன் சொன்ன செய்தி சீதைக்குத் தெரியாது. ஆனால். ஊர்மிளையிடம் இலக்குவன் சொல்லிவிட ஊர்மிளையும் சீதைக்கு துணையாக தேரில் வந்து அமர்கின்றாள். தேர் கிளம்புகின்றது. சீதை ஊர்மிளைக்கு பின்வருமாறு ஆறுதல் மொழிகளைக் கூறுகின்றாள்.

"பதினான்கு ஆண்டுகள் ஐயாயிரத்துக்கும் மேலான நீண்ட பகல்களும் இரவுகளும்...! எப்படித்தான் அந்தப் பிரிவைத் தாங்கிக்கொண்டாய் ஊர்மிளை...? அசோகவனத்து நாட்களே என்னை ஆட்டிவைத்துவிட்டன...! ஆனால் அத்தனை நாளும் இவன் தூக்கத்தையும் சேர்த்து நீ தூங்கியதாகத்தான் ஊரார் பேசிக்கொள்கிறார்களாம்...! பேசுபவர்களுக்கு என்ன? தங்களுக்கென்று வந்தால்தானே எந்த நோவின் வலியும் தெரியும்" என்று ஊர்மிளை இலக்குவன் பிரிவைத் தாங்கிக்கொண்ட திண்மையினைப் பாராட்டியும், ஊரார் கூறிய மொழிகளை இழித்துரைத்தும் உரைக்கின்றாள்.

ஊர்மிளை, இலக்குவனுடன் தனியாக இருந்தபொழுது சீதையினை ஊரார் பேச்சினைக் கேட்டு காட்டிற்கு அனுப்பத் துணிந்திடும் இராமனின் செயலை விமர்சனம் செய்கின்றாள். அண்ணன் சொல்லைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றும் இலக்குவன் செயலையும் கண்டிக்கின்றாள்.

இலக்குவன் சீதையினை வான்மீகி ஆசிரமத்தில் இறக்கிவிட்டு இனிமேல் இங்கேதான் இருக்க வேண்டுமென்று கூறிட சீதை துடிக்கின்றாள். பின்பு அம்முடிவை ஏற்றுக்கொண்டு உறுதியுடன் ஆசிரமத்தை நோக்கி பயணிக்கின்றாள். உடன் ஊர்மிளையும் செல்கின்றாள். இலக்குவன் ஊர்மிளையை அரண்மனைக்கு அழைத்துச் செல்வதற்காக திரும்பி பார்த்திட அவனுக்கு ஊர்மிளை பின்வருமாறு பதில் உரைக்கின்றாள்.

"நீங்கள் எனக்காகக் காத்திருக்க வேண்டாம். நான் சீதைக்குத் துணையாக இங்கே தங்கிவிட முடிவு செய்திருக்கிறேன் என்று சொல்விட்டு அவனது எந்த மறுமொழிக்கும் காத்துக் கொண்டிருக்காமல், சீதையின் கரத்தை இறுகப் பற்றியபடி வால்மீகியின் ஆசிரமத்துக்குள் நுழைகிறாள் ஊர்மிளை"

என்று சீதைக்கு ஆதரவாக துணையாக அரண்மனை வாழ்வைத் துறந்து ஆசிரம வாழ்விற்குள் ஊர்மிளை நுழைகின்றாள்.

எம்.ஏ. சுசீலாவின் 'ஊர்மிளை' இராமனின் தவறான முடிவுகளையும், இலக்குவனின் செயலையும் விமர்சனம் செய்பவளாக இருக்கின்றாள். அநீதி இழைக்கப்பட்ட சீதை போன்ற பெண்களுக்கு பெண்களே துணையாகவும், ஆதரவாகவும் இருக்கமுடியுமென்பதை ஊர்மிளை

இலக்குவனையும், அரண்மனை வாழ்வையும் துறந்திடும் செயல்மூலம் இச்சிறுகதையில் மறுஉருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

இராமனை மையமிட்ட சிறுகதை

'நடையில் நின்றுயர் நாயகன்' என்ற கம்பனின் தொடரைக்கொண்டே இராமனின் நடை அவனது வாழ்க்கையில் பல்வேறுவிதமாக இருப்பதைப் புதுமைக்கண்ணோட்டத்தோடு சித்திரிக்கின்றார் அருணன். இராமன் சரயு நதியினை நோக்கி வெறுங்கையுடன் விரைகின்றான். அப்போது அவனது கால்கள் தெய்விகம் பொருந்தியவையாக அமைகின்றன. ஒவ்வொரு சாம்ராஜ்யச் சக்கரவர்த்திகளுக்கு நேருகின்ற இன்னல்களே அவனுக்கும் வாய்த்திடுகின்றன. முதல்நாள் மகுடவிழா. அடுத்தநாள் வனவாச விழா. இரண்டையும் சமமாக பாவித்து ஊழ்விட்ட வழி என்று தண்டகாரண்யத்தில் இலக்குவன், சீதை சூழ்ந்திட நடக்கின்றான். அயோத்தி மாநகரின் இளவரசன் காட்டில் யாரும் அறியாதவாறு கள்வன் போன்று நடப்பதற்கே பிறந்தவன் போல நடக்கின்றான். இளையதம்பி பரதன், தந்தையின் இறப்புச் செய்தியினை கொண்டு வந்து அவனது காலணிகளை வாங்கிச் சென்றிட, வெறும் பாதங்களில் கல்லிலும், முள்ளிலும் நடக்க ஆரம்பிக்கின்றான்.

வனவாசத்தில் அமைதியாகச் சென்று கொண்டிருந்த வாழ்வினை மாரிச பொன்மான் குலைத்திடுகின்றது. அந்த மானைச் சீதைக்காகப் பிடிக்க ஓடிப்போய் கிடைக்காமற் போய்விடுகின்றது. அப்போது தனது உடலின் ஒரு பாகமான சீதை தூக்கிச் செல்லப்படுகின்றாள். சீதையினைக் காணாமல் இராமனது நடை தளர்ந்தநடையாக மாறுகின்றது. அச்சூழலில் அனுமனது துணையும் இலக்குவனது ஆறுதலும் இராமனுக்கு தைரியமான நடையைத் தருகின்றது. சீதையைத் தேடி கானகம், கடுவெளி, மணற்பரப்பு, மலைகள், சிகரங்கள், பள்ளத்தாக்குகள், ஆற்றங்கரைகள் அனைத்தையும் நடந்தே கடக்கின்றனர். இலங்கையை அடைய சேதுப்பாலம் அமைத்தே நடந்தே செல்கின்றனர். இந்தத் தேடுதலின் வெறுப்பின் துளியே சீதை மீது விழுந்து அவளைத் தீக்குளிக்கச் செய்யுமாறு இராமனைத் தூண்டுகின்றது. இராமன் விதிப்படி அடித்துச் செல்லப்படும் தக்கையாகவே இருப்பதை ஆசிரியர் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

"அவதார மகிமை என்றார்கள்... இவனுக்கு அதிலெல்லாம் நம்பிக்கை இல்லை.... அந்தப் பத்துத்தலை இராவணன் வீழ்ந்தபோது இவன்

தெய்வத்தின் தெய்வமாகக் கொண்டாடப்பட்டான். இந்தப்பூவுலகையே காக்க வந்த தேவன் என்றார்கள். இவன் அந்தப் புகழ் மாநாட்டுக் கூட்டத்தில் நிறையநேரம் நிற்கவில்லை. அதை உடைப்பதற்காகத் தன்னுள்ளே கொட்டி வைத்திருந்த நெருப்புக்குழியை சீதைக்காக எரியவிட்டான். மானுக்கு விரும்பிய பாவத்தில் நெருப்புக்குக் கொஞ்சம் கடன் தந்தாள். அவன் திரும்பி நடக்க ஆரம்பித்தான். இவன் நடை அவளுக்குத் தெரியாதா என்ன? எல்லாவற்றையும் புரிந்து கொண்ட மாதிரி புதைந்துபோய் மீளமுடியாது அவள் அவனோடு சேர்ந்து திரும்பி நடந்து கொண்டிருந்தாள். நடை திரும்பியிருக்கலாம்... வாழ்வு திரும்பி விடுமா என்ன?"

"நடந்ததுபோதும் என்றாலும் இன்னும் நடக்க வேண்டியது வெகுதூரம் என்று பட்டாபிசேகத்தில் புரிந்து கொண்டான். இவன் நடத்துவான் என்றுதானே அந்தச் செங்கோலை இவன் கையில் நம்பி ஒப்படைத்தார்கள்? என்ன ராஜ்யமோ... அவர்கள் ராமராஜ்யம் என்றார்கள். இவன் அங்கும் நடந்து கொண்டிருந்தான்... இரவு பகலுமாய். நாட்டையும் மக்களையும் காக்கவேண்டிய அவன் நடந்த நடை இருக்கிறதே. பொன்மானை எல்லாம் துரத்தியது கொஞ்சம்."

"அந்த நடையிலும் எவனோ ஒருவன் மண்ணள்ளிப் போட்டான்... இவன் நடையையும் அவள் நடையையும் ஒருவன் வேடிக்கையாய்ப் பேச வந்தது வினை. நடை தவறாலாமோ என்று அவளை மறுபடியும் காட்டிற்கே நடக்க வைத்தான். இவன் நடக்க வேண்டும். அதனாலேதான்"

என்று நடந்து நடந்தே காலம் கழித்த இராமன் சீதையினையும் நடக்க வைத்த பின்பு தனிமையின் உறுத்தல் தாங்காமல் தன்னையே உதறிக் கொண்டு சரயுநதியில் மூழ்கிக் கரைத்துக் கொண்டிட இறுதிநடை நடக்கின்றான். விதியின், காலத்தின் கரங்களில் சிக்கித் தனக்கென்று வாழாமற் பிறர்நலம் பேணிய இராமன் காயங்களின் வடுக்களைக் கரைந்து தன்னை மூழ்கடித்துக்கொள்ள சரயு நோக்கிச் செல்வதை அருணன் பின்வருமாறு காட்டுகின்றார்.

"காலம்... அந்தக் காலம் அவனைக் கொஞ்சமா புரட்டியது? அதனோடு சேர்ந்துகொண்டு இவனும் வாஞ்சையோடு கட்டிப்புரண்டு அதன் புழுதியையெல்லாம் தன்மீது வாரிப் பூசியிருக்கின்றான். அந்தப்

புரட்டலில் பெற்ற காயங்கள் கொஞ்சமா? என்ன அதனால்தானோ என்னவோ அகத்திலும் புறத்திலும் பெற்ற அந்தக் காய வடுக்களைக் கொண்டுபோய்ப் புதைத்து விடுவதற்காக நடப்பவன் போலவே வேகவேகமாக நடக்கிறான். ம்........ இதுவும் ஒரு காலம்."

"நடந்ததெல்லாம் நன்மைக்கே என்று நடந்து கொண்டிருக்கிறான். அவருக்கு பல்லக்குப் பரிவாரங்களோடும் கொட்டு முழக்கோடும் பவனி வரவேண்டிய அந்தச் சக்கரவர்த்தி வெறுங்காலோடு தனியே நடந்தே போய்க்கொண்டிருக்கிறான்."

"சரயு விரைந்து கொண்டிருக்கிறது. எப்படியும் இன்றைக்கு இரவுக்குள் அவன் அந்த நதியோடு கலந்து விடுவான். அவனை நடையில் நின்றுயர் நாயகன் என்று யாரேனும் நாளை சொல்வார்"

என்று நடையில் நின்றுயர் நாயகனான இராமன் நடந்து நடந்தே தன் வாழ்நாளைக் களித்து விட்டதால் இப்பெயர் பொருத்தம் அவனுக்குச் சரியாகவே அமைவதாக இச்சிறுகதை தெரிவிக்கின்றது.

இராமாயண மீள் உருவாக்கப்படைப்புக்கள் வழியே படைப்பாளிகள் புதிய சிந்தனைகளை முன் வைத்திருக்கின்றனர். காப்பியத்தில் கம்பர் கூறாமற் விட்டுச் சென்ற பகுதிகளும், பாத்திரங்களின் அவல வாழ்வும் பெரும்பாலும் நவீன இலக்கியப் படைப்புக்களின் வழியே மறு உருவாக்கம் செய்யப்படுகின்றன. இவ்வகையில் மேற்சுட்டிய ஆறு சிறுகதைகளும் புதிய பார்வைகளை நம்முன் வைத்திடுகின்றன. தமிழ்ச் சிறுகதைகளில் மேலும் தேடினால் புதிய கோணங்களைத் தரிசனம் பெறமுடியும்.

பண்பாட்டு ஊடாட்ட நோக்கில் கம்பனின் அகலிகைப் படலமும் புதுமைப்பித்தனின் சாபவிமோசனமும்

திருமிகு. ஆ.தர்மராஜன்
முனைவர் பட்ட ஆய்வாளர், சுப்பிரமணியபாரதியார் தமிழியற்புலம்,
புதுவைப்பல்கலைக்கழகம், புதுச்சேரி.

மனிதர்களின் வாழ்வோடு ஒட்டிப் பிறந்தவொன்று தொன்மம். இத்தொன்மம் நாட்டுப்புறங்களிலும் இலக்கியங்களிலும் பல்வேறு பரிமாணங்களைப் பெற்று மிளிர்ந்து வருகின்றது. அந்த வகையில் இராமாயணம் மிகப்பழமையானது. வடமொழியில் யாத்த வான்மீகியின் படைப்பிற்கும் கம்பன் யாத்த இராமாயணத்திற்கும் மிகுந்த வேறுபாடுகள் காணப்படுகின்றன.

தமிழகத்தில் கம்பனுக்கு முன்னமே அகலிகை குறித்த கதைகள் நாட்டுப்புற மக்களின் வழக்கிலிருந்துள்ளன. 20ஆம் நூற்றாண்டின் மாப்பசானாக வலம் வந்தவர் புதுமைப்பித்தன். மணிக்கொடி காலத்தின் முன்னோடியாக உலா வந்த இவர் பற்றிச் "சமுதாயத்தோடு உறவு கொள்வதற்கும் சமுதாயத்தோடு மோதிப் போராடுவதற்கும் இருவகையிலும் அவருக்குச் சிறுகதை என்ற கருவியே பயன்பட்டது" என மு.வரதராசனார் கூறுகிறார் (தமிழிலக்கிய வரலாறு, ப. 298). அதன் அடிப்படையில், மக்களிடையே விழிப்புணர்ச்சியினை ஏற்படுத்தும் விதத்தில் புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் சிறுகதை படைக்கப்பெற்றிருப்பதைக் காணலாம்.

இக்கட்டுரையில், கம்பனின் அகலிகைப் படலமும் புதுமைப்பித்தனின் சாபவிமோசனமும் பண்பாட்டு ஊடாட்ட நோக்கில் காணப்பெற வேண்டியவைகளாகின்றன.

சாபமும் விமோசனமும்

கௌதம முனிவரின் பத்தினி அகலிகையைத் தேவர்குல அதிபதியான இந்திரன் எவ்வாறேனும் அடையச் சூழ்ச்சி செய்கிறான். அதற்காகக் காத்திருந்தவன் ஓர் நாள் சேவல் கூவுவது போல் தந்திரம் செய்கிறான். முற்றும் உணர்ந்த முனிவனும் நீராடும் பொருட்டு நதி நோக்கிச் செல்கிறார். 'ஆனைக்கும் அடி சறுக்கும்' என்னும் முதுமொழி முனிவரையும் சறுக்க வைக்கிறது. கௌதம முனிவன் உருவத்தில் வந்த இந்திரன் அகலிகையைத் தழுவுகிறான். கூடலின்பொழுது புதுமண மதுவின் தேறலின் நாற்றத்தினை உணருகிறாள் அகலிகை.

"..........................உணர்ந்தபின்
தக்கது அன்று என்ன ஓராள் தாழ்ந்தனள் இருப்ப"

தன்னைக் கூடிக்கொண்டிருப்பவன் தன் கணவனன்று வந்தவன் இந்திரன் என்பதை அறிகிறாள். ஆனால், பெண்மையின் உணர்ச்சியின் உந்துதலால் கட்டுண்டு கிடக்கிறாள். வாசலில் கௌதமர் வருவதை உணர்ந்த இந்திரன்,

"புரந்தரன் நடுங்கி ஆங்கு ஓர் பூசையாய்ப் போகலுற்றான்"

பூனை உருவங்கொண்டு சென்றவனைக் கண்டதும் முனிவர் தன் ஞானக்கண்களால் நிகழ்ந்தவற்றை அறிகிறார். என் உருவம் கொண்டு செய்யக் கூடாத இழிசெயலைச் செய்தமையால்,

"ஆயிரம் மாதர்க்கு உள்ள அறிகுறி உனக்கு உண்டாக"

என இந்திரனுக்குச் சாபம் கொடுக்கிறார். இந்திரனால் வஞ்சிக்கப்பட்டு நெஞ்சில் பிழையிலாளை முனிவன்,

"விலைமகள் அனைய நீயும் கல் இயல் ஆதி"

எனச் சபிக்கிறார். தன் நெஞ்சறிந்து தவறிழைக்கவில்லை என அகலிகை வேண்டவே,

"........................தசரத ராமன் என்பான்
கழல் - துகள் கதுவ இந்தக்கல் உருத் தவிர்தி"

என முனிவன் விமோசனம் அளிக்கின்றார்.

புதுமைப்பித்தனின் சிறுகதையில் அகலிகை சாப விமோசனத்திற்குப்பின் சமுதாயத்தில் நிகழும் நடைமுறை வாழ்க்கையோடு ஒட்டியதாகக் கதை பின்னப்பட்டுள்ளது. அகலிகையின் சாபம் விமோசனத்திற்கான காரணத்தை விசுவாமித்திரனின் கூற்றின் வழி இராமன் அறிந்து கொள்கிறான்.

"அன்று இந்திரனுடைய மாய வேஷத்துக்கு ஏமாறிய பேதை, கணவன்மீதிருந்த அளவுக்குள் அடங்காத பாசத்தின் விளைவாக உடம்பை மாய வேசத்தால் ஏமாறி மாசுபடுத்திக்கொண்டாள் கோதமனின் மனைவி"(புதுமைப்பித்தன் சிறுகதைகள், ப.8) எனப் புதுமைப்பித்தன் கூறுகிறார்.

பண்பாட்டு ஊடாட்டங்கள்

ஒவ்வொரு படைப்பாளியும் தத்தமது காலநிலைக்கேற்பச்

சமுதாயச்சூழலைக்கருதித் தம்படைப்புகளைப் படைப்பது பண்டைக்காலம் முதல் வழக்கிலிருக்கும் மரபு. தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் கம்பனையும் புதுமைப்பித்தனையும் அணுகுவோமானால் அவர்கள் தங்களின் காலச்சூழலுக்கேற்பத் தம் படைப்புத்திறனை வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. பண்பாட்டினைப் பாமர மக்களிடம் புகுத்தும் விதம் படைப்பாளிகளுக்கு மட்டுமே கைவந்த கலை. அந்தவகையில் கம்பனையும் புதுமைப்பித்தனையும் பண்பாட்டிற்கு வித்திட்ட பெருமைக்குரியவர்கள் என்று கூறினாலும் மிகையாகாது. படைப்பாளர்களைப் பற்றிக் கூற வரும் பாவாணர்,

"நிலத்திற்கும் உள்ளத்திற்கும் இடையே நெருங்கிய தொடர்புண்மையை அறிந்த தமிழர்கள் இரண்டையும் 'புலன்' என்ற சொல்லாற் குறித்தனர். 'நிலபுலன்' என்று இணைத்து வழங்குதலுண்டு. அவ்வியைபுநோக்கியே புலவர் பெருமக்கள் தம்மைப் 'புலன் உழுதுண்மார்' என்று கூறிக்கொண்டனர். புலவர்கள் மக்கள் உள்ளமென்னும் நிலத்தைத் தம் கவிதையேர் கொண்டு உழுது அறிவு விதைகளைத் தூவிப் பண்பாட்டுப் பயிரை வளர்க்கும் உழவராவர். எனவேதான் நாயனாரும் சொல்லேருழவர் பகை வேண்டாவென எச்சரித்துள்ளார். 'சீர்படுதல்' என்னும் பொருள் கொண்ட 'பண்ணுதல்' என்னும் சொல் ஆளப்படும் பல இடங்களையும் அறிஞர் பாவாணர் சுட்டிக் காட்டுகின்றார்" (அ.தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப. 5) எனும் கருத்தின்வழி வளர்ந்து வரும் பண்பாட்டிற்கு வித்தாக அமைகின்றவர்களே படைப்பாளர்கள் எனும் கருத்தை முன்வைக்கின்றார்.

கம்பன் வாழ்ந்த காலம் கி.பி. ஒன்பது மற்றும் கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டு எனவும் இருவேறு கருத்துகள் காணப்படுகின்றன. புதுமைப்பித்தன் இருபதாம் நூற்றாண்டினைச் சார்ந்தவர் என்பது நாமறிந்ததே. இந்நூற்றாண்டுகளின் காலச்சூழல் தமிழ்ப் பண்பாடுகளின் விழுமியங்களை அடையாளப்படுத்துகிறது. படைக்குநர் அதனை அர்த்தப்படுத்துவதை அகலிகைப்படலம் உணர்த்துகிறது. கம்பன் வாழ்ந்த காலம் தமிழ்ப்பண்பாட்டுச் சூழல் எத்தகைய நிலைப்பாட்டினைப் பெற்றிருந்தது என்பதற்குச் சாமி. சிதம்பரனாரின் பின்வரும் கருத்து மெய்ப்பிக்கிறது.

"கம்பன் காலத்திலும் அவனுக்கு முன்னும் தமிழ் நாட்டிலிருந்த பழக்கம் வேறு. ஒரு பெண்ணைப் பிறன் மனைவியை - மற்றொரு ஆடவன் தொடுவானாயின் அவளுடைய புனிதத் தன்மை

போய்விட்டது என்று தமிழர்கள் நினைத்தனர். ஒரு பெண்ணை அயலான் ஒருவன் கெட்ட எண்ணத்துடன் பார்த்தாலே போதும் அப்பெண்ணின் கற்பு அழிந்துவிட்டது என்ற கொள்கையைத் தமிழர்கள் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்த காலம் கம்பன் காலம்" (சாமி. சிதம்பரனார், கம்பன் கண்ட தமிழகம், ப. 115).

வான்மீகி உள்ளிட்ட பல இராமாயணங்கள் இந்திரன் என்பதை அறிந்தே அகலிகை கூடினாள் என மொழிகிறது. ஆனால், கம்பராமாயணம் கௌதம முனிவன் வடிவில் வந்தது இந்திரன் என்பதை அறியாமல் தன் கணவன் எனக் கருதியே கூடினாள் என்கிறது. உறவின் நெருடல் - 'புதுமண மதுவின் தேறல்' எனக் கம்பன் பதிவு செய்யும் இடம் நோக்கத்தக்கது. இந்நெடி உறவில் நெருடலை ஏற்படுத்துகிறது. தன்னிடம் கூடிக்கொண்டிப்பவன் இந்திரன் என்பதை அறிந்தும் மீள இயலாமை, எனப் பெண்மைக்கே உரித்தான அத்தியாவசியத்தேவையினைப் பதிவுசெய்யும் இடத்தில் கம்பனின் தமிழ்ப் பண்பாட்டு நெறியும் பெண்மைக்கேயுரிய அர்த்தப்பாட்டினைப் புலப்படுத்துவதைக் காண இயலும். இக்கருத்திற்கு வ.வே.சு. ஐயரின் பின்வரும் கூற்று அரண் சேர்க்கக் காணலாம்.

"மனித இதயத்தின் உணர்ச்சிகளையும் பாவங்களையும் இயக்கங்களையும் வர்ணிக்கையில் கம்பன் வால்மீகியைத் தனக்குப் பின்னே வெகுதூரத்தில் நிறுத்திவிடுகிறான்" (மேற்கோள்: அ. அறிவுநம்பி, கம்பரின் அறவியல், ப. 40).

கி.பி. 19,20 ஆம் நூற்றாண்டுகளில் பண்பாட்டில் மறுமலர்ச்சி ஏற்படத் துவங்கியது. சிலம்பின் கண்ணகி, பாரதத்தில் வரும் திரௌபதி, பாரதியின் பாஞ்சாலி, பாவேந்தரின் தமிழச்சி போன்றோர்களின் புரட்சித்தாக்கங்கள் எண்ணிலடங்கா. இவ்வரிசையில் புதுமைப்பித்தனின் (சாபவிமோசனம்)அகலிகையும் சுட்டத்தக்கவளாவாள். காப்பிய நேர்த்தியினை உள்வாங்கிச்சென்றாலும் நடைமுறை வாழ்க்கைச் சிக்கல்களை அனுபவிக்கும்பொருட்டு புதுமைப்பித்தனின் படைப்பு அமைந்துள்ளது. அந்தவகையில் பண்பாடுகள் ஒன்றோடொன்று ஊடாடும் பொருட்டு அதனதன் சாயல் மற்றதில் படிவது இயற்கை.

"பெருமழை பெய்கிறபோதெல்லாம் வெள்ளம் பெருகி அனைத்தையும் கூடவே வாரிச்சுருட்டிச்செல்வது தவிர்க்க முடியாததேயாகும். ஆனால் விரைவில் எல்லாம் அமைதிபெற்று அவையவை அமையவேண்டிய இடத்தில் அமைந்து நிலைத்த

தன்மையுடையன மட்டுமே எஞ்சிநிற்கின்றன. இதுபோன்றே செல்வாக்குமிக்க ஒரு பண்பாடு பின்னடைந்து நிற்கின்ற ஒரு பண்பாட்டினை அடக்கி வெற்றி கொள்ளும்போது நிகழ்கிறது" (அ. தட்சிணாமூர்த்தி, தமிழர் நாகரிகமும் பண்பாடும், ப.618) எனும் அறிஞர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் கூற்று, பண்பாட்டு ஊடாட்டத்திற்குக் களமாக அமைகிறது. ஆணாதிக்கச் சமூகத்தால் வீழ்ச்சியடைந்த பெண்ணிலைவாதத்தினையும் கவனிக்க வேண்டும் காலச்சூழலில் பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றத்தின் விளைவு பெண்மை முன்னிலைப் படுத்தப்படுவதைக் கம்பன், புதுமைப்பித்தன் போன்றோர் அடையாளப்படுத்துகின்றனர்.

புதுமைப்பித்தனின் சாபவிமோசனத்தில் அகலிகை தொடர்பான செய்திகளை விசுவாமித்திரன் வாயிலாக இராமன் அறிகிறான். அகலியை 'விலைமகள்' எனக் கௌதமன் கூறியதும் தன்னிலை அறியாது செய்த பிழை என அகலிகை வருந்துவதையும் கதையோட்டத்தின்வழி காணமுடிகிறது. கௌதமன் கூறிய (விலைமகள் என்ற) ஒரு சொல்லின் பலனை அகலிகை, கங்கை நதியில் நீராடி வரும்பொழுது பிற பெண்களின் கேலி அவள் மனதை வருத்துகிறது.

"தெய்வமே! சாபவிமோசனம் கண்டாலும் பாபவிமோசனம் கிடையாதா?" என வருந்தும் நிலையினை உணரமுடிகிறது. புதுமைப்பித்தனின் பாத்திர வார்ப்புகள் சாதாரண மக்களோடு தமது பாத்திரங்களை உலவச்செய்வதாகவே இருக்கும். சமுதாயத்தில் நிகழும் இன்ப துன்பங்களோடு பாத்திரங்களை உலவச் செய்வதில் அவனுக்கு நிகர் அவனே. புதுமைப்பித்தனின் பாத்திர வார்ப்பிற்கு அணிசெய்யும் வகையில் பேராசிரியர் அறிவுநம்பியின் பின்வரும் கருத்து அமைகிறது.

"கம்பன் கண்ட இராமனின் தனித்தன்மை என்வென்றால் கவிஞன் கதையிலே வரும் பிற பாத்திரங்களும் இராமனை இறைவனென்றே வாழ்த்தினாலும் வணங்கினாலும் இராமனுடைய வாயிலிருந்து புறப்படும் சொல்லிலோ அவனுடைய செயலிலோ அவன் தன்னை இறைவனாகக் காட்டிக்கொண்டதாகக் கம்பன் சொல்லவேயில்லை. ஆகவே கம்பனுடைய இராமகாதையில் இராமனுடைய சொல்லும் செயலும் மனிதனுடைய சொல்லும் செயலுமாகவே அமைந்து விடுகின்றன" (அ. அறிவுநம்பி, கம்பரின் அறவியல், ப. 42).

பட்டாபிசேகத்திற்கு வரும் சீதை தாமதமாக வருகிறாள். தாமதம் ஏன் என அகலிகை வினவ; சீதையோ அக்னிப் பிரவேசம் செய்து

விட்டு வருவதாகக் கூறுகிறாள். அவ்விமைப்பொழுதே அகலிகை கண்ணகி வெறி தாண்டவமாடியவளாய் ஆவேசம் அடைகிறாள். “அவனா சொன்னான்?” என வெகுண்டு இராமனைச் சாடும் இடத்தில் பெண்மைக்கான சிறை அங்கு தகர்த்தப்பட்ட நிகழ்வினை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறார் புதுமைப்பித்தன். அன்னை போன்றவளுக்கு இத்தகைய துன்பம் நேர்ந்ததோ! என விமோசனம் பெற்றபொழுது வருந்திய இராமன் இன்று தன் மனைவி (சீதை)யின் மனம் அறியாதவன் போலும் அக்னிப்பிரவேசம் செய்யப் பணித்துள்ளான். கௌதமனுக்கு ஒரு நீதி சீதைக்கு ஒரு நீதி வழங்கியவனாகிறான் இராமன் இவன் பாதம் பட்டா நாம் பெண்ணுரு எடுத்தோம் எனம் மனம் பதைக்கிறாள். ஊர்ப்பழிச்சொல்லிற்கு ஆளாகிய அகலிகையின் மனதில் மீண்டும் இந்திரநாடகம் அரங்கேறியது. கௌதமன் அகலிகையைத் தழுவுகிறான். தழுவும் முனிவனின் கரங்களுக்குள் சமைந்து கிடந்தது ஒரு கற்சிலை என கதையினை முடிக்கிறார் புதுமைப்பித்தன்.

முடிவுரை

கம்பன் ‘கால்வண்ணம் இங்குக் கண்டேன்’ என விசுவாமித்திரன் கூற்றாகக் கூறி அகலிகைக்கு விமோசனம் கொடுத்து அகலிகைப் படலத்தினை முடிக்கிறார். கம்பன் பயன்படுத்தியபின் எஞ்சிய மிச்ச சொச்சங்களைப் புதுமைப்பித்தன் நடைமுறை வாழ்க்கையில் உட்படுத்தி மறுபடைப்பாக்கம் செய்து பெண்மையினை முன்னிலைப்படுத்துகிறார். தற்காலத்தில் பல்நிலைகளில் விமோசனம் பெறக் காத்திருக்கும் மென்மையான பெண்களுக்கு உயிரூட்டவும் தமிழ்ப் பண்பாடு எழுச்சி பெறவும் மீண்டும் ஒரு கம்பன் பிறப்பெடுப்பானா?

கம்பனின் தாக்கம் - தற்காலச் சிறுகதையில்...

முனைவர் பொ.நா.கமலா
தமிழ்ப் பேராசிரியை (பணிநிறைவு),
சிவகாசி.

தோற்றுவாய்

கம்பனின் தாக்கம், எம்.ஏ.சுசீலா எழுதிய 'புதிய பிரவேசங்கள்' என்ற சிறுகதையில் விளங்குவது குறித்து ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும். முதன்முதலாக, புதுமைப்பித்தனின் 'சாப விமோசனம்' சிறுகதையில் கம்பனின் தாக்கம் காணப்பெற்றது. அவருடைய கதைக்கு இராமாயணத்து 'அகலிகை கதை' கருவும் (Theme), உருவும் (Firm)வழங்கியது. சுசீலாவும் தன் கதைக்குக் கருவினை இராமாயணத்திலிருந்து எடுத்துள்ளார்.

இராமாயணத்தில் – தொன்மம்

இராமாயணம் ஒரு 'தொன்மம்' (Myth) ஆகும். தொல்காப்பியத்தில் தொன்மம் பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

'தொன்மை தானே
உரையோடு புணர்ந்த பழமை மேற்றே' - (தொல்.செய், 237)

இந்நூற்பாவிற்கு உரையாசிரியர்கள், இராமசரிதமும், பாண்டவ சரிதமும், தகடூர் யாத்திரையும் போல்வன. சிலப்பதிகாரம் அதன்பாற்படும் என்பர் (இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் உரைகள்) புராணம் என்பதைக் குறித்து இச்சொல்லான 'தொன்மம்' காலப்போக்கில் 'பழமை' என்பதை மட்டும் உணர்த்தலாயிற்று என்றும், புராணிய உட்பொருளை (Mythic Connection) உணர்த்தும் 'தொன்மம்' என்ற கலைச்சொல்லை உருவாக்கித் தமிழுலகுக்கு அளித்தவர் காமீனாட்சி சுந்தரம் என்றும் கதிர் மகாதேவன் கூறுவார் ('தொன்மம்' இந்தியப் புராணங்கள் ஒப்பாய்வு, ப.1)

ஓரினத்து மக்களிடையே வழங்கும் பழங்கதைகள் 'தொன்மம்' எனப்படுவன. இந்திய மக்களின் ஆழ்மனத்தில் பதிந்து அன்னார் உணர்வோடும், உயிரோடும் கலந்துவிட்ட தொன்மம் இராமாயணம், அத்தொன்மம் தற்காலத்துப் படைப்பாளிகளுக்குச் சமகாலத்து மாந்தரின் சிக்கல்களை விளக்குதற்கு ஏற்ற முன்னிலைத் தொன்மம் (Quest Myth) ஆகிறது. அவ்வகையில் கம்பன் இயற்றிய இராமாயணமும் தற்காலத்துப் படைப்பாளிகளுக்குக் கருவையும், உருவையும் வழங்கும் முன்னிலைத் தொன்மமே

புதிய பிரவேசங்கள் – கருவும், உருவும்

அரசின் ஆதிக்கம், ஆணின் ஆதிக்கம் ஆகியவற்றைச் சுற்றி சுசீலாவின் 'புதிய பிரவேசங்கள்' சிறுகதை சுழல்கிறது. அதனால் சீதைக்குத் துயரம் விளைகிறது.

மூலப்படிவங்கள் (Anchetypes) என்பன ஓரினத்து மாந்தரின் கூட்டு நனவிலியில் (Collective Unconscious) படிந்துள்ள பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், பழங்கதைகள் என்பது கார்ல் குஸ்டவ் யுங் கருத்தாகும். நன்மைக்கு இராமன், தீமைக்கு இராவணன், நட்புக்குக் குகன், துயரத்துக்குச் சீதையின் அக்கினிப்பிரவேசம், அசோகவனம் என்பன கம்ப இராமாவதாரக் காப்பியத்திலுள்ள மூலப்படிவங்களாம்.

சீதையின் 'அக்கினிப்பிரவேசம்' என்ற மூலப்படிவம் 'புதிய பிரவேசங்கள்' என்ற கதைக்கு உருவை வழங்கியுள்ளது.

கம்பன் படைத்த சீதை

சீதை பிறரால் விரும்பப்பட்டவள், உலகநிந்தனைக்கு ஆளானவள் என்று எண்ணிச் சீதைமேல் இராமன் ஐயம் கொண்டான். 'தேவியைச் சீரொடும் தா' என்றுவீடணன் மூலம் அவன் வேண்டியதால், சீதை கோலம் புனைந்து அசோகவனத்திலிருந்து வந்தாள். இராமன் தன்னை ஏற்றுக்கொள்வான் என நம்பினாள்.

கடுஞ்சொற்களால் சீதையைத் திட்டிய இராமன், 'நன்மைசால் குலத்தினில் பிறந்திலை கோழில் கீடம் (புழு) போல நிலத்தினில் பிறந்தாய்' என்று ஏசினான். அதுகேட்ட சீதை மனம் நொந்து இலக்குவனை நோக்கி, 'இடுக தீ' என்றாள். இராமனது குறிப்பவிந்து இலக்குவனும் எரிமூட்ட, தீயினை வலம் வந்து,

'மனத்தினால் வாக்கினால் மறுவுற்றேன் எனின்
சினத்தினால் சுடுதியால் தீச் செல்வா' (யுத்.கா.மீட்சிப்படலம், 84)

என்று கூறி அக்கினிப் பிரவேசம் செய்தவள் கம்பனின் சீதை.

புதுயுகத்துச் சீதை – எதிர்நிலைப் பாத்திரம்

அரசநீதியையும், பெண்ணுக்கென ஆண்கள் விதித்த நீதியையும் கேள்விக்கு உள்ளாக்க விரும்பிய ஆசிரியர், அவற்றை மறுபரிசீலனைக்கு உட்படுத்த விழைகிறார். அவர் காலத்துக்கு ஏற்ப சிறுகதையை உருவாக்கி, அதில் இன்றைய மகளிர் வாழ்வில் விளையும் புதிய சிக்கலை எடுத்துக்கொள்ளவில்லை சுசீலாவின் சிறுகதையில் சீதை, இராமன் தவிர பிற பாத்திரங்களான இலக்குவன்,

வீடணன், அனுமன் ஆகிய அனைவரும் கம்பனின் பாத்திரங்களே. கணவனின் ஐயத்துக்கு ஆளாகி அக்கினிப்பிரவேசம் செய்யவிருக்கும் சூழலில் இன்றைய புதுயுகத்துச் சீதை எவ்வாறு அக்கினிப்பிரவேசம் செய்ய மறுத்து, புதுயுகத்து இராமன் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு செய்வாள் என்று எண்ணிய சுசீலாவின் சிந்தனையின் விளைவு 'புதிய பிரவேசங்கள்' என்ற சிறுகதை. சுசீலாவின் புதிய சீதை கம்பன் படைத்த சீதைக்கு இணைவரைப் பாத்திரம் (Parallel Character) அன்று; எதிர்நிலைப் பாத்திரம் (Antitype) ஆவாள். அக்கினிப் பிரவேசம் செய்யாத சீதையை ஏற்றுக்கொண்ட இராமனும் எதிர்நிலைப் பாத்திரமே.

சீதையின் சொல்லாடல் திறன்

புதுயுகத்துச் சீதை தன் சொல்லாடல் திறனால் இராமனையும், பிறரையும் ஈர்க்க வல்லவள். இராமன் உள்ளத்திலும் அங்கு கூடியிருந்தோர் உள்ளத்திலும் மனமாற்றத்தை விளைவிக்க விவாத ஈர்ப்புகளைக் (Logical Appeals) கையாளுகிறாள். அனைவரது கவனத்தையும் ஈர்க்கிறாள்.

இராமன் அக்கினிப் பிரவேசம் செய்யச் சொன்னபோது 'தங்கள் ஆணையை இம்முறை என்னால் நிறைவேற்ற முடியவில்லை சுவாமி' எனப் பணிவாக மறுத்துத் தன் செயலுக்கு நியாயம் கூறுகிறாள். இராமனுடைய ஆணைக்கும் பங்கம் விளைவிக்காமல், தன்னுடைய செயலுக்கும் களங்கம் விளையாமல் பேசும் சீதையின் சொல்லாடல் திறன் இருவர் செயலிலும் நியாயம் இருப்பதைப் புலப்படுத்துகிறது. அக்கினிப்பிரவேசத்தை மறுக்க, சீதை கூறும் காரணங்களாவன:

1. தவறே செய்யாத ஒரு பெண்மீது களங்கம் சுமத்திக் கணவன் தண்டனைக்கு உள்ளாக்கலாம்.
2. மனைவிமீது சிறியதொரு ஐயம் அடிமனத்தில் எழுந்தாலும் கணவன் அவளை ஆட்டிப்படைக்கக்கூடும்.
3. தன்பெயரால் எரியூட்டப்படும் சகோதரிகளின் எண்ணிக்கையைக் குறைத்தல் வேண்டும்.
4. தவறான முன்னுதாரணம் ஆகிவிடக்கூடாது.
5. வரலாற்றின் பக்கங்களைக் கறைப்படுத்திவிடக் கூடாது.

இவ்வாறு தன்கூற்றில் நியாயம் இருப்பதைக் கூறி, சீதை அக்கினிப் பிரவேசம் செய்ய மறுத்தாள்.

புதிய சீதையரின் சிக்கலுக்குத் தீர்வு

அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, கணவன் சொல்லுக்கு எதிர்மறுத்துப்

பேசாமை, இல்வரை இகவாமை போல்வன பெண்மைக்குரிய பண்புகள் எனப் பழைய மரபுகளில் ஊறிப்போன ஒரு சமுகத்தில் புதிய சீதை, புதிய யுகத்தில், புதிய நியதிகளை (Norms) அறிமுகப்படுத்த வந்தவள்.

பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டும், தான் உயிரோடு எரிக்கப்படும்படியான அவலம் வாழ்வில் விளைகையில், அதனை எதிர்நின்று போராடி வெல்லும் ஆற்றல் ஒவ்வொரு பெண்ணுக்கும் இருத்தல் வேண்டும் என்பன போன்ற பெண்ணின் இருத்தலுக்கும் (Existence) உயிர்த்தலுக்கும் உரிய பெண்ணியக் கருத்துகளைப் புதுயுகத்துச் சீதையின் கருத்துகளாக ஆசிரியர் வெளிப்படுத்திப் பெண்டிரின் அக்கினிப்பிரவேசச் சிக்கலுக்குத் தீர்வு கூறியுள்ளார்.

இராமன் ஐயம் நீங்கி ஏற்றல்

கம்பனின் இராமன், சீதை அக்கினிப்பிரவேசம் செய்து தன்கற்பை நிலைநாட்டிய பிறகே அவளை ஏற்றான். புதுயுகத்துச் சீதையின் கூற்றில் நியாயம் இருப்பதை உணர்ந்த புதுயுகத்து இராமன் அக்கினிப் பிரவேசம் செய்யாமலே அவளை ஏற்றுக் கொள்வதாகச் சிறுகதையை ஆசிரியர் முடித்துள்ளார்.

இறுவாய்

அன்றாடம் கணவன்மாரால், புகுந்த வீட்டாரால் எரியூட்டப்பெறும் மனைவியரின் எரிகின்ற சிக்கல்களுக்குத் (Burning Problems) தீர்வு காண விழைந்த ஆசிரியர், அதற்கு ஏற்ப இராமாயணத்திலிருந்து அரசு ஆதிக்கம், ஆண் ஆதிக்கம் என்ற கருத்தை எடுத்துக் கொண்டார். 'அக்கினிப் பிரவேசம்' என்ற தொன்ம வடிவத்தைத் (Mythical Form) தன் கதைக்குக் கொடுத்துள்ளார். புதிய இராமனின் மனஉலகில் பிரவேசித்து மாற்றங்களை விளைவிக்கும் புதிய சீதையைப் படைப்பதன் மூலம் பெண்டிரின் அக்கினிப் பிரவேசச் சிக்கலுக்குத் தீர்வு வழங்கியுள்ளார்.

கம்பனின் இராமன் ஆதிக்கவாதி அன்று; சீதை, அன்பு, தியாகம், பணிவு காரணமாக இராமனுக்கு அடிபணிந்து தானே வலிய அக்கினிப்பிரவேசத்தை ஏற்றாள் என்று ஒரு சாரார் கூற இடமுண்டு. எனினும் தற்காலத்தில் பெண்டிரின் அக்கினிப்பிரவேசங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன என்ற சூழலில், பெண்ணிய நோக்கில் காண கம்பனின் 'அக்கினிப்பிரவேசத்' தொன்மம் இடம் தருகிறது என்பது உண்மை.

கண்ணதாசன் நாவலில் கம்பனின் தாக்கம்

முனைவர் கே.நீலகண்டன்
உதவிப் பேராசிரியர், முதுகலைத் தமிழ் ஆய்வு மையம், காதீர்முகைதீன் கல்லூரி, அதிராம்பட்டினம்.

சங்ககாலம் தொட்டு, தற்காலம்வரை தொடர்ந்து வரும் படைப்புகளில், இலக்கியத் தாக்கம் இருந்து கொண்டிருப்பதை நன்கு அறியமுடிகிறது. அவ்வகையில் கவியரசர் கண்ணதாசனின் படைப்புகளில் கவிச்சக்கரவர்த்தி கம்பனின் தாக்கம் இழையோடிக் கிடப்பதை அவரது படைப்புகள் தெளிவுபடுத்துகின்றன. கண்ணதாசனின் அவள் ஒரு இந்துப்பெண் எனும் நாவலில் கம்பராமாயணத்தாக்கம் பரவலாகக் காணப்படுகின்றன. அவற்றுள் ஒருசில காட்சிகளை மட்டும் இக்கட்டுரை சுருக்கமாக எடுத்துக் காட்ட முயல்கிறது.

ஆள்மாறாட்டமும் அன்புப் போராட்டமும்

இறைவனின் படைப்பில் ஒரே மாதிரியான ஏழு தோற்றங்கள் உண்டு என்பதை பக்தி சார்ந்த பெரியோர்களின்வழி கேட்டதுண்டு. இவ்வகையில் ஆள்மாறாட்டம் கொண்ட ஒரு நபரின் அன்புப் போரட்டம் கம்பராமாயணத்தின் துணைகொண்டு எவ்வகையில் விளக்கப்படுகிறது என்பதைப் பின்வரும் பகுதியில் காணலாம்.

ஜமீன்தார் குடும்பத்தில் பிறந்த ரவிச்சந்திரன் காணாமல் போய் பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. காணாமல் போன ரவிச்சந்திரனுக்கு குழந்தைப்பருவத்தில் திருமணத்தை முடித்துவிட்டனர். அவன் மனைவியின் பெயர் ஸ்ரீதேவி. பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஊருக்கு வருகிறான். அப்பொழுது அந்த ஊரில் உள்ள ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு இல்லாமல் அனைவரும் ஜமீனின் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். ரவிச்சந்திரன் வந்தான் இவனின் தாய் மகனை அனைத்து பிரிவுத்துயரை கண்ணீரால் துடைத்துக்கொள்கிறாள். இருவரும் வீட்டிற்குள் செல்கின்றனர். பூஜையறைக்குள் நுழைந்த ரவி சிலைகளை ஒவ்வொன்றாகப் பார்த்துவிட்டு "அம்மா ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்கும் பக்கத்தில் இருந்த ஜானகியைக் காணோமே எங்கே?" என்று கேட்டான்.

'ராமனைப் பிரிந்ததில் இருந்து அவள்
அசோக வனத்தில் இருக்கிறாள்" (கண். அவள் ஒரு இந்துப்பெண் ப.33)

என, தாய் கூறுகிறாள். இந்தப் பதிலில், சீதையின் பிரிவுத்துயர்

ரவிச்சந்திரன் மனைவி ஸ்ரீதேவியின் பிரிவுத்துயருக்கு மறைமுகமாக ஒப்பிட்டுக் காட்டுகிறார்.

ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்குப் பக்கத்தில் இருந்த ஜானகி, ராமனை பிரிந்ததால் அசோகவனத்தில் இருக்கின்றாள். இந்த ரவிச்சந்திரனை பிரிந்த ஸ்ரீதேவி தன்வீட்டு அறைக்குள் இருக்கிறாள். கதையாசிரியர் ராமனை ரவிச்சந்திரனாகவும், ஜானகியை ஸ்ரீதேவியாகவும் பாவித்து கதையை நகர்த்துகிறார். ஒரு கணவன் மனைவி பிரிவை, காப்பியக் கதையுடன் ஒப்பிட்டு வாசகர் மனதில் எளிமையான வழியில் பதிய வைக்கிறார். ராமனைப் பிரிந்த சீதை எவ்வளவு துன்பம் அடைந்திருப்பாள் என்பதைத் தன் மகனுக்கு உணர்த்துவதற்காகவே அவன் மனைவி ஸ்ரீதேவியை ஜானகியுடன் ஒப்பிடுகிறாள். ஜானகியாவது இராமன் உயிருடன் இருக்கிறான், என்றாவது வந்து விடுவான் என்ற நம்பிக்கையில் பிரிவுத்துயரை எதிர்கொள்கிறாள். ஆனால் ஸ்ரீதேவியோ பிரிந்து சென்றவன் உயிருடன் இருக்கின்றானா என்பதை அறியமுடியாமல் பிரிவுத்துயரை எதிர்கொள்கிறாள். ஆக ஜானகியின் பிரிவுத்துயரைவிட ஸ்ரீதேவியின் பிரிவுத்துயர் கொடுமையானது என்பதைத் தன் மகனுக்கு உணர்த்துவதற்காகவே காப்பியப் பின்பற்றலை நாவலாசிரியர் கையாண்டிருக்கலாம் என எண்ணுவதற்கு இடம் இருக்கின்றது.

பன்னிரண்டு ஆண்டுகாலம் பிரிந்திருந்த ரவிச்சந்திரன் தன்னுடைய ஊருக்கு வருவதை தெரிவிப்பதற்காக, கடிதம் எழுதி அதை அஞ்சல் செய்துவிட்டு திரும்பும்பொழுது பணத்திற்காகக் கொலை செய்யப்படுகிறான். உயிர் பிரியும் தறுவாயில் தோற்றத்தில் ரவிச்சந்திரனைப்போல் ஒரே மாதிரியாக இருக்கும் மற்றொருவனை பார்க்கின்றான். அவனிடம் தனது நிலையை எடுத்துக்கூறி, ஜமீனின் சில அடையாளப்பொருட்களையும் கொடுத்து ஊருக்குச் செல்லுமாறு உதவி கேட்கிறான். அவனும் ஒப்புக்கொண்டு ஜமீனுக்கு வந்து விடுகிறான். இந்த ரகசியம் இறந்துபோன ரவிச்சந்திரனுக்கும் இவனுக்கும் தவிர வேறு யாருக்கும் தெரியாது. இந்நிலையில் மாற்றாக வந்தவன் கவனமுடன் நடந்துகொள்கிறான். ரவிச்சந்திரன் மனைவி ஸ்ரீதேவி விசயத்தில் மிக கவனமாக, ஒரு பேராண்மை மிக்கவனாக நடந்து கொள்கிறான். நீண்ட நாள் பிரிவுக்குப் பின் நெருங்கும் மனைவி ஸ்ரீதேவியிடம் இன்னும் ஆறுமாத காலத்திற்கு விரதம் இருப்பதாக தெரிவித்துவிடுகிறான். பன்னிரண்டு ஆண்டுகள் பொறுத்தவள் ஆறு மாதமா பொறுக்க மாட்டாளா? அவளும் நாட்களை எண்ணுகிறாள்.

தேவர்களை வென்ற மனிதப்பிறவி

மனிதன் வாழ்வியல் ஒழுக்கத்தால் சில நேரங்களில் புனிதமடைகிறான். இதனால் தேவர்களையும் வென்றுவிடுகிறான். ரவிச்சந்திரன் ஆறுமாத கால விரதம் மேற்கொண்ட இத்தருணத்தில் ஜமீனுக்கு ஆரிய வைசிய சங்கப்பிரதிநிதிகள், இன்றிரவு தங்கள் சங்கத் தேவஸ்தான மண்டபத்தில் அகலிகை நாடகம் போடுகின்றோம். அதற்கு ஜமீனிலிருந்து வந்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தனர். ரவிச்சந்திரனின் தாயார் ஸ்ரீதேவி எந்த ஒரு வெளி உலகையும் காணாததை நினைத்து, ரவிச்சந்திரனை அழைத்துச் செல்லுமாறு அன்புக் கட்டளையிட்டாள். முதன்முதலில் வெளி உலகிற்கு வரும் ஸ்ரீதேவி பெண்மைக்குரிய ஆசாபாசங்களுக்கு ஏற்றதுபோல அலங்கரித்துக் கொள்கிறாள். இருவரும் வாகனத்தில் ஏறி அமர்கின்றனர். ஸ்ரீதேவி நெருக்கமாக அமர முற்படும்பொழுதெல்லாம் ரவிச்சந்திரனின் உடல் இயல்பாக விலகிப்போக முயல்கிறது. மண்டபத்தை வந்தடைந்தனர் அகலிகை நாடகம் துவங்கியது.

'அகலிகையின்மீது ஆசைகொண்ட இந்திரன் அவளது கணவனான கௌதமனைப் போலவே ஆள்மாறாட்டம் செய்து உள்ளே நுழைகிறான். தன் கணவன் என்று நினைத்து அகலிகை இந்திரனின் ஆசைக்கு இணங்கி விடுகிறாள். இவ்வேளையில் கௌதமமுனிவர் வந்துவிடுகிறார். இந்திரனுக்கு சாபம் கொடுத்து அகலிகையையும் கல்லாகப் போகுமாறு சபித்துவிடுகிறார். சபிக்கப்பட்ட அகலிகை ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியின் பாதத்துளிபடும்போது விமோசனம் கிடைத்ததுபோல் நாடகக்காட்சி நகர்ந்து செல்கிறது'.(மேலது பக்.41-42) இக்காட்சி ரவிச்சந்திரன் மனதில் முள்ளாய்க் குத்துகிறது. தெய்வங்களின் வரிசையில் போற்றப்படும் தேவர்களுள் ஒருவரான இந்திரன் ஆள்மாறாட்டம் செய்து அகலிகையை அனுபவிக்கின்றான். ஆனால் சாதாரண மனிதப்பிறவியில் தோன்றிய ரவிச்சந்திரன் ஆள்மாறாட்டம் செய்தும் அவளை அனுபவிக்க வாய்ப்புகள் அதிகம் இருந்தும் அருகில் நெருங்க மறுக்கின்றான். இவ்விடத்தில் தெய்வப் பிறவியையும் மனிதப்பிறவி ஒழுக்கத்தால் வென்றுவிடுவதை கவிஞர் கண்ணதாசன் இலைமறைகாயாய் எடுத்துக்கூறுகிறார். ஆனால் இவ்விடத்தில் ஸ்ரீதேவி அகலிகையாய் இருந்து தடுமாற்றத்துடன் காணப்படுகிறாள். அகலிகை தன் கணவர்போல் வேடம் போட்டு வந்த இந்திரனை நம்பி ஏமாந்து விடுகிறாள். ரவிச்சந்திரனைப் போல் இருக்கும் இன்னொருவனைத் தன் கணவர் என்று நினைத்துக்

கொண்டிருக்கும் ஸ்ரீதேவி அகலிகை போல் ஏமாறுவதற்கு தயாரான நிலையில் இருக்கிறாள். ஆனால் ரவிச்சந்திரன் ஏமாற்றாமல் கற்பு நிலையிலும், ஆண்மை நிலையிலும் தலை சிறந்து நிற்கின்றான். ஒழுக்க நிலைதவறி, கல்லாக உடல் முழுவதும் யோனியாகத் திரிவதற்குப் பதிலாக இருவரும் தன் மனங்களை குறிப்பாக ஓர் ஆண்மகன் மனதைக் கல்லாக உணர்வற்ற ஜடமாகப் படைத்து ஒழுக்க நெறியைப் பின்பற்ற வைத்திருப்பது கவிஞர் கண்ணதாசனின் கவிப்புலத்திற்கு மகுடம் சூட்டுகிறது எனலாம்.

நிறைவாக

மாந்தர்களுக்குப் பயன்தரும் வகையில் உள்ள வாழ்வியல் நெறிமுறைகள் காப்பியக்கூறுகளுடன் கண்ணதாசன் நாவல்களில் இழையோடிக்கிடக்கின்றன. நாவலில் இடம் பெறும் கதை மாந்தர்களின் நிகழ்வுகளை காப்பியக் கதை மாந்தர்களின் நிகழ்வுடன் தொடர்புப்படுத்தி, வாசகர் மனதில் எளிதில் பதியவைக்கக் கூடிய உத்தியை கண்ணதாசன் கடைப்பிடித்துள்ளார் எனலாம். சில இடங்களில் காப்பியக் கதை மாந்தர்களைவிட, சிறப்புகள் நிறைந்த பாத்திரமாகப் படைத்து உயர்வுபடுத்திக் காட்டியுள்ளதை இக்கட்டுரை வழி அறியமுடிகிறது.

கம்பரும் கபிலரும் - புலமைநயம்

திருமிகு. ந.கு.வசந்தி
அ.ம.மேனிலைப்பள்ளி, நாமகிரிப்பேட்டை

முன்னுரை

இயற்கையை, கவிஞர்கள் தாம்கண்ட உருக்காட்சிகளை மெய்உரு, பயன் உரு இவற்றின் அடிப்படையில் தமக்கே உரித்தான வகையிலான அடைமொழி கொடுத்து வருணிப்பதுண்டு. அதிலும் கம்பனைப்போல் மீத்திறம் வாய்ந்த கவிஞர்கள் அவற்றைக் கண்முன்னே ஒரு படப்பிடிப்புப் பதிவுபோல உருவாக்கிக் காட்டுவார்கள்

இதனை ஒத்தே கம்பரும். கபிலரும் காட்டுக்குள்ளே இயற்கையில் நடக்கும் நிகழ்வுகளைத் தத்தம் பாடல் வரிகளில் காட்டி, ஒரு நடனச் சுரங்கத்தையே கொணர்ந்து விடுகின்றனர்.

கம்பராமாயணம் பாலகாண்டத்தில் இயற்கையை ரசித்த கம்பர் கீழ்க்கண்டவாறு வருணிக்கிறார்.

"தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம் தாங்கச்
கொண்டல்கள் முழவின் ஏங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்திரை எழினிகாட்டத்
தேம்பிழி மகரயாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம் வீற்றிருக்கும் மாதோ" (கட்.இநா.படா.4)

என்று இசைக்கும், இசைவிக்கும் காரணிகளையும் அவற்றின் பயன்களையும் அழகாகச் சித்திரிக்கிறார் கம்பர்.

அவரே கிட்கிந்தாகாண்டத்தில், சோலையின் அலங்கார ஒப்பனையை மெய்ம்மறந்து ரசிக்க வைக்கிறார்.

"கிளைத்துளை மழலை வண்டு
கின்னரம் நிகர்த்த, மின்னும்
துளிக்குரல் மேகம் வள்வார்த்
தூரியம் துவைப்ப போன்ற
வளைக்கையர் போன்ற மஞ்ஞை,

தோன்றிகள் சுரங்கின் மாடே
விளக்கினம் ஒத்த, காண்போர்
விழி ஒத்த விளையின் மென்பூ" (கிட்.கா.32)

என்று இயற்கை ஒலி சிந்தும் நிலைகளையும் அதற்கேற்ப மயில்கள் ஆடும் நடனக்காட்சியை, கபிலரும் தம் பாடலில் வருணித்துக் காட்டுகிறார். இவர்காட்டும் நடனஅரங்கம் அவற்றைவிடப் பெரியது.

சங்க இலக்கியக்கவிஞர்களில் தலைமைப்புலவர்களாகப் போற்றப்படுவோர் கபிலபரணர். இவர்களில் இயற்கையைப் பற்றிய தெளிந்த அறிவும் முருகியல்தன்மையும் கொண்டவராக கபிலர் போற்றப்படுகிறார். அவரும் இத்தகைய நடன அரங்கத்தை வருணித்துப் பேசுகிறார். இவரது நடன அரங்கமும் மிகப்பெரியது ஒன்றே. அவர் தம் அகநானூற்றுப் பாடலில்,

"ஆடமைக் குயின்ற தவிர்துளை மருங்கின்
கோடை யவ்வழிக் குழலிசை யாகப்
பாடு இன்னருவிப் பனிநீரின் னிசைத்
தோடமை முழவின் துதைக் குரலாகக்
கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டு யாழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடுமயில்
நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன் (அக.நா.82)

என்று இயற்கையின் சின்னங்களைப் பெருமைப்படுத்தி இயற்கை ஓவியம் வரைந்துள்ளார்.

மேற்குறித்த இப்பாடல்களில் மயில்கள் நாட்டிய மங்கைகளாக, வண்டுகளின் ரீங்காரமும். மற்ற ஓசைகள் தாளம்போடும் இசைக்கருவிகளின் இசை ஓசைகளாகவும், குரக்கினத்தைப் பார்வையாளர்களாகவும் படைத்திருப்பதை உற்றுநோக்குங்கால், பல்வகைக் காலப்புலவர்களின் சிந்தனைத்திறன் ஒத்திருப்பது ஒப்பு நோக்கத்தக்கது எனலாம்.

கல்லாமை – ஒரு விளக்கம்

இராம இலக்குமணர், சுக்கிரீவன் மற்றும் பிறருடன் ஒரு சோலையில் தங்கினர். அச்சோலையில் இரத்தினங்கள் பதிக்கப்பட்டும்

சூரிய ஒளியும், நிலவின் அழகும் எடுபடவில்லை. அது ஏனென்றால், கல்வியிற் சிறந்த அறிஞர்களின் முன்னிலையில் கல்வியறிவு இல்லாதவர்களின் செயல் எடுபடாது என்பதையே,

"அயர்வில் கேள்விசால் அறிஞர் வேலைமுன்
பயில்வு இல் கல்வியார் பொலிவு இல் பான்மைபோல்
குயிலு மாமணிக் குழுஉ சோதியால்
வெயிலும் வெள்ளி வெண்மதியும் மேம்படா" (கி.கி.காண்.32)

என்று கம்பர் காட்சியை வருணிக்கிறார்.

இதனையே கபிலரும்,

"மலி பெயல்கலித்த மாரிப் பித்தகத்துக்
கொயல் அரு நிலை இய பெயல் ஏர்
மணமுகைச் செவ்வெரிந் உறமும்
கொழுங்கடை மழைக்கண் தளிர் ஏர் மேனி
மாஅ யோயே நாடுவறம்கூர, நாஞ்சில் துஞ்ச
கோடை நீடிய பைது அறுகாலை
குன்று கண்டன்ன கோட்ட
யாவையும் 'சென்று சேக்கல்லாப்புள்ள'
உள்இல் என்றூழ் வியன்குளம் நிறையவீசி
பெயல் பொழிந்த ஏமவைகறை
பல்லோர் உவந்த உவகை யெல்லாம் என்னுள்
பெய்தந்தற்றே கேண் இடை ஓங்கித்தோன்றும்
உயர்வரைவான் தோய் வெற்பன் வந்தமாறே" (அக.நா.42)

என்ற பாடலில் வரும் 'சென்று சேக்கல்லாப்புள்ள' என்னும் பகுதிக்கு 'கல்லாத புல்லன் சென்று சேர்வது இல்லை' என்றும் பொருள் கொள்ளலாம். அதைவிடுத்து தொடர்ந்த வரிகளைக் காணும்போது 'பறவைகள் சென்று சேராத குளம்' என்றும் பொருள்படுவதைக் காணலாம். ஆயின் கபிலரும், கம்பரும் சோலை வருணனையில்கூட கல்வி கற்றலை அறிவுறுத்தியிருப்பதாக எண்ணலாம்.

நெய், தேன் – ஒரு பார்வை

இதேபோல், சுக்ரீவனைச் சார்ந்தோர் சீதையின் நகைப்பொதியை இராமனிடம் தர முயல்கின்ற சூழலை, தேனோடு பால் கலந்தாற்போல தந்தான் என்பதை

"வைத்தனம் இவ்வழி வள்ளல் நின்வயின்
உய்த்தனம் தந்தபோது உணர்தியால் எனாக்

கைத்தலத்து அன்னவை கொணர்ந்து காட்டினான்
நெய்த்தலைப் பால்கலந்தனைய நேயத்தான்" (கி.கி.காண்.4)

என்று கூறும்போது, தேனிற்பால் கலந்தாற்போல அன்புடையவனாகவும் சுக்ரீவனை நோக்க இடமுண்டு. நட்பிலே எதையும் பிரித்துணர முடியாது என்பதையே கம்பர் கூற விழைகின்றார்.

இதையே, கம்பரின் சங்ககாலப்பாடலும் ஒத்திருக்கிறது.

"வரைமிசை மேல் தொடுத்த நெய்க்கண் இறாஅல்
மழை நுழை திங்கள்போல் தோன்றும் இழைநெகிழ
எவ்வம் உறீஇ யினான் குன்று
எஞ்சாது எல்லர் கொடுமை நுவலாதி
அஞ்சுவது அஞ்சா அறனிலி அல்லன், என்
நெஞ்சம் பிணிக் கொண்டவன்
என்று யாம் பாட, மறை நின்று கேட்டனன்" (கலித்தொகை.42)

இப்பாடலின்கண் குறிஞ்சிக் கபிலர் நெய் என்று குறிப்பிடுவது தேனாகத்தான் இருக்க முடியும். இறால் என்பதற்குத் தேன் கூடு என்ற பொருளும் உண்டு. ஆகவேதான் தேனுக்கும், இறாலுக்கும் உள்ள தொடர்பை 'நெய்க்கண் இறாஅல்லெனக் கூறியிருக்கிறார். இதை மேலும் ஒரு பாடலில்,

"வருமுலை புணர்ந்தன என்பதனால், என் தோழி
அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே
அவனும்தான், ஏனல் இதணத்து தகிற்புகை உண்டு இயங்கும்
வான் ஊர் மதியம் வரை சேரின், அவ்வரை
'தேனின் இறால்' என, ஏணி இழைத்திருக்கும்
கான் அகல் நாடன் மகன்' (அக.நா.39)

என்றும் கூறியிருக்கலாம்

சான்றோரின் வள்ளல்தன்மை

கூதிர்காலம் தன்னில் வள்ளல்தன்மையை ஒத்து மழையாகப் பொழிந்து தள்ளிய மேகங்கள், தன்னிடத்தே இருந்த பொருளெல்லாம் இல்லாதவர்கட்கு வழங்கியபின் தன்னிடம் இனி ஒன்றும் இல்லை என்பதுபோல் வானம் வெளுத்திருப்பதை வள்ளலின் முகம் வெளுத்திருத்தல் போன்றிருந்ததாக கம்பர் தம் பாடலில் வருணிக்கிறார்.

"மள்கலில் பெருங்கொடை மருவி மண்ணுளோர்
உள்கிய பொருளெலாம் உதவி அற்ற போது

எள்கலில் இரவலர்க்கு ஈவது இன்மையால்
வெள்கிய மாந்தரின் வெளுத்த மேகமே' (கி.கி.கா.104)

ஆக, உதவி தேவைப்படும்போது உதவுவது சான்றோரின் கடமை ஆகும். அதுவே உயரிய பண்பும் ஆகும். அவ்வாறு உதவ இயலாத போது சான்றோர்கள் நாணிக்குறுகுவர் அப்போது அவர்கள் முகம் வெளுத்துக் காணப்படும் என்ற கருத்தை கபிலரும் தன் பாடலில் காட்டியுள்ள தன்மையைக் கீழ்க்கண்ட பாடல் வரிகள் உணர்த்தும்

"கருங்கண் உழுவை அடிபோல வாழைக்
கொடுங்காய் குலை தொறூஉம் தூங்கும் இடும்பையால்
இன்மை உணரத்தார்க்கு அது நிறைக்கல் ஆற்றாக்கால்
தன் மெய் துறப்பான் மலை
என ஆங்கு
கூடி அவர்திறம்பாட, என் தோழிக்கு
வாடிய மென்தோளும் வீங்கின
ஆடு அமைவெற்பன் அழித்தக்கால் போன்றே' (அக.நா.43)

முடிவுரை

இவ்வாறாக, இதிகாசக்காலத்துக் கம்பரும், சங்ககாலத்துக் கபிலரும் உற்று நோக்கிய தன்மையும் வெளிப்படுத்தும் சுவைகளும், எடுத்தாண்டிருக்கும் பாடல்வரிகளும் ஒப்புமைப்படுத்தி நோக்க முடிகிறது. எண்ணற்ற சிந்தனைக்களன்கள் ஒரே மாதிரியாக இருப்பதைக் கண்டாலும் ஒரு சில துளிகளை மட்டுமே இங்கு சுவைக்க முடிகிறது.

கம்பன் - வள்ளுவ நெறிசெல் வள்ளல்

முனைவர் தி.தாமரைச் செல்வி
தமிழ்த்துறை, தாகூர் கலைக்கல்லூரி,
புதுச்சேரி.

திருக்குறளை வாழ்வியல் நூலாகப் படைத்தவர் வள்ளுவர். இராமகாதையை காவியமாகப் படைத்தவர் கம்பர். உலகத்திற்கே வழிகாட்டிய வள்ளுவர் உள்ளத்தினை முழுவதுமாக உணர்ந்தவர் கம்பர். ஆதலால்தான் வள்ளுவரின் சொல்லை, வரியை, கருத்தை, அறத்தை அப்படியே கையாளும் போக்கினை இராமகாதை முழுவதும் ஆங்காங்கே காணலாம். குறிப்பாக இராமன் சுக்ரீவனுக்கு எடுத்தியம்பும் அரசியலறங்களில் வள்ளுவரின் உள்ளத்தினை, கம்பர் வெளிப்படுத்தும் பாங்கு இவ்வெழுத்துரையில் இடம் பெறுகிறது.

கிட்கிந்தாகாண்டத்தில் வாலிவதைக்குப் பின்னர் சுக்ரீவனுக்கு முடிசூட்டுவிழா நடைபெறுகிறது. இந்நிகழ்வை அரசியல் படலத்தில் விரித்துரைக்கிறார். இராமன் சில அரசியலறங்களை சுக்கீரவனுக்கு எடுத்துரைக்கின்றான். அக்கூற்றுகளில் வள்ளுவரின் அரசியலறங்களை எடுத்துச்செல்லும் வள்ளலாகவே காட்சி தருகின்றார் கம்பர்.

வாலிவதைக்குப் பிறகு, சுக்கீரவனுக்குக் கொடுத்த வாக்குறுதியின்படி முடிசூட்டுவிழா நடைபெற்றது. அவ்விழாவின் போது, நல்லரசு புரிதற்குரிய அறிவுரைகளை (அறங்களை) எடுத்துரைத்தான். இச்செய்தி அரசியல்படலத்தில் 12 பாடல்களில் சொல்லப்படுகிறது. அக்கருத்துக்கள் யாவும் வள்ளுவரின் உள்ளக் கருத்தை எதிரொலிப்பதுபோல் உள்ளன. கம்பன் கூறும் வள்ளுவ நெறிகள் வருமாறு,

1. அறிவின்மிக்க அமைச்சர்கள், வலிமை மிக்க சேனைத் தலைவர்களைப் பெற்று ஆட்சி செய்தல். (4122)
2. குற்றமில்லாத செயல்களையுடையவனாகிய பிறருடன் அகலாது அணுகாது நட்புறுதல் (4122)
3. பகையுறு சிந்தையாரிடம் நட்புறுதல். (4123)
4. பொருட்செல்வத்தைப் பேணிக் காத்தல் (4124)
5. இனிய சொல் உரைத்து வலியவர்க்கு உதவி, பிறர் பொருளைக் கவராத எண்ணத்துடன் இருத்தல் (4125)

6. சிறியர் என்று நினைந்து இகழ்ந்து பிறர் வருந்தும்படி செய் யாமை. (4126)
7. மங்கையர் பொருட்டால் மாந்தர்க்கு மரணம் எய்தும் என்ற உண்மையை உணர்தல். (4127)
8. குடிமக்களை ஓம்புதல். (4128)
9. அறிவின் மிக்க அமைச்சர்கள்- அகலாது அணுகாது நட்புறுதல்.

உண்மையோடு கூடிய அறிவு நிரம்பப் பெற்ற அமைச்சர்களோடும் குற்றமற்ற நல்லொழுக்கத்தோடு ஒழுகும் வலிமைக்கேற்ற செயல்பாடுகளையுடைய வீரர்களைப்பெற்று விளங்க வேண்டும் என்ற கருத்தமைந்த பாடலில் அரசன் பிறரிடம் எப்படி நட்பு வைத்து கொள்ள வேண்டும் என்பதை,

"தூய்மை சால் புணர்ச்சி பேணி, துகள் அறு தொழிலை ஆகி
சேய்மையோடு அணிமை இன்றி தேவரின் தெரிய நிற்றி" (4122)

என்றுரைக்கிறார். இப்பாடலில் சுட்டப்படும் "சேய்மையோடும் அணிமை இன்றி" எனும் தொடரின் பொருள் வள்ளுவரின்,

"அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்" (குறள் 691)

மன்னரைச் சேர்ந்தொழுகல் அதிகார கருத்துகளில் ஒன்று. அமைச்சர் முதலானோர் அரசனை அணுகாது நெடுந்தொலைவில் இருத்தலும் மிக அணுகி நெருக்கமாக இருத்தலும் தவிர்க்க வேண்டுவன. 'தேவரின் தெரிய நிற்றி" என்ற தொடர் அரசன் பிறப்பால் நிலவுலக மனிதனே ஆயினும் அவன் செயலால் மக்கட்கு இறையென்று கருதப்பட்டதால் 'தேவர்களைப்போல பிறர்க்கு நீ விளங்குவாய்' எனும் கருத்து

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப்படும் (இறைமாட்சி - 388)

எனும் குறட்கருத்தோடு இணைத்துப் பார்க்கத்தக்கது.

பகையுறு சிந்தையாரிடம் நட்புறுதல்

"புகை உடைத்து என்னின், உண்டுபொங்கு அனல் அங்கு என்று உன்னும்
மிகை உடைத்து உலகம் நூலோர் வினையமும் வேண்டற்பாற்றே

பகையுடைச் சிந்தையார்க்கும், பயன் உறு பண்பின் தீரா
நகையுடை முகத்தை ஆகி, இன்உரை நல்கு நாவால்" (4123)

"சுக்கிரீவ! வானில் புகைமண்டலம் தெரியுமானால் ஆங்கே எரிகின்ற நெருப்பு உள்ளது என்று அறியும் இயல்புடையது மக்கள் உலகம், ஒரு பொருளைக் கண்ணால் காணமலேயே ஊகித்தறியும் ஆற்றல் மிக்கது, நல்லவர்க்கு நல்லவராகவும். அல்லாதார்க்கு அவர்களை ஒடுக்கும் ஆற்றல் பெற்று நல்லவர் போன்றவர்களாய் இருத்தல் வேண்டும் என்கிறார், பகைவரே ஆனாலும் அவர்களிடமும் இன்முகமும் இன்சொல்லும் கொண்டு ஒழுக வேண்டும் என்கிறான், இங்கு வள்ளுவரின் குறள் கருத்துக்கள் நினைக்கத்தக்கது.

"பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்" (காலம் அறிதல் 487)

"மிகச்செய்து தம்எள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று" (கூடாநட்பு 829)

"பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்
டகநட் பொரீஇ விடல்". (கூடாநட்பு 830)

பொருட் செல்வத்தைப் பேணிக் காத்தல்

'தேவர்களும் மருட்சியடையும்படி விளங்கக்கூடியது குற்றமில்லாத பெருஞ்செல்வம் ஆகும், அது உன்னுடைய பாதுகாப்பில் இப்பொழுது உள்ளது, இச்செல்வம் செயிர்அறு செல்வம், பெறுதற்கரிய செல்வம் பெற்றுள்ள நீ உலகினரின் இயல்பை உணர்ந்து விழிப்புடன் நடந்துகொள்ள வேண்டும்' என்கிறான். இப்பாடலுரையில் வை.மு.கோபாலகிருஷ்ணமாசாரியார் அவர்கள்,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" (இறைமாட்சி 385)

எனும் குறளை ஒப்பிட்டுக் காட்டுவார்.

அரசன் நட்பு பகைமை நொதுமல் என்ற வேற்றுமை இல்லாது நடந்துகொள்ள வேண்டும் என வலியுறுத்தும் கம்பராமாயண விளக்கவுரைகாரர்கள் (கம்பராமாயணம், கிட்கிந்தாகாண்டம், அசஞானசம்பந்தன் பதிப்பு - 2004, பக்305).

"தகுதி யெனஒன்று நன்றே, பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்" (நடுவுநிலைமை 111)

எனும் குறளை சான்று காட்டியுரைப்பர்.

இனிய சொல் உரைத்தல், வலியவர்க்கு உதவுதல், பிறர் பொருளைக் கவராத எண்ணத்துடன் இருத்தல்

“செயற்பால செய்ய திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்” (குற்றங்கடிதல் 437)

“அஃகாமை செல்வத்திற் கியாதெனின், வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்” (வெஃகாமை 178)

“இன்சொலால் ஈத்தழிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு” (இறைமாட்சி 387)

எனும் குறட்கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ள இராமகாதைப் பாடல் வருமாறு:

“செய்வன செய்தல் யாண்டும் தீயன சிந்தியாமை
வைவன வந்தபோதும் வசைஇல இனிய கூறல்
மெய்யென வழங்கல், யாவும் மேவின வெஃகல் இன்மை
உய்வன ஆக்கித் தம்மோடு உயர்வன உவந்து செய்வாய்”

சிறியர் என இகழ்தல் கூடாது

திரண்ட தோள்களை உடைய சுக்கிரீவனை நோக்கி, ‘உருவம், வலிமை, அறிவு போன்றவற்றில் நம்மைவிடச் சிறியவர் என்று நினைத்து இகழ்ந்து பிறருக்கு வருத்தம் தரக்கூடிய செயலைச் செய்யக்கூடாது. இந்த நல்ல நெறியினைப் பின்பற்றாமல் நான் ஒரு தீங்கினைச் செய்ததால், பகைமை உணர்ச்சி வளர்ந்து குறுகிய உடம்பினை உடையவளான கூனியால் வறுமைகளை அடைந்து, கொடிய துன்பமாகிய கடலில் வீழ்ந்தேன் எனும் பாடல் வரி வருமாறு.

“சிறியர் என்று இகழ்ந்து நோவு செய்வன செய்யல்” (4126)

இக்கருத்து வள்ளுவரின் வினைத்திட்பத்தில் வரும் குறள் கருத்தோடு ஒப்பு நோக்கத்தக்கது.

“உருவுகண் டெள்ளாமை வேண்டும்” (வினைத்திட்பம் 667)

எனும் குறள் தொடரே அது.

மங்கையர் பொருட்டால் மாந்தர்க்கு மரணம்

மங்கையர் பொருட்டால் எய்தும் மாந்தர்க்கு மரணம் என்றால்
சங்கை இன்றி உணர்தி, வாலி செய்கையால் சாலும் இன்னும்
அங்கு அவர் திறத்தினானே, அல்லலும் பழியும் ஆதல்
எங்களிற் காண்டி அன்றே; இதற்கு வேறுஉவமை உண்டோ?

எனும் பாடலில் வாலியின் கதையை கூறியும், தன்னுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களையும் எடுத்துக்கூறுகிறான். வள்ளுவரும் 'பெண்ணிற் பெருந்தக்க யாஉள' என வினவியவரே பொருட்பாலில் பெண்வழிச் சேறல் அதிகாரக் கருத்துக்களில் இதனை வன்மையாகச் சாடி மனித சமூகத்தை எச்சரிக்கிறார்.

குடிமக்களை ஓம்புதல்

குடிமக்களிடத்து அன்பு காட்டி ஒழுகுதல் வேண்டும். அவ்வாறு ஒழுகும்போது எவரேனும் குற்றம் புரிந்தால் அக்குற்றத்திற்கேற்றபடி தண்டித்தலும் அரசர்க்கு ஏற்ற முறையாகும். இக்கருத்து இடம் பெறும் குறள் வரிகள் வருமாறு.

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்" (செங்கோன்மை 549)

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல், பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்" (செங்கோன்மை 550)

"தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து" (வெருவந்த செய்யாமை 561)

"கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
அடுமுரண் தேய்க்கும் அரம்" (வெருவந்த செய்யாமை 567)

இக்குறள் வரிகளை உள்ளடக்கிய இராமகாதைப் பாடல் வரிகள் வருமாறு.

"நாயகன் அல்லன் நம்மை நனிபயந்து எடுத்து நல்கும்
தாய் என இனிது பேணி தாங்குதி தாங்குவாரை
ஆயது தன்மையேனும் அற வரம்பு இகவாவண்ணம்
தீயன வந்தபோது சுடுதியால் தீமையோரை" (4128)

இங்ஙனமே இராமகாதை முழுவதும் பலவிடங்களில் கம்பன் வள்ளுவரின் வழித்தடத்தைப் பின்பற்றிச் செல்லும் போக்கினை காண இயலும். இங்கு இவ்வரசியல் கருத்தினூடே பின்வரும் அறிஞரின் கருத்தையும் நினைந்து நோக்க வேண்டும்.

"அரசியல் என்பது மனிதவாழ்க்கையிலிருந்து பிரிக்கமுடியாத ஒரு தத்துவம். கொள்கை அரசியல் என்பது வாழும்முறை (Way of life) அல்லது வாழ்க்கை முறை (Way of living) ஆகும். அஃதொரு சமுதாய வாழ்க்கை முறை. அரசியல் சமுதாய வாழ்க்கைக்கு ஒழுங்கமைதியைத் தருவது. ஒருவர்க்கு மேற்பட்ட பலர் கூடி வாழ்வதற்கும் பொருளியல்

ஒழுங்கியல் முறைகளுக்கும் அரசியலே வழிவகுத்துத் துணை செய்கிறது. அறநெறிகளில் மனித குலம் ஒன்றி நின்று வாழ்வதை உறுதிப்படுத்தத்தான் அரசியல் தோன்றுகிறது தொண்டு செய்கிறது. அரசியல் தத்துவங்கள் மனித உலக வரலாற்றின் நிகழ்வுகளிலிருந்து தோற்றம் பெறுகின்றன. சிறந்த அரசியல் நிலவும் நாட்டில் ஒழுங்குகள் நிலவும். வாழ்க்கையின் துய்ப்புக்குரியன அனைத்தும் எளிதில் கிடைக்கும். அறிவுத்துறை மேம்பட்டு விளக்கமுறும் ஆங்குப் பகை ஒடுங்கிப் பண்பாடு விளங்கும். அரசியலின் பயன் அரசியலை நடத்துபவர்களுக்கன்று மக்களுக்கேயாம்" (குன்றக்குடி அடிகளார் திருவள்ளுவர், சொர்ணாம்மாள் நினைவுச் சொற்பொழிவுகள், பக்.60)

இந்தச்கருத்தின் பின்னணியில், கம்பன் இராமன் மூலமாக சுக்கிரீவனுக்குக் கூறிய அரசியலறம் வள்ளுவ நெறியில் வழியில் எடுத்துச் செல்லும், சொல்லும் வள்ளலே என்பது மிகையன்று.

கம்பனில் குறளின் குரல்

முனைவர் இரா.முருகன்
உதவிப் பேராசிரியர், தமிழ்ப்பிரிவு, தொலைதூரக் கல்வி இயக்ககம்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

முன்னுரை

இறைவனை மனித உருவில் காப்பியத்தில் உலவவிட்ட பெருமை கம்பரையே சாரும். அதிலும் கதை நாயகனை அறத்தின் மூர்த்தியாகப் படைத்ததோடு, புலனடக்க மாண்புடையவனாகவும் படைத்ததே சிறப்பிலும் சிறப்பு. புலனடக்கத்திற்கு மூலமாய் அமைவது அறம். வள்ளுவர்வழி நின்று கம்பர் காட்டும் அறங்களைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அறம் – விளக்கம்

அறம் எனும் சொல்லிற்கு, எந்த ஒரு செயலைச் செய்தாலும் செயலைச் செய்பவருக்கோ அல்லது செய்யப்படுபவருக்கோ யாதொரு தீங்கும் இல்லாமல் சுமூகமான முடிவைக் கொடுக்கும் நிகழ்வு எனப் பொதுவான விளக்கம் அளிக்கலாம். நல்வாழ்விற்கு அடிப்படையான முக்கியக் கூறாகிய அறம் என்பதனைச் சான்றோர்கள் இல்லறம், துறவறம் எனும் இருவகைகளாகப் பிரிக்கின்றனர். இந்த அறத்தினை உலக இயல்புகளோடு ஒப்பிட்டுத் 'தனி மனித அறம், 'சமூக அறம் என மேலும் இரு பிரிவுகளாகப் பகுக்கலாம். தனிமனித அறம் என்பது சமுதாய அறத்திற்குள் அடங்கிவிடுகிறது. இச்சமூக அறமானது கம்பர் படைத்த காப்பிய உலகில் பல்வேறு அறக்கூறுகளாகக் காணப்படுகிறது.

அரசியல் அறம்

இனக்குழு வாழ்க்கைமுறை முதலாக இன்றளவும் உள்ள அரசியல் வரை மக்கள் குழுவிற்கு அடித்தளமாய் அமைபவன் தலைவன். இதனால் அனைத்துச் செயல்பாட்டிற்கும் மன்னனே மூலமாகக் கருதப்பட்டான். எனவே, மன்னன் தெய்வ நிலைக்கு உயர்த்தப்பட்டான்.

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" (குறள்-388)

எனும் வள்ளுவவரிகள் இதனை உறுதி செய்கின்றன. தயரதனின் நாட்டில்உள்ள மக்கள் அனைவரும் எல்லாப் பொருள்களையும் பெற்று வளமுடன் வாழ்ந்தனர்.

"எல்லோரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ"

(பாலகாண்டம், நாட்டுப்படலம், 38)

எனும் வரிகள் தயரதனின் சிறப்புமிக்க நல்லற ஆட்சியை உணர்த்துவதோடு மக்கள் வாழும் எல்லா நகரங்களும் இதுபோலவே இருக்க வேண்டும் என்ற கம்பரின் எண்ணத்தையும் வெளிப்படுத்துகின்றன.

தக்கவழிகளை ஆராய்ந்து சொல்லும் சான்றோர்களான அமைச்சர், மதகுருமார், படைத்தளபதி போன்றோரின் சொல் கேட்டு நல்லாட்சி நடத்தினான். தேர்ந்த படைவீரர்களையும் வலிமையான அரண்களையும் கொண்டு ஆட்சி புரிந்தான் தயரதன். சொந்த நாட்டில் கூட ஆராய்ந்தே செயல்பட வேண்டும் எனும் வள்ளுவர் வாக்கை உள்வாங்கிய கம்பர் பகைநாட்டாரைத் (வீடணன்) தம் பக்கம் சேர்க்கும் நிகழ்வில் இராமனை நுட்பமாகச் செயல்பட வைக்கிறார். சுக்ரீவன், அனுமன், அங்கதன் ஆகியோரைக் கலந்து முடிவெடுப்பதும், சுக்ரிவனுக்கு முடிசூட்டியபின் கூறிய மறுமொழிகளும் இராமனின் அரசியல் அறத்தைச் சுட்டுகின்றன. மேலும் இராமனின் முடிசூட்டு விழாவிற்குப் பின்னர் அவனோடு வந்து உதவியவர்களுக்குப் பரிசுப்பொருள் அளித்து விடைகொடுத்த செயலானது இராமனின் அரசியல் அறத்தையும் அதன்வழிக் கம்பரின் கைதேர்ந்த அரசியல் ஞானத்தையும் புலப்படுத்துகிறது.

இல்லற அறம்

வான்மீகத்திலிருந்து பெற்றாலும் தமிழ் மரபிற்கேற்ப இலக்கியம் கண்ட கம்பனின் தன்மையை அறிய, ஐவகைநில அமைப்பு, அகவாழ்வின் களவு மற்றும் கற்பு நிலைகள், மறத்தில் அறம் கண்ட தன்மை, பிறன்மனை நயந்த இராவணனின் அழிவு போன்றவை பதச் சோறாய் விளங்குகின்றன. அறவழியிலும் பிறர் பழிக்காத வகையிலும் கணவன், மனைவி இருவருமாகச் சேர்ந்து வாழ்வதே இல்லறமாகும்.

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று" (குறள்-49)

எனும் வரிகளுக்கேற்ப, கணவனுடனான வாழ்வே உயர்ந்த வாழ்வு எனக் கருதி இராமனுடன் காட்டுக்குச் செல்ல முடிவெடுத்த சீதையின் மன உறுதி இல்லற அறத்திற்குச் சான்றாகும்.

"எரியும் என்பது யாண்டையது ஈண்டு நின்
பிரிவினும் சுடுமோ பெருங்காடு என்றாள்"(அயோ. காண். நகர் நீங்கு படலம், 512)

எனும் கம்ப வரிகள் சீதையின் இல்லற அறத்தைப் பறைசாற்றுகின்றன. சீதையைப் போல் அல்லாமல் நாட்டிலேயே இருந்து கணவனை நினைத்து வாழ்வதும் இல்லற நெறியே என்பதனை, 'கணவனைப் பிரிதலினும் அவள் கடமை வழுவாதவள் என்ற பெயரை நிலைநாட்டத் தன்னை வருத்திக் கொள்வது அவளுக்கு உகந்ததாய் இருந்திருக்கிறது" (கம்பரின் அறிவியல், அறிவுநம்பி, ப.112) என்று ஊர்மிளையின் கற்புத் திண்மையை அறிவுநம்பி குறிப்பிடுகிறார். இவ்வாறு வள்ளுவர் புகன்ற பிறன் பழிக்காத இல்வாழ்வையே தம் காப்பியத்தில் நிலைநாட்ட முயன்றிருப்பது வள்ளுவச் சார்புள்ள கம்பரையே கண்முன் நிறுத்துகின்றது.

எவ்வளவோ பணிவிடைகள் செய்த இலக்குவன், சீதை ஆணையிட்டால் செய்வதற்குத் தயாராக இருந்த போதிலும் கணவனான இராமனிடம் மட்டுமே மானைப் பிடித்துத் தரச்சொன்னது, தான் இல்லாததால் விருந்தோம்பலின்போது இராமன் என்ன துயர் உறுவானோ என அசோகவனத்தில் இருந்த சீதை வருந்தியது, கற்புக்கரசியான கண்ணகியைப்போலவே சீதை அசோகவனத்தில் இருந்தபோது அணிகலன் எதுவும் அணியாமல் இருந்தது மற்றும் தனித்த நிலையில் போரிட வலிமையில்லாத சுக்ரீவன் வாலியைப் போருக்கு அழைத்தபோது இராம-சுக்ரீவனின் கூட்டுச்சதியை உணர்ந்த தாரை தன் கணவனான வாலியைப் போருக்குச் செல்ல வேண்டாம் எனத் தடுத்தது, வாலி இறந்தபிறகு தாரை கைம்மை நோன்பு மேற்கொண்டது, மேலும் மண்டோதரி தன் கணவனான இராவணன் இறந்தது கண்டு அவனின் மார்பைத் தழுவி தன்னுயிர் துறந்தது போன்ற செயல்களின்வழி காதல் ஒருமித்த இல்லற வாழ்வினை முதற்பாவலர்வழி உணர்த்தி நிற்கின்றார் கம்பர்.

நட்பறம்

அறத்தின் வடிவமான இராமன் அன்புள்ளம் கொண்டவனாகவும் விளங்குகிறான். அன்பிற்குப் பாத்திரமானவர்களிடம் நட்புப் பாராட்டவும் செய்கிறான். நட்பினது முதன்மையான பண்பாக 'உள்ளன்பு' என்பதனை வள்ளுவர்,

'முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு" (குறள்-786)

எனும் அடிகளில் குறிப்பிடுகிறார். சகோதரபாசத்தை மட்டுமே தன்னளவில் அறிந்த இராமன் முதன்முதலில் நட்பு கொள்வது

குகனைத்தான். வேடனை நண்பனாக ஏற்று உறவாக்கிக் கொண்டது போல் குரங்கினத்து அரசனான சுக்ரீவனையும் உறவாக்கிக் கொள்கிறான். 'இடுக்கண் களைவதாம் நட்பு' எனும் அடிக்கேற்ப வாலியைக் கொன்று சுக்ரிவனுக்கு அரசாட்சியை மீட்டுத் தருகிறான.; சுக்ரிவன், வீடணன் ஆகியோர் அறத்திற்கு எதிரான செயலைச் செய்தவர்களிடமிருந்து பிரிந்து வந்தவர்கள். ஆனால் இவர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டதாலேயே இராமனுடைய நட்பில் குகன் முதலிடம் பெறுகிறான் எனலாம். வேடர், குரங்கினத்தார், அரக்கர் ஆகியோரிடம் ஏற்றத்தாழ்வு பாராட்டாது நட்பு கொண்ட இராமனின் பண்பைக் கம்பர் மீது ஏற்றிக் கூறுவதுபோல், 'பிறப்பினால் உயர்வு தாழ்வு பாராட்டும் புன்மையை வெறுத்த கவிஞன் குகனைக் காகுத்தன் தோழனாகப் போற்றியதாகச் சித்தரிப்பான்" (இராமகிருஷ்ணன், கம்பசூத்திரம், ப.2) என்கிறார். இராமன் ஏற்றத்தாழ்வு பாராட்டுதல் என்பது காப்பிய நோக்கத்திற்கே கேடாகி விடும். எனவே, கம்பர், பொதுமறை சுட்டும் நட்பு வடிவமாகவே இராமனை வடித்தளிக்கிறார்.

போர் அறம்

அகவாழ்வில் அறம்கண்ட தமிழர்கள் புறவாழ்விலும் அறம் மேற்கொண்டனர். 'ஆவும் ஆனியற் பார்ப்பன மக்களும்' எனும் புறநானூற்று அடி இதனைப் பறைசாற்றுகின்றது. போர்த்தூதுக்கு வருபவர்களைத் துன்புறுத்தக் கூடாது என்பது போர் அறம். ஆனால் இலங்கையர்கோன், அனுமனையும் அங்கதனையும் வருத்துகிறான். வீடணன் 'தூதுவர் கொல்லாமை' என்று அறங்கூறியும் மறுக்கிறான். இந்திரசித்தனும் போர் அறம் மீறியவனாய் மாயசால வேலைகளைச் செய்கிறான்.

போரில் பகைவரை வெல்வதை விட, போர்க்களத்தில் துன்பமுறும் அப்பகைவருக்கு உதவுவதே வீரத்திலும் சிறந்தது என்ற பொதுமறை அடிகள் போர் அறத்தை முதன்மைப்படுத்துகின்றன.

"பேராண்மை என்பதறுகண் ஒன்று உற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு" (குறள்-773)

போர்க்களத்தில் ஆடை அறிழ்தல், அணிகலன் துறந்த நிலை, ஆயுதம் இழந்து நிராயுதபாணியாக இருத்தல், தோல்வியை ஒத்துக் கொள்ளுதல் போன்ற நேரங்களில் போர் புரியாமையே அறம். சம்புமாலி எல்லாப் படைகளையும் இழந்து ஒரு தேருடன் மட்டும் இருக்கும்போது இராமன் அவனைக் கொல்லாது இங்கிருந்து

போய்விடு என்கிறான். இதைவிட அறத்தின் வடிவான இராமன், இராவணனை 'இன்று போய் நாளை வா' என்று விடுப்பதும் போர் அறத்திற்குச் சரியான சான்றாகும். இதன்வழி 'அறம் வெல்லும் பாவம் தோற்கும்' எனும் காப்பியக் கருப்பொருளை இராம-இராவணன்மூலமே கம்பர் நிகழ்த்தி விடுகிறார்.

முடிவுரை

திருவள்ளுவர், கம்பர் ஆகிய இருவரும் பல்வேறு கருத்துக்களைப் பேசி இருந்தாலும் கம்பராமாயணத்தின் பல இடங்களில் வள்ளுவரின் குரல் ஒலிக்கக் காண்கிறோம். அவ்வகையில் மனித வாழ்வியலின் உன்னதப் பகுதியான அறம்பற்றிய செய்திகள் வள்ளுவத்தில் வருவதைப் போலவே கம்பனிலும் ஒத்துப் போவதைக் காணமுடிகிறது.

வள்ளுவர் கருத்திற்கு வளஞ்சேர்க்கும் வள்ளல்

திருமிகு. க.பழனியம்மாள்
முனைவர் பட்ட ஆய்வாளர், தேசியக் கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

உலகின் பொதுமறை! தமிழ் மாதின் இனிய உயிர் நிறை! வள்ளுவம்! உலகே ஏத்தும் வள்ளுவத்தை கம்பன் தன் கவியில் ஏற்றி வள்ளுவம் போற்றும் வள்ளலாகி நிற்குமிடம் பல உள. அதில் ஒரு பானை சோற்றுக்கு ஒன்று சான்றாவதைப் போலச் சிலவற்றை இங்குக் காண்போம்!

"கலஞ்சுரக்கு நிதியம் கணக்கிலா
நிலஞ்சுரக்கு நிறைவள நன்மணி
பிலஞ்சுரக்கும் பெறுதற் கரியதன்
குலஞ்சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்"

என்ற கோசல நாட்டு வளம் கூறுமிடத்தில் 'பெறுதற்கரிய தன்குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கெலாம்" என்பதை 'ஒழுக்கமுடைமை குடிமை" (குறள் 133) என்ற வள்ளுவர் வார்த்தையால் அமைக்கின்றார். அதன்வழி சிறக்கின்றார்!

தெய்வம் தொழாஅள் – யார்?

வள்ளுவர் 'தெய்வம் தொழாஅள் கொழுநற்றொழு தெழுவாள்; பெய் எனப் பெய்யும் மழை" (குறள் 55) எனச் சொன்னார். அதைக் கேட்டவரோ கவிச்சக்கரவர்த்தி, விட்டு விடுவாரோ சும்மா:

"தங்கள்நா யகரிற் தெய்வம் தவம்பிறிது இலதென் றெண்ணும்
மங்கைமார் சிந்தை போலத் தூயது மற்றுங் கேளாய்" (கேள்விப் -17)

எனப் பாட்டமைத்து, 'தன் கணவரைக் காட்டிலும் வணங்கத்தக்க தெய்வம், தவம் வேறு இல்லை என்றெண்ணும் பெண்ணின் உள்ளம் தூயது' என்கிறார். அதனால் அவள் பெய் எனப் பெய்யும் மழை" - என வள்ளுவர் கருத்துக்கு வளம் சேர்க்கும் கருத்து வள்ளல் கம்பன்! தலைவனின் கண்கள்! தலைவியின் கண்கள்! இரண்டும் கட்டுண்டது நோக்கால்! ஒத்தது அன்பால்! அங்கு பேச்சால் என்ன பயன்?

"எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினானவளும் நோக்கினாள்" (மிதிலைக் காட்சி - 35)

சீதையின் கண்களைக் கவ்வியது இராமனின் கண்கள்! கவ்வியதை உண்ணாது உணர்வால் ஒன்றியது நெஞ்சம்! ஒன்றிய நெஞ் சோடும் அவனும் நோக்க! அவளும் நோக்க! கம்பரும் நோக்கினார் வள்ளுவத்தை!

"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல" (குறள் 1100)

என்ற நெறி நோக்கி! வார்த்தை பேசாது விடுத்தார்! தமிழனின் காதல் (மனம்) மணத்தை வளர்த்தார்! மனமொத்த காதலால் திருமணத்தை அமைத்தார்! தமிழனின் தனி முத்திரையைப் பதித்தார்! நம் பண்பாட்டு வள்ளல்!

செய்நன்றி எது?

"உதவாமல் ஒருவன் செய்த உதவிக்குக் கைம்மாறாக
மதயானை யனைய மைந்த மற்றுமுண் டாகவற்றோ
சிதையாத செறுவில் அன்னான் முன்சென்று செறுநர்மார்பின்
உதையானேல் உதையுண் டாவி உலையானேல் உலகின் மன்னோ"
(கிட்சிந்தைப் -66)

மதயானையொத்த மைந்த! தான் ஒருவனுக்கு ஓர் உதவியும் செய்யாதபோது, தனக்குப் பிறர்செய்த உதவிக்குப் பதிலாக (மாற்றாக) செய்யத்தக்கதும் ஒன்று உண்டோ? குற்றமற்ற போரில் தான் துணையாகச்சென்று பகைவரது மார்பில் உதைத்து அழித்தலும், அஃது இயலாதாயின், அப்பகைவரால் உதையுண்டு தான் உயிர் விடுதலும் ஆகிய செயல் ஒன்றே செய்யத்தக்கதாகும்: அன்றிப் பிறிதில்லை" - எனச் சொல்லின் செல்வன் அனுமனைப் பேச வைத்தார், 'செவிக்குத் தேனென இராகவன் புகழைத் திருத்திய கவிக்கு நாயகன் கம்பன்" அப்பேச்சில் அவர் ஊற்றிய சாறு,

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது" (குறள் 101)

என வள்ளுவன் வடித்த சாற்றின் சாரம்! அது மணப்பதோ நம் கம்பனின் கவியோரம்! வள்ளுவத்தை வாய் மணக்கப் பேசுவதே நன்றியுள்ளல் என்கிறார் கம்பவள்ளல்!

சான்றாண்மைக்கு வள்ளல் யாரோ?

"ஊழி பெயனினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்" (குறள் 989)

சான்றாண்மைக்கு கடல் எனப்புகழப்படும் சான்றோர், ஊழி (உலகம்) அழிந்தாலும் தம் சால்பில் (நன்னெறியில்) இருந்து வேறுபட்டு நிற்க மாட்டார்"-எனச் சான்றோர்க்கு உரிய நெறியை வள்ளுவர் கொள்கையாக்கி கோட்டை மீதேற்றினார்! அதைக் கண்ட கம்பர்,

"வழிகெட வரினும் தத்தம் வாழ்க்கை தேய்ந்து அதினும் மார்பம்
கிழிபட அயில்வேல் வந்து கிழிப்பினும் சான்றோர் கேட்கும்
மொழிகொடு வாழ்வ தல்லால் முறைகெடப் புறம்நின்று ஆர்க்கும்
பழிபட வாழ்கிற் பாரும் பார்த்திபர் உளரோ பாவம்" (மாயாசனக.-66)

'வாழ வழிகெட்டு போயினும், வாழ்க்கை அழிந்துபோயினும், வாழ்வே முடிந்து போயிலும், மார்பு பிளக்க வேல்வந்து கிழிப்பினும், சான்றோர்கள் கேட்டுப் போற்றுதற்குரிய அறநெறியில் வாழ்வரேயல்லால் பழிபட வாழ்வரோ பார்த்திபர்" என வினவுகின்றார்.

வள்ளுவன் சொன்ன 'ஊழி பெயரினும் சான்றோர் சான்றாண்மை தவறார்," என்ற கருத்தைத் தான் படித்து இன்புற்றதோடு, அந்நெறியில் உலகும் உய்ய, தன்மொழியில் தந்தருள் செய்தார் கம்பரெனும் சான்றாண்மை வள்ளல்!

உலகத்தத்துவம்

நிலையில்லாத உலகில், நிலைக்கும் என்ற கனவில் வாழுவோர்க்கு,

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் வுலகு" (குறள் 336)

என மணியடித்து நிலையாமை என்பதே உலகின் பெருமையெனப் பறைசாற்றுகிறார் வள்ளுவர். கூடவே,

"ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்" (குறள் 233)

என்று 'ஒன்றாத உலகில் புகழே அழியாது நிற்கவல்லது" என்ற எச்சரிக்கையையும் தந்து செல்கிறார் வள்ளுவப் பெருந்தகை!

சான்றோர் வாய்மொழி மீறாத கம்பர் தான்கற்ற இந்த உலகத் தத்துவத்தை,

"வென்றில் னென்றபோதும் வேதமுள்ளளவும் யானும்
நின்றனெ னன்றோ மற்றவ் விராமன்பேர் நிற்கு மாயின்
பொன்றுத லொருகா லத்தும் தவிருமோ பொதுமைத்தன்றோ
இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கு மிறுதியுண்டோ"
(இந்திரசித்து வதைப்படலம்-10)

என இராவணன் கூற்றை அமைத்தான்! அதன்வழி 'இன்றிருப்பவர் நாளையில்லை; ஆனால் அவரது புகழோ அழிவின்றி நிலைத்திருக்கும்; உலகு உள்ளவரை' என்பதைச் சமைத்தான்! வள்ளுவனின் கோட்பாட்டில் திளைத்த கம்பன்!

அச்செந்நெறியில் தழைத்தவன் கம்பன்! அந்நெறியில் நடை பயின்றவன் கம்பன்! -என்பதையெல்லாம் கம்பனின் கருத்தோட்டத்தில், விளைந்த பல கவிதைகளின் சாரமாய் நிற்பது வள்ளுவம்! அது வள்ளுவ நெறி நிற்பவன் கம்பனென்பதைச் சாற்றுகின்றன!

நிறைவுரை

நூலின் பயன் அறம், பொருள், இன்பம், வீடுபேற்றை அளிப்பதே ஆகும். செந்தமிழ்ச் சொல்லால் அறம், பொருள், இன்பம், வீடுபேற்றை வள்ளுவம் காட்டும் தமிழ் நெறிப்படி தந்து சென்ற தமிழ்மொழி காத்த வள்ளல் கம்பன்! தமிழ் நெறிகாத்த வள்ளல் கம்பன்! தமிழ்ப் பண்பாடு காத்த வள்ளல் கம்பன்! என்பதே முற்றிலும் பொருந்தும் உண்மை! தன் கூற்றிற்குத் தானே உதாரணமான 'சொல்லின் செல்வன்" கம்பன்!

"ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்" (குறள் 233)

என்பதன்படி 'இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கு மிறுதியுண்டோ?" எனத் தான்கேட்ட கேள்விக்குத் தானே பதிலுமாகி அழியாது புகழோடு இவ் ஒன்றாத உலகில் நிலைத்திருக்கும் வள்ளுவ நெறியாளன் கவிச்சக்கரவர்த்தி கம்பன்! போற்றுமின்!

கம்பராமாயணத்தில் திருக்குறள்

திருமிகு. இராம் மோகன்தாஸ்
ஆதம்பாக்கம், சென்னை.

தமிழில் பிரபலமானவை இரண்டு நூல்கள். அவை கம்பராமாயணம்; திருக்குறள். இந்த இரண்டு நீதி நூல்களையும் மக்கள் படிக்க வேண்டும். தமிழ்மொழியின் இரண்டு பொக்கிஷங்கள், கம்பராமாயணமும், திருக்குறளும். திருக்குறளுக்கான விளக்கம், கம்பராமாயணத்தில் உள்ளது. திருக்குறள் சுலோகம் என்றால், அதற்கான நிகழ்ச்சி கம்பராமாயணத்தில் இருக்கும். திருக்குறளின் இரண்டடிக் குறள் வெண்பாவிற்கு, கம்பராமாயண விருத்தப்பாவில் விளக்கம் காணலாம்.

திருவள்ளுவரும், கம்பரும் இன்றைய இளந்தலைமுறை-யினருக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும். நமது நாட்டின் முன்னேற்றங்கள், பெருமைகள் இவைகளுக்கான வழிகாட்டுதல்களை நாம் நம் புராண, இதிகாசங்களிலிருந்து காலங்காலமாகக் கற்று வருகிறோம். இன்றைய இளைய சமூகம், ஊடகங்களின்மூலமாக வன்முறைகளைக் கற்றுக்கொள்கின்றனர். நல்லது எது, கெட்டது எது என்று தெரியாமலேயே வாழ்கின்றனர். இந்த நிலையைப் போக்கி, சமதர்ம சமுதாயத்தைக் கொண்ட ராமராஜ்ஜியம் அமைக்க கம்பராமாயணத்தை, திருக்குறளுடன் ஒப்பிட்டுச் சொல்லப்பட வேண்டி இருக்கிறது. ஏனென்றால் கம்பன் - வள்ளுவ நெறி செல் வள்ளல்.

கம்பராமாயணம், பாலகாண்டம், ஆற்றுப் படலத்தில் ஒருபாடல். சரயு நதியின் சிறப்பைக் கூறும் பாடல். அதேநேரத்தில் தசரத சக்கரவர்த்தியின் ஒழுக்கத்தைப் பற்றியும் பேசுகிறது. சூரிய குலத்தில் தோன்றிய எண்ணிலாப் பல அரசர்கள், பிறர் போற்றுதற்குரிய நல்ல ஒழுக்கத்தினை இடையறாது தங்களிடம் மேற்கொண்டிருந்தார்கள். அதுபோல எப்பொழுதும் வெள்ளம் கரைபுரண்டு ஓடும் சரயு என்னும் ஆறு, கடலால் சூழப்பட்ட இந்த உலகத்து உயிர்களுக்கு எல்லாம் தாய்ப்பாலைப்போல பயன் அளிப்பதாகும். அதாவது ஆற்றொழுக்குப் போல சூரிய குல மன்னர்கள் ஒழுக்கத்தில் சிறந்தவர்கள் என்பதாம்.

"இரவி தன் குலத்து எண் இல் பல்வேந்தர் தம்
பரவு நல் ஒழுக்கின் படி பூண்டது, -

சரயு என்பது - தாய் முலை அன்னது, இவ்
உரவுநீர் நிலத்து ஓங்கும் உயிர்க்கு எலாம்.

(கம்ப. பாலகாண்டம் - ஆற்றுப் படலம் - பாடல் 24)

சரயுநதி இரண்டு கரைகளுக்கு இடையே தொடர்ந்து ஓடிக் கொண்டிருக்கும் ஜீவநதி. அதேபோல சூரியகுலத்தின் முதல் மன்னன் மனு முதல் தசரத சக்கரவர்த்தி வரை தோன்றிய அனைத்து அரசர்களும் ஒழுக்கசீலர்கள்; நல்லவர்கள்; வல்லவர்கள். சரயுநதி இரண்டு கரைகளுக்கு இடையே தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கிறது. தொடர்ச்சிவிடாமல் ஓடிக்கொண்டிருக்கிறதை ஆற்றொழுக்கு என்பார்கள். அதுபோல் மனுமுதல் தசரதமன்னர் வரையிலான அனைத்து சூரியகுல அரசர்களும் ஒழுக்க சீலர்கள்.

ஆற்று ஒழுக்கத்தில், அரசு ஒழுக்கத்தை இணைத்துக் கவிபாடும் புலமையும், திறமையும் கம்பரின் தனிச்சிறப்பாகும். ஆற்றின் இருகரையும் திடமானதாக இருக்கிறபடியால் நீர் ஒழுங்காக கரையை உடைத்துக்கொண்டு வெளியேறாமல் ஓடிக்கொண்டிருக்கிறது, என்பதை கம்பர் உணர்த்துகிறார். சரயு நதி கரை புரளாமல் கரைகளுக்குள் ஓடுவதுபோல சூரியகுலத்து எல்லா மன்னர்களும் மனு முதல் தசரதன் காலம் வரை ஒழுக்கசீலர்களாக இருந்தார்கள் என்பதாம். மன்னர்கள் ஒழுக்கமாய் வாழ்ந்தார்கள் என்றால் மக்களும் ஒழுக்கமாய் வாழ்ந்தார்கள் என்பது உணர்த்தப்படுகிறது. இதனையே,

"பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை" (குறள் 132)

எல்லா அறங்களையும் குற்றமற ஆராய்ந்து தேர்ந்தாலும் ஒழுக்கமே உதவியாக இருத்தலால், அவ்வொழுக்கத்தைத் தவறவிடாது வருந்தியும் காத்தல் வேண்டும் என்கிறது திருக்குறள்.

இன்றைய ஆட்சியாளர்கள் ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டிய அவசியம் உணர்த்தப்படுகிறது. ஏனென்றால், அப்பொழுது தான் மக்கள் ஒழுக்கசீலர்களாக இருப்பார்கள். மனித குலத்திற்கு ஒழுக்கம் முக்கியம். திருக்குறளுக்குப் பொருத்தமான கம்பராமாயணக் காட்சி இது.

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமைதரும்" (குறள் 416)

"செல்வத்துள்செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை" (குறள் 411)

என்ற இரண்டும் கேள்வி அதிகாரத்தில் வரும் திருக்குறள்கள். கேள்விக்கு, அதாவது காதால் கேட்டு உணர்ந்துகொள்வதற்கு அத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறார் திருவள்ளுவர். ஒருவன் ஆசிரியரிடம் போய், கல்வி கற்க வேண்டுமென்பது கூடாது போனால், பலருடைய கேள்வி ஞானத்தால் தன்னை அறிவுடையவராக ஆக்கிக் கொள்ளலாம். அது சாத்தியம். பிறந்த குழந்தை தாயின் பேச்சைக் கேட்டுத்தான் தன் பேச்சாற்றலை வளர்த்துக் கொள்கிறது.

பிரகலாதன், தாயின் வயிற்றிலிருக்கும்போதே நாராயணன் பெருமைகளைக் கேட்டு நாராயண பக்தனான். ஆகவே, கேள்வி ஞானம் வேண்டும் என்பதால்தான் இறைவன் படைப்பில் காதுகளுக்கு கதவு வைக்கவில்லை. மூக்கு எப்போதும் மூச்சுவிட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இறைவனின் பெருமைகளைக் காதால் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

கம்பராமாயணத்தில் அயோத்திநகரத்து மக்கள் நல்லனவற்றைக் கேட்க வேண்டும் என்பதற்காக பட்டி மண்டபங்களை ஆங்காங்கே தசரத மன்னன் கட்டியிருந்தான். அந்த மண்டபங்களில் உரையாற்றியவர்கள், கேட்பவர்கள் காதுகளில் இனிக்கும் கனியைப் போன்ற சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். அயோத்தி மாநகரில் இருந்த மண்டபங்கள் பற்றிக் கம்பர் கூறுகிறார்.

"மன்னர் தரு திறை அளக்கும் மண்டபம்,
அன்னம் மென் நடையவர் ஆடு மண்டபம்,
உன்ன அரும் அரு மறை ஓது மண்டபம்,
பன்ன அருங் கலை தெரி பட்டி மண்டபம்"

(கம்ப. பால காண்டம் - நகரப் படலம் - பா-155)

அயோத்தி நகரிலே பல வகையான மண்டபங்கள் இருந்தன. அவை: பிறநாட்டு வேந்தர்கள் கொண்டுவந்து கொடுக்கும் திறைப் (கப்பம்) பொருளை அளப்பதற்கு உரிய மண்டபம். அன்னம் போல் நடக்கும் மென்மை மிக்க மங்கையர்கள் ஆடல் நிகழ்த்தும் மண்டபம். நினைவில் கொள்வதற்கு அரிய, ஓதுவதற்கு அரிய, வேதங்களை ஓதுகின்ற மண்டபம். ஆராய்வதற்கு அரியதான பல்வேறு கலைகளை ஆராய்வதற்கு உரிய பட்டி மண்டபம் ஆகியன அயோத்தி நகரில் எண்ணற்றவை இருந்தன என்பதாம்.

இதனால் அறியப்படுவது, ஆன்மீக, இலக்கிய, கலைகள் பற்றிய சொற்பொழிவுகள் நடத்த வசதிகள் செய்யப்பட்டிருப்பதால்,

அவைகள் நிகழ்ந்த வண்ணமிருந்தன என்பது உறுதியாகும். இந்த வசதி இப்போது குறைந்துகொண்டே வருகிறது. கோயில்களில் நமது முன்னோர்கள் ஆன்மீகச்சொற்பொழிவுகள் நிகழ்த்த கட்டளைகள் ஏற்படுத்தியிருந்தனர். அவற்றையெல்லாம் நாம் அழித்துவிட்டோம். ஆன்மீக இலக்கிய கலை சொற்பொழிவுகள் அன்று ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருந்தன. அன்றைக்கு பொழுதுபோக்கு சிலவகை. அவற்றில் சொற்பொழிவுகள் கேட்பது ஒன்றாகும்.

"பொருந்திய மகளிரோடு வதுவையில் பொருந்துவாரும்,
பருந்தொடு நிழல் சென்றன்ன இயல் இசைப் பயன் துய்ப்பாரும்,
மருந்தினும் இனிய கேள்வி செவி உற மாந்துவாரும்,
விருந்தினர் முகம் கண்டு, அன்ன விழா அணி விரும்புவாரும்"

(கம்ப. பாலகாண்டம் - நாட்டுப் படலம் - பாடல் 47)

கோசல நாட்டு மக்களில் சிலர் தமக்குப் பொருத்தமான மகளிருடன் திருமணச்சடங்கிலே பொருந்தினார்கள். சிலர் பருந்தோடு அதன்நிழலும் தொடர்ந்து செல்வதைப்போல் இயல், இசைப் பயன் அனுபவித்தனர்.சிலர் அமுதத்தைக்காட்டிலும் அதிகமாக இனிக்கும் நூல் பொருளைச் செவியால் பருகினார்கள். சிலர் விருந்தினர் முகங்களைப் பார்த்து அவர்களுக்கு அன்னம் அளிக்கும் விழாவை விரும்பிச் செய்தார்கள். சொற்பொழிவாற்ற மண்டபங்களும், இனிமையாகச் சொற்பொழிவாளர்களும், கேட்டு அனுபவிக்க கேட்பாளர்களும் இருந்தனர் என்பதை கம்பராமாயணம் உணர்த்துகிறது.

கேள்வி அதிகார திருக்குறட்பாக்கள் 411, 416-க்கு கம்பராமாயணத்தில் காணும் பால காண்டப் பாடல்கள் 47, 155 விளக்கமாக காட்சித் தருகின்றன.

திருக்குறள்

"நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு" (குறள் 20)

தண்ணீர் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது. ஏனென்றால், உயிர்கள் அனைத்திற்கும் காற்றுக்கு அடுத்தபடியான தேவை தண்ணீர். அதேபோன்று அந்தஉயிர்கள் வாழும்போது ஒழுக்கம் கடைப் பிடிக்கவும் தண்ணீர் தேவைப்படுகிறது.

மூன்றாம் உலகப்போர் நடைபெறுமானால், அது தண்ணீருக்காகத்தான் இருக்குமென்பார்கள். தமிழ்நாட்டிற்குத் தண்ணீர்

தராமல் ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்கள் தடுக்கின்றன. பிரம்மபுத்திரா நதி நீர் பங்கிட்டுக்கொள்வதில் இந்தியா, பங்களாதேஷ் ஆகிய இருநாடுகளுக்கு இடையே தகராறு. அதேபோன்று திபெத், இந்தியாவிற்கு இடையே கருத்து வேறுபாடு. ஆகவே, தண்ணீர் ஒழுக்கம் காக்கவும், உயிர் காக்கவும் தேவை.

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான்அமிழ்தம் என்று உணரற் பாற்று" (வான் சிறப்பு -20)

இந்த உலகத்தில் உயிர்கள் தோன்றியநாள் முதல் இன்றுவரை சந்ததிகள் தொடர்ந்து வரவும், இனிமேலும் தொடரவும் தண்ணீர்தான் காரணம். ஆகவே, தண்ணீர் அமிழ்தம். அமிழ்தத்தின் தன்மை இனிமையாக இருக்கும். இளமையைத் தொடரும். உடலை வலுவாக்கும். இறப்பைத் தடுக்கும். எனவே, தண்ணீர் அமிழ்தத்துக்குச் சமமாகக் கருதப்படுகிறது.

உலகத்து உயிர்கள் தொடர்ந்து வாழவும், அவை ஒழுக்கத்தோடு வாழவும், தண்ணீர் இன்றியமையாததாக இருக்கிறது. இந்த உலகத்தில் மக்கள் தண்ணீரைத் தெய்வமாக மதித்து கடல், ஆறு, குளம், குட்டை, வானம் ஆகியவற்றை வணங்கும் பழக்கம் உண்டு.

கம்பராமாயணம்

"ஆசலம் புரி ஐம்பொறி வாழியும்,
காசு அலம்பு முலையவர் கண் எனும்
பூசல் அம்பும், நெறியின் புறம் செலாக்
கோசலம் புனை ஆற்று அணி கூறுவாம்"

(கம்ப. பால - ஆற்றுப் படலம் - பா.1)

நாட்டின் வளத்திற்கு இன்றியமையாதது மிக்க புனலே ஆதலாலும், அப்புனலைக் குறைவறத் தரக்கூடியது ஆறே ஆதலாலும், கம்பர் ஆற்றின் சிறப்பைக் கூறுகிறார்.

நாட்டிலுள்ள உயிர்களும், மற்ற தாவர இனங்களும் உயிர் வாழ தண்ணீர் இன்றியமையாதது. மழையால் கிடைக்கும் தண்ணீர், ஆறுவழியாக நாடு முழுக்கப் பரவுகிறது. 24 மணி நேரமும், 365 நாட்களும் சரயு நதி ஜீவநதியாக ஓடிக்கொண்டு இருப்பதால் கோசலநாடு செழிப்பாக இருக்கிறது. அதாவது, தொடர்ந்து மனித இனமும் மற்ற உயிர்களும், உயிர் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. ஆண்களின் ஐம்பொறிகளும், பெண்களின் கண்களும், அம்பு நேராகச்

செல்வதுபோல் தீய வழியில் செல்லாமல், நேர்வழியில் செல்கின்றன. அதாவது, ஆண்களும் பெண்களும் ஒழுக்கமுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சரயுநதியில் தண்ணீர் தங்கு தடையின்றி ஓடுகிறது. அதுபோலவே, ஆண்களும், பெண்களும் காலங்காலமாக தலைமுறை தலைமுறையாக ஒழுக்கத்தோடு வாழ்ந்து வருகின்றனர். கோசலநாடு சன்மார்க்கத்தில் சென்றுகொண்டிருக்கிறது. நெறியின் புறம் செலா என்பது ஒழுக்கத்திற் செல்கிறது என்பதாம். அது போன்று மக்கள் ஒழுக்கத்தால் வாழ்கின்றனர்.

நீரின்றி அமையாது ஒழுக்கு (குறள் 20), வான் நின்று வழங்கி வருதலால் (குறள் 11) என்ற திருக்குறட்பாக்களின்படி உயிர்கள் ஒழுக்கத்தோடு வாழ, தண்ணீர் அவசியம் என்பதைக் கம்பர், கம்பராமாயணத்தில் சரயுநதியைக் காட்சியாகக் காட்டுகிறார். திருக்குறள்:

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (குறள் 131)

ஒழுக்கம் சிறப்பைத் தருவதால் அவ்வொழுக்கம் உயிரினும் மேலானது என்பதாம்.

மனிதன் உயிரோடு இருக்கிறான். ஒழுக்கமுடையவனாக இருப்பின் அனைவரும் போற்றுவர். இழுக்கம் உடையவன் என்றால், எல்லோரும் இகழ்வர் அல்லது தூற்றுவர். இகழப்படும் மனிதன் எப்போதும் துன்பமும், வருத்தமும் உள்ளவனாக இருப்பான். உலகத்தில் துக்கப்பட்டு இருப்பதைவிட இறப்பதே மேல். ஆகவேதான் மனிதன் உயிரோடு இருக்க ஒழுக்கமுடையவனாக இருக்க வேண்டும். ஒழுக்கமுடையவனாக இருப்பது உயிரினும் மேலாகக் கருதப்படுகிறது.

மனிதனுக்கு ஒழுக்கம் அவசியம். ஒழுக்கம் அவனுக்கு பழக்கமாகிறது. அவனைப்பார்த்து அவன் மகன்களும் அதே ஒழுக்கத்தைக் கடைபிடிக்கிறார்கள். அப்போது தலைமுறை தலைமுறையாகத் தொடர அது வழக்கமாகிறது. அந்த வழக்கமே நடையென்று அழைக்கப்படுகிறது. ஆகவே, ஒருவனை வரன் பார்க்கிறவர்கள் என்ன கேட்கிறார்கள்? பையனின் நடை உடை எப்படி என்று கேட்கிறார்கள். பையனின் நடையைக் கொண்டு குடும்பத்தின் நடையைக் கணக்கிடுகிறார்கள் பெண்வீட்டார். பையனின் நடை உடை எப்படி? என்பதற்கு நடை உடையவனாக எப்படி இருக்கிறான் என்றும் கொள்ளலாம். இராமனின் நடையைப் பற்றிக் கம்பர் மிக அருமையாகக் கூறுகிறார்.

"நடையின் நின்று உயர் நாயகன் தோற்றத்தின்
இடை நிகழ்ந்த இராமாவதாரப் பேர்த்
தொடை நிரம்பிய தோம் அறு மாக்கதை
சடையன் வெண்ணெய் நல்லூர்வயின் தந்ததே"

(கம்பராமாயணம் - பாயிரம், பா 11)

இராமன் ஒழுக்கத்தை உயிரைவிட ஓம்பி அதன்படி நடந்த காரணத்தால், நடையின் நின்று உயர் நாயகன் ஆனார்.

கம்பராமாயணம், பாயிரத்தில் வரும் 11ஆவது பாடலை இராமனின் உயர்ந்த நடைச்சிறப்பை படம்பிடித்து காட்டுவதை திருக்குறளில் ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் வரும் 131ஆவது குறளுக்கு ஒத்து வருவது சிறப்பாகும்.

முடிவுரை

கம்பராமாயணமும் திருக்குறளும் மக்களின் இரு கண்கள். இரண்டு நூல்களையும் மக்கள் அனைவரும் அவரவர்கள் மொழியில் படிக்க வேண்டும் என்பதை இந்த ஆய்வுக் கட்டுரை வலியுறுத்துகிறது.

கம்பன் வள்ளுவ நெறிசெல் வள்ளல்

திருமிகு. ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ்
முனைவர் பட்ட ஆய்வாளர், அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.

தமிழ் இலக்கியவானில் எண்ணிலா விண்மீன்கள் நடுவில் ஒளிவீசும் இருசுடராய்த் திருவள்ளுவரும், கம்பரும் திகழ்கின்றனர். உலகிற்கே ஒளி தந்து வாழ்வளிக்கும் ஞாயிறாய் வள்ளுவரின் திருக்குறளும், தண்ணொளி வீசி, தரணியை மகிழ்விக்கும் திங்களாய் கம்பரின் இராமாவதாரமும் ஒப்பற்ற பேரிலக்கியங்களாய்த் திகழ்கின்றன.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,
வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்,
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை:"

மகாகவி பாரதியார் தமிழுக்குரிய அடையாளங்களாகக் குறிப்பிடுகையில் முதலில் கம்பனையும், இரண்டாவதாக வள்ளுவரையும், மூன்றாவதாக இளங்கோவடிகளையும் குறிப்பிடுகிறார். தானறிந்த புலவர்களில் முன்னிரு இடங்களை கம்பருக்கும், வள்ளுவருக்கும் தந்திருப்பதிலிருந்து பாரதியாரின் உள்ளக்கிடக்கையை அறியமுடிகிறது.

தமிழ்ப்பண்பாட்டை உயர நிறுத்தியதில் கம்பருக்கும், வள்ளுவருக்கும் இணை வேறு எவருமில்லை என்றே கூறலாம். கம்பன் - வள்ளுவநெறி செல் வள்ளல் என்பதற்கு கம்பராமாயணத்தின் ஆறு காண்டங்களிலிருந்தும் ஆயிரமாயிரம் பாடல்களைச்சான்று காட்டலாம். இருப்பினும் கம்பனின் சிந்தனைத் திறத்திற்குக் கட்டியம் கூறுகிற இராமாயணக் காப்பியத்தின் முதற்காண்டமான பாலகாண்டத்தில் சிற்சில சான்றுகளைக் காணலாம்.

முதற்சீரில் ஒற்றுமை

திருக்குறள் நூலின் முதல் அதிகாரமான இறைவாழ்த்துப் பகுதியில் "அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என்னும் முதல் குறட்பாவில் முடிகின்ற சீரான 'உலகு" என்னும் சொல்லிலேயே இறைவணக்கம் "உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்" எனத் துவங்குவது ஒப்புநோக்குதற்குரியது.

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து"

என்றும் குறட்பாவிற்கேற்ப கம்பரின் தன்னடக்கத்தை பாயிரத்தில் அவையடக்கப் பகுதியில்,

"முத்தமிழ்த் துறையின் முறை நோக்கிய
உத்தமக் கவிஞர்க்கு ஒன்று உணர்த்துவென்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?"

காணமுடிகிறது.

நாடும், நகரமும்

வள்ளுவர் 'நாடு' என்றும் 74-வது அதிகாரத்தில் நாடென்பது எப்படியெல்லாம் இருக்கவேண்டுமென்று இலக்கணம் வகுத்துரைக் கிறாரோ அவற்றையெல்லாம் கம்பர், நாட்டுப்படலத்திலும், நகர்ப் படலத்திலும் காட்சிப்படுத்தியுள்ளார். அதைப்போலவே திருக்குறளின் 75வது அதிகாரமான 'அரண்' குறிப்பிடுகின்ற கோட்டையின் தன்மைகள் கம்பராமாயண நகர்ப்படல மதிலின் தன்மைகளோடு ஒத்துப் போகின்றன. வள்ளுவர் அறத்திற்கு இலக்கணம் கூறும்போது,

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று (49)

பிறரால் பழிக்கப்படாமல் இல்லறம் நடத்துவதே அறம். அதுவே உயர்ந்தது என்றுரைக்கிறார். இக்கருத்தையே கம்பர் 'மாதரார் அற்பின் நின்றன, அறங்கள்" (நாட்டுப்படலம்-59) என்று குறிப்பிடுகிறார்

அரசாட்சி

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறையென்று வைக்கப் படும்" (388)

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி" (542)

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு" (544)

மேற்குறிப்பிட்ட குறட்பாக்களில் குறிப்பிடுகின்ற மன்னனது மாட்சியைக் கம்பர், அரசியற்படலத்தில் தயரதனின் அரசுசெய் திறத்திற்குப் பொருத்திக் காட்டுகிறார்.

"வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்து இனிது அரசு செய்கின்றான்" (179)

திருக்குறளில் வினைசெயல்வகை அதிகாரத்தில் 'ஆலோசனையின் முடிவு துணிவாகும், துணிந்ததைச் செய்யாமல் தாமதித்தல் தீமையாகும்' என்ற கருத்தை,

"சூழ்ச்சி முடிவு துணி(வு) எய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது" (671)

என்னும் திருக்குறளில் வலியுறுத்துகிறார். இதனை கம்பர் தாடகை வதைப்படலத்தில் தாடகையைப் பெண் என்றெண்ணி இராமன் கணை தொடாதபோது விசுவாமித்திர முனிவன் அரக்கியைக் கொல்லுதல் அறமே என்று தெளிவுறுத்தியதும் இராமன் தாடகையைக் கொல்ல இசைந்தான். (பாலகண்டம் 381-383) என்பதைக் காட்டுகிறார்.

மிதிலைக் காட்சிப்படலம்

கன்னிமாடத்தில் நின்ற சீதையின் பேரெழிலைக் கம்பர்,

"கொல்லும் வேலும் கூற்றமும் என்னும் இவை எல்லாம்
வெல்லும் வெல்லும்"என்ன மதர்க்குகும் விழி கொண்டாள் (511)

என வர்ணிக்கிறார். இதனைப் போலவே திருக்குறளின் தகையணங்குறுத்தல் அதிகாரத்தில்,

"நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன(து) உடைத்து" (1082)

"பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்தகையால் பேரமர்க் கட்டு" (1083)

என்று வள்ளுவர் பெண்ணின் பார்வையை கூற்றத்திற்கு ஒப்புமித் திருப்பது ஈண்டு ஒப்பு நோக்குதற்குரியது.

'நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்
யாப்பினுள் அட்டிய நீர்" (1093)

எனும் குறட்கருத்தை இராமனும்,சீதையும் ஒருவரையொருவர் கண்டு காதல் கொள்ளும் நிலையைப் (பாலகாண்டம் 514,515) படம் பிடித்துக் காட்டுகிறது. மேலும்,

"மருங்குஇலா நங்கையும், வசைஇல் ஐயனும்
ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினார்
கருங் கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?" (517)

என்ற பாடல்,

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல" (1100)

என்ற குறட்பாவின் பிரதிபலிப்பன்றோ? இராமனும் சீதையும் விழிவழி காதல் பகிர்ந்த பின்னர் இராமனைப் பிரிந்தால் சீதை படும்துயரை 'கடலன்ன காமம் உழந்தும். மடலேறாப் பெண்ணிற் பெருந்தக்க தில்" (1137) எனும் குறட்கருத்தைப் போல்

"நோம்;; உறும் நோய் நிலை நுவலகிற்றிலள்
ஊமரின் மனத்திடை உன்னி விம்முவாள்" (பால.521)

காதல் நோயைத் தாங்கிக் கொள்கிறாள். இருப்பினும் 'பீலிபெய் சாகாடும் அச்சிறு அப்பண்டம் சாலமிகுத்துப் பெயின்" (475) என்பதைப் போல ஒருவரையொருவர் கண்டு. காதல் நோய் கொண்டு பிரிந்ததும் இராமனை நினைந்து சீதை உருகி, மாலைக்கோலம் வந்ததும் காதல் நோய் பொறாது.

"கயங்கள் என்னும் கனல் தோய்மீது. கடிநாள் மலரின் விடம் பூசி
இயங்கு தென்றல் மன்மதவேள் எய்த புண்ணினிடை நுழைய
உயங்கும் உணர்வும் நல்நலமும் உருகிச் சோர்வாள் உயிர் உண்ண
வயங்குமாலைவான்நோக்கி துவோ கூற்றின்வடிவு?' என்றாள்"
(பால.543)

இதைத்தான் காமத்தைத் தாங்குகின்ற தன்மையுள்ள "பெண் பிறப்பே சிறந்த பிறப்பு" (1137) எனக்குறிப்பிடும் வள்ளுவர் அதனை அடுத்த குறட்பாவில்,

"நிறையரியர் மன்அளியர் என்னாதுஎன் காமம்
மறையிறந்து மன்று படும் (1138)

என்று மகளிர் காமமும் அடங்காமல் வெளிப்பட்டுவிடும் என்று குறிப்பிடுகிறார்.

புலவி நுணுக்கம்

வள்ளுவர் கற்பியலில் புலவி நுணுக்கம் என்னும் 132வது அதிகாரத்தில் எழுதியுள்ள குறட்பாக்கள் அனைத்தும் காதல் மிகுதியால் தோன்றும் ஊடல்வாழ்வினை நாடகப்பாங்கில் நயமோடு எடுத்துரைத்து நகைப்பை உண்டாக்குவனவாய் உள்ளன. இப்பாடல்களை கம்பரும் சுவைத்திருக்க வேண்டும். வள்ளுவ நெறியில் தானும் உண்டாட்டுப் படலத்தில் ஊடலும் கூடலும் பகுதியில் ஒரு நாடகக்காட்சியை அரங்கேற்றுகிறார். இதோ அக்காட்சி,

"கொள்ளைப்போர் வாள்கணாள் அங்குஒருத்தி ஓர்குமரன் அன்னான்
வள்ளத்தார் அகலம்தன்னை மலர்க்கையால் புதைப்ப நோக்கி
உள்ளத்து ஆர் உயிர் அன்னாள் மேல் உதைபடும் என்று நீர் நும்
கள்ளத்தால் புதைத்திஎன்னா முன்னையின் கனன்று மிக்காள்"

(பால.1020)

"கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்
என்னினும் தான்விதுப் புற்று" (1290)

"ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்னும்
கூடலின் காணப் படும்" (1327)

என்னும் குறட்பாக் கருத்துக்களைக் கம்பர்,

"புனத்து உள மயில் அனால் கொழுநன் போய் உரை
நினைத்தனள் சீறுவாள் ஒருத்தி, நீடிய
சினத்தொடு காதல்கள் செய்த போரிடை
மனத்து உறை காதலே வாகை கொண்டதே" (பால.1022)

என அழகாய்ப் பாடல் வழி காட்டுகிறார்.

'கண்ணின் கடைப்பார்வை காதலியர்தாம் காட்டிவிட்டால் மண்ணில் குமரருக்கு மாமலையும் ஓர் கடுகாம்" என்று பாரதிதாசன் குறிப்பிடும் கடைக்கண் பார்வையை வள்ளுவரும், கம்பரும் குறிப்பிடும்விதம் அழகோ அழகு! திருக்குறளில் களவியல் குறிப்பறிதல் அதிகாரத்தில்,

"குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும் (1095)

என வள்ளுவரும்,

"எய்ய வில் வளைத்ததும் இறுத்ததும் உரைத்தும்,
மெய்விளைவு இடத்து, முதல் ஐயம் விடலுற்றாள்,
ஐயனை, அகத்து வடிவே அல புறத்தும்
கை வளை திருத்துபு கடைக் கண்ணின் உணர்ந்தாள்" (பால.1153)

எனக் கம்பரும் குறிப்பிடுகின்றனர்.

வள்ளுவ நெறிசெல் வள்ளல்

கம்பர் அக, புற மரபுகளைக் குறிப்பிடும்பொழுது, சிறிதும் வள்ளுவ நெறியிலிருந்து மாறுபடாது கருத்திலும் தரத்திலும் வள்ளுவ நெறி செல் வள்ளலாக, கம்பராமாயணம் முழுமைக்கும் காட்சியளிக்கிறார். அறம், பொருள், இன்பம் இம்மூன்றும் கம்பராமாயணத்தின் உள்ளீடாகப் பொதிந்து உயிரோட்டம் தருகிறது.

அயோத்தியா காண்ட ஆழ்கடலுள் திருக்குறள் முத்துகள்

முனைவர் க.சிவமணி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், தமிழ்ஆய்வு மையம் அரசுக்கல்லூரி,
சித்தூர், பாலக்காடு.

காலந்தோறும் கற்போர்க்குப் புதுமைக் கருத்துக்களின் கருவூலமாக விளங்கும் பெருநூல் கம்பராமாயணம். தம் காவியம் முழுதும் கம்பர் கையாண்டுள்ள திருக்குறட்சிந்தனைகள் எண்ணிலடங்கா. அவற்றுள் அயோத்தியாகாண்டத்துள் கம்பர் கையாண்டுள்ள திருக்குறட் சிந்தனைகளுள் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுவதாய் இக்கட்டுரை அமைகிறது.

மக்கட்பேறு

இவ்வுலகில் அரிய துன்பத்திலிருந்து விடுபட்டவர்கள் யார் என்ற வினாவிற்கு விடைகூறப் புகுந்த கம்பர் மந்திரப்படலத்தில் தயரதன் இராமனை வேண்டும் பகுதியில் தயரதன் கூற்றாகக் கீழ்வரும் கருத்தை முன் வைக்கிறார். அரசர்களோ, தேவர்களுக்கு அரசனான இந்திரன் போன்றவர்களோ, கடும்விரதம் மேற்கொண்டு தவம் செய்யும் முனிவர்களோ அல்லர். உலகத் துன்பங்களிலிருந்து விடுபட்டவர்கள் தம் சொல்லைத் தட்டாத மக்களைப் பெற்றவர்களேயாவர். இதனை,

"மன்னர் ஆனவர் அல்லர், மேல் வானவர்க்கு அரசு ஆம்
பொன்னின் வார் கழல் புரந்தரன் போலியர் அல்லர்,
பின்னும் மாதவம் தொடங்கி நோன்பு இழைத்தவர் அல்லர்,
சொல்மறா மகப்பெற்றவர் அரும் துயர் துறந்தார். (மந்திரப்படலம்: 67)

என்ற பாடலில் எடுத்தியம்பி நன்மக்களைப் பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திச் செல்கிறார் கம்பர். வான்புகழ் வள்ளுவரோ,

"பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த
மக்கட்பேறு அல்ல பிற" குறள் 61

என்ற குறளில் ஒருவன் பெறும் நன்மைகளுள் அறிய வேண்டியவற்றை உரிய நேரத்தில் அறியும் திறம் பெற்ற நன்மக்களைப் பெறுதலே என எடுத்துரைத்துள்ளமை கம்பரின் இக்கருத்துக்கு வலுச் சேர்ப்பதாக உள்ளது.

மந்தரை சூழ்ச்சிப்படலத்தில் கைகேயி கூற்றாக வரும் கீழ்க்காணும் பாடலில் நற்குணம் மிக்க புதல்வர்களைப் பெறுவதால் கிட்டும் பயன்களைப் பட்டியலிட்டுக் காட்டி நன்மக்கட்பேற்றின் சிறப்பை,

"பராவு அரும் புதல்வரைப் பயக்க யாவரும்,
உராவு அரும் துயரை விட்டு உறுதி காண்பரால்;
விராவு அரும் புவிக்கு எலாம் வேதமே அன
இராமனைப் பயந்த எற்கு இடர் உண்டோ? 'என்றாள்.

(மந்தரை சூழ்ச்சிப் படலம் : 55)

என்ற பாடலில் எடுத்துரைக்கிறார், கம்பர்.

"எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்" குறள்:62

என்ற குறளில் நற்குணங்கள் மிக்க புதல்வர்களைப் பெற்றால் ஏழு பிறவிகளிலும் துன்பம் வராது என்று கூறும் வள்ளுவரின் கூற்று கம்பருக்கு ஏற்புடைத்து என்பது ஒப்பிட்டு உணரத்தக்கதாகும்.

மந்திரப்படலத்தில் இராமனைப் பாராட்டிப்பேசிய வசிட்டன் உரையைக் கேட்ட தயரதனின் மகிழ்ச்சியை எடுத்துரைக்கும் கம்பர்,

"மற்று அவன் சொன்ன வாசகம் கேட்டலும், மகனைப்
பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்த அப் பெருவில்
இற்ற அன்றினும், எறி மழு வாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியது ஓர் உவகையன் ஆனான்"

(மந்திரப்படலம்: 41)

என்ற பாடலில், இராமனை மகனாகப் பெற்ற நாளை விடவும், பிறரால் வளைத்தற்கரிய வில்லை வளைத்த தருணத்தை விடவும், பரசுராமனை வீழ்த்திய தினத்தை விடவும் பெரிதும் மகிழ்ந்தான் என்கிறார். இப்பாடல் வள்ளுவரின்,

"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்" குறள்:69

என்ற குறட்பாவின் கருத்தோடு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

இனியவை கூறல்

மந்திரப்படலத்தில் தயரதன் தவம் குறித்த தன் உள்ளக்கருத்தை வெளியிடும் பகுதியில் தவம் செய்வதால் கிட்டும் நற்பலன்களைக் கம்பர் எடுத்துரைக்கையில், ஒருவன் தான் செய்த வினைகளின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளத் தவத்தை நாடுதலே சிறந்த வழி. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னரும் அரச வாழ்க்கையில் திளைத்திருத்தல் தகாது. அதனை விடுத்துத் துறவினை மேற்கொள்ளுதலே உத்தமம் என்பதனை எடுத்துரைக்கையில், அமுதம் நிரம்பியிருக்கும் பாத்திரத்தை ஒதுக்கி வைத்து நஞ்சினை விரும்புதல் தகாது என்பதனை,

"இழைத்த தீ வினையையும் கடக்க எண்ணுதல்,
தழைத்த பேர் அருள் உடை தவத்தின் ஆகுமேல்,
குழைத்தது ஓர் அமுது உடைக் கோரம் நீக்கி, வேறு
அழைத்த தீ விடத்தினை அருந்தல் ஆகுமோ?" (மந்திர:24)

என்ற பாடலில் கம்பர் குறிப்பிட்டுச் செல்கிறார். வள்ளுவர்

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" குறள்:100

என்ற குறளில் எடுத்துக்கூறியுள்ள, நாம் பிறருடன் உரையாடுகையில் அறம் எனப்படும் நன்மையை அளிக்கும் இனிய சொற்களைப் பயன்படுத்தாமல் இனிமையக்காத சொற்களைப் பேசுதல் கனிகளை விரும்பாது காய்களை விரும்பும் செயலை ஒத்தது எனும் கருத்துடன் ஒப்புமையாகக் கொள்ளத் தக்கதாகும்.

மானம்

மந்திரப்படலத்தில் நல்அமைச்சர்களின் மாண்பினை, அமைச்சர்களின் செந்தண்மை பூண்டொழுகும் திறத்தைக் குறிப்பிடும் கம்பர், நேற்று நிகழ்ந்தவற்றிலிருந்து கற்றவற்றுடன் நாளை நடப்பவற்றை உய்த்துணரும் ஆற்றலும் மிக்கவர்கள் அமைச்சர்கள். எனினும், வலிய விதியால் இடர் நேருகையில் மானமே பெரிதென எண்ணும் குணமுடைய அமைச்சர்கள் உயிர் துறக்கவும் தயங்க மாட்டார்கள் எனவே இவர்கள் மயிர் நீப்பின் வாழாக் கவரிமாவை ஒப்பார்கள் என்பதை,

"உற்றது கொண்டு மேல் வந்துஉறு பொருள் உணரும் கோளார்;
மற்று அது வினையின் வந்ததுஆயினும், மாற்றல் ஆற்றும்
பெற்றியர்; பிறப்பின் மேன்மைப் பெரியவர்; அரிய நூலும்
கற்றவர்; மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார்."
(மந்திரப் படலம் : 5)

என்ற பாடலில் எடுத்துரைத்து அமைச்சர்களின் மேன்மைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்" (குறள்:969)

என்ற குறட்பாவில் தன்மானத்திற்கு இழுக்கு நேரும் வேளையில் உயிரைத் துறக்கவும் தயங்காதவர்கள் கவரிமாவைப் போன்றவர்கள் என வள்ளுவர் கூறியதைத் தலைமேற்கொண்டு கம்பன் தன் பாடலில் பயன்படுத்தியுள்ளமை உணரத்தக்கதாகும்.

நடுவுநிலைமை

மந்தரை சூழ்ச்சிப்படலத்தில் இராமனின் முடிசூட்டு விழாவிற்கு முன்னதாக வசிட்டர் இராமனுக்குக் கூறும் அறிவுரைகளுள் ஒன்றாகக் கம்பர் குறிப்பிடும் கீழ்க்காணும் பாடலில் பொன்னை நிறுக்கும் தராசு முள்ளைப்போல ஆட்சிக்கட்டிலில் அமரவிருப்பவர்கள் நடுவுநிலைமையுடன் செயல்பட வேண்டும் என்பதே அமைச்சர்கள் ஆராய்ந்துரைப்பனவாகும். இதனை,

"சீலம் அல்லன நீக்கிச் செம்பொன் துலைத்
தாலம் அன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
காலம் அல்லது கண்ணும் உண்டு ஆகுமோ?

(மந்தரை சூழ்ச்சிப் படலம் : 27)

என்ற பாடலில் எடுத்துக்காட்டி, நாட்டை ஆளும் மன்னர்களின் நடுவு நிலைமையை வரையறுத்துச் செல்கிறார். இப்பாடல் வள்ளுவரின்,

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி" (குறள் : 118)

என்னும் குறளில் தன்னிடத்து வைக்கப்பட்ட பொருளின் எடையைத் துல்லியமாகக் காட்டும் தராசு போல் வாழ்ந்து சிறத்தலே சான்றோர்க்கு அழகாகும் என்ற வள்ளுவரின் கருத்தோடு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

அமைச்சு

மந்திரப்படலத்தில் அமைச்சர்கள் பணிபுரியும் வகையினை உரைக்கப் புகுந்த கம்பர் ஒரு செயலை மேற்கொள்வதற்குரிய காலம், இடம், கருவி ஆகியவற்றை அறிந்து நீதிநூற்கருத்துக்களை ஆராய்ந்து தெய்வத்தை நினைந்து அரசியல் அறம் பெருக்கும் மேலோர்கள் புகழை அடைதற்குரிய செயல்களையும் அதனால் உண்டாகும் பலன்களையும் தம் அரசனுக்கு சொல்லும் தன்மையுடையவர்கள் என்கிறார்.

"காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரிந்து கற்ற
நூலுற நோக்கித் தெய்வம் நுனித்து, அறம் குறித்து, மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டும் செய்கையும் தெரிந்துகொண்டு,
பால் வரும் உறுதி யாவும் தலைவற்கு பயக்கும் நீரார்.(மந்திர: 7)

என்ற பாடலில் எடுத்துக்கூறியுள்ளார்.

"கருவியும், காலமும், செய்கையும், செய்யும்
அருவினையும், மாண்டது அமைச்சு" (குறள்:631)

என்ற குறட்பாவில் ஒரு செயலைச் செய்து முடிப்பதற்குரிய கருவி, அச் செயலைச் செய்வதற்கேற்ற காலம் அச் செயலைச் செய்துமுடிக்கும் திறம் ஆகியவற்றை அறிந்திருப்பவர்கள் என வள்ளுவர் கூறும் அமைச்சர்களுக்கான இலக்கணத்தோடு கம்பன் கருத்து பொருந்தி வருகிறது.

அடக்கமுடைமை

தைலம் ஆட்டுப் படலத்தில் இராமன் தேருடன் ஊர் திரும்ப மறுத்த சுமந்திரனை கைகளினால் தாங்கி கண்ணீரைத் துடைத்து ஓரிடத்தில் அமர்த்தி, சில நம்பிக்கையூட்டும் சொற்களைச் சொல்லித் தேற்றுகிறான்., ஐம்பொறிகளையும் ஒழுக்கத்தால் அடக்கி மனத்தைக் கடந்தவனாக விளங்கும் இராமனின் மேன்மையைப் பட்டியலிடும் கம்பர்,

"தடக்கையால் எடுத்து அவற்றமுவிக் கண்ண நீர்
துடைத்து, வேறு இருத்தி, மற்று இனைய சொல்லினான்;
அடக்கும் ஐம்பொறியொடு கரணத்து அப்புறம்
கடக்கும் வால் உணர்வினுக்கு அணுகும் காட்சியான்"

(தைலம்ஆட்டுபடலம்: 26)

என எடுத்துரைக்கிறார்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்து அடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து" (குறள்:126)

என்ற குறளில், ஆமையைப் போன்று தனது ஐம்பொறிகளையும் அடக்கி ஆள்பவர் பெறும் பலன்களை வள்ளுவர் விளக்கிச் சென்றுள்ளார். ஐம்பொறி அடக்கம் குறித்த கம்பரின் கருத்து வள்ளுவரிடமிருந்து எடுத்தாளப்பட்டுள்ளமை வெளிப்படை.

இவ்வாறு தனக்கு, முன்தோன்றிய இலக்கிய நூல்களின் கருத்துக்களில் பொருத்தமானவற்றைத் தனது காவியத்துள் புகுத்தித் தான் கூறப்புகும் கருத்துக்களுக்கு வலிமை சேர்த்துள்ளார் கம்பர். கம்பரின் பன்னூற்புலமையையும் அறக் கருத்துக்களின் கருவூலமான திருக்குறளின்பால் கம்பர் கொண்டுள்ள ஈடுபாட்டையும் கண்டு மகிழ்தற்கு இக்கட்டுரை ஓரளவு துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

சிலப்பதிகாரம்- கம்பராமாயணம் கவிநய ஒப்பீடு

திருமிகு குடந்தை பரிபூரணன்
கும்பகோணம்

கம்பராமாயணமும் சிலப்பதிகாரமும் காலத்தால் வேறுபட்ட தமிழ்க் காப்பியங்களாகும் என்றாலும் கம்பராமாயணத்தைப் படிக்கும்போது சிலப்பதிகாரம் நம் சிந்தனையில் ஓடிவருவதைத் தவிர்க்க முடியவில்லை. சிலம்பில், தனக்கும் தன் காதலிக்கும் ஏற்பட்ட கடுந்துயரைக் குறித்துக் கோவலன் கௌந்தியடிகளிடம் கூறி வருந்துகிறான். அவனுக்கு ஆறுதல் கூறும் முகமாக, சீதையைப் பறிகொடுத்து வருந்திய இராமனைப் பற்றிக் கௌந்தியடிகள் கோவலனுக்குக் கூறுகிறார்.

"தாதைஏவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துயர் உழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீ அறிந்திலையோ நெடுமொழி அன்றோ" (சிலம்பு. ஊர்.46)

எனக் கௌந்தியடிகள் வாயிலாக இளங்கோவடிகள் கூறுகிறார். இராமனைத் திருமாலின் அவதாரமாக அறியப்பட்ட வழக்கினை இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

இச்செய்யுள் மூலமாகச் சிலப்பதிகாரத்திற்கு முற்பட்ட சங்க இலக்கியங்களிலும் இராமாயணச் செய்திகள் குறிப்பிடப் பெற்றிருக்கின்றன.

"கடுந்தேர் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை"

என்று புறநானூற்றில் குறிப்பிடப் பெறுகிறது. அயோத்திவேந்தன் இராமனைத் திருமாலாக எண்ணி வழிபட்டனர் முல்லைநில மக்கள்

"மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த"

"கண்டேத்தும் செவ்வேள் என்று இசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பாள் மன்னோ?
(36-39)

என்கிறது ஆய்ச்சியர் குரவை.

ஜனக மகாராஜன் தமிழ் மன்னன் என்று தக்க ஆதாரங்களுடன் நிறுவிச் செல்கிறார் கறைசைக்கிழார். (கறைசைக்கிழார்.மொழிநூல்)

சிலப்பதிகாரம் தமிழில் எழுந்த முதல் காப்பியம். வடமொழியில் வால்மீகி எழுதிய இராமாயணத்தைக் கம்பர் தமிழில் வடித்துக் கொடுத்துள்ளார். காப்பிய மரபு வழுவாமல் ஞாயிறு, திங்கள், மழை ஆகியவற்றையும் சோழ மன்னனையும் புகார் நகரையும் வாழ்த்திப் பாடியுள்ளார் இளங்கோ.

கம்பரும் காப்பிய மரபு சிதையாமல் ஆற்றுப்படலம், நாட்டுப்படலம், அரசியற்படலம் என்று பாடியிருக்கிறார். வடமொழிக் காப்பியத்தைத் தமிழ்ப்படுத்தும்போது தமிழ்ப்பண்பாடு, மரபு சிதையாமல் பாடி-யிருக்கிறார். ஒரு கலாச்சாரப் பண்பாட்டுப் பின்புலத்தில் வடிக்கப்பட்ட இலக்கியத்தை, தமிழ்ப் பண்பாட்டில் வளர்ந்த மக்களிடையே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார் கம்பர். தழுவல் அல்லது மொழிபெயர்ப்பின் அடிப்படை இலக்கியப் பண்பாடே. இத்தகைய செயற்பாடுதான் இலக்கியத்தோடு அதன் பண்பாடு, வரலாறு, மனித மதிப்பீடுகள் ஆகியவற்றையும் எடுத்துரைக்கின்றன.

தமிழ்மரபு மீறாமல் பண்பாட்டுக் கலாச்சாரக் கூறுகளுக்குப் பங்கம் விளையாமல் தமிழின் பெருமையையும் இலக்கிய உன்னதத்தையும் மேம்படுத்தக் கம்பர் தவறவேயில்லை.

காப்பிய மரபு

இளங்கோவடிகள் வணிகக் குலத்துக் கோவலனையும் கற்புக்கரசியாக கண்ணகியையும் காப்பியத் தலைவனாகவும், தலைவியாகவும் ஏற்றுப் பாடியிருக்கிறார். கோவலனைக் கந்தவேளாக எண்ணி வழிபட்டனர் புகார் நகர்ப் பெண்கள்.

கண்டேத்தும் செவ்வேள் என்று இசைபோக்கிக் காதலால்
கொண்டேத்தும் கிழமையான் கோவலன் என்பாள் மன்னோ? (36-39)

என்பது அச்செய்யுள். செங்குன்றத்தின்மீது நின்ற கண்ணகியை வள்ளியாக வழிபட்டனர் குறவர் இனத்தவர். (குன்றக்குரவை.1) என்ற குறிப்பு வஞ்சிக்காண்டத்தில் காணப்படுகிறது. மிதிலைநகர வீதியில் சென்ற இராமனை இளம்கன்னியர் பார்த்து மயங்கினர் என்பார் கம்பர். (உலாவியல்படலம்) கோவலனுக்கும் கண்ணகிக்கும் வைதீக முறைப்படித் திருமணம் நடக்கிறது. திருமணத்திற்கு முன் மணமக்கள் ஒருவரை ஒருவர் அறிந்திலர். கம்பராமாயணத்தில் கன்னிமாடந்தனில்

நின்ற சீதையை இராமர் பார்க்கிறார். 'கண்களோடு கண்கள் கவ்வ, அண்ணலும் நோக்கினார் அவளும் நோக்கினாள்' என்று கம்பர் பாடுகிறார். இளங்கோவடிகள் கூட்டியது கற்புமணம் என்றால், கம்பர் காட்டியது காதல்மணம். கற்புமணம், காதல்மணம் இரண்டும் தமிழ்மண்ணில் மணம்வீசியதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

வள்ளியையும் தெய்வானையையும் முருகன் மணஞ்செய்தது இத்தத்துவத்தை உணர்த்துவதற்காகத்தான் என்று திருமுருக கிருபானந்தவாரியார் தமது சமயச்சொற்பொழிவில் கூறியிருக்கிறார்.

காப்பிய நிகழ்ச்சி நயம்

சிலப்பதிகாரத்தில் மதுரை நகரத்து மதில்கள்மீது அமைக்கப்பட்டிருக்கும் மீன்கொடிகள் கோவலனுக்கு நிகழவிருக்கும் கொடூரத்தை நிகழ்த்தும்படியாக 'வராதீர். திரும்பிப் போய்விடுங்கள்' என்று கூறுவதைப் போல அசைந்தன என்று கற்பனை நயம்படப் பாடுகிறார் இளங்கோ. (புறஞ்சேரி-189) மிதிலை நகருக்குள் இராமன் வந்ததும் 'சீதை உனக்காகக் காத்திருக்கிறாள். விரைந்துவா' என்று அழைப்பனபோல அசைந்தன என்னும் கம்பரின் கவிநயம் மிதிலைக்காட்சிப் படலத்தில் கொடிகட்டிப் பறக்கின்றது.

தென்னாட்டு மன்னன் வடக்கு நோக்கிப் படையெடுத்து ஆரியரைத் தோற்கடித்தான் என்று இளங்கோவடிகள் கூறுகின்றார். வடதிசை மன்னனான இராமன் தென்திசை இலங்கைநோக்கிப் படையெடுத்தான் என்று கம்பர் பாடுகிறார்.

"தென்றமிழ் நாட்டகன் பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற் பீரேல்
என்றுமவன் உறைவிடமாம் ஆதலினால் அம்மலையை
இறைஞ்சி ஏகி" (நாடவிட்ட - 31)

என்று கம்பர் ஆசிரிய விருத்தத்தில் அழகாகப் பாடுகிறார். அறம்பிழைத்தது என்று அறிந்ததும் நெடுஞ்செழியன் உயிர்நீத்த பின்னரும் சினம் தணியாத கண்ணகி மதுரை மாநகரைத் தீக்கிரையாக்கினாள் என்று இளங்கோ பாடுகிறார். எல்லை நீத்த உலகங்களை என் சொல்லினால் சுடுவேன் என்று சீதை சூளுரைப்பதாகக் கம்பர் கற்பனைச் சிறகை விரிக்கிறார்.

மேலும் இலங்காபுரியை அனுமன் தீக்கிரையாக்கினான் என்றும் கம்பர் கூறுகிறார்.

தீ பற்றிய பயம்

இலங்கை எரியூட்டு படலத்தில் அனுமன் வைத்த நெருப்பு இராவணனுடைய மாளிகையையும் எரித்தது என்று கம்பர் பாடும்போது இராவணன் மனை புக்கது உயர் தீ என்று குறிப்பிடுகிறார். கொடிய இராவணனது ஊரையும் அவன் மாளிகையையும் எரிப்பது உயர் தீ என்பது கம்பர் கருத்து. மதுரையை எரித்த கண்ணகி கற்புத் தீயால் அதனை உண்டாள் என்று இளங்கோ குறிப்பிடுகிறார். தீயவர்கள் பக்கமே சேர்க' என்று கண்ணகி சினத்துடன் ஆணையிட பாண்டியன் நகரம் தீப்பற்றிக் கொண்டது. அதேபோல, தீயவனான இராவணன் மாளிகையும் தீப்பற்றி எரிந்தது. சீதா வாழ்க்கையிலுள்ள சீதையை தீயரக்கன் தீண்டவில்லை.

விதிப்பயன்

கோவலனுடைய விதிப்பயனுக்கு பாண்டிய மன்னன் பலியாகின்றான். அரக்கர் அழிவிற்கு கைகேயியின் வினைப்பயன் வழிகோலுகிறது. காமவயப்பட்டிருந்த சூழலில் இராவணன் சூர்ப்பணகையின் சூழ்ச்சிக்குப் பலியாகிறான். சீதையைக் கவர்ந்து வர முடிவு செய்கிறான். அரசியாரின் ஊடலால் அரண்மனை புகுந்த சூழ்நிலையில் பொற்கொல்லன் சூழ்ச்சியால் கோவலனைக் கொன்றுவிட பாண்டியன் ஆணையிடுகிறான். காவிய வளர்ச்சிக்குப் பெண் கருப்பொருளாகிறாள். காப்பிய முதிர்ச்சிக்கும் கருப்பொருள் பெண்ணே. இது சிலப்பதிகாரத்தின் கதையோட்டம். பெண்ணின் சிறுமையால் தாழ்ந்து பெண்ணின் பெருமையால் உயர்ந்தது கம்பன் காவியம். இவைபோன்ற காப்பிய மரபுகளால் கம்பரும் இளங்கோவும் தமிழிலக்கிய வானில் சூரிய சந்திரராய்ச் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்றனர்.

கம்பனின் சிறப்பு

கம்பனுக்கும் மேலோர் கவிஞன் பிறக்கவில்லை என்றார் கண்ணதாசன். அள்ள அள்ளக் குறையாத அமுதக்கடல் கம்பராமாயணம். கவிச்சக்கரவர்த்தி என்னும் பட்டம் பெற்ற மூவரில் கம்பர் முதல்வர். கம்பராமாயணம் உலக இலக்கியங்களிலே தலைசிறந்தது. ஹோமரின் இலியட்டையும், மில்டனின் காவியத்தையும் விர்ஜில் தாந்தே ஷேக்ஸ்பியர் மோலியர் கதை ஆகிய மேல்நாட்டு கவிசிரேஷ்டர்கள் கவிதைகளின் உயர்ந்த அம்சங்களில் கம்பனுக்குக் கீழேதான் இருக்கிறார்களே ஒழிய அவனை மீறவில்லை என்கிறார் வ.வே.சு.ஐயர் (பெ..சு.மணி.,கம்பன் புகழ் பரப்பிய வ.வே.சு.ஐயர்,

ப.61) இதே கருத்தினை கே.என். சிவராஜ் பிள்ளை அவர்கள் தமது கம்பராமாயணக் கௌஸ்துபம் என்னும் நூலில்,

"நாமகள் அருள் நண்ணும் வரகவி
ஹோமர் வர்ஜில் மில்ற்ற னென் றோதுவர்
வாமமார் வடதேச வான்மீகி தென்
சீமையத் தமிழ்க் கம்பன் தெரிகிலார்" (க.கௌ.15)

என்று வியக்கிறார்.(மேலது, ப.10) யுத்த காண்ட வருணனையில் கம்பர் ஆரோகணக் கிரமம் என்னும் வழிமுறையைச் சிறப்பாகக் கையாண்டிருக்கிறார் என்னும் ஹோமரின் இலியாட் வீர காவியத்தைக் காட்டிலும் கம்பரது யுத்த காண்டம் மிகச் சிறப்பாகவே இருக்கிறது என்கிறார் வ.வே.சு.ஐயர். (மேலது, ப.90) கம்பரின் காவியம் சொல்லுக்குச் சொல் வரிக்கு வரி செய்யுளுக்குச் செய்யுள் படலத்துக்குப்படலம் தொடர்பும் கவிநயமும் உயரிய பாவங்களும் மிக்கவை.

இளங்கோவின் கருவும் கம்பரின் திருவும்

திருமிகு. தி.செந்தில்நாதன்
பகுதிநேர ஆய்வாளர், திராவிடப் பல்கலைக்கழகம்,
குப்பம், சித்தூர்.

வள்ளுவன் வெண்பாவால் பாடிய தமிழை, அகவற்பாவால் இளங்கோ அடிகள் பாடினார். பின்னர் வந்த கம்பனோ, கலிப்பா, வஞ்சிப்பா கொண்ட விருத்தப்பாவினால் தமிழுக்கு அணி செய்தார். இராமாயணக்கதையை வெறும் கவிதை நடையில் மட்டுமே அளித்திருந்தால், கம்பனின் புகழ் வெறும் எடுத்துக்காட்டுடன் போயிருக்கக்கூடும். ஆயின், கவிதைச்சிறப்புடன் பாத்திரங்களின் படைப்பு, மனித குலத்தின் மாண்பு, தனிழகத்தின் பண்பாட்டுச் சிறப்பியல் இவற்றிலெல்லாம் முத்திரை பதித்த வித்தகராக அவர் திகழ்ந்தார் என்பதுதான் கம்பனின் உயிர்ப்பு.

அவையடக்கத்தின் வழியாக, இந்தத் திருநாட்டில் தாம் வாழப்போகும் உறுதிப்பாட்டைக் கம்பன் வலியுறுத்தியிருக்கிறார்.

"உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே"

என்னும் கடவுள் வாழ்த்துப்பாடலில் சமரசக்கொள்கையை வெளியிடும் கம்பன்,

"வையம் என்னை இகழவும் மாசு எனக்கு
எய்தவும் இது இயம்புவது யாதெனின்
பொய்யில் கேள்விப் புலமையினோன் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிவிக்கவே"

என்னும் பாடலில் தன்னடக்கத்தின் தகைமையை நன்கு வெளிப்படுத்தி விடுகிறார். "தெய்வமாக்கவி" என்னும் தொடர் கம்பனுக்கு முன்பிறந்த திருவள்ளுவரைக் குறிக்கவே என்பர் அறிஞர்.

ஆயினும் புறநானூற்றிலும், அகநானூற்றிலும், கலித்தொகையிலும், சிலப்பதிகாரத்திலும் இராமாயணக்கதை குறிக்கப்பட்டுள்ளதையும் இவண் நாம் நோக்கலாம்.

"மூவுலகும் ஈரடியான் முறை நிரம்பா வகை முடியத்
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே!"

என்னும் சிலப்பதிகார ஆய்ச்சியர்குரவை நமக்குச் சான்று பகர்கிறது.

கம்பன் பாடிய இராமாயணத்தில் கடவுள் ஒருவரே என்பதும், ஒழுக்கமே உயர்வுதரும் என்பதும், ஒழுக்கக்கேடு குடிப்பிறப்பைக் குலைத்துவிடும் என்பதும் தலைப்புச்செய்திகளாக இடம் பெற்றுள்ளன. மக்களின் வாழ்வை, எண்ணங்களை ஈடேற்றி மகிழும் கம்பன் காப்பிய நோக்கில் உயர்ந்து காணப்படும் தன்மை வியப்பிற்குரியது.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் எண்ணிலடங்காவண்ணம் இராமனைப் பாடித் திளைத்தாலும், கம்பன் மட்டும்தான் இராமனின் புகழைப் பாடியதில் தனித்துநிற்கும் பெருமையுடைய மகாகவியாகத் திகழ்கிறார்.

கம்பனின் கருத்துக்களையும், சிந்தனைகளையும், வருணனைகளையும், உவமைகளையும் ஒன்று திரட்டிப் பார்க்கையில் அத்தொகுப்பே மிகச் சிறந்த காவியமாகத் தோன்றும்.

பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம், ஆகிய ஆறு காண்டங்களிலேயே, கண்டங்களை அசைத்துப்பார்த்து ஆட்சி புரிபவராகத் திகழ்பவர் கம்பன். இந்த ஆறு காண்டங்களில் உள்ள பாடல்கள் 10,587 ஆகும்.

இந்தப் பத்தாயிரம்பாடல்களைப் படைப்பதற்குரிய வலிமையை இந்தத் தமிழகம் கம்பனுக்குக் கொடுத்தது என்பதுதான் எண்ணிப் பார்த்துப் பெருமையுறச் செய்கின்ற உணர்வாகும். இத்தகைய கம்பன் படைத்த காப்பியமான கம்பராமாயணத்தில் பாங்குறும் பிற காப்பியமான சிலப்பதிகாரத்தோடு ஒப்பிட்டு ஆய்வதே இவ் ஆய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

இளங்கோவின் கருப்பொருளும்– கம்பரின் திருப்பொருளும்

தமிழ்க்கடலில் முத்துக்குளிக்கும் கவி இருவர். எடுத்துவரும் முத்துக்களில் உருவ ஒற்றுமை தமிழ் மொழியின் சிறப்பால் அமைந்தவை.

கவிஞர் மூழ்கும்பொழுது கவித்திவலைகள் ஒன்றொடொன்று முட்டி மோதுவதும் முத்தமிட்டுப் பிரிவதும் இயற்கை.

ஆனால், இருவேறு காலங்களில் மூழ்கி எடுக்கப்பட்ட முத்துக்கள் காலத்தைக் கடந்து உருவ ஒற்றுமை இருந்தால் - அதுதான் கவிஞர்களுக்கும் அக்கவிப் பெருமக்களைப் பெற்றெடுத்த மொழிக்கும், மண்ணுக்கும் பெருமை. அடிகளார் தான் நாட்டியப் பாட்டுடைச் செய்யுளான சிலப்பதிகாரத்திற்குக் கருவாயினவை என்று சாத்தனிடம் கூறியவை.

அ. அரசியல் பிழைத்தோரை அறம் கொல்லும்.
ஆ. பத்தினித் தெய்வத்தைச் சான்றோரும் போற்றுவர்.
இ. ஊழ்வினை காலம் கடப்பினும் முன்வந்து உறுத்தும்.

ஊழ்வினை என்ற வேடனின் அம்பாகக் குத்துவது சூழ்வினை. இங்கு கண்ணகி, கோப்பெருந்தேவி இருவரும் அணிந்த சிலம்புகளே ஊழ்வினை நாடகத்தில் சூழ்வினை நாயகர்கள்.

அரசியல் பிழைத்தோர்

1. பாண்டியன் நெடுஞ்செழியன்
2. இராவணன்
3. வாலி

உரைசால் பத்தினிகள்

1. கண்ணகி
2. கோப்பெருந்தேவி
3. சீதை
4. மண்டோதரி

முற்பிறவி ஊழ்வினை

1. கோவலனும் கண்ணகியும் செய்தவை
2. இராவணன் செய்தவை
3. சூர்ப்பணகை செய்தவை
4. வாலி செய்தவை
5. இராமன் செய்தவை

முற்பகல் ஊழ்வினை

1. கோவலன் இல்லறக் கற்பிழந்தமை
2. பாண்டியன் நெடுஞ்செழியன் சிலம்பும், சூழ்வினையும்,

3. சூர்ப்பணகை இழந்த மூக்கு, காதுகள், மார்பகங்கள்
4. மாரீசன் என்னும் மாயமான்.

அரசியல் பிழைத்தோரும் அறம் கூற்றம் ஆனதுவும்

இராவணன் முறையற்ற மோகத்தில் வயப்பட்டான். அரசன் என்ற குடிகாக்கும் தர்மத்தினின்றும் வழுவி வேறொருவன் மனைவியை சிறையிட்டான். இதன் விளைவு இலங்கை எரியுண்டது. அவனைச் சேர்ந்த எல்லாமே அழிவுற்றன.

வாலியின் ஊழ்வினை

வாலியும் மன்னர் நீதி மறந்து, உடன் பிறப்பின் நாட்டையும் துணைவியையும் முறையற்று தன்னடக்கப் பொருளாக்கிய காரணத்தால் இறுதியில் தர்மத்தின் வெற்றிக்கு ஊழ்வினைப் பொருளானான். இராமனின் பாணத்திற்குத் தன் இன்னுயிரை ஈந்தான்.

பாண்டியன் நெடுஞ்செழியன் ஊழ்வினை

பாண்டியன் நெடுஞ்செழியன் தன் இல்லத்தரசியின்மீது காதல்வயப்பட்ட நேரத்தில் பொற்கொல்லன் பொய்யுரை கேட்டு, உணர்ச்சிவழியில், அறிவுநிலை தடுமாறி அரசன் என்பவனின் நிதான தர்மத்தினின்றும் வழுவியதால் கோவலன் கொலையுண்டான். கண்ணகி என்னும் கற்புத்தீ மதுரையை எரித்தது. கற்பு மனைவி கோப்பெருந்தேவி உயிர் துறந்தாள்.

முடிவுரை

இளங்கோ அடிகள் - ஒரு அரசுத் துறவி. கம்பரோ கவிப்பேரரசர். இருவரும் - காலத்தால் நீண்ட இடைவெளி உள்ளவர்கள். இளங்கோ யாத்தது - கற்பின் செல்வி கண்ணகியின் காவியத்தை, கம்பர் வடித்ததோ - சீத்தாராமனின் சீர்மிகு காதையை. இளங்கோ அடிகள் காலத்தால் முந்தியவர். அடுத்தவர் (கம்பர்) சில நூறு ஆண்டுகள் பின்னால் வாழ்ந்தவர், இளங்கோ அடிகள் - சமணத் தமிழர். கம்பரோ - தமிழக வைணவர். செந்தமிழ்ச் சாத்தன் கூறக்கேட்டதில் இருந்து அடிகளார் கண்ணகியின் காவியத்தை பாடினார். சீதையின் ஓவியம்தான் இராமனின் காவியம் - தீட்டியவர் வால்மீகி - திருவையும் கருவையும் உள்ளில் ஊடுருவ வைத்தவர் கம்பர்.

கம்பரும் தேவரும்

திருமிகு. செ.கல்பனா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

முன்னுரை

கவிச்சிந்தனை என்பது அவரவர்களின் மன எண்ணங்களைப் பொறுத்தது. கவிஎண்ணங்கள் பெரும்பாலும் மாறுபட்டுத்தான் அமையும். இருப்பினும் கம்பரின் கவி எண்ணங்களும், திருத்தக்கத் தேவரின் கவி எண்ணங்களும் ஒரே மாதிரியானவை. கம்பரின் கவியும் தேவரின் கவியும் ஒன்றுபோலவே அமைந்துள்ளன.

மழை பெய்த காட்சி

இமயமலைமேல் மேகம் நீரைச் சொரிந்த நிலையை வருணித்து கம்பர் பாடுகின்றார். அதாவது பொன்னிறமுள்ள இமயமலைமேல் வெள்ளிய நீர்த்தாரைகள் வீழ்ந்த காட்சி பொற்றக்காட்டில் வெள்ளிக் கம்பிகளை நீளமாக நாட்டிவைத்ததுபோல் தோன்றுகின்றதாம். இச்செய்தி

"புள்ளி மால்வரை பொன்னெனல் நோக்கிவான்
வெள்ளி வீழிடை வீழ்த்தெனத் தாரைகள்
உள்ளி யுள்ளவெல் லாமுவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே" (ஆற்றுப்படலம்.4)

எனும் இப்பாடலில் இடம் பெற்றுள்ளது. இதே செய்தி, தேவரின் பாடலிலும் உள்ளன.

"தேனி ரைத்துயர் மொய்வரைச் சென்னியின்
மேனி ரைத்து விசும்புற வெள்ளிவெண்
கோனி ரைத்தன போற்கொழுந் தாரைகள்
வானி ரைத்து மணந்து சொரிந்ததுவே" (சீவகநாட்கள்:33)

அதாவது முகில்கள் ஒன்றின்மேல் ஒன்றாக மேலே வரிசையாகத் தம்மிற் கூடி, தேன் இறால் நிரைத்து உயர்ந்த மலையின் நெருங்கிய உச்சியில், வெள்ளியாற் செய்த வெள்ளிய கோல்களை வான் எங்கும் நிரைத்தாற்போல வளமான நீர்த்தாரைகளை நிரைத்து மணங்கொண்டு சொரிந்தன என்பதே ஆகும். வெள்ளிவீழ், தாரை எனக் கம்பர் பாடலில் வந்துள்ள இவை சிந்தாமணியிலிருந்து வந்தது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இருப்பினும் அவற்றிற்கு மெருகு கொடுத்து, அழகுபடுத்தி, மதுரமாக்கித் தெளிவுறுத்தி, இனிமை கனிய, இன்னோசை பொலிய இவர் பாடியிருக்கும் திறம் மிகவும் உயர்ந்து.

களை பறித்த காட்சி

"பண்கள்வாய் மிழற்றும் இன்சொற் கடைசியர் பரந்து நீண்ட
கண்கைகால் முகம்வாய் ஒக்கும் களையலால் களையிலாமை
உண்கள்வார் கடைவாய் மள்ளர் கலைகலா துலாவி நிற்பார்
பெண்கள்பால் வைத்த நேயம் பிழைப்பரோ சிறியோர்"

(கம்.நாட்டுப்படலம்.10)

எனும் இப்பாடலில் உழவர்கள் களை பறிக்கச் செல்லும் காட்சியினை கூறுகிறார். நல்ல வாலிபர்கள் வயல்களில் புகுந்து களை பறிக்கத் தொடங்குகின்றனர். விளைபயிர்களுக்கிடையே களைகளாய் நிற்பவையெல்லாம் மலர்களாகவே உள்ளன. அவையும் இழிந்த பூக்கள் அல்ல. உயர்ந்த நீர்ப்பூக்கள். குவளை, தாமரை, குமுதம், அல்லி முதலியனவே அரும்பியிருந்தன. குவளை மலர்களை நோக்கி கண்கள் போல் உள்ளன எனக் களையாமல் விடுவர். தாமரைகளை கண்டபொழுது முகங்களைப்போல் உள்ளது. என அகல்வர், குமுத மலர்களைப் பார்த்து, வாய் இதழ்கள் என்று ஒதுங்கிப் போவர். இவ்வாறே களைகளைக் களையாமல் களைகள் யாவும் தம் காதலிகளுடைய கண், முகம், வாய் போன்ற மலர்களாக தோன்றியமையால் களைகளை பறிக்காமல் வளைந்து வந்தனர் என்று கம்பர் காட்சிப்படுத்துகின்றார்.

களை எடுப்பதைப் பற்றி வந்துள்ள இந்தப்பாடலோடு சிந்தாமணியில் இடம் பெற்றிருப்பதையும் பார்ப்போம்.

"கண்ணெனக் குவளையும் கட்டல் ஓம்பினார்
வண்வான் முகம் என மரையின் உட்புகார்
பண்ணெழுத் தியல்படப் பரப்பி யிட்டனர்
தன்வயல் உழவர்தம் தன்மை இன்னதே" (சீவக.நாமகள்.51)

எனும் இப்பாடலில் தேவர் அவர்கள் களை பறிக்கப் போன இளங்காளையர்கள் களைகளைத் தன்காதலியர் உறுப்புகள் என நினைத்து, களை பறிக்காமல் வரும் காட்சியினை சித்திரிக்கின்றார். இந்தப்பாடலில் வந்துள்ள சொல்லையும் பொருளையும் எடுத்துக் கொண்டு அலங்கரித்து யாவரும் இன்பமுற முன்பு கூறிய கவியை கம்பர் நமக்குத் தந்திருக்கிறார் என்பதை அறியலாம். தேவரின்

பாணியினை எவ்வளவு ஆவலோடு நம் கம்பர் கவனித்திருக்கிறார் என்பதை இவர் பாடல்கள் தெரிவிக்கின்றன.

மதிலின் காட்சி

பகைவர்கள் எவரும் அணுகமுடியாதபடி கடுமையான இயந்திரங்களைக் கொண்டு அயோத்தியில் மதில்கள் அமைந்திருக்கும். இக்காட்சியை,

"சினத்தயில் கொலைவாள் சக்கரம் தண்டு
சிலைமழுத் தோமரம் உலக்கை
கனத்திடை உருனின் வெருவருங் கவண்கல்" (கம்பநகரப்படலம்.12)

எனும் இப்பாடலில் உயரப் பறக்கும் கருடனும், நுணுகி நுழையும் கொசுவும் அம்மதிலினுள் புகமுடியாது. எங்கும் தடையில்லாமல் புகவல்ல காற்றையும் தடுத்து நிறுத்தும் என மதிலின் காப்பு நிலையை கூறுகின்றார்.

இதே செய்தி, சிந்தாமணியில் இராசமாபுரத்தின் மதில் நிலையைக் குறித்துத் திருத்தக்க தேவர் பின்வருமாறு உரைக்கின்றார்.

"மாற்றவர் மறப்படை மலைந்துமதில் பற்றின்
நூற்றுவரைக் கொல்லியொடு நூக்கியெறி பொறியும்
தோற்றமுறு பேய் களிறு துற்றுபெரும் பாம்பும்
கூற்றமன கழுகுதொடர் குந்தமொடு கோண்மா" (சீவகநாமகள்.101)

எனும் இப்பாடலில் ஒரு விசையில் நூறு பேரைக் கொல்லவல்ல இயந்திரம், பேய், களிறு, பாம்பு, கழுகு, புலி, வில், விடுகுதிரை, வாள், கல், பாவை, அன்னம், தீ, கொள்ளி, கொக்கு, அம்பு, வேல், சூலம், கல் முதலியவற்றை எத்திசையிலும் அள்ளி வீசத்தக்க ஒள்ளிய தீப்பொறிகள் போன்றவை அம்மதிலுள் இருக்கும் நிலையினை, தேவர் கூறுகின்றார்.

கல்வி நலன்

கம்பர் பல இடங்களில் திருத்தக்கதேவரைப் பின்பற்றிவந்துள்ளார். இருப்பினும் அந்தப் பழமையில் புதுமை ஒளி கொடுத்து அழகாகப் பாடியுள்ளார். கல்வி மிகுந்து இவர் இருப்பதால் நகரம் இன்பமா-யிருக்கிறது என்கின்றார்.

"ஏகம் முதற்கவி முளைத்தெழுந்து எண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண் பணைபோக்கி அருந்த வத்தின்

சாகம் தழைத்தன் பரும்பித் தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது போலும் அன்றே" (கம்ப. நகர.75)

கல்வி, கேள்வி, தவம், அன்பு, தருமம் என்னும் அழகிய நலங்கள் யாவும் இருப்பதால் அந்நகரில் வாழ்பவர்கள் எல்லாரும் இன்பமாய் வாழ்கின்றனர் என்கிறார்.

தேவர் அவர்கள், கல்வி இம்மையில் புகழையும் மறுமையில் இன்பத்தையும் நல்கும். கையில் வைத்திருக்கும் பொருளைக் கொடுத்தாயினும் கல்வியைக் கல், அது உனக்குக் கண் ஆம். உண்மையான பொருளைத் தரும். உள்ளம் மெலிந்தால் உறுதுணையும் ஆம் என கல்வி நலனைக் குறித்து கணகமாலையார் இலம்பகத்தில் 1595ஆம் பாடலில் புகழ்கின்றார்.

குடைநிலை

மன்னன் குடையைச் சந்திரனோடு ஒப்ப வைத்துப் பாடுகின்றார்.

"மண்ணிடை உயிர்தொறும் வளர்ந்து தேய்வின்றி
தண்ணிழல் பரப்பவும் இருளைத் தள்ளவும்" (கம்ப. அர.9)

தசரதனுடைய வெண்கொற்றக்கொடை விண்ணில் நின்று நிலவைப் பொழிந்து இருளை நீக்கி எல்லா உயிர்கட்கும் மதி மகிழ்ச்சியைத் தரும் எனக் கம்பர் பாடுகின்றார்.

சச்சந்தன் குடைநிலையைக் குறித்துத் தேவர் கூறியிருப்பதை இங்கே காண்போம்.

பூமாலையும் முத்துமாலையும் சூழ்ந்த குளிர்ந்த வெண்குடையால் அரசன் உலகிற்குத் தந்தை ஆனான். அவன் தாளின் நிழலிலே வாழ்வதற்கு இவ்வுலகம் அவன்மேல் வைத்த அன்பினால் இன்பமுறுகின்றது என்று நாமகள் இலம்பகத்தில் 159-ம் பாடலில் கூறுகின்றார்.

நிறைவுரை

மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு காட்சிகளிலும் கம்பரும் தேவரும் ஒரே கருத்தையுடையவர்கள் என்பதை உணரலாம். கம்பரின் ஒருசில கவிகள் தேவரின் கவிகளோடு ஒத்து வருகின்றன. இருவரின் கதைப்போக்கும் ஒன்றிற்கொன்று தொடர்புடையதாய் இருக்கின்றது. கம்பருக்குச் சிந்தாமணி ஓர் சிந்தாமணியாயிருந்தது என்பது உண்மை.

கம்பரும் திருமூலரும்

திருமிகு. வ.முத்துவேல்,
அறந்தாங்கி.

காலத்தால் மிகவும் முற்பட்ட திருமூலர் இயற்றிய திருமந்திரத்தின் வழிநின்று கம்பரையும், திருமூலரையும் ஒப்புநோக்கி அதன்மூலம் கம்பரின் பெருமைகளைச் சிறு அளவேனும் கூறவேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கம்பர்

வடமொழியில் வால்மீகி இயற்றிய இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழில் இராமாயணத்தை இயற்ற வேண்டும் என்ற ஆவலினால் சடையப்ப வள்ளலின் ஆதரவோடு கம்பர் இராமாயணத்தை இயற்றினார். இது அவரது பெயரோடு இணைந்து கம்பராமாயணம் என்று வழங்கப்படுகிறது.

திருமூலர்

கயிலாயத்திலிருந்து புறப்பட்டு பொதிகைமலையை நோக்கி வந்தவர் இறைவனின் திருவருளால் திருவாவடுதுறையில் தங்கி ஆண்டுக்கு ஒருபாடலாக மூவாயிரம் ஆண்டுகளுக்கு மூவாயிரம் பாடல்களை இயற்றினார். இது தமிழர்களால் மிகச்சிறந்த சாத்திர நூலாகப் போற்றப்படுகிறது.

ஒப்பீட்டுப் பொருள்கள்

தமிழ்ப்பற்று, அரசன், கல்வி, நிலையாமை, பிறன்மனை நோக்காப் பேராண்மை என்றப் பொருள்களை அடிப்படையாகக்கொண்டு இக்கட்டுரையில் கம்பரையும், திருமூலரையும் ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்ப்பற்று

"ஓங்கல் இடைவந்து உயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்து இருள்கடியும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிர் ஒன்று : ஏனையது
தன்னேர் இலாத தமிழ்"

என்னும் இப்பாடல் கதிரவனின் துணைக்கொண்டு தமிழின் சிறப்பைக் கூறுகிறது. இப்படிப் பலச்சிறப்புக்களைப் பெற்ற தமிழ் மொழியின் மீது கம்பரும், திருமூலரும் பற்றுக்கொண்டிருப்பது இயல்பான ஒன்றாகவே காணப்படுகிறது.

"பின்னை நின்றென்னே பிறவி பெறுவது
முன்னை நன்றாக முயல்தவம் செய்கிலர்
என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே" (திருமந்திரம் - 81)

இதில், இறைவன் தன்னைப் படைத்தது தமிழுக்குத் தொண்டு செய்யவே என்று திருமூலர் கூறுகிறார்.

"குறுமுனிபால் உற்றதொரு கேண்மையினால்
உடன் சில நாள் உறைவதற்கு நற்றமிழின்
பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார்"

என்று பெரியபுராணம் இயற்றிய சேக்கிழார் கூறுகின்றார் இதே போன்று, கம்பர் அகத்தியரைப் பற்றிக் கூறும் போது

"நீண்ட தமிழால் உலகை நேமியின் அளந்தான்" (ஆரண்ய- 140)

என்று தமிழின் சிறப்பை அகத்தியர்மூலம் கம்பர் கூறுகிறார். தமிழால் உலகை அளந்தான் என்பது தமிழை உலகம் முழுவதும் பரவச்செய்தான் என்பது பொருளாகும். இங்கு கம்பன் அகத்தியருக்குக் கொடுக்கும் சிறப்பு தமிழுக்குக் கொடுக்கும் சிறப்பாகும்.

"தென்தமிழ் நாட்டு அகன்பொதியில் திருமுனிவன்
தமிழ்ச்சங்கம் சேர்கிற்பீரேல்"

என்றும் அவன் உறைவிடம் ஆம், ஆதலினால் அம்மலையை இறைஞ்சி ஏகி,

"பொன் திணிந்த புனல் பருகும் பொருநை எனும் திருநதி பின்பு ஒழிய நாகக்
கன்றுவளர் தடஞ்சாரல் மயேந்திரமா நெடுவரையும் கடலும் காண்டிர்"
(கிட்கிந்தா - 784)

என்று. சுக்கிரீவன் வானரங்களுக்கு வழி சொல்லும்போது தென் திசையை நோக்கிச் செல்பவர்கள் அங்கே பொதிகை மலையைப் பார்ப்பீர்கள். அது அகத்தியர் தமிழ்ப் புலவர்கள் புடைசூழ வாழுகின்ற உறைவிடமாகும். அதனால் அதை வணங்கி வலமாகச் செல்வீர்களாக என்று கூறுகிறார். இப்படிப் பல பாடல்களில் தமிழின் சிறப்பைக் கம்பர் கூறுகின்றார். இதனால் கம்பரினுடைய தமிழ்ப்பற்று விளங்குகின்றது.

அரசன்

'கோன் எவ்வழியோ குடிகள் அவ்வழி' என்பர். மன்னன் எப்படி நடக்கின்றானோ மக்களும் அப்படியே நடப்பார்கள். அரசன் எப்படி இருக்கவேண்டும் என்பதை, திருமூலர் பல பாடல்களில் விளக்குகிறார்.

"நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தோறும் நாடி அவநெறி நாடானேல்
நாள்தோறும் நாடு கெடமூட நண்ணுமால்
நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே" (திருமந்திரம் - 239)

அரசன் நாள்தோறும் தன் நாட்டில் நன்னெறியை முறையாக ஆராய்ந்து நீதிமுறை செய்யவில்லை என்றால் நாட்டின் வளம் குறைந்து நாட்டு மக்களிடையே அறியாமை ஏற்படும் என்று திருமூலர் கூறுகின்றார்.

"தாய் ஒக்கும் அன்பின், தவம் ஒக்கும் நலம் பயப்பில்
சேய் ஒக்கும் முன்நின்று ஒரு செல்கதி உய்க்கும் நீரால்
நோய் ஒக்கும் என்னின் மருந்து ஒக்கும் நுணங்கு கேள்வி
ஆயப்புகுங்கால் அறிவு ஒக்கும் எவர்க்கும் அன்னாள்"
(பால - 171)

அரசன் மக்களுக்குத் தாயைப் போல, தந்தையைப் போல, மருந்து போல இருந்து மக்களின் அறியாமையை நீக்கவேண்டும் என்று கம்பர் அரசன் எவ்வாறு இருக்கவேண்டுமென்று கூறுகிறார்.

கல்வி

"கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக்கடன் அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் சொல் கருத்தவியாரே." (திருமந்திரம் - 317)

இப்பாடலில் திருமூலர் கல்வியறிவு இல்லாத கல்லாதவர்களைப் பற்றிக் கூறுகிறார். கல்லாத மூடர்களைப் பார்க்கக் கூடாது, அவர்களின் சொற்களைக் கேட்கக் கூடாது என்று கூறுகிறார்.

"சொல்ஒக்கும் கடியவேகச் சுடுசரம் கரியசெம்மல்
அல்ஒக்கும் நிறத்தினான் மேல்விடுதலும் வயிரக்குன்றக்
கல்ஒக்கும் நெஞ்சில்தங்காது, அப்புறம் கழன்றுகல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருள்எனப் போயிற்றே"
(பால- 388)

என்று கம்பர் கூறுகிறார்.

தாடகையைக் கொல்ல இராமன் விட்ட அம்பு அவளது மார்பை துளைத்துக்கொண்டு வெளியே சென்றது. கல்வியறிவு இல்லாதவன் கற்றவர் சொல்வதை ஒரு காதில் வாங்கி மறுகாதின்வழியே

விட்டுவிடுவது போல ராமனின் அம்பு சென்றதாகக் கூறுகிறார். இதில் கம்பர் கல்லாதவரை 'புல்லர்' எனக் கடுமையாகச் சாடுகிறார்.

நிலையாமை

"அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்கமே இறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே" (திருமந்திரம்-148)

நல்லமுறையில் சமைத்த உணவை உண்டு, மனைவியுடன் சேர்ந்து வாழ்பவர் நெஞ்சின் இடப்பகுதி சிறிது வலிக்கின்றது என்றார். படுத்தவுடன் அப்படியே இறந்தார் என்று இப்பாடலில் திருமூலர் நிலையாமையைக் கூறுகின்றார். இப்படி பல பாடல்களில் திருமூலர் நிலையாமையைப் பற்றிக் கூறுகின்றார்.

"ஆகுவது ஆகும் காலத்து அழிவதும் அழிந்து சிந்திப்
போகுவது அயலே நின்று போற்றினும் போதல் செய்யும்
சேகற உணர்ந்தோர் நின்றில் யாருளர் வருத்தம் செய்யாது
ஏகுதி எம்மை நோக்கி இரங்கலை என்றும் உள்ளாய்" (யுத்த- 1384)

வீடணன் கும்பகர்ணனைச் சந்தித்து தன்னுடன் வந்து இராமபிரானிடம் சேர்ந்துவிடுமாறும், இராவணனின் பக்கம் நின்று அழிந்துவிட வேண்டாமென்றும் கூறுகிறார். அப்போது, கும்பகர்ணன் இவ்வுலகில் உள்ள அனைத்துமே, தோன்றும்காலத்தில் தோன்றி, அழியும்காலத்தில் அழிந்துபோகும் என்று கூறுகிறார். இதன் மூலம் கம்பர் நிலையாமையைப் பற்றிக் கூறுகிறார்.

பிறன்மனை நோக்காப் பேராண்மை

"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்" (திருமந்திரம் - 201)

அன்புடைய மனைவி வீட்டில் இருக்கும்போது பிறர் காக்கின்ற பெண்களை விரும்பும் காமுகர் என்று, மனைவியை விட்டுப் பிற பெண்களை நாடும் ஆண்களைத் திருமூலர் கடுமையாகச் சாடுகின்றார்.

இதனைக் கம்பர் காவியநாயகன் இராமனின் பெருமைகளில் ஒன்றாகவே கூறுகிறார்.

இராமனின் சிறப்புக்களில் பெருமை மிக்க ஒன்று அவர் பிற பெண்களை மனத்தாலும் தீண்டாத ' ஏகபத்தினி விரதன்' என்பது ஆகும். கம்பர் இதனை,

"இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்."

என்று தன்னுடைய பாடலில் இராமனின் பிறன்மனைநோக்காப் பேராண்மையைச் சிறப்புறக் கூறுகிறார்.

முடிவு

தமிழ்ப்பற்று, அரசன், கல்வி, நிலையாமை, பிறன்மனை நோக்காப் பேராண்மை ஆகியவற்றின்மூலம் கம்பரையும், திருமூலரையும் ஒப்பிட்டு இதன்மூலம் கம்பரிடத்தில் காணப்படும் பன்முகத்திறன்கள் வெளிப்படக் காணமுடிகிறது. இதனால் கம்பனின் காவியப்படைப்பு நேற்று, இன்று, நாளை என்ற காலம் மூன்றிற்குமே பொதுவாகவும், பயனுள்ளதாகவும் அமைவது தெளிவாகின்றது.

கம்பன் சீதையும் வில்லிபுத்தூரார் பாஞ்சாலியும் - ஓர் ஒப்பீடு

முனைவர் பி.மஞ்சுளா
முனைவர் பட்ட மேலாய்வாளர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், தரமணி, சென்னை.

இராமாயணம், மகாபாரதம் என்ற இருபெரும் இதிகாசங்களும் வட இந்தியாவில் மட்டுமின்றித் தமிழ்நாட்டிலும் புனிதநூலாகப் போற்றப்படுகின்றன. இராமாயணப்போர் ஒரு பெண்ணின் மானம் காக்க எழுந்தது. பாரதப்போரோ நட்டுரிமை வேட்கையில் எழுந்தது. அதாவது நாடிழந்த பாண்டவர்கள் அந்நாட்டினை மீட்பதற்காகப் போராடிய போராட்டமே பாரதநூலாகத் தோன்றியது. இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றில் முதன்மைக் கதாபாத்திரங்களாகவும், காப்பியத்தலைவியாகவும் திகழுகின்ற சீதை, பாஞ்சாலி ஆகிய இருவரும் பஞ்ச கன்னியருள் (தாரை, அகல்யை, மண்டோதரி, சீதை, பாஞ்சாலி) ஒருவராகப் போற்றப்படுபவர்கள். சீதை, பாஞ்சாலி ஆகிய இருவரது கதையும் படிப்பவர்களின் சிந்தனைகளைத் தூண்டிப் பல கேள்விக்கணைகளைத் தொடுக்கும் விதத்தில் கம்பராமாயணத்திலும், வில்லிபாரதத்திலும் அமைந்துள்ளன. ஆகவேதான், கம்பன் காட்டும் சீதையையும் வில்லிபுத்தூரார் காட்டும் பாஞ்சாலியையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சீதை, பாஞ்சாலி ஆகிய இரு பாத்திரங்களையும், 1. பிறப்பு, 2. சுயம்வரம், 3. வனவாசம் ஆகிய மூன்று பிரிவுகளில் ஒப்பிட்டு இக்கட்டுரையில் காணலாம்.

பிறப்பு

சீதை, பாஞ்சாலி இருவரும் சாதாரணமாக மனிதர்களின்மூலம் பிறக்கவில்லை. ஐம்பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியவற்றில் நிலத்திலிருந்து சீதையும் தீயிலிருந்து பாஞ்சாலியும் தோன்றியுள்ளனர். இதனை,

"உழுகின்ற கொழு முகத்தின்,
    உதிக்கின்ற கதிரவன் ஒளி
பொழிகின்ற, புவி மடந்தை
    திரு வெளிப்பட்டென, புணரி

எழுகின்ற தெள் அமுதோடு
எழுந்தவளும், இழிந்து ஒதுங்கித்
தொழுகின்ற நல் நலத்துப்
பெண் அரசி தோன்றினாள்" (கம்ப. பால, பா: 682)

என்று கம்பராமாயணமும்,

"மண்மேல் ஒருத்தி அரக்கர்குலம்
மாளப் பிறந்தாள் வாமனுதல்
கண்மேல் இன்றும் இவள் பிறந்தாள்
கழற்கா வலர்தம் குலமுடிப்பான்" (வில்லி. ஆதி. பா. 388)

என்று வில்லிபாரதமும் எடுத்துரைக்கின்றது. பெண்ணினை அழகானவளாகக் காட்ட இலக்குமியுடன் உவமிப்பது தமிழர்களின் மரபு கம்பனோ அந்த இலக்குமிகூட சீதையின் அழகிற்கு நிகராகமாட்டாள் என்று கூறியிருப்பது சீதையின் பாத்திரத்தினைத் தமிழக மக்களுக்குச் சிறப்பாகக் காட்டவே அவ்வாறு செய்துள்ளார்போலும். சீதையின் பிறப்பினை மட்டும் கம்பராமாயணம் கூற வில்லிபாரதமோ சீதை, பாஞ்சாலி இருவரின் பிறப்பினையும் எடுத்துரைக்கின்றது. மண்ணில் பிறந்த சீதையால் அரக்கர் குலம் அழியும் என்றும், தீயில் பிறந்த பாஞ்சாலியால் அரசர்குலம் அழியும் என்றும் வில்லிபுத்தூரார் இரு பெண்களின் பிறப்பினையும் கூறி, சீதையைப் போன்று பாஞ்சாலியும் சிறப்பானவள்தான் என்று கூறியுள்ளார்.

சுயம்வரம்

கம்பராமாயணத்தில் சனகன் சீதைக்குச் சுயம்வரப்போட்டியினை நடத்துவதற்குமுன்பே இராமனும் சீதையும் மிதிலைக் காட்சிப்படலத்தில் ஒருவரையொருவர் காணுகின்றனர். அப்போது அவர்கள் பார்வையானது இதயம்வரை சென்று அவர்களிருவரையும் காதல்நோயுறச் செய்கின்றது என்பதனை,

"கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று

....

அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்
(கம்ப. பால., பா. 514)

மேற்கூறிய பாடலடிகள்மூலம் அறியலாம்.

ஆகவே, சீதை இராமனையே தனது மணவாளனாக மனதினுள் வரித்துக்கொள்கின்றாள். சுயம்வரப்போட்டியில் உள்ள சிவதனுசை

ஒடித்து இராமன் வெற்றிபெறவில்லையெனில் வேறொரு ஆடவனை மணக்காது தீயினுள் புகுந்து உயிர்விடச் சீதை நினைத்தாள். ஆனால் இராமன் அவளைத் தீயினுள் புகவிடாது சிவதனுவை உடைத்து சுயம்வரப்போட்டியில் வெற்றிபெற்றான். இதனை,

"தடுத்து இமையாமல் இருந்தவர், தாளில்
எடுத்தது கண்டனர், இற்றது கேட்டார் (கம்ப. பால.,பா.699,)

என்ற கம்பராமாயணப் பாடலடிகள்மூலம் அறிந்துகொள்ளலாம்.

வில்லிபாரதத்தில் பாஞ்சாலி சோதிடர்களின் கூற்றுப்படி பாண்டவர்கள் ஐவரையும் மணப்பது முன்பே தெரிந்திருதாலும் துருபதன் நடத்திய யாகத்தின்போது அசரீரி கூறியபடியும் தோழிகள் வரைந்த வரைபடத்தின்மூலமும் அருச்சுனனது படத்தைத்தவிர பிற படங்களைக் காணாது அவன் ஒருவனையே தனக்கு ஏற்ற கணவனாக மனதில் நினைத்தாள். பாஞ்சாலியும் சீதையினைப் போன்று சுயம்வரப்போட்டியில் அருச்சுனன் கலந்துகொண்டு வெற்றி பெறவில்லையெனில் தான் பிறந்த தீயினுள் புகுந்து உயிர்விட இருந்தாள் என்பதனை,

"ஆண்டெரிப் பிறந்த போதே

....

எண்ணமே விளையும் நீராள்" (வில்லி. ஆதிபருவம், பா. 523)

என்ற வில்லிபாரதப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. மேலும், அருச்சுனன் அந்தணர் உருவிலிருந்து சுயம்வரப்போட்டியில் இலக்கினை வீழ்த்தி வெற்றி பெற்றான். பாஞ்சாலி அருச்சுனனுக்கு மணமாலை சூட்டினாள் என்பதனை,

"தாம்சாரற்கு அரியதனு வளைத்தான் என்று

....

செம்மணிக்கால் அருவியெனச் சேர்த்தி னாளே"
(வில்லி. ஆதிபருவம், பா. 555)

மேற்கூறிய பாடலடிகள்மூலம் அறிந்துகொள்ளலாம். இரண்டு காப்பியங்களிலும் சுயம்வரப்போட்டிக்கு முன்பே சீதையும், பாஞ்சாலியும் தனக்குக் கணவன்களாக வருபவர்களை (இராமன், அருச்சுனன்) காண்பதுபோல அமைத்திருந்தாலும் பாண்டவர்கள் ஐவரையும் பாஞ்சலி சோதிடர்களின் கூற்றின்படி மணப்பதாக வில்லிபுத்தூரர் மாற்றி அமைத்திருப்பது கம்பராமாயணத்திலிருந்து வில்லிபாரதம் கதையமைப்பில் வேறுபட்டு உள்ளதைக் காணமுடிகின்றது.

வனவாசம்

கம்பராமாயணத்தில் இராமன் பரதனுக்கு அரசாட்சியைக் கொடுத்துவிட்டு கைகேயின் திட்டப்படியும் தசரதனின் வேண்டுகோளின்படியும் வனவாசம் செல்ல இருக்கின்றான். அப்போது சீதை 'நானும் உடன் வருகின்றேன்' என்கிறாள். அதற்கு இராமன் 'தன்னுடன் வனவாசத்திற்கு வரவேண்டாம்' என்று தடுக்கின்றான். ஆனால் சீதையோ 'உன் பிரிவின் கொடுமையினைவிட எனக்கு வனவாசம் ஒன்றும் பெரிதல்ல' என்று கூறி இராமன் இலக்குவனுடன் வனவாசம் செல்கின்றாள் என்பதனை,

"சீரை சுற்றித் திருமகள் பின் செல

....

ஊரை உற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ?"

(கம்ப. அயோத்திய காண்டம், பா. 699)

எனும் கம்பராமாயணப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. வனவாசத்தின்போது சீதையின் அழகினைக் கண்டு மயங்கிய இராவணன் அவளைக் கவர்ந்து செல்கின்றான். அப்படி கவர்ந்து செல்லும்போது சீதையினைத் தொட்டுத் தூக்காது அவள் இருந்த பூமியினைப் பெயர்த்தெடுத்துச் செல்வதனை,

"ஆண்டு, ஆயிடை, தீயவன் ஆயிழைத்

....

கீண்டான் நிலம், யோசனை கீழொடு மேல்"

(கம்ப. ஆரண்ய, பா. 3390)

என்னும் பாடலடிகள்வழி அறிந்துகொள்ளலாம். சீதையினை இராவணன் கவர்ந்து சென்றதனால் இராமன் மிகுந்த வேதனைக்கு உள்ளாகினான். ஆகவே இராமனுக்கும் இராவணனுக்கும் பகை உருவானது. அப்பகையின் காரணமாக இராமன் இராவணனுடன் போர்புரிய நேரிட்டது. போரின் இறுதியில் இராவணனை இராமன் தனது வில்லினால் வீழ்த்தினான். சீதையைத் தூக்கிச்சென்ற இராவணன் சிவனிடம் பல வரங்கள் பெற்றிருந்தும் இறுதியில் இராமனது கையால் உயிர்விட்டதாகக் கம்மராமயணம் எடுத்துரைக்கின்றது.

வில்லிபாரதத்திலோ தருமன் துரியோதனனுடன் விளையாடிய சூதினால் பாண்டவர் ஐவரையும் மற்றும் பாஞ்சாலியையும் இழக்கின்றான். சூதாட்ட விதிமுறையின்படியும் அடிமைப்பட்டதன் காரணமாகவும் பாஞ்சாலி பாண்டவர்கள் ஐவருடனும் வனவாசம் செல்கின்றாள். இதனை,

"வென்றுதன் இளைஞ ரோடும் மேதகு புதல்வ ரோடும்
மன்றலம் தெரிவை யோடும் மற்றுளோர் தங்க ளோடும்
அன்றுதன் குரவர் பொற்றாள் அன்புடன் வணங்கிக் கானம் சென்றனன்"

(வில்லி. சபா பருவம் பா. 435)

மேற்சுட்டியுள்ள பாடலடிகள் மூலம் அறியலாம். கம்பராமாயணத்தில் சீதையினை மனமுவந்து இராமனுடன் செல்வதாகக் கம்பர் காட்டியுள்ளார். இராமன் காட்டில் உள்ள கொடுமையினை எடுத்துக் கூறியும் சீதை இராமனைப் பிரிய மனமின்றி அவனுடன் வனவாசம் செல்கின்றாள். வில்லிபாரதத்தில் பாஞ்சாலியோ கணவனான தருமன் தன்னைப் பணயப் பொருளாகவைத்து விளையாடியதன் காரணமாகக் கட்டாயத்துடனும் தருமன் மீதுள்ள வெறுப்புடனும் வனவாசம் செல்வதாக அமைந்துள்ளது.

கம்பராமாயணத்தில் சீதையை இராவணன் கவர்ந்து சென்றது போன்று வில்லிபாரதத்தில் பாஞ்சாலியை சடாசுரன் என்பவன் பாண்டவர்கள் ஐவரும் இல்லாத சமயத்தில் கவர்ந்து சென்ற செய்தி இடம்பெறுகின்றது. வனவாசத்தில் சடாசரன் பாஞ்சாலியினது அழகினைக் கண்டு அவளைக் கவர்ந்து செல்கின்றான்:. பாஞ்சாலியைப் பர்ணசாலையில் புகுந்து தூக்கிச் சென்றதனை,

"செந்தழல் அளித்த மடமயில் இருந்த
சிற்பவண் சாலையின் எய்திக்
கொந்தவிழ் அலங்கல் கொற்றவர் அறியா
வகையொரு கோள்மறை பிதற்றிப்
பைந்தொடி தனைக் கொண்டு அந்தரன்
தன்னில் பறந்தனன் பழியுண ராதான்"

(வில்லி. ஆரண்ய பருவம், பா. 483)

வில்லிபாரதப் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. பாண்டவர்கள் வந்ததும் பாஞ்சாலியின் தோழி சடாசுரன் கவர்ந்து சென்றதனைக் கூற வீமன் அவனிருக்கும் இடத்திற்குச் சென்று அவனை வீழ்த்துகின்றான்.

கம்பராமாயனத்தில் இராவணன் சீதையைக் கவர்ந்து சென்றதனால் ஏற்படும் மாற்றங்களை விரிவாகக் கம்பர் காட்டியிருப்பார். மகாபாரதத்தில பாஞ்சாலியைச் சடாசரன் கவர்ந்து சென்றதனால் ஏற்படும் மாற்றங்களை குறைவாகக் கூறியுள்ளார் வில்லிபுத்தூரார்.

முடிவுரை

மகாபாரதம், மனிதனது ஒழுங்கற்ற வாழ்வினை எடுத்துரைக்க, இராமாயணம் ஒருவனுக்கு ஒருத்தி என்ற ஒழுக்கத்தைப் போதிப்பதற்காக எழுந்தது. இவ்விதிகாசங்கள் இரண்டும் வடமொழியில் தோன்றி-யிருந்தாலும் தமிழக மக்களால் போற்றிப் பாராட்டப்படுகின்றன. மேலும் மகாபாரதம் ஐந்தாம் வேதமாக தமிழக மக்களால் போற்றப்படுகின்றது. சீதை, பாஞ்சாலி ஆகிய இருவரது வாழ்க்கையும் எதிர்மறையான (சீதை இராமன் ஒருவனைமட்டும் மணக்க, பாஞ்சாலியோ பாண்டவர்கள் ஐவரை மணந்ததால்) பாத்திரங்களாகவே அனைவரும் கருதுகின்றனர். ஆனால் இருவரது வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளும் ஒன்றாகவே உள்ளன என்பதனை இக்கட்டுரைமூலம் அறியலாம்.

கம்பனின் 'உலகம்' ஓர் ஒப்பீட்டுப் பார்வை

முனைவர் அ.இராமகிருஷ்ணன்
காரைக்குடி.

முன்னூறுக்கும் மேல் இராமாயணக் கதைகள் நாடு முழுவதும் பல கவிஞர்களால் எழுதப்பட்டதாக வரலாறு ஒன்று கூறுகிறது. ஆதிகவி வால்மீகி முனிவரே ஆவார். அவருக்குப்பின் 25 கவிஞர்கள் சமஸ்கிருதத்தில் இராமாயணம் பாடியுள்ளனர் என்று தெரிகிறது.

ஆனால், 'கம்பனின்' பாடல்களில் உள்ள நயம், அழகு, கருத்து மற்றும் தமிழகப் பண்பாடு முதலிய அனைத்தையும் தமிழில் காப்பியமாக இயற்றியது 'கம்பர்' மட்டுமே. உலகம் சார்ந்த அத்தனை மொழிகளில் தோன்றிய காப்பியங்களில் உயர்ந்தது மகாகவி 'கம்பர்' இயற்றிய இராமாயணம்தான் என்பதை மேல் நாட்டு அறிஞர்கள் அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

முதல் பாடலிலேயே சேக்கிழார் உலகெலாம் என மங்கல வாழ்த்தோடு தொடங்கியதால்தான் பின்னர்வந்த கம்பரும் முதல்பாடலில் 'உலகம் யாவையும்' எனத் தொடங்கினார் என்றும், கம்பரின் பல பாடல்களில் சேக்கிழாரின் தாக்கம் காணப்படுகிறது என்றும் திருமுருக கிருபானந்தவாரியார் தனது நூலிலே பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

வள்ளுவரின் தாக்கம் சேக்கிழாருக்கும் இருந்திருக்கிறது. வள்ளுவனின் தாக்கமும், சேக்கிழாரின் தாக்கமும் கம்பருக்கு இருந்துள்ளது. வள்ளலாருக்கு சேக்கிழாரின் தாக்கமும், வள்ளுவனின் தாக்கமும் இருந்தது தெரிய வருகிறது.

19ம் நூற்றாண்டில் பிறந்து வளர்ந்த வள்ளலார் இயற்றிய திருவருட்பாவில், வள்ளலார் சமயங்களிடத்தும், புராணங்களிடத்தும் நம்பிக்கை அற்று, சாதியும், சமயமும் பொய் என்று தனது அருட்பெருஞ்ஜோதி அகவலில் தெரிவித்துள்ளார்.

கௌதமபுத்தர் தனதுவழி தனிவழி எனக்கண்டு மனிதர்களுக்கு வழிகாட்டியதுபோல், வள்ளலாரும் சமரச சன்மார்க்க வழியைக் காட்டியுள்ளார். இருவருமே "உலகத்திற்காகத்" தான் செய்திகளைத் தந்துள்ளார்கள்.

ஆனால், கம்பனின் பெருங்காப்பியமான 'இராமாயணத்தைப்' படித்து முடித்த பிறகு எனக்குக் கீழ்க்கண்ட நன்முத்துக்கள் தான் நினைவுக்கு வருகின்றன.

"ஜனி சத்ரும் காமரூபம் துரானதம்" "தேகத்தோடு வந்து உள்ளே இருந்துகொண்டு 'காமம்' பல ரூபம் எடுத்துப் புத்தியையும் குழப்பி, வரும் இந்தப் பெரும் சத்துருவை ஆன்ம சக்தியால் சுருக்கி வெற்றி பெறுவாயாக" என்று பகவத் கீதையில் "பகவான்" கண்ணன் முடிக்கிறான்.

நம்மையும் அறியாமல் உள்ளே இருந்து வரும் ஆசை விவேகத்தையும் கெடுத்து விடுகிறது. தவறான முடிவுகளுக்கு வந்து விடுகிறோம். பாவங்களில் சிக்கிக் கொள்கிறோம்.

காமம். கோபம் (மன்யூ) இவை இரண்டும்தான் எல்லாக் குற்றங்களுக்கும் காரணம். இவற்றை உள்ளம் என்ற கோட்டைக்குள் விடாமல் மனதைக் காப்பாற்றினால் தான் ஆயுள் முடிய நாம் தப்ப முடியும் என்பது நிஜம்.

எத்தனை பெரிய தாக்கம் நேர்ந்தாலும் காலக்கிரமத்தில் உள்ளத்தில் நாம் பெற்றிருக்கும் மறதி என்ற சக்தியினால் துக்கம் வரவர மறந்து போய் வாழ்க்கையில் கவனம்செலுத்தி அமைதி அடைகிறோம். ஈசுவரம் அமைத்திருக்கும் இந்த மறதி என்னும் சக்தி நமக்கு மிகப் பெருஞ்செல்வமாகும். இது இல்லையேல் இந்த உலகம் துயரத்துக்கு மேல் துயரமாகக் குவிந்து நரகமே ஆகிவிடும், என்கிறார் மூதறிஞர் இராசாசி. மனித வாழ்க்கைக்கு மேற்கண்ட உண்மைகள் தேவையான அடிப்படையான குணநலன்களாகும்.

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாபெரும் கவிபாரதி கூட கம்பனைப் போல், வள்ளுவனைப்போல், இளங்கோ அடிகள் போல் யாரும் காணோம் என்று தான் முழங்கினான். முதல் வெற்றி கம்பனுக்கே!

கம்பராமாயணத்தில் தசரதச் சக்கரவர்த்தி என்ற அரசனைப் புகழ்ந்து பாடுகிறான். தன்னை சாதாரணக் கவி என்றான். திருப்பாற்கடலை பூனை நக்கிக் குடிக்க நினைத்தது போல் நான் இராமாயண சாகரத்தில் மூழ்கி எழுந்தேன் என்கிறான்.

அவதார புருஷனான இராமனை, இலக்குவனை, சீதையை சாதாரண மானிடர்களுக்கு உள்ள குணங்களோடு கூடிய பாடல்கள்

இயற்றிய வால்மீகியிலிருந்து பிசகாமல் உலகத்துக்கு கம்பன் தமிழில் முதன்முதலாக எடுத்துச் சொன்னான்.

அனுமனையும், வாலியையும், சுக்கீரவனையும் குரங்கினம் என்றாலும் அவர்களின் வலிமையை, பெருமையை நமக்கு உணர்த்துகிறான்.

சகல வரங்களும் பெற்ற அசுரன் 'இராவணன்' என்றொரு மாபெரும் அரசன் மாற்றான் மனைவியை மோகித்ததாலேயே ஒரு மானிடனிடம் தானும் ஏனைய அசுரர்களும் தோற்றதாக பாடியுள்ளான்.

அதே போன்ற ஆட்சி தன்னிடம் வந்த போதும், வேண்டாம் என்று மறுத்து அண்ணணின் பாதுகையை வைத்துக் கூட சிறப்பாக ஆட்சி செய்தான் பரதன் என்கிறான். பரதாழ்வார் எனப் போற்றுகின்றான்.

இவற்றைஎல்லாம் நோக்கும் போது கங்கையும், காவிரியும் ஓடும் வரையில் சீதா ராமசரிதம் பாரத நாட்டின் மக்கள் அனைவரையும், தாய் போல் பக்கத்திலிருந்து காக்கும் என்று மூதறிஞர் இராசாசி கூறியது முற்றிலும் உண்மை கம்பருக்கே என்றென்றும் வானளாவிய புகழ் போய்ச் சேரும் என்பதுதான் மாபெரும் உண்மை, என்பது மேற்கண்ட மாமனிதர்களை ஒப்பிடும் போது தெள்ளத் தெளிவாகின்றது.

வாலியும் சிலுவையில் தொங்கிய குற்றவாளியும்

முனைவர் க.கமலா ஏஞ்சல் பிரைட்
முதுநிலை ஆராய்ச்சியாளர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவம்,
சென்னை.

இன்பமும் துன்பமும் நிறைந்ததே மனித வாழ்வு. இன்பமாக வாழ வேண்டுமாயின் மனிதன் நல்வினைகள் பல செய்ய வேண்டும். தீய செயல்களில் ஈடுபட்டால் நிச்சயம் தீவினையே வாழ்வில் நிகழும். அறஒழுக்கத்திலிருந்து தவறி வாழ்பவர் வீடுபேறு அடைய முடியாது என்பதே நியதி. ஆனால் அறஒழுக்கத்திலிருந்து தவறி வாழ்ந்த ஒருவன் தன் உயிர் போகும் நிலையில் இறைவனிடம் தன் தவற்றை ஒப்புக்கொண்டு தன்னை அர்ப்பணித்தபோது இறைவன் அவனது தவற்றை மன்னித்து வீடுபேறு அளித்தான் என்று கூறுகிறது கமராமாயணமும் பரிசுத்த வேதாகமும்.

கம்பராமாயணத்தில் கிட்கிந்தா காண்டத்தில் வாலிவதைப் படலத்தில் வரும் சிறப்புப்பெற்ற கதாப்பாத்திரம் வாலி. வாலியும், சுக்ரீவனும் அண்ணன் தம்பிகள். மாயாவி என்னும் அசுரனால் இறந்து விட்டான் என்று நினைத்த சுக்கிரீவன் நாட்டிலுள்ள பெரியோர்களது வற்புறுத்தலுக்கிணங்க அரசனாகிறான். குகையிலிருந்து வெளியே வந்த வாலி, சுக்கிரீவனைக் கொல்லத் துரத்துகின்றான். சுக்கீரீவன் ருசியமுக மலையில் தஞ்சம் அடைந்து மறைந்து வாழும் வேளையில் இராமனின் நட்பு கிடைக்கப்பெறுகின்றான். சுக்கிரீவனுக்கும் வாலிக்கும் போர் நடைபெறும்போது இராமன் மறைந்திருந்து அம்பெய்து வாலியை கொல்கின்றான். வாலி இறக்கும் தறுவாயில் நிகழும் நிகழ்ச்சியாக வடிவமைத்து வீடுபேறு வாழ்வைப் பெறும் வழியினை விளக்கும் கம்பனின் திறன் போற்றுதற்குரியதாம்.

பரிசுத்த வேதாகமத்தில் இறைமகன் இயேசுகிறிஸ்துவைச் சிலுவையில் அறையும்போது அவரின் வலதுபுறம் ஒரு குற்றவாளியையும் இடதுபுறம் ஒரு குற்றவாளியையும் அறைகின்றனர். (பரிசுத்தவேதாகமம்,புதிய ஏற்பாடு,மத்தேயு 27:38,பக்-45) சிலுவையில் இறைமகன் இயேசுவுக்கும் குற்றவாளிகளுக்குமிடையே ஏற்படுகின்ற உரையாடலும் வீடுபேற்றின் உயரிய கருத்தை வெளிப்படுத்துகின்றது. கம்பனால் வருணிக்கப்பட்ட கதாபாத்திரமாகிய அறஒழுக்கம் தவறிய வாலியும், சிலுவையில் அறையப்பட்டு தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளியும்

எவ்வாறு வீடுபேறு பெற்றனர் என்பதை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் மையக்கருத்தும் நோக்கமுமாகும்.இவ்வாய்வுக் கட்டுரையானது ஒப்பாய்வு அணுகுமுறையில் ஆராயப்பட்டுள்ளது. இவ்வாய்விற்காகக் கம்பராமாயணம் மற்றும் பரிசுத்த வேதாகமம் ஆகிய நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கம்பராமாயணத்தில் வாலி கதாப்பாத்திரமும், பரிசுத்த வேதாகமத்தில் சிலுவையில் தொங்கிய குற்றவாளியும் இவ்வாய்வுக் கட்டுரையின் ஒப்பாய்வுக்கு ஆய்வுக்களங்களாக எடுத்தாளப்பட்டுள்ளது.

வாலிவதைப்படலத்தில் வாலியை மறைந்து நின்று அம்பெய்கின்றான் இராமன். "நீ செய்தது அறமோ" என்று வாலி வினவ, அதற்கு இராமன் வாலியின் தீய செயல்களைக் குறித்து சுட்டிக்காட்டுகின்றான்.

'வாலியாகிய நீ மாயாவி என்னும் அசுரனால் இறந்துபட்டாய் என்றெண்ணிய உன் தம்பி சுக்கிரீவன் நின் நாட்டிலுள்ள பெரியோர்களது வற்புறுத்தலுக்கு இசைந்து கிட்கிந்தையின் அரசாட்சியை ஏற்று நடத்தியதன்றி நினக்கு மாறுபட்டு அரசாட்சியைக் கவர்ந்தவனல்லன் என்பதை நீ தெளிவாகத் தெரிந்துகொண்டபின்பும், நின் தம்பி சுக்கிரீவன் நின்னை மகிழ்ந்து எதிர்கொண்டு வணங்கித் தன் பிழையைப் பொறுக்கும்படி நின்னை வேண்டி அடைக்கலம் புகுந்த நிலையிலும் அவனைக் கொன்றழிக்கத் துணிந்தாய். அவனுடைய மனக்கிழத்தியை வலிதிற் கவர்ந்துகொண்டாய். குடிப்பிறப்பு, வீரம், வாய்மை முதலிய ஒத்த ஒழுக்கமாவது பிறன்மனையாளை விரும்பாமையும், அவளை மதித்து காக்கும் பேராண்மையும் ஆகும். ஆனால், நீயோ ஒழுக்கநெறியையும் இருமைப்பயன்களையும் அறிந்தனையாயின், நின் பெருமை-யினைவிட்டு நின் தம்பிக்குரிய மனைவியை வலிதிற்கவர்தலாகிய இத்தீச்செயலைச்செய்யத் துணிவாயோ? இங்ஙனமெல்லாம் நின் தம்பிக்குப் பெருந்தீங்கு புரிந்தமையால் உன் உயிர் கவர்ந்தேன்' என்று பதிலளித்தான்.

இராமன் தன் தம்பி சுக்கிரீவன் மனைவியைக்கவர்ந்ததே அதாவது பிறன்மனையாளை விரும்பிய தீச்செயலே வாலி புரிந்த பெரும் முதல் குற்றமாகும். தன் தம்பி சுக்கிரீவன் தன்னை மன்னிக்கும்படி அடைக்கலம் புகுந்தபோதும் அவனை மன்னிக்காமல் கொல்லத் துணிந்தது வாலி செய்த இரண்டாவது குற்றமாகும். இதனை சுட்டிக் காட்டுகின்றான் இராமன். எனவே இராமன் பார்வையில் அறவாழ்வு தவறி தீச்செயல் புரிந்த குற்றவாளி வாலி. இக்கருத்தினை,

"கொல்ல லுற்றனை யும்பியைக் கோதவற்
கில்லை யென்ப துணர்ந்து மிரங்கலை
அல்லல் செய்யே லுனக்கப யம்பிழை
புல்ல லென்னவும் புல்லலை பொங்கினாய்"
(கம்பரா.வாலிவதைப்படலம் - 4142)

என்ற பாடல் வரிகளும்,

"ஈர மாவது மிற்பிறப் பாவதும்
வீர மாவதுங் கல்வியின் மெய்ந்நெறி
வார மாவது மற்றொரு வன்புணர்
தார மாவது தாங்குந் தருக்கரோ" (கம்பரா.வாலிவதைப்படலம்- 4145)

என்ற பாடல் வரிகளாலும் அறிய முடிகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் இருகுற்றவாளிகளில் ஒருவன், சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த இயேசுபிரானை நோக்கி இகழ்கிறான். இதனை,

"அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்; நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்"

"மற்றவன் அவனை நோக்கி; நீ இந்த ஆக்கினைக் குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?"

"நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம். நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம். இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனை கடிந்து கொண்டு" (பரிசுத்த வேதாகமம் புதிய ஏற்பாடு- லூக்கா : 23:39-41 பக்-121)

ஒரு குற்றவாளி இறைவனை இகழ்கிறான். மற்றவனோ நாம் செய்த தீச்செயலுக்கு தக்க பலனை அனுபவிக்கிறோம் என்று தன் குற்றத்தை ஒப்புக்கொள்கிறான் எனக் காண்கிறோம்.

வாலி இராமன் கூறிய அறிவுரைகளால் தன் குற்றத்தை இறுதியில் ஒப்புக்கொள்கிறான். இறுதியாக வாலி இராமனிடம் தன்னையே ஒப்படைத்துத் தன் குற்றத்தை பொறுத்தருளுமாறு வேண்டுகிறான். இதனை,

"தாயென வுயிர்க்கு நல்கித்
    தருமமுந் தகவுஞ் சால்பும்
நீயென நின்ற நம்பி
    நெறியினி னோக்கு நேர்மை

நாயெனெ நின்ற வெம்பா
　　னவையற வுணர லாமே
தீயன பொறுத்தி யென்றான்
　　சிறியன சிந்தி யாதான்" (கம்பரா. வாலிவதைப் படலம் -4165)

தாய் போன்று எவ்வுயிருக்கும் தலையளி செய்யும் தலைவனே! நாய் போன்று இழிந்த தன்மையினையுடைய எம்பால் குற்றங்கள் இல்லாமல் இருக்குமோ? யான் அறியாமையினால் செய்த குற்றங்களைப் பொறுத்திருந்து யான் இழித்துரைத்த புன்மொழிகளை நின் திருவுள்ளத்திற்கொள்ளாதொழிக" என இராமனை இரந்து வேண்டினான் எனப் பாடல் வரிகள் கூறுகின்றன.

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு குற்றவாளி தன் குற்றங்களை உணர்கின்றான். இறைவனிடம்,

"இயேசுவை நோக்கி, ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்பொழுது அடியேனை நினைத்தருளும் என்றான்"

(பரிசுத்த வேதாகமம் புதிய ஏற்பாடு: லூக்கா:23 : 42 பக்-121)

என்று வேண்டுதல் செய்கின்றான்.

இங்கு, நாம் பார்க்கும்பொழுது இவருடைய நிலைமையும் ஒன்றுபோல் உள்ளது. இருவரும் குற்றவாளிகள். மேலும் இருவரது உயிரும் ஊசலாடும் தறுவாயில், அதாவது சிறிது நேரத்தில் உயிர் பிரியும் நிலையில் உள்ளனர். அச்சிறு நேரத்தில் தாங்கள் செய்த தவறுகளை ஒப்புக்கொண்டு இறைவனிடம் மன்னிப்புக் கேட்கின்றனர். பிறப்பு முதலே நல்வினை செய்து வாழ வேண்டும் என்ற நியதி ஒருபுறமிருக்க இறக்கும் தறுவாயில் தன் தவற்றை உணர்ந்து இறைவன்பால் செல்லத் துடிக்கின்றனர் இரு குற்றவாளிகளும். இறைவனிடம் மன்னிப்புக் கோருவதில் இருவர் மனநிலையும் இருநூல்களிலும் ஒன்றுபோல் காணப்படுகின்றது.

இராமன் வாலியை மன்னித்து வீடுபேறு அளித்தான் என்பதை ,

"என்னலு முலக மேழு
　　மேத்தின விறந்து வாலி
அந்நிலை துறந்து வானுக்
　　கப்புறத் துலக னானான்" (கம்பரா. வாலி வதைப் படலம். 4197)

உடம்பை விட்டு உயிர் நீங்கப்பெற்று வானோர்க்கும் எய்துதற்கு அரியதாய் உயர்ந்த வீட்டுலகத்தை அடைந்தான் என்று பாடல் வரிகள்

கூறுகின்றன. இராமன் வாலிக்கு வீட்டுலக வாழ்வை அழித்தான்.

இயேசு கிறிஸ்துவை நோக்கி குற்றவாளிகளில் ஒருவன் தன் குற்றத்தைப் பொறுத்தருளவும், வீட்டுலக வாழ்வளிக்க வரம் வேண்டவும்,

"இயேசு அவனை நோக்கி இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்"
(பரி.வேதா. புதிய ஏற்பாடு: லூக்கா:23 : 43)

இயேசு கிறிஸ்து குற்றவாளிக்கு வீட்டுலக வாழ்வை அளித்தார். இருவரும் வீட்டுலக வாழ்வடைந்தனர் என்ற செய்தியை இருநூல்களும் கூறுகின்றன.

தீவினைகளே செய்து வரும் ஒருவனைக்கூட அவன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு மன்னிப்பு வேண்டும்போது இறைவன் அவனுக்கு அந்நிமிடமே வீட்டுலக வாழ்வை அளிப்பதாகக் காண்கிறோம். தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு மனம் திருந்தி இறைவன்பால் தன்னை ஒப்படைத்து வீட்டுலக வாழ்வை வேண்டிய குற்றவாளிகளைப்போல நாம் உலகில் வாழும் நாட்களில் தீவினைகளிலிருந்து விலகி நல்வினையில் ஈடுபட்டுப் பேரின்ப வாழ்வை வாழ வேண்டும்.

வாழும்காலங்களில் நீ நன்றாக வாழ்ந்துவிட்டு இப்போது குற்றத்தை ஒப்புக்கொள்கிறாயே என்று இறைவன் நினைக்கவில்லை. இறுதிநேரத்தில்கூட வீட்டுலக வாழ்வை இருவருக்கும் இறைவன் கொடுத்தார் எனக் காண்கிறோம். நல்வாழ்வு வாழும் காலங்களில் எல்லாம் தீவினை செய்து எப்படியும் வாழ்லாம் என்று கருதக்கூடாது. கூடியமட்டும் நல்வினை செய்து வாழ வேண்டும்.

வீட்டுலக வாழ்வின் இன்றியமையாமையை வாலியின் வழிநின்று உணர்த்தும் கம்பரின் அறக்கருத்துக்கள் போற்றுதற்குரியதாகும். அவ்வண்ணமே சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் குற்றவாளியின் மூலமாக வீட்டுலக வாழ்வின் இன்றியமையாமை உணர்த்தும் இறைமகன் இயேசுவின் அறக்கருத்தும் போற்றுதற்குரியதாகும்.

கம்பனும் ஷேக்ஸ்பியரின் 'மெக்பெத்'தும்

திருமிகு. சேட்டு மதார்சா
தமிழாசிரியர், அப்துல் கனி மதுரஸா இஸ்லானியா உயர்நிலைப்பள்ளி,
ஈரோடு.

முன்னுரை

உலகின் தலைசிறந்த நாடக ஆசிரியர் ஷேக்ஸ்பியரின் ஹாம்லட் ஒதெல்லோ, மெக்பெத் ஆகிய நான்கு நாடகங்களில் 'மெக்பெத்' ஒரு தனி ரகம். இது 1606 ல் உருவாக்கப்பெற்றிருக்கலாம். மெக்பெத் காவியமாகவே போற்றப்படுகிறது. இந்நாடகத்துடன், கம்பனை ஒப்பிட்டு நோக்குவோம்.

'மெக்பெத்' நாடகச் சுருக்கம்

கதைநாயகன் 'மெக்பெத்' ஸ்காட்லாந்து தேசத்தின் படைத் தளபதியாக இருப்பதுடன் ' கிளானிஸ்' என்ற பகுதியின் அதிபதியாகவும் இருக்கின்றான். மன்னன் டங்கன் 'மெக்பெத்' மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தான் மூன்று சூனியாக்காரிகள் கூறியதைப்போல 'காவ்டார் பிரபு' பட்டம் மெக்பெத்துக்குக் கிடைத்தவுடன் அவன் மனம் சூனியாக்காரிகள் சொன்னது நடந்துவிட்டது. அடுத்தது மன்னராவதும் நடக்கும் என்று எண்ணுகின்றான். மன்னர் டங்கன் தம் மூத்த மகன் மால்கம்மை கம்பர்லாந்தின் இளவரசனாக அறிவிக்கிறார். இது மெக்பத்தை மிகவும் சினப்பட வைத்தது. மெக்பெத் மனைவியின் திட்டப்படி மன்னன் டங்கன் கொல்லப்படுகிறான். மன்னன் டங்கன் மகன்கள் மால்கம், டொனால்பெய்ன் ஆகியோர்மீது சந்தேகம் வர அவர்கள் தலைமறைவு ஆகின்றனர். மெக்பத், அவர்கள் மீது பழியைப் போட்டுவிட்டு மன்னனாகின்றான் சூனியாக்காரிகள் பேசிய போது மெக்பெத் உடன் இருந்தவன் பேங்கோ, அவன் மெக்பத்திடம் 'மன்னன்' இறந்ததைப்பற்றி' விவாதம் செய்ய, ஆட்களை வைத்து பேங்கோவைக் கொல்கின்றான். மன்னன் டங்கனின் விசுவாசி மேக்டஃப் விவரம் அறிந்து படைகளைத் திரட்டி மெக்பத்தைச் கொல்கின்றான். இளவரசன் மால்கம் மன்னராகின்றான் இதுதான் மெக்பெத் நாடகத்தின் கதைச்சுருக்கம்.

இராமாவதாரம் – மெக்பெத்: கதை அமைப்பு ஒப்பீடு

இராவணவதமே கதையின் பொருள். சூர்ப்பணகை சூழ்ச்சி இந்நிகழ்ச்சியின் தொடக்கம். இராவணன் சீதையைக் கவர்தல் இடை.

மேனாட்டு மரபுப்படி ஆரண்ய காண்டத்திலிருந்து தொடங்கவேண்டும். இராவண வதம் இறுதிக்காண்டத்திலிருந்து தொடங்கவேண்டும். சீதையை அபகரித்துச் செல்லும் உச்சிநிலையை அடையும்முன் இராம இலக்குவர் சீதையுடன் காடுவந்த பூர்வ கதையைக் கிளைக் கதையாக, காவியப் பாத்திரங்களின் கூற்றாக அமைத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்திருப்பின் காவிய ஓட்டம் தடைபட்டுத் தேக்கம் ஏற்பட்டிருக்கும், நல்லவேளை, கம்பர் அதை அறியவுமில்லை. ஆக்கவும் இல்லை.

கூனியால் மனம் மாறிய கைகேயி சூழ்வினை இராவணவத கதைக்குப் பூர்வாங்க சிக்கல். அதனால் இவர்கள் காடு வரல், இவை அயோத்தியா காண்டத்தில் விவரித்த பின் இராவணவத நிகழ்ச்சி;க்குச் தொடக்கமாகியுள்ளது சூர்ப்பணகை சூழ்ச்சியை அமைத்திருக்கிறார்.

இவ்வாறாக, இக்கதைப்பொருள் அயோத்திய காண்டத்திலிருந்தே தொடங்குகின்றதெனினும், அதற்கு முன்னால் வான்மீகியைப் பின்பற்றும் கம்பர் பாலகாண்டம் அமைக்கிறார். எனினும் இராவண வதம் என்ற பொருளின் ஒருமைநலம் ஓங்கு நிற்கிறது.

மெக்பெத்தின் அறிவு கதையின் பொருள். சூனியக்காரிகள் சூழ்ச்சி இந்நிகழ்ச்சியின் தொடக்கம். மெக்பெத் ஸ்காட்லாந்தின் மன்னனாதல் இடை. மெக்பெத் அழிவு இறுதி. மேனாட்டு மரபுப்படி கதையின் இடையிலிருந்தே இந்நாடகம் தொடக்கப்படுகிறது. மேக்டஃப் இங்கிலாந்திற்கும் சென்று அங்கு நடப்பது கிளைக்கதையாகின்றது. மேக்டஃப் மன்னன் டங்கன்மீது கொண்ட விசுவாசத்தின் ஸ்காட்லாந்த் மெக்பெத்திடம் காப்பாற்றப்படவேண்டும் என்ற நம்பிக்கையில் அளிக்கும் வகையில் பேசியிருப்பது கதைப் போக்குடன் இயல்பாக ஐக்கியமாகியுள்ளது. மூன்று சூனியக்காரிகளின் குறியால் மனம் மாறிய மெக்பெத் சூழ்வினை, மெக்பத் அழிவு கதைக்குப் பூர்வாங்க சிக்கல். மேக்டஃப் இங்கிலாந்து செல்கின்றார். இவை பழிக்குப்பழி வாங்க மேக்டஃப் சபதம் பகுதியில் விவரித்தபின் மெக்பெத்வத நிகழ்ச்சிக்குத் தொடக்கமாகியுள்ள "லேடி மெக்பெத்துக்கு மனநோய்" பகுதியை அமைத்திருக்கிறார் ஷேக்ஸ்பியர்.

இவ்வாறாக இக்கதைப்பொருள் மேக்டஃப் பழிக்கும் பழிவாங்க சபதம்" பகுதியில் தொடங்குகின்றதென்றாலும் மெக்பெத் அழிவு என்ற பொருளின் ஒருமை நயம் ஓங்கி நிற்கின்றது.

நாடகம் மற்றும் காவிய நிகழ்ச்சியின் ஒருமைப்பாட்டிற்காகக் கதையின் இடையில் தாக்கம் அல்லது காவியத்தைத் தொடங்குவது

மேனாட்டு மரபு. கதை முதல் இடை, கடை ஆகிய 3 பகுதிகளையும் சிறந்தாகும். (முருகன்.வே.,இலக்கியநெறி, ப.36) என்கிறது அரிஸ்டாட்டில் கூற்று ஷேக்பியரின் மெக்பெத்துக்கும் கம்பரின் இராமவதாரத்திற்கும் பொருத்தி அவை சிறப்பானவை என்பதை மேற்காட்டிய ஒப்பீடுகள் மூலம் அறிய முடிகின்றது.

மெக்பெத்தும் இராவணனும்

இவர்கள் இருவரையும் தீமைக்கே பெரிய அச்சப் பாத்திரங்களாகக் கவிஞர்கள் அமைக்கவில்லை. நல்ல, தீய இயல்புகள் ஒரு சேரப் பெற்றவர்களாகவே இவர்கள் உள்ளனர். எனவே, அவர்தம் மாட்சியிலும், வீழ்ச்சியிலும் ஜீவன் நிறைந்துள்ளது.

இராவணன் மெக்பெத்தைவிட அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்தவன். பெருவீரன், கயிலையைத் தூக்கியவன் ஆயிரம் மறைகளை உணர்ந்தவன். நாரதரே பாராட்டும் சாமகானம் பாடிய இசை வள்ளல். சீதைபால் அவன் கொண்ட காமம் அவனது அழிவிற்கு வித்தாகிறது.

காமம் மானத்தையும் புறக்கணிக்கிறது. 'கரனையும் மறந்தான்......... கேட்ட மங்கையை மறந்திலாதான் என்ற இடத்தில், சூனியக்காரி வடிவில் மெக்பெத்தை வஞ்சித்ததுபோல சூர்ப்பணகையின் வஞ் சகத்திற்கு இலக்காகி, இராவணன் மாயமான் நாடகம் மூலம் வஞ் சித்தல் சந்நியாசி வேடம் புனைதல் எல்லாம் நடக்கிறது. அவனது வஞ்சகத்தால் ஏற்படவிருக்கும் விபத்தை எண்ணி இயற்கை அன்னை நடுங்கினாள்.

மன்னர் டங்கன் கொலை செய்யப்படும் நாளில் வானில் விநோதமான காட்சிகளுடன் இயற்கை நடுங்கியதாக ஷேக்ஸ்பியர் கூறுகிறார்.

இராவணன் மான உணர்வுடையவன். 'என்னையே நோக்கி நான் இந்நெடும் பகை தேடிக்கொண்டேன்", என்று கூறுகின்றான். தம்பி, மகன் ஆகியோர் இறந்தபோதும் புலம்பினான். அனுமான் 'குத்தால்" வருந்தியபோதும் அவனைப் பாராட்டினான். இறுதியில் 'மும்மடங்கு பொலிந்த நிலையில்' மாய்ந்தான். மெக்பத்தும் மகோன்னதமானவனே எனினும் அவனது துண்டித்த தலை ஈட்டியால் குத்தப்பட்டு சிறுமையுற்றான். இறுதிவரை மாவீரத்துக்குச் சான்றாகத் திகழும் மகோன்னதம் இராவணனுக்கே உரியது. மெக்பெத்துக்கு அன்று.

காவியத் தலைவர் ஒப்பீடு

மெக்பெத்துக்குத் தலைவன் மெக்பெத்தா? மேக்ட மேக்டஃப்பா? என்பது பற்றி விவாதம் நடைபெறுகிறது. ஆனால் கம்பனில் இராமன் தலைவன் என்பதில் தடையில்லை. இராமன் இராவணனைவிடப் பன்மடங்கு உயர்ந்தவன்.

தலைமைப்பாத்திர இயல்புடையோரிடம் அமைந்திருக்க வேண்டிய பண்புகள் எவை? அழகு, இளமை, புகழ், ஆண்மை, ஆக்கம், ஊக்கம், அருள், தர்ப்பணம் என்னும் நூல் கூறும் காவியத் தலைவன் நலம் பல செய்கின்றவனாக அமைய வேண்டும். நல்லன செய்யும்போது அல்லன குறுக்கிடும். குறிப்பன செய்துமுடித்து, நன்மைக்கு - உண்மைக்கு என்றும் அழிவில்லை என்று காட்டக் கூடியவனே காவியத் தலைவன். (மேலது. ப.62)

இக்கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு இவ்விரு இலக்கியத் தலைவர்களையும் நோக்குவோம்.

மெக்பெத் ஆரம்பநிலையில் நல்லவனாகத் தான் இருக்கின்றான். சூனியக்காரிகள் சொன்ன குறியாலும், தனது மனைவியாலும் ஸ்காட்லாந்த் மன்னனாக ஆசைப்பட்டு சுயநலவாதியாக தீயவனாகின்றான். மேக்டஃப் அன்புள்ளவன். மன்னன் டங்கனின் விசுவாசமிக்கவன். நாட்டுப்பற்று மிக்கவன். தீயவற்றை எதிர்த்து அறத்தை நாடுபவன், தமிழ் மரபினை நோக்கும்போது மேக்டஃப் கதைத்தலைவனாகின்றான். ஆனால் ஷேக்ஸ்பியர் மெக்பெத்தின் உள்ளுணர்வைக்கொண்டு அவனையே தலைவன் என்பது சிந்திக்கத்தக்கது.

மெக்பெத் உன்னதமான பாத்திரம் இல்லை. இவ்வகையில் நோக்கும்போது தலைவன் இல்லாத காப்பியமாக 'மெக்பெத்' உள்ளது. கதைமுழுவதும் உலவுவதால் ஓரளவு அக்கதைத்தலைவனாக அவனைக்கொள்ளலாம். இராவணன் மெக்பெத்தைவிடச் சிறந்தவனாக இருந்தும் கம்பனின் காவியத்தலைவன் ஆகவில்லை. ஏனெனில் காவியத்தலைவன் படைப்பில் கம்பன் ஒப்பில்லாத வெற்றி பெற்று விட்டார்.

இராமன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். உடன் பிறந்தாரிடம் அன்பு, உடன் பிறவாதாரையும் தம்பியராகக் கொள்ளல், சீதையிடம் உண்மைக்காதல், மனிதத் தன்மைகள், தன்னிகரில்லாத வீரன் இவ்வாறு மானிட அன்பின் மேன்மைக்கும் மாட்சிமைக்கும்

கலங்கரை விளக்கமாகத் திகழ்தல்.

'இன்று போய் நாளை வா" எனப் பகைவனுக்கும் அருள் செய்தல், இறுதிநாள் போரில் இராவணன் மூர்ச்சித்த போது கணை தொடுக்காமை, இத்தகு சீர்மிகு பண்புகளின் உறைவிடமாக இராமன் திகழ்தல்.

உலகமகா காவியங்களில் காவியநாயகனின் படைப்பில் கம்பரது வெற்றி மகத்தானது. இந்த அம்சத்தில் ஷேக்ஸ்பியர் நாடகத்தின் குறையும் கம்பனது காவிய நிறையும் உள்ளங்கை நெல்லிக்கனி போலத் திகழ்கிறது.

நிறைவுரை

கவிஞனது இலக்கண அறிவும், இலக்கிய உத்தியும் இலக்கிய ஒப்பீடுகளின் பொழுதுதான் நன்கு அறியமுடியும். அம்முறையில் ஷேக்ஸ்பியரின் மெக்பெத்தைவிட கம்பரின் இராமாவதாரம் பலபடி மேம்பட்டு நிற்கின்றது. உலகில் சிறந்த பல கவிஞர்களிடையில் ஒப்புயர்வற்ற பீடத்தைக் கம்பனுக்கு அளிக்கும் உன்னத சித்திரம் இராமாவதாரம். ஷேக்ஸ்பியரைவிட கம்பரது படைப்புகள் தனி முத்திரையுடன் விளங்குவதே கம்பரின் மேம்பட்ட கவிஅறிவுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி.

"கம்பன் - மில்டன்"

திருமிகு. ம.விஜயலெட்சுமி
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

கம்பராமாயணம் காவியக் கட்டுக்கோப்பிலே சிறந்து விளங்குகிறது. பாத்திரப்படைப்பிலும், நாடக அமைப்பிலும், உரையாடல் திறனிலும் தனக்கே உரிய தனித்தன்மை பெற்று இந்நூல் விளங்குவதால், 'கம்பநாடகம்' என்னும் பெயரும் பெற்றுள்ளது. "கம்பராமாயணமும், சொர்க்க நீக்கமும்" தலைசிறந்த காப்பியங்களாகத் திகழ்கின்றன என்பதைப் பற்றி விரிவாக ஆராயலாம்.

கம்பர் – குறிப்பு

கம்பர் சோழநாட்டில் திருவழுந்தூரில் ஆதித்தன் மகனாகப் பிறந்து. சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டார். வான்மீகியின் இராமாயணத்தைத் தழுவி, தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப, தந்துள்ளார். தனது இராமாயணத்தைச் சிதம்பரத்தில் அரங்கேற்ற நினைத்து இயலாமல் போனதால் திருவரங்கத்தில் அரங்கேற்றினார். திருவரங்கத்தில் அரங்கேற்றும்பொழுது அரங்நாதப்பெருமான் நம்தம் சடகோபனைப் பாடினையோ என்று வினவிய பொழுது சடகோபர் அந்தாதி பாடினார்.

மில்டன் – குறிப்பு

ஆங்கில மொழிக்கு உரம் ஊட்டியவர்கள் இருவர். ஒருவர் னில்டன் மற்றொருவர் சேக்ஸ்பியர். மில்டன் தலைசிறந்த காப்பியப் பாவலர் ஆவார். இவர் 09.12.1608இல் இலண்டன் மாநகரில் பிறந்தார். செயிண்ட்பால் பள்ளியில் பயின்றார். பதினாறாவது வயதில் கேம்பி-ரிட்ஜ் கிருத்தவக் கல்லூரியில் பயின்று 1625இல் பி.ஏ. பட்டமும், 1632இல் எம்.ஏ., பட்டமும் பெற்றார். 1637இல் தாயார் இறந்தார். உலக நாடுகளைக் காணச் சென்றார். 1639இல் தாயகம் திரும்பினார். 1641இல் சீர்திருத்தக் கவிதை எழுதினார். இங்கிலாந்து மன்னர் சார்லசுக்கு எதிராக ஆலிவர் கிராம்வெல் ஏற்படுத்திய கிளர்ச்சியில் பங்கு கொண்டார். இங்கிலாந்தில் மீண்டும் மன்னராட்சி தோன்றியபொழுது இலக்கியப்பணியை மேற்கொண்டார். தாய்மொழிப்பற்று, இறை நம்பிக்கை, சமுதாயச்சூழல் இணைந்த நிலையில் சொர்க்க நீக்கம் Paradise Lost என்ற நூலை எழுதினார். 1655இல் எழுத ஆரம்பித்து

1663இல்முடித்தார். 1652இல் கண்பார்வையை இழந்தார். இவர் இந்நூலைக் கூறப் பிறரால் எழுதப்பட்டது.

கம்பராமாயணம்

அரக்கர்களின் தொல்லை தாளாமல் தேவர்கள் திருமாலிடம் முறையிட, திருமால் தசரதன் மதலையாக அவதரிக்கிறார். தசரதன் தனது மகனுக்கு முடிசூட்ட நினைக்க, கைகேயி இதனைத் தடுத்துவிடக் கைகேயி பெற்ற வரத்தால் இராமன் காடு ஏக, இராமனுடன் சீதையும் இலக்குவனும் காடுசெல்ல, தன்தங்கை சூர்ப்பணகையின் சொல் கேட்டு இராவணன் சீதையைக் கவர, மனைவியை இழந்த இராமன் சுக்கிரீவன், அனுமன் துணையுடன் இராவணனை வென்று, சீதையை மீட்டு, அயோத்தி அரசவை ஏவினார். இது இராமகாதையின் கதை அமைப்பாகும். இது 6 காண்டம், 114 படலம், 10386 பாடல்களைக் கொண்டது.

சொர்க்க நீக்கம்

சொர்க்க நீக்கம் என்ற காப்பியம் 12 பகுதிகளைக் கொண்டது. இறைவன் தனது திருக்குமாரனுக்கு முடிசூட்டி, தன் மகனின் ஆட்சிக்குட்பட்டு வாழ வேண்டுமென தேவர்களிடம் கூறினார். இதனைப் பலரும் ஏற்றனர். சாத்தானும் அவனது குழுவினரும் இதற்கு உடன்படாமல் எதிர்த்தனர். முடிவில் இறைவனை எதிர்த்துப் போரிட முயன்றனர். திருக்குமாரன் தலைமையில் போர் நடந்தது. சாத்தான் கூட்டத்தினர் தோல்வியுற்றுப் பாழ்நகரத்தில் வீழ்ந்தனர். உணர்வு பெற்ற சாத்தான் கூட்டத்தினர் ஒன்றுகூடி இறைவனையும், அவனது திருக்குமரனையும் எதிர்க்கத் திட்டமிட்டனர். நேரிடையாகப் போர் தொடுப்பதா? மறைமுகமாகச் சூதுபோர் செய்வதா? என்று விவாதித்தனர். இதற்கிடையில் இறைவனால் ஈடான் தோட்டத்தில் படைக்கப்பட்ட ஆதாம் ஏவாளைப் பழிவாங்குவது எனத் தீர்மானித்து இச்செயலுக்குச் சாத்தானே பரிந்துரைக்கப்பட்டான். சாத்தான் ஆதாம் ஏவாள் உள்ள இடத்திற்குச்சென்று அவர்களுக்குத் துர்ப்போதனைகளைச் செய்கிறான். இரபேல் (Repheel) என்ற இறைதூதர் சாத்தானின் சூழ்ச்சியை ஆதம் ஏவாளுக்கு எச்சரிக்கிறார். இறைவன் ஒரு மரத்தில் உள்ள விலக்குக் கனியை மட்டும் உண்ணக்கூடாது என ஆதம் ஏவாளுக்கு எச்சரிக்கை செய்திருந்தான், சாத்தான் இவர்கள் அக்கனியை உண்ணத் துர்ப்போதனைகளைச் செய்கிறான். ஒருநாள் ஏவாள் தனியே இருக்கும் பொழுது விலக்குக்கனியை உண்ணும்படியும், உண்டால் பல நல்ல

பலன்கள் கிடைக்குமெனக் கூற ஏவாள் அக்கனியைப் பறித்து உண்ண, அதனைக் கண்ட ஆதாமும் உண்ட அமைதியான அவர்களது வாழ்வு துன்பம் நிறைந்த வாழ்வாயிற்று. செய்த தவறினை மன்னித்துக் காத்தருளுமாறு இறைவன் வேண்டினார்கள். இறைவன் சாத்தனைப் பாம்பாக்கி பாலைவனத்தில் உழலவைத்து விட்டு ஆதாம் ஏவாளை நோக்கி உங்களை இரட்சிக்க திருக்குமாரன் பிறப்பான் என்கிறார். இது சொர்க்க நீக்கத்தின் கதை.

காவியப் பாவலர்கள்

கம்பனால் தமிழ்மொழியும் நாடும் பெருமைபெற்றது போல மில்டனால் ஆங்கிலமொழியும் இங்கிலாந்தும் பெருமை பெற்றது. விருத்தமென்னும் வெண்பாவிற்கோர் உயர் கம்பன் என்று பாராட்டப்படுவது போல், ஆங்கிலமொழியில் எதுகையில் லாபா இனத்திற்குப் பெருமை சேர்த்தவராக மில்டனார் திகழ்கிறார். கம்பர் ஒரு வைணவர் சமரச சமயநோக்குடைவர், மில்டனார் கிருத்துவ கத்தோலிக்க சமயத்திற்கு எதிரான இயக்கத்தைச் சார்ந்தவர்.

இருவரும் காவிய மூலத்தை வேறொரு நூலிருந்து பெற்றுள்ளனர். கம்பர் வான்மீகியின் இராமாயணத்தைக் காவிய மூலமாகக்கொண்டு தமிழ்ப் பண்பாட்டிற்கேற்ப அமைத்தார். பைபிளில் கூறப்படும் மனிதகுல வீழ்ச்சியை மூலமாகக்கொண்டு தனது காலச் சூழலுக்கேற்ப மில்டன் சொர்க்க நீக்கத்தைப் படைத்துள்ளார்.

இவ்விரு நூல்களின் அரங்கேற்றத்தின்பொழுதும் இருவரும் தடைகள் பலவற்றைச் சந்தித்தனர். கம்பர் தனது காவியத்தைச் சிதம்பரத்தில் அரங்கேற்ற நினைக்க இயலாமல் போக, திருவரங்கத்தில் அரங்கேற்ற வந்தபொழுது, தடைபட சடகோபர் அந்தாதி பாடி பின்பு அரங்கேற்றினார். மில்டனார் தனது காவியத்தை வெளியிட 'ஆர்ச் பிசப்பின்' ஒப்புதல் பெற இயலாது போக, பின்பு ஒப்புதல் பெற்று வெளியிட்டார்.

காவியக் கட்டு கோப்பு, அமைப்பு

கம்பனும் மில்டனும் அருளிய காவியங்கள் சிறப்பான காப்பியங்களாக உள்ளன. இதற்குக் காவியக் கட்டுக் கோப்பும் ஒரு காரணமாகும். கம்பன் காவியத்தின் தலைமை நிகழ்ச்சி சூர்ப்பணகை சூழ்ச்சியில் எழுச்சியுற்று, சதாபகாரத்தில் திருப்புமையத்தை மேவி, அரக்கர் அழிவில் நிறைவு எய்தும் இராவணவதத்தைப் பொருளாக உடையது என்று எஸ்.இராமகிருஷ்ணன் கூறுகின்றார்.

மில்டன் காவியத்தின் நிகழ்ச்சி நரகத்தில் சாத்தனே செய்யும் சதியில் தொடங்கி, மண்ணகத்தில் மானுடம் வீழ்ச்சியுறுதல் திருப்பு மையத்தை எய்தி, விண்ணகம் வழங்கும் தண்டனையில் நிறைவுறும்.

இராமன், பிறப்பு, வளர்ப்பு, தாடகை வதம், வேள்வி காத்தல், சீதை திருமணம், இராமனுக்கு முடிசூட்ட நினைத்தல், கைகேயி வரம், இராமன் காடேகல் சூர்ப்பணகையின் காமம், இராவணன் சீதையைக் கவர்தல், இராமன் சுக்கிரீவன் துணையுடன் சீதையை மீட்டல், இராவணன் வதம், இராமன் முடிசூடல் என்ற பகுதிகள் இராமகாதையின் கதைப்போக்கை நிர்ணயிக்கின்றன.

திருக்குமாரனின் ஆட்சிக்குட்படாத நிலையில் போரிட்ட சாத்தான் கூட்டத்தார் மயக்கமுறல், எழல், சபை கூடல், திருக்குமாரனை எதிர்க்க நினைத்தல், சாத்தானைச் சூழ்ச்சிக்கு ஏவல், ஆதாம் ஏவாளை ஏமாற்றுதல், மனிதகுலவீழ்ச்சி தொடங்குதல், திருக்குமாரனால் சாத்தான் சபிக்கப்படல் என்ற பகுதிகள் சொர்க்கநீக்கத்தின் கதைப்போக்கை நிர்ணயிக்கின்றன.

காப்பியங்களின் திருப்பு மையங்கள்

இராமகாதையின் உச்சநிலை சீதையைக் கவர்ந்தமையேயாகும். சொர்க்க நீக்கத்திலும் ஏவாளின் வீழ்ச்சியும் ஆதானின் வீழ்ச்சியும் திருப்புமையங்களாக உள்ளன. சீதை ஏவாளைப்போல் ஏமாளியாக விளங்குகிறார். சன்னியாசி வேடத்தில் வந்த இராவணனைத் துறவி என்று நம்புகிறாள். பின்பு மாயவேடத்தை அறிகிறாள். விலக்கு மரக்கனி பற்றி, சாத்தான் கூறுவதை ஏவாள் நம்புகிறாள். கடவுள் கட்டளையை மீறி உண்கிறாள். குற்றவாளி ஆகிவிடுகிறாள்.

இராவணன், சாத்தான்

இராவணன், சாத்தான் இருவரும் ஒப்பிடும் பண்புடையவர்களாக உள்ளனர். சாத்தானும், இராவணனும் தான் மேற்கொண்ட செயலில் எத்தனை இடர்ப்பாடு சார் வந்துற்றபோதும் பின்வாங்காத உரநெஞ்சம் ;அடைவர்களாக உள்ளனர்.

முதல்நாள் போரில் இராவணனும் அனுமனும் சண்டையிடும்; பொழுது அனுமன் இராவணனை ஓங்கிக் குத்துகிறான். அப்பொழுது தான் இராவணன் முதன் முதலில் துன்பம் என்பது என்னவென்று உணர்ந்தான் என்று கம்பர் கூறுகிறார். மைக்கேலுடன் சாத்தான் போரிடும்பொழுது மைக்கேலின் வாள் சாத்தானின் உடலில் படுகிறது.

அப்பொழுதுதான் முதன்முதலில் துன்பம் என்பது என்னவென்று சாத்தான் உணர்ந்தான் என்று மில்டனார் கூறுகிறார்.

சிக்கல் வீழ்ச்சி, மந்திராலோசனை

சொர்க்கநீக்கத்தில் ஏவாளின் வீழ்ச்சியும் மனிதகுலத்தின் வீழ்ச்சி தொடங்குகிறது. ஆதாமும் ஏவாளும் துயருற்ற நிலையில் ஈடான் தோட்டத்திலிருந்து வெளியேறுகிறார்கள். ஆனால் கைகேயி பெற்றவரத்தல் இராவணவதம் நடந்தேறியது.

கதை நிகழ்ச்சிகளை அமைக்கும் போது கவிஞர்கள் சமுதாய விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள் என்பதற்குச் சொர்க்க நீக்கத்தின் மந்திராலோசனைப் பகுதியையும் கூறலாம்.

இருவரும் இக்காட்சிகளை இருவேறு கோணங்களில் அமைத்து உள்ளனர். மன்னரின் வாக்கு இறைவாக்கு என்றும் அதனை எதிர்ப்பது அரசகுற்றமாகும் என்று நினைப்பது போல் கம்பன் இக்காட்சியை அமைக்கிறார். சுதந்திரமாக விவாதிக்கும் நிலையில் ஜனநாயக முறைப்படி மில்டன் அமைக்கிறார்.

இருபெரும் கவிஞர்களும் அறம் வெல்லும் ஆணவம் அழியும் என்ற நிலையில் காவியத்தை அமைத்துள்ளனர். கவித்துவத்தில் தலை சிறந்தவர்களாக விளங்குகின்றனர். காப்பிய அமைப்பு, நிகழ்ச்சி கோவை, பாத்திரப் படைப்பு, கற்பனை நலம், உணர்ச்சிப்பாங்கு போன்ற நிலைகளில் அவ்வவ் மொழிகளில் அவர்களுக்கு இணையாக ஒருவர் இல்லையென்று கூறும் அளவிற்குக் காவியங்களைப் படைத்துள்ளனர். இவர்களின் காலமும், வாழ்க்கைச் சூழல்களும், நாகரிகப் பண்பாட்டு நிலைகளில் மாறுபாடுகள் இருந்தாலும் மனித வாழ்வை மேம்படுத்தும் நெறிகளைப் புகட்டியதில் தலைசிறந்து விளங்குகின்றனர்.

கம்பனின் கூனியும் மில்தனின் சாத்தானும்

திருமிகு. பெஞ்சமின் லோபோ
செயலர், பிரான்சு கம்பன் கழகம்,
பிரான்சு.

கம்பன் - கன்னித் தமிழுக்குக் காலமெல்லாம் நிலைத்து நிற்கும் காவிய மாளிகை கட்டி எழுப்பியவன். மில்தன், ஆங்கில மொழியின் அழியாக் காவியம் படைத்தவன். இருவரும் இருவேறு காலத்தவர். இரு வேறு மொழியினர்; இருவரின் காவியக் கருக்களும் களங்களும் வெவ்வேறானவை; சுருங்கக் கூறின் இருவரும் இரு வேறு திசையில் பாயும் இணையா இரு கோடுகள். ஆனால், இந்த இரு கோடுகளும் ஒரே ஒரு புள்ளியில் இணைகின்றன. அந்தப் புள்ளி எது? இந்தக் கட்டுரையின் நோக்கம் அந்தப் புள்ளியைச் சுட்டிக்காட்டுவதே!

இரு காவியங்களிலும் இடம்பெறும் பாத்திரங்கள் எத்தனை எத்தனையோ! அத்தனை பாத்திரங்களிலும் இங்கே நம் கருத்தையும் கவனத்தையும் கவர்வன இரண்டே: ஒன்று கம்பனின் கூனி; மற்றது, மில்தனின் சாத்தன். மந்தரை என்னும் கூனி 'மந்தரை சூழ்ச்சிப் படலத்தில்' மட்டுமே தோன்றி மறைபவள்; மில்தனின் சாத்தன் அப்படி அல்லன்: காவியம் முழுக்க உலா வருபவன்! கம்ப இராமாயணக் கடலில் கடுகளவு மாத்திரமே கூனியின் பாத்திரம்; சாத்தனோ, காவியத்துக்கே தலைவனாகும் பெருமை பெறுபவன். இப்படி மடுவும் மலையும் ஆக விளங்கும் இவ்விரு பாத்திரங்களையும் ஒப்பிட முடியுமோ? முடியும், முடியும்! அவர்களின் பாத்திரப் படைப்பு அப்படி! இந்தப் பாத்திரப் படைப்பில்தான் கம்பனும் மில்தனும் சந்திக்கிறார்கள் ; இணைய முடியாத இவ்விரு கோடுகளும் சந்திப்பது இந்தப் புள்ளியில்தான். எப்படி?

கூனி: சின்னஞ்சிறு பாத்திரம்தான்; ஆனால், காவியத்தின் முதல் திருப்பு முனைக்கு வித்திடுபவள். இல்லை இவள் என்றால் காவியமே இல்லை. ஆகவே, இராமகாவியம் என்னும் உருள்பெரும் தேருக்கு அச்சாணி ஆகிறாள் இவள். சாத்தனோ (காவியத்தை நகர்த்திச் செல்லும்) காவியத் தலைவனாகவே விளங்குகிறான். ஒரு சில விதங்களைத் தவிர வேறு எந்த விதத்திலும் ஒப்புமை காட்ட முடியாத இவ்விரண்டு பாத்திரங்களும் ஒரு கோணத்தில்

ஒத்துப் போகின்றன! இவர்கள் இருவரும் மழைநீரைப் போல் தூய்மையான மனத்தினைச் சாக்கடை நீராக மாற்றிக் காட்டுகிறார்கள்; பாலன்ன வெள்ளை உள்ளத்தை ஆலகால நஞ்சாகத் திரிய வைக்கிறார்கள்! இந்த முயற்சியில் இருவருமே ஒன்றுபடுகிறார்கள்; வெற்றியும் பெறுகிறார்கள். கம்பனும் மில்தனும் இணைவது இப்படி இப்பாத்திரங்களைப் படைக்கும் புள்ளியில்தான்.

கூனி, சாத்தன் பாத்திரங்கள் காவியத்துள் தோன்றும் விதங்கள் ஒப்பு நோக்கத் தக்கன. கூனிக்குறுகி நடக்கும் கூனிக்கும் அவ்வப்போது பலவேறு வடிவம் எடுக்கும் சாத்தனுக்கும் உண்மை உருவம், வடிவம் பாம்பு இல்லை. என்றாலும், அவர்களோடு பாம்பைப் பொருத்திக் காட்டுகிறார்கள் இவ்விரு கவிஞர்களும். தீங்கு செய்வதே பாம்பின் அடிப்படைத் தன்மை என்னும் உளவியல் - மானிடவியல் கருத்து புலப்பட இருபெரும் கவிஞர்களும் தத்தம் பாத்திரங்களுக்குப் பாம்பைப் பொருத்துகிறார்கள். அதாவது கொடுமைக்குப் பாம்பு குறியீடாகப் பயன்படுகிறது. கூனியின் கொடுமையைக் குறிக்கக் கம்பன் பல அடை மொழிகளைத் தருகிறான். கொடிய பாம்புக்கு மில்தன் தரும் அடை மொழிகள் சாத்தனுக்கும் (மறைமுகமாகப்) பொருந்துகின்றன.

'இன்னல்செய் இராவணன் இழைத்த தீமைபோல், தோன்றிய துன்னஅருங் கொடுமனக் கூனி'யின் உள்ளத்தில் தோன்றும் கள்ளத்தையும் அதன் விளைவாக, அவள் உடலில் விளையும் மெய்ப்பாடுகளையும் கம்பன் காவியச்சுவையோடு பாடுகிறான். 'துடிக்கும் நெஞ்சினள்' ஆன கூனியின் நெஞ்சில் பழி உணர்ச்சி கூடு கட்டுகிறது; பழைய வஞ்சம் கொடி பிடிக்கிறது! ஆத்திரத்தில் அவள் உள்ளம் உளைகிறதாம். இப்படி அவள் மனத்தின் நிலையைப் படம் பிடிக்கும் கம்பன், அடுத்து அவள் புற உடலின் மெய்ப்பாடுகளைப் புலப்படுத்துகிறான். மூண்டெழுந்த வெகுளி அவள்முகம் எங்கும்; வெறுப்பை உமிழும் நெருப்புக் கண்கள்; கொதிக்கும் உள்ளத்தில் இருந்து கொட்டும் கலிக்கும் சொற்கள்! அடடா, என்ன அருமையான படப்பிடிப்பு! துல்லியமான இந்தப் படப்பிடிப்பை மில்தான் காவியத்தில் கான் முடியவில்லை. சாத்தனின் உள்ளத்து உணர்ச்சிகளை ஓரளவு காட்டும் ஆங்கிலக் கவிஞன் சாத்தனின் மெய்ப்பாடுகளைக் காட்டாமலே கதையை நகர்த்திவிடுகிறான்.

கூனி, சாத்தன் இருவர் உள்ளங்களிலும் பொங்கிவழிவன: பழி உணர்ச்சி, பொறாமை, ஆத்திரம், வெறுப்பு அழிக்கவேண்டும்

என்ற வெறி; பண்டைநாள் இராகவன் பாணி வில்லுமிழ் உண்டை உண்டதனைத் தன்உள்ளத்து உள்ளுவாள் கூனி. சொர்க்க இழப்புக்குப் பழி வாங்கத் துடிக்கிறான் சாத்தன். பொறாமைத் தீ இருவர் உள்ளத்திலும் பற்றி எரிகிறது :

கூனியின் உள்ளத்தில் எரிமலைக் குமுறல்- "மண்ணுண்டை எறிந்து பகடி ஆடியவன் மன்னன் ஆவதா! கோடிய வரி சிலை இராமன் கோமுடி, சூடுவதா! சிவந்த வாய்ச் சீதையும் கரிய செம்மலும் நிவந்த ஆசனத்து இனிது இருப்பதா!" என்று. வானிலிருந்து வீழ்த்தப்பட்ட வேதனை ஒரு புறம் என்றால் தாழ்த்தப்பட்ட மனிதனுக்குக் கிடைத்த வாழ்வைப் பற்றி எண்ணி எண்ணிக் குமுறுகிறான் சாத்தன்; ஆற்ற இயலாத அவன் வேதனை தனி நிலைப் பேச்சாகப் பொறாமைக் கனல் தெறிக்க அனல் கக்குகிறது.

கூனி, சாத்தன் என்னும் இக்கெடுமதியாளர்களின் வஞ்சக வலையில் வீழும் பாத்திரங்கள் கைகேயி, ஏவாள். இயல்பாகவே தூயமனம் படைத்தவளாகவே கைகேயியைக் கம்பன் படைக்கிறான்; ஏவாளையும் அப்படியே காட்டுகிறான் மில்தன். பாலன்ன இவர்கள் உள்ளங்கள் ஆலகால நஞ்சாகத் திரிவது எப்படி? அடி மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்! கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் ... என்பார்களே! அது போலத்தான் தம் பேச்சுத் திறத்தால், வாக்கு வன்மையால் கூனியும் சாத்தனும் தங்கள் 'இரைகளை' வெல்கிறார்கள்! இந்தப் போக்கைக் கையாண்டே கம்பனும் மில்தனும் தம் காவியங்களை அமைத்துள்ளனர். உண்மையை உள்ளபடிக் கூறாமல் சற்றே திரித்துச் சொல்லிக் கைகேயியின் மனத்தை மாற்றுகிறாள் கூனி; 'பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால் மெய்போலும்மே மெய்போலும்மே" என்பதற்கு ஏற்பச் சாத்தன் பொய்களை அடுக்கியே ஏவாளை வீழ்த்திவிடுகிறான்.

மந்தரையின் மயக்கும் சொல்லாடலால் மனம் மாறும்வரை களங்கம் இல்லா மனத்தளாகவே இருக்கிறாள் கைகேயி. நெஞ்சக் கவலை ஏதும் இல்லாதவளாகப் பஞ்சணையில் படுத்துறங்கும் பாவையாக அவளைக் காட்டுகிறான் கம்பன்.கடைக் கண் அளி பொழிய, பொங்கு அணை- மேல் கிடந்தாளாம் அவள்! உள்ளம் அமைதியாக இருந்தால்தான் உறக்கம் உடலைத் தழுவும்.கள்ளம் இல்லா உள்ளத்தில்தான் அமைதி உலவும்.எனவே கைகேயி உறக்கத்தின் வழியாகக் கம்பன் அவள் மனத்தின் மாசில்லாத்

தன்மையை மறைமுகமாய் உணர்த்துகிறான். அத்தோடு நில்லாமல், அவளைத் தூயவள் என்ற சொல்லால் இருமுறை குறிப்பிடுகிறான்.

தேய்வு இலா முக மதி விளங்கித் தேசுற, தூயவள் 151, தேவி தூய சிந்தையும் திரிந்தது 176. எனவே வஞ்சம் சிறிதும் நெஞ்சில் இல்லாதவள், மனத் தூய்மை மிகக் கொண்டவள் கைகேயி என்பது தெளிவு. இவ்வளவு தூய உள்ளம் படைத்த கைகையி மந்தரை சொல் கேட்டு மனம் திரிகிறாள்; ஆலகால நஞ்சு கலந்த பாலாகிப் போகிறது அவள் உள்ளம். தூயவள் எனக் கம்பன் போற்றிய கைகேயி தீயவை யாவையினும் சிறந்த தீயாள்' ஆக ஆகிப்போகிறாள். (கைகேயி சூழ்ச்சிப் படலம் பாடல் 197); நாகம் எனும்கொடியாள் ஆகிவிட்டாள் (கைகேயி சூழ்ச்சிப் படலம் பாடல் 198). தன் நேர் இல்லாத் தீயவள் 217, மரம்தான் என்னும் நெஞ்சினள், 221 - திரிந்த நெஞ்சினாளைக் கம்பன் வருணிக்கும் வார்த்தைகள் இவை!

அங்கே, ஏதன் மலர்த்தோட்டத்தில் இளங்காலை இதமாக மலர்கிறது; உரைக்கும் ஆற்றல் இல்லா உயிரினங்கள் அனைத்தும் தம்மைப் படைத்த இறைவனுக்குத் தம் புகழ்ப் பாடலை மவுனமாக எழுப்புகின்றன. இறைவன் படைத்த இணையர் தம்குரல் எழுப்பி இறைவனைத் தொழுகிறார்கள். தன் கணவன் ஆதாமை நோக்கி ஏவாள் பேசுகிறாள் ; அவர்கள் உரையாடல் இனிதாகத் தொடங்குகிறது. இந்த அமைதிச் சூழல் அவர்கள் உள்ளத்தின் மாசற்ற தன்மையைப் புலப்படுத்துகிறது. அவர்களுக்குள் அமைதியாக நடைபெறும் இந்த எண்ணப் பரிமாற்றங்கள் அவர்கள் உள்ளத் தூய்மையின் பிரதிபலிப்பாய் அமைகின்றன. விலக்கப்பட்ட கனியை உண்டபின் ஒருவர் மேல் ஒருவர் பழி சுமத்தும் அவர்களின் உரையாடல் பாவத்தின் விளைவாக மாசுண்ட மனத்தை எடுத்துரைக்கிறது.

தூயமனம் எப்படித் தீயமனமாக மாறுகிறது? வெள்ளை உள்ளத்தில் எப்படிக் கள்ளம் வந்து புகுகின்றது? எப்படி நேர்கிறது இந்த ரசவாதம்? எப்படி நிகழ்கிறது இச்செப்படி வித்தை? பாத்திரங்களின் நா வண்ணத்தைப பயன்படுத்தித் தம் பாவண்ணத்தால் இம்மாயா சால வித்தையைச் செய்கிறார்கள் காவியப் புலவர்கள் இருவரும்! நாடகப் பாணியில் கதையை நடத்திச்செல்வான் கம்பன், கூனி - கைகேயி உரையாடல் வழியாக. சாத்தனின் தனி நிலைப் பேச்சு, சாத்தன் - ஏவாள் உரையாடல் ...போன்ற உத்திகளைக் கையாள்வான் மில்தன்.

ஒன்றன்பின் ஒன்றாகத் தன் வாதங்களை அடுக்குகிறாள் கூனி; கைகேயியின் சினத்தையும் கூனி பொருட்படுத்தவில்லை! கோசலைக்கு வந்த வாழ்வு, தன்மானம் துறவாமை, பரதனுக்கு நேரிடக்கூடிய தாழ்வு நிலை, கேகயனுக்கும் சனகனுக்கும் இடையே நிலவும் பகைமை, ஈதல் இசைபட வாழ்தல் இல்லாமல் போகக் கூடிய வறுமை, மகன் மகனுக்கு மகன் என்றே மகுடம் போகும் மரபு முறை, என்று கூனி எடுத்துரைக்க எடுத்துரைக்கக் கைகேயி வாயடங்கிப் போகிறாள். இறுதியில் கூனியின் 'வாய்மையே" வெல்லுகிறது! தீய மந்தரையின் சொற்களால் தூய தேவியின் சிந்தையும் திரிந்தது என்கிறான் கம்பன்.

ஏதென் மலர்த் தோட்டத்தில் ஏவாளைச் சந்திக்கறான் சாத்தான்; மெல்ல ஊர்ந்தும் சலசலப்பு ஊட்டியும் மின்னும் பொன்னிறக் கழுத்தை முன்னும் பின்னும் காட்டியும் பிளவுண்ட நாவை நீட்டியும் படம் எடுத்த தலையாலே அவளைப் பணிந்து வணகுவதைபோலத் தலையை ஆட்டியும்... அவள் கவனத்தைத் தன் பால் ஈர்க்கிறான். பொய்யும் மெய்யும் கலந்த தன் எத்து வேலை (வஞ்சிக்கும்) பேச்சைத் தொடங்குகிறான். அவளைச் சிந்திக்க விடாமல், சரமாரியாய்க் கேள்விக் கணைகளைத் தொடுத்துக்கொண்டே இருக்கப்போகிறான் சாத்தன். இக்கனியை உண்டால் இறப்பு உறுதி என்னும் வெற்று அச்சுறுத்தலுக்கு அஞ்சாதே! நீ இறக்க மாட்டாய்! நீ இறக்கவும் முடியுமோ! இக்கனியாலா உனக்கு இறப்பு? (இல்லை, இல்லை!) உன் கல்விக்குக் கண் திறப்பு !(எனவே இது உனக்குத் தருவது வாழ்வல்லவா!). உன்னை அச்சுறுத்தியவர் வழியாக வருமோ இறப்பு? என்னைப் பார்! கனியைப் பறித்தேன், புசித்தேன் ; இறந்தா போனேன்! விதி எனக்கு விதித்ததைவிடச் சிறந்த நிலையை நான் அடையவில்லையா! விலங்குக்குக் கிடைத்தது மனிதனுக்கு மறுக்கப்படுமா, என்ன! இச் சிறு தவற்றுக்கு இறைவன் சினம் கொள்வானோ? உன் அச்சமின்மையை மெச்சாமல் விடுவானோ? இறப்பு என்னவாக இருந்தாலும் அது பற்றிய அச்சத்தை விடு! இனிய வாழ்வுக்கு- நல்லது கெட்டது சொல்லித் தரும் அறிவுக்கு- இட்டுச் செல்லும் இம்முயற்சியைக் கை விடாதே! தீமையை அறிந்துகொண்டால் அதனைத் தவிர்ப்பது எளிது அல்லவா! எனவே கடவுள் உனக்குத் தீங்கு இழைக்க முடியாது ; இழைத்தால் அவர் நீதிமான் ஆகமாட்டாரே! நீதிமானாக விளங்காவிட்டால் அவர் எப்படிக் கடவுள் ஆவார்? யார் அவருக்கு அஞ்சுவார்? யார் அவருக்குக் கீழ்ப்படிவார்? இறப்பைபற்றிய உன் அச்சமே அந்த அச்சத்தைப் போகும்

இக்கனியைத் தடை செய்த காரணம்? அச்சம் கலந்த வியப்பை ஊட்டுவதற்குத்தானே! அவரை வழிபடும் உங்களை அடிமைத் தளையில், அறியாமையில் வைத்திருக்கத்தானே! பார்வையில் கூர்மை இருப்பது போல் தோன்றும் உங்கள் கண்கள் மங்கியே கிடக்கின்றன; இக்கனியை உண்ணும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும் பார்வை தெளிவு பெறும் என்பதை அவர் நன்கு அறிவார்! விளைவாக நீங்கள் கடவுள்களாவே ஆகிவிடுவீர்கள். அவர்களைப் போலவே நன்மை தீமை அறிந்தவர்களாகிவிடுவீர்கள்! விலங்கான நான் இப்போது மனிதனாக ஆனதைப் போல மனிதர்களாகிய நீங்கள் கடவுள்களாக ஆகிவிடுவீர்கள்! என்ன பெரிய கடவுள்கள்! மனிதர்கள் கடவுள்கள் ஆக முடியாதா என்ன? நன்மை தீமை அறியும் அறிவு இந்த மரத்தில் பொதிந்துள்ளது என்றால் இதன் கனிகளை உண்ண அக் கடவுள்களின் அனுமதி வேண்டுமோ! மனிதன் கனியை உண்டு அறிவைப் பெறுதில் என்ன தவறு இருக்கமுடியும்! இந்த அறிவு கடவுளுக்கு என்ன தீங்கை இழைக்க முடியும்? எல்லாமே கடவுளுக்கு மட்டும்தானா? இல்லை கடவுளுக்குப் பொறாமையா? வானத்து வாசிகளின் நெஞ்சில் பொறாமைக்கும் இடம் உண்டோ! இப்படிப் பலபல (காரணங்கள்) சொல்லலாம்... நீ ஏன் இக்கனியைச் சுவைக்கவேண்டும் என்பதற்கு! ஆகவே மானிடத் தேவதையே எட்டிப்பறி இக்கனியை; தாராளமாகச் சுவைத்துப்பார்!"

வஞ்சகச் சாத்தனின் நஞ்சு கலந்த வார்த்தைகள் ஏவாளின் உள்ளத்துள் எளிதாகப் புகுந்தன. கனியை நோக்கும் அவள் கண்களில் பசிப் பார்வை; இதுவரை சாத்தன் மெதுவாய் ஓதிய பொய்யுரைகள் எல்லாம் காரண காரியங்களோடு ஒப்புக்கொள்ளக் கூடிய மெய்யுரைகளாக அவள் காதுகளில் ஒலித்தன. மதிய நேரம் நெருங்கிக்கொண்டு இருந்தது; வயிற்றைப் பசி கிள்ளியது; பழத்தின் மணமோ மூக்கைத் துளைத்தது. அவளைத் தூண்டில் போட்டு அழைத்தது. தனக்குள் பலவற்றையும் பேசிப் பார்த்து இறுதியாக ஒரு முடிவுக்கு வருகிறாள் ஏவாள்! சபிக்கப்பட்ட அந்த நேரத்தில் அவசரம் அவசரமாய் அவள் கை பறித்த அக்கனியை அவள் சுவைத்துவிட்டாள்! அவ்வளவுதான்- எல்லாம் போச்சு எல்லாம் போச்சு - மண்மகள் புண்பட்டாள்; தீய அறிகுறிகள் இயற்கையில் தோன்றின!

ஏவாளின் தூயசிந்தை தீய சிந்தையாக மாறியமைக்குச் சிறப்புக் காரணம் கூறவில்லை மில்தன்; ஆனால், சாத்தானின் சாதுரியப்

பேச்சுத்திறனே காரணம் என உய்த்துணர வைக்கிறான். கூனி கூறக் கூறத் தூய தேவியின் சிந்தையும் திரிந்தது என்று கம்பன் எழுதுகிறானே தவிரத் தான் எழுதியதில் தனக்கே நம்பிக்கை இல்லை அவனுக்கு! தீய மந்தரை உரை கேட்டா தூய சிந்தை திரிந்திருப்பாள், கைகேயி! இருக்காது, இருக்க முடியாது! என்ற அசைக்க முடியாத நம்பிக்கை கம்பனுக்கு. அதனால்தான் தூய சிந்தயும் திரிந்தது என் உம்மை போட்ட அவன் படலத்தை அத்துடன் முடிக்கவில்லை. மேலே தொடர்கிறான். அவள் மன மாற்றத்துக்குக் கூனியின் வாதங்களை விட மேலான காரணங்கள் இருக்கவேண்டும் என்று தேடுகிறான் தேடித் தேடி வேறு சில காரணங்களை அடுக்குகிறான்: தேவர்களின் மாயை கூனி வடிவில் வந்தது, அரக்கர்கள் அழிப்பதாகத் தேவர்க்குத் திருமால் தந்த வரம், அந்தணர் இயற்றிய அருந்தவங்கள், அரக்கர் செய்த பாவம், தேவரும் முனிவரும் செய்த நல்லறங்கள் காரணமாகவே, கைகேயி தன் நல்லருளைத் துறந்தாள்; மனம் திரிந்தாளாம். எல்லாவற்றுக்கும் மேலாக் இறுதியாக இன்னொரு கருத்தையும் சொல்லி ஓரளவு மன நிறைவு பெறுகிறான் கம்பன்: அதாவது, இராம இராமனின் தொல்புகழ் அமுதினை நாம் எல்லாரும் பருக வேண்டும் என்று தான் கைகேயி தூய மனம் திரிந்தாளாம். இப்படிப் பார்க்கையில் மில்தனை விடக் கம்பன் பல மடங்கு உயர்வாகத் தெரிகிறான்.

கம்பனும் காரல்மார்க்சும்

திருமிகு. நா.முத்துநிலவன்
புதுக்கோட்டை.

கார்ல் மார்க்ஸ் - உலக அரசியல் வரலாற்றில் யாரும் மறுக்கமுடியாத மாமேதை.

கம்பன் - தமிழ் இலக்கிய வரலாற்றில் எந்தக் கொம்பனாலும் மறைக்கமுடியாத மகாகவி!

உலகூட்டும் ஒரு மாகடலும், உள்ளங் குளிர்விக்கும் ஒரு மகாநதியும் சந்திக்கும் முகத்துவாரத்தில் முளைத்திருக்கும் சிறுநாணல், இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கச் சிந்திக்கும் முயற்சிதான் இந்தச் சிறு கட்டுரை.

முன்னைப் பழமைக்கும் மூத்த பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றித்தாய் இருக்கும் தமிழ்நூல்கள் மிகச்சிலவே! அவற்றை, அவை தோன்றிய காலத்துச் சூழலையும், இன்றைய பயன்பாட்டையும் வைத்துத்தான் ஆய்வுசெய்ய வேண்டுமே அன்றி இன்றைய சூழலை வைத்துக்கொண்டு, "இது தீது, இது நன்று" என்று முடிவுக்கு வருவது சரியாக இருக்க முடியாது. கலை-இலக்கியத்துக்கு மட்டுமல்ல, அரசியல் கோட்பாடுகளுக்கும், தத்துவங்களுக்கும்கூட இது பொருந்தும். தாய்மொழியாம் நம் இனிய தமிழ்மொழியின் பயன்பாடும் இதற்கு விதிவிலக்கல்ல.

மூவாயிரம் வருடத்துத் தொன்மை மட்டுமல்ல தமிழின் பெருமை, இன்றும் மனித முன்னேற்றத்திற்குச் சரியான பங்களிப்பைச் செய்துவரும் மூத்தமொழி என்பதே உயர்பெருமை!

இதைத்தான் "வயது ஏறஏற வனப்பேறும் அதிசயமே" - என்பார் அப்துல் ரகுமான்.

ஐந்து நிலங்களில் கிடந்த தமிழ், இன்று ஆறு கண்டங்களையும் கடந்து, ஆறாம்திணை எனத்தகும் "இணையத்திணை"யிலும் ஏறிவரும் பெருமையல்லவோ உண்மைப் பெருமை! புலவர்களின் "சங்கப்பலகையில் கிடந்த" தமிழ், இன்றைய பில்கேட்ஸின் (விண்டோஸ்-8) "சன்னல் பலகையிலும்" அட்டியின்றி அமர்ந்து வளர்ந்து வருவதல்லவோ அருமைப் பெருமை!

இந்தப் பெருமைகளுடன், சுமார் ஆயிரமாண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட கம்பனின் காவியத்தை, நூறாண்டுகளுக்குமுன் நடைமுறைக்கு வந்த காரல் மார்க்சின் சிந்தனைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது எளிய செயலன்று, என்றாலும் முடியாததும் அன்று, ஏனெனில் இந்தத் துணிவை நமக்குத் தந்ததே கம்பனும் காரல்மார்க்சும் தந்த சிந்தனைகள்தாமே?!

சமத்துவ உலகைக் கனவு கண்டவன் கம்பன், அதைச் சமூக அறிவியலாகச் சிந்தித்தவன் மார்க்ஸ். உலகின் சிறந்த உறவும்-நட்பும் கம்பனின் இராம-இலக்குவ-பரத-அனுமருடையது, எனில் உலகின் சிறந்த தோழமை காரல்மார்க்ஸ்-பிரடெரிக் ஏங்கெல்சுடையது. உலகின் சிறந்த காதல் சீதா-ராமனுடையதெனில் ஜென்னி-மார்க்சும் அப்படியே வாழ்ந்தனர். எனவே ஒப்பிட்டுப் பார்க்க இருவருக்கிடையே இருக்கும் ஒப்புமைகளைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

எதிர்ப்பில் விளைந்தவர்கள்

"வாழ்வின் சூழல்தான் மனித உணர்வுகளைத் தீர்மானிக்கிறதே அன்றி, உணர்வுகள் அவரது வாழ்வைத் தீர்மானிப்பதில்லை" என்பது மார்க்சின் திருவாசகங்களில் ஒரு வாசகம்.

கம்பனும் காரல்மார்க்சும் அவரவர் சூழலில் அரச எதிர்ப்பாளர்களே.

மார்க்ஸ் பிறந்த- ஜெர்மனியின்பகுதியாக இருந்த- பிரஷ்யநாட்டிலிருந்து, பெல்ஜியத்திற்கும் பிரான்சிற்கும் இங்கிலாந்திற்கும் ஓடிக்கொண்டே இருந்தான். அந்தநாட்டு அரசர்கள் அவனை நாடுகடத்திக்கொண்டே இருந்தார்கள். இறுதியாக இங்கிலாந்தில் தனது இறுதி இருபதாண்டுகளைக் கழித்த மார்க்சின் கல்லறையும் இங்கிலாந்தில்தான் உள்ளது.

அன்றைய சோழமன்னர்களை- சமகாலப் புலவர் பிறர் புகழ்ந்ததுபோல- புகழ்ந்துபாடக் கம்பனுக்கு விருப்பமில்லை. எனவே, இன்றைய திருவாரூர் மாவட்டம் திருவெழுந்தூரில் பிறந்த கம்பன், தொண்டைமண்டலம் சென்று, பிறகு சோழ-பாண்டிய நாடுகளின் எல்லைக்கு (இன்றைய சிவகங்கை மாவட்டம்) வந்து, தனது இறுதி நாள்களைக் கழித்திருக்க வேண்டும் கம்பனின் கல்லறை நாட்டரசன் கோட்டையில்தான் உள்ளது.

இந்த இடத்தில், "கம்பராமாயணம் ஓர் அரசஎதிர்ப்புக் காப்பியம்" எனும் இலங்கைப் பேராசிரியர் சி.மௌனகுருவின் கட்டுரைக் கருத்தும் கருதத்தக்கது.(சி.மௌனகுரு. அலைகள் வெளியீடு. சென்னை. 2006)

'மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ உன்னையறிந் தோ தமிழை ஓதினேன்?' எனும் புகழ்பெற்ற தனிப்பாடலுடன், புகழ்பெறாத-

'காதம் இருபத்து நான்கொழியக் காசினியை
ஓதக் கடல்கொண் டொழித்தோ? -மேதினியில்
கொல்லிமலைத் தேன்சொரியும் கொற்றவா! நீமுனிந்தால்
இல்லையோ எங்கட் கிடம்?' -

எனும் தனி வெண்பாட்டையும் சேர்த்தே சிந்திக்கலாம்.

அன்றைய மன்னர்களைப் புகழ்ந்து பாடாத கம்பன், தனது இராமாவதாரத்தில் -ஆயிரம் பாடல்களுக்கு ஒருபாடல் வீதம்- பத்து இடங்களில் சடையனைப் புகழ்வதன் காரணமென்ன? இந்தக் கேளவிக்கு விடை தேடும்போதே கம்பனோடு சற்றேறக்குறைய சமகாலத்தவராக அறியப்படும் ஒட்டக்கூத்தர், செயங்கொண்டார் முதலியோரின் பாடல்களில் வரும் அரசப்புகழ்ச்சி கம்பன் பாடல்களில் காணாதது ஏன்? எனும் கேள்வியும் எழுந்து, இரண்டு கேள்விகளுக்கும் ஒரே விடை வருவதைப் புரிந்துகொள்ள முடியும். கம்பன் எந்த அரசனையும் சார்ந்திருக்க விரும்பவில்லை என்பதுதான் அந்த விடை.

மானுட வெற்றியில் மகிழ்வு

மேற்கண்ட கம்பனின் அரசஎதிர்ப்புக் கருத்தோட்டத்துடன் பார்த்தால், "வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றதம்மா" எனும் கம்பனின் வரிகளுக்குப் புதியபொருள் கிடைப்பது மட்டுமல்ல, கம்பனுக்கு முன்வரையான அரச-மக்கள் உறவு பற்றிய பார்வையில் கம்பனிடத்தில் ஒரு பெரும் மாற்றம் நிகழ்ந்திருப்பதையும் காணமுடியும்.

"மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" எனும் புறநானூறு(186), "மன்னவர் ஞாலத்து இன்னுயிர் ஒக்கும்" எனும் பெருங்கதை, "திருவுடை மன்னனைக் காணின் திருமாலைக் கண்டேன்" எனும் திருவாய்மொழி(4-8), மட்டுமல்லர், கம்பனுக்குச் சற்றே முன்னர் எழுதப்பட்ட மற்றொரு பெருங்காப்பியமான சீவகசிந்தாமணியை எழுதிய திருத்தக்கத் தேவரும், "வேந்தனைப் பழித்தால் அழிவு உறுதி" என்றே எச்சரிப்பார். ஆனால், இவர்கள் கருத்துக்கு மாறாக-

"உயிர்எலாம் உறைவதுஓர் உடம்பும் ஆயினான்" (177) என்றும், "வையகம் மன்னுயி ராகவும் மன்னுயிர் உய்யத் தாங்கும் உடலன்ன மன்னன்" (1423), - என்றும் கம்பன் பாடியது அதுவரை தமிழில்

கேட்டிராத ஒரு புதிய குரல், ஒருபுதியசிந்தனை. "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்பதன் முன்னோட்டம், அரசர் ஆட்சிக்கு மாற்றான மக்களாட்சியின் வித்து!

இந்த மக்களாட்சியை - மன்னர்களுக்கும், பெரும் பணக்காரர் களுக்குமான அரசுகளை ஒழித்து, உழைக்கும் மக்களுக்கான பாட்டாளி வர்க்க ஆட்சியை - அமைக்கத்தானே மார்க்ஸ் தனது வாழ்நாள் முழுவதையும் செலவிட்டான்? "உலகத்தொழிலாளிகளே ஒன்று சேருங்கள்! உங்களுக்கு இழப்பதற்கோ எதுவுமில்லை, ஆனால், அடைவதற்கோர் பொன்னுலகம் உள்ளது" எனும் வாசகம்தானே உலகை மாற்ற நினைத்த மார்க்சின் அழைப்பாக இன்றும் முழங்குகிறது.

சமயப்பொதுமையும் சமுதாயப்பொதுமையும் -

ஏனைய திருமால் பக்தர்களான ஆழ்வார்களைப்போலக் கம்பன் திருமாலை மட்டுமே புகழ்ந்து பாடியவனல்லன். மற்ற மதத்தவரை - ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும், சேக்கிழாரும் முதலான சைவர்கள் தம் பாடலின் இடையே திட்டித் தீர்த்ததுபோல- திட்டவில்லை என்பது மட்டுமல்ல, சைவத்திற்கும் வைணவத்திற்கும் தீராப்பகை வளர்த்துப் பக்தி இலக்கியம் எழுதப்பட்ட காலத்திலே இராமாவதாரத்தில் சிலநூறு இடங்களில் சிவனைப் புகழ்ந்தும் எழுதியிருக்கிறான் என்பதுதான் கம்பனின் தனிச்சிறப்பு!

இராமனை வேதநாயகன்(5869), வேதவேந்தன்(10066) என்று புகழத் தயங்காத கம்பன், அ "அரன்அதிகன் உலகளந்த அரிஅதிகன் என்றுரைக்கும் அறிவிலோர்"(4470) என்று ஏதோ பக்திக்கு அப்பாற்பட்டுப் பாடுவதுபோலவும் சொல்வதைக்கண்டு வியக்காமல் இருக்க முடியவில்லை.

"ஒன்றே என்னின் ஒன்றேயாம் பலஎன்று உரைக்கில் பலவேயாம்" (யுத்தகாண்டத்தின் கடவுள்வாழ்த்துப் பாடல் (6059) மற்றும் சீதை மீட்சியின்போது, பிரமதேவன் சொல்வதாக வரும் பரம்பொருள் பற்றிய பாடல்கள் (10050-10062) கம்பனின் மனஓட்டத்தைக் காட்டுவன. இதன் விளைவு என்னவெனில், இராமாவதார நூலை அரங்கேற்றம் செய்ய, வைணவர்கள் திருவரங்கத்தில் சிக்கல்செய்ததால், சைவர்கள் சிதம்பரத்தில் செய்தனர், இறுதியாகக் கம்பர் மக்கள் மன்றத்தில் -திருவெண்ணெய் நல்லூரிலேயே- அரங்கேற்றியதாகத் தோழர் ஜீவா சொன்னதும் இதனால்தானே! ஏனெனில், மக்கள் என்றுமே ஒற்றுமை

விரும்பிகள். காலமறிந்து கூவும் சேவலைக் கவிழ்த்துப் போட்டாலும் நிறுத்தாது- பட்டுக்கோட்டை. எனவே, கண்டுகொள்ளாத மதம் சார்ந்த மன்னரையும், ஒரு மதத்திற்கு மட்டுமே தன்னை ஒப்படைத்த பக்தர்களையும் தாண்டிக் கம்பன் மட்டும் நிலைத்து நிற்கிறான்!

மார்க்ஸ் மதநம்பிக்கை அற்றவன் என்றாலும், அவரவர் மதவழிபாடு அவரவர் உரிமை, இதில் மற்றவர் தலையிடலாகாது என்பதையும் ஜனநாயகக் கருத்தாக்கியவனல்லவா? அதனால்தானே கடவுள்-மதநம்பிக்கை அற்ற மார்க்சியவாதிகள், மதநம்பிக்கை உள்ளவரி டையே மத-ஒற்றுமை பேசுவதும், அரசு மதச்சார்பற்றதாக இருப்பதே மக்களுக்கு நன்மை தரும் என்று எழுதியும், பேசியும், இயங்கியும் வருவது சரியானதுதானே!

அறம் வெல்லும்! – உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!

பாவிகம் என்பது காவியத்தின் தொடக்கமுதல் முடிவுவரை வனப்புடன் தொடரும் ஒரு காவியப்பண்பு. "அறம்வெல்லும் பாவம் தோற்கும் என்பதே கம்பராமாயணத்தின் பாவிகம்" எனும் மார்க்சிய இலக்கிய ஆய்வாளர் எஸ்.ஆர்.கே. (கம்பன் கண்ட அரசியல், ப.13) அதற்குக் காட்டும் சான்றுகள் அழுத்தமானவை. கம்பர் தனது காவியத்தின் 3 இடங்களில் "அறம்வெல்லும் பாவம் தோற்கும்" (4929, 9109, 9574.) என்றே திரும்பத் திரும்பச் சொல்வதும் கருதத்தக்கது.

காரல் மார்க்சின் புகழ்பெற்ற முழக்கம், "உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்! நீங்கள் இழப்பதற்கு எதுவுமில்லை, அடைவதற்கோர் பொன்னுலகம் காத்திருக்கிறது!" என்பதாகும். இதன் முடிவு அரசியல்-சமூக-பொருளாதாரப் போராட்டம்! இதன் விளைவு, "உழைப்பாளிகளின் அறம் வெல்லும், சுரண்டுவோரின் பாவம் தோற்கும்" என்பதன்றி வேறென்ன?

கலை யாருக்காக? – மார்க்சும் கம்பனும் மாறுபடுகிறார்களா?

கம்பரின் காவியத்தில் "கலை கலைக்காகவே" கருத்து மேலோங்கி நிற்பதை மறுக்கமுடியாது. ஆனால், இன்றைய அளவுகோலை வைத்துக்கொண்டு கம்பரை அளப்பது தவறாக முடியும் என, நான் மேலே சொன்னதை இங்கு நினைவுபடுத்துகிறேன். மன்னராட்சிக் காலத்தில் "கலை காசுக்காக" என்ற புலவர் பலரின் நோக்கிற்கு மாறாக, கம்பர் "கலை கலைக்காக" என்று எண்ணியதும், அவ்வாறே எழுதியதும் அன்றைய நிலையில் சரியே என்பதை உணர வேண்டும்.

"கலை-கலைக்காகவா? காசுக்காகவா?"-எனில், "கலைக்காக"-என்பதுதான் சரியான பதில்.

"கலை கலைக்காகவா? மக்களுக்காகவா?" எனில், "மக்களுக்காக" என்பதே சரியானது! முந்திய கேள்வி எழுந்த காலத்தில் கம்பர் சரியான பதிலைத் தந்தார்; பிந்திய கேள்வி எழுந்த காலத்தில் மார்க்ஸ் சரியான பதிலைத் தந்தார். இருவருமே சரியாகத்தான் இருந்திருக்கிறார்கள்! இல்லையெனில், கம்பரின் படலம் படலமான பாடல்களின் காலச் சார்பை அறியாமல், அவரை எதிரிகள் பக்கம் - கலை வியாபாரிகள் பக்கம் - கொண்டுபோய் நிறுத்திவிடும் அபாயம் நடக்கும். இன்று, கம்பரின் அழகியலை மட்டுமே எடுத்தெடுத்துப் பேசி "ஆழ்ந்திருக்கும் கவியுளம்" காணாத பேச்சாளர் பெருமக்களை வைத்து, கம்பரை எடைபோடக் கூடாது! "தத்துவ ஞானம் அறிவைப் பண்படுத்துகிறது, கலை உணர்வைப் பண்படுத்துகிறது" என்பார் காரல் மார்க்ஸ். உணர்வைப் பண்படுத்தும் கலைப்பணியைத்தான் கம்பன் செய்தான். அதனால்தான் முன்னர், "கம்பரசம்" எழுதிய அண்ணா, பின்னர் உலகத்தமிழ் மாநாட்டின் நினைவாகப் பத்துச் சிலைகள் வைத்தபோது கம்பனுக்கும் ஒன்றை மறக்காமல் வைத்தார்.

சமத்துவ உலகம் [சோஷலிசம்] இருவரின் கனவிலும்

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பது ஏதோ பிரஞ்சுப் புரட்சிக்காகவென்றே உருவாக்கப்பட்ட முழக்கமன்று. அது, உலக முழுவதும் வாழ்ந்த நல்லெண்ணம் கொண்ட தத்துவ, அரசியல், இலக்கியவாதிகளின் நீண்டநாள் கனவுதான். கற்பனையில்லாமல் கண்டுபிடிப்புகள் இல்லை. இது அறிவியலுக்கு மட்டுமன்று, கலை-இலக்கியம், சமூகம், அரசியல், தத்துவம் என அனைத்திற்கும் பொருந்தும். இருபதாம் நூற்றாண்டில் நடைமுறைக்கு வந்த இயங்கியல் பொருள்முதல்வாதம் மற்றும் சோசலிசத்திற்கான விதை கற்பனா சோசலிசத்திலேயே கிடைத்தது!

"எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே, இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ!" (166) - என்று கம்பன் பாடுவதும், அங்கு "ஈந்தே கடந்தான் இரப்போர் கடல்" (172) -இருப்பதாகப் பாடும் முரண்பாடும் "ஆசைபற்றி அறையலுற்ற" தவறன்றி, பெரும் தத்துவத்தவறன்று. நல்லவர்கள் நல்லதை நினைக்கிறார்கள், நல்லவராகவும் வல்லவராகவும் இருப்போரே அதற்கான சூழலை உருவாக்கிச் சாதிக்கிறார்கள். கம்பர் நல்லவராக

இருந்து நல்லதாக எண்ணி எழுதியதுதான் இவைபோலும் கருத்துகள் என்றுதான் நினைக்கிறேன்.

காமப்பரத்தை, காதற்பரத்தை, இற்பரத்தை, சேரிப்பரத்தை என ஆண்களுக்கான நுகர்வுக்கே பெண் படைக்கப்பட்டாள் எனும் கருத்துக்கு இலக்கணமும், இலக்கியமும் அரண்செய்த தமிழில், அழகுபார்த்த சமூகத்தில், "இந்த இப்பிறவிக்கு இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்"என்று இராமனைச் சொல்ல வைத்ததே பெண்களைப் பற்றிய சமூகக்கருத்தில் பெரும் முன்னேற்றமே! இது பெண்களுக்கான சமத்துவக்கருத்தின் ஒரு கங்கு!

ஆண்டவனை மனிதனாகப் பாடியது மட்டுமன்றி அந்த மனிதனைவிட்டே வேடனையும், குரங்கையும், அரக்கனையும் சமமாக எண்ணிச் சொல்லவைத்த கற்பனை கம்பனின் சொந்தக் கற்பனை! "பிறப்பொக்கும் எல்லாஉயிர்க்கும்"என்ற சாரத்தின் பிழிவுஇது! சமத்துவப் பேராசையிது!

"குகனொடும் ஐவர் ஆனேம் முன்பு பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவர் ஆனேம் எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய, நின்னொடும் எழுவரானேம்
புகல் அரும் கானம் தந்து புதல்வரால் பொலிந்தான் நுந்தை" (6507)

காரல் மார்க்சுக்குக் கூட இந்தக் கனவு இருந்ததாகத் தெரியவில்லை! மனிதரில் சமத்துவத்தைத்தான் மார்க்ஸ் கனவு கண்டார் இதுதான் நடைமுறை சாத்தியமும். ஆனால், இதையும் தாண்டி, நல்ல இலக்கியத்தின் அடையாளமே, "இதெல்லாம் நடக்குமா?" எனும் கேள்விக்கு "இப்படி நடந்தால் நல்லதுதானே?" என்னும் விடையைத் தருவதுதானே? அப்படித்தான் கம்பரின் கனவும்.

ஷெல்லியைப் புகழ்ந்த மார்க்ஸ், ஷேக்ஸ்பியரை ரசித்த ஏங்கெல்ஸ், டால்ஸ்டாயைப் பாராட்டிய லெனின், லூசுன் படைப்புகளை எடுத்துக்காட்டிய மாவோ என, மார்க்சிய இலக்கியப் பார்வை தெளிவாகவும் விசாலமாகவுமே இருக்கிறது. ஷேக்ஸ்பியர் நாடகம் அனைத்தையும் விரும்பிப்படித்த மார்க்ஸ், ஷேக்ஸ்பியரின் மிகச் சிறிய பாத்திரங்களையும் ரசிப்பாராம். இத்தாலியக்கவிஞன் தாந்தேயின் கவிதைவரிகளை மார்க்ஸ் அடிக்கடி குறிப்பிடுவதை மூலதனம் முன்னுரையில் எங்கெல்ஸ் குறிப்பிடுவதைக் காணலாம்.

இன்னும் இதை எடுத்து விளக்கும் மார்க்சியத் தமிழறிஞர் அருணன், "எதார்த்த வாதம், மாயா எதார்த்தவாதம் என்பது, மாயா

கற்பிதங்கள் - வருணனைகள்மூலம் மனிதவாழ்வின் எதார்த்தத்தைச் சொல்லுவதாகும்... லத்தீன் அமெரிக்க இலக்கியத்தில் மட்டுமல்ல, நமது பாரம்பரியத்திலும் இந்தக்கூறு உண்டு. பஞ்சதந்திரக் கதைகளிலும் இதிகாசங்களிலும் இதைப் பரக்கக் காணலாம்" என்கிறார்.

"தீங்கு விளைவிக்கும் பிற்போக்கு உள்ளடக்கம் உள்ளடக்கம் நிறைந்த படைப்புகளை மட்டும் நாம் வெறுக்க்வில்லை. சுவரொட்டி விளம்பரம் மாதிரி, கோஷம் போடுவது போன்ற நடையிலுள்ள, உள்ளடக்கம்தான் முக்கியம்- உருவம் முக்கியமே இல்லை என்று வற்புறுத்தும் படைப்புகளையும் நாங்கள் வெறுக்கிறோம்" (மாவோ "கலையும் இலக்கியமும்"-பக்கம்-53)

மண்மயமாதல் – கம்பனும் காரல் மார்க்சும்

கம்பன் தனது நூலை வழிநூலாகச் சொல்லிக்கொண்ட போதிலும், அதனைத் தமிழ்ப்பண்பாட்டுக்கு ஏற்றவாறு மாற்றியமைத்த அழகே காவியப்பெருமைகளுக்கும் காரணமானது. "தேவ பாடையின் இக்கதை சொன்னவர்"களிடமிருந்து, கம்பன் வேறுபட்ட இடங்கள் பற்பல. சீதையும் இராமனும் திருமணத்திற்குமுன்னரே கண்டு, "இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தியது"(516) வான்மீகி இராமாயணத்தில் கிடையாது. இதைத்தான் "சீதைக்குத் தமிழ்நாட்டுச் சேலையினைக் கட்டிவைத்தான், சீராமன் ஒழுக்கத்தில் தென்னாட்டுப் பண்பு வைத்தான்" என்று கண்ணதாசன் பாராட்டிப் பாடுகிறான். மண்மயமான காவியம் மூல நூலை வென்றது!

அரசியல் - சமூக- விஞ்ஞானமான மார்க்சியத்தை மண்மயமாக்கிய நாடுகளில் மட்டுமே அரசியல் புரட்சி நடந்திருக்கிறது என்பதை இதோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம். மார்க்சியம் இனிப்பு எனில், அதை அப்படியே உண்ணல் ஆகாது, பலவகை இனிப்புகளைப் பண்ணிக் கொடுத்தால் எந்தக் குழந்தையும் விரும்பி ஏற்கும்.

கம்பனும் காரல்மார்க்சும் – வேற்றுமைகளும் உண்டு

மார்க்சு, அறிவியல் அடிப்படையிலான இயங்கியல் பொருள்முதல்வாதி. கம்பன், நம்பிக்கை அடிப்படையிலான கடவுள் பக்தன் என்பதில் ஐயனில்லை. ஆனால், இந்த வேற்றுமைக்குள்ளும் இருவருக்குமான ஒற்றுமையும் இருந்தது! அது என்னவெனில், மார்க்ஸ், இயல்பான கடவுள் மறுப்பாளனாயிருந்த போதிலும், புரட்சிக்கு முந்திய சமுதாயத்தில் மதவாதிகளின் கலைஇலக்கியவாதிகளின் ஜனநாயக உணர்வை மதித்தான் என்பது. மக்கள் ஒற்றுமையை, வாழ்வியல்

ஒழுங்குகளை, சமூக உணர்வோடும் அழகியலோடும் வெளிப்படுத்தும் படைப்புகளைப் பெரிதும் ரசித்தான், பாராட்டினான். ஷேக்ஸ்பியர், தாந்தே, முதலான படைப்பாளிகள் பொதுவுடைமைவாதிகள் அல்லர், என்றாலும், மார்க்ஸ் விரும்பக்கூடிய படைப்பாளிகளாயிருந்தார்கள்.

ஆனால், வள்ளுவனும் பாரதியும் கூட இறைநம்பிக்கை உடையவர்கள்தாம் என்றாலும், ஆழ்வார்களைப் போலவோ, நாயன்மார்களைப் போலவோ கண்மூடித்தனமான பக்தர்களல்லர். இறைவனுக்கும் மேலாக இந்த உலகத்து மனிதர்களை நேசித்தவர்கள். இதனை அவர்களின் "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான்" எனும் குறளிலும், "ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகாள் பல்லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண் டாமெனல் கேளீரோ?" என்பன போலும் குரல்களிலும் ஆங்காங்கே கேட்கலாம். இதேபோலத்தான் கம்பனும், இறைவனே மனிதனாக வந்து, மனிதனுக்குரிய பலவீனங்களோடும் கூட அறத்தை நிலைநிறுத்தி, "மானுடம் வென்றதம்மா" என்று பாடி மகிழ்ந்தவன்.

வெறும் மதப்பிரச்சாரமாக மட்டுமே படைக்க நினைத்திருந்தால், கல்வியைப் பற்றியும், கல்விஅறிவின் மேன்மை பற்றியும் ஆங்காங்கே சொல்லி அறிவுறுத்தியிருக்க மாட்டான்!

மார்க்ஸ் எங்கெல்சின் தோழமையை அப்படியே இராம-அனுமானிடம் காணமுடியும். மூலதனம் முதல் பாகம் அச்சேறியபோது, அதுபற்றித் தன் ஆருயிர்த்தோழன் எங்கெல்சுக்கு மார்க்ஸ் எழுதிய கடிதத்தில் "நீ இல்லாமல் இது நடந்திருக்காது என்னருமைத் தோழனே! வா உன்னை இறுகத்தழுவிக்கொள்கிறேன்" என்று எழுதியிருப்பது உணர்ச்சி மிக்கது. இதேபோலத்தான் சீதையை மீட்கப் பேருதவி செய்த அனுமனை இராமன் ஆரத்தழுவிக் கொள்கிறான். வீடணன், சுக்ரீவன், குகன் உள்ளிட்ட மற்றவர்க்கெல்லாம் ஏராளமான செல்வங்களை வாரி வழங்கிய இராமன், குகனை மட்டுமே தழுவிக் கொண்ட இடம் மார்க்ஸ் ஏங்கெல்ஸ் நட்பை நினைவுறுத்தினால் அது மிகையன்று! இதுபற்றி நிறைய எழுத இடமுண்டு

இவ்வாறு, வேறுவேறு காலம், வேறுவேறு நாடு, சூழலில் பிறந்து வளர்ந்து வாழ்ந்திருந்தாலும், மக்களுக்கு இன்றும் தேவையான கருத்துகளைச் சொல்லி இருக்கும் மார்க்சும் கம்பரும் இன்று மட்டுமல்ல, அவர்கள் கனவு கண்ட சமத்துவ சமூகம் மலரும்வரை பேசப்படுவார்கள் என்பதில் ஐயமில்லை.

உறவல்லா உறவுகள்

முனைவர் ஆ.முருகானந்தம்
தமிழாய்வுத் துறை, முதுநிலை உதவிப்பேராசிரியர், தேசியக்கல்லூரி, திருச்சி.

அறிமுகம்

'இரத்தக் கலப்பாலும்,பெற்றோர் கால்வழியாலும், மன உறவினாலும் ஒரே குழுவினர் ஒரே இடத்தில் வாழும் தன்மையாலும் உறவுமுறை அமைகிறது" (கோ.சுப்பையா, கோத்தர்களின் உறவுமுறைச் சொற்கள் ஆராய்ச்சி, ப.42)

ஆனால், இவ்வகைத் தொடர்புகள் ஏதும் இன்றி ஏற்படும் அன்புறவுகள் உறவல்லா உறவுகள் என நோக்கப் பெறுகின்றன. மனிதன், சமுதாய விலங்காகக் கருதப்படுகின்றான். கூடி வாழ்வதில் இன்பம் காண்கின்றான் தனித்து விலகி நிற்றல் அவனுடைய இயல்பிற்கு மாறானதாகும். அவ்வாறு, பிறருடன் இணைந்து வாழும்நிலை ஏற்படும்போது, தன்குழுவில் உள்ளவர்களைத் தான் அறிந்த உறவுமுறைகளால் அழைத்துத் தனக்கு மிகவும் நெருங்கியவர்களாக ஆக்கிக் கொள்ள விழைகின்றான். இத்தகைய உறவல்லா உறவுகள், மனிதன் தான் வாழும் குழுவினால் தனக்குப் பாதுகாப்புப் பெறுவதற்காகவும், வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்வதற்காகவும், தன்னை பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிக் கொள்வதற்காகவும் அமைவனவாகும். எப்பயன்களும் கருதாது இயல்பூக்கத்தால் இத்தகைய உறவுகள் அமைவதும் உண்டு. மக்கள் தங்களுக்குள் பழகும் வாய்ப்புகளைப் பெறும் போதெல்லாம் மனைவி என்ற உறவுமுறை தவிர ஏனைய உறவுச் சொற்களால் உறவல்லாத போதும் அழைத்து இணையும் ஆர்வமுடையவர்களாகின்றனர். அவ்வகையில் பெருங்காப்பியமாகிய இராமாயணத்தின் துணைக் கொண்டு இன்றைய சமுதாயத்தில் உறவல்லா உறவுகளின் இயல்புகளை நிரல்படுத்தி, உறவு முறைகளின் மேன்மையினைக் கருத்தில் கொண்டு, இச்சமுதாயம் விழிப்புணர்வு அடையும் வகையில் இக்கட்டுரையானது அமையும் என்ற நம்பிக்கையில் இம்மாநாட்டுக் கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்படுகின்றது.

உறவல்லா உறவுகள்

'உறவல்லா உறவுகள்" ஒருவரது பண்புநலன்களுக்கும், அன்புக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப, பிறருடைய மனங்களில் இடம் பெறும் வேட்கையால் ஏற்படுவன. கம்பனில் சடாயு, குகன், அனுமன், சுக்ரீவன்,

வீடணன் ஆகியோரிடம் கொண்ட அன்பினால், நட்புறவால் இராமன் உறவல்லாதவர்களை உறவுகளாக ஆக்கிக் கொள்கின்றான்.

உறவு, உறவில்லாதது, என்பன இடத்தின் அளவுகோலைக் கொண்டு வரையறுக்கப்படுவதில்லை. மனநிலையைக் கொண்டு வகுத்துக் காட்டப்படுவதாகும். 'சடாயு புள்ளினத்தில் தோன்றினாலும் தூய உடலினன். கல்வி, கேள்விகளையும் கூர்ந்த மதியினையும் உடையவன். தொலைவில் உள்ள பொருள்களையும் உள்ளவாறே ஆயும் ஆற்றல் உடையவன். கொடிய அரக்கரைக் கொன்று அவருயிரைக் கூற்றுவனுக்கு அழித்து, உடலைத் தன் இனத்துக்கேற்ப உண்டு வாழ்ந்தான், மிகுந்த புகழையும், ஆயுளையும் பெற்றவன்" (ஜாஸ்மின் ஆசிர், கம்பனில் நட்பு, ப.117)

'ஒரு சமயம் தண்டகவனத்தில் நச்சரவம் ஒன்று தயரதனைத் தீண்ட வந்ததைக் கண்ட சடாயு, அதனைக் கொன்று தயரதனைக் காப்பாற்றினான். பின்னர் தயரதன் உண்மையினை அறிந்து சடாயுவைத் தழுவிக் கொண்டான். சடாயு காட்டில் இருந்தபோது தான் இருவரும் நண்பராயினர்" என்று வேளூர்ப்புராணம் கூறுகிறது.

இந்தப் புள்ளின் வேந்தனும், மக்கள் வேந்தனும் ஒருவருக்கொருவர் உதவி, இன்னுயிர் நண்பர்களாக விளங்கினர். சம்பராசுரனை எதிர்த்துப் போரிட்டபோது தயரதனுடன் சடாயு துணைநின்று பொருது நண்பனுக்கு வெற்றி தேடித் தந்தான். அதுகண்டு மனம் உவந்த தயரதன் 'நான் உடல் நீ எனக்கு உயிர்" என்று கூறி மகிழ்ந்தான். அரக்கர் கோமான் சீதையைக் கவர்ந்து விண்ணில் தூக்கிச் சென்றபோது இராமனுக்காகப் போரிட்டு இராவணன் வாளால் சிறகுகள் வெட்டப்பட்டு சடாயு வீழ்ந்தனன். சடாயு, இராம- இலக்குவர்களால் தயரதன் இறந்த செய்தியைக் கேட்டதும் மூர்ச்சையானான். உணர்வு வந்ததும், தயரதன் "நான் உடல் நீ எனக்கு உயிர்" என்று கூறிய வாக்கு பொய்த்ததோ? கூற்றுவன் உடலை வைத்துவிட்டு உயிரைக் கவர்ந்து செல்லுதல் வழக்கம், மாறாக உயிர் என்ற என்னை வைத்துவிட்டு உடல் என்ற உன்னை எடுத்துச் சென்று விட்டானே, பகுத்தறிவற்ற கூற்றுவன்" என்று கூற்றுவனை பழிக்கும்போதும், பிரிவுத் துன்பம் தாழாது தீப்பாய்ந்து உயிர் விடத் துணியும் போதும், அவனுடைய அன்பினை உணரமுடியும்.

தந்தை உறவு முறை : இராமன் – சடாயு

கழுகின் வேந்தனாகிய சடாயுவிடம் கொண்ட உறவு மகன் - தந்தை உறவு போன்றது. தயரதனும், சடாயுவும் சூரியக்குலத் தோன்றியமையாலும் நட்புறவால் இறுகப் பிணிக்கப்பட்டிருந்தமையாலும்,

இருவரும் உடன் பிறப்பாளராய் அமைந்தனர். இந்நிலையில் இராமனுக்கு தந்தையாகும் முறையை அடைகின்றான் சடாயு, இராமனும் தன் தந்தையைக் கண்டது போன்ற உணர்ச்சியும், மகிழ்ச்சியும் அடைந்தான். சடாயு இறந்தபின் ஒரு மைந்தன் தன் தந்தைக்கு ஆற்ற வேண்டிய இறுதிக் கடன்கள் அனைத்தையும் இராமன் சடாயுவுக்கு செய்து முடித்தான். சடாயு தன் நண்பன் மக்களைத் தன் மக்களாகக் கொண்டான். அவர்கட்குத் துன்பம் வந்தபோது உடனே சென்று முயன்று அறப்போரில் உயிர் நீத்தான். 'காட்சியில் கழுகரசனாய் விளங்கிய சடாயு பண்பிலே தெய்வமாகவே விளங்கினான்" (ச.வே.சு. இலக்கிய நினைவுகள், ப.79)

'இராமனுடைய உள்ளத்தில் தந்தையென தோன்றியவன் சடாயு இனவேறுபாடும், உடல் வேறுபாடும் அன்பைக் கட்டுப்படுத்த முடியாது" என்பதை இராமன் - சடாயு உறவு விளக்குவதாகும்.

'தந்தை - மகற்கு ஆற்றும் நன்றியும், மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியும், செயல்படுவதற்கு ஏற்ற ஒரு சூழ்நிலையை அமைத்து இராமன் - சடாயு தந்தை உறவைக் கம்பர் காட்டியுள்ளார்" (மு.இராமசாமி, தேசியக்காப்பியம், பக்.200-201)

இராமன் – குகன் உறவு

'குகனுக்கும், இராமனுக்கும் இடையில் தோன்றிய அன்பு, தாய் - மகன் உறவில் உருவானதுதான்"; குகனை இராமனிடம் அறிமுகப்படுத்திய இலக்குவன் 'தாயின் நல்லன்" என்று தான் அறிமுகம் செய்து வைத்தனன். இவனுடைய தாய்மை அன்பைக் கண்டு உணர்ந்து தெளிந்த இராமனும் இறுதியில் சுக்ரிவனுக்கும், வீடணனுக்கும் குகனை அறிமுகம் செய்துவைக்கும் போது அதே உறவுச் சொல்லால் அறிமுகப்படுத்துகின்றான்.

'தாயினும் உயிர்க்கு நல்லான்
வழுவிலா எயினர் வேந்தன்
குகன் எனும் வள்ளல் என்றான்" - என்ற இராமனின் கூற்று இலக்குவன் கூறியதை ஏற்றமை குறித்ததாகும்.

'தேவா நின் கழல் சேவிக்க வந்தனன்
நாவாய் வேட்டுவன் நாயடியேன்" - எனும்போது அன்பால் தாழும் நட்பினை இங்கு காணலாம்.

இராமன் வனத்தில் வாழும் நாளெல்லாம் தன் நாட்டில் வாழவேண்டும் என்று விரும்பினான்.

'இனிது இளநெடிது எம் ஊர் எனவும்
நான் உளதனையும் நீ இனிது இரு" எனவும்

குகன் இராமனிடம் வேண்டிக் கொண்டான். இராமன் மனம் நெகிழ்ந்த 'நீ என் உயிரனையாய்" இலக்குவன் நினக்குத் தம்பியாவான், சீதை உன் தோழியாவள்;, உலகம் முழுவதும் உன்னுடையது நான் உன் ஏவல் தொழிலுக்கு கட்டுப்படும் உரிமை உடையவன்" என்று கூறினான்.

'அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம் என்று கூறி குகனைத் தன் உடன்பிறப்பாக இராமன் ஏற்றுக் கொள்கின்றான்"-

'உண்மை நட்பே உடன்பிறப்புரிமைக்கு வித்திடுகிறது"

இராமனைத் தன்னைப் போன்ற மனிதனாவே மதித்து எவ்விதப் பயனையும் எதிர்பாராமல் அவனிடம் அன்பு பாராட்டியதே குகனிடம் நாம் காணும் சிறப்பு .

'பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"

என்னும் குறட்கருத்தே நம்முன் நிற்கிறது. இராமன், இலக்கிவன் சீதை என்ற மூவரையும் தன்னின் இளையவர்களாவே மதித்து விட்டமையின், ஒருதாய் பிடிவாதம் செய்கின்ற குழந்தையிடத்துக் காட்டும் பரிவையே குகனும் அவர்களிடத்துக் காட்டுகின்றான். அன்பை வெளிக் காட்டுவதில் எவ்வித நாணமும் அடையவில்லை குகன்.

இராமன் - குகன் உறவு தாயன்பில் முகிழ்ந்து, நட்பில் மலர்ந்து உடன்பிறப்பில் மணம் வீசியது, என்றால் அது மிகையாகாது.

இராமன் – சுக்ரீவன்

கிட்கிந்தை மலையில் அனுமன் மூலம் இராமனைச் சந்தித்தவன் சுக்ரீவன் வாலியால் ஒதுக்கப்பட்டவன் தம்பி என்ற உறவு அழிக்கப்பட்டவன், உருமை என்ற தாரத்தை இழந்தவன், சுக்ரீவனிடத்தில் இராமன் கொண்ட அன்பு, 'அருளியல்" அடிப்படையில் அமைந்தது எனலாம், நட்பிற்கு ஒத்த உணர்ச்சியே அடிப்படை. இராமனும், சுக்ரிவனும் ஒத்த மனநிலையுடையவர். சுக்ரீவன் தன்னைவிட ஆற்றல் பொருந்திய இராமனுடன் நட்புக் கொண்டு தன் அண்ணன் எனும் பகையை வென்றான், இராமனும், சுக்ரீவனும் தாம் பெறுவதற்குரிய பயனைச் சீர்தூக்கி நட்புச் செய்து கொள்வது போற்றுதற்குரியது.

இராமனும் சுக்ரீவனும் கொண்ட நட்பு இருவர்க்கும் பயன் தருவதாக அமைந்தாலும் இந்நட்புறவில் உடன்பிறப்பில் பாசப்பிணைப்பினைக் காண முடிகின்றது.

சுக்ரீவனையும் தனது உடன்பிறந்தவனாக ஏற்றுக் கொள்கின்றான். இதனை வீடணனிடம் இராமன் கூறும்போது,

'குன்று சூழ்வான் மகனொடும் அறுவரானோம்" என்று கூறுவ-திலிருந்து உணரமுடிகிறது.

இராவணனுக்கும், சுக்ரீவனுக்கும் இடையே நிகழ்ந்த போரில் நெடுநேரமாகியும் சுக்ரீவன் திரும்பி வராததைக் கண்டு வருந்திய இராமன் நிலையை,

'மன்னுயிரனைய காதல் துணைவனை வரவு காணான்
தன்னுணர்வு அழிந்து சிந்தை அலம் வந்து தளர்ந்து சாய்ந்தான்"

எனக் கம்பர் கூறுவதிலிருந்து உடன்பிறப்பின் ஆழம் வெளிப்படும்.

இராமன் – வீடணன்

'இராமனுக்கும், வீடணனுக்கும் ஏற்பட்ட நட்பு 'அரசியல் நட்பு ஆகும்". மறச் செயல்களைத் தம் குலத் தொழிலாகக் கொண்ட அரக்கர் இனத்தில் தோன்றிய வீடணன், அறநெறியைத் தழுவி வாழ்ந்தான் என்பது வியப்புக்குரியது.

'குலத்தளவே யாகுமாம் குணம்" என்னும் 'மூதுரையைத் தம் வாழ்க்கையில் பொய்த்துக் காட்டியவன்".

அறிவுடையார் யாவரிலும் மேம்பட்ட அறிவு படைத்தவனாய், விளங்கினான், 'மேதாவிகட்கெல்லாம் மேலான மேன்மையான்" என்று கம்பர் வீடணனைப் பாராட்டுகின்றார்.

'புன்புலைப் பிறவியின் பகைஞன் போலுமால்"- என்பது வீடணனின் தெளிந்த சிந்தையை காட்டும் இராமனிருக்கும் பாசறைக்குச் சென்று 'கொற்றவா! சரண்", என்று கூறும் வீடணனின் சரணாகதி, 'வைணவ தத்துவத்தில் பேருயிரிடத்துச் சிற்றுயிர் அடைக்கலம் பூணும் உயிர் நட்பை வெளிப்படுத்துவதாகும். மாற்றான் வலியும், துணை வலியும் அறிதற்கு வீடணனின் நட்பு இராமனுக்குத் துணை புரிந்தது.

இலங்கைப் போரில் வீடணன் இராமனின் வெற்றிக்குப் பெருந் துணை புரிந்தான். இலக்குவன், அனுமன், அங்கதன் முதலியோர்

இந்திரசித்தைக் கொன்று அவன் தலையுடன் இராமன் முன் வெற்றி வீரர்களாய் வந்து நின்றபோது, இராமன் அவர்களை நோக்கி, 'இவ்வெற்றி இலக்குவனால் மட்டும் அன்று, அனுமனாலும் அன்று, இறைவனது சிறப்பினாலும் அன்று, வீடணன் தந்த வெற்றி இது" என்றுகூறி வீடணனுக்கும் புகழ்மாலை சூட்டினான். குகனையும், சுக்ரீவனையும் நட்பாகக் கொண்ட கருணை வள்ளல் அரக்கர் குலச் செல்வனை நட்பாகக் கொண்டது அவனது நட்புச் செல்வதின் நிறைவினைக் காட்டுகிறது.

இராமன் – அனுமன் உறவு

காற்றின் வேந்தனுக்கு அஞ்சனை வயிற்றில் தோன்றியவன் அனுமன். 'சொல்லின் செல்வன்" என்ற இராமனால் போற்றப் பெற்றவன். வாலிக்கும், கும்பகர்ணனுக்கும் நிகரான வலிமையுடையவன்.

ஒருவரைக் கண்ட மாத்திரத்திலே அவர்கள்பால் நம்மை அறியாது அன்பானது பெருக்கெடுத்து ஓடி ஏதோ ஒரு உறவை ஏற்படுத்திக் கொள்வதுபோல இந்த இராமன் - அனுமன் நட்புறவு அமைந்தது.

"நீ எனக்கு எவ்வளவோ சிறந்த உதவிகள் செய்திருக்கிறாய் அவற்றுள் ஒவ்வொன்றுக்கும் என் உயிரே தக்க பிரதியாகும். நீ செய்துள்ள கணக்கற்ற உதவிகளில் ஒன்றுக்கு ஈடாக என் உயிரை அழிப்பதாக இருந்தாலும் பல பிறவிகளில் நான் கடன்பட்டவனாகவே இருப்பேன். நான் உன்னிடம், பட்டுள்ள கடனைத் தீர்ப்பது என்பது ஒரு நாளுமில்லை", என்று இராமன் அனுமனைக் கொண்டாடுவ-திலிருந்து இராமனின் உள்ளத்தில் நிலையான இடத்தை அனுமன் பெற்றமை உணரப்படும்.

இராமன் - அனுமன் உறவு, அனுமன் நோக்கில் ஆண்டான் அடிமை உறவாகவும், இராமன் நோக்கில் நட்புறவாகவும் அமைவதாகும். இராமனது ஏவல் தொழில் செய்து வாழும் உரிமையைத் தனக்கு வழங்குமாறு அனுமன் இராமனிடம் வேண்டினன். சீதையைத் தேடிச் சென்றதோடு இலங்கைப் போரில் பேருதவியும் புரிந்தனன் சுக்ரீவனுக்கு 'ஏவல் கூவல்" பணி செய்து வாழும் அனுமன் இராமனுக்கும், அவன் இளவலுக்கும் பணி செய்வதைத் தன்னுடைய பெரும் பேறாகக் கருதினான்.

நிறைவுரை

வேடர் குலத் தலைவன் குகனையும், பறவை இன சடாயுவையும், குரங்கினமாகிய சுக்ரிவனையும், அனுமனையும் நொது மலராகினும்,

நட்பாகவும், உறவாகவும், கொண்டு உறவை விரிவு செய்தவன் இராமன். பகைவரிடமும் நட்புக் கொண்டு இராமன் ஒழுகியதை வீடணன் தொடர்பு உணர்த்தும் கம்பன் காப்பியத்தில் குறிக்கப்படும் உறவல்லா உறவுகள் குடும்ப அமைப்பினால் ஏற்படும் தொடர்பில்லாத பிற உறவுகளையே குறிப்பதாகும். மாறிவரும் சமுதாயத்தின் உறவினர்களை விட இப்பொழுது உறவல்லாத நண்பர்களே முன்னின்று இருந்து பல உதவிகளையும் செய்து, ஒரு தனிமனிதன் மனதில் பதிந்து விடுகின்றனனர் என்பதைச் சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டி முன்னேற்றப் பாதையில் நடை போடுவோம்.

கம்பனின் படைப்பில் சகோதரத்துவப் பாங்கு

முனைவர் ம.தமிழ்வாணன்
முதுநிலை ஆய்வு வளமையர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.

கம்பர்தம் காப்பியத்தில் வலியுறுத்தும் நீதியும் அறனும் மக்கட் சமுதாயம் அனைத்திற்கும் பொதுவானவை ஆகும். இந்நூல் கதைப்பாங்கில் சகோதர உறவுநிலை பாசத்தால் மேம்பட்டு நிற்கிறது. எனவே அத்தகைய சகோதரப்பாசம் கம்பராமாயணத்தில் எவ்வாறு சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது என்பதை ஆராய்வது அவசியமாகிறது.

கம்பராமாயணத்தில் சகோதர உறவுகள்

உடன்பிறந்த சகோதரர்கள்

இராமன் - இலக்குவன்
இராமன் - பரதன்
வாலி - சுக்கிரீவன்
இராவணன் - கும்பகர்ணன்
இராவணன் -வீடணன்

உடன் பிறக்காமல் இருப்பினும் பாசத்தால் சகோதரர்களான,

இராமன் - குகன்
இராமன் - வீடணன்

ஆகியோரின் நட்பின் ஆழத்தையும் கம்பன் அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். தசரசனுக்கும் கோசலைக்கும் பிறந்தவன் இராமன். தசரதனுக்கும் கைகேயிக்கும் பிறந்தவன் பரதன், தசரதனுக்கும் சுமத்திரைக்கும் பிறந்தவர்கள் இலக்குவன், சத்ருகனன் ஆகமொத்தம் இராமனுடன் பிறந்தவர்கள் மூவராவர்.

வைச்ரவ மகரிஷிக்கும், கைகேசிக்கும் பிறந்தவன் இராவணன். இராவணனுடன் பிறந்தவர்கள் எண்மர். மூத்த சகோதரன் குபேரன், இளைய சகோதரர்கள்வீடணன், கும்பகர்ணன், கரன், துசனன், மகிரவன். சகோதரிகள் கும்பினியும், சூர்ப்பணகையும் ஆவர். இராமனும் இலக்குவனும் இணைபிரியாதவர்கள், பரதனும் சத்துருகனனும் இணைபிரியாதவர்கள் என்று சகோதர பாசத்தை விளக்கவும் செய்வது. பின்னர் நேரஇருக்கும் நிகழ்ச்சிகளின்போது அவர்களது பாசம் எத்தகையது என்று தெரிந்து கொள்ள உதவுகிறது. பாடலில்,

"கோல்வரும் செம்மையும். குடைவரும் தண்மையும்
சால்வரும் செல்வம்' என்றுஉணர் பெருந்தாதைதன்
மேல்வரும் தன்மையால். மிகவிளங்கி னர்கள்தாம்
நால்வரும் பொருஇல் நான்மறைஎனும் நடையினார்

(கம்ப: 1056)

என்று குமரர்கள் நால்வரும் விளங்கிய காட்சியைக் கம்பர் சிறப்பித்துப் படம்பிடித்துக் காட்டுகிறார். இராமனும் இலக்குவனும் இணைபிரியாத நட்பினர் என்பதை,

"நதியும். மை தவழ் பொழில்களும். வாவியும். மருவி.
நெய் குழல் உறும் இழை' என நிலைதிரிவார்"

(கம்ப:306திருஅவதாரப்படலம்)

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன. தொடர்ந்து பரதனும் சத்துருகனனும் பாசப்பிணைப்பில் சிறந்து விளங்கினார்கள். இதனை,

"பரதனும் இளவலும். ஒருநொடி பகிராது.
இரதமும் இவுளியும் இவரினும். மறைநூல்
உரைதரு பொழுதினும். ஒழிகிலர்; எனை ஆள்
வரதனும் இளவலும் என மருவினரே" (கம்ப:307)

என்னும் பாடல்வழி உணரலாம்.

இராமனைக் காட்டிற்குச் செல்லக் கைகேயி பணித்தபோது, இராமனின் நிழலென விளங்கும் இலக்குவன் தன் அண்ணனுக்கு நேர்ந்த சூழலைக் கேள்விப்பட்டு மிகுந்த கோபம் கொண்டான் இலக்குவன். இதில் இலக்குவனின் பாசம் வெளிப்பட்டு நிற்கிறது.

'யாவராலும் மூட்டாத காலக் கடைத்தீயென' மூண்டு எழுந்தான்'. "கண்ணின் கடைத் தீயுக, நெற்றியில் கற்றை நாற, விண்ணிற் சுடரும் சுடர்தோன்ற, மெய்ந்நீர் விரிப்ப, உள் நிற்கும் உயிர்ப்பு எனும் ஊதை பிறக்க" இவ்வாறு தன்னுடன் கிளம்பி நின்ற சகோதரனை வர வேண்டாம் என்று தடுத்தான். இராமன்,

"அன்னையர் அனைவரும், ஆழி வேந்தனும்
முன்னையர் அல்லர்: வெந் துயரின் மூழ்கினார்
என்னையும் பிரிந்தனர் இடர் உறாவகை" (கம்ப: 1755)

என்று பலவாறு கூறுமிடத்தில் இலக்குவன் இராமனே தனக்கு எல்லாம் என்பதைப் புரிய வைக்கிறான். பிறகு பரதன் செய்தியறிந்து இராமனைக்

காண வரும் போது, சகோதரனின் தன்மையை அறியாது, பரதன் மேல் இலக்குவனுக்கு கோபம் ஏற்பட்டது இதனைப் பாடலில்,

"மின்னுடன் பிறந்தவாள் பரத வேந்தற்கு, "என்
மன்னுடன் பிறந்திலென் மண்கொண்டு ஆள்கின்றான்,
தன்னுடன் பிறந்திலென் தம்பி முன்னலென்;
என்னுடன் பிறந்தயான் வலியன்" என்றியால்" (கம்ப:1883)

என்று சொல்லப்பட்டுள்ளது. இதில் பரதன் தன் தாய் செய்த தவறுக்கு வருந்தி நின்றான் என்பது புலப்படும். தவ வேடம் பூண்டிருந்த பரதனை இராமன் கேட்கிறான்,

"வரதன் துஞ்சினான் வையம் ஆணையால்,
சரதன் நின்னதே மகுடம் தாங்கலாய்,
விரத வேடம், நீ என்கொல் வேண்டுவான்?
பரத! கூறு' எனப் பரிந்து கூறினான்." (கம்ப:2470)

அரசை இராமன் ஏற்க வேண்டும் என்று பரதன் வேண்டி நிற்கிறான்.

"உந்தை தீமையும், உலகு உறாத நோய்
தந்த தீவினைத் தாய் செய் தீமையும்,
எந்தை! நீங்க, மீண்டு அரசு செய்க' (கம்ப:2477)

"அரசு உன்னுடையதே" (கம்ப:4037)

அப்போது "நீயே இந்நாட்டை ஆள வேண்டும்" என்று பரதனுக்கு இராமன் ஆணையிடுகிறான். ஆனால் பரதனோ "எனக்கு அரசு வேண்டாம் காட்டில் வாழப் போகிறேன்" என்று புலம்புகின்றான்.

"முனிவனும், உரைப்பது ஓர் முறைமை கண்டிலெம்
இனி' என இருந்தனன்; இளைய மைந்தனும்,
'அனையதேல் ஆள்பவர் ஆள்க நாடு; நான்
பனி படர் காடு உடன் படர்தல் மெய்' என்றான். (கம்ப:2502)

இராமன் இக்கூற்றை மறுத்து மறுமொழியாக,

"ஆம்எனில், ஏழ்-இரண்டு ஆண்டில் ஐய! நீ
நாமநீர் நெடு நகர் நண்ணி, நானிலம்
கோ முறை புரிகிலை என்னின், கூர் எரி
சாம் இது சரதம்; நின் ஆணை சாற்றினேன்.' (கம்ப:2507)

என்று தம்பி பரதனுக்கு ஆணையிடுகிறான். ஆனால் பரதன் இராமனின் பாதுகையை, (காலணியை) "செம்மையின் திருவடித்தலம் தந்தீக' என்று வேண்டிக் கேட்கிறான். இராமன் கொடுத்தப் பாதகையைப் பெற்றதும்,

"அடித்தலம் இரண்டையும், அழுத கண்ணினான்,
முடித்தலம் இவை' என, முறையின் சூடினான்;
படித்தலம் இறைஞ்சினன், பரதன் போயினான்" (கம்ப:2510)

என்று பாதுகையையே ஆட்சியின் கிரீடமாக எண்ணி பரதன் எடுத்துச் சென்றதாக புலவர்எடுத்துக்காட்டுகிறார். இராமனின் பாதுகை ஆட்சி செய்ய, பரதன் நந்தியம் பதியிலேயே தங்கி விடுகிறான் என்றும் கம்பன் கூறுவதைக் காணலாம்.

"பாதுகம் தலைக்கொடு, பரதன் பைம் புனல்
மோது கங்கையின் கரை கடந்து முந்தினான்;
போது உகும் கடி பொழில் அயோத்தி புக்கிலன் (கம்ப2513)

இராமன்மேல் கொண்ட அன்பினாலும் பக்தியினாலும் ஆட்சியை ஏற்காமல் பரதன் இருந்ததாக காதையில் வருகிறது. இதையே நாம் இராவணனின் சகோதரர்களின் தன்மைகளை ஆராயும் போது, பல ஒற்றுமைகளைக் காணலாம். இராவணன் சீதையைக் கவர்ந்து வந்து, போருக்கும் ஆயத்தமாக நிற்கும் போது, அவனது சகோதரர்களானவீடணனும் கும்பகர்ணனும் இராவணனுக்கு பலவாறு அறிவுரை தருகிறார்கள். இராவணன் அவர்களிடம் கோபமாகப் பேசுகிறான்.

கும்பகர்ணனை இலக்குவனுக்கும் வீடணனை பரதனுக்கும் நாம் ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.வீடணன் இராவணனுடன் தீமைக்கு துணை போகாமல் இராமனுடன் சேர்ந்து கொள்ளும் எண்ணம் ஏற்பட்ட பிறகும், கும்பகர்ணனை இராமனுடன் சேர்க்க வேண்டும் என்று எண்ணி, அவனிடம் பேசச் செல்கிறான். அப்போது, எப்படி பரதன் இராமனிடம், "எனக்குக் கிடைத்த அரசை நான் உனக்குத் தருகிறேன்" என்று கூறினான், அவ்வாறு,

"எனக்கு அவன் தந்த செல்வத்து இலங்கையும் அரசும் எல்லாம்
நினக்கு நான் தருவென்; தந்து, உன் ஏவலின் நெடிது நிற்பென்'
(கம்ப:7411)

எனக் கம்பன் சொல்கின்ற இடத்தில் சகோதரர்கள் ஒருவரை ஒருவர் கொண்ட பாசத்தால் உயர்த்தி பேசப்படுகிறார்கள். வீடணன்

கும்பகர்ணனை இராமனுடன் சேரச் சொல்ல வந்த போது, 'கும்பகர்ணன், இராமனை விட்டு நீங்குவது அமுது உண்ணாமல் நஞ்சுண்பதற்கு ஒப்பாகும்' என்றும்,

"ஐய! நீ அயோத்தி வேந்தற்கு அடைக்கலம் ஆகி, ஆங்கே
உய்கிலைஎன்னின், மற்று இல் அரக்கராய் உள்ளோர் எல்லாம்
எய் கணை மாரியாலே இறந்து, பாழ் முழுதும் பட்டால்,
கையினால் எள் நீர் நல்கி,கடன் களிப்பாரைக் காட்டாய்"

(கம்ப:7408)

மேலும் தங்களுக்குப் பின்னர் இலங்கையை ஆள வீடணனையன்றி யார் இருப்பார் என்றும் வருந்துகிறான். எவ்வளவு கூறியும் திருந்தாத இராவணனைப் பற்றி கும்பகர்ணன் சொல்வதாகக் கம்பன் சொல்லும் வார்த்தைகள் இன்றளவும் ஒரு சிறந்த அறிவுரையாக அனைவரும் ஏற்க வேண்டிய ஒன்றாகும். 'கருத்து இலா இறைவன் தீமை கருதினால், அதனைக் காத்துத் திருத்தலாம் ஆகின் அன்றோ திருத்தலாம்? தீராது ஆயின்,பொருத்து உறு பொருள் உண்டாமோ? பொரு தொழிற்கு உரியர் ஆகி, ஒருத்தரின் முன்னம் சாதல், உண்டவர்க்கு உரியதுஅம்மா'.'ஆகுவது ஆகும், காலத்து; அழிவதும், அழிந்து சிந்திப் போகுவது; அயலே நின்று போற்றினும், போதல் திண்ணம்; சேகுஅறத் தெளிந்தோர் நின்னில் யார் உளர்? வருத்தம் செய்யாது, ஏகுதி' என்றுவீடணனை வருந்தாமல் செல் என்று கும்பகர்ணன் அறிவுறுத்துக்கிறான். மேலும் தன்னால் போர் செய்யாமல் இராமனுடன் சேர்தல் ஆகாத காரியம் என்பதை கும்பகர்ணன் சொல்வதைக் கம்பன் நயமாக எடுத்துக்காட்டுகிறார்.

"நீர்க் கோல வாழ்வை நச்சி, நெடிது நாள் வளர்த்துப் பின்னைப்
போர்க் கோலம் செய்து விட்டாற்கு உயிர் கொடாது, அங்குப் போகேன்;
தார்க் கோல மேனி மைந்த! என் துயர் தவிர்த்தி ஆகின்,
கார்க் கோல மேனியானைக் கூடிதி, கடிதின் ஏகி" (கம்ப:7426)

என்று சொல்கின்ற கும்பகர்ணன், வீடணனைத் துயர் நீங்கி நல்லவர்களுடன் கூடுதல் நலம் என்று அறிவுரை கூறுகிறான். இராமன் காடு புகத் துணிந்த போது, இலக்குவன் கோபம் கொண்டு பேசுவான். அதேபோன்று, இராவணன் தவறு செய்யும்போது சகோதரர்கள் கும்பகர்ணனும்வீடணனும் தவறினை இடித்துரைக்கிறார்கள்.

இராவணன் கோபமாக வீடணனிடம் சொல்லும்போது, அமைதியாக வீடணன்,

"புத்திரர், குருக்கள், நின் பொரு இல் கேண்மையர்,
மித்திரர், அடைந்துளோர், மெலியர், வன்மையோர்,
இத்தனை பேரையும்,இராமன் வெஞ்சரம் சித்திரவதை
செயக் கண்டு, தீர்தியோ?" (கம்ப:6375)

எத்துணை வகையினும் உறுதி எய்தின, ஒத்தன, உணர்த்தினேன் உணரகிற்றிலை அத்த! என் பிழை பொறுத்தருள்வாய்'

என்று கூறிவிட்டுவீடணன் செல்வதாகக் கம்பன் காட்டுகிறான். உறக்கத்திலிருந்த எழுப்பபட்டு, இராவணனைக் காண அழைத்துவரப்பட்ட கும்பகர்ணனை, இராவணன் போருக்குத் தயார்ப்படுத்துகிறான்.. அப்போது கும்பகர்ணன் இராவணனிடம்,

"யான் உனக்கு ஒன்று உளது உணர்த்துவது
உணர்ந்து கோடியேல், நன்று அது; நாயக!
நயக்கிலாய் எனின், பொன்றினைஆகவே கோடி போக்கு இலாய்!
(கம்ப:7358)

என்று பலவாறு உணரக் கூறினான். அப்போது இராவணன் சினந்து உரைக்கிறான்:

"மானிடர் இருவரை வணங்கி, மற்றும் அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு,உய் தொழில்
ஊனுடை உம்பிக்கும்உனக்குமே கடன்
யான் அது புரிகிலேன்; எழுக போக!' என்றான். (கம்ப:7363)

இதைக் கேட்ட கும்பகர்ணன்,

"தருக, என் தேர், படை; சாற்று, என் கூற்றையும்;
வருக, முன் வானமும் மண்ணும் மற்றவும்
இரு கை வன் சிறுவரோடுஒன்றி என்னொடும்
பொருக, வெம் போர் எனப் போதல்மேயினான்" (கம்ப:7364)

என்று புறப்பட்டான். பின்னர் இராவணனை மாற்ற முடியாமல் போன காரணத்தால், போருக்குச் செல்ல முடிவுசெய்யும் கும்பகர்ணன், இறுதியில், வல்நெடுஞ் சூலத்தை வலத்து வாங்கி, இன்னம் ஒன்று உரை உளது' என்றான் மேலும்,

"வென்று இவண் வருவென் என்று உரைக்கிலேன்; விதி
நின்றது; பிடர் பிடித்து உந்த நின்றது;

பொன்றுவென்; பொன்றினால்,பொலன் கொள் தோழியை,
"நன்று" என, நாயக விடுதி; நன்றுஅரோ. (கம்ப:7366)

என்று சொல்லும்போது தான் இறப்பது உறுதி என்று கூறுகிறான்.

இவ்வாறு, கும்பகர்ணன் தன்னுடைய சகோதரனுக்காக உயிர் துறக்கவும் துணிந்து போருக்குச் சென்றான் என்னும் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

இக்கட்டுரையின்வழி சகோதரத்துவப் பாங்கு போற்றற்குரியது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். மேலும், வான்மீகி இராமாயணத்தையே விஞ்சும் சுவையுடைய காப்பியமாகக் கம்பர் படைத்துள்ளார் என்று வ.வே.சு. ஐயர் போற்றியுள்ளமை சுட்டத்தக்கது.

கம்ப மானுடன் - இராமன்

முனைவர் பீ.ரகமத்பீ
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், சீனிவாசன் கலை அறிவியல் கல்லூரி, பெரம்பலூர்.

கம்பன் என்னதான் இராமனை, தெய்வீகமாகப் படைத்தாலும், கம்பனின் மனிதப்பண்பு, மனப்போராட்டம், பாசத்துடிப்பு, பிரிவுத் துயரம் எல்லாவற்றையும் இராமனில் வைத்துப் படைத்தள்ளார். பல இடங்களில் சமூகச் சூழலில் என்ன நினைப்பார்கள் என்ற நிலையில் கேள்வி பதில் அமைந்துள்ளதாகப் படைத்துள்ளார்.

கம்பனின் பண்புகள்

கம்பன் இராமனின் மூலம் தனது குணநலன்களையே வெளிப்படுத்தி இருக்கிறார். 'பெற்றால் பிள்ளை இராமனைப் போலத்தான்' என்ற பழமொழிக்கேற்பவும், 'மூத்தோர் சொல்லும் முதுநெல்லிக் கனியும் முதலில் கசக்கும், பின்பு இனிக்கும்' என்ற பழமொழிக்கேற்பவும் இராமனைப் படைத்துக் காட்டியவர். பல இடங்களில் இராமன் திருமாலின் அவதாரமாக இருந்தாலும், மானிடப் பிறப்பாகவே விளங்கக் காணலாம். எல்லா மனிதர்களுக்கும் உள்ள அழுகை, துடிப்பு, கோபம், புலம்புதல் எல்லாம் இராமனுக்கும் உண்டு எங்கெல்லாம் தான் மனிதனாக இராமனை நினைத்தாரோ அங்கெல்லாம் மனிதனாகவே, பிதற்ற வைத்திருக்கிறார்.

மிதிலையில் சீதை இராமன் காணும் இடத்தில்

விசுவாமித்திரர் இலக்குவன், இராமன் மூவரும் மிதிலாபுரி நகர் வழியாக வரும்போது மாடியில் தோழியரோடு சீதைப் பந்தாடிக் கொண்டிருக்கிறாள். இராமனைத் தன் மலர்க் கண்களால் கண்டுவிடுகிறாள், இராமனும் சீதையைக் கண்டான், கண்டதும் 'அண்ணலும் நோக்கினார் அவளும் நோக்கினாள்' இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்' என்று கம்பன் படைத்துள்ளார். இராமன் இளைஞன், இளம் பருவத்தில் ஏற்படும் காதல் உணர்வு (கடவுளான) இராமனுக்கும் ஏற்பட்டது என்று மானிடனாகவே இராமனைப் படைத்துள்ளார்.

இராமன் சிவனை வழிபடுதல்

இராமன், தெய்வ அவதாரமாக இருந்தாலும், சீதையின் திருமணத்திற்காக சனகன் வைத்திருந்த வில்லைச் சுயம்வர சபையில்

ஒருவரும் நாணேற்ற முடியாமல் திரும்புகின்றனர். இராமன் அந்த வில்லின் அருகில் வருகிறான், சிவபெருமானை வணங்குகிறான். அதன்பின் வில்லை வளைக்க இடிஇடித்தது போல் ஒடிந்துவிடுகிறது என்பதை,

"தடுத்து இமையாமல் இருந்தவர், தாளில்
மடுத்ததும், காண்நுதி வைத்ததும் நோக்கார்
கடுப்பினில் யாரும் அறிந்திலர்; கையால்
எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்." என்று பாடுகிறார்.

தேவர்கள் மலர்மாறிப் பொழிந்தனர். மன்னர்கள் மகிழ்ந்தனர். இராமன் புனிதன், உன்னதன், என்பதனாலேயே மலர்மாரி பொழிந்தனர் என்று கூறும் கம்பன் இராமன் சாதாரண சீதாராமனாகவே இதனை ஏற்றுக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

சீதையின்றி இராமன் வருந்துதல்

சீதையைக் காணாமல் இராமன் இரவு வந்ததும் உறங்குகிறான். சீதையை உடன் இணைந்து உறங்குவதாக நினைத்து எழுந்து பார்கிறான் சீதை இல்லை. சீதையைத் தேடுகிறான், பெண்ணே நீதான் எங்கே போனாயோ? முப்பது நாழிகையும் பேதலித்துப் பித்துப்பிடித்தவன் போல் அரற்றுகிறான்.

"இடம்படு மானத் துன்பம், இருள்தர, எண்ணின் தீர்ந்தான்
விடம் பரந்தனையது ஆய வெண் நிலா வெதுப்ப, வீரன்,
படம் பரந்தனைய அல்குல், பால் பரந்தனைய இன் சொல்,
தடம் பெருங் கண்ணினாள்தன் தனிமையை நினையலுற்றான்"

இராமன் சாதாரண காதல், பாசம், காதல், துன்பம், ஏக்கம், இவற்றிற்கெல்லாம் கட்டுப்பட்டவன் என்று காட்டுகிறார். இதன் வாயிலாக, இராமனைச் சாதாரண மானிடனாகத்தான் படைத்துக் காட்டுகிறார்.

பரதனுக்கு அறிவுரை

அண்ணன் இராமன் காட்டிற்குச் சென்றுவிட்டான், தம்பி பரதன் நாட்டை ஆள வேண்டும் என்று சொன்னவுடன் தனக்குப் பாவம் வந்து சேரும் என்று பயந்து புலம்புகிறான். பரதன் தன் தாயைக் குறைக் கூறுகிறான். அப்பொழுது இராமன் பரதனை நோக்கி தாயை இகழ்தல் கூடாது, அவ்வாறு இகழ்ந்தால் பிரமன் இன்னொரு பிறவியை எடுக்க வைப்பான். மாதா, பிதா, குரு மனம் வாட நடப்பதால் பொல்லாங்கு

வரும் என பரதனை எச்சரிக்கும் இடத்தில் பாவம் வந்து சேருமே என்று பயந்த இராமனைக் கம்பனின் மானிட நிலையிலிருந்து ரசிக்க வேண்டும் என்பது புலனாகிறது.

கம்பன் மானிட நிலையிலிருந்தே இராமனைக் கொண்டு செல்கிறார். பரதனின் நிலையில் இராமனின் பாதறக் குறடை வாங்கித் தலையில் வைத்துக் கொண்டு தொழுது கொள்கிறான். பின் இராமனிடம் குறிப்பிட்ட ஆண்டுகள் முடிந்து ஒருநொடிப் பொழுதும் அயோத்தி வரத் தாமதித்தாலும் நெருப்பில் பாய்ந்து உயிர்விடுவேன் என்கிறான். அங்கிருந்த குகனும் அவ்வாறே கூறுகின்றான். மண்டலம் முழுமையும் ஓரடி கொண்ட மாதவன் மனம் பதைத்து உயிர்விடத் துணிந்த பரதன், குகன் இருவரையும் தழுவி ஈரேழு வருடம் கழித்து அரைநாழியில் வந்து விடுவேன் என்று இராமனைப் பதில் கூற வைத்திருக்கிறார் கம்பர். தாய் சொல்லைத் தட்டாத மையன் என்பதை சித்திரக்கூட மலையில் இருப்பது தக்கதன்று ஏனெனில் அயோத்தி எல்லையாகும், வன வாழ்க்கை இந்த இடத்தில் அமையாது, இதற்கு மேலும் ஆரணியத்துக்குள் நுழைய சீதையையும், இலக்குவனனையும் அழைத்துச் செல்கிறான். இவ்விடத்திலும் கம்பர் அன்னையின் சொல்லைத் தட்டாது மக்கள் வாழ இராமனின் மூலம் வலியுறுத்துகிறார். இராமனை மானுட மகனாகவே படைத்துக் காட்டுகிறார்.

சீதை மான் கேட்டல்

இராமன் சீதை- திருமணம் முடிந்து காட்டிற்கு வந்தபின் இருவரும் கொஞ்சிக் குலவுகின்றனர்; ஆடிப்பாடி மகிழ்கின்றனர். அப்பொழுது இராவணன் அனுப்பிய மாரீச மான் கபட வேடம் போட்டு குதித்துக் குதித்து சீதையை மயக்குகிறது. சீதையிடம் மட்டும் வந்து துள்ழி விளையாடுகிறது. மாரீச மானைக் கண்டு கொள்ளை இன்பம் கொண்டாள், விருப்புற்றாள். சீதைக் கேட்டதும் இராமன் சித்தப் பிரமைப் பிடித்தவன் போல நிற்கிறான். ஆசை மனைவி கேட்டுவிட்டாள், விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென எண்ணுகிறான். இங்குக் கம்பன் இராமனை மானுடனாகவே படைக்கிறார். எங்கெல்லாம் இராமனை மானுடனாகக் காட்டினாரோ? அங்கெல்லாம் கம்பன் தன் கற்பனைகளையும் மனித நிலையிலேயே குறிப்பிட்டுள்ளார். சீதை மானைத் தராவிட்டால் உயிர் விடுவேன் என்றதன் பின் நிற்பானா? இல்லைக் கம்பர்தான் நிறுத்துவாரா? இராமன் இலக்குவனிடம் கேட்கிறான், இலக்குவன் இராமனிடம் இது மானன்று,

தாடகையின் மகன் இதனைப் பிடிக்கச் சென்றால் பெரும் துன்பம் வரும் என்கிறான்.

தம்பி சொல்லைக் காதில் வாங்கினான் இல்லை, ஏனெனில் கம்பர் இராமனை மானிடக் கணவனாக பதிவு செய்கிறார். இலக்குவனைப் பன்னகச் சாலையைப் பத்திரமாகப் பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டு மானைத் தேடிச் செல்கிறான். இங்கு கேசவன், மகா விஷ்ணு, திருமால், நரசிம்மர் என்றெல்லாம் அவதாரமெடுத்த ராமன் இங்கு சாதாரண மனைவியின் ஆசையை நிறைவேற்றும் கணவன், தமையன் சொல்லைத் தட்டிய அண்ணன் என்ற நிலையிலேயே கம்பர் படைத்துள்ளார். மாயமானை வதைத்த பிறகு தேடிவந்து இலக்குவனுடன் பன்னக சாலை வருகிறான். பன்னக சாலையே அடியோடு பெயர்க்கப்பட்டுள்ளது. இருவரும் கண்ணீர்மல்கக் கட்டிபிடித்து மோசம் வந்துவிட்டதே என்று அழுகிறார்கள். கம்பர் மனித சிந்தனையிலேயே இராமனைப் படைத்துள்ளார்.

இராமன் புலம்பல்

இராமன் மானைத் தேடிச் சென்றதனால் சீதையை இழக்கிறான், வருந்தித் துடிக்கிறான். அதோடு அஃறிணைகளைக் கண்டு புலம்புகிறான். 'கானக்குயில்களே, என் சீதையைக் கண்டீரோ? மாடப் புறாக்களே தேடக் கிடைக்காத என் ஆசைக் கட்டித் தேனையும் கண்டீரோ?, கூவிய கோழியே, சீவும் சடையுள்ள பொற்கொடியாள் எந்தன் சீதையைக் காட்டீரோ?' என்றெல்லாம் இராமனைக் கம்பர் புலம்ப விடுகிறார். ஏனெனில் மனித தர்மத்தை இராமன் முழுமையாகக் கடைப்பிடிப்பதாகவேக் காட்டுகிறார்.

"மயிலும் பெடையும் உடன் திரிய, மானும் கலையும் மருவி வர,
பயிலும் பிடியும் கட கரியும் வருவ, திரிவ, பார்க்கின்றான்;
குயிலும், கரும்பும், செழுந்தேனும், குழலும், யாழும், கொழும் பாகும்,
அயிலும், அமுதும், சுவை தீர்த்த மொழியைப் பிரிந்தான் அழியானோ?"

இராமன் சந்தியாவந்தனம் செய்ய இலக்குவன் வில்லேந்தி காவல் இருக்கிறான். சந்திரன் தோன்றியதும் சீதையின் நினைவு இராமனுக்கு வருகிறது. இந்திரத் தருவே, சானகியே நீ எங்கே இருக்கிறாய்? என்று புலம்பவிட்டிருக்கிறார் கம்பர். தென்றல் சுடுகிறது, இரவு முப்பது நாழியும் சீதை, சீதை என்று புலம்பி சிந்தைக் குழைகிறான் என ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியை மனிதனாகவே கம்பர் காட்டுகிறார்.

கம்பர் இராமனை நல்ல மகனாகக் , கணவனாக, மனிதனாக, சகோதரனாக, தவறைக் கண்டு கோப்படுபவனாக, வேற்றுமனை நாடாதவனாக படைப்பதே கம்பரின் நோக்கம். இராமனின் அவதாரமே இராவணன் என்னும் அசுரனை அழிப்பதற்காகத்தான். கம்பர் எதற்காகப் பிறந்தாலும் மனிதனாகத்தான், கம்பர் எதற்காகப் பிறந்தாலும் மனிதனாகத்தானே இராமன் பிறந்துள்ளான். இராமன் மனிதனானால் அன்பு, காதல், பாசம், ஏக்கம், கோபம் என்று எல்லா நிலைகளிலும் கம்பர் இராமனை மனிதனாகவேக் காட்டியுள்ளார். ஏனெனில் கம்பன் என்னும் மானிடம் மனுதர்மத்தை விரும்பியுள்ளார். மனிதன் திருந்தி வாழவும், ஒழுக்கம் கடைபிடிக்கவும் இராமனைக் காட்டியுள்ளார்.

பரதனும் இராமனும்

திருமிகு. பா.சுதா
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி,
பூண்டி.

கம்பராமாயணம் தமிழ்க் காப்பிய உலகில் தலை சிறந்தது. செல்வக்கேசவராய முதலியார், "தமிழிற்குக் கதியாவார் இருவர், ககரத்தைக் கம்பராகவும் திகரத்தைத் திருவள்ளுவராகவும் கொள்ளுக" என்பார். "உலகத்திலேயே வேறொரு நாட்டில் இவ்வளவு பழமையான கவிஞன் இருபதாம் நூற்றாண்டு மக்களுடைய இதயத்தை இப்படி ஆட்கொண்டதில்லை" என்பார். எஸ். மகாராஜன். இப்பெரும் புகழ்க் கொண்ட கம்பனின் வனப்புமிகு காப்பியப் பட்டறையில் வார்க்கப்பட்ட இராமனையும் பரதனையும் இக்கட்டுரையில் காணலாம்.

இராமன்

கம்பர், இராமனைத் திருமாலின் பூரண அவதாரம் என்ற நிலையிலேயே கொள்கிறார். அவதாரம் என்னும் போது இறைவன் இறங்கி வருதல் என்றே பொருள் கூறுவர், இரண்டு நோக்கங்களுக்காக இறைவன் இறங்கி வருகிறான். 1. அதருமத்தை அழித்து , தருமத்தை நிலை நிறுத்த வருகின்றான். 2. அடியவர்களுக்கு அருள மனித உருவில், இறங்கி வருகின்றான். தன்னைச் சரணடைந்தவர்களுக்கு வாழ்வளித்தான். அவதாரம் என்பதை மறந்து இராமாயணத்தைப் பயின்றாலும் ஓர் இலட்சிய இந்துவாக இராமனைக் கண்டு பாராட்ட முடியும். ஒரு சிறந்த மகனாக, சகோதரனாக, கணவனாக, அரசனாக, வீரனாக, தோழனாக, இன்னும் பல நிலைகளில் அவன் இலட்சிய ஆண்மகனாக விளங்குகிறான். இன்ப துன்ப அனுபவங்களின் போது சமதரிசனம் கைகூடப் பெற்ற ஒரு ஞானியாக விளங்குகிறான்.

பரதன்

பரதன் கைகேயியின் மைந்தன், திருமாலின் சுதர்சனம். அதாவது சக்கர அம்சமாய் தோன்றியவன். இராம பக்தன். ' ஆயிரம் இராமர்நின்கேழ் ஆவரோ தெரியின் அம்மா!" என்று குகனால் பாராட்டப்பட்டவன். வைஷ்ணவ சம்பிரதாயத்தில் இவனைப் 'பரதாழ்வார்' என்றே போற்றுகிறார்கள். உலகிலேயே உடன்பிறப்பின் எடுத்துக் காட்டாக விளங்கும் உத்தம பரதனையும், இராமனையும் நினைத்து,

"செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே - விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை ஆண்ட
பரதனையும் ராமனையும் பார்!"

என்று அதிவீரராமபாண்டியன் புகழ்ந்து பாடியதில் வியப்பில்லை யல்லவா? (சுக்ரீவன் வாலியையும் , விபீஷணன் இராவணனையும், அர்ச்சுனன் கர்ணனையும் கொல்வதற்குக் காரணமாயிருந்தனர் என்பதாம்) பரதனுடைய இணையற்ற இராம பக்தியையும் மற்றச் சகோதர்களிடத்துள்ள வாஞ்சையையும் மூன்று தாயாரிடத்துள்ள பாசத்தையும் நினைத்துப் பார்க்கும்போது பரதனிடத்திலேயே நாம் ஐக்கியமாகி விடுகிறோம். இராமாயணத்திலேயே சிறந்த பாத்திரம் பரதன் தான். சகோதரர்களுக்குள்ளேயே ஒப்புயர்வற்றவன் பரதன் தான் என்று நினைக்கவும் நாம் தயங்குவதில்லை.

பரதனும் இராமனும்

நன்மைக்கும் தீமைக்கும் பூசல் என்றால் எளிதில் தீர்க்கலாம். இயல்பான நலங்களுக்கு இடையே போட்டி என்றாலுங்கூடத் தீர்ப்பது எளிது. தன்னிகரில்லா இரு நன்மைகள் தம்முட் போராட்டம் என்றால் எதனை விலக்குவது? எதனை வெல்லச் செய்வது? இராமன் தந்தையின் வாய்மை காக்கப் பாடுபடுகிறான். தவக்கோலம் பூண்டு வனம் புகுகின்றான், பரதனோ அரசமுறை காக்க முனைகின்றான், தவவேடந் தாங்கி வனத்துக்கு வந்திருக்கின்றான். முறை எதுவாயினும் தந்தையை மதிக்கின்றான் இராமன். தந்தையினும் வழிவழி முறையை மதிக்கின்றான் பரதன். தந்தையின் செய்கை சரியன்று என்பது அவன் தெளிவான கருத்து. 'முழுதுலகு அளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும் வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் வந்தேன்' என்று குகனிடம் தந்தையின் தவற்றை வெளிப்படுத்துகின்றான் பரதன்.

"உந்தை தீமையும் உலகு றாதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்கமீண் டரசு செய்கெனாச்
சிந்தை யாவதும் தெரியக் கூறினோன்"

(அயோத்தியக் காண்டம் - திருவடிச்சூட்டு படலம், பா.103)

என்று இராமன் முன்னர் தன் உள்ளக் கருத்தை ஒளியாது கூறினான் பரதன். யார் செய்தால் நமக்கென்ன செய்தது அறமா என்று பார்ப்பதே

முறை என்பது பரதன் குறிக்கோள். கொற்றவனாயினும் குற்றம் குற்றமே என்ற பரதன் இராமாயண நக்கீரன். அவன் குற்றச்சாட்டுக்கு நேர்மையான மறுப்பு யார் கூறமுடியும்.

"தனைய ராயினர் தந்தை தாயரை
வினையின் நல்லதோர் இசையை வேய்தலோ
நினையல் ஓவிடா நெடிய வன்பழி
புனைத லோவைய புதல்வர் ஆதல்தான்". (மேலது . பா. 109)

புதல்வன் கடன் என்ன? தாய் தந்தைக்குப் புகழ் சூடுவதா? பழி புனைவதா? என்பது இராமன் மறுமொழி. முறை என்பது தனியாக ஒன்றில்லை. அரசன் ஏவியது எது அதுவே முறை என்பது அவன் குறிக்கோள். "தாய் வரங்கொளத் தந்தை ஏவலால் மேய நங்குலத் தருமம் மேவினேன் என்று தன் அறநெறியை இயம்புகின்றான் இராமன். தந்தை வரங்கொடுத்தது சரியா? பிழையா? என்பது இராமனுக்குக் கருத்தன்று. " நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கோர் நாயகமே" என்ற திருவாசகத்தின் படி. ஆராய்ச்சியின்றி அடி பணிவதே இராமநெறி. பரதநெறி சரியா? இராமநெறி சரியா? இருநெறிகளும் குழப்பம் அற்றவை. உலகிற்கு இன்றியமையாதவை. மேலும் நெறிகளின் சிறப்பு, அந்நெறிகளைப் பின்பற்றுவார் சிறப்பைப் பொறுத்தது. இராமாயணத்து நிகரற்ற நல்லவர் இருவர்க்கிடையே நெறிப்பூசலைக் காண்கின்றோம். ஒன்றொழித்து ஒன்றைச் சிறந்தது என்று சொல்ல முடியாது.

சொற்போர்

பரதனுக்கும் இராமனுக்கும் பலத்த சொற்போர் நிகழ்கின்றது. கற்பு நீங்கிய மகளிரைக் காட்டிலும் , பொறுமை நீங்கிய தவத்தைக் காட்டிலும், அருள் நீங்கிய அறத்தைக் காட்டிலும், முறை நீங்கிய அரசு கொடியது எனவும், அறத்தைக் கொன்று தின்றுவிட்டு அரசு ஆள்வேனா எனவும் சினக்கின்றான் பரதன். அரசு நின்னுடையது ஆள்க என்று இராமன் மொழிந்தபோது "என்னதாகில் யான் இன்று தந்தனென்; மன்ன போந்து நீ மகுடஞ்சூடு" என்று மடக்குகின்றான் பரதன். ஒருவர்க்கொருவர் விட்டுக் கொடுப்பதாக இல்லை. அண்ணன் சொல்லுக்கு மறுமொழி பேசக் கூடாதே என்று இக்கருத்தில் பரதன் அடங்கி இருப்பதாகவும் இல்லை. பரதன் துணிவைப் பார்த்த வசிட்டன் இராமனை நோக்கி "என் ஆணை; நீ திரும்பச் சென்று அரசாள்" என்று கட்டளை இட்டார். அண்ணன் வேண்டுகோளைத் தம்பி மறுக்கும் களம் இது.

முனிவர்களை காக்கப் பிறந்த இராமன், வசிட்டன் கட்டளையைப் புறக்கணிக்கும் களம் இது. "முன்னே பணித்த தாய்தந்தையரின் கட்டளையைத் தலைமேற்கொண்டு நிறைவேற்றுவதாக வந்தேன். நீரோ பின்வாங்கும்படி கட்டளை இடுகின்றீர். செய்யத் தக்கதைச் சொல்னின்" என இராமன் வசிட்டனையும் குற்றம்படப் பேசுகின்றான். யார் இப்போது யாருக்குச் சொல்வது? யார் சொல்லையும் எவரும் கேட்க முடியாத அறக்களம் இது.

"முனிவனும் உரைப்பதோர் முறைமை கண்டிலம்
இனியென இருந்தனன் இளைய மைந்தனும்
அனையதேல் ஆள்பவர் ஆள்க நாடுநான்
பனிபடர் காருடன் படர்தல் மெய்யென்றான்". (மேலது . பா.129)

இதுவரை முன்னிலையாகப் பேசிய பரதன் இப்போது முன்னிலைப் புற மொழியாகப் பேசத் தொடங்கினான். இதுதான் போக்கென்றால், நாடுகிடக்க; வேண்டுவார் அதனை ஆண்டு கொள்ளட்டும் நான் இராமனுடன் காட்டில் வாழ்வேன். இதுவே உறுதி என யாரும் அஞ்சும் முடிவுக்கு வந்தான்.

தேவர் வரவு

"தந்தை சொற்படி இராமன் வனஞ் செல்வான். அப்பதினான்கு ஆண்டும் அரசைக்காத்தல் உன் கடன் " என்ற வானொலி பிறந்தது . களத்திற்கு வழி ஏற்பட்டது. பரதன் உறுதி கேட்டு மனம் நெகிழ்ந்த இராமனுக்குப் புதிய துணிவு உண்டாயிற்று. " வானவர் உரைத்தலும் மறுக்கற் பாலதன்று" என்று விட்ட பேச்சைத் தொடங்குகின்றான் இராமன். வாய்மை காக்க நான் வனத்தில் இருப்பேன் என்று முன் பேசியது போல் பேசாது பரதன் துணிவையும் நெறியையும் விளங்கிக் கொண்டு "யான் உனை இரந்தனன்" என்று மன்றாடுகின்றான்; பரதனது மலர்த் தடக்கை பற்றி அணைக்கின்றான். இன்ன திடீர் மாறுபாட்டைத் தேவரைக் கொண்டு செய்விக்கின்றார் கம்பர்.

தீமையொடு தீமை போராடினும், தீமையோடு நன்மை போராடினும் கதை நடத்த வழியுண்டு. அளவான பண்புகள் தம்முள் முரண் ஏற்பட்டாலும் எளிதில் அம்முரண் கடக்க வழியுண்டு. இரு பாத்திரங்களுக்குத் தன்னேரில்லாத தலைமையளித்து அவை தம்மை மோதவிட்டால் அம்மோதுதலை ஈடுபட்டு விலக்குவார் நசுங்கிவிடுவர். முன்னரே வேறுபட்டவர்கள் முரணுவதில் காப்பிய எழுச்சி தோன்றாது. இராமனும் இராவணனும் இலக்குவனும் மேகநாதனும் சந்திக்கும்

களங்கள் எதிர்பார்க்கும் களங்களேயாகும். "உடன் பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா, உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்றபடி, மிக நெருங்கியவர்கள் தம்முள் வரும் போராட்டமே புலவன் ஈடுகட்டுதற்கு அரியவை; ஈடுகட்டி நாட்ட வேண்டியவை. சில சமயங்களில் புலவனுக்குத் தலைமைப் பாத்திரங்களில் பேரன்பு ஏற்பட்டு விடுகின்றது. அந்த அன்பு குன்றிவிடுமோ என்று அஞ்சித் தலைமைப் பாத்திரங்களை பெரு மோதுகையின்றிப் பார்த்துக் கொள்கின்றான். இத்தகைய சூழலில் காப்பியத்தில் அமுதம் என்னும் அல்லியற்கை பிறக்கின்றது. மக்களைக் கொண்டு காப்பியத்தை நடத்த முடியாதபோது புலவர் தேவர்களைப் புகுத்தி நட்த்துகின்றார். பரதனுக்கும் ராமனுக்கும் இடையேயான குணப் போராட்டத்தை நிறுத்த கம்பர் தேவர்களைப் பயன்படுத்தியுள்ளார்.

தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் கீர்த்தியான் - குகன்

திருமிகு. ச.முத்துச்செல்வி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், டி.ஆர்.பி.சி.சி.சி.இந்துக்கல்லூரி
பட்டாபிராம், சென்னை.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் தனது இராமகாதையில் இராமனிடம் அன்பு பூண்ட வேடர்த்தலைவனாகிய குகனைப் போற்றிப்புகழ்கின்ற சொற்களே இக்கட்டுரையின் தலைப்பாகும். கங்கைக்கரையிலே பிறந்த வேடனாகிய குகன், அயோத்தி நாட்டின் தவப்புதல்வனான இராமனால் உடன்பிறந்தான் எனப் போற்றபட்டான். இராமன் கோசல நாட்டின் இளவரசன்; வாராதுவந்த மாமணி; தந்தை சொல்மிக்க மந்திரமில்லையென அரசினை விடுத்தவன்; மாமுனிவர்க்கு உறவாகி வாழ்வதற்கென தம்பியோடும் தாரத்தோடும் வனத்திற்கு வந்தவன். இத்தகைய சிறப்புகளைக் கொண்ட இராமன், நிமிர்ந்த நேயம் பூண்டு தன்னைப் பின் தொடர்ந்த இலக்குவனோடும், தாயுரைக்கொண்டு தாதையாகிய தயரதன் உதவிய அரசாட்சியினைத் தீவினை என நீத்த பரதனோடும், பரதனைப் பின் தொடர்ந்து இராமன் தரித்த தவவேடமே தானும் பூண்ட சத்ருக்கனனோடும் இணையாக வைத்துப் போற்றியவன் எவ்வாறு இருந்தல் வேண்டுமெனில், அத்தகையவன் தாரசு போல நடுவுநிலை தவறாத சான்றோர்கள் தனது சிந்தையிலும் தலையிலும் வைத்துப் போற்றும் புகழுடையவனாக இருத்தல் வேண்டும். குகன் அத்தகையவன் ஆவான்.

குகனின் தோற்றம்

குகனின் தோற்றத்தைக் கம்பர் குகப்படலத்திலும் கங்கைகாண் படலத்திலும் பாடியுள்ளார். குகன் தோற்றமானது கண்டார் அஞ்சி நடுநடுங்கும் வகையது. அவன் குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலை உடையவன். அவன் நகையானது நெருப்பை உமிழ்கின்ற தன்மையுடையது. புருவமானது கோபத்தால் நெறித்தலால் போர் வில் போன்று தோற்றமளிக்கிறது. கையில் மூன்று முனைகளையுடைய சூலாயுதத்தினைப் பிடித்த காலன் நேரில் வந்ததைப் போன்று இருக்கின்றான். இடுப்பில் வாளைக் கட்டியுள்ளான். தடித்த உதடுகளைக் கொண்டிருக்கின்றான். வெட்டிய மொழியினைப் பேசுகின்றான். காயும் வில்லினைக் கையில் ஏந்திய வில் வித்தைக் கல்வியைக் கற்றவன். கல் திரள் போன்ற தோளினைக் கொண்டவன். கரிய காழம் என்ற ஆடையை அணிந்த தொடைகளையுடையவன்.

இரத்தக் கறைபடிந்த ஒளிவீசுகின்ற வாளையுடையவன். நஞ்சுடைய நாகமும் நடுங்குகின்ற பார்வையையுடையவன். புலால் நாற்றம் வீசுகின்ற வாயினையுடையவன். பிறரிடம் சினனில்லாமல் பேசுகின்ற பொழுதிலும் நெருப்புப்பொறி வெளிப்பட அதிர்ந்து பேசும் தன்மையையுடையவன். இவ்வாறெல்லாம் தோற்றமளிப்பவன் தகவுடையோர் சென்னியிலும் சிந்தையிலும் வீற்றிருக்கும் கீர்த்தியுடைவன் ஆனது எவ்வாறு?

"புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பண்பில வர்க்கு" - (திருக்குறள் - 79)

உடம்பின் உறுப்புகளில் உள்ளமும் ஒன்று. அதில் அன்பு இல்லாதவர்க்கு உடம்பின் வெளிஉறுப்பு அழகாக அமைந்து என்ன பயன் என்கிறார் வள்ளுவர். குகன் புற உறுப்புகள் அழகின்றி கண்டோர் அஞ்சி நடுங்கும் வண்ணம் இருந்தாலும் அவனது அகத்துறுப்பாகிய உள்ளத்தில் இராமன்பால் கரைகாணாத காதலும், எம்பெருமான் பின் பிறந்தோர் இழைப்பரோ பிழை என்று எண்ணி பரதனின் நிலையினை தென்கரையிலிருந்து கண்டவுடனே அவன்பால் அன்புகொண்டு அவனைக் காணச் சென்ற பண்பிலும், பரதன் தான் வந்த நோக்கம் தமையனை மன்னாக அழைத்துச் செல்லவே என்று கூறியதைக் கேட்டவுடன் உவகைப் பொங்க பரதனின் சேவடியில் கைகளைப் பூட்டிய கையுடன் பொய்யில் உள்ளத்தானாக ஆயிரம் இராமர்நின் கேழ் ஆவரோ தெரியின் அம்மா என்று விம்முகின்ற மாட்சியிலும் குகனின் உள்ளத்து அழகே பெரிதும் வெளிப்படுகின்றது.

தெரிந்து தெளிந்தவன்

இராமன்மேல் கரைகாணாத காதலுடன் இராமனைக்காண வருகின்ற குகன் தெரிந்து தெளிந்தவனாக வருகின்றான்.

"யான் எனது என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்" - (திருக்குறள் 346)

என்ற குறட்பாவிற்கு ஏற்ப யான் எனது என்ற செருக்கினை விடுத்து வருகின்றான். எவ்வாறெனின், தான் வேடர்த்தலைவன், சிருங்கிபேரம் என்னும் ஊரின் மன்னன் என்ற நினைவு ஏதுமின்றி எளியனாக அடியனாக வந்து நின்று உரைக்கின்றான் அதனைக் கம்பர்,

"நின்றான் நெஞ்சி நிரம்புறும் அன்பால்
இன்றே நின்பணி செய்திட இறைவா
நன்றே வந்தனன் நாய் அடியேன் யான்
என்றே கூறினன் எயினரின் இறையோன்" (குகப்படலம்-11)

என்கிறார். குகன் தனது உற்றார் உறவினரை விடுத்துத் தனியாக வருகின்றான். தனியே வந்த காரணம் யாதெனின் இராமன் தனது தோற்றத்தைக் கண்டு தான் படையுடன் வந்துள்ளதாக தவறுதலாக எண்ணிவிடக்கூடாது என்பதே ஆகும்.

"நாநலம் என்னும் நலன் உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று" (திருக்குறள் 641)

நாவன்மையே நலம்தரும் செல்வம். மற்ற எந்த செல்வங்களைவிட தனிச் சிறப்புடையது நாவன்மையே ஆகும். குகன் நாவன்மையுடையவன் . தான் இராமனிடம் பணிசெய்ய வந்தவன் என்பதை அறிவிப்பதற்காக இராமன் தங்கியிருந்த தவச்சாலையின் வாயிலில் நின்று நின் பணி செய்ய வந்த நாய் அடியேன் நான் என்று கூவுகின்றான். இலக்குவன் வந்து யார் எனவினவும் பொழுதும் "நாவாய் வேட்டுவன் நாய் அடியேன்" என்கிறான். இந்த தெரிந்து தெளிந்த பண்பே குகனை தகவுடையோர் சிந்தையிலும் சென்னியிலும் வைத்துப் போற்றும் புகழைத் தந்தது.

தீராக் காதலன்

இராமன் தன்னுடன் குகனை ஒரு நாள் மட்டுமே தங்கியிருக்க அனுமதி கொடுக்கின்றான். இவ்விடத்தில் குகனைப் போற்றி இராமன் கூற்றாகக் கம்பர்,

"சீதையை நோக்கி தம்பி திருமுகம் நோக்கித் தீராக்
காதலன் ஆகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்"
(குகப்படலம்-19)

என்கிறார். சீதையும் இராமனும் நாணற்படுக்கையில் படுத்து இரவைக்களித்தது கண்டு இலக்குவனும் பரதனும் அடைந்த துன்பத்தையே குகனும் அடைந்து கண்கள் அருவியென நீர்ச்சொரிய நின்றான்.

இராமன் கானகம் செல்கையில் பிரிய மனமின்றி நின்ற குகனிடம்,

"என்னுயிர் அனையாய் நீ இளவல் உன் இளையோன் இந்
நன்னுதல் அவள் நின்கேள் நழிர் கடல் நிலமெல்லாம்
உன்னுடையது நான் உன் தொழில் உரிமையின் உள்ளேன்"
(குகப்படலம்-46)

என்கிறான். இராமன் குகனிடம் நீ என் உயிரைப் போன்றவன். என் தம்பி உன் இளவல், என் மனைவியாகிய சீதை உனக்கு கொழுந்தி. நான் உன் ஏவலுக்குக் கட்டுப்படும் உரிமையுள்ளவன் என்கிறான்.

"நூற்றாண்டு பழகினும் மூர்க்கர்க் கேண்மை
நீர்க்குள் பாசிப் போல் வேர்க் கொள்ளாதே
ஒருநாள் பழகினும் பெரியோர்க் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே"

என்ற நறுந்தொகைக்கேற்ப ஒருநாள் மட்டுமே தன்னுடன் இருந்த குகன் குணக்குன்றாகத் திகழ்ந்ததினால் நான் உன் ஏவலுக்குக் கட்டுப்படும் உரிமையுள்ளவன் என்கிறான் இராமன். இவ்வாறு இராமனே கூறுவதால் குகன் சான்றோர்கள் போற்றும் புகழுடையவனே ஆவான்.

மதிநுட்பம்

இராமனையும் பரதனையும் குகன் காணச் செல்கின்ற இரு இடங்களிலும் குகனின் மதிநுட்பம் தெள்ளத்தெளிவாக புலப்படுகின்றன. இரு இடங்களிலும் குகன் தனது சுற்றத்தாரையும், படையினையும் விடுத்துத் தனியாகவே செல்கின்றான். ஏனெனில் அவன் தோற்றமோ அஞ்சி நடுங்கும் படியானது. அவன் சுற்றத்தோடும் படையோடும் சென்றால் அவன் நமது எதிரியோ நம்மைத் தாக்க வருகிறானோ என்று எண்ணிவிடக்கூடுமல்லவா? முதல் கோணல் முற்றும் கோணலாகி விடக்கூடாது என்றே,

"சுற்றம் அப்புறம் நிற்கச் சுடுகணை
வில்துறந்து அரைவீக்கிய வாள் ஒழிந்து
அற்ற நீத்த மனத்தினன்: அன்பினை:
நற்றவப்பள்ளி வாயிலை நண்ணினன்". (குகப்படலம்-10)

இராமனிடமாவது குகனுக்கு கரைகாணாத காதல இருந்தது. எனவே தன்னைத் தவறாக எண்ணுதல் கூடாது என்ற எண்ணமெனில், பரதனோ இராமன் மீது படையெடுத்து வந்துள்ளான் என்ற சினம் இருந்த பொழுதும்

" ----- குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்கள் நெறிஎனத்
தன் துறை நாவாயில் ஒரு தனியே தான் வந்தான்"-
(கங்கை காண்படலம்-31)

இவ்விரு காட்சிகளும் குகன் சமாதானத்தை நாடி வருபவனே என்பதையும் மதிநுட்பம் உடையவனும் என்பதையும் உணர்த்துகின்றன.

சான்றாண்மையில்,

"கடன் என்ப நல்லவை எல்லாம் கடன் அறிந்து
சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு (திருக்குறள் 981)

தங்களுடைய கடமைகளை அறிந்து, நல்ல குணங்களுடன் வாழ்பவருக்கு நல்லகுணங்கள் எல்லாமே இயல்பான கடமைகளாகவே இருக்கும் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. குகனும் நற்குணத்தவனாகத் தனது கடமையினை அறிந்து வாழ்பவன். அதனாலேயே இராமன்மேல் படையெடுத்து வந்துள்ளானோ என்று எண்ணிய பரதனின் தோற்றத்தைக் கண்டு எம்பிரான் பின் பிறந்தார் இழைப்பரோ பிழை என்று எண்ணி பரதனைக் காணச் செல்கிறான். பரதனும் குகனும் சந்தித்த காட்சியைக் கம்பர்

"வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலர் இருந்த
அந்தணனும் தலை வணங்கும் அவனும் அடி வீழ்ந்தான்
தந்தையினும் களிக்கூரத் தழுவினான் தகவுடையார்
சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் கீர்த்தியான்"-

- கங்கை காண்படலம்-32

என்கிறார். தனக்கு எதிரே வந்து நின்ற பரதனை குகன் மரியாதை நித்தமாகவே வணங்குகின்றான். இராமன் சீதையை உனது கொழுந்தி என்று உறவுமுறை கூறியதால் குகன் இராமனின் தமையன் ஆகின்றான். இளையவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்குதல் முறையன்று என்றெண்ணித் தொழுதனன். பரதனோ குகனை அவனது அடிகளில் வீழ்ந்து வணங்கினான். தனது அடியில் வீழ்ந்து வணங்கியவனை குகன் தழுவிக்கொண்டான். தழுவிய பொழுதும் தமையன் தந்தையின் கடமையினை உடையவன் என்பதை உணர்த்தவே கம்பரும் குகன் தந்தை தனது தனையனைத் தழுவும் பொழுதடையும் மகிழ்ச்சி-யினும் மிக்கானாய்த் தழுவினான். சான்றாண்மைக் குணமான தனது கடமைகளை இயல்பாய்ச் செய்யும் குணத்தாலே குகன் நடுநிலைத் தவறாத சான்றோர்கள் மனதிலும், தலையிலும் வைத்துப் போற்றப்படும் புகழுடையவன் ஆவான்.

தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் கீர்த்தியான்

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால்பு ஊவிய தூண்- திருக்குறள் 983

அன்புடன் இருப்பது பழிபாவங்களுக்கு நாணுவது, உதவிசெய்வது கருணை காட்டுவது உண்மை பேசுவது இவையைந்தும் நல்லகுணங்கள் என்னும் பாரத்தைத் தாங்கி நிற்கின்ற தூண்கள் என்கிறார் வள்ளுவர். குகனும் இராமனிடம் அளவுகடந்த அன்புடையவனாகவும், 'பாவமும் நின்ற பெரும்பழியும் நண்போடும் ஏவமும் என்பவை மண்ணுலகாள்பவர் எண்ணாரோ' என ஆதங்கப் படுனிடத்தில் பழிபாவங்களுக்கு நாணுபவனாகவும், இராமனும் பரதனும் கங்கை-யினைக் கடக்க உதவி செய்பவனாகவும், பரதனின் தோற்றத்தினைக் கண்டு கலங்குனிடத்திலும் இராமன் நாணற்புல் படுக்கையில் இரவைக் களிப்பதைக் கண்டு கலங்கும் இடத்திலும் கருணை மிக்கானாகவும், பரதனின் மனதினை அறிந்தவுடன் பரதன்மேல் அன்பு கொண்டு புகழ்கின்ற நிலையில் பொய்யில் உள்ளத்தானாகவும் கம்பரால் புகழப்படுகின்றான். இத்தகைய நற்குணங்கள் கொண்ட குகனைக் கம்பர் தகவுடையோர் சிந்தையினும் சென்னியினும் வீற்றிருக்கும் கீர்த்தியான் எனப் புகழ்வது சாலப் பொருந்தும்.

கம்பன் காட்டும் குகன்

திருமிகு. ம.சின்னதுரை
முனைவர் பட்ட ஆய்வாளர், அ.வீ.வா.நி.ஸ்ரீபுஷ்பம் கல்லூரி,
பூண்டி.

கம்பராமாயணத்தில் பல நற்பண்புகளைப் பெற்று உயர்ந்த நிலையில் இருக்கும் கதைமாந்தர்கள் பலர். அப்பண்புகளின் குன்றென நிமிர்ந்து நிற்பவன் குகன். குகனுடைய அன்பு, பாசம், பக்தி, அடிமைத்திறம், வீரம் முதலிய பண்புகளில் அடங்கியுள்ள மானுடப்பண்பையும், தெய்விகப்பண்பையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

குகனின் தோற்றம்

குகன் முதன்முதலில் கங்கைப் படலத்தில் அறிமுகமாகிறான். ஆயிரம் மரக்கலங்களுக்குத் தலைவனும், போர்த்தொழிலில் வல்லவனும் கங்கை நதியில் நீண்டகாலமாகப் படகுவிடுபவனும், மாற்றாரைக் கடியவல்ல வில்லை உடையவனும் மலைபோன்ற தோள்களை உடையவனும் ஆகிய குகன் என கம்பர் குகனைப் பற்றி அறிமுகம் செய்கிறார். இதனை,

"ஆய காலையி னாயிர மம்பிக்கு
நாய கன்போர்க் குகனெனு நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடுந் தொன்மையான்
காயும் வில்லினன் கற்றிர டோளினான்"

என்ற பாடலால் அறியலாம். மேலும், குகெனெனு நாமத்தான் (28), துடியன் நாயினன் அடியன் நிறத்தினான் ஈட்டினான் (29), படையினன் அம்பன் நாதன் (30), குறங்கினன் நெடுமையினான் தோலன் வாலினான் (31), கவடியன் கழலினான் புருவத்தான் (32), முன்கையான் கல்லினான் மேனியான் (33), வாழினான் நோக்கினான், பேச்சினன் மருங்கினான் (34), முகத்தினான் நோக்குவான் குரலினான் (35), நகருறை வாழ்க்கையன் (36) என குகனது உருவஅமைப்பு வீரம், தொழில் முதலியவற்றைக் கம்பர் குறிப்பதாகக் கூறுவர்.

குகனின் பக்தி

குகன் தேனும் மீனும் எடுத்துக்கொண்டு இராமபிரான் இருக்குமிடம் தேடிவந்து சுற்றத்தாரை வெளியில் நிறுத்தித் தான் மட்டும்

இராமன் இருக்கும் தவச்சாலைக்கருகில் வந்து நின்று 'நாய்போற் கடைப்பட்டவனாகிய அடியவனாகிய நான் உனது கட்டளையைச் செய்யக் காத்திருக்கிறேன்' எனக் கூறினான். இதனைக் கம்பர்,

"இன்றே நின்பணி செய்திட விறைவா
நன்றே வந்தன னாயடி யேன்யான்"

என்ற பாடல் வரிகள் மூலம் குகன் கூறுவதாகச் சுட்டியுள்ளார். உடனே,

"இலக்குவன், நீ யார் என குகனை வினவ, நாய்போல அடிமைப் பட்டவனாகிய யான் நாவாய் வேட்டுவன், நான் தேவரீரது திருவடிகளைச் சேவிக்க வந்தேன்" எனக் கூறுகிறான்.

இவ்வாறு வெளிப்படும் குகனது கூற்றுகளிலிருந்து, குகன் இராமன் மேல் மிகுந்த பக்தி கொண்டவன், இராமனிடம் அடிமைத்திறம் பூண வந்தவன், இராமனது திருவடியை வணங்க வந்தவன், இராமன்மேல் தீராக் காதல் உடையவன் என்பதை அறிய முடிகிறது.

தாயினும் நல்லவன்

குகன் வந்திருப்பதை இராமனிடம் கூறச்சென்ற இலக்குவன், உள்ளம் தூயவனும், தாயினும் நல்லவனும், கங்கை நதியில் செல்லும் பல மரக்கலங்களுக்குத் தலைவனும் ஆகிய குகன் உம்மைக் காண சுற்றத்தாரோடும் வந்திருக்கிறான் எனக் கூறினான். குகனைப் பார்த்த மாத்திரத்திலேயே அவனுடைய உள்ளத் தூய்மையையும் தாய்மைக் குணத்தையும் இலக்குவன் அறிந்து அதை இராமனிடமும் கூறுகிறான் என்றால், குகனது உள்ளத் தூய்மை மானுடப் பண்பையும், தாயினும் சிறந்த குணம் அவனது தெய்விகப் பண்பையும் குறிக்கிறது எனலாம்.

உள்ளம் தூயவன் என்பதை இலக்குவன், இலக்குவனுக்கும் இராமனுக்கும் வேறுபாடு தெரியாமல் 'நின்கழல் சேவிக்க வந்தனென்,

நாவாய் வேட்டுவன், நாயடியேன்' என்று கூறியதால் உள்ளம் தூயவன் என்ற முடிவுக்கு வந்தான்' என்பர். (அ.ச. ஞானசம்பந்தன், இராமன் பன்முக நோக்கில், பக். 219, 220)

தெய்விகப் பண்பைப் பற்றிக் கூறும்போது, இறைவனை, தாயினும் சிறந்த அன்புடையவனாக, அருளுடையவனாகச் சான்றோர் கூறுவர். இதனை, பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து (மாணிக்கவாசகர், திருவாசகம், பிடித்தபத்து பாடல் எண். 9) என மாணிக்கவாசகரும், 'பெற்ற தாயினும் ஆயினச் செய்யும்' (திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி,

முதற்பத்து, 1ஆம் திருமொழி, பா.எண். 9) எனத் திருமங்கை ஆழ்வாரும் கூறியிருப்பது இங்கு நினையத்தக்கது.

அதுபோல் இராமனைக் காண வந்த குகன் தேனையும் மீனையும் கொண்டு வந்தது இராமன் பசித்திருப்பானோ? என்ற அவனது தாய்மைக் குணத்தைக் காட்டுகிறது. ஆதலின் தாயின் நல்லான் என்ற முடிவுக்கு வந்தான் இலக்குவன் என்பர். இதிலிருந்து குகனது பண்பு நலனை நாம் அறிய முடிகிறது.

அன்பின் உயர்வும் ஆழமும்

குகன் இராமனுக்காக கொணர்ந்த பொருட்களை வைத்து அவனது அன்பு, தேன் இருக்கக்கூடிய மலைபோல உயர்வானது, மீன் இருக்கக்கூடிய ஆழமான நீர்நிலைப்போல ஆழமானது என்று பொருள்கொள்ளத் தோன்றுகிறது.

இவ்வாறு தாய்மைக் குணத்தோடு குகன் கொண்டு வந்த பொருட்களை முனிவர்கள் சூழ்ந்திருக்கும் நிலையில் இராமன், 'உள்ளத்து அன்பினால் நீ கொணர்ந்த இவை அமிழ்தினும் இனியது என்றும், பவித்திரமானது என்றும், எம்மனோர்க்கும் உரியன என்றும் கூறி அதை உண்டதாக நீ வைத்துக்கொள்ளலாம் என்றும் கூறுகிறான். இதனைக் கம்பநாடர்,

"அரியதா முவப்ப வுள்ளத் தன்பினா லமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த வென்றா லமிழ்தினுஞ் சீர்த்தவன்றே
பரிவினிற் றழீஇய வென்னிற் பவித்திர மெம்ம னோர்க்கும்
உரியன வினிதி னாமு முண்டெனா மன்றோ வென்றான்"

என்ற பாடலில் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து குகனது அன்பின் உயர்வையும், ஆழத்தையும் இராமபிரான் அதை ஏற்றதையும் அறிய முடிகிறது.

யாதினும் இனிய நண்பன்

குகன் கொணர்ந்த பொருட்களை ஏற்ற இராமன், குகனிடம், 'நீ உன் இருப்பிடம் சேர்ந்து, நாளை நாவாயுடன் வருக' எனக் கூறினான். உடனே குகன், மணிமுடி தரித்து இருக்கும் உன் கோலத்தைக் காண முடியாது, மரவுரி தரித்து நீ இருப்பதைப் பார்த்த தீவினைக்காக என் கண்களைப் பிடுங்கி எறியாமல் இருக்கிற கள்வனாக இருக்கிறேன். ஆனால், உன்னைப் பிரியும் துணிவு இல்லை. என்னால் இயன்ற

அடிமை செய்வேன் என்றான். இவ்வாறு குகன் கூறியதைக் கேட்ட இராமன் சீதையையும் இலக்குவனையும் நோக்கி இவன் 'தீராக்காதலன்' என்று கூறினான். பிறகு குகனிடம் 'யாதினும் இனிய நண்ப' இன்று எம்மோடு இருப்பாயாக என்று செப்பினான். இதனைக் கம்பர்,

"கோதை விற்குரிசி லன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுக நோக்கித் தீராக்
காதல னாகுமென்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினு மினிய நண்ப விருத்தியீண் டெம்மொ டென்றான்"

என்ற பாடலால் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து இராமனது உள்ளத்தில் மிக உயர்ந்த இடத்தைக் குகன் பெற்றுவிட்டான் என்பதை அறிய முடிகிறது.

குகன் இராமனுக்குச் சகோதரனாதல்

இராமன் குகனிடம் ஓடம் கொண்டுவரச் சொன்னபோது, 'நீங்கள் எங்களுடைய நகரிலேயே தங்க வேண்டும்' என குகன் கூறினான். உங்களுக்கு உரிய அனைத்தும் இவ்விடத்தில் கிடைக்கும் என அவன் கூறினான். பின் ஒரு நாளேனும் எங்கள் வீட்டில் தங்கினால் அதுவே நாங்கள் பெற்ற பெரும்பேறு எனக் கூறினான். இதைக் கேட்ட இராமன், 'வனவாசம் முடிந்து நான் திரும்பி வருகையில் உன்னிடம் வருவேன்' எனக் கூறினான். சித்திரக்கூடத்திற்குச் செல்லும் வழி யாது என இராமன் கேட்க, 'எனக்கு இக்காட்டில் உள்ள அனைத்து வழிகளும் தெரியும். காய், கனி, கிழங்கு கொணர்ந்து தருவேன். என்னையாவது உடன் அழைத்துச் செல்க என குகன் வேண்டினான்.

இதைக் கேட்ட இராமன், 'குகனே! நீ என் உயிர் போன்றவன், என்

இளவல் உனக்குத் தம்பி, இந்தச் சீதை உனக்குத் தோழி' எனக் கூறினான். இதனை,

"அன்னவ னுரைகேளா வமலனு முரை நேர்வான்
என்னுயி ரனையாய் நீயிளவலு மிளையானிந்
நன்னுத லவணின்கே ணளிர்கட னிலமெல்லாம்
உன்னுடை யதுநானுன் றொழிலுரி மையினுள்ளேன்"

என்ற பாடலால் அறிய முடிகிறது. இக்கருத்தையே 'ஏழை ஏதலன் கீழ்மகன்' என்ற பாசுரத்தில் கம்பனுக்கு முன் வாழ்ந்த திருமங்கையாழ்வாரும் (திருமங்கையாழ்வார், பெரியதிருமொழி, ஐந்தாம்பத்து,

8ஆம் திருமொழி, பா.எண். 1) குறிப்பிட்டுள்ளார். குகனை இராமன் சகோதரனாக ஏற்றதை,

"முன்புளெ மொரு நால்வே முடிவுள தெனவுன்னா
அன்புள வினிநாமோ ரைவர்க ளுளரானோம்"

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம். 'இதுவரை நால்வராக இருந்த நாங்கள் உன்னோடு சேர்ந்து ஐவராகி விட்டோம்' என இராமன் கூறுவதிலிருந்து குகனை இராமன் உடன்பிறந்தவனாக ஏற்றுக்கொண்டதை உணர முடிகிறது.

மேலும், சுந்தர காண்ட காட்சிப்படலத்தில் சீதை இராமனுடன் காட்டில் வாழ்ந்த காலத்தில் நிகழ்ந்தவைகளை எண்ணிப் பார்க்கும்போது, குகனை இராமன் தோழனாகவும், உடன்பிறந்தவனாகவும் ஏற்று இலக்குவனை உன் தம்பியெனவும், சீதையாகிய தன்னை கொழுந்தி எனவும் கூறியதை நினைத்துப் பார்க்கிறாள். இதனை,

"ஆழநீர்க் கங்கை யம்பி கடாவிய
ஏழை வேடனுக் கெம்பிநின் றம்பிநீ
தோழன் மங்கை கொழுந்தி யெனச்சொன்ன
வாழி நண்பினை யுன்னி மயங்குவாள்"

என்ற பாடலால் அறிய முடிகிறது.

குகனது பெருங்குணம்

குகனது பெருங்குணமும், அவன் இராமன்மீது கொண்டுள்ள அன்பும், அவனது வீரமும் இராமனை அழைத்துச் செல்ல வந்த பரதனை இராமன் மேலுள்ள பாசத்தால் தவறாக நினைத்து அவனுடன் போர் செய்ய நினைக்கும்போது வெளிப்படுகிறது. பின்னர் உண்மை அறிந்து இராமனுக்குப் பின் பிறந்தார் தவறு இழைப்பரோ என எண்ணி தன் செயலுக்கு நாணி பரதனைவிழுந்து வணங்கினான். பரதனும் குகனது அன்பின் தன்மையை உணர்ந்து அவனை வீழ்ந்து வணங்கினான். இவற்றிலிருந்து குகன் இராமன்மீதுகொண்ட அளவில்லாத அன்பையும், செம்மையின் ஆணியான பரதனும் வணங்கத்தக்கவனாக குகன் விளங்கியமையையும் உணர முடிகிறது.

தாயினும் உயிர்க்கு நல்லான்

அனுமன் பரதன் தீப்பாய்வதைத் தடுக்க அயோத்தி செல்லும்போது, 'குகனிடம் சென்று இராமனது வருகையை அறிவித்துப் பின் சென்றான் எனவும், குகனும் அன்றே பரத்துவாசன் இருப்பிடத்திற்கே வந்து

இராமனை எதிர்கொண்டழைத்தான் எனவும் கூறுவர். குகன் இராமனிடம் தான் இலக்குவன்போல் உனக்கு அடிமைத்திறம் செய்யவில்லையே என வருந்த, நீ எனக்குப் பரதன் போன்றவன் என இராமன் கூறியதை,

"ஆயன பிறவும் பன்னி யழுங்குவான் தன்னையைய
நீயிவை யுரைப்ப தென்னே பரதனின் நீவேறுண்டோ"

என்ற பாடல் வரிகள் மூலம் அறிய முடிகிறது. சுக்ரீவன் முதலியோர்க்குக் குகனைப் பற்றிக் கூறும் இராமன், 'குகன் தாயினும் உயிர்க்கு நல்லான்' எனக் கூறுவதை,

"தொழுதுநின் றவனை நோக்கித் துணைவர்கள் தமையும் நோக்கி
முழுதுணர் கேள்வி மேலோன் மொழிகுவன் முழுநீர்க்கங்கை
தழுவிரு கரைக்கு நாதன் தாயினு முயிர்க்கு நல்லான்
வழுவிலா எயினர் வேந்தன் குகனெனும் வள்ள லென்பான்"

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது. இதிலிருந்து குகனின் தாயினும் சிறந்த தெய்விகப் பண்பு புலப்படுகிறது.

முடிவுரை

மேற்கண்ட கருத்துக்கள் வழி குகனது சீரிய மானுடப் பண்பும், தாயினும் சிறந்த தெய்விகப் பண்பும் வெளிப்படுகிறது. இராமன், சீதை, பரதன், இலக்குவன் முதலிய அனைவராலும் பாராட்டத்தக்க பண்புடையவனாக, அன்புடையவனாக குகன் திகழ்வதை அறிய முடிகிறது. இதனாலன்றோ, வைணவ உலகம் குகனுக்குப் 'பெருமாள்' என்ற அடைமொழி கொடுத்து, 'குகப்பெருமாள்' என பக்தியுடன் வணங்குகிறது.

கம்பனின் படைப்பில் குகன்

திருமிகு. கி.சிவபஞ்சநதம்
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், நாகூர் மாடர்ன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நாகூர்.

இராமாயணத்தில் அயோத்தி நாட்டு மன்னன் தசரதனுக்கு இராமன், லஷ்மணன், பரதன், சத்ருகனன் என்ற நான்கு மகன்கள். இராமனுக்கு முடிசூட்ட நினைத்தார் மன்னர். கைகேயி தோழி மந்தரை இராமன் முடிசூடுவதை விரும்பவில்லை. கைகேயின் மனத்தை மந்தரை வஞ்சக உரைகளால் மாற்றினாள். அதன் விளைவாய் இராமன் பதினான்கு ஆண்டுகள் காடு செல்கிறான். செல்லும் வழியில் அவனுக்கு பல உதவிகள் கிடைக்கின்றன. அதனுள் ஒன்று குகன் இராமனை சந்தித்தல்.

குகனின் தோற்றம்

ஆயிரம் படகுகளுக்குத் தலைவன், கங்கையாற்றுத் தோணித்துறைக்குத் உரிமையுடையவன் பகைவர்களை அழிக்கும் வில்லாற்றல் பெற்றவன், மலைபோன்ற திரண்ட தோள்களை உடையவன், துடியென்னும் பறைகளை உடையவன், வேட்டை நாய்களைக் கொண்டிருப்பவன், தோல் செருப்பை அணிந்த கால்களை உடையவன், இருள் போன்ற கரிய மேகக் கூட்டம் திரண்டு வந்தாற் போன்ற மிகுதியான படைபலம் உடையவன் என குகனின் தோற்றத்தை அறிமுகம் செய்கிறார் கம்பர்.

குகனின் பணிவு

"நின்றான் நெஞ்சின் நிரம்புறும் அன்பால்
இன்றே நின்பணி செய்திட இறைவா
நன்றே வந்தனன் நாயடி யேன்யான்
என்றே கூறினன் எயினரின் இறையோன்"

ராமன் வருவான் என்பதைத் தன்னுடைய ஆட்களால் முன்னாலேயே அறிந்த குகன் தன் பரிவாரங்களுடன் ராமனை தரிசிக்க வந்தான்.

இராமனைத் தன் கண்களால் கண்டு களித்தான், தனது இருள் போன்ற கறுத்த தலைமுடி மண்ணில் படுமாறு தரையில் விழுந்து வணங்கினான். பின் எழுந்து வணங்கினான். உடலை வளைத்து வாயைக் கைகளால் பொத்தி அடக்கமாக நின்றான். எவ்வுயிர்க்கும்

தலைவனே! நாயினும் தாழ்ந்த நான் தங்கட்குப் பணிவிடை செய்ய இன்று வந்துள்ளேன் என உரக்கக் கூறினான். இவ்வாறு அவனின் பணிவினை அழகாக வர்ணிக்கிறார் கம்பர்.

குகனின் விருந்தோம்பல்

"இருத்தி ஈண்டு என்னலோடும் இருந்திலன், எல்லை நீத்த
அருந்தியன், தேனும், மீனும் அமுதினுக்கு அமைவ தாகத்
திருத்தினன் கொணர்ந்தேன். என்கொல் திருவுளம் என்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான்"

குகனின் பணிவை கண்ட இராமன் மனம் மகிழ்ந்து 'இங்கே அமர்க' எனச் சொன்னதும் இராமனின் பெருமை கருதிய குகன் அமரவில்லை. இராமனை நோக்கி இந்தத்தேசம் உனதாகவே வைத்துக் கொள்வாய். அயோத்தி எப்படியோ அப்படியே இதுவும் உன்னுடையதாகும். இது என் பாக்கியம் எனக் கூறினான். அவனுடைய ஆட்களை பலவித உணவுகளையும், தேவரீர்க்கு நல்லுணவாக அமையும்படி "தேனையும், மீனையும் பக்குவப்படுத்திக் கொண்டு வந்தேன். இதனை ஏற்றுக் கொள்வது குறித்துத் தங்கள் கருத்துயாதே" என்றான். இராமன் முனிவர்களை நோக்கி புன்முறுவல் பூத்துச் சொல்லத் தொடங்கினான். அப்பனே உன் அன்பு எனக்குத் தெரியும். உன் விருந்தோம்பலை இங்கே பெற்றேன். அதற்கு மேல் நான் விரதத்தால் கட்டுப்பட்டு நிற்கிறேன். அமுதத்தை விட சிறந்தன இவை விரும்பி உண்டதற்கும் சமம் என்று கூறினான். இவ்வாறு வந்தோரை வரவேற்று உபசரித்து உணவளித்து மகிழ்வது தமிழரின் வாழ்வியல் பெருமை என்பதைக் குகன்வழி காட்டுகிறார்.

குகனின் வீரமும், பண்பாடும்

கங்கை எதிர்க்கரையில் என்றும் காணாத கோலாகலம். ஒரு பெரும் படை வந்து நதிக்கரையில் தங்கியிருப்பதாகத் தெரிந்தது. அதனை கண்ட குகன் வந்திருப்பது பரதன் என்றும் பெரும் படையைத் திரட்டி வந்திருக்கிறான்போலத் தோன்றுகிறது. திருவாத்தி மரக்கொடி ஆடுவது தெரிகிறது. அது அயோத்தி மன்னருடைய கொடி இப்போது இராமனின் பகைவன் பரதன். அக்கிரம வழியில் அரசாட்சியைப் பிடித்தது போதாது என்று இராமனை கொல்ல வந்திருக்கிறான். அதனை தடுத்து நிறுத்த வேண்டும். நமக்குச் சேர்ந்தவர்களை உடனே கூட்டி ஆயுதங்களோடு ஆயத்தமாவோம். இராமனை காப்போம் என்று குகன் கூறுவது அவனது வீரத்தைக் காட்டுகிறது.

அதே வேளையில், மரியாதைக்கு வேண்டிய பரிசுகளை எடுத்துக் கொண்டு குகன் ஒரு படகிலேறிப் பரதனைச் சந்திக்கச் சென்றான். சொல்லாமல் வந்து விட்டீர்களே ஆயினும் என் பொருளெல்லாம் உமது என்று பாவித்து என்ன வேண்டுமோ அதை உத்திரவிடுங்கள் உங்களையும், உங்கள் வீரர்களையும் உபசரிப்பது என் கடமை என்றான். இதிலிருந்து குகனின் பண்பாட்டு நாகரிகத்தை வெளிப்படுத்துகிறார்.

குகனின் களங்கமற்ற உள்ளம்

குகன் இராமனை நோக்கி இத்தவக் கோலத்தில் பார்த்த எனன்னிரு கண்களை எடுக்க முடியாத நிலையில் உள்ள கள்வன் நான், இந்த துயரத்தோடு உங்களை தனியாக விட்டு இருப்பிடம் செல்ல மாட்டேன் உங்களுக்கு வேண்டிய தொண்டினை செய்வேன் என்றான்.

மரத்தடியில் இராமனும், சீதையும் தங்கினார்கள். இலக்குவனிடம் குகன் என்னுடைய ஆட்கள் மிகக் கவனமாகக் காவலிருக்கிறார்கள். இராமனைப் பற்றி கவலையோ பயமோ வேண்டாம் என்றான். அதனைக் கேட்ட இலக்குவன் குகனே எனக்குத் தூக்கம் வரவில்லை. அதோ சீதை ஜனகனின் மகள், தசரதனின் மருமகள், தரையில் படுத்திருக்கிறாள். மூன்று உலகை ஆளும் வல்லமை பெற்ற இராமன் புல்தரையில் படுத்துக் கிடக்கிறான். அயோத்தி நகரம் பிழைத்திருக்குமா என் தந்தை உயிரோடு இருப்பாரா என்றெல்லாம் கூறக் கேட்ட குகன் தானும் கண்ணீர் விட்டு அழுகிறான். அவனது களங்கமற்ற உள்ளத்தை புலப்படுத்துகிறார் கம்பர்.

ஐவர்கள் ஒருவரில் குகன்

"துன்புளதெனின் அன்றோ சுகமுளது அதுவன்றிப்
பின்புற திடைமன்னும் பிரிவுளதென உன்னேல்
முன்புளெம் ஒருநால்வேம் முடிவுள தென உன்னா
அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளராணோம்"

கங்கையின் ஆற்றைக் கடந்து இராமனை, இலக்குவனை, சீதையை இறக்கிவிட்ட குகன் மூவரையும் தனியே விட்டு பிரிந்து செல்ல மனமின்றித் தவித்தான். இதனைக் கண்ட இராமன் துன்பம் உண்டாயின் அதனையடுத்து இன்பமும் தோன்றுவது இயற்கை. இந்த பிரிவு நிரந்தரமல்ல. அதனை நினைத்து வருந்த வேண்டா. முன்னர், நாங்கள் உடன்பிறந்தோர் நால்வராய் இருந்தோம், விரிந்த அன்பினால் இனி உன்னோடு ஐவரானோம் என்று கூறினான். இவ்வாறு குகனையும் தன் உடன்பிறந்தவராக கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு"

என்ற குறள் ஒரு நூலினைக் கற்கும் போது அந்நூல் எவ்வளவு இன்பம் தருகிறதோ அதுபோல் நண்பர் இருவர் பழகப்பழக இன்பம் தருவது நல்ல நட்பாகும். இங்கே குகனின் நட்பும் மேன்மையடைகிறது.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்"

என்கிறார், வள்ளுவர். அந்த அன்பு பெற்றோர், உடன்பிறந்தோர், நண்பர், பெரியோர், இறைவர் எனப் பலரிடம் பாய்ந்து பிரிந்து சென்று பிணைக்கும் பெரும் சக்தியினை உடையது. இந்த உண்மையை. குகன் இராமனிடம் கொண்ட பேரன்பின் மூலம் அறியலாம். இவ்வாறு கங்கை வேடன் குகன் கைம்மாறு கருதாத அன்பு காட்டியவன். கூடும் அன்பினில் கும்பிடுதல் தம் கடன் என்றவன். சான்றோர் போற்றும் இந்த அன்புநெறியே சாலச்சிறந்தது ஆகும்.

கம்பன் - பாத்திரம் சுவைசெய் பாவலன்

முனைவர் ம.புவனேஸ்வரி
தமிழ்த்துறை உதவிப்பேராசியர், ஸ்ரீ.கா.சு.சு.கலைக்கல்லூரி,
திருப்பனந்தாள்.

கம்பராமாயணமும் திருக்குறளும் தமிழன்னை பெற்றுள்ள தனிச்சிறப்பு வாய்ந்த அணிகலன்களாகும். அவற்றுள்ளும் தொன்றுதொட்டு இதிகாசங்களுள் ஒன்றாக மக்களிடையே வழங்கி வந்த ஒரு கருப்பொருளை மையமாகக் கொண்டு மிகப்பெருங் காப்பியமாக வடித்த பெருமை கவிச்சக்கரவர்த்தியையே சாரும்; காப்பியம் செய்யும் மொழிக்குரிய பண்பாட்டின் கட்டுக்குலையாமல் ஆங்காங்கே பண்பாட்டின் பெருமை மிளிரும்வண்ணம் காப்பியம் முழுவதையும் படைத்துக் காட்டிய கம்பரின் திறன் என்றுமே வியப்புக்குரியதாகும். காப்பியத்தில் இடம்பெறும் பாத்திரங்களின் தனித்தன்மையைக் கதைப்போக்கில் நுட்பமாகப் புலப்படுத்துவதில் கம்பருக்கு எவருமே ஒப்பாக மாட்டார்கள் எனலாம். நவில்தொறும் நூல் நயம் பயப்பதைப்போல கம்பரது பாத்திரப் படைப்புகள் படிப்போரது நுகர்திறனுக்கேற்ப புதுப்புது நயங்களை அழிப்பனவாகவும் சிந்தனையைத் தூண்டுவனவாகவும் அமைந்துள்ளன. அவ்வகையில் கம்பராமாயணப் பாத்திரமான குகனைப் பற்றிப் பல்வேறு ஆய்வுகள் தோன்றியிருப்பினும் மேலும் சிறிது சிந்தித்தல் அறிவுக்கு விருந்தாகும்.

குகனின் புறத்தோற்றமும் அகத்தோற்றமும்

நெடுங்காலமாகக் கங்கையாற்றில் நாவாய் விடக்கூடியவன் குகன்; ஆயிரம் படகுகளுக்கு உரிமை உடைய வேடர் தலைவன். கங்கைக்கு அருகிலமைந்த சிருங்கிபேரம் என்னும் நகரில் வாழ்பவன். கல் போன்ற திரண்ட தோள்களையும் எண்ணெய் உண்ட இருண்ட நிறத்தையும் உடையவன். கொம்பு, துத்திரி, பேரிகை முதலிய பல்வேறு படைகளை உடையவன; நச்சரவைப் போன்ற நடுங்கத்தக்க பார்வையை உடையவன் காட்டில் வாழும் முரட்டுத்தன்மை வாய்ந்த வீரர் தலைவனான குகனை அறிமுகப்படுத்தும்பொழுதே கம்பர்,

"போர்க் குகன் எனும் நாமத்தான்" (கம்ப - 1953)

என்றே சுட்டியுள்ளார். மேலும்,

"சீற்றம் இன்றியும் தீ எழ நோக்குவான்
"கூற்றம் அஞ்சக் குமுறும் குரலினான்" (கம்ப - 1960)

என்று அவனது தோற்றத்தை நாகரிகமற்ற காட்டுவாசியாகவே காட்சிப்படுத்தியுள்ளார். புறத்தே இவ்வாறு காணப்பட்டாலும் குகன் பலாவின் சுளையைப் போல குற்றம் நீக்கிய மனத்தினனாகவும் அன்பு நிறைந்த அகத்தினானாகவும் விளங்கினான். அத்தகைய குகன் அயோத்தியின் இளவரசனான இராமனைப்பற்றி அறிந்துள்ளான். இராமன் காட்டிற்கு வந்துள்ளமையை அறிந்ததும் அவனைக் காண ஆர்வத்துடன் சென்றான்.

குகனின் நாகரிகம்

வேடர் தலைவனாகக் குகன் இருப்பினும் இராமனைக் காணச் சென்றபோது தன்னுடன் வந்த சுற்றத்தினரை எல்லாம் புறத்தே நிற்கச் சொல்லியதுடன் தனது வில், வாள் முதலிய கருவிகளை நீக்கிவிட்டுச் சென்றான்.

"சுற்றம் அப் புறம்நிற்க, சுடு கணை
வில் துறந்து, அரை ளிக்கிய வாள் ஒழித்து
அற்றம் நீத்த மனத்தினன் அன்பினன்
நல்தவப் பள்ழி வாயிலை நண்ணினான்" (கம்ப - 1962)

இச்செயல் அவனது நாகரிகத்தைப் புலப்படுத்துவதாகும். மேலும் தன்னை இலக்குவனிடம் அறிமுகப்படுத்திக் கொள்ளும் போது, தன்னை வேடர் தலைவன் என்று கூறாமல் நாவாய் ஓட்டுகின்ற வேட்டுவன் எனவும் நாய் போன்று அடிமைத் திறம் உடையவன் என்றும் இராமன் திருவடிகளைத் தொழுவதற்கு வந்ததாகவும் தன்னடக்கத்துடன் தெரிவிக்கின்றான். குகனது பேச்சும் நடத்தையுமே இலக்குவனுக்கு அவனது உள்ளத்தை உணரச் செய்தன. எனவே தான் இலக்குவன் இராமனிடம்,

"..................... உள்ளம் தூயவன் தாயின் நல்லான்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க்கு இறை, குகன் ஒருவன்" (கம்ப - 1964)

என்று குகனைப் பற்றிக் குறிப்பிட்டான்.

ஒருவரைக் காணச் செல்லும்போது கையுறையாக ஏதேனும் கொண்டு செல்வது தமிழர் மரபு. அதிலும் உயர்ந்த நிலையில் உள்ளவர்களைக் காணச் செல்லும்போது உயரிய பொருட்களைக் கொண்டு செல்வர். சேரன் செங்குட்டுவன் மலை வளம் காணச் சென்றபோது அவனைக் காணவந்த குன்றக்குறவர்கள் மலையில் விளையக்கூடிய பொருட்களைக் கையுறையாகக் கொண்டு வந்தமையைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கின்றது. தாங்கள் வாழும்

பகுதியில் விளையக்கூடிய பொருட்களில் எவை சிறந்தவையோ அவையே அம்மக்களுக்கு உயரிய பொருட்களாகும். சங்க கால ஆற்றுப்படை இலக்கியங்களில் ஐவகை நிலங்களில் வாழ்ந்த மக்கள் தங்கள் நிலங்களில் விளைந்த உயர்பொருட்களைக் கொண்டே வழிப்போக்கர்களை விருந்தோம்பியுள்ளமையைக் காணமுடிகின்றது. அவ்வாறே குகனும் காட்டில் கிடைத்த தேனையும் கங்கையில் கிடைத்த மீனையும் கையுறையாகக் கொண்டு வந்தான்.

இராமன் கங்கையில் நீராடி, இறைவனைத் தொழுது, வேள்வி செய்து முடித்த பின் முனிவர்கள் விருந்தாகப் படைத்த கிழங்கு, கனிகளை உண்டு அவர்களிடையே வீற்றிருந்தான். அப்போது அங்கு வந்த குகன் இராமனைப் பணிந்து வணங்கிய பின் அங்கிருந்த சூழலைக் குறிப்பால் உணர்ந்தான். தான் கொணர்ந்த பொருட்களை இராமனுக்குக் கொடுக்க விரும்பினாலும் அவற்றை ஏற்குமாறு குகன் இராமனை வற்புறுத்தவில்லை.

"அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக்கு அமைவது ஆகத்
திருத்தினென் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம்?"

(கம்ப - 1966)

என்பதனால், அப்பொருட்களை ஏற்பதில் இராமனின் திருவுள்ளம் யாதாக இருக்குமோ என்று ஐயுற்று வினவுதை அறியலாம்.

"கொல்லே ஐயம்" (தொல். சொல். இடை - 268)

என்பது தொல்காப்பியம். இதனை உணர்ந்தே இராமன் அன்பினால் வழங்கப்பட்ட அப்பொருட்கள் அமிழ்தினும் இனியவை என்றும் புனிதமானவை என்றும் கூறி மகிழ்வுடன் ஏற்றான்.

குகன் இராமனிடம் அடிபணிதல்

இராமனிடம் தீராக் காதலனாக விளங்கிய குகனை இராமன் யாதினும் இனிய நண்பனாக ஏற்றான். இராமன் அங்கிருந்து புறப்பட்டபோது அவனது பிரிவாற்றாத குகன் இராமனைத் தன் இருப்பிடத்திலேயே தங்குமாறும் அனைத்து வசதிகளும் அமைத்துத் தருவதாகவும், தன் உயிர் உள்ளவரை துணையாக இருப்பதாகவும் வேண்டினான். இராமன் அதனை அன்புடன் மறுத்து மீண்டும் அவ்விடம் வருவதாகக் கூறிப் புறப்பட்டான்.

இராமன் கூறியதைக் குகன் ஏற்றாலும் அவனது மலரடியைப் பிரிய இயலாத குகன் கடைசி நேரத்தில் இராமனிடம் மற்றொரு

வேண்டுகோளை வைத்தான். இராமனுடன் தானும் வந்து அவனை ஒரு நொடி கூடிடப் பிரியாமல் அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வாழ்வதாகவும், இராமன் விரும்பினால் தன் சேனையையும் உடன்கொண்டு வருவதாகவும் வேண்டினான். அவனது அன்பினால் நெகிழ்ந்த இராமன் அவனது வேண்டுகோளையும் ஏற்க முடியாமல் அவனைத் தன் உயிர் போன்றவன் என்றதுடன், தனது உடன்பிறப்புகளில் ஒருவனாகக் குகனையும் ஏற்று ஐவர் என்று குறிப்பிடுகின்றான். அவனது மனம் வருந்தக் கூடாதென்பதற்காக, துன்பத்திற்குப் பிறகுதான் இன்பம் உள்ளது என்றும் பிரிந்து கூடுவதே சிறப்பு என்றும் கூறி அவனை அமைதிப்படுத்தினான். குகனும் அதனை ஏற்றான்.

குகனின் மதிநுட்பம்

பரதன் சேனையோடு வருவதைக் கண்ட குகன் அவன் இராமனோடு போர்புரிய வருவதாகக் கருதித் தானும் போருக்குத் தயாரானான். அவனை எதிர்த்து வீரவுரைகள் மொழிந்தான். ஆனால் பரதன் எதிர்க்கரையில் சிறிது அருகில் வந்தவுடன் அவனது தோற்றத்தைக் கண்ட குகன் அவன் நிலையைக் குறிப்பால் உணர்ந்தான்;. தான் எண்ணியது தவறென அறிந்தான். பரதனது மரவுரியையும், மாசு படிந்த உடலையும் கலையிழந்த முகத்தையும், கல்லும் கனியும் வண்ணம் துயருற்ற நிலையையும் கண்டவுடன் தனது வில்லைக் கைவிட்டான். மேலும் பரதன் இராமனை ஒத்தவன் என்றும் அவனது இளையவன் இலக்குவனை ஒத்தவன் என்றும் தன் மதிநுட்பத்தால் கணித்தான்.

"வற்கலையின் உடையானை, மாசடைந்த மெய்யானை
நற்கலை இல்மதி என்ன நகையிழந்த முகத்தானை
கல்கனியக் கனிகின்ற துயரானை கண்ணுற்றான்
வில் கையினின்று இடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்"
(கம்ப - 2331)

"நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான் அயல் நின்றான்
தம்பியையும் ஒக்கின்றான் தவவேடம் தலைநின்றான்
துன்பம் ஒருமுடிவு இல்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தார் இழைப்பரோ பிழைப்பு? என்றான்"
(கம்ப - 2332)

இப்பாடல்கள் இரண்டும் வேடர் தலைவனான குகனுடைய கூரிய அறிவினைப் புலப்படுத்துவதாகும்.

குகனின் நடுவுநிலைமை

பரதனும் குகனும் ஒருவரை ஒருவர் வணங்கித் தழுவிய பின்னர், குகன், பரதன்வந்த காரணத்தை வினவினான். அதற்குப் பரதன் அளித்த விடை சுருக்கமும் செறிவும் நிறைந்ததாகும். உலகனைத்தும் காத்து வந்த தனது தந்தை தன் முன்னோர் வகுத்த நெறிமுறையினின்று வழுவினான். அதனை மாற்ற அயோத்தியின் மன்னனை அழைத்துச் செல்ல வந்ததாகக் கூறினான். அதாவது மூத்தவனாகிய இராமனுக்கு அரசுரிமையை வழங்காமல் தன் தந்தை தனக்கு வழங்க உடன்பட்டான். அதனை மாற்றி முறைப்படி அயோத்தியின் மன்னனான இராமனை அழைத்துச் செல்ல வந்துள்ளான்.

"முழுதுலகு அழித்த தந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவினன் அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் என்றான்."

(கம்ப -2335)

என்பது அவனது கூற்றாகும். அக்கூற்றின் சிறப்பினை உணர்ந்த குகன் அவனை மீண்டும் மண்ணில் வீழ்ந்து வணங்கினான். மேலும் தந்தை வழங்கிய அரசினைத் தீமை என நீத்து இங்கு வந்துள்ள பரதனுக்கு ஆயிரம் இராமரும் ஒப்பாக மாட்டார் என்று மனம் திறந்து பாராட்டுகின்றான்.

"தாய்உரை கொண்டு தாதை உதவிய தரணிதன்னை
தீவினை என்ன நீத்து சிந்தனை முகத்தில் தேக்கி
போயினை என்றபோழ்து புகழினோய்! தன்மை கண்டால்
ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ, தெரியின் அம்மா!"

(கம்ப - 2337)

இராமன் மீது கொண்ட பத்தியில் உயிரையும் ஈயும் பண்பினனான குகன் இங்ஙனம் பாராட்டுவது அவனது நடுவுநிலைமைக்குச் சான்றாகும்.

முடிவுரை

மிகப்பெரிய காப்பியத்தில் ஓரிரு படலங்களில் காட்டப்பெறும் குகனின் பாத்திரப்படைப்பு கற்போர் நெஞ்சை விட்டு நீங்காததாகவும் காப்பியத்திற்கு அணிசேர்ப்பதாகவும் அமைந்துள்ளது. ஒவ்வொரு சிறு பாத்திரத்தையும் நேர்த்தியாகப் புனைந்துள்ள கம்பனின் கவி ஆற்றலுக்குக் குகனின் பாத்திரப் படைப்பு சிறு சான்றாகும். கம்பன் பாத்திரம் சுவைசெய் பாவலன் என்பது இதனால் தெற்றெனப் புலனாகும்.

கம்பனின் படைப்பில் அகலிகை

திருமிகு. வீ.இரமேஷ்
தமிழ் விரிவுரையாளர், சர்ஜசக் நியூட்டன் கலை அறிவியல் கல்லூரி,
நாகப்பட்டினம்.

கம்பன் தன் நூலில் பல பாத்திரப் படைப்புகளை அறிமுகப்படுத்தினாலும் பாலகாண்டத்தில் ஒன்பதாவது படலத்தில் அவர் கூறும் அகலிகைப் பாத்திரப்படைப்பு என்பது பெண் குலத்துக்கு மறக்க முடியாத படைப்பாகவே அமைந்துள்ளது. அகலிகையின் படைப்பைத் துவக்கத்திலே கூறாமல், சோணைநதி, சோலையழகு, கங்கைநதி, மிதிலை நாடு போன்ற இயற்கை வருணணையைக் கூறி, பின் கௌதம முனிவனின் மனைவியாகிய அகலிகையின் குணத்தை முனிவனே கூறும் வகையில் இப்பகுதி அமைந்துள்ளது. தன் மனைவியைப் பற்றித் தான் விமர்சிப்பது என்பது உலகில் நடைபெறாத செயல். ஆனால், கம்பன் கற்பு, என்பது பெண்டிருக்கு பெண்மை இனத்திற்கே முக்கியம் என்பதை இப்படலத்தில் அழுத்தமாக வலியுறுத்துகிறார்.

இராமபிரான், மாமுனி விசுவாமித்திரர் அழைத்ததும் இலக்குவனுடன் சனக மன்னனின் வேள்வியைக் காண செல்கிறார் இராமன். கானகம் செல்லும் வழியெங்கும் இயற்கைச் சூழலை அப்படியே நம் கண்முன் படம் பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர். சோனை நதியை கூறுகையில்,

நீரினால் கழுவப்பெற்ற சிறந்த இரத்தினங்களும், சந்தனமும், அகிலும் பொருந்தியுள்ள மணல் குன்றுகளாகிய இன்பத்தைத் தருகின்ற அணிகலன்கள் அணிந்த கொங்கைகளையும் இளமை மிகுந்தநீர், வஞ்சிக் கொடிகளாகிய இடையையும் அழகிய கருமணலாகிய கூந்தலையும் மலையைச் சுற்றியுள்ள சிலம்புகளையும் உடைய சோனை ஆறு என்னும் பெண்ணை மூவரும் அடைந்தனர் என்று கம்பனாழ்வார் மிக அழகுபட நதியைச் சிறப்பிக்கிறார்.

இராமன் சோனைநதியை அடைந்தார் என அறிந்த பொற்கிரணங்களையுடைய சூரியன் மறுநாள் தான் உதிக்கும்பொழுது வெப்பத்தைக் குறைப்பதற்கு ஆயத்தமாவது போல் மேற்திசை மறைந்தனன் வெய்யோன் என்கிறார் கம்பன். மறுநாள் கீழ்திசையில்

உதிப்பது இயல்பு. ஆனால், இராமன் சோனை நதியில் நீராடும் பாங்கை காண வேண்டும் எனும் விருப்பத்திற்காக முன் கூட்டியே மறையத் தொடங்கினான் எனக் கூறுகிறார்.

இதனை, "உதிக்கும் காலையில் தன்னை செய்வான் தனது உருவில் கொதிக்கும் வெண்மையை ஆற்றுவான் போல் கடல் குழித்தான்" என்கிறார்.

இதுபோல் அகலிகைப் படலத்தை துவக்கத்தில் இருந்தே இயற்கை வருணனையை இராமனுடன் கம்பன் சேர்ந்தே மிதிலை சென்றதுபோல் தெள்ளத் தெளிவாக பாடுகிறார் கம்பன். இத்தன்மையுடன் ஆசிரியர் அகலிகைப் படைப்பைத் துவங்குகிறார். சிறந்த தவசியான கௌதம முனிவரின் மனைவியான அகலிகையினது சாபவடிவமாக உள்ள நெருங்கிய மேடாக உயர்ந்து தோன்றும் கருங்கல்லினை ஒரு வெற்றிடத்தில் இராமன் கண்டார். இவ்வரியில் கம்பர் அகலிகையை அறிமுகப்படுத்துகையில்,

"மனையின் மாட்சியை அழித்து இழி மாதவன் பன்னிகனையும் மேட்டு உயர் கருங்கல் ஓர் வெளியிடை கண்டார்" என வரிகளை அமைத்துள்ளார்.

இதேவகையில், இளங்கோவடிகள் கூறுகையில் "பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவானோர்" என்று கண்ணகியையும், அரும்பெறல் மரபில் பத்தினிப் பெண்டிரும் விரும்பினன் தொழும் வியப்பினள் ஆயினாள்" என்று சீத்தலைச்சாத்தனார், ஆதிரையின் கற்புத்திறத்தையும் கூறுவதை ஒப்பிட்டுக் காணலாம்.

இதுபோல், சீதாபிராட்டியை பல இடங்களில் உயர்த்திக் கூறுகிறார் ஆசிரியர். ஆனால், கம்பர் அகலிகையைக் கூறுகையில் கட்டிய கணவனே கண்கண்ட தெய்வம் என்று இல்லாமல் வந்திருப்பது கணவன் அல்ல இந்திரன் என்று அறிந்திருந்தும் தன் கணவன் தவ வலிமை நிறைந்தவன் என்று தெரிந்தும் இந்திரனிடம் உடன்படுகிறாள் என்கிறார். கௌசிகன் வந்து இருவரையும் கண்டதும் இருவருக்கும் சாபம் தருகிறார் முனிவர். இந்திரனுக்கு 'உடல் முழுவதும் பெண் குறியாகுக' என்று சபிக்க, வெட்கமடைந்து அகன்று செல்கிறான் இந்திரன். பின், அகலிகையைப் பார்த்து, ஒழுக்கத்தில் விலை மகளைப் போன்ற நீ கருங்கல் வடிவம் பெறுக என சபிக்கிறார் முனிவர் இவ்வரிகளை கம்பன்,

"மெல்லியலாளை நோக்கி விலைமகள் அனைய நீயும்
கல்லியல் ஆதி என்றான் கருங்கல்லால் மருங்கு வீழ்வான்"

என்று பெண்மையை போற்றிய கம்பனே,

கட்டிய கணவன் வாயிலிருந்தே அகலிகையை விலைமகள் என்ற கூறுகிறார். இவ்வரிகளிலிருந்து கம்பன், உயர்ந்தோரை உயர்த்தியும் தாழ்ந்தோரைத் தாழ்த்தியும் பாடுகிறார். இவ்வரிகளிலிருந்து தவறு செய்தவருக்கு தண்டனை உண்டு என்பதை உறுதி செய்கிறார். அதே வேளையில் செய்தது தவறு என்று எண்ணினாள். மன்னிப்பும் உண்டு என்பதை உலக மக்களுக்கு உணர்த்த,

"பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடனே அன்பால்
அழல் தரும் கடவுள் அன்னாய் முடிவு இதற்கு அருளுக என்"

என்று அகலிகை தன் கணவனின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி சாப மோட்சனம் கேட்க அதற்கு முனிவன் தழைத்து வண்டு இனிரும் தார்த் தசரதராமன் என்பான்,

"கழல் துகள் இதுவே இந்தக்கல் உருத்தவிர்தி" என்றான். சாபம் கொடுத்தவர் மூலமே சாப விமோச்சனத்தையும் கூற வைக்கிறார் கம்பன். இவ்வரியில், இராமன் கால்பட்ட துகள் உன்மேல் பட்டவுடன் நீ சாபம் நீங்குவாய் என்று இராமனை உயர்ந்த இடத்தில் வைத்துக் காட்டுகிறார்.

இதில் இராமனின் கால்பட்ட துகள் பட்டவுடன் என்ற சொல்லை பயன்படுத்துகிறார். உண்மையில் இராமன் கால்பட்டவுடன் உன் சாபம் நீங்கும் என்ற சொல்லை பயன்படுத்தி இருக்கலாம்.` ஆனால், ஆசிரியர் இராமன் கால்பட்ட துகள் உன்மேல் பட்டவுடன் உன் சாபம் நீங்கும் என்று சொல்வது சிறப்பு.

இறுதியாகச் சாப விமோட்சனம் பெற்ற அகலிகையை மன்னித்து கௌதம முனிவனிடம் சேர்த்து, 'முனிவனே, உன் மனைவி செய்த பிழையைப் பொறுத்து ஏற்றுக் கொள்' என்று கூறி விசுவாமித்திரருடன் சேர்த்து மிதிலை அடைந்தார் இராமன். இதன்மூலம் கம்பன் அகலிகையின் கற்புத் திறத்தை மிகத் தெளிவாக உணர்த்துக்கிறார் கம்பர்.

கைகேயி குற்றமற்றவள்

திருமிகு. வே.பிரியா
முனைவர் பட்ட ஆய்வாளர்,
புதுச்சேரி.

கம்பர் இயற்றிய இராமாயணம் பல கதாபாத்திரங்களைக் கொண்டுள்ளது. அவற்றுள் மிக முக்கியமான கதாபாத்திரங்கள் இராமன், இராவணன், இலக்குமணன், அனுமன், தசரதன், பரதன், சுக்கிரீவன், சீதை, கைகேயி, மந்தரை, சூப்பர்ணகை போன்றோர். இப்பாத்திரங்களைக் கதைப்போக்கின் அடிப்படையில் கதைத் திருப்பதிற்குக் காரணமான பாத்திரங்கள் எனவும் கதையோடு ஒன்றிணைந்த பாத்திரங்கள் எனவும் இருவகையாகப் பிரிக்கலாம். இதில் இராமாயணக் கதையின் முதல் திருப்பத்திற்கு காரணமாக அமைந்த பாத்திரங்கள் மந்தரையும் கைகேயியுமே. கைகேயி மந்தரையின் சூழ்ச்சியினால் மதிகெட்டு, தான் ஏற்கனவே பெற்ற இரு வரத்தைக் கொண்டு ஒன்றினால் பரதனை நாடாளவும் மற்றொன்றினால் இராமனைக் காடேகவும் செய்தாள். இவளது செய்கையின் மூலமே இராமாயணக் கதைத் திருப்பம் பெற்றது.

இராமன் காடு சென்றதும், அங்கே சூர்ப்பணகை அவன் மீது காதல் கொண்டு அவனை அடைய முயன்று தன் மூக்கு அறுபட்டதும் அதனால் கோபம் கொண்டு தன் அண்ணன் இராமனிடம் சீதையைப் பற்றிய மோகத்தை ஏற்படுத்தியதும், இராவணன் சீதையைக் கடத்திச் சென்றதும் இராமனும் இலக்குவனும் சுக்ரீவன் மற்றும் அனுமன் உதவி கொண்டு இலங்கையை அழித்து சிதையை மீட்டதும் என மேற்கூறிய செயல் அனைத்திற்கும் காரணம் கைகேயி பெற்ற வரமே.

இராமனைக் காட்டிற்கு அனுப்பியதாலும் தசரதன் இறப்பிற்கு காரணமானதாலும் கைகேயி காப்பியத்தில் பல இடங்களில் இகழ்ச்சிக்கும் பழிப்பிற்கும் ஆளாகின்றாள். இராமன் மீது அவனைப் பெற்ற கோசலைக் கொண்ட பாசத்தைக் காட்டிலும் கைகேயிக் கொண்ட பாசம் அதிகம். அதுபோல், தான் பெற்றப் பிள்ளையான பரதன் மீது கொண்ட அன்பைக் காட்டிலும் இராமன் மீது கொண்ட அன்பு அதிகம் என்பதைக் காப்பியத்தின் வழி அறியமுடிகிறது. மந்தரை சூழ்ச்சிப் படலத்தில், மந்தரை கைகேயினிடம் உன்னை துன்பம் சூழ்ந்துள்ளதை உணராது இவ்வாறு அமைதியாக உறங்குகிறாயே! எனச் சினந்து கூறிய பொழுது,

"பராவு அரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உறாவு அரும் துயர்விட்டு உறுதி காண்பரால்,
விராவு அரும் புவிக்குஎலாம் வேதமே என
இராமனைப் பயந்தஎற்கு இடர் உண்டோ?"

என்கிறாள். "எனக்கு மகனாக இராமன் இருக்கும்போது என்னை எந்த துன்பமும் நெருங்காது" என்று கூறும் இப்பாடல் மூலம் கைகேயி இராமன்மீது கொண்ட அன்பு விளங்கும். இத்தகைய தாயுள்ளம் இராமன்மீது வெறுப்புக் கொண்டு அவன் முடிசூட்டு விழாவினைத் தடுத்துக் காடேற்றியது ஏன்? அதற்குக் காரணம் யார்? என்பதனை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

காப்பியத்தில் கைகேயியின் மனமாற்றத்திற்கு மந்தரையே காரணம் எனக்கூறப்படுகிறது. மந்தரை என்பவள் கைகேயியின் தாதிப் பெண். அரண்மனையில் குற்றவேல் புரிபவள். இவள் இராமன்மீது சிறுவயது முதல் வெறுப்புக் கொண்டவள்.

இராமன் சிறுவயதில் இவள் மீது மண்ணுருண்டை வீசி விளையாடி நகைத்தான். இதனால், இராமனைப் பழிவாங்கத் தக்கசமயம் நோக்கிக் காத்திருந்த மந்தரை இராமனின் முடிசூட்டு விழாவைப் பயன்படுத்தி கைகேயியின் மனதை மாற்றித் தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டாள். இராமன் ஒரு நாட்டு மன்னனின் மகன். அவன் மீது அரண்மனைத் தாதிப் பெண் ஒருத்தி தீராப் பகைக்கொண்டு அவனது முடிசூட்டு விழாவினைத் தடுத்தாள் என்பதும், ஒரு தாதிப்பெண்ணின் சூழ்ச்சியினால் மட்டும் கைகேயி மனம் மாறித் தன் விருப்பத்திற்குரிய மகனைக் காட்டிற்கு அனுப்ப முடிவு செய்கிறாளா? அதுவும் ஒரு தாதிப்பெண் கூறிய வார்த்தையை மட்டும் ஏற்று தன் இன்னுயிர் புதல்வனைக் காடேற்றினால் என்னும் கூற்றை ஏற்க முடியாது. இச்செயலுக்கு வேறொரு காரணமும் உண்டு.

"கேகயனிடம் அவன் மகளாகிய கைகேயினைப் பெண் கேட்டு மணம் முடிக்க ஆசைப்பட்ட தசரதன், கேகயன் கேட்டுக் கொண்டதற்கிணங்கிக் கைகேயியின் வயிற்றில் பிறக்கும் மகனுக்கே கோசல நாட்டை ஆளும் உரிமையைத் தருவேன் என்று சத்தியம் செய்து தந்தான்" என்று வால்மீகி இராமாயணத்தில் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், கம்பரோ இக்கருத்தைத் தன் காப்பியத்தில் வெளிப்படையாகக் கூறவில்லை. இருப்பினும் கேகயனுடைய விருப்பத்திற்கேற்ப கைகேயியே அயோத்திய நாட்டில் பட்டத்தரசியாக

விளங்கியதைக் குறிப்பினால் வெளிப்படுத்தியுள்ளார். இராமனுடைய திருமணத்தின் பொருட்டு புறப்பட்டுச் செல்லும் முதல் சீவிகை கைகேயினது சீவிகை என்பதன் மூலமாகவும், இராமனும் சீதையும் திருமணம் முடிந்து முதலில் கைகேயியை வணங்கிய பின்பே பெற்ற தாயையும் சுமத்திரையும் வணங்கினர் என்பதை,

“கேகயன்மா மகள்கேழ் கிளர் பாதம்
தாயினும் அன்பொடு தாழ்ந்து வணங்கா
ஆயதன் அன்னை அடித்துணை சூடித்
தூய சுமித்திரை தாள் தொழலோடும்”.

என்னும் பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகிறது. இதனால் கைகேயி தசரதனின் மற்ற இரு தேவியரிலும் முதன்மை பெற்றுத் திகழ்ந்ததை உணர முடிகிறது. மேலும், இராமனுக்கு முடி சூட்ட மன்னன் முடிவு எடுத்துள்ளான் என்பதை தாதியர் கூறக் கேட்டதும் மகிழ்ந்து கோசலையும் சுமத்திரையும் ஆலயம் சென்று வழிபட்டனர் என்று கம்பர் கூறுவதிலிருந்து கைகேயி மற்ற இருவரிடமிருந்தும் சற்று விலகி இருக்கும் தன்மையை உணர முடிகிறது.

மேற்கூறிய கருத்தைக் கொண்டு அயோத்தியின் பட்டத்தரசி கைகேயி என்பது தெளிவாகிறது. ஆகவே, பட்டத்தரசியின் மகனே, அரசாட்சிக்கு உரியவன். இதுவே, அரச குடும்ப நியதி. பட்டத்தரசிக்கு மகன் இல்லாத பொழுதோ, அல்லது அவன் அறிவிற் குறைபாடுடையவனாக இருந்தாலோ மற்றாம் மகன் அரசு செலுத்தலாம் ஆனால் இங்கோ கைகேயி மகன் பரதன் கல்வியும் இளமையும் பெற்று விளங்கிய சூழலில் தசரதன் பரதன் அயோத்தியில் இல்லாத பொழுது இராமனுக்கு முடிசூட்ட முடிவெடுத்தான் இதற்கு காரணம் பரதனின் உரிமையைப் பறித்து தன் ஆசை புதல்வனுக்கு கொடுக்கும் தசரதனின் கள்ளத் தனமே என்று எண்ணத் தோன்றுகிறது.

இதன் காரணமாகவே, தசரதன் இராமனுக்கு முடிசூட்டும் முடிவை பட்டத்தரசியிடமோ, மற்ற மனைவியருடனோ ஏன் இராமனிடம் கூட கலந்து ஆலோசிக்காமல் அவசர அவசரமாக முடிவெடுத்தார். தனது முடிவை இராமனிடம் கூறும் பொழுதும் “அனையது ஆதலின் “அருந்துயர்ப் பெரும்பாரம், அரசன் வினையின் என்வயின் வைத்தனன்” எனக் கொள வேண்டா புனையும் மாமுடி புனைந்து இந்த நல்லறம் புரக்க நினையின் வேண்டும்; யான் நின்வயின் பெறுவது ஈது என்றான்” எனத் தந்தையின் வேண்டுகோளாகவும்,

அரசரின் கட்டளையாகவும் கூறுகிறார். இராமனோ, இது தனக்கு உரிமையுடையது அல்ல என்பதை உணர்ந்தே மகிழ்ச்சி அடையாமலும் தந்தை சொல்லை மறுக்க மனம் இன்றி மௌனமாகவும் இருந்தான் என்ற நிலையை,

"தாதைஅப் பரிசு உரைசெய தாமரைக் கண்ணன் காதல் உற்றிலன்; இகழ்ந்திலன்" எனும் பாடல்வரி உணர்த்துகிறது. மேலும், இதே உண்மையை இராமன் பரதனிடம் தன் உரை மூலமாகவே கூறுகிறான்.

"வரனில் உந்தை சொல்மரபினால் உடைத்
தரணி நின்னது என்றியைந்த தன்மையில்
உரனில் நீ பிறந்து உரிமை ஆதலால்
அரசு நின்னதே ஆள்க"

என்பதனால் இராமன் பரதனிடம் தந்தை அழித்த வரத்தினாலும், உன் பிறப்பின் உரிமையினாலும் அரசு உன்னுடையதே என்று கூறுவதன் மூலம் அயோத்திய அரசு உண்மையிலே பரதனுக்கு சொந்தமானது என்றவுண்மைப் புலப்படும். பரதனுக்கு உரிமையான அரசை மறந்தோ மறைத்தோ தசரதர் இராமனுக்கு கொடுக்க முனைந்தார். தன் இந்த முடிவை கைகேயிடமும், பரதனிடமும் கூறி செய்த்திருந்தால் கைகேயி உணமையிலே மகிழ்ந்து தானே முன்னின்று இராமனுக்கு முடி சூட்டி அழகு பார்த்திருப்பாள்.

பரதன் தலைமேற்கொண்டு இவ்விழாவினை நடத்தி முடித்திருப்பான். ஆனால், தசரதர், கைகேயி மற்றும் பரதனின் உண்மை நிலையை உணராது கள்ளத்தனமாக இராமனுக்கு முடிசூட்ட நினைத்ததே மந்தரையின் சூழ்ச்சி வெற்றிபெறக் காரணமாக அமைந்தது. இதில் கைகேயி தன் மகனின் உரிமைக்காக வாதிட்டதும் வரம் பெற்றதும் குற்றம் என்று கூறுவதற்கில்லை; இருப்பினும் இராமன் காட்டிற்குச் செல்ல வேண்டும் என கைகேயி வரம் பெற்றதற்கு தசரதன் மீது கொண்ட வெறுப்பே காரணம். தசரதரைத் தண்டிக்கும் பொருட்டும் மீண்டும் தன் மகன் பரதன் நாட்டை ஆள இராமனால் எவ்வித பாதிப்பும் வரக்கூடாது என்பதினாலும் இவ்வரத்தைப் பெறுகிறாள்.

இராமாயணக் கதையின் இத்திருப்பத்திற்குத் தசரதரே காரணமாக இருக்க, இப்பழி முழுக்க கைகேயியின் மேல் திணிக்கப்பட்டு, பல இடங்களில் பழிப்பிற்கு ஆளாகின்றாள். தவறு ஓரிடமிருக்க பழி கைகேயியை வந்தடைகிறது. தசரதனின் தவறு காப்பியத்தில் எங்கும் சுட்டப் பெறவில்லை. தசரதன் அவதார புருஷனின் தந்தை என்பதாலோ,

புகழ்பெரும் அரசன் என்பதாலோ கம்பர் இதனை எவ்விடத்தும் சுட்டவில்லை. அந்த குற்ற உணர்ச்சியினாலோ என்னவோ கம்பர் ராமன் வாயிலாகவே "என் பெரும் தெய்வம்" எனக் கைகேயியை ஏற்றிக் கூறியுள்ளார். இதன் மூலம் கைகேயிக் குற்றமற்றவள் என்பதும் தசரதரின் தவறே கைகேயியின் மனமாற்றத்திற்கு காரணம் என்பதும் மந்தரையின் சூழ்ச்சி கைகேயியின் மனத் தீயிற்கு தூபம் போட்டதே தவிர முழுக்காரணம் என சொல்ல முடியாது. மேற்கூறிய கூற்றின் அடிப்படையில் கொடிய மனங்கொண்ட இராவணனையும் காப்பியத்தைப் படிப்போர் மனதில் இரக்கம்கொள்ளும் வகையில் சித்தரித்த கம்பர். கைகேயியின் பாத்திரத்தின் நியாயத்தை நேரடியாகக் கூறாமல் மறைமுகமாகக் கூறியது விசித்திரமே. இருப்பினும் கைகேயியின் பக்கம் இருந்த நியாயத்தை எண்ணியே கைகேயினைக் கொடுமனம் கொண்டவளாக காப்பியத்தில் எவ்விடத்திலும்; கம்பர் சித்தரிக்கவில்லை அதற்கு மாறாக அவள் செய்கைக்கு தேவர்களின் வேள்வியும் அரக்கர்களின் அழிவும் காரணமாக அமைகிறது என்று கைகேயியின் செயலைத் தூற்றாமல் காரணம் கற்பிக்கிறார்.இதன் மூலம், இராமனது முடிசூட்டு விழாவினைக் கைகேயி தடுத்ததற்கு தசரதரின் தவறும் மந்தரையின் சூழ்ச்சியுமே காரணமாக அமைகிறது. இதனால் கைகேயி குற்றமற்றவள் என்பது தெளிவாகிறது.

தொகுப்புரை

இக்கட்டுரையின் வாயிலாக எடுத்துரைக்கப்பட்ட செய்திகளாவன: 1. இராமாயணக் கதையில் கதையின் திருப்புதலுக்கு முதலில் காரணமானவர்கள் மந்தரையும் கைகேயியுமே. 2. கோசலையைக் காட்டிலும் இராமன்மீது அதிக அன்பு கொண்டவள் கைகேயி. 3. மந்தரை என்பவள் தாதிப்பெண் அவளின் பேச்சு மட்டும் கைகேயியின் மனதை மாற்றி இருக்க முடியாது அதற்கு வேறொரு காரணமும் உண்டு. 4. அயோத்தியின் பட்டத்தரசி கைகேயி. எனவே, அயோத்தி அரசிற்கு உரியவன் பரதன். 5. தசரதன் பரதன் நாட்டில் இல்லாத சமயத்தில் யாரிடமும் கலந்து ஆலோசிக்காமல் கள்ளத்தனமாக இராமனுக்கு முடிசூட்ட எண்ணினான். 6. கைகேயி தன் மகனின் உரிமைக்காவே போரிட்டாள் 7. கைகேயி குற்றமற்றவள், கைகேயியின் செயலுக்கு தசரதரே காரணம். இக்கட்டுரையின் முடிவாக கைகேயி வரம் பெற்று பரதனனை நாடாளவும் இராமனை பதினான்கு வருடம் காட்டிற்கு செல்லவும், செய்ததற்கு தசரதரின் தவறே முக்கிய காரணமாக அமைந்ததுள்ளது. எனவே, கைகேயி குற்றமற்றவள் என்பதை அறிய முடியும்.

கைகேயி- படைப்பியல் நோக்கில் ஓர் உளவியல் பார்வை

முனைவர் மு.சுதா
தமிழ்த் துறை, உதவிப்பேராசிரியர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.

வால்மீகியின் கதையினையே தமிழ்ப் பசும்பொன்னாகத் தம் கற்பனைச் சித்தின் திறத்தால் மாற்றி உருக்கி வார்த்து விட்டார் கம்பர் என்பார் தெ.பொ.மீ. வான்மீகத்தை முதல்நூலாகக் கொண்டாலும் காலமாற்றத்திற்கேற்ப பல மாற்றங்களைச் செய்து தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ற வகையில் தம் காப்பியத்தைப் படைத்துள்ளார். கவிச்சக்கரவர்த்தி என்ற பெயருக்கிணங்க இன்றளவும் போற்றிப் புகழத்தக்க இராமாயணத்தை இவ்வுலகிற்கு அளித்துள்ள கம்பரின் படைப்புத்திறன் பட்டியலிட இயலாது. இக்காப்பியம் தோண்டச்சுரக்கும் மணற்கேணி போன்றது. அவ்வகையில் கம்பரின் தனித்திறன்களில் ஒன்றான மாந்தர்படைப்பு இங்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

காப்பியத்தின் உயிர்நிலைப் பண்பாக அமைவது மாந்தர் படைப்பாகும். எத்தகைய மாந்தரைக் கவிஞன் படைத்தாலும் அது கற்போர் உள்ளததைக் கவருதல் இன்றியமையாத ஒன்றாகும். அன்றாடம் வாழ்வில் காணப்பெறுபவர்களுள் இம்மாந்தரும் ஒருவர் என ஏற்றுக்கொள்ளும் வகையில் படைப்பது அரிய கலையாகும். படைப்புகளைக் கண்முன் நிறுத்தும் படைப்பாளனே உலக இலக்கிய வரலாற்றில் அழியாஇடத்தைப் பெறுகிறான். கம்பரும் இத்தகைய மாந்தர் படைப்புகளினால் காலம் வென்றும் இன்றும் போற்றப்பெறுவது அனைவரும் அறிந்ததேயாம். இந்த மாந்தர் படைப்பில் கம்பர் கொண்ட தனித்திறனையும் படைப்பின் வழியாக அறியலாகும் படைப்பாளனின் படைப்பு நோக்கத்தையும் அறிய இங்குச் சான்றாகக் காணப்பட உள்ள மாந்தர் கைகேயி ஆவாள்.

காப்பியம் என்பது எண்ணற்ற மாந்தர்களைக் கொண்டு அமைவது. "காப்பியத்தின் முக்கியக்கூறுகள் கதை பாத்திரம் கிளைக்கதை என்பனவாகும். இம்மூன்றிலும்கூட மிக முக்கியமான தேவையான ஒன்று பாத்திரப் படைப்பே. பல்வேறுபட்ட பாத்திரங்களே காப்பியத்திற்கு உயிரூட்டுகின்றன என்ற தா.ஏ.ஞானமூர்த்தி கருத்து நோக்கத்தக்கது. கம்பரின் கைகேயியும் உயிரூட்டமான படைப்பு மட்டுமல்ல பெண்மையைக் குறித்த கம்பனின் உள்ளத்து உணர்வோட்டப் படைப்பு என்பதே சரியானதாகும்.

வால்மீகியின் கைகேயியைக் கண்டவர்கள் அதே நோக்கில் கம்பரின் கைகேயியையும் நோக்கிப் பதிவு செய்தது பரிதாபத்திற்குரியது. ஒரு படைப்பாளனை மேனோக்கில் ஆய்வு செய்யாமல் ஆழ்ந்து ஆய்வு செய்வது அப்படைப்பையும் படைப்பாளனையும் பற்றி நன்கு அறிய உதவும். கைகேயியின் படைப்பிலும் கம்பனை நுட்பமாக நோக்கினால் மட்டுமே கைகேயி குறித்த அவரின் படைப்பு நோக்கம் புலப்படும்.

வால்மீகியின் மாந்தர்களை எடுத்துக்கொண்டாலும் கம்பர் தம்காவியத்தில் அவர்களைச் சாதாரண மனிதர்களாகப் படைக்காது இனிவருவோர்க்கு முன்னுதாரண மாந்தர்களாகத்தான் உலவச்செய்துள்ளார். இதில் கைகேயி மட்டும் விதிவிலக்கல்ல. காப்பியமாந்தர்கள் அனைவரிலும் மேம்பட்டவளாக இப்பெண்மையைப் படைத்திருப்பதை ஏன் ஆய்வுலகம் சுட்டக்கூடாது. கம்பனின் உள்ளத்து உணர்வை ஏன் எடுத்துக்காட்டக்கூடாது. இந்த வினாக்கள் ஆய்வுலகிற்கு மட்டுமல்ல இன்றைய மாறிவரும் உலகில் மக்கள் மறந்து போன பண்பாட்டை மீண்டும் நிலைநிறுத்துவதற்கும் உதவும்.

அயோத்தியா காண்டத்தின் திருப்புமுனைப்பகுதி மந்தரை சூழ்ச்சிப் படலமாகும். இப்பகுதியில்தான் மந்தரை மாபெரும் குணத்தவளான கைகேயியை மனம் மாற்ற முயற்சிக்கிறாள். தயரதனின் அன்புக்குரியவளும் இராமாவதாரப் பெருநோக்கம் நிறைவேறக் காரணமாயிருந்த இக்கைகேயி காப்பியமாந்தர்கள் அனைவராலும் ஒருசேரக் கொடியவள் என்று கூறப்படுகிறாள். ஆனால் கடவுளின் அவதாரமானக் காப்பியத்தலைவனால் போற்றப்படுகிறாள். கம்பரின் உள்ளம் இங்கு, காப்பியத்தலைவன் கூற்றாலேயே வெளிப்படுகிறது.

வால்மீகத்தில் சாதாரணப் பெண்களுக்குரிய இயல்புடன் சுட்டப் படும் கைகேயியைக் கம்பரில் காணமுடியவில்லை. இராமன்பால் மிகுந்த அன்பு கொண்டவள். பரதனுக்காக இராமனை வனம் புகச் செய்வதாக உரைகண்டோர் கூறுகின்றனர். ஆனால், கம்பன் கவிகளை உற்றுநோக்கக் காணும் தோற்றம் வேறாய் உள்ளது. வால்மீகரைப் பின்பற்றும் கம்பர் செய்த குறிப்பிடத்தக்க மாற்றங்களுள் ஒன்று, மாந்தர் படைப்பு. காப்பியமாந்தர்கள் அனைவரையும் முன்னுதாரணமாகக் கொள்ளுமாறு உயர்ந்த பண்புடன் அமைக்கும் கம்பர், கைகேயியை மட்டும் தவறாகச் சித்தரிப்பதாகக் கூறுவதை ஏற்க இயலவில்லை.

சிறுவயதில் துன்பம் இழைத்த இராமனுக்கு இடுக்கண் அழிக்க மந்தரை முயலுகிறாள். உளவியல் நுட்பத்தை இங்கு பயன்படுத்திய கம்பரின்கவிகளையும் கைகேயியின் பாத்திரப்படைப்பை ஆராய உளவியல் நோக்கிலேயே காண வேண்டியது அவசியமாகிறது. இராமன் முடி சூடுவதை நினைத்து அளவில்லாத மகிழ்வடைந்த கைகேயி கோசலையின் மனநிலையை ஒத்து விளங்குவதாகக் கம்பர் சுட்டுகிறார். இது அவளது தாயுள்ளத்தைச் சுட்டுகிறது. பரதனுக்கும் சுற்றத்தாருக்கும் துன்பம் வரும் என்று மந்தரை கூறுகையிலும் கைகேயி கலங்கவில்லை.இறுதியில் தயரதன் முறைமை தவறினான் என்றபோது சினத்தின் எல்லை அடைந்து மந்தரையைச் சினக்கிறாள். 'எனக்கு நல்லையும் அல்லை என் மகன் பரதன் தனக்கு நல்லையும் இல்லை' என வெகுண்டுரைக்கிறாள். இவர்களுடைய இந்த உரையாடலை நீண்டு அமைத்தக்கம்பர் அதன்வழி கைகேயியின் அறம்தவறா பண்பை எடுத்துரைக்கப் பயன்படுத்திக்;கொள்கிறார் என்றே கூறவேண்டும்.இறுதியில்

"கெடுத்தொழிந்தனை உனக்கு அரும் புதல்வனை கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒரு மகற்கு எனவே
கொடுத்த பேரரசு அவன் குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம் பிறர்க்கு ஆகுமோ"

என்று மந்தரை கூறியதும் கைகேயி மனம் மாறியதாகக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. சில பிரதிகளில் இப்பாடலே இல்லை என்பதும் இங்குச் சுட்டத்தக்கது. இடைச்செருகல் எனக் கூறப்படும் இப்பாடலே கம்பரின் நோக்கத்திற்கும் கைகேயியின் குணத்திற்கும் ஏன் வால்மீகம் தான் முதல்நூல் என்பதற்கும் சான்றென்பது மிகையாகாது. வால்மீகத்தில் குறிப்பிடப்பட்ட கன்யா சுல்கம் (திருமண சீதனம்) நிகழ்வு கம்பனில் தெளிவாக எடுத்துரைக்கப்படாவிட்டாலும் குறிப்பாகப் பல இடங்களில் சுட்டப்படுகிறது. காலச்சூழலுக்கேற்ப காப்பியம் படைக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் ஒரு நல்ல படைப்பாளன் எங்கேனும் ஓர் இடத்தில் குறிப்பாகவாவது உண்மையை உணர்த்திவிடுவான். காப்பியக்கவிஞன் கம்பனை மட்டும் குறைசொல்ல இயலுமா என்ன?. முதலில் மந்தரையால் கெடுத்தொழிந்தாயே என்று திருமணச் சீதன வரம் நினைவூட்டப்படுகிறது. இதற்குப்பிறகே கைகேயி தடுமாறுகிறாள். ஒரு பணிப்பெண்ணால் வாய்மை தவறாதவன் என்று புகழ்பெற்ற தன் கணவனுக்கு தீங்கு வரவிருப்பதை உணர்ந்து முதலில் அவளை

அமைதிப்படுத்துகிறாள். மந்தரையிடமே இராமனை அரசேற்க விடாமலிருக்க வழி கேட்டு அவள் சொல்படி நடப்பவளைப்போல் செயல்பட்டு அவளைப் பேசவிடாது செய்த திறமைமிகு கைகே-யியைக் கம்பர் காட்டுகிறார்.

பின்னர் தயரதனிடம் போராடி இராமனைக் கானகத்திற்கு அனுப்ப ஒப்புதல் பெற்றவள் அவனுக்கு எவ்வித அவலநிலைக்கும் தள்ளவிடாது இராமனிடத்து 'புண்ணியத்துறைகள் நீராடி வா' என்று தானே முன்னின்று அனுப்பிவிடுகிறாள்.இராமனைக் கானகம் அனுப்ப வேண்டாம் என்ற தயரதனிடம் வாய்மை காக்க வேண்டிய மன்னன் அறந்தவறலாமோ என்கிறாள். தன்னிடத்து அறிவுறுத்தும் வசிட்டனிடம் அழுது மறுக்கிறாள். அரசன் மெய்ம்மையில் மாறுபடுவான் எனில் அவன் ஆட்சிக்கு உட்பட்ட உலகத்தில் இனி வாழுதலை விரும்பமாட்டேன் என்று உறுதியாகக் கூறும் கைகே-யியைத்தான் கம்பர் காட்டுகிறார். அறம் அறிந்த குலகுரு அறம் தவறுதல் சரியோ என்று உணர்த்தும் கைகேயியிடம் தொடர்ந்து உரையாடாத வசிட்டரையும் கம்பர் சுட்டுகிறார். பின்னர் தந்தையினைக் காணவந்த பரதனிடம் நடந்ததைக் கூறி அரசை ஒப்படைத்தவள் அதற்குப்பிறகு எங்கும் பேசவில்லை. இங்கு ஏதோஒரு கடமையை நிறைவேற்றிய மனஅமைதி கொண்ட கைகேயியைத்தான் காணமுடிகின்றது.

திருமணவரத்தை வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் எந்நிலை யிலும் வாய்மை தவறாதிருத்தலே சரியென வலியுறுத்துகிறார் கம்பர். இவ்வறவழியில் தயரதனையும் இராமனையும் படைத்துக்காட்டிய கம்பர் கைகேயியை மறைமுகமாக வாய்மைக்காகப் போராடுவதையும் தெளிவுபடுத்துகிறார்.

"மாற்றம் அஃது செய்ய மங்கை உள்ளமும்
ஆற்றல் சால் கோசலை அறிவும் ஒத்தவால்"

என்று கம்பர் குறிப்பிடக்காரணம் கைகேயியின் உண்மையான உள்ளத்தைப் புலப்படுத்தவேயாகும். மந்தரை வந்து தீண்டுகையில் கருணை அளிபொழியும் கண்களைக் கொண்டவளாகக் கைகேயியைச் சுட்டும் கம்பர் தயரதனின் வாய்மையைக் காக்க தன்மேற்பழி மேற்கொண்ட கற்புக்கரசியாய் கைகேயியைக் காட்டுவதைக் காணமுடிகிறது. இதுகாறும் காத்து வந்த வாய்மையை இறுதியில் நீங்கி வாழுவதை விட அப்புகழுடனேயே அவன் உயிர் துறப்பதும் சரியே என்னும் கொழுநனைத் தொழுதெழும் வள்ளுவர் கண்ட பெண்மையை இங்குக் காணமுடிகின்றது.

"தன் காதற்கிழவன் பழியோடு பாவமெய்தி அறங்கொன்றழிவதைத் தடுப்பதே தன்னொரு கடனாகக் கருதி நிற்பாள் தசரதன் பாலன்பும் அவன்பழியில் நாணும் யார்மாட்டும் ஒப்புரவும் அறத்துறையிற் கண்ணோட்டமும் எஞ்ஞான்றும் வாய்மையும் குன்றாக் குணக்குன்றான கைகேயி அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையோடைந்து சால்பூன்றிய தூண் அவளன்றோ? அதனால்தான், தேர்ந்து தெளிந்த அறக் கடனாற்றத் துணிகின்றாள்" என்று கைகேயியின் நிறைத்தன்மையைச் சுட்டும் சோமசுந்தரபாரதியாரின் கருத்து இங்கு நோக்கத்தக்கது.

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்பதற்கிணங்க வாழும் பெண்மையைக் கம்பனில் காணமுடிகிறது. மந்தரையிடம் பேசத் தொடங்கியது முதல் அறம் வலியுறுத்தும் கைகேயியை அறம்தவறாத அரசியல் அறிவும் நுட்பமும்பெற்ற கணவன் வாய்மை காக்க பழி மேற்கொண்ட தியாகத்தின் மொத்த உருவமாக மட்டுமே கைகேயியைக் காணவேண்டும். பரதனுக்கு உரிய அரசைப் பரதனிடத்து அளித்த பின்னர் மட்டுமே கைகேயி அமைதியாகின்றாள். அதன்பின்னர்

"ஆயவன் முனியும் என்று அஞ்சினேன் அலால்
தாய் எனும் பெயர் எனைத் தடுக்கற்பாலதோ"

என்று பரதனால் நிந்திக்கப்பட்டபோதும் அவள் அமைதியாகவே இருப்பதைக் காணமுடிகிறது. பெற்ற பிள்ளையிடத்தும் தந்தையின் பெருமை காக்க நீயில்லாதபோது உனது அரசை மற்றொருவனுக்கு அளிக்க முயன்றவன் உன்தந்தை என்று தயரதன் அறந்தவறியதைச் சுட்டாமல் தன் மகனாலே அளிக்கப்பட்ட கொடுஞ்சொற்களைத் தாங்கி நின்ற கைகேயியைத்தான் கம்பனில் காணமுடிகிறது.

காப்பியத்தில் தன்தியாகம் தெரியாமல் தன்னையே அழித்துக் கொள்ளும் இப்பண்பின் சிகரத்தினை எங்கேனும் ஓர் இடத்தில் வெளிப்படுத்தாது கவிஞன் விட்டுவிடுவானா? பிறரால் இழிவுபடுத்தப்படும் கைகேயியினைக் காப்பியத்தலைவனின்

"வரன்இல் உந்தை சொல் மரபினால் உடைத்
தரணி நின்னது என்று இயைந்த தன்மையால்
உரனின் நீ பிறந்து உரிமை ஆதலால்
அரசு நின்னதே ஆள்க"

என்ற கூற்று வழியாக புலப்படுத்தித் தன்னையும் தன் படைப்பில் கைகேயி எத்தன்மையுடையவள் என்பதையும் புலப்படுத்துவதோடு திருமண சீதன நிகழ்வையும் பதிவு செய்துவிடுகிறார். தன் தந்தையின் செயலுக்காகத் தன்னையே தாழ்த்திக்கொண்டவள் தன் சிற்றன்னை என்பதை உணர்ந்தவன் இராமன். அரசை ஏற்பாய் என்று தயரதன் ஆணையிட்டபோது விரும்புதலைச் செய்யாதவன் அரசைத் துறப்பாய் என்றதுமே அகமும் முகமும் மலருகின்றான். இச்செயலால் அறம் தவறுதலை விரும்பாத இராமனை காட்டுகிறார்.

வால்மீகத்தில் சருக்கம் 107இல் திருமண சீதன வரம் விளக்கப்படுகிறது. கம்பரில் இவ்வுண்மை இராமன் மூலமாகப் பரதனிடம் கூறப்படுகிறது. இதனை அறிந்தபின்னரே பரதன் அமைதியடைந்து தாய்மீதுகொண்ட சினம் தணிகின்றான். அதற்குப் பிறகு எங்கும் அவன் கைகேயியைச் சினப்பதாகக் காட்டாதது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, யுத்தகாண்டத்தில் மூலநூலில் இல்லாத ஒரு காட்சியைப் புகுத்தி கைகேயியின் உயர்வை உலகுக்கு உணர்த்துகிறார். மண்ணுலகு வந்த தயரதன் வரம் கேட்குமாறு கூற இராமனும்,

"தீயள் என்று நீ துறந்த என்தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம்வரம் தருக"

என்கின்றான். இங்கு கம்பனால் தெய்வமெனப் போற்றப்படுவதை அறியவேண்டும். தீயள் என்று தவறாக இனங்காட்டப்பட்டவள் கைகேயி; அவள் சாதாரணப்பெண்ணல்ல என்னையும் பழிபாவத்திலிருந்து காத்தவள் அவள் தெய்வமென உயர்த்தப்படவேண்டியவள் என்று இராமன் தயரதனுக்கு உணர்த்துவதாகக் காட்சி அமைத்த கம்பர் அதன்வழி கைகேயி குறித்த தன் மனவோட்டத்தையும் பதிவு செய்துவிட்டார் என்பதே சரியானது.

கடைக்கண் அருள்பொழிய துயின்றவள் என உளவியல் அடிப்படையில் அவள் எத்தகைய அன்புள்ளம் கொண்டவள் என்பதை உணர்த்திய கம்பர் இறுதியில் அவளைத் தெய்வமென உயர்த்தியதை நுட்பமாக நோக்கி உணரவேண்டும் .காப்பியப்போக்கிற்காக கதை அமைக்கப்பட்டாலும் குறிப்பாகவாவது உண்மையைப் பதிவு செய்து விட நினைக்கும் பெண்மையைப் போற்ற நினைக்கும் கவிஞனின் உள்ளம் உளவியல் நோக்கில் ஆராயப்படவேண்டிய ஒன்றாகும். படைப்பை நோக்குவதோடு மட்டுமல்லாமல் படைப்பாளனையும்

நோக்கும் போது எத்தனையோ உண்மைகள் வெளிப்படும். கம்பனின் படைப்பை மட்டுமல்ல கம்பனையும் ஆழ்ந்து நோக்க கவிச்சக்கரவர்த்தியின் தனித்தன்மையை மேன்மேலும் உலகறியும்.

தாய்மையின் தூய்மை - சுமித்திரை

திருமிகு. ச.ஸ்ரீதேவி
தமிழ்த்துறைத் தலைவர், ஸ்ரீசந்தோஷி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
மதுராந்தகம்.

இராமனின் மேன்மையை ஒவ்வொரு நிகழ்விலும் கற்போர் உள்ளத்தில் பதிவுசெய்யும் வண்ணம் சிறு பாத்திரங்களையும் தக்க முறையில் பயன்படுத்தியது கம்பனின் தனித்திறன். இராம காதையில் வரும் சுமித்திரை, ஒரு சிறு பாத்திரம் இவள் தசரதனின் மூன்றாவது மனைவி. இலக்குவனையும் சத்ருக்கனையும் ஈன்றெடுத்தவள் என்பதே காவியத்தில் இவளுக்கான அடையாளம். கம்பன் இப்பாத்திரத்தை வான்மீகியிலிருந்து வேறுபடுத்தி தனக்கேயுரிய தனித்தன்மையுடன் மூன்று முக்கிய நிகழ்வுகளில் பதிவு செய்கிறான்.

அன்னையையும் தந்தையையும் ஆற்றுவிப்பவள் - இராமனது நம்பிக்கை. தொண்டனாய்ப் புறப்பட அடித்தளம் - இலக்குவனின் வழிகாட்டி. அறக்கடவுளாய்க் காட்சி - பரதன், குகன் மனப்பதிவு என இப்பாத்திரம் படிப்படியாக மேம்பட்டு நிற்றலைக் காணலாம்.

ஞானச் சுடர்

கைகேயி பெற்ற வரத்தால் கானகம் செல்ல வேண்டிய சூழல், இந்நிலையில் பிரிவுத் துயரை எண்ணி வாடிய கோசலையை பலவாறு தேற்றுகிறான் இராமன். பெற்றோரையும் மற்றோரையும் ஆற்றுவிக்க சுமித்திரையால் மட்டுமே முடியும், என்ற நம்பிக்கை கொண்டவனாக அவள் இருப்பிடம் தேடிச் செல்கிறான். இராமனுக்கு நேர்ந்த அநீதியை கண்டு கொதித்த இலக்குவனை உள்வாங்குகிறாள். இந்த அமைதி ஞானத்தை தருகிறது, சிக்கலை எதிர்கொள்ளும் ஆற்றலை தருகிறது, இராமனது பார்வையில் ஞானச் சுடராய்த் திகழ்கிறாள். இதனை,

"சொல் மாண்புடை அன்னை சுமித்திரை".

(அயோத்தி நகர் நீங்கு படலம்.143)

இராமனின் வாய்மொழியாக பதித்தான் கம்பன்.

பொறுமையின் சிகரம்

கானகம் புறப்பட ஆயத்தமானான் இராமன். இலக்குவனோ தீயென வெகுண்டு நிற்கின்றான். அவனை பலவாறாக தேற்றிய இராமன் சுமத்திரையின் இருப்பிடம் அடைகின்றான். தன் கருத்தையெல்லாம் அன்னை சுமித்திரையிடம் வைத்து விடைபெறுகிறான். வனத்திற்குச்

செல்லும் இரு கண்களையொத்த குமாரர்களைக் கண்டவுடன் துன்பக் கடலில் வீழ்கிறாள். கைகேயியின் தோழியர் மரவுரி கொண்டு வந்து தர, அதைப் பெற்ற இலக்குவன் உள்ளம் துடித்து,

"பூணப் பிறந்தானும் நின்றான் அவை போர்விலோடும்
காணப் பிறந்தேனும் நின்றேன்...." (அயோத்திநகர் நீங்கு 149)

சகோதரனின் இந்நிலைக்கு எதையும் செய்ய இயலாத தனது நிலையைக்கூறி அன்னையிடம் உணர்வுப் பூர்வமாய் விடைபெறுகிறான். நடக்கும் நிகழ்வுகளில் உணர்ச்சி வசப்படாதவளாய் எதுவும் பேசாதவளாய் கம்பனால் படைக்கப்பட்ட சுமித்திரை, அடுத்து செய்ய வேண்டிய கடமைப் பற்றி பொறுமையுடன் சிந்திப்பவளாக இருக்கிறாள்.

தியாகத்தின் இருப்பிடம்

கானகம் புறப்பட்ட புதல்வர்களை கண்ணுற்றவள், பொறுமையுடன் எதிர்கொள்கிறாள். பிரிவின் துயரை மறைக்கிறாள். விதியின் வலிமையால் கானகம் செல்ல வேண்டியவன் இராமன் மட்டுமே. இலக்குவன் செல்ல வேண்டிய அவசியமில்லை சாதாரண தாயாக இருப்பின் இலக்குவனை தடுத்து அரண்மனையில் கிடைக்கும் சுகமான வாழ்வை தந்திருக்கலாம். கம்பன் காட்டும் தாயாம் சுமித்திரை தன் மகனிடம்,

"ஆகாத தன்றால் உனக்கு அவ்வனம் இவ்வயோத்தி
மாகாதல் இராமன் அம்மன்னவன் வையம் ஈந்தும்
போகா உயிர்த் தாயர் நம் பூங்குழல் சீதை என்றே
ஏகாய்: இனி இவ்வயின் நிற்றலும் ஏதம் ....."
(அயோத்தி. நகர் நீங்கு. 151)

என உரைக்கிறாள். 'இராமன் ஏகும் காடே உனக்கு அயோத்தி'! எனப் பெருமையுடன் துவங்கி இனி இந்நாடு இராமனை இழப்பதால் வளமிழந்துவிடும், என்பதை முன் வைக்கிறாள். இராமனே உனது தந்தை; சீதையே உனது அன்னை; என மொழிகிறாள். கம்பனின் இக்காட்சிப் பதிவு சுமித்திரையை தியாகத்தின் வடிவமாய் மாசற்ற அன்னையாய் நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

பெண்மையின் அணி

விடை பெற வந்த தன் மக்களைக்கண்டு அறிவு விளக்கம் பெற்றவளாய், காரண காரியத்தை ஆராயும் ஆற்றல் உடையவளாய், இராமனுடன் ஏகுவதே உத்தமம் என்றுரைத்தவள், ஒரு படி மேலே நின்று,

"........... மகனே இவன் பின் செல், தம்பி
என்னும் படியன்று, அடியாரினில் ஏவல் செய்தி"

(அயோத்திநகர் நீங்கு.152)

எனத் தன்மகன் இலக்குவனுக்கு ஆணையிடுகிறாள். மகனே இராமனுடன் அவன் தம்பி காட்டிற்குச் சென்றான் என்றல்லாமல், அவனது ஏவலனாக, அடியவனாக செல் என்கிறாள். கானக வாழ்க்கையின் போது இராமனுக்கு ஊறு விளையாமல் காப்பது உனது கடமை, வனத்தில் இடர் ஏற்பட்டு இராமனின் உயிருக்கு ஆபத்து வந்தால் நீ உன் உயிரை முன்னதாகத் தந்து காப்பாய் என்கிறாள்.

"மன்னும் நகர்க்கே இவன் வந்திடில் வா அது அன்றேல்
முன்னம் முடி என்றனள்......" (அயோத்தி. நகர் படலம்.152)

எனத் தன் மகனிடம் ஆணையிடுகிறாள். கம்பன் பதித்த தியாகத்தின் வடிவமாம் சுமித்திரை பெண்மைக்கு பெருமை சேர்த்து பெரு விளக்கம் தருபவளாக காட்சியளிக்கிறாள்.

அறத்தின் வடிவம்

பரதன் அண்ணன் இராமனைக் கானகத்தினின்று அழைத்து வர புறப்படுகிறான். அன்னையர் மற்றும் சேனைகளுடன் கங்கைக் கரையை அடைகிறான். குகனின் உதவியோடு அன்னையரை அழைத்துக்கொண்டு கங்கையில் பரிசிலில் பயணிக்கிறான். ஓவ்வொருவரையும் பரதன், குகனுக்கு அறிமுகம் செய்கிறான். அன்பின் வடிவமாய் நின்ற குகனுக்கு சுமித்திரையின் தோற்றம், அறத்தின் வடிவமாக காட்சியளிக்கிறது. இதனைப் புலப்படுத்தும் குகன் கருத்தை,

"அறந்தானே என்கின்ற அயல் நின்றாள் தனை நோக்கு ஐய!
அன்பின் நிறைந்தாளை உரை என்ன" (குகப் படலம்.68)

தசரதனுடைய மூன்றாவது துணைவி, இராமனுக்கு தொண்டு செய்வதையே மூச்சாகக் கொண்ட, 'அவனுடன் பிறந்த தம்பியும் உள்ளான்' என உலகோருக்கு எடுத்துக்காட்டும்படி கானகம் புறப்பட்ட இலக்குவனை ஈன்றெடுத்த பெரியாள்' என்பதை,

"நெறிதிறம்பாத் தன்மெய்யை நிற்பதாக்கி
இறந்தான்றன் இளந்தேவி,
யாவர்க்கும் தொழுகுலமாம் இராமன் பின்பு
பிறந்தானும் உளன் என்னப் பிரியாதான் தனைப் பயந்த பெரியாள்"

(குகப் படலம்.68)

உணர்த்தும் கம்பன் வரிகள், பரதனின் நெஞ்சிலும் அறத்தின் வடிவமாய் மாசற்றவளாய் நிற்கிறாள்.

கானக வாழ்க்கையின்போது இராமனுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்றாமல் மதுமயக்கத்தில் கிடந்த சுக்ரீவனை, காணச் செல்கிறான் இலக்குவன். கைம்மை நோன்பு கொண்ட தாரையை காண்கிறான். இராமனைத்தவிர வேறுயாரையும் நினைக்காத இலக்குவனுக்கு தாரையின் வடிவம் தாயரை நினைவூட்டுகிறது. இதனை,

"ஏர்குலாம் முகத்தினாளை இறைமுகம் எடுத்து நோக்கி
தார்குலாம் அலங்கல் மார்பன் தாயரை நினைந்து நைந்தான்"

(கிட்கிந்தை காண்டம் . கிட்கிந்தை படலம் . 625)

காட்டும் கம்பன் வரிகள் இங்கே 'இறைமுகம்' என்ற சொல் அறக்கடவுளாய் அன்னையரைக் காட்டுகிறது.

துறவும் – தொண்டும்

கையேயி பெற்ற வரத்தால் கானகம் செல்ல வேண்டிய சூழலில் பெற்றோரையும் மற்றோரையும் ஆற்றுவித்துத் துயரை தணிக்கக் கூடியவள் சுமித்திரையே என்ற நம்பிக்கை கொள்கிறான் இராமன். இதனை ஆய்வு செய்தால் புலப்படும் உண்மை, அவள் ஞானம் கொண்டவள், நடப்பது நன்மைக்கே என உணர்பவள், எந்நிகழ்வையும் அலசி ஆராயும் பண்பினளாக இருத்தலால் பொறுமையுடன் எதிர்கொள்கிறாள்.

பொறுமை தியாகத்தின் அடித்தளம். எந்த இழப்பையும் ஏற்கும். எதையும் இழக்கும் பக்குவத்தைக் கொடுக்கும். தியாகம் பெண்மையை மேம்படுத்தும்; தாய்மையை மெருகூட்டும்; சுயநலமற்ற அன்பை வெளிப்படுத்தி செயல்படுத்தும். தியாகம் துறவுப் பண்பின் தோற்றுவாய். துறவுப் பண்பின் அடையாளமாக நின்றவள், தொண்டின் இலக்கணமாக விளங்கும் இலக்குவனை இராமனிடம் அடைக்கலமாக தருகிறாள். கம்பன் இறையை நினைந்துருகும் அடியானை போல இராமனின் பண்பினை மேம்படுத்த ஒவ்வொரு பாத்திரத்தையும் உணர்வு பொங்க சித்தரித்துள்ளான். சுமித்திரை கற்போர் உள்ளத்தில் நீங்கா இடம் பெறுகிறாள்.

கம்பனில் சூர்ப்பணகை

முனைவர் ம.ஷீலாஸ்ரீநிவாசன்
தமிழ்த்துறைத் தலைவர், வித்யாசாகர் மகளிர் கல்லூரி,
செங்கல்பட்டு.

முன்னுரை

நம் எண்ணங்களே வாழ்க்கையை உருவாக்குவன; வடிவமைப்பன 'வெள்ளத்தனைய மலர்நீட்டம்' போல் நம் சிந்தனைகள் 'நமக்கு நாமே துணையாய்' நம்மை வழிநடத்துகின்றன; சமுதாயத்தில் மலர்ச்சிகளை, தளர்ச்சிகளை உருவாக்குகின்றன. வாழ்வியலை மொழியும் இதிகாசமும், இதிகாச மாந்தர்களும் எப்படி வாழ வேண்டும்; எப்படி வாழ்ந்தால் நலம் விழையும் என்பதை நேர்எதிர்நிலைகளில் நின்று விளக்க, அனுபவத்தை மொழியக் காணலாம். கம்பராமாயணத்தில் வரும் கதையின் திருப்புமுனையாகவே, இராமவதார நோக்க நிறைவேற்றும் வாயிலாகவே, களமாகவே விளங்குபவள் சூர்ப்பணகையாம். இவழின் இயல்புகளை வாழ்வை இங்காய்தல் வாழ்வியல் அனுபவப்பாங்கை, கூறை வெளிப்படுத்துவனவாம்.

கம்பனும் சூர்ப்பணகையும்

இராவணன் தங்கையாய் வித்துருசிங்கனின் மனையாளாய் வருபவளே சூர்ப்பணகை அண்ணனால் தன் கணவன் கொல்லப்பட்ட, அவனால் ஜனஸ்தான அதிகாரியாய், கதூடணர்களுடன் அனுப்பப்படுகின்றாள். இங்கு இவளாட்சியே மேலோங்குகின்றது. இவழின் முன்வாழ்க்கை உத்தரகாண்டத்தில் இங்ஙனமே மொழியப்படுகின்றது. இவளின் மிகைபற்றுணர்வை அறிய இப்பகுதிகள் துணை செய்வதால் இங்கு சுட்டப்படுகின்றது. பசி, காமமெனும் இருவுணர்வுடையவளாகவே ஒட்டக்கூத்தரும் மொழிகின்றார். கம்பனில் ஒரு பெண்ணாய்த் தங்கையெனும் உறவாய் அழிவுக்குத் தூண்டுபவளாய் இவள் வரக் காண்கின்றோம்.

'உடன் பிறந்தே கொல்லும் வியாதி' என்பது இராவண சூர்ப்பணகை வாழ்க்கைக்கு இது முற்றும் பொருந்துவதாகும். கம்பரும் 'நீலமாமணி நிற நிருதர் வேந்தனை மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாள், மேனாநாள் உயிர்ரொடும் பிறந்து தான்றிளை, காலம் ஓர்ந்து உடனுறை கடிய நோயினாள்"(ஆ.கா.226) என்கிறார். செந்நிற கூந்தலள், வெம்பராகம் ;தனி விளைந்த மெய்யினளாள் பேழ்வாயாள்

(275:1) எயிறுடை அரக்கி எவ்வுயிரும் இட்டதொரு வயிறுடை" யாக்கையுமாவாள்.(246)

வானவர்க்கும், தவத்தவர்க்கும், இவ்வுலக உயிர்களுக்கும் முடிவை உருவாக்குபவள்(226) மட்டுமல்ல தன் சுற்றத்துக்கும் அழிவைத்தரப் போகின்றவளுமாகின்றாள் என்கிறார் கம்பன் (228) இத்தகைய இயல்பினள் இராமனைக் காட்டில் காண்கின்றாள். உருவமில்லாததால் மன்மதன் நல்தவம் செய்து நன்வடிவம் பெற்றார் போன்ற திக்யானைகளின் துதிக்கை, நீலமணி மலையை ஒத்ததோள்கள், தாமரை மலர்கண்கள், " தோளொடு தோள் செலத் தொடர்ந்து நோக்குறின், நீளிய அல்ல கண் நெடிய மார்பு (223) போல்வன கண்டு மிகைபற்றளாகின்றாள்.(230-232)

உணர்வுகள் மீக்கூர இவன் திருவடிகள் படி நிலமகளின் புளகமே புற்கள்(236) இவன் மேனிஒளி காணாமையால் தான் சூரியன் வெட்கமின்றி உலா வருகின்றான்:(237) பவளத்தினும் சிவந்த உதடுகளுக்கு உவமை கூற எதுவும் இல்லை(238): மரவுரியாடை செய்த தவத்தினைப் பொன்னாடைகள் செய்யாததால்தான் இவன் அவற்றை அணியவில்லை சடைமுடியனாக இருப்பதால் தான் பெண்களின் ஆடைகளும், உயரும் நிலைபெற்றுள்ளன.(240) உத்தம இலக்கணங்களுக்கு உரியன் இராமன்.

ஆயின், திருவடித் தூசுக்குக்கூட இணையாகாத இந்திரன் உலகாள்வதால் பிரமன் பழித்தற்குரியனே(242) என்கிறாள். அவன் தோளைத் தழுவப் பெறாவிடின், அமுதமுண்டாயினும் மடியும் நிலையளாய் இருப்பதால் அவன் மீது கொண்ட மீப்பற்றுணர்வால் இலக்குமியை வேண்டி மந்திரம் கூறி அழகுருவம் பெறுகின்றாள். "பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க, செஞ்செவிய கஞ்சம் நிகர் சீறடியளாகி, அம்சொல் இளமஞ்ஞையென அன்னமென மின்னும், வஞ்சியென நஞ்சமென வருகின்றாள்.(248)

சூர்ப்பணகை பற்றி மொழிகையில் அவளின் காமவுணர்வையும் கம்பர் மொழிகின்றார்.. சூர்ப்பணகையோடு இயல்பாக உரையாடிய இராமன், தன்னை குலத்துடன் அறிமுகப்படுத்தியவள்" அறிதற் கொல்லா, நன்னுதல் மகளிர் சிந்தை என்று நினைந்தவனாய்(261) சூர்ப்பணகையின் ஆசை உணர்ந்தும் விளையாட்டுப் பேச்சை (உண்டாட்டம்) ஆரம்பிக்கின்றான்(268-74) உடன்பிறந்தோர் தரின் ஏற்கிறேன். என்றவன், தன்னை மணப்பின் கொடிய இராவணனும்

நண்பராய், மூவுலகும் உனக்கடங்கும்(272) எனக்கூற 'நிருதர்தம் அருளும் பெற்றேன் நின்னொடு, ஒருவ அருஞ்செல்வத்து யாண்டும் உறையவும் பெற்றேன, ஒன்றோ, திருநகர் தீர்ந்தபின்னர் செய்தவம் பயந்தது என்னா. வாளெயிறு இலங்க நக்கான்(273) ஆயின் சீதையைக் கண்டு சூர்ப்பணகை 'இவள் அரக்கியாம்' என ஐயுற, ஒள்ளிது உன்வுணர்வுமின்னே உன்னை யார் ஒளிக்கம் ஈட்டார், தெள்ளிய நலத்தினால் உன் சிந்தனை தெரிந்தது அம்மா, கள்ளவல் ;அரக்கி போலாம் இவளும் நீ காண்டியென்(281) பற்கள் தெரியச் சிரிக்கின்றான். எனவே சூர்ப்பணகை சீதையைக் கோபிக்கவும் நிதானத்துக்கு வந்தவனாய், 'வளை எயிற்றவர்களோடு வரும் விளையாட்டு என்றாலும் விளைவன தீமையே ஆம்' என உணர்கின்றான்(284) வருத்தம் தருவ செய்யின் இலக்குவன் கோபிப்பான்" என எச்சரித்தும் அகல்கின்றான்;(284) 'ஆன கொடுத்தாலும் ஆச கொடுக்கரது' எனும் மலையாளப் பழமொழிக்கேற்ப, இராமன் வார்த்தைகள் எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றியது போலாகியது. சூர்ப்பணகையின் காமவிரக்தி நிலையை பாம்பின் விஷம் தலைக்கேறுவது போல தளர்ந்தவளாய்(289) இருப்பினும், உயிர் தரித்த நிலைக்கு ஆழியானை அடைந்தனள் பின்னையும் வாழலாம் எனும் ஆசை மருந்தின(302)' என்றிருந்தவள் மறுநாள் சீதையுடனிருப்பின் தன்னை ஏற்கானென சீதையைத் தூக்கிச் செல்லலாம் என வந்தவள், அவளைத் தூக்கிச் செல்ல முயல, இலக்குவன் பார்த்து காது, மூக்கு, முலைக் காம்புகளை அறுத்து உறுப்புக்களைக் குறை செய்கின்றான்.(309-310)

வலியினால் துடிப்பவளாயினும், இராமனை மீட்டும் கண்டதும் படமெடுக்கும் நாகமென ஆசைமீதூர, என்னை ஏற்றுப் பிழை மறந்து இராவணன் நண்பனாவான்(342) என மீண்டும் மொழிகின்றான். போர்வரின் துணையிருப்பின், வான்வழி செல்லும் வல்லமையள்; மாமிசம் போன்ற சுவையான பழங்களையும் நீங்கள் விரும்புவதும் தருவன்(344) மூக்குகளை ஒரு குறையாகுமா? மேக்கு உயரும் நெடுமூக்கு மடந்தையர்க்கு மிகையன்றோ? என்றவள்(346) அறிந்தது தன்னை விட்டு இனிப்போகக் கூடாது எனும் அன்பே என உணர்ந்தேன்(349) சீதை மனையாளாக உடனிருப்பினும் எனக்குத் துக்கமின்று என்றவள்(355) உனக்கு இதுவும் சம்மதமென்றாயின் தம்பியின் மனையாளாக்கு(356) இடையில்லாதவளோடு நான் வாழும்போது மூக்கு இல்லாதவளோடு வாழலாம் என எடுத்துக்கூறென(357) மேலும் மேலும் தன் ஆசை-யினை வெளிப்படுத்துகின்றாள்.

ஆயின், கரதூடணர்களிடம் இராவணனிடம் தன் உறுப்பு குறைபடுத்தப்பட்டமைக்கு தகுதியான இராவணனுக்குத் சீதையைக் கொண்டு வருமுயற்சியில் ஏற்பட்ட பங்கமே என சாமர்த்தியமாக மொழிந்து செயல்பட வைக்கின்றாள்.

பசியும் காமமும் இயல்பாகவுடைய சூர்ப்பணகையின் மீஆசைகள் இராமனைக் கண்டதும் மேலோங்க. அவனின் கேலிப்பேச்சுகள் எரியும் நெருப்பில் எண்ணைவார்ப்பது போலாகின்றது. அவளின் அன்பும் ஆசையையும் உடற்குறைப்படுத்தப்பட்ட பின்பும் மாறாவிலையில் தெளிவாக உணர்கின்றோம். திடீரெனத் தம்பி மனையாளாக்க என்பதுதான் இடருகின்றது. வான்மீகி இராமாயணச்சார்பு இதற்குக் காரணமாக இருக்கலாம். இராவணனுக்காகவே தான் அங்கம் குறைப்பட்டதாக மொழிதல் அவளின் சந்தர்ப்பவாதத்தை நிலையை வெளிப்படுத்துகின்றது எனலாம்.

இராவணவத ஊக்கி சூர்ப்பணகை:

சீதையின் இயல்பும், அழகும் சூர்ப்பனகையாலேயே இராவணனுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன. தன் அவமானத்தை மறைக்க இராமன் மனையாளாம் சீதையை ஆயுதமாக்குகின்றாள் சூர்ப்பணகை இராவணனுக்காய் அவளைக் கொண்டு வரமுயல்கையில் நேர்ந்ததன் விளைவாகவே நடந்ததென மொழிகின்றாள். கம்பரும், சூர்ப்பணகையின் சூழ்ச்சி என்றே மொழிகின்றாள்(618) தங்கைநிலை அறிந்து இராவணன் வாளும் உளது ஓதவிடம் உண்டவன் வழங்கும், வாளும் உள தோளும் உள நானும் உளென் அன்றோ(611) எனச் சினந்தவன், அவளழகை "மீளவும் நினைப்பதல்லால் தனித்தனி விளம்பல் ஆற்றேன், நாளையே காண்டி அன்றே, நான் உனக்கு உரைப்பது என்னோ?(624) என ஏற்றுகின்றாள். சமயம் பார்த்துத் தன்ஆசையை இராமன்மீது கொண்ட ஆசையையும் வெளிப்படுத்துகின்றாள் 'சீதை என்னும் .மான்கொண்டு ஊடாடு நீ உன்வான் வலி உலகம் காண, யான் கொண்டு ஊடாடும் வண்ணம் இராமனைத் தருதி என்பால்(630) என்கிறாள். சூர்ப்பணகையால் காமம் மீதுரப் பெற்ற இராவணனும்' கரனையும் மறந்தான் தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான். உரனையும் மறந்தான் உற்ற பழியையும் மறந்தான் வெற்றி அரனையும் கொண்ட அம்பினால் முன்னைப் பெற்ற வரனையும் மறந்தான் கேட்ட மங்கையை மறந்திலான்(634) என்கிறார் கம்பனும், அதற்கான முயற்சிகளிலும் ஈடுபடுகின்றான்.

இராவணவத ஊக்கியாய் அவன் மனதில் ;ஆசையெனும் தீயை சீதைமேல் காமத்தை வளர்த்தவள்: அவளை அடைந்தாலே அவன் சிறப்புக்குத் தகுதியாம் என்பதை ஊட்டியவளாய் சூர்ப்பணகை விளங்கக் காண்கின்றோம்.

கம்பனில் சூர்ப்பணகை

சூர்ப்பணகை அழிவின் சின்னம் ஒரு வித்தியாசம் என்னவெனில் அவளின் எதிரிகளுக்கு மட்டுமல்ல அவளின் உறவுகளுக்கும் அழிவைத் தருபவளாகவே உள்ளாள். பெண் என்பவள் ஆக்க சக்தியே. அங்ஙனமிருக்கும்போது இவளை அழிவின் அறிகுறியாகவே கம்பர் குறிப்பிடுவதன் காரணம் சிந்திக்கத் தக்கதாகும். இராமாயணத் திருப்புமுனைகள் யாவுமே பெண்களாலேயே உருவாக்கப்படுகின்றன. இராமன் காட்டுக்குச் செல்வது கைகேயின் வரபலத்தால்; சீதை கடத்தப்படுவது சூர்ப்பணகையின் தூண்டலால்; சீதையின் பொன்மான் விருப்பும், இலட்சுமணனைச் சாடும் அவசரபுத்தியும் இதற்குத் துணை நிற்கின்றன.

பெண் என்பவள் சக்தியின் வெளிப்பாடே 'சக்தியில்லையேல் சிவனில்லை' என்றாற்போல் வாழ்க்கையை, சமுதாயத்தை ஆக்கும். தீமையை அழிக்கும் சக்தி பெண்ணே என்பதைக் காட்டும் கம்பன் உணர்வுப் போக்காகவே இதனைச் சுட்டலாம்.

சூர்ப்பணகை அழிவின் சக்தியெனும் போது நாம் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் முன்றினைப் பயன், செருக்குணர்வே காரணம் என்பதேவர். முதலாய நல்வினையாளர்களின் அழிவு சக்தியாக சூர்ப்பணகை உள்ளாள் எனும் போது அவர்கள் கொண்ட செருக்குணர்வின் செயல்பாட்டின் விளைவே எனலாம். இறை சரணாகதியே நிறை வாழ்வாதலின் அதனைத் தடுக்க, செருக்கு களையப்பட வேண்டுமாதலின் அவற்றை அழிக்கும் சக்தியாகவே வருகின்றாள் சூர்ப்பணகை.

இராமவதார நோக்கமே அரக்கர் அழிப்பு வழி பூபாரம் குறைத்தலாதலின், அவதார நோக்க நிறைவேற்றக் காரணியாகவே வருகின்றாள் சூர்ப்பணகை எனலாம். இராணவன், கும்பகருணர்கள் முற்பிறப்பும் ஜெயவிலுயர்களாதலின் அவர்களின் பிறப்பழிப்பு காரணியாய், சாபவிமோசனத் தூண்டலாய்ச் சூர்ப்பணகை வருகின்றாள்.

'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் செய்தொழில் வேற்றுமையான்' என்பதுபோல் விபீஷணனும் அரக்கனே ஆயின் உணர்வால் தன்னைத் திருத்தி மேம்பட்டவனாகின்றான். கும்பகருணனும் வரம் பெறலுக்கு முன் அழிப்பு சக்தியாய் இருப்பவன் வரத்தால் மாறுகின்றான். சூர்ப்பணகையோ பிறப்பின் குணம் மாறாதவளாகவே வருகின்றாள். ஆயினும் இவளிடமும் உண்மையன்பு, காதல் இராமன்பால் வருகின்றது. அவை வெறும் உடலுணர்வின் சார்பன்றொ அரக்க முனைப்பின் மேம்பாடென்றோ கூறமுடியாதாம். ஏனெனில் இலக்குவனால் அங்கம் குறைபட்டபோதும் கோபமோ, வெறுப்போ இராமன் மீது கொள்ள இயலாதவளாய்த், 'தன்னை விட்டுப் பிரியக்கூடாது என்பதற்காகத் தான் இங்ஙனம் செய்தானோ? இதையுணர்ந்து என் அன்பும் இரண்டு மடங்கயிற்று' என அன்புணவில் நிற்கின்றாள். (349)

இராமன் தன்னை ஏற்கும் வாய்ப்பே இல்லை என்பதை உறுதியாகத் தெரிந்தபின்பே கரன், இராவணனிடம் முறையிடச் செல்கின்றாள். அதுவும் அவள் இராமனைக் குறைகூறவில்லை. தனக்குப் போட்டியான சக்களத்தியாக இருக்கும் மற்றவளைக் கண்டக்கால் அழலாதோ மனம்(3:38:4) எனச் சீதையை ஒழிக்கும் முயற்சியிலேயே ஈடுபடுகின்றாள். இராவணனுக்குத் தகுதியான அவளைக் கைப்பற்றும் முயற்சியில் ஏற்பட்ட இழிவின் இழப்பே இது என அவர்களைத் தூண்டுகின்றாள். சீதையில்லெனில் தன்னை ஏற்பான் இராமன் என தன் அன்புணர்வில் உறுதியாகவே உணர்கின்றாள்.

சீதைபற்றி இராவணன் 'நோக்குவ எல்லாம் அவையே போறலாக' உருவெளிக்காட்சியைக் கண்டு(693-696-699) சூர்ப்பணகையிடம் உறுதிப் படுத்த முயல்கையில்(697:3-4) அவளோ தன் மனத்தினின்றும் நீங்காது இடம்பெற்ற உருவை; 'செந்தாமரைக் கண்ணொடும் செங்கனி வா-யினோடும், சந்தார் தடந்தோளோடும் தாழ்தடக் கைகளோடும், அம்தார் அகலத்தோடும் அஞ்சனக் குன்றம் என்ன, வந்தான் இவன் ஆகும் அவ்வல்வில் இராமன்'(700) என்கிறாள். பின்பே சுதாரித்துக் காயை நகர்த்துகின்றாள்(702) 'ஓர் இல்' உடையான் மீது ஆசை கொண்டு அதை நிறைவேற்ற முயன்றமையே அவளின் பிழையாம்; குற்றமாம்.

சாம, பேத, தான, தண்டமென எல்லாவழிகளிலும் தன் அன்புணர்வை வெளிப்படுத்துகின்றாள். தன் அன்புணர்வை

வெளிப்படுத்த இராமனைத் தன்பால் ஈர்க்க முயலும் அவள் முயற்சி தோல்வியைத் தழுவினாலும் சளைக்காமல் இராவணன் முதலியவர்களிடம் சென்று தன் ஆசை நிறைவேற்ற வழியை காண்கிறோம். தன் முயற்சியைக் கைவிடாதவளாய் உள்ளாள். னிகை அன்பு என்பது உண்மையை உணரவிடாது தடுக்கும் சுவர் என்பதை இவள் அங்கம் குறைப்படுத்தப்பட்ட போதும் இராமனை வெறாத மனதால் உணர்கின்றோம்.

சொல்வன்மையுடையவள் சூர்ப்பணகை தன் அழகு இயல்பு, தகுதி மொழிதலும், அங்கம் குறைப்படுத்தப்பட்ட போது அது இராமன் அன்புணர்வின் வெளிப்பாடே என்று இராமனை நம்புவிக்கின்ற முயற்சிகளாலும் உணரலாம். குறைப்படுத்திய இலட்சுமணன் மீதும் தனக்குப் பகையில்லை என்பதை நாசுக்காகவும் மொழிகின்றாள்.

ஆயின் இறுதியில் இராமனால் சீதையைத் தவிர பிறரை மணக்க முடியாதென உணர்நிலையில் அதிரடியாகத் தம்பியை ஏற்க வற்புறுத்த கம்பர் கூறுமிடம் சற்று நெருடலாகவே உள்ளது. மூலக்கதையின் தொடர்பைக் காட்டுநிலையில் அங்ஙனம் மொழிந்த தாகவே கொள்ள வேண்டியுள்ளதாம்.

கம்பர் காட்டும் காசியப முனிவர்

திருமிகு. கி.சியாமளா
முனைவர் பட்ட ஆய்வாளர், அ.வீ.வா.நி. புட்பம் கல்லூரி,
பூண்டி.

கம்பனில் காசியபன்

கம்பன் இராமாவதாரத்தினை ஆறு காண்டங்களாகவும், நூற்றுப்பதினாறு படலங்களாகவும் வகைப்படுத்தி, பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களில் கூறுகின்றார். கவிச்சக்கரவர்த்தி எனப் போற்றப்படும் கம்பர், நூற்றுக்கும் மேற்பட்டகதை மாந்தர்களைக் கொண்டும் இருபதிற்கும் மேற்பட்ட முனிவர்களைப் பற்றியும் கூறியுள்ளார். இதிலிருந்து அவர் முனிவர்கள்மீது கொண்ட மதிப்பும், மரியாதையும் விளங்கும். உலக நலன் கருதி தவம் மேற்கொண்டு துறவுக்கோலம் பூண்டு, காடுகளில் வாழும் முனிவர்களின் செயலானது அளவிட முடியாதது. அத்தகைய முனிவர்களில் வசிட்டர், விசுவாமித்திரர், கௌதமர், காசியப முனிவர் முதலியோரது வாழ்க்கை முறைகளும், பண்புகளும், செயல்களும் கம்பராவல் பல இடங்களில் எடுத்தியம்பப்படுகின்றன. கம்பனால் உயிர்களனைத்திற்கும் தந்தையெனப் போற்றப்படும் சிறப்பினையுடைய காசியப முனிவரைப் பற்றியும், அவரது மனைவியர் மற்றும் உயிர்களின் படைப்பு பற்றியும் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காசியப முனிவர் எங்கே கோபத்தைக் காட்ட வேண்டுமோ அங்கே கோபம் வராமல் அடக்கிக்கொண்டு, மண்ணில் வாழும் உயிர்களின் நலன் கருதியே வாழ்ந்தவர். தவம் செய்து தனது ஆற்றலைப் பெருக்கிக்கொண்டவர். மேலும், தெய்வத்திற்கு அடுத்த நிலையில் படைக்கும் தொழிலை மேற்கொண்டவர். ஒப்புமைகூற இயலாத, மாதவமுனியான காசியப முனிவரின் வரலாறு கம்பனில், அருணனின் மகனும், சம்பாதியின் சகோதரனுமாகிய சடாயுவின் வாயிலாகக் கூறப்படுகின்றது.

காசியப முனிவர்

பிரமனது மகனாகிய மரீசி பிரமனின் மகன் காசியப முனிவர்.(கம்ப ராமாயணம், யுத்தகாண்டம் (மு.ப), இரணியன் வதைப்படலம், வை.மு.கோ. உரை, ப. 76) அவர் தட்சபிரமனது மனைவியின் வயிற்றில் தோன்றியவர்களான ஐம்பது மகளிர்களுள் ஒருவகுப்பாகச் சேர்ந்த பதின்மூன்று பெண்களை மணந்தார். இதனை,

"தக்கன் மனை வயிற்றுதித்தா ரைம்பதின்மா
தடங்கொங்கைத் தையலாருள்
தொக்க பதின்மூவரையக் காசியபனும்
புணர்ந்தனன்" (மேலது, ஆரணிய, சடாயு காண்படலம், பா.எ. 25(12)

என்கிறார் கம்பர். காசியப முனிவர் திருமாலை நோக்கித் தவம் மேற்கொண்டு வரம்பெற்றார். இதனை,

"கால நுனித்துணர் காசிப னென்னும்
வாலவி வற்கதிதிக் கொரு மகவாய்
நீலநிறத்து நெடுந்தகை வந்துஓர்
ஆலமர் வித்தி னருங்குற ளானான்"

(மேலது, பாலகாண்டம், வேள்விப்படலம், பா.எ. 21(14)

காசியப மகாமுனிவர் தனது பத்தினியாகிய அதிதிதேவியோடு கூடி ஆயிரமாண்டு திருமாலைக் குறித்து நடத்தி வந்த விரதத்தை முடித்து, தனக்கு வரந்தருமாறு கண்கூடாக வந்து நின்ற திருமாலைத் துதித்து அசுரர்களை அடக்கும்பொருட்டு, அதிதிதேவியினிடம் புதல்வனாகப் பிறந்து வருந்துகின்ற தேவர்களின் இடரைப் போக்க வேண்டும் என்று வரம் வேண்டினார். திருமாலும் அவரது வேண்டுகோளுக்கு இரங்கி அதிதியின் வயிற்றில் தோன்றி பிறந்து வாமனனாயினார். அவரே, பின் மாபலிசக்கரவர்த்தியான அசுரவேந்தனின் ஆணவத்தினை, அளந்து அடக்கியவர்.

மேலும், சமதக்னி முனிவரின் மகனாகிய பரசுராமன், தந்தையின் பொருட்டு, அரசர்களின் கூட்ட முழுவதும் வேரற்றொழியும்படி இருபத்தொரு தலைமுறை அரசர்களைக் கொன்றார். பூலோகம் முழுவதையும் வென்று தன்னதாக்கிக் கொண்டார்.

வென்ற பூலோகம் முழுவதையும் பரசுராமர் ஒப்பற்ற சிறந்த குணமுடைய காசியபமுனிவனுக்குத் தானம் செய்தார்.

புவனம் முழுவதும் வென்றொரு முனிவற்கருள் புரிவாய்

(மேலது, பரசுணுவமப்படலம், பா.எ. 19(2))

இவ்வாறாக, திருமாலின் தந்தையாக விளங்கியும், உலகம் முழுவதையும்,

"தானமாகப் பெற்றும் வாழ்ந்தார்.
காசியபரின் மனைவியர்
அதிதிதிதி தனுவருட்டை சுதை கஜையே

சுரபியணி விநதை யான்ற
மதியிளைகத்துரு வுடனே குரோதவசை தாம்
பிரையா மடந லார்கள்
விதிமுறையே யிவையனைத்தும் பயந்தனர்கள்"
(மேலது, ஆரணிய, சடாயு காண்படலம், பா.எ. 29 (13))

அதிதி, திதி, தனு, அருட்டை, சுதை, கழை, சுனுபி, விநதை, மதி, இளை, கத்துரு, குரோதவசை, தாமிரை என்னும் பதின்மூன்று மனைவியரை காசியபர் மணந்தார்.

உயிர்கள் படைப்பு

காசியப முனிவரின் மனைவியருள் சிறந்த குணங்களையுடைய அதிதி என்பவள், முப்பத்து மூன்று கோடி தேவர்களைப் பெற்றாள். மையிட்ட கரியகூந்தலையுடைய திதி என்பவள், அறுபத்தாறு கோடி அசுரர்களைப் பெற்றாள். மதி என்பவள் மனிதர்களோடு பொருந்திய வருணங்களோடு முறையாகப் பெற்றாள்.

அதாவது, முகத்தில் பிராமணரையும், தோளில் சத்திரியரையும், தொடையில் வைசியரையும், பாதத்தில் சூத்திரரையும் பெற்றாள். சுரபி என்பவள் பசுக்களுடனே பிறவற்றையும் பெற்றாள்.

குரோதவசை என்பவள் கழுதைகளையும் மான்களையும் ஒட்டகங்களையும் பெற்றாள். மேகத்தையொக்கும் இடியும், மின்னலும், அருணனும், கருடனும், சிறகுகளையுடைய கோட்டானும், பருந்து முதலாகிய பெரிய பறவைகளையும் பெற்றாள்.

"மழைபுரையுங் குழல் விந்தை வானிடிமி
ணருணனுடன் வயிந தேயன்
தழைபுரையுஞ் சிறைக்கூகை பாறுமுதல்
பெரும் பறவை தம்மை யீன்றாள்" (மேலது, பா.எ. 27 (12))

சிறந்த தாமிரை என்பாள், ஊர்க்குருவிகளையும், கௌதாரிகளையும், காடைகளையும் பெற்றாள். கழை என்னும் பூங்கொடியாள், கொடியும், செடியும் முதலாகவுள்ளனவற்றையெல்லாம் பெற்றாள்.

கத்துரு என்பவள் பிறரை அச்சுறுத்தும் கூட்டமாகிய படங்களையுடைய சர்ப்பங்களையெல்லாம் பெற்றாள். சுதை என்பவள் ஒரு தலையையுடைய நாகங்களையெல்லாம் பெற்றாள். அருட்டை என்பவள் ஓணானையும், உடும்பையும், அணிற்பிள்ளைகளையும் பெற்றாள். இளை என்பவள் நீர்வாழ்வனவாகிய பலவற்றினையும்பெற்றாள்.

திதியின் தவம்

அமிருதம் காரணமாகத் தேவாசுரப்போர் நிகழ, திருமாலின் உதவியால் தேவர்கள் அசுரர்களைக் கொன்று இனிதிருந்தனர். அதனையறிந்து பெருந்துயரடைந்த திதி தன் கணவனை வணங்கி, தேவேந்திரனைக் கொன்று மூவுலகங்களையும் ஆளவல்ல ஒரு புதல்வனைப் பெறும் பொருட்டு அருள்புரியுமாறும், மேலும் தவம்செய்ய அனுமதியும் வேண்டினாள்.

"என்று கூறலு மகவுனக் களித்தன மினிநீ
சென்று பாரிடைப் பருவமோ ராயிரந்தீர
நின்று மாதவம் புரிதியே னினைவுமுற் றுதியென்று
அன்று கூறிடப் புரிந்தன ளருந்தவ மனையாள்"

(மேலது, பால, அகலிகைப்படலம், பா.எ. 28 (14)

திதி செய்யும் தவத்தினைக் கேள்வியுற்ற இந்திரன் அவளுக்கு அடிமைத் தொழில்செய்யும் வேலையிலே அமர்ந்து அவள் செய்து வரும் பெருந்தவத்திலே ஒரு சோர்வையவிந்து அச்சமயத்தில் தான் நுண்ணிய உருக்கொண்டு திதியின் வயிற்றினுள்ளே சென்று

அங்கு தங்கிய கருவினைப் பிளந்து ஏழு துண்டுகளாக்கினான்.' திதி அழுது, கண்ணில் நீர் பெருக்க, இந்திரன் அவள் விருப்பத்தின்படி அக்கண்டங்களுக்குச் சப்த மருத்துக்களென்னும் பெயரையும் கூறிச் சென்றான். அவை ஆவகம், பிணுவகம், சம்வகம், உத்வகம், விவகம், பரிவகம், பராவகம் என்பனவாகும்.

இவ்வாறாக, காசியப முனிவர் தட்சபிரமாவின் பெண்களுள் அதிதி முதலாகிய பதின்மூவரை மணந்து தேவர், அசுணுர், தானவர், மனிதர், மிருகங்கள், பறவைகள்,செடிகொடி வர்க்கங்கள், ஊர்வன, நீர்வாழ்வன என்பனவற்றையெல்லாம் பெற்றனன்.

மேலும், அதிதியின் மூலம் திருமாலின் வடிவமான வாமனனையும், திதியின்மூலம் ஏழு மருத்துக்களையும் பெற்றும், பரசுராமரிடம் பெற்ற பூவுலகம் முழுவதையும் கொண்டும் விளங்கினார்.

கம்பராமாயணத்தில் வாலி - பல்நோக்குப்பார்வை

திருமிகு. நா.மாலதி
முனைவர் பட்ட ஆய்வாளர், அனி.வா.றி. புட்பம் கல்லூரி,
பூண்டி.

தமிழில் உள்ள பல காப்பிய இலக்கியங்களில் கம்பராமாயணம் தனிச்சிறப்பு உடையதாகும். கம்ப ராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் உள்ள வாலி வதைப்படலத்தில் வாலி எவ்வாறு வதைப்பட்டான் என்ற காட்சி உருவகிக்கப்பட்டுள்ளது.

வாலி வானரங்களுக்கெல்லாம் சிறந்த தலைவனாவான். கிஷ்கிந்தாவைச் சிறப்புடன் ஆட்சிசெய்து வந்தான். இவன் இந்திரனுக்கு மைந்தனாக ஒருதாய் வயிற்றில் சுக்ரீவனுக்கு முன்பாகப் பிறந்தவன். இவனுடைய வலிமை என்பது அளவிட்டுச் சொல்ல முடியாத அளவுக்குச் சிறப்பு வாய்ந்தது. சிவபெருமானிடம் கடுமையான தவத்தை மேற்கொண்டு பல உயர்ந்த வரங்களைப்பெற்றான். சிவபெருமானும் வாலி கேட்ட வரங்களைக் கொடுத்து ஆசிர்வதித்தான்.

வாலியின் ஆற்றல்

வாலியின் ஆற்றல் வரம்பற்றவையாகும். வேதங்கள் நான்கினையும் நன்கு கற்றவன். விண்ணுலகம், பாதாளம், பூவுலகம் என மூன்றாக வகுக்கப்பட்டுள்ள உயிர்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து எதிர்த்தாலும் அவை எல்லாவற்றையும் தோற்கடிக் கக்கூடிய வலிமை என்னிடத்தில் உள்ளது என்று தன் மனைவியிடம் வாலி உணர்த்துகிறான் என்பதை,

"மூன்றென முற்றிய முடிவில் பேருலகு
ஏற்றுஉடன் உற்றன எனக்கு நேர்எனத்
தோற்றினும் தோற்றுஅவை தொலையும் (25)

என்ற பாடல்வழி அறியலாம். பாற்கடலைக் கடையும்போது வாலி ஒருவனே நின்று கடைந்து தேவர்களுக்கு அமுதினைக் கொடுக்கும் ஆற்றலைப் பெற்றவன். அவனை எதிர்நின்று போர்புரிவோரின் பலத்தில் பாதியை அவன் அடைவான். சிவபெருமானின் திருவடிகளை இடைவிடாது வணங்கக்கூடியவன் அவன்.

பெரும்படைக்கு தலைவனாக இருக்கக்கூடியவன் வாலி. தோள்வலிமையும் வீரமும் மிக்கவனாவான். இராவணனையும் வெற்றி

கொள்ளக்கூடியவன் இவன் ஒருவனே ஆவான். இராவணனை வாலி தன்வாலில் கட்டித் தூக்கிச் செல்லும்போது இராவணனின் இரத்தம் நீர் சிந்தியது போன்று எங்கும் வழிந்தோடியது. இத்துடன் மாயாவி என்ற அரக்கர்குலப் பகைவனை அழிப்பதற்காக வாலி குகைக்குள் செல்கின்றான். வாலி திரும்பி வரும்வரைக்கும் தம்பி சுக்ரீவன் நாட்டைக் காக்கின்றான். ஆயின், பல ஆண்டுகள் சென்றபிறகும் வாலி திரும்பி வராததைக் கண்டு வாலி இறந்திருப்பான் என்று கருதி சுக்ரீவன் குகையின் வாயிலை மூடி விடுகின்றான்.

வெற்றியின் சிறப்பால் திருப்பிய வாலி குகையில் வாயில் மூடப்பட்டிருப்பதைக் கண்டு மிகுந்த கோபம் அடைகின்றான். சுக்ரீவன் அதற்கு அஞ்சி வாலியின் சாபத்தால் வர முடியாத இடமான மதங்க முனிவரின் ஆசிரமத்தை அடைகின்றான். அங்கு தங்கி வாழ்கின்றான் வாலி. தன் தம்பி மனைவியான உருமை என்பவளை தனக்குரியவளாக ஆக்கிக் கொள்கிறான். இராமனிடம் கொண்டிருந்த நம்பிக்கை வாலி இராமனிடம் பெரும் நம்பிக்கையுடம் மற்றும் வைத்திருக்கின்றான்.

இராமன்மீது அளவிடாத நம்பிக்கை வைத்திருக்கின்றான். அத்தகைய இராமனே தனக்குப் பகையாய் வந்து அம்பு எய்வான் என்று கனவில்கூட நினைத்ததில்லை. பாண்டியன் நெடுஞ் செழியனின் செங்கோலாட்சியை புகழ்ந்து கூறிய கோவலன், அவன் வழங்கிய தவறான நீதியால் வெட்டுண்டதைப் போன்று வாலியின் வாழ்க்கையும் அமைகின்றது. தம்பி சுக்ரீவனுக்குத் துணையாக இராமன் வந்துள்ளான் என்று மனைவி தாரையானவள் கூறுகின்றாள். அதைக் கேட்டதும் வாலி கடுஞ்சினம் கொள்கின்றான்.

"பிழைத்தனை: பாவி! உன் பெண்மையால்!" (வாலி, வதை, 31)

என்று கூறி அவளைக் கடிகின்றான். இராமபிரானைத் தருமத்தின் வடிவாகவும் வாலி காண்கின்றான். இராமன்தன் சிற்றன்னை கூறிய சொல்லைத் தவறாது காட்டுக்கு வந்தவன். அவனுக்கு வேறு யாரும் துணையாக இருக்கத் தேவையில்லை. வில்லொன்றே போதுமானது. குரங்கினத்துடன் நட்புக் கொள்ள வேண்டிய அவசியம் அவனுக்கில்லை என்று தாரையிடம் கூறுகின்றான். அத்தன்மை கொண்ட இராமன் உடன் பிறந்தவர்கள் நாங்கள் சண்டை போடும் போது தலையிடமாட்டாள் என்று புகழ்ந்து கூறுகின்றான். இது பண்பிற் சிறந்த வாலியின் தூய உள்ளத்தைக் காட்டுகின்றது.

இத்தகைய சீரிய பண்பும் இராமன்பால் பக்தியும் கொண்ட வாலி, தன் தம்பி சுக்ரீவன் மீது தவறான எண்ணங்கொண்டது வருந்தத்தக்கது. வேண்டுமென்றே சுக்ரீவன் குகைவாயிலை மூடிவிட்டு அரசாட்சியைக் கைப்பற்றிக் கொண்டான் என்று எண்ணியது தவறாகும். அவனுக்கு அஞ்சி சுக்ரீவன் நீங்கிய பின்பு பெருங்குணமுடைய வாலி அவனை மன்னித்திருக்கலாம். அதனை விடுத்து அவனைக் கொல்ல எண்ணம் கொள்கிறாள். அதோடு தம்பி மனைவியையும் கவர்ந்து கொள்கிறாள். பண்பும், ஆற்றலும், வீரமும், பக்தியும் வாய்ந்த வாலி இத்தவற்றைச் செய்கிறானே என்று எண்ணும்போது நமக்கு அவன்பால் இரக்கம் தோன்றுகிறது.

வாலியின் சீற்றம்

இராமனின் நட்புக் கொண்டு தம்பி சுக்ரீவன் வலிய வந்து வாலியைப் போருக்கு அழைக்கின்றான். வாலி பெருஞ்சீற்றம் கொள்கிறான். அனற்பொறி பறக்கக் கடுஞ் சினத்துடன் நகைத்து, பற்கடித்து, தோளைத்தட்டிப் போருக்குப் புறப்படுகின்றான். சீற்றத்தினால் அவனின்று எழுந்த பெருமூச்சு வாலியைப் போருக்குப் போகாமல் தடுக்க வந்த தாரையின் கூந்தலையும் தீய்க்கின்றது. இது வாலியின் சீற்றமிகுதியை உணர்த்துவதாகும்.

மூன்று உலகும் எதிர்த்து வந்தாலும் அவை அழியும் என்றாள். தன் வலிமைக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சியினை சான்று காட்டிக் கூறுகின்றான். பாற்கடலில் மந்தர மலையை மத்தாகவும், வாசுகியை நாணாகவும் கொண்டு தேவ அசுரர்கள் கடைய இயலாத நிலையில்

"தயிரெனக் கடைந்தவர்க் கமுதந் தந்தது
மயிலியற் குயின்மொழி மறக்கலாவதோ" - வாலி. வதை. 27

என்று வாலி தானே நின்று அமுதத்தை எடுத்து அளித்த நிலையை சுட்டிக் காட்டுகின்றான். மேலும், அமரர், அவுணர் யாவரும் தனக்குத் தோற்றதும் கூற்றுவனும் தன் பெயரைக் கூறுவதற்கு நடுங்குவன் என்று கூறுகின்றாள். இது வாலியின் அசையாத தன்னம்பிக்கையையும் ஆற்றலையும் காட்டுகின்றது.

வாலி – இராமன் உரையாடல்

இராமன், வாலி உரையாடலின் மூலமாக வாலியின் கூர்ந்த அறிவு வெளிப்படுகின்றது. இராமனையும் அவன் குலத்தையும் போற்றி நின்ற உண்மையும் நன்கு விளங்குகின்றது. "வாய்மையும் மரபும் காத்த"

தூயவனான தயரதனையும், பரதனுக்கு முன் பிறந்த இராமனையும் வாலி ஒப்பிட்டுப் பார்க்கிறான். தருமத்துக்குஉரியவனான நீயே இதைச் செய்யலாமா என்று கேட்கிறாள். சீதையைப் பிரிந்ததால் இராமனுக்கு இத்தடுமாற்றம் ஏற்பட்டதோ என்று வினவுகின்றாள். அரக்கர்கள் செய்த பழிக்குக் குரங்கினத் தலைவனைக் கொல்வது எம்மனு நெறி கூறுகின்றது என்று கேட்கின்றாள். நாட்டில் தன் தந்தையை இறக்கச் செய்த இராமன், காட்டில் தன்னை இறக்கச் செய்கின்றாள் என்று பழித்துக் கூறுகின்றான். இவ்வாறு பலவாறு கேட்ட வாலியின் உண்மையான வாதத்தினையும் அவனது புலமையும் நன்கு விளக்குகின்றது.

இராமன் கூறிய செய்தியில் சுக்ரீவனிடம் பிழையில்லை என்பது கண்டும் சீற்றங் கொண்டு நின்ற வாலியின் செயலைக் குறிப்பிடுகின்றான். தம்பியின் மனைவியை

கவர்ந்த நிலையையும் கூறுகின்றான்.
ஏதி லாரு மெழியரென் றாரையும் தீது
தீர்ப்பதென் சிந்தைக் கருத்தரோ (கிஷ்.வா.வ.ப. 111)

என இராமன்தன் கோட்பாட்டைக் கூறுகின்றான். அதற்கு வாலி வானரங்களுக்கு நெறியுடன் வாழ்வது என்பது கிடையாது என்று கூறுகின்றான். இறுதியில் என்னை மறைந்திருந்து ஒரு வேடரைப் போன்று கொன்றது எதற்கு என்று கேட்கின்றான்.

அதற்கு இராமனால் பதில்கூற முடியவில்லை அதற்கு இலக்குவன் சுக்ரீவன் அண்ணனிடம் முன்னே வந்து அடைக்கலம் பெற்ற தன்மையால் மறைந்து இருந்து அம்பு எய்ய வேண்டியதாயிற்று என்று சமாதானமாகக் கூறுகின்றாள்.

வாலி இலக்குவன் கூறியதனைக் கேட்டு அமைதியடைகின்றார். பல்வேறு வகையில் வாதாடிய வாலிக்கு நியாய உணர்வு தோன்றியது. சுக்ரீவனுக்குக் கொடுத்த வாக்கின்படி இராமன் நடந்துகொள்கிறான். இறக்கும் நிலையில் இருக்கும் வாலி தன்குற்றங்களைப் பொறுக்குமாறு இராமனிடம் கேட்டுக்கொள்கின்றாள். இது இராமனிடம் கொண்டுள்ள பெரு மதிப்பினைக் காட்டுகின்றது.

"தீயன பொறுத்த யென்றாள் சிரியன சிந்தியாதான்" (கிட்கிந் வாலி 113)

தீர்க்கதரிசி வாலி

இறக்கும் நிலையில் உண்மையை உணரும் வாலி, தன் தம்பி

மதுவை அருந்தி விட்டு உள்ளம் தடுமாறிய போதும் தன்மீது எய்திய வாளினை என் தம்பி மீது எய்யக்கூடாது என்று வேண்டுகின்றான். சுக்ரீவன் மதுவைப் பருகி மயக்கமுற்றுக் கிடப்பதும் நிகழ்கின்றது. வாலியின் தீர்க்கதரிசனத் தன்மையை இது காட்டுகிறது.

சுக்ரீவனை வரச்சொல்லி பல அறிவுரைகள் கூறி இராமனிடம் ஒப்படைக்கின்றான். வாலியின் செயல்கள் யாவும் அவனது தூய சிந்தையைக் காட்டும் வகையில் அமைகின்றது. இறக்கும் நிலையில் இவன் செய்யும் செயல்கள் அவனின் உயர்ந்த பண்பினைக் காட்டுகின்றது.

முடிவுரை

இலக்கிய வரலாற்றில் இன்றைய காலகட்டம்வரை காப்பிய இலக்கியங்களும் நிலைபெற்று இன்றும் தனிச்சிறப்புடனும் வளர்ச்சி நிலையிலும் இருந்து வருகிறது.

இதில், கம்பராமாயணம் தனிப்பெருமை உண்டு. கம்ப ராமாயணத்தில் புதிய செய்திகள் பல புதையுண்டு கிடக்கின்றன. அவற்றை உற்றுநோக்கும் வகையில் வாலி பாத்திரப் படைப்பும் பல்நோக்குப் பார்வையில் பதிந்த செய்திகளை சுருங்கக் கூறப்பட்டுள்ளது.

உளவியல் நோக்கில் வாலி

முனைவர் வே.தனுஜா
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியை, ஸ்ரீ.எஸ்.ஆர்.என்.எம்.கல்லூரி.
சாத்தூர்.

கம்பராமாயணத்தில் பொதுவாக பல்வேறு வகையான காப்பியப் பாத்திரங்களைக் காணமுடிகிறது. மனிதர், தேவர், வானரர், அரக்கர் முதலான 167 பாத்திரங்கள் இடம் பெறுகின்றனர். அவற்றுள் வானர இனத்துள் வாலி, சுக்ரீவன், முதலானோர் இடம் பெறுகின்றனர். அவருள் வாலியின் பண்புகள் மனமுரண்பாடு இவற்றை உளவியல் நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

உளவியல் மனித மனங்களை அறிகின்ற அறிவியல் ஆகும். அந்நிலையில் மனிதர் அல்லாத வானர வீரனாகிய வாலியின் பண்புகள் உளவியல் நோக்கில் ஆராயப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் மனத்தை ஆறாவது அறிவு என்று சுட்டி மனித உயிர்களின் உயர்வைக் காட்டுகிறார்.

"ஆறாவதுஅறிவே அவற்றொடு மனனே"

என்று சுட்டுகின்ற தொல்காப்பியர்

"மக்கள் தாமே ஆறறிவுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

என்று சுட்டுகின்றார். "பிறப்பு என்றதனால் குரங்கு முதலாகிய விலங்கினுள் அறிவுடையன. மன உணர்வு உடையன. உளவாயின் அவையும் ஈண்டு ஆறவிவுயிராய் அடங்கும் என்பது தாமே எனப் பிரித்துக் கூறியமையான் நல்லவிவு உடையார் என்பதற்குச் சிறந்தார் என்பதும் கொள்க என்று விளக்கம் தருகிறார் பேராசிரியர். ஆகவே சிந்தித்து ஆராய்கின்ற தன்மை பெற்ற பாத்திரமாக வாலி படைக்கப்பட்டுள்ளான்.

வானரம்

வானரம் என்பதற்கு "மனிதரிலும் சிறிது வேறுபட்ட வடிவமுடையது என்பது பற்றிய பெயர் என்று விளக்கம் தருவர். இராமாயணத்தில் வானர இனத்தைச் சார்ந்த வாலி முரண்படுகின்ற பாத்திரமாக அமைந்துள்ளான். "வாலி சுக்ரீவன் போன்றவர்கள் முறையே

இந்திரனுக்கும், சூரியனுக்கும் பிறந்தவர்கள் அக்குலப் பண்பால் நல்லது கெட்டது அறிந்து தவம் முதலியன புரிந்து வாழ்ந்தார்கள். "அத்தகைய அவர்கள் விலங்கு இல்லை" என்றும் சுட்டுவர்.

வாலியினைக் குறித்து அனுமன் விளக்கும்படியாக கம்பர் அமைத்துள்ளார். சுக்ரீவன் மனைவியின்றி இருப்பதற்குரிய காரணத்தை விளக்க வந்த அனுமன் வாலியின் பண்பு, கல்வி, அறம், வரம், ஆற்றல் முதலியன பற்றி வெளிப்படுத்துவதனைக் காணமுடிகிறது.

வீரம்

வாலியின் ஆற்றல் அளவிடற்குரியது. தேவர்களும், அவுணர்களும், கடலைக் கடைந்த போது, தன்னுடைய வலிமையால் அமுதினைக் கடைந்தவன் என்பதனை,

"கழறு தேவரோ டவுணர் கண்ணினின்று
உழலு மந்தரத் துருவு தேயமுன்
அழலுங் கோளரா வகடு தேய்விடச்
சுழலும் வேலையைக் கடையுந் தோளினான்" (கி.கா. நட்புக் கோட். பா.39)

என்ற பாடலால் அறியலாகிறது. மேலும் வாலி, இராவணனை வாலினால் கட்டி தூக்கிக் கொண்டு சென்றமையையும்

"மெய்க்கொள் வாலினான் னிடலி ராவணன்
தொக்க தோளுறத் தொடர்ப டுத்தநாள்
புக்கி லாதவும் பொழிய ரத்தநீர்
உக்கி லாதவும் உலகம் யாவதோ" (கிகா., நட்புக்கோட்படலம், பா.48)

என்ற பாடல் விளக்குகிறது. அத்தகைய சிறந்த ஆற்றல் உடையவனாக வாலி காணப்படுகின்றான்.

சிவபக்தி

வீரம் உடையவனாக மட்டுமல்லாது வாலி சிவபெருமான் மீது மிகுந்த பக்தி உடையவனாகவும் காணப்படுகின்றான். அவன் தன்னுடன் போரிட யாரேனும் எதிரில் வந்தால் அவர் ஆற்றலில் பாதியைத் தான் அடையும் வரபலமும் பெற்றவன் என்பதனை,

"கிட்டு வார்பொரக் கிடைக்கி னன்னவர்
பட்ட நல்வலம் பாக மெய்துவான்

எட்டு மாதிரத் திறுதி நாளுமுற்று
அட்ட மூர்த்திதாள் பணியு மன்பினான்."

(கி.கா., நட்புக்கோட்படலம், பா.40)

என்ற பாடல் வழி அறிய முடிகின்றது.

முரண்படுகின்ற சூழல்

வீரம், சிவபக்தி, பேராற்றல் உடைய வாலி தன்னுடைய தம்பியின் மீது கொண்ட நம்பிக்கையின்மை காரணமாக மனம் முரண்படுகிறான். மாயாவி என்பான் வாலியின் ஆற்றலை அறியாமல் அவனிடம் போருக்கு வருகிறான். வாலி அவனைக் கடுமையாகத் தாக்க அவன் அஞ்சிக் குகை ஒன்றினுள் புகுந்து கொள்கிறான். அவனைத் தொடர்ந்து வாலி உள்ளே சென்று போரிடுகிறான். சுக்ரீவன் குகையின் வாயிலில் காவல் புரிந்து கொண்டு இருக்கின்றான். இருபத்தெட்டுத் திங்கள் ஆகியும் வாலி வெளியே வராததைக் கண்டு சுக்ரீவன் தானும் உள்ளே செல்ல விழைகிறான். சான்றோர்களது ஆணையால் அரியணையை ஏற்கிறான். மாயாவி வெளியே வரக்கூடாது எனும் எண்ணத்தில் குகையின் வாயிலை அடைத்து வைக்கிறான்.

குகையினுள் மாயாவியைக் கொன்ற வாலி மீண்டு வந்து பார்க்கும் போது குகை அடைப்புண்டு கிடப்பதைக் கண்டு கோபம் கொள்கிறான். தன் ஆற்றலால் வெளியே வந்து அரண்மனைக்குச் செல்கிறான். சுக்ரீவன் நடந்த உண்மைகளைக் கூறியும் நம்பிக்கை இன்மையால் அவன் மனம் முரண்பட்டுத் தம்பியைத் தாக்குவதுடன் அவன் தாரமாகிய உருமையையும் கவர்கிறான்.

"உருமை யென்றிவற் குரிய தாரமாம்
அருமருந்தையு மவன்றி ரும்பினான்
இருமை யுந்துறத் திவனி ருந்தனன்
கரும மிங்கிடிதங் கடவு டிளன்றனன்" (கி.கா., நட்புக்கோட்படலம், பா.71)

என்ற பாடல் அதனை விளக்கி நிற்கின்றது.

தொகுப்புரை

மிகுதியான ஆற்றல் கொண்ட வாலி கோபத்தின் பாற்பட்டு உடன் பிறந்தவன் மீதான நம்பிக்கையின்மையால் மனம் முரண்படுகின்ற தன்மையை அறிய முடிகிறது. நம்பிக்கையின்மை என்ற பண்பு வாலிக்கு மன முரண்பாட்டினை உண்டாக்கச் செய்து அவனது இறப்பிற்கு வழி வகுப்பதை இக்கட்டுரையால் அறிய இயலுகின்றது.

வாலி வதையில் இராமனின் புகழ்

முனைவர் இரா.அருள்மணி
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்,
சென்னை.

காப்பிய இலக்கணம் தலைமைப்பாத்திரம் தன்னிகரில்லாத் தலைவனாக அமையவேண்டும் எனக்கூறுகிறது. கம்பரும் தானெடுத்துக் கொண்ட முதன்மைப் பாத்திரமான இராமனை நற்பண்புகள் நிறைந்த குணக்கடலாகப் படைத்து கதையை நகர்த்திச்செல்கிறார். இந்த நிலையில் இராமன் வாலியைக் கொன்றதன் மூலம் தீராப் பழியைச் சுமக்கின்றான் என்ற மாபெரும் சிக்கல் கம்பருக்குத் தடைகல்லாக அமைகின்றது. இந்நிலையில் தான் முதன்மைப்பாத்திரமாக எடுத்துக் கொண்ட இராமன் என்கிற கதாபாத்திரத்திற்குப் பழி நேராமல் கதையை எவ்வாறு நகர்த்திச்செல்கிறார், அல்லது இந்தச் சிக்கலுக்கு கம்பர் என்ன தீர்வு கூறுகிறார் என்பதை ஆராயும் பொருட்டே இக்கட்டுரை அமைகின்றது.

வாலியின் ஆணவம்

கம்பராமாயணத்தில் வாலி மிகவும் ஆற்றல் படைத்த, எதையும் சாதிக்கும் வல்லமை வாய்ந்தவனாக, மிகவும் வலிமை மிக்கவனாக படைத்துக் காட்டுகின்ற கம்பர். வலிமையின் பொருட்டு அவனுள் ஆணவமும் குடிகொண்டிருந்தது என்பதைக் கதை ஓட்டத்தின் வழியே வெளிப்படுத்துகிறார். மேலும் தனது வலிமையைத் தானே புகழ்ந்து கொள்ளும் தற்பெருமை கொண்டவனாகவும் சித்திரிக்கின்றார் இதனை,

"ஆற்றல் இல் அமரரும் அவுணர் யாவரும்
தோற்றனர்; எனையவர் சொல்லற் பாலரோ?
கூற்றும், என் பெயர் சொலக் குலையும், (வாலிவதைப்படலம்-3962)

என்ற பாடலில் வாலியின் கூற்றாகவே வெளிப்படுத்துகிறார். மேலும், வாலியிடம் இருந்த ஆணவம் அகங்காரம் போன்ற தீய குணங்களே அவனது அழிவுக்குக் காரணமாக அமைகின்றது. ஆணவமும் அகங்காரமும் குடி கொண்டிருக்கும் ஒருவனுக்கு நல்வழியைக் கூறினாலும் அதனை அவன் ஏற்கமாட்டான் என்பதற்கு வாலியை உதாரணமாகக் காட்டியுள்ளார்.

மனைவிசொல் கேளாமை

முன்பு வாலியிடம் தோற்று ஓடிய அவன் தம்பி சுக்ரீவன் மீண்டும் வாலியைப் போருக்கு அழைப்பதை ஆராய்ந்து இதில் ஏதோ சூழ்ச்சி உள்ளதென உணர்ந்த அவனது மனைவி தாரை, மதிநுட்பத்தோடு போருக்கு புறப்படும் வாலியைத் தடுக்கிறாள். வரவிருக்கும் பேராபத்தை ஒற்றர்கள் மூலமாகத் தெரிந்து கொண்ட தாரை, அதனை வாலிக்கு எடுத்துரைக்கிறாள். ஆனாலும் மனைவியின் நுண் அறிவை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் இல்லாத வாலி தன் வலிமையின்மீது ஆணவம் கொண்டு வீழ்ச்சியைச் சந்திக்கின்றான்.

வாலிமீதான குற்றச்சாட்டு

தனக்குப் பின் பிறந்த இளையவனைக் காத்து நிற்க வேண்டியது ஒருவனது கடமையாகும். இத்தகைய மனிதப்பண்பிலிருந்து வாலி தவறுகிறான். தன் இளையவனான சுக்ரீவனைக் காத்து நிற்கவேண்டிய வாலி அவனை அழிக்க முற்படுகின்றான். இது வாலியின் குற்றமாக பதிவுசெய்கிறார் கம்பர்.

காலில் விழுந்து தன்னிடம் சரணடைந்தவரை தனது அடைக்கலப் பொருளாகக் கொண்டு அவரைக் காப்பது தமது கடைமையாகும். இத்தகைய நீதியையும் வாலி பின்பற்றவில்லை. வாலியின் கோபத்திற்கு ஆளான சுக்ரீவன் அவனது காலில் விழுந்து அடைக்கலம் தேடுகிறான். ஆனால் வாலி தன்னிடம் அடைக்கலம் அடைந்த சுக்ரீவனை கொல்ல முயற்சிக்கிறான். இது வாலியின் கொடுஞ்செயல் என இராமன் மூலமாக கம்பர் சுட்டிக்காட்டுகிறார்.

போர்செய்ய முடியாமல் புறமுதுகிட்டு ஓடுபவரைத் தாக்கக் கூடாது என்பது போர் மரபுகளில் ஒன்று. ஆனால் வாலி தன்னிடம் தோற்று புறமுதுகிட்டு ஓடிய சுக்ரீவனை விடாமல் துரத்தி கொலைசெய்ய முற்படுகிறான். இவ்விடத்திலும் போர்நெறியைப் பின்பற்றாத வாலி-யின்மீது குற்றத்தினை சுமத்துகிறார் ஆசிரியர்.

வலிமையான குற்றச்சாட்டு

இராமன் வாயிலாக வாலி செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டும் கம்பர், வாலியின் மீது அசைக்க முடியாத அல்லது வாலி புகழுக்குக் களங்கம் ஏற்படுத்துகின்ற ஒரு குற்றச் சாட்டை பதிவுசெய்கிறார். அதாவது வாலி தனது தம்பி சுக்கிரீவனை அடித்து விரட்டிவிட்டு அவனது மனைவியை கவர்ந்து கொண்டான் என்பதான குற்றச்சாட்டாகும். இச்செயல் ஒருவனுக்கு ஒருத்தி என்ற இராமனது

அல்லது கம்பராமாயாணத்தின் கோட்பாட்டுக்கு எதிரானதாகும். ஆகையால் இச்செயல் புரிந்த வாலி அகற்றப்பட வேண்டிய கதாபாத்திரம் என்பதை வாசகன் மனதில் நிலைநிறுத்துகிறார்.

வாலி மதிப்பீட்டில் – இராமன்

இராமன் வாலியின் மனதில் மிகவும் உயர்ந்த உன்னதமான இடத்தில் இருப்பதாக படைத்துக் காட்டி வாலியை உயர்வாக பேசுகிறார் கம்பர். இங்கு இராமனால் அழியப்பட வேண்டிய ஒரு கதாபாத்திரம் இராமனைவிட உயர்வாக படைத்தல் என்பது இராமன் என்ற உயர்பண்புகள் அடங்கிய முதன்மைப் பாத்திரத்திற்கு இழுக்கென நாம் கருதக்கூடும். ஆனால், இதுஓர் உத்திமுறை என்பதை பின்னர் நமக்கு புலப்படும்படியாகக் கதையை நகர்த்திச் செல்கிறார். அஃதாவது சுக்கிரீவனுக்குத் துணையாக இராமன் வந்திருக்கிறான் என்ற செய்தியைத் தாரை கூறுகிறாள். இதைக் கேட்ட வாலி, தன் தந்தையின் சத்தியத்தை காப்பாற்றவும், தாயின் சொல்லைக் காப்பாற்றவும், தன் தம்பி பரதனுக்காகவும் சக்கரவர்த்தியாக முடிசூட்ட வேண்டிய இராமன் வனம் புகுந்தான் என இராமனின் நற்பண்புகளை எடுத்துக்கூறுகிறான் இதனை,

"ஏற்ற பேர் உலகு எலாம் எய்தி, ஈன்றவள்
மாற்றவள் ஏவ, மற்று, அவள்தன் மைந்தனுக்கு
ஆற்ற அரும் உவகையால் அளித்த ஐயனை";

(வாலிவதைப்படலம-3967;)

என்ற பகுதியால் அறியலாம். மேலும், இந்த உலக உயிர்களுக்கெல்லாம் தர்மத்தின் வழிகளை தம் நடைமுறை வாழ்வில் வாழ்ந்து காட்டிக்கொண்டிருக்கின்ற இராமபிரான் என்று இராமனை வானளாவப் புகழ்கிறான். அதுமட்டுமல்லாமல் இராமனைக் குறைகூறிய தன் மனைவி தாரைமீது கோபம்கொண்ட வாலி நீ பெண் என்பதால் இராமனைப் பற்றி இழிவாகக் கூறி, 'பிழை செய்துவிட்டாய்' என்று எடுத்துக் கொள்ளாமல் அல்லது இராமனை பற்றித் தவறாகக் கூறியதற்கு, நீ பெண் என்பதால் பிழைத்தாய் இல்லை என்றால் அழித்திருப்பேன் என்று வாலி கூறுவதாக அமைந்த,

"பிழைத்தனை; பாவி! உன்பெண்மையால் என்றான்"

(வாலிவதைப்படலம்-3965)

இப்பகுதியால் அறியலாம்.

இராமனின் கணையால் தாக்கப்பட்ட வாலிக்கும் இராமனுக்கும் வாக்குவாதத்தை வைத்து இதில் வாலி இராமனை பழிதூற்றிப் பேசுவதாக அமைக்கின்றார் கம்பர். இராமன் மீதான பழிச் சொற்களை ஆராய்ந்து பார்த்தால் இராமன் மீது வாலிக்கு இருக்கும் உயர்ந்த மதிப்பை உணரலாம்.

"அப்பா பரக்களி இது நீ பூண்டால்
புகழை யார் பறிக்கற்பாலார் " (வாலிவதை படலம்.-4021)

என்ற இந்த வரிகளை உற்று நோக்கினால் உலகில் புகழுக்குரியவன் இராமன் என்பது புலப்படும். இவ்வாறு மரணத்தறுவாயில் இருக்கும்போதுகூட வாலி, இராமனது பண்பு நலன்களையும் குணநலத்தையும் உயர்வாகப் பேசுகின்றான். இதன் மூலம் வாலியின் மனநிலையில் இராமன் உன்னதமான இடத்தை பெற்றிருக்கிறான் என்பது தெளிவாகிறது.

இராமனின் அடைக்கலப்பொருள்

தன்னை நம்பி வந்தவர்களின் அல்லது தன்னிடம் தஞ்சம் புகுந்தவர்களின் துயரை துடைப்பதென்பது இன்றளவும் கடைப்பிடித்து வரும் மானுடப் பண்புகளில் ஒன்றாகும். இந்த அடிப்படையில் நோக்கும் போது இராமனிடம் சரணாகதி அடைந்த அடைக்கலப் பொருளானான் சுக்ரீவன். அதாவது தனது அண்ணனால் தான் அடித்து விரட்டப்பட்டதையும் தன் மனைவியை கவர்ந்து கொண்டதையும் கூறித் தனது துயரை துடைக்குமாறு இராமனிடம் அடைக்கலம் புகுகின்றான் சுக்ரீவன். இந்தச் சூழ்நிலையில் அவனது துயரைத் நீக்க வேண்டியது இராமனின் கடமையாகிறது. இங்கு சுக்ரீவனின் துயராக இருப்பது வாலியே! எனவே, வாலி என்ற கதாபாத்திரம் இராமனால் அகற்றப்பட வேண்டிய கட்டாயச் சூழல் ஏற்படுகிறது. இல்லையெனில் அடைக்கலப் பொருளின் துயர் நீக்கா செயல் இராமனின் பண்பிற்கு களங்கம் எற்படுத்துவதாக அமைந்துவிடும் என்பதைத் தெளிவுப்படுத்துகின்றார் ஆசிரியர்.

வாலியை அகற்றுதல்

வாலி என்னும் கதாபாத்திரத்தை அகற்றுதல் என்பது சுக்ரீவனின் துயரை துடைத்தல் என்பதாகும். வாலியை அழித்தல் எப்படி? என்பதன்பொருட்டு சுக்ரீவன் இராமன் இலக்குவன், மற்றும் அனுமன் ஆகியோர் ஆலோசனை நடத்துகின்றனர். அதன் விளைவாக வாலிமீது இராமன் மறைந்திருந்து அம்பு எய்துவது

என்ற முடிவு எடுக்கப்படுகிறது. இதன் பொருட்டு சுக்ரீவன் வாலியை போருக்கு அழைக்கின்றான் இருவரும் போர் செய்யும்போது இராமன் மறைந்திருந்து அம்பு எய்தி வாலியை அழிக்கிறான். கதை ஓட்டத்தின் வாயிலாகவே வாலி என்கின்ற பாத்திரம் அகற்றப்பட வேண்டியதென்பது நமக்கு புலப்படுகிறது.

வாலி வதை – இராமனின் உயரிய பண்பு

வாலியைக் கொன்றதன் மூலம் எல்லா குணநலன்களும் மிக்க இராமன் என்கிற தலைமைப் பாத்திரம் வீழ்ச்சியை சந்திக்காமல் தன்னுடைய பண்பு நலன்களில் மேலும் உயர்ந்து நிற்பதை கம்பராமாயணத்தில் பார்க்கலாம். இராமன் தன்மீது மறைந்திருந்து அம்பு தொடுத்ததால் அவன்மீது பல குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்கின்றான் வாலி. அவனது அனைத்து குற்றச்சாட்டுகளுக்கும் இராமன் பதில் அழிப்பதோடு அவனின் தவறை எடுத்துரைத்து அவனுக்குப் புரியவைக்கின்றான். இராமனின் குற்றச்சாட்டுகளை ஒப்புக்கொண்ட வாலி இராமனிடம் இறுதியாக என்மீது மறைந்திருந்து அம்பு எய்தது ஏன்? என்று கேட்கின்றான். வாலியின் இந்த கேள்வி, நம் அனைவர் உள்ளத்திலும் எழும் கேள்வியாகும். இந்த கேள்விக்கு இராமன் பதில் கூறாமல் மௌனம் சாதிக்கின்றான்.

இலக்குவன் பதில்

வாலி இறுதியாகக் கேட்ட கேள்விக்கு இலக்குவன் பதில் உரைக்கின்றான். நானும் எனது அண்ணனும் காட்டில் வந்துகொண்டு இருக்கும்போது உனது தம்பி எனது அண்ணனைக் கண்ட உடன் காலில் விழுந்து சரணாகதி அடைந்து அடைக்கலம் ஆனான்; அதோடு உன்மூலமாக தனக்கு நேர்ந்த துன்பத்தையும் அவனது மனைவியை நீ கவர்ந்துகொண்டு கொடுமை செய்ததையும் எடுத்துக்கூறித் தனது துன்பத்தை நீக்கவேண்டும் என்று கூறினான். இதைக்கேட்ட எனது அண்ணன், தம்பியின் மனைவியை கவர்ந்து முறையற்ற செயலைச்செய்த உன்னை அழிப்பதாக உனது தம்பி-யிடம் வாக்குக் கொடுத்துவிட்டார். இந்நிலையில் உன்முன் எனது அண்ணன் வந்து நின்றிருந்தால் நீயும், தானும் அடைக்கலம் என்று கூறி, 'எனது அண்ணன் காலில் அடைக்கலம் அடைந்திருப்பாய் அப்படி அடைக்கலமான உன்னைக் கொல்ல இயலாது எனவே, உனது தம்பிக்கு கொடுத்த சத்தியத்தை நிறைவேற்றவே மறைந்து நின்று அம்பு எய்தினார்' என்று கூறினான். இதனை,

"அடைக்கலம் யானும்" என்றி

என்பது கருதி, அண்ணல், மறைந்து

"நின்று எய்த்து' என்றான்"; (வாலிவதைப்படலம்-4059)

இப்பகுதியால் அறியலாம்.

வாசகன் கேள்வியும் கம்பனின் பதிலும்

இலக்குவனின் இத்தகைய பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நாம் சொல்ல இயலாது. ஏனெனில், இராமனைப் பற்றிச் சற்றுக் குறைவாகக் கூறிய தனது மனைவி தாரையை உன் பெண்மையால் பிழைத்தாய் பாவி! என்று கூறும் அளவிற்கு வாலி மனதில் இராமன் உயர்ந்திருந்ததை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டும் கம்பர். இராமனின் அம்பு பட்டுத் தான் அழியும் தருவாயில் வாலி, இராமனை இகழ்வது போல் காட்டுகின்றார். இதனைக் கூர்ந்து நோக்கினால் இராமனின் பெருமையையே எடுத்துரைப்பது புலப்படும். இவ்வாறு இராமனை தன் மனமென்னும் சிம்மாசனத்தில் வீற்றிருக்கச் செய்த வாலி, இராமனை நேரில் பார்க்கும் தருணத்தில் அவனை சரணடைந்திருக்கமாட்டன் என்று கூற இயலாது என்ற கருத்தினைக் கம்பராமாயணத்தை நுணுகப் படிப்பவர் அனைவருக்கும் உணர்த்துகிறார் கம்பர்.

இராமனின் மவுனமும் கம்பரின் விளக்கமும்

வாலி கேட்ட இறுதிக்கேள்விக்கு இராமன் பதில் கூறாமல் இலக்குமன் பதில் கூறியது எவ்வாறு இராமனை மேன்மைப்படுத்தும்? அல்லது இராமன் பதில் கூறாது இருந்தது ஏன்? என்ற கேள்விகள் வாசகன் உள்ளத்தில் எழுவது இயல்பாகும். காப்பியத்தைப் படைக்கும் படைப்பாளன் தான் அமைத்த தலைமைப் பாத்திரத்திற்கு இழுக்கு நேராவண்ணம் இராமனுக்கு எழுந்த சிக்கலை விடுவிக்கிறார் ஆசிரியர்.

அதாவது இலக்குவன் கூறிய அதே பதிலை இராமன் கூறிருக்கலாம். ஆனால் இராமன் அந்த பதிலைக் கூறாதது ஏனெனில், 'நான் உன்முன் வந்திருந்தால் நீ எனது காலில் விழுந்து அடைக்கலம் கேட்டிருப்பாய்' என்று கூறியிருந்தால் அது உயரிய குணநலன்களைக் கொண்ட இராமன் என்ற கதாப்பாத்திரம் அதனின்று சற்று வழுக்கிக் கர்வமும் ஆணவமும் நிறைந்ததாகக் கருதப்படும். ஆகவே, இங்கு இராமன் பதில் கூறாததன் மூலம் தன் பண்பு நலனில் மேலும் உயர்ந்து நிற்கின்றான் என்பதைப் புலப்படுத்துகிறார்.

தொகுப்புரை

முதன்மைப் பாத்திரத்தையும் எதிர்நிலைப் பாத்திரத்தையும் வாதத்தில் ஈடுபடச்செய்து அதன் மூலம் வாசகனுக்குத் தெளிவை ஏற்படுத்துகிறார். மேலும் இராமன் வாலி இருவரின் வாக்குவாதத்தின் மூலம் இராமனைப் பற்றிதான வாலியின் மதிப்சிடு என்ன என்பதை வாசகனுக்குப் புரியவைக்கிறார் கம்பர்.

இராமன்மீது இருந்த களங்கத்தை இருவரின் வாக்குவாதத்தின் மூலம் நீக்குவதோடு இராமனின் சிறப்பிற்கு மேலும் மெருகேற்றுகிறார் கம்பர். மேலும் வாலியின் இறுதியான கேள்விக்கு இராமன் பதில் கூறாமல் இருந்ததன் மூலமாகவே இராமனின் புகழுக்கு மெறுகேற்றுகிறார் கம்பர். இவ்வாறு கதை ஓட்டத்தின் வாயிலாகவே இராமனும் வாலியும் வாதத்தில் ஈடுபடுவது போன்று நீண்டதொரு காட்சியை அமைத்து அதில் இராமன் மீதான புகழுக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் கம்பரின் கட்டமைப்புத்திறன் மிகவும் சிறப்பிற்குரியதாகும்.

கம்பர் காட்டும் உயிரில் கலந்த உறவு

முனைவர் கூ.முத்தன்
தமிழ்த்துறை இணைப்பேராசிரியர், மதுரைக் கல்லூரி,
மதுரை.

இந்தியப் பண்பாட்டில் குறிப்பாகத் தமிழ் பண்பாட்டில் கணவன் மனைவி உறவு என்பது மிக உன்னதமான பண்பாடாக உள்ளது. இந்தப் பண்பாட்டுத்தளத்தைக் கம்பர் தம் காப்பியத்தில் எப்படிக் காட்டியிருக்கிறார் என்பதை இவ்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்ப்பண்பாட்டில் கணவன் மனைவி உறவு

இறைவனைத் தலைவனாகக் கொண்டு தன்னைத் தலைவியாகப் பாவித்து இறைவனோடு ஒன்று கலப்பதற்காகத்தான் திருஞானசம்பந்தர், மாணிக்கவாசகர், திருமங்கையாழ்வார், குலசேகர இழ்வார் போன்ற அடியார்கள் தங்களது பாசுரங்களை அருளிச் செய்தார்கள். ஆக ஆழ்வார்களும் நாயன்மார்களும் கணவன் மனைவி உறவைத் தெய்வீக உறவாகக் கொண்டனர். சங்ககாலம் தொட்டு இன்றுவரை தமிழ்ச்சமூகத்தில் இவ்வுறவு ஒரு புனித உறவாகவே மதிக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த உறவை கம்பர் தம் காப்பியத்தில் இராமன் - சீதை, தசரதன்-கோசலை, சுமித்திரை, கைகேயி, கௌதமர் - அகலிகை, இராவணன் - மண்டோதரி, சுந்ததன்-தாடகை, வாலி-தாரை என இப்படியாக பல கணவன் மனைவி உறவைக் காட்டிச் செல்கிறார். இக்கணவன் மனைவி உறவில் வாலி-தாரைக்குமான உறவை மிக அழகாக உணர்ச்சி பூர்வமாக தெய்வீகமானதாகக் காட்சிச்செல்கிறார்.

தமிழ் இலக்கியங்கள் காட்டும் கணவன் – மனைவி உறவுநிலை

சங்க காலம் தொட்டு இக்காலம் வரை மனித வாழ்க்கையை நெறிப்படுத்த உயர்வுபடுத்த விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என இயற்கைப் பொருள்களின் வாழ்வியலை நம் கண்முன் நிறுத்தியிருக்கிறார்கள் புலவர்கள். சங்க அகவாழ்க்கையானாலும் சரி, புறவாழ்க்கையானாலும் சரி கருப்பொருளை வைத்தே கருத்தை விளக்கியிருக்கின்றனர். வறுமையை விளக்க, "திறாவாக் கண்ண சாய் செவிக்குருளை கறவாப் பால்முலை கவர்தல் நோனாது" என்ற சிறுபாணாற்றுப்பாடலும், மன்னனின் வீரத்தைப் பற்றி விளக்குவதற்கு,

"துஞ்சுபுலி இடறிய சிதடன் போல" என்ற புறநானூற்றுப் பாடலும், புலவர்களால் கையாளப்பட்டிருப்பது போல கணவன் மனைவி உறவு நிலையை குறுந்தொகைப்பாடல் மிக அழகாக விளக்கி நிற்கிறது.

"கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செருக்கும்"

(குறுந்.69)

கரிய கண்களையும் வலிமையையும் உடைய இண்குரங்கு இறந்துபடுகிற போது அதன் பிரிவுத் துன்பத்தைத் தாங்கிக் கொள்ளாத பெண குரங்கு தாவுதல் தொழிலை அறியாதத் தன் கடுவன் குட்டியைச் சுற்றத்தினிடத்து அடைக்கலமாகச் சேர்ப்பித்த பின் உயர்ந்த மலையின் மீது ஏறிக்குதித்துத் தன் உயிரைப் போக்கிக் கொள்ளும் என்ற கருத்தை இப்பாடல் உணர்த்தி நிற்கிறது. இந்த குரங்கின் வாழ்க்கையை மனித வாழ்க்கையை நெறிப்படுத்தப் புலவர் கையாண்டிருக்கிறார். இந்த அடிப்படையில்தான் சங்கப் புலவர்கள் மான், யானை, குரங்கு, அன்னம், மயில், மகன்றில், புறா என விலங்கு, பறவைகளின் இல்லற வாழ்க்கையை இனிதே விளக்கியிருக்கிறார்கள். சங்கப் புலவர்களைப் போல கம்பரும் குரங்கினத்தைச் சேர்ந்த வாலி - தாரை மூலமாக உயர்ந்த கணவன் மனைவி உறவை விளக்கிச் செல்கிறார்.

வாலி – தாரை

இராமன், தசரதன், இராவணன, சுந்ததன் என்பவர்களின் இல்லற வாழ்வில் இராமன் திருமாலின் அவதாரம், தசரதல் மாபெரும் சக்கரவர்த்தி, இராவணன், சுந்ததன் அரக்கர்கள், தெய்வம், மனிதன், அரக்கர் என்ற நிலையில் இவர்கள் வாழ்க்கை இருந்தபோதும் இம்மூன்று நில வாழ்க்கையிலும் சேராமல் விலங்கு வாழ்க்கையை மேற்கொண்டவர்கள் தான் வாலியும் தாரையும், இராமன் வாயாலே வாலி ஒரு விலங்குப் பிறப்பு என்று அடையாளப்படுத்தப்பட்டவன். அதாவது இராமனின் அறிவுரைப்படி சுக்கிரீவன் வாலியை வலிய போருக்கு அழைத்துப் போர் செய்யவேண்டும். அப்போது தனித்து நின்று வாலிமீது இராமன் அம்பெய்துவது, இந்த ஒப்பந்த அடிப்படை-யில்தான் வாலியைப் போருக்கு அழைக்கிறான் சுக்கிரீவன். அப்போது சுக்கிரீவன் முகத்தில் கிடந்த மகிழ்ச்சியைக் கண்ட இலக்குமணன் இராமனை நோக்கிப் பேசுகிறார்.

"வள்ளற் கிளையான் பகர்வா னிவன் தம்முன் வாணாள்
கொள்ளக் கொடுங்கூற் றுவனைக் கொணர்ந்தான் குரங்கின்
எள்ளற் கரும்போரது செய்கல னென்னு மின்னல்
உள்ளத்தினூன்ற வுணர்வுயற்றில னொன்று மென்றான்"

(கிட்கிந்தா. வாலி வதைப்படலம், பா.32)

அதாவது தன் உடன்பிறந்த அண்ணனைக் கொல்வதற்கு எமனை அழைத்து வந்திருக்கும் இந்த சுக்கிரீவனிடம் நாம் தர்மத்தை எதிர்பார்க்கலாமா என்ற இலக்குமணனின் ஒயத்திற்கு இராமன் பதில் சொல்கிறார்.

"அத்தா விதுகேளென வாரியன் கூறுவானிப்
பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேசலாமோ
எத்தாயர் வயிற்றினும் பின் பிறந்தோர்களெல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத்தம னாதலுண்டோ"

(கிட்கிந்தா. வாலி வதைப்படலம், பா.34)

அதாவது விலங்குகளின் வாழ்க்கையில் மனித வாழ்க்கையின் தர்மத்தை எதிர்பார்த்தல் கூடாது என இராமன் பேசுகிறான். இராமனின் பேச்சில் வாலியும் சுக்கிரீவனும் விலங்குகள் என்பது வெளிப்படுகிறது. அதேபோல வாலி இராமனை நோக்கிப் பேசுகின்றபோது பல இடங்களில் நான் விலங்கான குரங்கினத்தைச் சேர்ந்தவன். என்னிடம் மனித ஒழுக்கலாறுகளையோ, தர்மத்தையோ பார்த்தல் கூடாது. விலங்குகளுக்கான என்ன வாழ்க்கை நிலையோ அதைத்தான் எனது வாழ்க்கையில் எதிர்பார்த்தல் வேண்டுமெனப் பேசுகிறான். இந்த விலங்கினத்தைச் சேர்ந்த வாலி-தாரை என்ற கணவன் - மனைவி என்ற உறவை எவ்வளவு உயர்வாகப் படைத்திருக்கிறார் கம்பர் என்பதுதான் இங்கு சிந்திக்கத்தக்கதாகும்.

வாலி–தாரை உறவுநிலை

கிட்கிந்தா காண்டத்தில்தான் வாலி - தாரை என்ற இருவருக்குமான உறவுநிலை அறிமுகப்படுத்தப்படுகிறது. வாலியின் வல்லமையும், தாரையின் பெண்மையின் மேன்மையும் கம்பரால் விளக்கிக் காட்டப்படுகிறது. வாலியின் மனைவியான தாரை தன் கணவன் சுக்கிரீவனுடன் போருக்குச் செல்லப் புறப்படும் போதுதான் அவனைத் தடுப்பதற்காகக் காப்பியத்திற்குள் நுழைகிறாள். தாரையின் அறிமுகத்தை மிக நயம்பட உரைக்கிறார் கம்பர். 'தாரை என்ற

அமிழ்தில் தோன்றிய', 'மலைக்குல மயிலென மடந்தை' என்றெல்லாம் போற்றும் கம்பர் புல்லாங்குழலின் இசை, யாழின் இசை, வீணையின் ஒலி இவையெல்லாம் தாரையின் குரல் இனிமைக்கு ஒப்பாகாது என இனிமைப்படுத்துகிறார். அமிழ்தம் வேண்டி தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடையும் பொழுது அமிழ்தம் தோன்றும் தருணத்தில் சோர்வடைகிறார்கள். இத்தருணத்தில் வாலி என்றொருவன் தனியாகப் பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமிழ்தத்தை வழங்கும் இற்றல் படைத்தவாலி தன்இல்லாளின் மன மகிழ்ச்சிக்காகவே வாழ்க்கை நடத்துவதையும், தாரை தன் கணவனுக்காக வாழ்க்கை நடத்துவதையும் கம்பர் தம் காப்பியத்தில் விளக்கிச் செல்கிறார்.

கணவரைக் காப்பாற்ற தாரையின் செயல்பாடு

சங்க இலக்கியத்தில் நெய்தலுக்கும், பாலைக்கும் உரிய உரிப்பொருள் இரங்கல், பிரிதல் என்பதாகும். காரணம் இந்நிலத்தில் பிரிந்து சென்ற தலைவன் உயிருக்கு எதுவும் நிகழலாம். இகவே மற்ற நிலத்தைக் காட்டிலும் இந்நிலத்தில் வாழும் பெண்கள் தலைவனைப் பிரிகின்ற போது பெரும்துயரம் கொள்வார்கள். அதுபோல இப்பொழுது வாலிக்கும் சுக்கிரீவனுக்கும் போர் நடைபெறப்போகிறது. இத்தருணத்தில் தன் கணவன் மீது கொண்ட அன்பின் காரணமாக போரில் எதுவும் நிகழலாம் என அஞ்சுகிறாள் தாரை. இதைத் தடுப்பதற்கு முயற்சிக்கிறாள். "தன் எண்ணத்தைத் தன் கணவனான வாலியிடம் கூறுகிறாள். தன் உயிர்க்கு அஞ்சி ஓடி ஒளிந்தவனுக்கு நாட்டை விட்டோடி நாடோடியாகத் திரிந்தவனுக்கு இன்று எதிர்க்கும் துணிவு புதிய துணையால் வந்துள்ளது. எனவே போருக்குப் போகாதே" என்று தடுக்கிறாள். அதுவும் துணையாய் வந்திருப்பவன் வேறு யாருமல்ல இராமனே எனவும் கூறுகிறாள். சுக்கிரீவனுக்கு இராமன் துணையாக வந்திருப்பதற்காகத்தான் தாரை பயப்படுகிறாள். இராமனைத் தவிர்த்து வேறு யார் வந்திருந்தாலும் அவர்களைத் தன் கணவன் எளிதில் கொன்றுவிடுவான் என்பது அவளது கருத்து. இராமன் வந்திருப்பதால் தன் கணவனுக்கு யாது நிகழுமோ எனப் பயப்படுகிறாள். அவளது பயத்தை அறிந்து கொண்ட வாலி "தான் ஒருவனாக பாற்கடலைக் கடைந்த நிகழ்வு போன்ற பல வலிமை மிக்க செயல்களைத் தாரைக்கு நினைவுப்படுத்துகிறான்". மேலும் இராமன் தர்மத்தின் தலைவன் தன் தம்பிக்காக நாட்டைத் துறந்தவன். என்னைக் கொல்வதால் இராமனுக்கு என்ன பயன் என வாலி தாரையை அறுதல்படுத்துகிறான். இனாலும் தாரையால் அமைதி

அடைய முடியவில்லை. தன் கணவனுக்கு ஏதும் நிகழ்ந்துவிடுமோ எனப் பயப்படுகிறாள்.

உயிரில் கலந்த உறவு

சுக்கிரீவனுடன் போருக்குச் செல்ல வேண்டாம் என வாலியின் முகத்தைப் பார்த்துப் பேசிய தாரைக்கு அடுத்த சந்திப்பு என்பது இறந்துபோன வாலியின் உடலைப் பார்த்து பேசுவதாகத்தான் அவளுக்கு அமைகிறது. சுக்கிரீவனுடன் வாலி போர் செய்கின்றபோது இராமன் வாலி மீது அம்பெய்துகிறான். அதனால் வாலி இறப்புக்குள்ளாகிறான். வாலியின் இறப்பு தாரைக்கு சொல்லப்படுகிறது. தாரை போர்க்களம் நோக்கி ஓடிவருகிறாள். இந்த சந்திப்பில் தான் வாலிக்கும் தாரைக்கும் உள்ள உன்னதமான உறவை விளக்கிச் செல்கிறார் கம்பர். போர்க்களம் வந்த தாரை இறந்துகிடக்கும் தன் கணவன் வாலியைப் பார்க்கிறாள். அவனது உடலிலிருந்து இரத்தம் பொங்கி வழிந்து கொண்டிருக்கிறது. அப்படியே அவனது உடலில் விழுந்து கட்டிப்புரள்கிறாள்.

"குங்குமங் கொட்டியன்ன குவிமுலைக் குவட்டிற் கொத்த
பொங்குவெங் குருதி போர்ப்பப் புரிகுழல் சிவப்பப் பொற்றோள்
அங்கவனலங்கன் மார்பிற் புரண்டன ளகன்ற செக்கர்
வெங்கதிர் விசும்பிற் றோன்று மின்னெனத் திகழு மெய்யாள்"

(கிட்கிந்தா. தாரை புலம்புறு படலம், பா.2)

வாலியின் உடலிலிருந்து பெருக்கெடுத்து ஓடிவரும் இரத்தம் தாரையின் உடலையும் கூந்தலையும் நனைத்து விடுகிறது. மனிதவாழ்க்கையில் தன் கணவன் இறந்துபடுகிறபோது மனைவி கணவன் உடலைக் கட்டிப்பிடித்து அழுகின்ற காட்சியை கம்பர் பார்த்திருக்கிறார். அக்காட்சியை கம்பர் நம் கண்முன் நிறுத்துகிறார். இரத்தம் தோய்ந்த தாரை வாலியின் உடலைப் பார்த்து பேசும் பேச்சுக்கள் வாலி - தாரை என்ற கணவன் மனைவி உறவுநிலை வெளிப்படுகிறது. "மேன்மை பெற்ற எனது அருமையான உயிர் போன்றவனே, மலைகள் போன்ற வலிமையான உன் தோள்களிடையே நாள்தோறும் நான் தங்குகின்றபோது இதுநாள் வரை துன்பம் இன்னதென்று அறிந்திலேன் இன்று உனது இவ்வாறான நிலைமையைப் பார்க்கப் பயப்படுகிறேன் என்று பேசிய தாரை இன்னும் சற்றுத் துயரத்துடனே வாலியைப் பார்த்து,

"துயராலே தொலையாத என்னைஉம்
பயிராயோ பகையாத பண்பினோங்
செயிர் தீராவிதி யான தெய்வமே
உயிர்போனாலுட லாரு பூழ்ப்வாரோ"

(கிட்கிந்தா. தாரை புலம்புறு படலம். பா.5)

இதுவரையில் எப்போதும் என்னோடு மாறுபடாத குணத்தையுடையவனை! உனக்கு நேர்ந்த துன்பத்தைக் கண்டதும் இந்நேரம். என் உயிர் பிரிந்திருக்க வேண்டும். அவ்வாறு பிரியாது உன் முன்பாக வந்து நின்று கொண்டிருக்கிறேனே அதைக் கண்டும் கோபம் கொள்ளாமல் அமைதியாக இருக்கிறாயே! என் உயிராகிய நீ போனதற்குப் பின்பு உயிரில்லாத என் உடம்பு இனிப்பிழைக்குமோ என்று அவள் கூறி அழுகின்றபோது காப்பியத்தைப் படிக்கிற நம்மை கலங்கச் செய்து விடுகிறார் கம்பர். கம்பன் காட்டும் இந்நிகழ்ச்சி சிலம்பில் பாண்டியனின் மனைவி கோப்பெருந்தேவியின் இறப்பு நம் கண்முன் தோன்றுகிறது. இவ்வாறாக நம்மை கலங்க வைத்த கம்பர் இன்னும் தாரையின் நிலையை நம்முன் காட்டி துன்பத்தின் எல்லைக்கே அழைத்துச் சென்றுவிடுகிறார். "உயிர் துறக்கையில் உடல் இன்பமடைவதென்பது உலகத்தில் இல்லை. இனால் உலகத்தில் நடவாத செயலை நீ செய்து கொண்டிருக்கிறாய்" என்று வாலியை நோக்கிப் பேசுகிறாள் தாரை. நான் இங்கு வருந்துகிறேன். துயர் அடைகிறேன். என் துயருக்குச் செவி சாய்க்காது தேவர்கள் வாழும் மேன்மையான நாட்டை அடைந்து அங்கு இன்பத்தை அனுபவித்துக் கொணடிருக்கின்றாயே. என்னை நோக்கி மிக்க அன்புடன் நீயே என் உயிர் என்றாயே உன் உயிரான நான் இங்கு துன்பமடைய உன் உடல் மட்டும் எப்படி இன்பம் அடையமுடியும் அப்படியானால் நீ கூறியது பொய்யோ என்று பேசும் தாரை இன்னும் சற்று மேலாக.

"செருவார் தோளநின் சிந்தையுளெனெனின்
மருவார் வெஞ்சர மெனையும் வவ்வுமால்
ஒருவே னுள்ளுளை யாகி லுய்தியால்
இருவே முள்ளிரு வேமிருந்திலேம்"

(கிட்கிந்தா. தாரை புலம்புறு படலம். பா.10)

என இறந்து கிடக்கும் வாலியை நோக்கிப் பேசுகிறாள். நாம் இல்லறத்தை இனிதே துயத்தபோது. என்னை நோக்கி உன் இதயம் என்னிடத்தில் இருக்கிறது என்றாய். நானும் உன்னை நோக்கி உன்

இதயம் என்னிடம் இருக்கிறது என்று மாறி மாறி கூறினோம். நாம் பேசியது உண்மையென்றால் உன் உடலில் பாய்ந்த இராமனின் அம்பானது என் இதயத்தைத் தைத்து என் உயிர் போயிருக்க வேண்டும். இனால் இறந்திருப்பது நீதானே அப்படியானால் இருவரும் பொய் பேசியிருக்கிறோமா எனக் கேட்டு, வாலியின் உடலில் புரண்டு அழுகிறாள். ஒரு பெண் தனது கணவன் இறந்துபட அவனது உடலைப் பார்த்து கதறி அழும்போது தன் அழுகையைக் கேட்டு தன் கணவன் விழித்து விடமாட்டானா என ஏங்குவாள். அவ்வாறு அவன் கண்விழிக்கவில்லை என்றால் தாங்கள் என்னதான் கணவன் மனைவியாக வாழ்ந்தோம் என்ற அவர்களின் வாழ்க்கையே அவர்களுக்கு வெறுப்பைத் தரும். இந்த ஒயம் தான் தாரைக்கும் இருந்தது. தன் கணவன் இறந்து கிடக்கிறான். வாலியின் மார்பின் வலிமையை உணர்ந்த தாரை அவனது மார்பை அவ்வளவு எளிதாக எந்த அம்பும் துளைத்துவிட முடியாது. இனாலும் இன்று அவனது மார்பை ஒரு அம்பு துளைத்திருக்கிறதே. அப்படியானால் இறந்திருப்பது வாலி என்ற மாயத்தோற்றமோ என்று ஒயப்படுகிறாள் தாரை. இவ்வாறாக வாலியின் உடலில் புரண்டும் அழும் தாரையின் ஒவ்வொரு புலம்பலும் வாலி-தாரை என்ற கணவன் மனைவியின் உறவின் உன்னதத்தை ஒரு தெய்வீக உறவாகக் காட்டிச் செல்கிறார் கம்பர்.

ஆழியில் தோன்றிய அமிழ்தம்

முனைவர் க.முருகேசன்
தமிழ்த்துறைத் தலைவர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

கம்பருடைய காப்பியத்தில் வலம்வருகின்ற எண்ணற்ற பாத்திரங்களில் உலகெலாம் போற்றும் உத்தமப் பாத்திரங்களும் உண்டு. பிறருக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்துக்கொள்ளும் பண்பு நிறைந்த பாத்திரங்களும் உண்டு. காப்பியத்தின் தொடக்கம்முதல் நிறைவுவரை மிகுதியான பாடல்களில் இடம்பிடித்துக் கொண்டு காப்பியத்திற்கு மெருகூட்டிய பாத்திரங்களைப் போலவே மிகக் குறுகிய பாடல்களில் பாடப்பட்டுள்ள தலைமைப் பாத்திரங்களின் செயற்பாடுகளுக்குத் துணையாகநின்று காப்பியத்தின் கதைப்போக்கிற்கும் காவிய மாந்தர்களின் சீரிய வாழ்விற்கும் வலுச்சேர்க்கும் வகையில் அமைந்துள்ள தூண்டுகோல்களாகிய துணைப்பாத்திரங்களில் தாரை என்னும் பாத்திரம் நெஞ்சில் நிற்கும் பாத்திமாகும். வாலியின் மனையாளாகிய தாரையின் குணநலன்களையும் பிரியாவிடை என்பது இல்லாத அன்புள்ளமும் அரசியல் அறிவும் பின்னாளில் நிகழப்போவதை முன்னால் அறிந்துகொள்ளக்கூடிய நுண்ணறிவும் வாய்க்கப் பெற்றிருந்த தன்மையை இக்கட்டுரை படம் பிடிக்கின்றது.

தாரை யார்?

மேருவை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிப் பாற்கடலைக் கடையப்பட்டபோது வெளிப்பட்ட அருள் வடிவங்களில் முதலாவதாகத் தோன்றியவள் தாரை. இவளை. 'அமிழ்தின் தோன்றிய வேயிடைத் தோளினள்' என்றும், 'இசையினும் இனிய சொல்லால்' என்றும் கம்பர் பாடி மகிழ்கின்றார். தன் கணவனாகிய வாலிக்கு நல்லறத்தை அறிவுறுத்தக்கூடிய நுண்ணறிவு அவளிடம் இருந்தது. அதேசமயம் சிந்தித்துச் செயலாற்றக்கூடிய பொறுமையும் அவளிடம் இருந்ததைக் கம்பரின் வரிகள் காட்சிப்படுத்துகின்றன.

"கொற்றவநின் பெருங்குவவுத் தோள்வலிக்கு
இற்றனன், முன்னைநாள் ஈடுஉண்டு ஏகினான்
பெற்றிலன் பெருந்திறல் பெயர்த்தும் போர் செயற்கு
உற்றது, நெடுந்துணை உடைமையால் என்றான் (3958)

என்ற பாடலின் வாலியின் தம்பியாகிய சுக்ரீவன் நேற்று நடந்த போரில் அஞ்சி ஓடியதையும் இன்று வாலியை எதிர்த்துப் போர்

செய்யும் பேராற்றலைப் பெற்றுள்ளான் என்றும் எடுத்துச் சொல்லி, போரில் இருந்து விலக்குவதற்கு முயற்சி செய்தாள் தாரை. துன்பமிக்க காலத்திலும் நீங்காது நெடிது நின்று உதவக்கூடிய நெடுந்துணை சுக்கிரீவனுக்குக் கிடைத்துள்ளதையும், பெயர்த்துப் போர் செய்வதற்கு உற்ற காரணத்தை ஊகித்தறியும் தாரையின் அறிவுத்திறமும் ஈண்டு நோக்கத்தக்கது.

எச்சரிக்கையும் மறுப்பும்

தாரையின் சொல்லை வாலி எள்ளி நகையாடுகிறான். தன்னுடைய வீரத்தைப் பெரிதாகக் கருதி எதிரியின் பலத்தைக் குறைத்து மதிப்பிடுகின்றான். பாற்கடலைக் கடைந்து அமிழ்தம் எடுத்துத் தேவர்களுக்கு அளித்த பெரும் செயலை உலகத்தார் மறக்கக்கூடியதா? என வினாத்தொடுக்கிறான். தேவர்களையும் அசுரர்களையும் எமனையும் அஞ்சுமாறு செய்யும் தோள் வலிமைம தனக்கு உண்டு என்பதில் வாலியின் சொல்வலிமைம பெறுகின்றது. அதுமட்டுமல்லாமல், தனக்கு இயல்பாக அமைந்துள்ள வலிமையோடு தன்னை எதிர்த்துப் போரின் வன்மையில் பாதியும் தனக்குச் சேர்ந்துவிடுவதால் தன்னை யாரும் அழிக்க முடியாது என்று ஆணித்தரமாக நம்பினான்.

'அரங்கில் ஆடுவார்க்கு அன்புபூண்டு உடைவரம் அறியேன் (6177) என்று இவ்வரம் பெற்ற செய்தியையும், 'என் வலி அவன் வயின் எய்த வரங்கொள் வாலியால் தோற்றனென்' (6177) என்று இராவணனைப் பாதி வலிமையால் தோற்கடித்த செய்தியையும் வாலி உணர்த்துகிறான். அப்போது,

"அன்னது கேட்டவள், அரசு ஆயவர்க்கு
இன்உயிர் நட்பு அமைந்து இராமன் என்பவன்
உன்உயிர் கோடலுக்கு உடன் வந்தான் எனத்
துன்னியஅன்பினர் சொல்லினர் என்றாள்" (3964)

சுக்ரீவனுக்குத் துணையாக வந்து உன்னுயிரைப் பறிப்பதற்காக வில் வலிமை உடைய இராமன் வந்துள்ளான் என்றும் நன்மை புரியும் உண்மையான அன்புடையவர்கள்சொல்ல இதனைக் கேள்வியுற்றேன் என்றும் உரைக்கின்ற தாரைஅரசியல் அறிவு மிக்கவளாகக் காட்சிதருகின்றாள். மாற்றான் வலிமை குறைந்தவனாக இருந்தாலும், அவனுக்குத் துணையாக வரும் துணைவனின்

வலிமையை எண்ணித்துணிந்த பின்போருக்குச் செல்லுதல் நன்று என்று அறிவுறுத்தக்கூடிய அறிவுத்திறமும் அரசியல் அறிவும் வாய்க்கப்பெற்ற தாரை,

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்" (471)

என்னும் குறள்நெறிக்குச் சான்றாகத் திகழ்கிறாள்.

தாரையின் சொல்லுக்கு, 'அழைத்து அயர் உலகினிற்கு அறத்தின் ஆறு எல்லாம் இழைத்தவர்க்கு' என்று இராமபிரான் தர்மத்தின் வடிவமாக வாழ்ந்து காட்டியதை உணர்த்துகின்றாள். 'மண்ணிடை யாவர் இராகவன் அன்றி மாதவம் அறத்தோடும் வளர்த்தார்?' (97) என்றும், 'அரைகழல் இராமன் ஆகி அறநெறி நிறுத்த வந்தது' (4073) என்றும், இராமபிரானின் அறநெறியைக் கம்பர் பாடி மகிழ்கிறார். தருமம் எங்காவது தன்னை ஒளிக்குமா? தனக்கு ஓர் உவமைஇல்லாத ஒப்பிலியப்பனாகிய இராமபிரான் ஒப்புமைசிறிதும் இல்லாத குரங்கோடு நட்புக்கொள்வானா? தனக்கு உரிமை உடைய அரசைத் தம்பிக்கு விட்டுக்கொடுத்த இராமன் இழிசெயல் செய்வானா? என்றும், 'கூட்டு ஒருவரை வேண்டாக் கொற்றவ' (4023) என்றும் உயர்வான அருங்குணங்கள் பேசப்படுகின்றன. தம்பியரைத் தன்னுயிராகக் கருதும் இராமன் உடன் பிறந்தவர்களுக்கு இடையே ஏற்படும் போரில் பகைமையை நீக்கி ஒன்றுபடுத்த முயல்வானே அன்றி, ஒருபக்கம் சார்ந்து நின்று தனக்கு எதிராக அம்பினைத் தொடுக்க மாட்டான் என்று நம்பிக்கை கொண்ட வாலி, இராமனை 'அருளின் ஆழியான்' என்று போற்றுவதையும் கேட்ட தாரை மௌனமாகிறாள்.

மாட்சியும் வீழ்ச்சியும்

இராமபிரானைத் துணையாகக் கொண்டுபெரும்படை திரட்டி வருகின்ற சுக்ரீவன் வாலியோடு பொருதுகிறான். அப்போரில் நாணோடு தோளுறுத்து இராமன் துறந்த அம்பு வாலியின் உடலைத்துளைக்க, 'மேறுவும் வேர் பறித்தான்' என வாலி வீழ்கிறான்.

வாலிமேல் உலகத்தை அடைந்த செய்திகேட்டு, அடியற்ற மரமாகிய தாரை அவன் பொன்னுடல்மேல் வீழ்ந்து புரண்டு அழுதாள். அக்காட்சியை,

"குங்குமம் கொட்டிஎன்ன, குவிமுலைக் குவட்டுக்கு ஒத்த
பொங்குவெங் குருதிபோர்ப்ப, புரிகுழல் சிவப்ப, பொன்தோள்

அங்குஅவன் அலங்கல் மார்பில் புரண்டனள்- அகன்ற செக்கர்
வெங்கதிர் விசும்பில் தோன்றும் மின்எனத் திகழும் மெய்யாள் (4096)

என்று கம்பர் ஓவியமாகக் காட்டுகின்றார். இதில் இயற்கை அழகு நிறைந்த தாரையின் கொங்கைக் குவடுகளுக்குப் பொருந்துமாறு செயற்கை அழகாகக் குங்குமக்குழம்பைக் கொட்டியதைப் போன்றிருந்தது என்னும் நயம் அவலச்சுவை மிக்கது. வாலியின் குருதி பொங்கும் மார்புக்குச் செவ்வானமும், அவன் மார்பில் வீழ்ந்து புரளும் தாரைக்குச் செவ்வானத்தில் தோன்றிய மின்னலும், உவமையாகின்றன.

தாரை புலம்பிய புலம்பலோசை வேய்ங்குழல் ஒலியாகவும் விளரி என்னும் இரங்கற்பண்ணில் தோன்றிய யாழிசையாகவும், வீணையில் உதிர்ந்த துன்பஒலியாகவும், ஒப்பிடமுடியாத குரலாகக் கம்பன் பேசுகின்றான். இதனோடு, 'குங்குழல் இணைவது போல, அழுதனள்' (143)என்ற புறநானூற்றுப் பாடல் அடியும், ஆப்லங்குழலின் ஏங்கிக் கலங்கு, 'அஞர் உறுவோல்' என்று நற்றிணை (113) பாடல் அடியும் அவலச்சுவையை நெஞ்சில் நிறைக்கின்றன. என் ஆருயிரே என் உள்ளமே நீ மாண்டு கிடக்கும் காட்சியைக் கண்ணால் காண்பதற்கு அஞ்சுகிறேன் என்றும், கடல் கடந்து அமிழ்தம் கடைந்த வாலியின் செயலுக்குத் தேவர்கள் நன்றி மறந்தனரா என்றும் முப்போதும் சிவனின் திருமேனி தீண்டிப் பூசிக்கும் நீ இவ்வளவு நேரம் தங்கி-யிருப்பாயா? என்றும் என் அழுகையைக் கேட்டு ஆறுதல் சொல்லாயோ? நான் என்ன குற்றம் செய்தேன் என்றும் பிலாக்கணம் பாடுகின்றாள்.

உடம்பும் உயிரும் தொடுப்பும் விடுப்பும்

"உடம்பொடு உயிரிடை அன்ன மற்றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு" (1122)

என்னும் வள்ளுவர் வாக்கு, தாரையின் வாக்கில் வெளிப்படுகிறது.

"துயராலே தொலையாத என்னையும்
பயிராயோ பகையாத பண்பினாய்
செயிர்தீரா விதி ஆன தெய்வமே
உயிர்போனால் உடலாரும் உய்வாரோ?" (4099)

என்ற அடிகளில் தாரையும் வாலியும் ஓர்உயிராய், ஒரே மனத்தினராய், ஒன்றி வாழ்ந்த மேன்மையும், பகையாத பண்பினராய்ப்

பண்டுதொட்டிருந்த அன்புப் பிணைப்பும் புலப்படுகின்றது. தன் கணவன் உயிர் போக்கித் தன்னைத் துயரத்தில் ஆழ்த்திய விதியை நினைந்து விதியான தெய்வமே என்று விளித்துவாலியை உயிராகவும், தன்னை உடலாகவும் கருதிய தாரை, 'பொருள்தரப்போயினர் பிரிந்த பொய்உடற்கு உருள்தரு தேர்மிசை உயிர்கொண்டு உயிர்த்தனள்' என்ற பாடலும் ஒப்புமை உடையவளாகத்திகழ்கிறாள்.

வாலியும் தாரையும் ஒருவர் உள்ளத்தில் மற்றொருவர் இருந்தனர் எனக்கூறத்தக்க அன்பு வாழ்க்கை வாழ்ந்த காரணத்தால் அவ்வாழ்க்கை பொய்யோ என்று வினாத்தொடுக்கிறாள்.

"செருஆர் தோளநின் சிந்தை உளேன்எனில்
மருவார் வெஞ்சரம் எனையும் வவ்வுமால்,
ஒருவேனுள் உளை ஆகின் உய்தியால்
இருவே முள் இருவேம் இருந்திலேம்" (4104)

என்ற பாடலில் பொய்யும் மெய்யும் தாரையின் சொல்லில் போரிடுகின்றன. தேவர்களே யாசித்துக்கேட்டாலும் எந்த மறுப்புமின்றிக் கேட்டதைக் கொடுக்கிற குணவானாகிய வாலிக்கு முன்னால் இராமன் கேட்டிருந்தால், இந்த இராச்சியத்தையே கொடுத்திருப்பான் என்றும், தேவர்களுக்கு அமிழ்தம் கொடுத்ததற்கு நன்றிபாராட்டும் வகையில் தேவலோகத்திற்கு உன்னை எதிர்கொண்டு அழைத்தார்களா என்றும் சொல்மழை பொழிந்தும், அருவிநீர் பெருக்கெடுத்துச் சோர்வுற்ற தாரை இது உண்மையா? மாயமா? என்று மயங்கினாள்.

தருமம் என்பது அவரவர் செய்யும் காரியத்தைக் கொண்டே கணக்கிடப்படும் என்பதை அறிந்திருந்த தாரை இராமன் மறைந்திருந்து கொன்ற அறம்கடந்த செயலைச் சொல்லிச் சொல்லி மாய்கிறாள். அவளுடைய அவலத்தைக் கம்பன் எழுதுகோல் வைரவரிகளாக வடித்துள்ள தன்மைக்கு,

"நைவா நின்றனென், நான் இருந்து இங்ஙன்,
மெய்வானோர் திருநாடு மேவினாய்
ஐயா நீ எனது ஆவி என்றதும்
பொய்யோ, பொய் உரையாத புண்ணியா?" (4103)

என்ற பாடல் தக்க சான்று.

உடம்புக்கும் உயிர்க்கும் இடையிலான தொடர்பைக் கம்பன் தன் காப்பியத்தில் தேவைப்படும் இடங்களில் எல்லாம் அழுத்தமாகப்

பதிவு செய்துள்ளார். 'உயிர்கிடக்க உடம்பை ஏற்றினர் உணர்வு இறந்த கூற்றினாரே' என்ற சடாயுவின் கூற்று மூலம் இராமனைப் பிரிந்த பரதனின் சொல்லால் உயிர்நீங்கிய உடம்பு என்றும், மண்டோதரியைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு, மறைந்த இராவணனின் சொல்லும் உடம்புக்கும் உயிருக்குமான தொடர்பினைப் புலப்படுத்துகின்றன. இங்கு, பொய் மொழி பேசாத புண்ணியனான வாலி, 'நீ எனது உயிர் என்று சொன்ன சொல்லைப் பொய்யாக்கிப் போனதாகத் தாரை சுட்டிக்காட்டிப் பொய்யுரைத்துவிட்டு உண்மை பேசுகின்ற தேவர் உலகத்தில் எவ்வாறு உன்னால் செல்ல முடிந்தது என்றும் கேட்டுக் கேட்டுத் துன்பத்தில், ஆழியில் தோன்றிய அவள் ஆழியில் சிக்கித் தவிக்கும் துரும்பாகின்றாள்.

தொகுப்புரை

எந்த உயிரும் பிறப்பெடுப்பதற்கு ஒரு நோக்கம் உண்டு. அதை உணர்ந்துகொண்டவர்கள் உத்தமர்களாக வாழ்ந்து தன் வாழ்வை அர்த்தப்படுத்திக்கொள்வதோடு தன்னை நம்பியிருப்பவர்களையும் நெறிப்படுத்தி வாழ்வாங்கு வாழ்வதற்குத் துணைநிற்கிறார்கள் என்பதற்குத் தாரை ஒரு சான்று.

வாலி இறந்தபின் உடன்கட்டை ஏறாமல், கைம்மைநோன்பு நோற்று, தன் மகனாகிய அங்கதனுக்குத் துணையாக நிற்கின்றாள். சுக்ரீவனின் ஆட்சிஅழிவிலிருந்து காப்பாற்றும் வகையில் கோபத்தோடு வரக்கூடிய இலக்குவனுக்கு முன் கைம்மைக்கோலத்தில் நின்று,'மைந்தா' என்று விளித்து அவனுடைய கோபத்தைத் தணிவித்து, சுக்ரீவனுக்கும் வாழ்வளிக்கிறாள்.கம்பனுடைய சொல்லால் சொல்லவேண்டுமெனில், அமிழ்தம் சாகா வரம் அளிப்பதைப்போல, ஆழ்கடலில் தோன்றிய அமிழ்தமாகிய தாரை நல்லனவற்றையே செய்தாள். நல்லனவற்றையே பேசினாள். ஆதலால், கற்போரின் நெஞ் சங்களில் மட்டுமல்ல, கம்பரின் நெஞ்சமாகிய காப்பியத்திலும் நீங்கா இடம்பெற்றாள் எனில் மிகையாகாது.

கும்பகருணனின் அறிவாற்றலும் தன்மான உணர்வும்

முனைவர் ம.பாண்டித்துரை
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், இராசாநந்திவர்மன் கலை அறிவியல் கல்லூரி, தெள்ளாறு.

முன்னுரை

பத்தாயிரத்து ஐந்நூறு பாடல்களால் கட்டப்பட்டிருக்கும் கம்பராமாயணத்தில் கும்பகருணன் தவிர்க்க முடியாத ஒரு பாத்திரமாகும். கும்பகருணனுக்கென்று ஒரு தனி அடையாளத்தை கம்பர் கொடுத்திருக்கிறார். அந்த அடையாளம் உடல்ரீதியான அடையாளமன்று, உளரீதியானதாகும். அவை அண்ணனுக்கே அறிவுரைக் கூறும் அறிவாளி, அண்ணனுக்காக போர்க்களம் செல்லும் கடமைவாதி, தனது தம்பி மீது பாசத்தைப் பொழியும் பாசக்காரன், போர்க்களத்தில் எதிர்த்தவர்களை நேர்மையாக போர் செய்து விரட்டும் சுத்த வீரன், இறுதியாக உறுப்புகள் இழந்த உருவுடன் உயிர்வாழ விரும்பாத தன்மானவாதி ஆகிய அடையாளங்களாகும். இப்படிப் பல அடையாளங்களுடன் கும்பகருணனைப் படைத்திருப்பதால் கம்பர் மீது மிகுந்த மரியாதை தோன்றுகிறது.

கும்பகருணன் அறிமுகம்

கும்பகருணன் அரக்கர்குலத்தைச் சார்ந்த இராவணனின் முதல் தம்பியாவான். இவன் ஆறு மாதம் உறங்குவான், ஆறு மாதம் விழித்திருப்பான் என்ற சொலவடையும் சொல்லப்படுகிறது. அவன் உறக்கத்தினின்று எழுந்ததும் அறுநூறு வண்டி உணவையும் ஆயிரம் குடம் கள்ளையும் உண்பான், அப்படியும் அவன் பசி அடங்கவில்லை என்றால் ஆயிரம் எருமைக்கடாக்களில் கண்ணில் பட்டப் பகுதிகளைப் பிய்த்துத் தின்னக்கூடியவன். இப்படி உண்பவனுக்கு உடல் மட்டும் சிறியதாகவா இருக்கும் அவன் எழுந்து நின்றால் அவனது தலைமுடி வானை இடரும் உடல் வானை மறைக்கும், அவன் கண்கள் இரண்டும் கடலைவிடப் பெரியனவாகும். இதை கீழ்வரும் பாடல் வாயிலாக கம்பர் காட்டுகிறார்.

> "விண்ணினை இடறும் மோலி விசும்பினை நிறைக்கும் மேனி
> கண் எனும் அவை இரண்டும் கடல்களின் பெரிய ஆகும்"
>
> (யுத் 22, ப-12)

அரக்கர்குலத்தைச் சார்ந்தவனின் உடல்தோற்றத்தை கும்பகருணன் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது. கும்பகருணனின் கோரைப் பற்களின் தோற்றமானது, சந்திரனைப் பகைவன் என்று நினைத்து இரு கூறாய்ப் பிளந்து தனது வாயின் இரு பக்கம் பொருந்தும்படி வைத்து உண்கின்றவன் போன்று காணப்படுகிறதாகும். உறங்கிக் கொண்டிருக்கிற கும்பகருணன், அவன் விடும் மூச்சுக் காற்றானது சீதையைத் தேடிச் சென்ற அனுமனையே பற்றி இழுத்துச் செல்லும் வகையில் மூச்சு விடுவானாம். (யுத். 75, ப. 43)

இவ்வாறு கும்பகருணனின் புறத்தோற்றத்தை கம்பர் அருமையாக வடித்துக்காட்டுகிறார். கருத்த மேனியுடன் பார்ப்பதற்கு அச்சம் தருகின்ற உடலமைப்புப்பெற்றவனாகவும் அளவிட முடியாத மாமிச உணவை உண்ணக் கூடியவனாகவும் காட்டப்படுகிறான். மாதக்கணக்கில் உறங்கக் கூடிய பிற உயிர்களை இரக்கமின்றிக் கொல்லக்கூடிய அரக்கக் குணம் படைத்த கும்பகருணனிடத்தில் அறிவாற்றலும், தன்மான உணர்வும் இருப்பது வியக்கத்தக்க ஒன்றாகும்.

அறிவாற்றல்

அறிவுரை எல்லோராலும் வழங்க முடியாது. எதிர்காலத்தை அறிந்தவர்களாலும் நல்ல நூல்களை கற்றுணர்ந்தவர்களாலும் அனுபவ அறிவை பெற்றவர்களாலும் தான் அறிவுரை வழங்க முடியும். மேற்சொன்னவைகள் எதுவும் கும்பகருணனிடத்தில் இல்லையென்றாலும் அடுத்தவனின் மனைவியைக் கவர்வது தவறு என்றும் அப்படி செய்தால் அழிவுதான் கிட்டும் என்றும் உணர்ந்ததினால் அண்ணனுக்கு அறிவுரை வழங்குகின்றான். அந்த வகையில் எது அறம், எது அறமற்ற செயல் என்பனவற்றை உணர்கின்ற ஆற்றல் கும்பகருணனிடத்தில் இருப்பதுதான் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். போரிடப் போ என்று இராவணன் சொன்னதும் பெரும் அச்சத்துடன், "நான் அஞ்சியபடியே கொடிய போர் மூண்டுவிட்டதோ கற்புடைய சானகியின் துன்பம் இன்னும் நீங்கியபாடில்லையோ," (யுத் : 28, ப. 15) தலைவன் தவறு செய்யும்போது அவனைத் திருத்த வேண்டும். திருத்த முடியவில்லை என்பதால் எதிரியிடம் போய் சேர்வது முறையோ (யுத். 71, ப. 30)

அண்ணன் தவறே செய்திருந்தாலும் அவனை விட்டு வரமாட்டேன் என்றும் அண்ணனுடன் இருந்து போர் செய்வதே அறம் என்றும் பேசுகின்ற கும்பகருணனைப் பார்க்கும்பொழுது

அவனிடமுள்ள நேர்மை வெளிப்படுவது மட்டுமல்லாமல் அவன் மீது இன்னும் மரியாதை கூடுகிறது.

கும்பகருணனின் வீரம்

போர்க்களத்தில் நின்று போரிடும்போது இவனிடத்தில் அனைத்து படைகளும் தோற்றோடுகின்றன. முதலில் வானரப்படையை விரட்டுகிறான். பின் அங்கதனையும் வெற்றி பெறுகிறான். இலக்குவன், சுக்ரீவன் ஆகியவர்களும் கும்பகருணனிடத்தில் தோற்கின்றனர். இறுதியாக இராமனின் அம்புதான் அவனை வீழ்த்துகிறது. அந்த வகையில் கும்பகருணனின் வீரமும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

தன்மான உணர்வு

போர்க்களத்தில் எல்லோரையும் வெற்றி பெற்றுவிட்டு இறுதியாக சுக்கிரீவனை வென்று தோளில் போட்டுக்கொண்டு நகர்ப்புறத்தே வரும்பொழுது இராமனின் அம்பு கும்பகருணனின் நெற்றியில் பட்டு நிலை தடுமாறுகிறான். சுக்கிரீவனை கீழே போட்ட பிறகு தன்னிடமுள்ள மூக்கும் செவியும் அறுப்பட்டிருப்பதை உணர்கின்றான். அப்பொழுது இராமன் வீடணனுடன் பிறந்தமையால் உன்னை உயிரோடு விடுகிறேன் என்றதும் உறுப்பிழந்த முகத்தைக் காட்டி உலகில் உயிர்வாழமாட்டேன் என்று கும்பகருணன் பதில் கூறுகின்றான்.

மேலும் இராமனுடன் கடுமையாகப் போர்புரிகின்றான். வாள், சூலம் கொண்டு போரிடுகிறான். அதில் கும்பகருணனின் கை அறுபடுகிறது. கால்களைக் கொண்டு போரிடுகிறான். கால்களும் அறுபடுகிறது. இறுதியாக இனி தன்னால் அண்ணனுக்கு உதவமுடியாதே என்று வருத்தமுறுகிறான். பிறகு இராமனிடம் ஒரு விண்ணப்பம் செய்கிறான். அது கீழ்வரும் பாடல் வாயிலாக அறிய முடியும்.

"மூக்கிலா முகம் என்று முனிவர்களும் அமரர்களும்,
நோக்குவார் நோக்காமை நும்கணையால் என் கழுத்தை
நீக்குவாய் நீக்கியபின் நெடும் தலையைக் கரும் கடலுள்
போக்குவாய் இது நின்னை வேண்டுகின்ற பொருள்"... (யுத் 116, ப. 47)

எம் பகைவர்களான முனிவர்களும் தேவர்களும் மூக்கில்லாத முகம் என்று ஏளனத்தோடு என் முகத்தைப் பார்ப்பர். அவர்கள் அவ்வாறு பாராதபடி என் கழுத்தை அறுத்து கடலுக்குள் போட்டு மறைத்துவிடுவாயாக என்று கேட்டுக்கொள்கிறான்.

இவ்வாறு கும்பகருணன் கேட்டுக்கொள்வதை வைத்துப் பார்க்கும்போது அரக்கர் குலத்தில் பிறந்திருந்தாலும் தன்மான உணர்வுமிக்கவனாகவும், மானத்திற்கும் பழிச்சொல்லிற்கும் அஞ்சுகின்றவனாகவும் காணப்படுகிறான்.

முடிவாக சில

கும்பகருணன் தோற்றத்தில் பெரியவனாகவும் குடம் குடமாக கள்ளும், வண்டி வண்டியாக உணவும் உட்கொள்பவனாக காணப்படுகிறான்.

பிறகு நன்மை தீமையறிந்து அண்ணனுக்கு அறிவுரை வழங்குகிறான். அறிவுரை எடுபடாத சூழலில் தன் உயிரையும் கொடுக்கத் துணிந்து போருக்குச் செல்கிறான்.

போர்க்களத்தில் தனது தம்பி வீடணனின் சமாதானம் பேசி வரும்பொழுது அண்ணன் இராவணனை நட்டாற்றில் விட்டுவிட்டு வருவது முறையோ என்றும், அண்ணனிடம் இருந்து போர்புரிவதே தர்மம் என்று பேசி நடுநிலைமைத் தவறாதவனாக காணப்படுகிறான்.

அதேவேளையில் தனது தம்பியை இராமனிடமே போய் விடும்படியும் கெஞ்சுகிறான். அங்கு தம்பியிடம் இருந்த பாசம் வெளிப்படுகிறது. அண்ணனையும் விட்டுக்கொடுக்காமல் தம்பியின் உயிரையும் காப்பாற்ற முனைகிறான்.

இறுதியாக உறுப்புக்களை இழந்து உயிர் போகும் சூழலில் மூக்கு, காது, இல்லாத முகத்துடன் என்னை விட்டுவிடாதே என் தலையை அறுத்து கடலில் வீசிவிடு என்று இராமனிடம் கேட்டுக் கொள்கிறான். இங்கு தன்மான உணர்வு மிக்கவனாகவும் காணப்படுகிறான்.

இவ்வாறு கும்பகருணன் அண்ணனிடம் மரியாதை, தம்பியிடம் பாசம், போர்க்களத்தில் சிறந்த விரன், அண்ணனுக்கு அறிவுரை என் தலையை அரிந்து மறைக்க வேண்டிய தன்மானம் இவையெல்லாம் பார்க்கும்போது ஒரு அரக்கர் குலத்தில் பிறந்தவனுக்கு மேற்கூறியவை இருக்காது என்று நம்பியிருந்த சமூகத்திற்கு இது ஒரு பாடமாக கம்பர் அமைத்துக் கொடுத்திருக்கிறார்.

கும்பகர்ணனின் பண்பு நலன்

முனைவர் ப.செந்தில்குமாரி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், அரசினர் மகளிர் கல்லூரி,
கும்பகோணம்.

பண்பு என்பது பண்பாடாகும். பண்படுதல் என்பது சீர்படுத்துதல், பண்படுத்துதல் எனப் பொருள்படும். உழவன் நிலத்தை விவசாயத்திற்கு ஏற்றவாறு சீர்செய்வது போலவே, மனிதன் குணங்களைச் செம்மைப்படுத்தி வாழ்வது சாலச் சிறந்ததாகும். ஆனால் இன்றைய கால கட்டத்தில் சாதி, மதம், இனம் எனப் பல்வேறு கூறுகளால், சமுதாய அமைப்பு பிளவுண்டு கிடக்கின்றது. மேலும் குடும்பத்திற்குள்ளேயே பல்வேறு கருத்து மாற்றங்கள் ஏற்பட்டு குடும்ப அமைப்பு சிதறுகின்றன. இதனால் குடும்பத்திலும், சமுதாயத்திலும் ஒழுக்கக்கேடுகள் மிகுந்து காணப்படுகின்றன. இதற்கெல்லாம் காரணம் என்னவென்று ஆராய்ந்தால் மனிதப்பண்பு போற்றப்படாமையே என்பதை அறிய முடிகின்றது. ஆகவே இந்நிலையில் வளர்ந்து வரும் இளைய தலைமுறையினருக்கு பண்பாட்டை உணர்த்தும் நோக்கில் கம்பராமாயணத்தில் இடம் பெற்ற பாத்திரங்களில் பலர் மனதை கவர்ந்த கும்பகர்ணனின் செய்ந்நன்றி மறவாப் பண்பினையும், தவறு செய்தவன் உறவினனாக இருந்தாலும் அவனின் அறமற்ற செயலை எடுத்துக் கூறும் பாங்கினையும், இன்றைய சமுதாயத்தினருக்கு புலப்படுத்துவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்குதலாகும்.

கும்பகர்ணன்

புராணக்காப்பியங்களில் இடம்பெறும் துணைப் பாத்திரங்கள் படிப்போரின் உள்ளத்தில் இடம்பெறுவது இல்லை. எனினும் அவர்கள் செய்யும் நன்மை, தீமை செயல்களால், குகன், சபேரி, குசேலன், சகுனி, கூனி போன்ற பாத்திரங்கள் இலக்கிய வாசகரின் உள்ளத்தைக் கவருகிறது. இந்நிலையில் அரக்கர்குலத்தில் பிறந்த மாபலி, பிரகலாதன் போன்றோர் நன்மையே எண்ணி வாழ்ந்துள்ளனர். இவ்வாறே கும்பகர்ணன் அரக்கனாகப் பிறந்திருந்தும் அறத்தைவிடாப் பற்றுள்ளம் கொண்டவனாகத் திகழ்ந்துள்ளான். இவனது அறத்தினை அண்ணனிடம் அறத்தை வலியுறுத்திய நிலை, தம்பியிடம் அறத்தை தெளிவுறுத்திய நிலை, போரில் அவனது அறச்சிந்தனை என்னும் மூன்று நிலைகளில் காணலாம்.

அண்ணனிடம் அறத்தை வலியுறுத்திய நிலை

யுத்த காண்டத்தில் இராவணன் நடத்திய மந்திரலோசனைப் படலத்திலேயே கும்பகர்ணன் இராவணனின் செயல் எப்படிப்பட்டது என்பதை,

"பேசுவது மானமிடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்று நம கொற்றம்"

(யுத்தகாண்டம் கும்பகர்ணன் வதைப்படலம் பா.64)

என்று இடித்துரைத்த நிலையினைக் காண முடிகிறது. அதன் பிறகு துயிலச்சென்றவன் கும்பகர்ணன் வதைப்படலத்தில் துயில் எழுப்பப்படுகின்றான். துயில் எழுந்த அவன், செய்தி அறிந்து இராவணனிடம்,

"ஆனதோ வெஞ்சமம்? அலகில் கற்புடைச்
சானகி துயர் இனம் தவிர்ந்தது இல்லையோ"

(யுத்தகாண்டம் கும்பகர்ணன் வதைப்படலம் பா.79)

என்று இயம்புகிறான். புலத்தியன் மரபில் வந்து தரும வழியிலிருந்து நீங்காத குலத்தின் இயல்பு உன் செயலால் அழிந்து விட்டது. நிலத்தின் இயல்பால் நீரின் இயல்பு மாறுவதுபோல உன்னுடைய செயலால் வெற்றி அழியப் போகிறது. உன் செயல்களைக் கண்டு அறம் அஞ்சி ஒளிந்து கொண்டது. முன்னர் நீ அறத்தினை மதித்த போது அவ்வறம் உனக்கு வலிமை, செல்வம் முதலியவற்றை அழித்தது. இப்பொழுது அவ்வறத்தை அழிக்க முற்படும்போது யார் வந்து உன்னை மீட்பார் என்று கூறியதை,

"அறம் உனக்கு அஞ்சி, இன்று ஒளித்ததால், அதன்
திறம் முனம் உழத்தலின் வலியும் செல்வமும்
நிறம் உனக்கு அளித்தது: அங்கு அதனை நீக்கி நீ
இறமுன் அங்கு யார் உனை எடுத்து நாட்டுவார்,

(யுத்தகாண்டம் கும்பகர்ணன் வதைப்படலம் பா.84)

மேற்கண்ட பாடல் உணர்த்துகின்றது. இவ்வாறு,

"அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்" (குறள் - 638)

என்னும் குறளுக்கேற்ப அமைச்சனின் கடமைபோல எண்ணி அறத்தை உணர்த்திய கும்பகர்ணனை இராவணன், நீ எனக்கு அறிவுரை கூறும் அமைச்சன் அல்ல. போருக்கு அஞ்சுகிறாய் உன் வீரம் வீணானது என்று கூறுவதை,

"அறிவுடை அமைச்சன் அல்லை அஞ்சினை
வெறுவிது உன்னிரம் என்று இவை விளம்பினான்"

(யுத்தகாண்டம் கும்பகர்ணன் வதைப்படலம் பா.90)

என்னும் பாடல் எடுத்துக்காட்டும்.

கும்பகர்ணன் போருக்குப் புறப்படுதல்

கும்பகர்ணன் தன் தமையனுக்கு பல அறக்கருத்துகளை எடுத்துக்கூறிப் பயனில்லாமல் போனதால் பின் அவனை நோக்கி நான் வெற்றி பெற்று வருவேன் என்று சொல்ல மாட்டேன். விதியானது கழுத்தின் புறத்தைப் பிடித்து தள்ளுகிறது. ஆகவே நான் போரில் இறந்து விடுவேன். நான் அழிந்ததும் சீதையை விட்டுவிடுவதே உனக்கு நன்மை என்று அறத்தை வலியுறுத்துகிறான். பிறகு, கும்பகர்ணன் இராவணனிடம் இறுதியாக நான் ஆரம்பநாள் முதல் இன்று வரை குற்றங்கள் செய்திருந்தால் பொறுத்தருள்க என்று கூறி, போருக்கு விடை பெற்றுச் செல்வதை காணும் பொழுது கும்பகர்ணனின் அறச்சிந்தனையும், அவனது கடமையுணர்வும் வெளிப்படுகிறது.

தம்பியிடம் அறத்தை வலியுறுத்திய நிலை

போருக்கு வந்த கும்பகர்ணனை பார்த்த இராமன்,வீடணனிடம்

"காணினும் காலின்மேல் அரிய காட்சியன்

பூண் ஒளிர் மார்பினன்: யாவன் போலுமால்"

(யுத்தகாண்டம் கும்பகர்ணன் வதைப்படலம் பா.110)

என்னும் பாடலில் ஏக காலத்திலும் முழு தோற்றத்தைப் பார்ப்பதற்கு அரிய பெருந்தோற்றம் உடையவனாக இருக்கிறான் இவன் யார்? என்று வியந்து வினவினார். அப்பொழுது வீடணன் அவனது வாழ்வு நிலையினையும் வலிமையினையும் எடுத்துக் கூறினான். இதனைக் கேட்ட சுக்ரிவன் இராமபிரானிடம் கும்பகர்ணன் நம்மோடு சேர்வதற்கு உடன்படுவானேயானால் அவனை நம்மோடு சேர்த்துக் கொள்வோம் என்று கூறினான். இராமனும் இச்செயல் அரசநீதிக்கு ஏற்றது என்று கூறி வீடணனை கும்பகர்ணனிடம் தூது அனுப்புகிறான்.

வீடணன் வருகை

வீடணனைக் கண்ட கும்பகர்ணன் மழை போன்று கண்ணீர் சொரிந்து, நீ ஒருவனாவது அறத்தின் வழியே சென்று விட்டாய் என மனமகிழ்ச்சிக் கொண்டிருந்தேன். இப்பொழுது என்னுடைய மனம் முழுவதும் சிதையுமாறு,

"சிந்தனை முழுதும் சிந்த தெளிவிலார் போல மீள
வந்தது என் தனியே " (யுத்தகாண்டம் கும்பகர்ணன் வதைப்படலம் பா.130)

என்று இயம்பினான். வாழவைக்கும் அமுதத்தை உண்ட நீ அழிவு தரும் நஞ்சை உண்ண ஏன்வந்தாய்? அறத்தின் வடிவமான இராமனுக்கு அடிமையான பிறகு அடுத்தவன் மனைவியை மறம் துறந்து நோக்கும் எங்களுடன் உறவு கொள்ளலாமோ? என்றெல்லாம் வினவினான். அப்பொழுதுவீடணன் தன் தமையனிடம் நீ இராமனிடம் அடைக்கலமாக வந்து சேர்ந்தால் உனக்கு இம்மைப் பேறு, இலங்கையை ஆளும் அரசுரிமை என எல்லாம் கிடைக்கும். தருமத்தை சிறப்பாக கருதுபவர்கள் தீயசெயல்களை செய்பவர், தாய், தந்தை, பிறந்த உறவுமுறையினராக இருந்தாலும் எண்ணிப் பார்க்க மாட்டார்கள். நீ உறங்குவதும், விழிப்பதும் தவிர வேறு ஒன்றும் அறியாது இப்பூலோகத்தில் மதிப்பு இழந்து தாழ்வடைந்து விட்டாய், இதனால் பெற்ற நற்பயன் என்ன? மேலும் இராமனின் கருணை கிடைத்தால் உன் உறக்கச் சாபமும் நீங்கப் பெறுவாய். ஆகவே ஐயனே,

"கனி வரும் காலத்து: ஐய!
பூக்கொய்யக் கருதலா மோ"யுத்தகாண்டம் கும்பகர்ணன் வதைப்படலம் பா.152)

என்று அறத்தின் பெருமையினை வீடணன் எடுத்துக் கூறினான்.

கும்பகர்ணனின் அறம்

வீடணன் கூறியவற்றை கேட்ட கும்பகர்ணன் நல்ல கருத்துகளை கேட்கும் சூழ்நிலையில் இல்லாத இராவணன் தீமையான செயல் செய்ய எண்ணினால் அவனைத் தடுத்து நிறுத்தி திருத்தலாம். திருத்த முடியாமல் போனால் அவனை எதிர்த்து நின்று அடையக் கூடிய பெரும்பொருள் ஒன்றும் இல்லை. ஒருவன் உணவை உண்டு வளர்ந்தவர் செய்யக்கூடிய செயல் செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதாகும். நானும் இங்கு செஞ்சோற்றுக் கடன் தீர்க்க அவனுக்காக போர் செய்ய வந்துள்ளேன். ஆகவே, அவன் முன்னதாக சாதலே சிறந்த அறம் ஆகும். எமனையும் வெற்றிகொண்ட இராவணனின் வலிமையும், அழகையும் உடைய இலங்கை மாநகரை பெரிதென நினைத்து என் தமையனின் உயிரைக் கொள்ளும் பகைவனாகிய இராமனை வாழ்த்தி கும்பிட மாட்டேன் என அறத்தின்வழி பாற்பட்ட கும்பகர்ணனின் பாதங்களில் வீடணன் வீழ்ந்து வணங்கி இவனுடன் பேசி மனமாறுபாடு கொள்வதால் ஆகக்கூடிய பயன் ஒன்றும் இல்லை என்று கருதி திரும்பிச் செல்வதே நல்லது என்று உணர்ந்து இராமனிடம் சென்றான்.

போரில் அறம்

போர்க்களத்தில் கும்பகர்ணன் நீலனுடன் கடுமையாக போர் புரிகிறான். அப்பொழுது போர்க்கருவிகளை நீலன் இழந்து நிற்கின்றான். இதனை நோக்கிய கும்பகர்ணன் போர்க்கருவி இல்லாத வெறுங்கையன் என வெட்கம் கொண்டு தன் கையில் இருக்கும் சூலப்படையை ஓங்காமல் இவனை தளர்ந்துபோகச் செய்து கொல்வேன் என்று கூறும் நிலையில் கும்பகர்ணனின் போர் அறத்தை உணரலாம். போரில் கும்பகர்ணன் கையும் காலும் இழக்கின்றான். அந்த நிலையில் கூட அண்ணனுக்காக போருக்கு வந்து உதவ முடியவில்லையே என்று அவன் உள்ளம் துன்பம் அடைந்ததை,

"அய்யன் வில் தொழிற்கு ஆயிரம் இராவணன்
அமைவிலர் அந்தோ! யான்
கையும் கால்களும் இழந்தனென்; வேறுஇனி
உதவல் ஆம் துணை காணேன்" (யுத்த கும்ப வதைப் பா.351)

என்னும் பாடலின் மூலம் அவனது அறப்பண்பினை உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

இறுதியாக இராமனிடம் தனக்கென வாழாக் கும்பகர்ணன், தம்பிக்காகவும் வேண்டுகிறான். எம் உறவினால் உண்டான தீவினை தீர்த்து உம்னிடம் அடைக்கலமாக வந்த வீடணனின் உயிரை உன்னை வெல்லுமாறு நினைக்கின்ற இராவணன் அடியோடு அழிக்க முயன்று உடன்பிறந்த பாசத்தை உணராதவனாய் கொன்று விடுவான். ஆதலால் வீடணனின் உயிரைப் பாதுகாக்க வேண்டும். இது என் கடைசி ஆசையாகும். என்று கூறிய கும்பகர்ணனின் பண்பாட்டினை காணும்பொழுதுதான் இறக்கும் நிலையில் கூட அறத்தைப் பின்பற்றுவதை அறியமுடிகிறது.

இதுகாறும் கண்ட செய்திகளை காணுமிடத்து கும்பகர்ணன் அண்ணனுக்கு அறத்தை இடித்துரைத்தும், தம்பிக்கு அறத்தை தெளிவுபடுத்தியும், போரில் அறத்தைப் பின்பற்றியும் வாழ்ந்து மடிந்த நிலையினை நோக்கும் பொழுது இன்றைய சமுதாயத்தினருக்கு கும்பகர்ணனின் பண்பு நலமும் அற உள்ளமும் சிறந்த வழிகாட்டுதலாக இருக்கும் என்பதை உணரலாம்.

மண்டோதரி

திருமிகு. கோ.ராஜேஸ்வரி
உதவிப் பேராசிரியர், அ.வீ.வா.நினைவு திரு.புட்பம் கல்லூரி,
பூண்டி.

முன்னுரை

இராமாயணக்காப்பியத்தின் எதிர்நிலைத் தலைவனான இராவணனின் மனைவி மண்டோதரி தேவத்தச்சன் மயனின் மகள் ஆவாள். இவள் பிறப்பால் தேவ மகளாக இருந்தாலும் இராவணனின் மனைவியாக அரக்கர் குலத்தில் புகுந்ததால் அரக்க மகளாக விடுகிறான். கம்பராமாயணத்தின் ஐந்தாவது காண்டமாகிய சுந்தர காண்டத்தில் மண்டோதரி அறிமுகப்படுத்தப்படுகிறாள். அனுமன் வாயிலாக மண்டோதரி காப்பியத்தில் அறிமுகமாகிறாள்.

சீதைக்கு நிகர்

தெய்வப் பெண்கள் பணிசெய்ய, இனிதாகத் தூங்கிக் கொண்டிருக்கும் மண்டோதரியைக் கண்ட அனுமன் சீதையா என ஐயம் கொள்கிறான். இராமன் சீதைக்கு உரைத்த அங்க அடையாளங்கள் பலவற்றையும் மண்டோதரியால் அனுமன் காண்கிறான். அனுமனின் ஐயத்தால் மண்டோதரி சீதைக்கு இணையான பேரழகி மட்டுமல்லாள். கற்புக்கரசியும் தான் என்பது புலனாகிறது. மேலும் ஆராய்ந்தால் மண்டோதரி சீதைக்கு நிகரானவள் என்ற கம்பனின் எண்ணம் வெளிப்படுகிறது.

'எரிமணி விளக்கங்கள்
எழில்கெடம் கொலிகின்ற
தன்னது இன்ஒளி தழைப்புறத் துயில்வுறு
தையலை தகைவு இல்லான்
அன்னள் ஆகிய சானகி இவள் என
ஆயிற்று' (199)

எனக்காட்டப்படுகிறது. சீதையைவிட மண்டோதரி அழகுதான். இருப்பினும் அவள் அழகை கூற இயலாத காரணம் தேவமகளாக பிறந்து அரக்க மகளாக மாவியதால் அழகினைக் காட்ட மறுத்திருக்கலாமோ?

இருபுதல்வர்

1. அக்ககுமாரன்
2. இந்திரசித்தன்

அக்ககுமாரன் அனுமனோடு போரிட்டு மாய்கிறான் மகள் இறந்த செய்தி கேட்டு மண்டோதரி மகனைத் தேடிச் சென்று புலம்பாது அருகில் நின்ற இராவணன் கால்களில் விழுந்து அழுகிறாள்.

மண்டோதரி இராவணன் கால்களில் வீழ்கிறாளே தவிர எதுவும் கூறவில்லை தன் மகன் இறக்கக் காரணம் இராவணணின் முறையற்ற காமம் என்பதை உணர்ந்தவள் வெளிப்படையாக கணவனிடம் கூறமுடியாமல் அவன் கால்களில் வீழ்ந்து அழுகிறாள். அன்பு மனம் வெளிப்படுகிறது.

மண்டோதரி அச்சம்

இலக்குவனுடன் போரிட்டு இந்திரசித்தன் இறந்தான். ஓடிவந்து மகன்மீது விழுந்த அழுது புலம்புகிறாள். மண்டோதரியின் புலம்பலை ஏழு பாடல்களில் கம்பர் காட்டுகிறார். முதலில் இளைய மகன் பின்பு மூத்தமகன் நாளை கணவன் என எண்ணி அவள் மனம் அஞ்சுகிறது.

"அஞ்சினேன் அஞ்சினேன் அச்சீதை என்ற அமுதால் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளை இத்தகையன் ஆவன் அன்றோடு"
(கம்பா - 9238)

என்று அவள் மனம் பதைபதைக்கிறது.

மண்டோதரியும் – தானியமாலினியும்

இராவணன் மகன் அதிகாயன் இறந்தபோது அவன் தாய் 'தானியமாலினி' சோகத்தின் உச்சியில் இராவணனின் காமத்தைச் சுட்டிக்காட்டி அவனைச் சாடுகிறாள். ஆனால் மண்டோதரியோ மகனுக்காக அழுது புலம்பினாலும் தன் கணவனின் தவற்றை உணர்ந்தாலும் இன்று மகனுக்கு நேர்ந்தது நாளை கணவனுக்கு நிகழ்ந்து விடுமோ என நினைத்து அச்சம் கொள்கிறாள். பெண்ணின் உள்ளம் புலப்படுகிறது. இதிலிருந்து கணவனுக்கே முதலிடம் கொடுக்கும் பெண்ணின் உள்ளம் பின்வரும் வரிகளில் புலப்படுகிறது.

"மலையின்மேல் மயில் வீழ்ந்தென்ன
மைந்தன் மேல் மறுகி வீழ்ந்தான்" (கம்ப - 45)

மண்டோதரியின் புலம்பல்

இராவணன் உயிர் முடிந்த பிறகு கணவன் பெயர்கூறிப் புலம்புகிறாள். இராமன், இராவணன் மீது அம்பெய்து அவன் உயிரை மாய்த்திட்டான். ஆனால் மண்டோதரி இராமபாணம் இராவணன் மார்பில் பாய்ந்ததற்கு வேறு காரணம் கூறுகின்றாள். சீதையை

இராவணணின் மனச் சிறையிலிருந்து விடுவிப்பது மட்டும் இராமனின் நோக்கமல்ல. இராவணணனின் மனச் சிறையிலிருந்தும் விடுவிக்க வேண்டும் எனக் கருதுகின்றான் என்கிறாள் மண்டோதரி.

"வெள்ளருக்கஞ் சடை முடியான் வெற்பு எடுத்த
திருமேனி மேலும் கீழும்
எள் இருக்கும் இடம் இன்றி உயிர் இருக்கும்
இடந்தேடி இழைத்தவாறோ?
கள் இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும் எனக் கருதி உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாழி? (கம்ப - பா- 9940)

என மண்டோதரி வினவுகிறாள்.

இராவணன் சீதை மீது காதல் கொண்டது உண்மைதான். ஆனால் போர்க்களத்தில் மகன்கள், தம்பியர் என ஒவ்வொருவரையும் பறிகொடுக்கக் கொடுக்க, இராவணனின் உள்ளம் சோகத்தில் ஆழ்கிறது. காமம் நிறைந்த மனம், சோக மனமகா மாறி வீரம் பளிச்சிடுகின்றது. இராவணனின் இம்மன மாற்றத்தை அறிந்தவள் மண்டோதரி அதனால் தான் என் கணவன் மனதில் சீதை இன்று இல்லை. என்றோ தூக்கி எறியப்பட்டு விட்டாள். இதனையறியாத இராமபாணம் என் கணவனின் உள்ளத்தே புகுந்து ஏமாற்றம் அடைந்ததே என எண்ணுகின்றாள். மனத்தூய்மையோடு மரணத்தைத் தழுவினான் என அனைவருக்கும் உறுதிபட உரைக்கிறாள்.

மண்டோதரியும் – கோப்பெருந்தேவியும்

கம்பர் சீதையின் கற்பைச் சிறப்பிப்பது போன்றே மண்டோதரியின் கற்பையும் காட்டுகிறார். போர்க்களத்தில் இறந்துகிடந்த இராவணனைக் கண்ட மண்டோதரி அவன் மார்பில் வீழ்ந்து புலம்பி உயிர் நீத்தாள்.

இந்நிகழ்ச்சியை ஒப்பிடும் வ.சுப.மாணிக்கனார் காதலர் இறப்பின் எரிமூட்டி உடன்கட்டை ஏறுவது சிறந்தது என மணிமேகலை ஆசிரியர் கற்பினுள் ஒரு கற்பினைக் கூறினாரே அதற்கு எடுத்துக் காட்டு மண்டோதரி வால்மீகி காட்டும் மண்டோதரி இராவணனைக் கண்டு பலவாறு அகற்றி அழுது புலம்புகிறாள். ஆனால் அவள் உயிர் துறக்கவில்லை. அழுது புலம்பும் மண்டோதரி மூர்ச்சையடைத்து இராவணன் மார்பில் சாய்ந்தாள் என்றும் பின்னர் இராவணனது பிற

மனைவியர் அவளைத் தேற்றினர் என்றும் கூறுகிறார். ஆனால் கம்பர் காட்டும் மண்டோதரி அவன்மீது வீழ்ந்து உயிர் துறக்கிறாள் என மிக உயர்ந்த நிலையில் மண்டோதரியைக் காட்டுகிறார்.

மாணிக்கவாசகர் சுட்டும் மண்டோதரி

"ஏர்தரு மேழுல கேத்த வெவ்வுரு வந்தன் னுருவா
யார்கலி சூழ்தென் னிலங்கை யழகமர் மண்டோதரிக்குப்
பேரரு ளின்ப மழித்த பெருத்துறை மே பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தெண்பாண்டி தாட்டானை வரக்கூவாய்"

(திருவா பா - 149)

மண்டோதரிக்கும் சிவபிரான் பேரருள்புரிந்த சீர்த்தியை மாணிக்கவாசகர் கூறுகிறார் இக்கதை கம்பனில் இல்லை.

முடிவுரை

இராவணன் தன் தவற்றினை பலர் இடித்துக்கூறியும் திருத்திக் கொள்ளாதவன். மனைவியின் இடத்தில் மாற்றான் மனைவியை இருத்திப் பார்த்தவன். அப்படிப்பட்ட இராவணனனை வெகு சில காட்சிகளில் தோன்றும் மண்டோதரி தன் புலம்பல்களால் உயர்த்திவிடுகிறாள். மண்டோதரி மாண்பினை அறிந்தவர் சீதையின் விடுதலைக்கு மகிழ்ச்சி அடைந்தாலும் மண்டோதரி மாங்கல்யம் இழந்ததற்கு வருந்துவது உண்மைதான். அழகில் சீதைக்கு நிகரானவள். மன உணர்வில் தானிய மாலினியை விட சிறந்தவள். உயிர் துறப்பதில் கோப்பெருந்தேவியை ஒப்பவள். எனவே மண்டோதரியை கற்பில் சிறந்தவளாகக் கருதலாம்.

மண்டோதரியின் மனைமாட்சி

முனைவர் க.மோகன்
அழகப்பா அரசுக் கல்லூரி
காரைக்குடி

பாத்திரத்தின் உண்மைத் தன்மையை உரிய இடத்து மறவாது உலகறியச் செய்வது காப்பியப் புலவனின் கடமையாகும். எத்துணை ஆயிரம் செய்யுட்களுக்குப் பின்னும் ஒன்றை நினைத்து கொண்டு வந்து தொடர்புறுத்தும் பெற்றி கம்பனைத் தவிர வேறொருவருக்கு வாய்க்கப் பெறவில்லை. சீதையின் நினைப்பு இராவணனின் இதயத்திற்குள் எப்படி நுழைந்ததோ, அவ்வாறே அந்நினைப்பு வெளிவந்து விடுகிறது என்பதைக் கம்பனின் தமிழ்ப் பண்பாட்டுடன் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

'பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி' என்று இராமனிடம் தன்னைத்தானே அறிமுகம் செய்துகொள்கின்றவள் சூர்ப்பனகை. தன் கணவனின் இறப்பிற்குப் பழி வாங்கும் எண்ணம் மேலிட, தருணம் பார்க்கிறாள். வந்தது சீதையின் வடிவாக. இராவணனிடம் சீதையின் அழகை, வானளாவ ஓங்கிய தோள்களைப் பெற்ற வீரனே, ஒப்பற்ற சிவபிரான் உடம்பில் ஒரு பாதியில் பார்வதியை வைத்துக் கொண்டான். மற்றொருவனாகிய திருமால் தாமரையில் இருந்த திருமகளைத் தன் மார்பிலே அமர்த்திக் கொண்டான். அழகிய தண்ணழி உடையானாகிய பிரமன் கலைமகளை நாவிலே கொண்டு போற்றினான். முகிலில் தோன்றிய மின்னலை வென்ற சிற்றிடையாளாகிய சீதையை நீ பெற்றால் எங்கே இருத்தி வாழப் போகின்றாய்? என்று வினாத் தொடுக்கின்றாள். இதனை,

'பாகத்தில் ஒருவன் வைத்தான் பங்கயத்து இருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான் அந்தணன் நாவில் வைத்தான்
மேகத்தில் பிறந்த மின்னை வென்றநுண் இடையினாளை
மாகத்தோள் வீர! பெற்றால் எங்ஙனம் வைத்து வாழ்தி?'

(ஆரண்ய காண்டம்: மாரிசன் வதைப்படலம்)

என்று கூறுகிறாள். சீதையை நீ காதல் கொண்டால் அவளை எங்கே வைப்பாய் என்று கேள்விக்கணைத் தொடுக்கிறாள். சீதையின் வடிவழகைக் கேட்கிறான் சீதையை இதயத்தில் வைக்கிறான். இதனை,

'மயிலுடைச் சாய லாளை
வஞ்சியா முன்னம், நீண்ட
எயிலுடை இலங்கை நாதன்
இதயமாம் சிறையில் வைத்தான்'

என்கிறார் கம்பர். மயில் போன்ற சாயலை உடைய சீதையைக் கவர்வதற்கு முன்னமேயே இராவணன் சூர்ப்பணகையால் சீதையின் பேரழகை அறிந்தவுடன் தன் மனச்சிறையில் அவளை வைத்துவிட்டான்.

யானையோடு போர் செய்த மார்பையும், வெள்ளி மலையை அள்ளி எடுத்த தோள்களையும், நாரத முனிவனும் ஏற்றுக் கொள்ளுமாறு இனிமையாகப் பாடிய நாவையும், மாலைகள் அணிந்த பத்து மகுடங்களையும், சிவபெருமான் நல்கிய வாளாயுதத்தையும் பெற்ற வீரனான இராவணன் என்பதை,

'வாரணன் பொருத மார்பும் வரையினை எடுத்தத் தோளும்
நாரத முனிவற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்
தாரணி மவுலி பத்தும் சங்கரன் கொடுத்த வாளும் வீரமும் .....

என்று கம்பர் வருணிக்கிறார். முக்கோடி வாழ்நாளும் முயன்று பெற்ற பெருந்தவமும் சிவன் வழங்கிய அரிய வரங்களும், வாளும், திசையானைகளை வென்ற தோள்வலியும் உடையவன் இராவணன். இராமாயணத்து எதிர்த்தலைவன் என்றாலும் எள்ழி நகையாடுவதற்குரிய சிறுமையன் இல்லை அவன். சீதையை நயப்பதற்கு முன் வேறு குற்றம் உடையவன் இல்லை.

இத்தகைய இராவணனின் இதயத்தில் இருக்கும் சீதையை இராமனின் வில்லம்பு வெளிக்கொண்டு வருவதாகக் கம்பர் மண்டோதரியின் கூற்றாகப் பாடுகிறார். வெள் எருக்கம் மலரை அணிந்த சடைமுடியுடையானாகிய சிவபெருமானின் கயிலை மலையைத் தூக்கிய (இராவணனுடைய) அழகிய உடம்பில், மேலும் கீழுமாக எள் தங்குவதற்குரிய இடம்கூட இல்லாமல், உயிர் தங்கி இருக்கின்ற இடத்தைத் தேடிச் சென்றபடியோ? தேன் பொருந்திய பூச்சூடிய குழலை உடைய சீதையை உள்ளம் என்னும் சிறைச் சாலையிலே ஒளித்துவைத்த காதலானது, உடம்பினுள்ளே எங்கேனும் மறைந்திருக்குமோ என்று எண்ணி (இராவணனுடைய) உடல் முழுதும் நுழைந்து தேடிப் பார்த்ததோ ஒப்பற்றவனாகிய (இராமன்) அம்பு. இதனை,

'வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த
திருமேனி, மேலும் கீழும்
எள்ளிருக்கும் இடனின்றி, உயிரிருக்கும்
இடம்நாடி, இழைத்தவாறோ?
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி"

(யுத்தகாண்டம்:இராவணன் சோகப்படலம்:

என்று மண்டோதரி இராவணன் இறந்தபோது புலம்பி அழுவதை விவரிக்கிறார். சீதையின் நினைப்பை இராவணனின் உடல் புகுந்து தேடுகிறது இராமனின் வில்லம்பு. ஆனால் சீதையின் நினைப்பு இராமனின் அம்பு துளைப்பதற்கு முன்பே அது சென்றுவிடுகிறது. அது எங்ஙனம் என்பதைப் பார்ப்போம்.

இராவணனின் மகன் மேகநாதன் இறந்துவிடுகிறான். கும்பகருணன் முதலான வீரரெல்லாம் வதைப்பட்ட பின்னும், மேகநாதனின் தனி வீரத்தை நம்பியிருந்தான். இராவணனுக்கு இரண்டு மகன்கள். ஒருவன் அட்சன் மற்றொருவன் மேகநாதன். அட்சன் இறந்தபோது மயன் மகள் வயிறலைத்து அலவி மாழ்கினாள் என்று தாயின் ஒப்பாரியோடு நிறுத்திவிடுகிறான் கம்பன். ஆனால் வீரமிக்க மேகநாதன் இறந்தபோது மண்டோதரியின் புலம்பல் அதிகமாயிற்று. மனைவியின் அரற்றலை இராவணன் நேரடியாகக் கேட்கும் களம் இது.

'பஞ்செரி யுற்ற தென்ன அரக்கர்தம் பரவை யெல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல விளிந்ததே மீண்ட தில்லை
அஞ்சினேன் அஞ்சி னேனிச் சீதையென் றமிழ்தாற் செய்த
நஞ்சினால் இலங்கை வேந்தன் நாளைஇத் தகையன் அன்றோ'

என்று புலம்புகிறாள். அமிழ்தாற் செய்த நஞ்சு என்று தன் கணவன் நயந்த பெண் பெயரைக் குறிப்பிடுகிறாள். (வாலி இறக்கும் தருவாயில் சீதையை அமிழ்தாற் செய்த தேவி என்று கூறுவான்) மண்டோதரியின் புலம்பல் கேட்ட இராவணனின் மனதில் பெரிய மாற்றம் ஏற்படுகிறது. தன் படையும் தம்பியும் மகனும் அழிந்த நிலை மனதில் தோன்றுகிறது. எல்லாவற்றிற்கும் காரணம் இச்சீதையால் வந்தது என்று எண்ணுகிறான். 'இக்கொடுமைக்காரியை இரு துண்டாக்குவேன்' என்று சீதை இருக்கும் இடத்திற்கு ஓடுகிறான்.

'என்றழைத் திரங்கி யேங்க இத்துயர் நமர்கட் கெல்லாம்
பொன்றழைத் தனைய அல்குற் சீதையாற் புகுந்த தென்ன
வன்றழைக் கல்லின் நெஞ்சின் வஞ்சகத் தாளை வாளால்
கொன்றிழைத் திடுவென் என்னா ஓடினான் அரக்கர் கோமான்!'

சீதையைத் தன் காம இரையாகக் கருதியதை விட்டொழித்துத் தன் வாழிரையாகக் கருதினான் என்பது தெளிவு. சீதையைக் காமப் பொருளாகக் கருதாமல் பகைப் பொருளாகக் கருதினான். இம்மாற்றம் தன் மனைவி தன் கண்காண அழுத காட்சியாலும், தன் செவி கேட்க வரும் அழிவைச் சொல்லிப் புலம்பியதாலும் இராவணனுக்கு ஏற்பட்டது.

சீதையைக் கொல்லலாம் என்று நினைப்பளவில் இருக்கவில்லை. இராவணன் கொல்லவே துணிந்துவிட்டான். சீதையைக் கொல்லவதற்கு ஓடிய இராவணனை, அங்கிருந்த மகோதரன் தடுத்து, நீ சீதையைக் கொன்றால் உலகம் என்ன சொல்லும்? இராமனோடு போரிட்டால் வெல்ல முடியாது என்று கருதி இங்ஙனம் ஒரு சூழ்ச்சி செய்தான் என உன் வீரத்தைப் பழிக்காதா? என்று வினவினான். மண்டோதரியின் புலம்பலுக்குப் பின், மண்டோதரியின் நினைவே அவனின் மனத்துப் புகுந்துவிட்டது. சீதையைப் பகைவன் மனைவி என்றே கருதினான்.

'மன்ற லங்குழற் சானகிதன் மலர்க்கையால் வயிறு
கொன்ற லந்தலைக் கொடுநெடுந் துயரிடைக் குளித்தல்
அன்றிதென்றிடின் மயன்மகள் அத்தொழில் உறுதல்
இன்றி ரண்டினொ ன்றாக்குவென் தலைப்படின் என்றான்'

இது இறுதிப் போருக்குச் செல்லும் போது கூறும் வீரவுரையாகும். இராமனைக் கொல்வேன். அதனால் அவன் மனையாள் சானகி தன் கையால் வயிற்றைப் பிசைந்து துன்பமுற வேண்டும். 'யார் மனைவி தாலியறுக்கப் போகின்றாள் என்பதை இப்போரில் முடிவாகப் பார்த்துவிடப்போகின்றேன்' என்று முழங்குகின்றான் இராவணன். எவ்வளவு தெளிவான தூய்மையான வீரமொழி இது. இராவணன்தன் இப்பேருரையில் சிறிதாவது காமமாக உண்டா? அவன் உள்ளத்து அவன் மனைவியே குடிகொண்டிருந்தனள் என்பதும் அவள் துயருறுதலை அவன் விரும்பவில்லை என்பதும் மயன் மகள் அத்தொழில் உறுதல் என்ற நடையாலும் தன் மனையாளை இரண்டாவதாகக் கூறியதாலும் அறியலாம் என்பர் வ.சுப.மா. (1990).

சீதையின் அழகைச் சூர்ப்பணகைச் சொல்லக் கேட்ட நாள் முதல் காமமிக்கவனாக உருவகித்துக் கொண்டவன் இராவணன். 'சீதையை விடுவது உண்டோ இருபது தோளுண்டாக' என்று காம உரை மொழிந்த அவன் மனைவியின் கண்ணீரில் சீதையின் நினைவை, சிறிது சிறிதாகத் துடைத்துவிடுகிடுகிறான். மண்டோதரியின் வரவினால் சீதை போயினாள் என்று முடிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

இராவணனின் இதயத்தில் சீதை இல்லை என்று ஆனவுடன் விடுவித்திருக்கலாமே என்ற வினாவும் எழுகின்றது. இராவணனின் பக்கத்தார் ஒவ்வொருவராக இழந்ததற்குக் காரணம் தான் என்பதை உணர்ந்த இராவணனின் நெஞ்சத்தில் காமச் சிந்தனை குறைந்து, போரெண்ணம் மிகுகின்றது.

'நோக்கறவும் எம்பியர்கள் மாளவுமிந் நொய்திலங்கை
போக்கறவும் மாதுலனார் பொன்றவுமென் பின்பிறந்தாள்
மூக்கறவும் வாழ்ந்தேன் ஒருத்தி முலைக்கிடந்த
ஏக்கறவால் இன்னம் இரேனோ உனையிழந்தும்'

என்று கூறுகிறான். 'யாரோ ஒருத்தி மேற்கொண்ட தன்னாசையால் என் வீர நோக்கம் அற்றுப்போய்விட்டது. கரன், கும்பகன்னன் என்ற தம்பியர் மாண்டனர். மாரிச மாமன் உயிர்விட்டான், தங்கை மூக்கற்றும் பழி பொறுத்தேன். இலங்கைத் தலைநகர் எரியுண்டது. இவ்வாறு கேடுகளை அடுக்கிப் புலம்பினான். இனி அவன் சீதையை விடாது வைத்திருப்பது இன்பத்துக்கு அன்று விட்டால் எல்லோரும் இகழ்வர் என்ற மானத்துக்கு ஆகும். சீதையைக் காமப்பொருளாக நினையாமல், போர் நடப்பதற்குக் காரணமான பகைப்பொருளாக நினைத்தான். யாக்கையை விடுவதல்லால் சீதையை விடுவதில்லை என்று இப்போது அவன் சொல்லுதற்குக் காரணம், புகழாசையன்றிப் பெண்ணாசையன்று' என்று வ.சுப.மா கூறுவதும் நோக்கத்தக்கதாகும்.

சங்ககாலம் தொட்டு, கற்புடைய பெண் எதையும் விட்டுக் கொடுக்கும் இயல்பினள். ஆனால் கணவனை மட்டும் யாருடனும் பங்குபோட விடமாட்டாள். 'இடனவிந்து ஊடி இனிதுணரு மடமொழி மாதராள் பெண்' (384) என்று நாலடியார் போற்றுகிறது. 'கற்புவழிப்பட்டவள் பரத்தையை ஏத்தினும் உள்ளத்தூடல் உண்டென மொழிப' (தொல்.229) என்று தொல்காப்பியம் உரைக்கிறது. பரத்தையர் இல்லாமலும் பெண்ணிற்கு ஊடல் உண்டாகும் (பார்க்க:குறள்).

பெருங்கற்புடைய மகளிர் தம் ஊடலை வெளிக்காட்டுவதில் குறிப்பறிந்து செயல்பட்டுள்ளனர்.

இராவணனின் மனைவி மண்டோதரி எல்லாப்பெண்மையும் நிறைந்தவள். 'அன்னளாகிய சானகி இவளென்று' அனுமனே கருதினான் என்றால் மண்டோதரியின் அழகுக்கும் கற்புக்கும் வேறு சான்று கூறவியலாது. தற்காத்துத் தற்கொண்டானைப் பேணும் அவளின் மனைமாட்சி போற்றத்தக்கதாகும். அதனால்தான் தென்னிலங்கை அழகமர் வண்டோதரி' என்று திருவாசகம் மொழிகின்றது. இராவணன் இறந்தபின் கைம்மையாய் வாழ விரும்பாமல், நொடிப்பொழுதில் உடனுயிர் துறந்தவள் மண்டோதரி. 'உயிர்த்தாள் உயிர் நீங்கினாள்' என்று கம்பர் கூறுகிறார்.

தமிழ் மகளிரின் பண்பாட்டை மண்டோதரியின் வாயிலாகப் புலப்படுத்துகிறார் கம்பர். சீதையின் நினைப்பு உள்ளே இருக்கின்றது அதனை வெளியே எடுத்து வந்துவிட்டது என்று மண்டோதரி கூறவில்லை. சீதையின் மேல் கொண்ட காதல் எண்ணம் இன்னும் எங்காவது ஒட்டியிருக்கின்றதோ என்று காணத் துளைத்தது என்பதை அறிதல் அவசியம். மண்டோதரியின் வரவால் சீதை போயினள். மனைவியால் இராவணன் தூய்மையாக்கப்படுகிறான். இராவணனின் இதயத்தில் சீதை இல்லை என்பதை மண்டோதரி அறிந்த காரணத்தினாலும், தன் கணவனின் இதயத்தில் தன்னைத் தவிர வேறொருவர் இல்லை என்பதை உணர்த்தும் வகையிலும் உரைக்கின்றாள். இத்தகைய உயர்ந்த மனைமாட்சி உடையவளாக மண்டோதரி காணப்படுவதைக் கம்பர் சொல்லாமல் சொல்லிச் செல்கிறார். சீதையின் நினைப்பை இராவணனின் இதயத்துக்குள் நுழைத்து, 6800 பாடல்கள் கடந்து, தமிழ்ப்பண்பாட்டை உணர்த்திய கம்பர் தமிழ்ப் பண்பாட்டின் தாய் என்று உணர வைத்துள்ளார்.

கம்பரின் இராமபக்தர்கள்

முனைவர் ஆ.நிர்மலாதேவி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், வேளாளர் மகளிர் கல்லூரி,
ஈரோடு.

எந்தப் பயனையும் எதிர்பார்க்காமல் இறைவனுக்காக மட்டும் அன்பு செய்யும் நிலையினைப் பக்தி என்பர். அகங்குழைய, ஆரவாரம் எதுவுமில்லாமல், இறைவனும் தானுமாய் ஒன்றுபட்டு நிற்கும் இன்பநிலையே பக்தியாகும்.மெய்தான் அரும்பி, விதிர்விதிர்ந்து அவன் கழலே கதியென நிற்கும் நிலையும், உடல் எங்கு சுற்றினாலும் மனத்தினை இறைவன் திருவடிகளில் மட்டும் குடியிருக்க வைக்கும் அற்புதத் திறன் படைத்தது தான் பக்தி நிலை.பக்தியால் மட்டுமே ஈடு இணையற்ற இன்பத்தினை அடையமுடியும்.உடலை நைந்தொருத்தி யுருகும் நிலையை உணரமுடியும். பக்திச்சுவையைத் தவிர இந்திரலோகமாளும் அச்சுவைபெறினும் வேண்டேன் என ஒதுக்கித் தள்ளுகிறார் தொண்டரடிப்பொடியாழ்வார். தன்னுடைய பாற்கடலை விட்டுத் திருமால் தன் நெஞ்சில் இருப்பதாக பக்தி நிலையில் புலம்புகிறார் பெரியாழ்வார். அதாவது உள்ளம் உருக மனம், மொழி, மெய்யினை ஒன்றுபடுத்தி, அன்பினால் இடையறாது இறைவனைச் சிந்திக்கும் முயற்சி பக்தி எனப்படும்.

பக்திநிலையை மதுர பக்தி, தாசபக்தி, சகபக்தி, வாத்ஸல்ய பக்தி, பிரேம பக்தி, சகி பக்தி,கீர்த்தன பக்தி, அர்ச்சனாபக்தி, சரண்யபக்தி என ஒன்பது வகைகளாக வைணவ ஆச்சார்யப் பெருமக்கள் பிரிப்பார்கள். மதுரபக்திக்கு அம்பரீசன், தாசபக்திக்கு அனுமன், சகபக்திக்கு அர்ச்சுனன், வாத்ஸல்ய, சகி பக்திக்கு கோபியர், கீர்த்தன பக்திக்கு பிரகலாதன், அர்ச்சுனா பக்திக்கு ஆண்டாள், சரண்ய பக்திக்கு இராமநுஜரையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.தத்தம் அன்பின் தன்மைக்கு ஏற்றவாறு பக்தர்கள் இறைவன் அருளைப் பெற்று அக மகிழ்ந்தார்கள்.

பிரபக்தி என்பது கதி ஒன்றும் இல்லையென இறைவனின் தாள் மலர்களில் அனைத்தையும் சமர்ப்பணம் செய்துவிட்டு அவனே அடைக்கலம் என்று சரணாகதி செய்து கொள்வது.பக்தியை விட பிரபத்தியென்னும் சரணாகதியே உயர்ந்தது.இராமாவதாரக் கதை தொடங்குவதே சரணாகதியில் தான்.இராவணனது கொடுமையால்

துன்பப்படும் தேவர்களும், மனிதர்களும் திருமாலை அணுகிய போது சரணாகதி அடைந்தவர்களை நோக்கி தான் தசரதன் மதலையாய்த் தோன்றி அரக்கரின் மாய வாழ்வை முடித்து, தேவர்களுக்கு அருள்பாலிப்பதாக உறுதியளித்தான்.

'மசரதம் அனையவர் வரமும், வாழ்வும் ஓர்
நிசரத கணையால் நீறு செய்ய, யாம்
கச ரத துரக மாக்கடல்கொள் காவலன்
தசரதன் மதலையாய் வருதும் தாரணி"

(பாலகாண்டம் - திருஅவதாரம் -21)

இராமனிடம் சரணாகதி அடைந்தவர்கள் தம்பிமார்கள், வேடர் குலத் தலைவன் குகன், வானர அரசன் சுக்கிரிவன், அரக்கர் குலவீடணன் ஆகியோரை பிரபத்தி நிலையில் தன் தம்பியாக ஏற்றுக்கொண்டவர் இராமன்.

'குகனொடும் ஐவர் ஆனேம்; முன்பு; பின், குன்று சூழ்வான்
மகனோடும் அறுவரானேம்; எம்முழை அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய! நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து, புதல்வரால் பொலிந்தான் நுந்தை"

(யுத்த காண்டம் -வீடணன் அடைக்கலம்-143)

இவர்களெல்லாம் பிரபத்தி நிலையில் இறைவனைக் காண பக்தி செய்வதையே பாக்கியமாக, பெரும் பேறாகக் கருதியவர்களாக சரபங்கன், சபரி, மற்றும் அனுமனைப் படைக்கிறார் கம்பர்.

சரபங்கன்

தாண்டகவனத்தில், ஆசிரமத்தில் வாழும் தவமுனிவர் சரபங்கன். ஆரணிய காண்டத்தில் இராமன் தன் தம்பி, மனைவியுடன் முனிவர் ஆசிரமத்தை அடைந்தார். இராமன் வருவதற்கு முன்பே தேவேந்திரன் சரபங்கனை பிரம்மனின் கட்டளைப்படி பிரமலோகம் அழைத்தது செல்ல வந்த போது தனக்கு பிரம்ம லோகம் வர விருப்பனில்லை என்றும், செல்வாக்கு மிகுந்த பிரம்மலோகம் அற்பமானது என்றும், என்றும் அழியாமல் இருக்கும் பரமபதமே தான் பெற விரும்புவது என்றான்.

'சிறுகாலை இலா, நிலையோ திரியா,
குறுகா, நெடுகா, குணம் வேறுபடா,
உறுகால் கிளர்பு{தம் எலாம் உகினும்

மறுகா, நெறி எய்துவேன்; வான் உடையாய்"

(ஆரணிய காண்டம் - சரபங்கன் பிறப்பு - 20)

வான்லோக நாயகன் சத்திய லோகத்தைப் பெற வருமாறு அழைத்தும் அதனை அற்பமென விலக்கிவிட்டு மனைவியுடன் எரி புகுந்து ஒப்புயர்வற்ற வீடுபேற்றினைப் பெற்றான். இதனைக் கம்பர்,

'அண்டமும் அகிலமும் அறிவு அருநெறியால்
உண்டவன் ஒரு பெயர் உணர்குநர் உறுபேறு
எண்தவ நெடிது எனின், இறுதியில் அவனைக்
கண்டவர் உறுபொருள் கருதுவது எளிதோ?"

(ஆரணிய காண்டம் - சரபங்கன் பிறப்பு - 20)

சபரி

சபரி என்பவள் தவமூதாட்டி. மதங்கனது தவப்பள்ளியில், சோலையின் நடுவே அமைந்த குடிசையில் தவ வலிமையே உண்மையான வலிமை என வாழ்ந்த வேட்டுவ மூதாட்டி. இராமனைத் தன் குடிலில் கண்டவுடன் 'உன்னை சந்தித்ததால் எனது பொய்யான உலகப் பற்றுகள் எல்லாம் விட்டுப் போயிற்று " எனக் கூறி ஆனந்தப் பரவசமடைகிறாள்.

'ஆண்டு, அவள் அன்பின் ஏந்தி, அழுது இழி அருவிக்கண்ணன்
மாண்டது என் மாயப் பாசம்; வந்தது வரம்பு இல் காலம்
பூண்ட மா தவத்தின் செல்வம்; போயது பிறவி என்பாள்
வேண்டிய கொணர்ந்து நல்க, விருந்து செய்து இருந்த வேலை"

(ஆரணிய காண்டம் - சபரி பிறப்பு - 3)

கம்பர் சபரியை, அருந்தவத்து அரசி என்றும், வினை அறு நோன்பினாள், என்றும் போற்றப்படுகிறார்.

'அருந் தவத்து அரசிதன்னை அன்னுற நோக்கி எங்கள்
வருந்துறு துயரம் தீர்த்தாய், அம்மனை! வாழி என்றார்"

(ஆரணிய காண்டம் - சபரி பிறப்பு -9)

சபரி இராமனைத் தன் கண்களால் கண்டு. அருகில் இருக்கும் போதே உடலைத் துறந்து வீடுற்றாள் என்கிறது இராமகாதை.

'பின் அவள் உழந்து பெற்ற யோகத்தின் பெற்றியாலே
தன் உடல்துறந்து, தான் அத் தனிமையின் இனிது சார்ந்தாள்";

(ஆரணிய காண்டம் - சபரி பிறப்பு - 8)

தவத்தால் உத்தம கதியினை அடைந்த சரபங்கனும் ஆத்ம யோகத்தால் அழிவில்லாத புண்ணிய லோகத்தை சென்றடைந்த

சபரியும் உண்மையான பக்திக்கு சான்று பகரும் சாவித்திரம் படைத்தவர்கள்.

அனுமன்

அனுமன் இவர்களிலிருந்து மாறுபட்டவன். அத்திரி, அகஸ்தியர், பரத்துவாஜர், கவுதமர், வசிஷ்டர், விசுவாமித்திரர் ஆகிய ரிஷிகளால் துதிக்கப்படுகின்ற இராமன், அல்லும் பகலும் தன் நாமத்தையே உச்சாவிக்கும் அனுமனின் பக்திக்கு ஆட்பட்டு நின்றார். அனுமன் கண்ட அவதார நாயகன் இராமன். அறிவு, உணர்வு என்ற இரண்டையும் ஒருவனிடம் படைத்து அவன் இறைத்தொண்டு புரிவதில் ஈடு இணையற்று விளங்க முடியும் என்பதைக் காட்டவே படைக்கப்பட்ட பாத்திரம் அனுமன். ஒப்பற்ற பொருளைக் கண்டவுடன் உள்ளத்தில் அன்பு சுரப்பதும், ஆர்வம் மிகுவதும், என்பு உருகுவதும்,அதனோடு இணைந்துவிட வேண்டும் என்ற உந்துதலும் இராமனைக் கண்டவுடன் அனுமனுக்கு ஏற்படுகிறது.

'துன்பினைத் துடைத்து மாயத் தொல் வினை தன்னை நீக்கி,
தென் புலத்து அன்றி, மீளா நெறி உய்யக்கும் தேவரோதாம்?
என்பு எனக்கு உருகுகின்றது; இவர்கின்றது அளவு இல்காதல்:..

(கிட்கிந்தா காண்டம் - 3769)

இறைவனைத் தலைவனாகவும், தன்னை அடிமையாகவும் நினைக்கின்ற பக்தி தாஸ்ப பக்தி என்பர். இராமனிடம் அனுமன் கொண்ட நட்பு இத்தகையது. மற்ற யாருக்கும் தராத ஒரு சிறப்பினை இராமன் அனுமனுக்கு அளித்தான். இராமன்தான் மற்றவர்களை தழுவுவது மரபு. ஆனால் அனுமனின் பக்திப்பரவசத்தை உணர்ந்து அருளின் நோக்கியவன் தொண்டனிடம் வந்து உன்னுள் நான் புக விரும்புகிறேன் என்று கூறுவது போல் 'நீ என்னைப் புல்லுக" எனக் கூறுவது இராமகாதையில் யாருக்கும் கிடைக்காத ஒன்று. பரம்பொருள் இராமனின் எழிமைத் தன்மையும், தொண்டன் அனுமனின் உள்ளத்தூய்மையினையும் ஒரு சேரக்காணமுடிகிறது.

'மாருதி ஐயன் மகிழ்ந்நத, இனிது அருளின் நோக்கி
ஆர் உதவிடுதற்கு ஒத்தார், நீ அலால்? அன்று செய்த
பேர் உதவிக்கு யான் செய் ரிது இல்லை: பைம்பூண்
போர் உதவிய திண்தோளாய் ! பொருந்துறப் புல்லுக!"

(யுத்த காண்டம்: -10351)

பக்தர்கள் இறைவனின் திருவடிநீழலில் சென்று தங்குவதற்கு பதிலாக இறைவன் திருவடி தானே தேடி வந்து ஒரு தொண்டனுடைய இதயத்துக்குள் புக விரும்புகிறது என்றால் அத்தொண்டனின் பெருமையை அற்புத இறைவன் தான் அறியமுடியுமே தவிர, நம் போன்றவர்களின் கற்பனைக்கும் எட்டாதது. மாபெரும் கல்வி, அதன் பயனாக வாலறிவனை அறிந்து கொண்டு அவனுக்குத் தொண்டனாகும் பண்பு, ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் திறனும், அகங்காரம் அறவே இல்லாத இயல்பு, தனக்கென வாழா தொண்டு செய்யும் பண்பு, மாருதி, சொல்லின் செல்வன் என்ற பட்டப் பெயர்கள், இறைவன் மேல் பக்தி கொண்டவர்கள் வீடுபேற்றினை அடைய விரும்ப அதிலிருந்து வீடும் வேண்டா விறலினாக யாராலும் எண்ண முடியாத கம்பனால் மட்டும் படைக்கப்பட்ட ஒரு தெய்விகப்பாத்திரம் தான் அனுமன்.

இவ்வாறு கம்பரின் இராமகாதையில் பக்தி நிலையும், சரணாகதி நிலையையும் அறிவதோடு, பரம்பொருட்தன்மையினை, அவனைத் துதித்துப் போற்றுகின்ற கதாப்பாத்திரங்கள் மூலம் எடுத்துரைக்கிறார் என்பதை அறியலாம்.

"இராவணன் அவன்; இவன் இராமன்"

முனைவர் கே. கண்ணாத்தாள்
தமிழ்த்துறை, இணைப்பேராசிரியர், அழகப்பா அரசு கலைக்கல்லூரி,
காரைக்குடி.

முன்னுரை

இராம காதையை அணுஅணுவாக உணர்ந்து உலகிற்குக் கொடுத்தவர் கம்பர். கம்பராமாயணத்தைக் கவினுறக் கற்றவர்கள்கூடக் கம்பரின் திறனைச் செரிக்க இயலாது திணறுவர். உவமையழகு, ஒப்பனை அழகு, மனஅழகு, வாழ்வின் அழகு, உறவின் அழகு, தொண்டின் அழகு என்று ஒவ்வொரு காண்டத்திலும் அழகினைப் புனையும் கம்பரின் ஒப்பற்ற காண்டம் என்று சுந்தரகாண்டத்தைச் செப்பலாம்.

மந்திரம் போன்ற சுந்தரகாண்டம்

இராமனின் உள்ளத்தை வருத்திய துன்பம் தீர்வதும், சீதை பட்ட துயருக்கு விடிவு உண்டானதும் சுந்தரகாண்டத்தில்தான். அதனால்தான் இன்றும் துயர்போக்க நினைப்போரின் வலிநிவாரணியாக சுந்தரகாண்டம் துலங்குகிறது. உள்ளத்தின் சுமையும் சோகமும் தீர்ந்துபோய் வாழ்வது தானே மனித வாழ்வின் நிறைவு. இறைவனின் நாம உச்சரிப்பு எப்படி நம் குறை தீர்க்கிறதோ அதுபோல் சுந்தரகாண்டம் நமக்கு வரஇருக்கும் இன்னல் நீக்கி ஏற்றம் தரும் என்பது மக்கள் நம்பிக்கை.

அச்சுந்தர காண்டத்தில் வெளிப்படும் இரண்டு பெரும் உயர்ந்த கருத்துக்களாவன சீதையின் உள்ளத்திண்மையும் அனுமனின் தொண்டுத் திறமுமாகும். சுந்தர காண்டம் கடல்தாவுபடலம் முதல் திருவடி தொழுத படலம் வரை 15 பாடலங்களைப் பெற்று இலங்குகிறது. சுந்தரகாண்டத்தின் கடவுள் வாழ்த்துப்பாடலே இராமனைத் திருமாலின் வடிவமாய் நம் கண்முன் நிறுத்துகிறது.

"கலங்குவது எவரைக் கண்டால்? அவர் என்பர் கையில் ஏந்தி
இலங்கையில் பொருதார் அன்றே மறைகளுக்கு இறுதியாவார்"

(சுந்தரகாண்டம்- கடவுள் வாழ்த்து)

இவ்வரிகள், இப்பிறப்பு எவரைக் கண்டால் ஒழியுமோ அந்தத் திருமாலே கையிலே வில்லை ஏந்தி இராமனாக வந்து இலங்கையில் போரிட்டு வென்றார் என்று ஞானிகள் கூறுவர் என்ற பொருளைத்

தருகின்றன. இறைவன் மீது நம்பிக்கையையும் உலக வாழ்வில் மனத்திட்பத்துடன் இருப்பவர் வெற்றிபெறுவர் என்ற எண்ணத்தையும் தருவது சுந்தரகாண்டம்.

தன் உடம்பில் உயிர் ஒன்று இருக்கும்வரை துன்பமும் இருக்கும், தான் இறக்கும் போதுதான் அந்தத் துன்பமும் நீங்கிப் புகழ் சேரும் என நினைத்த சீதையின் துயரம் அனுமன் வருகையால் நீங்குகிறது. தனது நிலைக்காக வருந்தியிருக்கும் சீதையின் மனதை அனுமன் தேற்றுகிறான். சூளாமணிப் படலம் முழுவதிலும் இராமன் வந்து சீதையை மீட்பான் என்ற செய்தியே இடம்பெறுகிறது. இறுதியில் அதுவே நடந்தது. தீவினை அறத்தை வெல்லவே முடியாது என்று தூயவன் அனுமன் தூயவள் சீதையை இலங்கையில் பார்த்தபின் உணர்கின்ற நிலையைச் சுந்தரகாண்டத்தில் காணலாம்.

அனுமன் தந்த நம்பிக்கை

தீர்ப்பான் துன்பம் அனுமன்,

"ஆழிக் கையவன் அம்பு அம்மா
ஊழித் தீயயன உண்ணாவோ" (654)

"ஒளிக்கும் தேவர் உவந்து உள்ளம்
களிக்கும் நல்வினை காணாயோ?" (657)

"அனகன் கை அம்பு எனும் அளவுகில் ஊதையால
கனகம் நீடு இலங்கை நின்று உருக்க காண்டியால்" (663)

என்று கூறி இராமன், சீதையின் துயர் தீர்க்க வருவான் என்று சீதைக்குப் புலப்படுத்துகிறான்.

வருவான் இராமன்

"ஆண்தகை இனி ஒரு பொழுதும் ஆற்றுமோ?" (670)

"பூ இலை தளிர்இலை பொரிந்து வெந்திலாக்
கா இலை கொடி இலை நெடிய கான் எலாம்" (671)

"ஆகமும் புயங்களும் அழுந்த ஐந்தலை
நாகம் வந்து அடர்ப்பினும் உணர்வு நாறுமோ?" (672)

என்ற வரிகளால் இராமனின் துயரம் வெளிப்படுத்தப்படுகிறது. இனி இராமன் காலம் தாழ்த்தமாட்டான். விரைந்து வருவான் என்பதைத் தன் மனத்தில் அனுமன் தெளிவாக்கிக் கொண்டான். சீதையின்

நிலையையும் இராமனின் நிலையயையும் உணர்ந்து வெளிப்படுத்திய அனுமன் ஒரு உறுதியான நிலைப்பாட்டைப் பேசுகிறான்.

சொல்லால் துயர்நீக்கும் அனுமன்

உறவுகள் வெறும் உறவுகளாக மட்டும் இருப்பதால் சிறப்பதில்லை. துன்பம் உறும்போது நமக்காக ஒருவர் ஓடோடி வருவார் என்று எவர்மீது நமக்கு நம்பிக்கை பிறக்கிறதோ அதுதான் உயர்ந்த உறவாகவும் நட்பாகவும் இருக்க முடியும். தன் உயிரையும் பொருட்படுத்தாது பிறருக்கு உதவப்போகின்றவர்கள் உன்னதமானவர்கள். இராமன் தன் உயிரையும் பொருட்படுத்தாது சீதையைக் காப்பாற்றுவதையே கடமையாகக் கொள்வான் என்று சீதையை விட அனுமன் இராமன் மீது நம்பிக்கை வைத்துள்ளான். தனது நம்பிக்கையைப் போலவே சீதையும் இராமனை நம்பவேண்டும் என்று ஆசை கொள்கிறான். அதற்காக ஒரு அருமையான உளவியல் கருத்தைக் கையாள்கிறான்.

அதிலும் தன் உள்ளத்தைப் பற்றிய உளவியல் கருத்தைவிட இராமனின் உளத்தைப் பற்றிய செய்தியை வைக்கிறான். ஒவ்வொரு உள்ளமும் ஆழமானது. கையளவு உள்ளத்தில் கடல்போல் ஆசைமட்டுமல்ல எண்ணங்களும் அமிழ்ந்து கிடக்கின்றன. அந்நிலையில் அடுத்தவர் உள்ளத்தை அறிதல் அவ்வளவு எழிதா? அனுமனைப் போன்ற தொண்டர்களுக்கு எளிது என்று கம்பர் காட்டுகிறார்.

"தன்னெஞ்சு அறிவது பொய்யற்க" என்ற செய்திகூட, நம்முடைய உள்ளத்தைத் தான் நாம் தெளிவாகத் தெரிந்து வைத்திருப்போம். எனவே தன் உள்ளம் சொல்வதைக் கேட்காது திரிதல் கூடாது என்பதையே உணர்த்துகிறது. ஆனால் அனுமன் இராமனின் உள்ளத்தை உணர்ந்தவன். பக்தர்களின் உள்ளம் இறைவனுக்குத் தெரியும். இறைவனின் உள்ளம் பக்தனுக்கும் தெரிந்துள்ளதே என்று கம்பர் நம்மைப் பரவசப்பட வைக்கிறார்.

சீதை உயிருடன் இருக்கிறாள் என்ற செய்தியைக் கேட்கும் முன்னரே சுக்கிரீவன் முதலானோர் பெரிய கடலைத் தூர்த்து இந்நகரத்தை முற்றுகையிடுவர் என்றும் வாரைச் சேனைகளின் நடுவே கருடன் மேல் வீற்றிருக்கும் திருமால்போல் இராமன் தன்மேல் அமர்ந்திருப்பான் என்றும், இராமன் இலக்குவன் போரிட வருவர், வானரப்படை இலங்கையில் வந்து தங்கும், இராமன் வருவானோ? மாட்டானோ என்ற ஐயத்தை நீக்குக என்றும் வேண்டுகிறான்.

மேலும் மேலும் சீதைக்கு நம்பிக்கை வரவேண்டும் என்பதற்கு சொல்லின் செல்வன் அனுமன் ஒரு உத்தியைக் கையாள்கிறான். உலகியல் வழக்கில் ஏதேனும் ஒரு செயலைச் செய்வதில் பிறர்க்கு நம்பிக்கை வரவேண்டுமெனில் "நான் இவ்வாறு செய்யாவிட்டால் என் பெயரை மாற்றிக் கூப்பிடு" என்று பேசுகின்ற மரபைக் காணலாம். இதுகூடப் பெரும்பாலும் தன்னைப் பற்றிய செய்தியாகத் தான் தெரியும்.

ஆனால் அளவில்லாத அன்பும், பக்தியும் நம்பிக்கையும் ராமன்மேல் வைத்துள்ள அனுமன் இராமன் சீதையைக் காப்பாற்ற வரவில்லை என்றால் அவன் பெயரே மாறும் என்கிறான். நம்பினார் கெடுவதில்லை என்பது நான்குமறைத் தீர்ப்பு. நம்புகிறான் அனுமன். அதனால்தான் இறைவனை மட்டுமல்லாது இறைத் தொண்டனையும் வணங்குகிறோம்.

"குரா வரும் குழலிநீ குறித்த நாளினே
விராவு அரு நெடுஞ்சிறை மீட்கலான் எனின்
பராவரும் பழியொடும் பாவம் பற்றுதற்கு
இராவணன் அவன் இவன் இராமன் என்றனன்" (678)

இப்பாடல் உணர்ந்து போற்றுதற்குரியது. இராமன்மீது அனுமன் வைத்த நம்பிக்கையைக் காட்டுகிறது. இவனது பேச்சு சீதைக்கு நம்பிக்கையை ஊட்டுகிறது. எந்தச் சூழலிலும், ஊழிக்காலத்தின் அழிவாய் இருந்தால்கூட இராமன் இராவணன் ஆகவோ இராவணன் இராமனாகவோ ஆகுதல் கூடாது. பொதுவாக மேலோட்டமாக இராமன்மீது நல்லெண்ணம் கொண்டவர்கள் கூட இவ்வாறு கூறமாட்டார்கள். அனுமனிடம் இரண்டுவகையான நம்பிக்கைத் தன்மை உருவாகிறது. ஒன்று தான் இராமன் மீது கொண்ட நம்பிக்கை. மற்றொன்று கையற்ற நிலையில் கலங்கித் தவிக்கும் சீதைக்கு ராமன் மீது உண்டாக்கும் உயர் நம்பிக்கை. சூளாமணிப் படலத்தில் பலவாறாகப் பேசும் அனுமன் இச்செய்தியைக் கூறியவுடன்தான் சீதை முழுமையாக நம்புகிறாள். இராவணன் இராமன் ஆகமாட்டான் என்பதும் இராமன் இராவணன் ஆகமாட்டான் என்பதும் அனுமனைவிடச் சீதைக்குச் சற்று அதிகமாகவே தெரியும். சொல்லப்போனால் அனுமனுக்கு இராமனை மட்டும்தான் முழுமையாகத் தெரியும். தீவினையின் வடிவமான இராவணனை சீதையே மிகுதியும் உணர்ந்திருப்பாள். எனவே அவழிடம் எதைச் சொல்ல வேண்டும் என்று உணர்ந்து கூறும் மாருதி இறைவனை உணர்ந்த சிறந்த தொண்டன் என்பதைச் சுந்தரகாண்டம்

மிக ஆழமாக உணர்த்துகிறது. அனுமனின் இச்சொற்களைக் கேட்ட சீதை அறிவிலே தெளிவு பெற்றாள் என்பதைக் கம்பர்

"ஆக இம்மொழி ஆசுஇல கேட்டு அறிவுற்றாள்
ஓகை கொண்டு களிக்கும் மனத்தள் உயிர்த்தாள்" (679)

இவ்வாறு கூறுகிறார். அனுமன் கொண்ட நம்பிக்கையும், சீதைக்கு அனுமன் மீதும் இராமன் மீதும் ஏற்பட்ட நம்பிக்கையும் சூளாமணிப் படலத்தில் அருகருகே (678, 679) அமைந்துள்ளது போற்றுதற்குரியது.

முடிவுரை

அனுமன் இராமனின் உள்ளம் உணர்ந்த தொண்டன். சீதையை இலங்கையில் கண்ட உடனே மகிழ்ந்த அனுமன், இராமனின் துயர் தீர்ந்தது என்று மகிழ்ந்தான். இறைவனால் பக்தன் துயரம் அழியும். ஆனால் இங்கோ தொண்டனால் இறைவன் இன்னல் மறைந்தது. இராமன் வந்து சீதையைச் சந்திக்கும் காலம்வரை சீதை நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டுமே! உபாயம் தேடுகிறான் அனுமன். உலகியல் அறிவு அவனுக்குக் கைகொடுக்கிறது. இராமன் இங்கு வராவிட்டால் அவன் இராமனே அல்ல! இராவணனைப் போன்றவனாவான் என்று கூறியதும் அதுவரை ஏற்படாத நம்பிக்கை சீதை உள்ளத்தில் துழிர்க்கிறது. இராமகாதை முடிவை நோக்கி நகர்கிறது. அதர்மம் அழிகிறது. அநியாயம் ஒழிகிறது. சீதை இராமனுக்குக் கிடைத்தாள். உண்மைத் தொண்டன், உயர்ந்த பக்தன் அனுமன் நம் உள்ளத்துள் ஒளிர்கிறான்.

என்றும் அனுமன்

திருமிகு. காஞ்சி வெ.ஆ.சம்பந்தம்
ரெட்டிவலம்.

இராமாயணத்தில் ஐந்தாவது காண்டமாக படைக்கப்பட்டது சுந்தர காண்டம். சுந்தர காண்டம் முழுவதும் அனுமனின் நற்செயல்கள் விவரித்திருப்பதைக் கண்டு மகிழலாம். கருடாழ்வாருக்குப் பெரிய திருவடி என்று பெயர். ஆஞ்சனேயன் எனும் அனுமனுக்கு சிறிய திருவடி எனப் போற்றப்படுகிறது. வாயு பகவானுக்கும் கருட பகவானுக்கும் உள்ள வலிமை யாவும் அனுமன் பெற்றவர் என்பது சான்றோர் வாக்கு. மூலிகை மலையைக் கொண்டு வந்தவன்.

அயோத்தி நகரைத் தலைமையிடமாகக் கொண்டு ஆற்றை நாளில் நல்லாட்சி செய்தவன் தசரத மன்னன். புத்திரப்பேறு வேண்டி மாபெரும் யாகம்- பல முனிவர்களையும் பெருந்தவ மறையோர்களையும் வரவழைத்துப் பல நாட்கள் வேதமுறைப்படி வேள்வி நடத்தினான். யாகத்திலே உருவாகி வந்த பாயசத்தினை அக்னி பகவான் தசரதரிடம் அளித்தான். அவர் பாயசத்தைத் தனது மூன்று மனைவியருக்கும் பகிர்ந்தளித்தார். கைகேயி பருகும்போது, ஒரு பெண் பறவை பறந்து வந்து ஒருதுளி கவ்விச் சென்றது. வாயில் பாயசத்துடன் விண்ணில் பறந்த பறவை சூடு தாங்காது வாயைத் திறக்கப் பாயசம் கீழே விழுந்தது. வானில் கீழே விழுந்த பாயசத்தை வாயு பகவான் தனது கைகளில் ஏந்திக் கொண்டு சிவபரம்பொருளை நினைக்க, இறைவன் திருவருளுடன் காட்டில் தவம் செய்து கொண்டிருந்த அஞ்சனை எனும் மாதரசியின் வாயில் விழச்செய்தார். அஞ்சனை பருகிய பாயாசம் சிவனருட்பிரசாதம். பாயாசம் சிவனருட் பிரசாதம் அருந்திய அஞ்சனை எனும் மாதரசியின் வயிற்றில் பிறந்தவன் சுந்தரன் எனும் அனுமன். அனுமனின் இயற்பெயர் சுந்தரன். இராமாயணம் நடந்த காலம் 7000 ஆண்டுகட்கு முந்தின காலம் என்றும் மகாபாரதம் நடந்த காலம் 5000 ஆண்டுகட்கு முந்தின காலம் என்றும் ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. ராமனின் காலத்தினும் கண்ணபிரானின் காலத்தும் வாலாறு படைத்து வாழ்ந்தவன் அனுமன். சிரஞ்சீவி, என்றும் வாழ்பவன் என்பது சான்றோர் கண்ட முடிவு. இலங்கைப் போரிலே இராவணனின் மகன் இந்திரசித் விடுத்த பாணத்தால் மூர்ச்சித்து

விழுந்து மயக்கநிலையில் இருந்த இராம லக்குமணனையும் இதர சேனைகளையும், வாயுபகவானின் துணையுடன் விரைந்து வடக்கே சென்று நீண்ட தூரம் வானில் பறந்து மூலிகைகள் மிகுந்த சஞ் சீவிமலையை கொண்டு வந்து சேர்த்து மூர்ச்சை - மயக்கம் தெளிவித்து உயிர்ப்பித்தவன் சஞ்சீவி அனுமன். இங்கு ஒரு வரலாற்றைத் தர விரும்புகிறேன்.

ஞானசம்பந்தர் குழந்தைப்பருவத்திலேயே உமையம்மை அளித்த ஞானப்பாலை அருந்தி மகேஸ்வரன் தரிசனம் கண்டு மெய்ஞ்ஞான நிலை பெற்று 14 இண்டுகள் (3 வயது முதல் 16 வயது வரை) சிவ தலயாத்திரை செய்து சிவதரிசனம் கண்டு பாடல்கள் பாடி வழிபட்டனர்.- 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். கி.பி.635 முதல் கி.பி.651 வரைள

தமிழ் மண்ணில் காவிரியின் தென்கரையில் உள்ள சிவதலம் திரு உசாத்தானம். இன்று கோயிலூர் என வழங்கப்படுகிறது. இராமபிரான் அனுமனுடனும் இலக்குவன், சாம்பவான் சுக்ரீவன் இகியவருடன் சென்று சிவபரம் பொருளை வழிபட்ட தலம். அதாவது சீதா தேவியை இராவணன் கொண்டு சென்ற பிறகு கவலையுடன் அனுமன், சாம்பவான், சுக்ரீவன் இகியோரைக் கண்டு இலக்குவணனுடன் காவி-ரியில் நீராடி சிவலிங்க ரூபனை பிரதிட்டை செய்து பூசை வழிபாடு செய்து இராமன் நல்வரம் பெற்ற தலம். சிவதல யாத்திரை செய்து வந்த ஞானசம்பந்தர் திரு உசாத்தானத்திற்கு வருகை தந்து இறைவனை தரிசித்துப் பாடிய பாடல்

"நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போரிடைச் சுக்ரீவன் அனுமான் தொழக்
காரிடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திரு உசாத்தானம்." (3-291-350)

நீரிடை - பாற்கடலில் பள்ளி கொண்ட ஸ்ரீமன் நாராயணன் இராமாவதாரத்தில் தம்பி லட்சுமணனுடனும் சாம்பவான், சுக்ரீவன், அனுமனுடன் வருகை தந்து தொழ, கறுத்த விஷத்தைத்தான் உண்டு வழிபடுபவர்களைக் காத்து அருள் செய்தவன் எமது சேடர் - சிவபெருமான் வாழும் - எழுந்தருளியுள்ள இடம் திரு உசாத்தானம் எனப் பாடிக் காட்டுகிறார் ஞானசம்பந்தர்.

இராவணனின் இலங்கை மண்ணிலே அசோக வனத்திலே பல பெண் அசுரகுல மக்கள் சூழ பாதுகாப்பில் தனிமையில் சோகமாக

சீதாபிராட்டியார் கவலையுடன் அமர்ந்திருக்கிறார். இராமபிரானின் திருநாமத்தை மனதில் ஜபித்து காற்றையும் நீரையும் ஆகாரமாகக் கொண்டு பல நாட்கள் தவக்கோலத்தில் காட்சியளிக்கிறாள். எளிமை, சோகம் அங்கே சூழ்ந்துள்ளன. ஆங்கே திரிசடை எனும் அரசகுலப்பெண் - ஒருவள் மட்டுமே சீதைக்கு ஆதரவாக இருப்பவள். தவவலிமை சீதாதேவியின் மனத்துக்கு உறுதி தந்தது. சொல்லின் செல்வனாகிய அனுமன், இராமபிரானால் தூதனாக அனுப்பப்பட்டு தேடும் நிலையில் கண்டு அம்மையாரின் முன்னே வந்து தோன்றி வணங்கி, அம்மையே நான் அனுமன், ராம தூதன் என்றான். சீதையின் முகத்திலேஓர் தெளிவு. மனத்திலேஓர் நல்லொளி. அனுமன் முழு செய்திகளையும் தெரிவித்து இராமபிரான் தந்த கணையாழியை அடையாளமாகப் பணிவுடன் தருகிறார். அதுவரை மனக்குறையுடன் இருந்த அம்மையார் மனம் தெளிந்து அனுமனை நோக்கினாள். அம்மையே, விண்வழியே தங்களை அழைத்துச் சென்று எனது குருநாதன் இராம பிரானிடம் சேர்ப்பேன் என உறுதிகூறி அம்மையின் அனுமதியை வேண்டினான். அப்பனே, அது நல்வழியுமல்ல. முறையும் அல்ல. எம்பிரான் வருகை தந்து இராவணனை வெற்றி கண்டு எம்மை அழைத்துச் செல்வதே நன்னெவியாகும் எனச்சொல்லி இராமபிரானிடம் அளிப்பதற்காகத் தன்னிடம் இருந்த புனிதமான அடையாளப் பொருளையும் தந்து வாழ்த்துகிறார். சீதாபிராட்டியார் வாழ்த்துவதாக கம்ப நாட்டாழ்வார் தரும் எளிய தூய்மையான பாடல் -தமிழ் மொழியின் சிறப்பு..

“மும்மையாம் உலகம் தந்த முதல்வர்க்கு முதல்வன் தூதாய்ச்
செம்மையாய் உயிர் தந்தாய்ச் செயற்கு என்னால் எளியது உண்டே
அம்மையாய் அத்தன் ஆய அப்பனே, அருளின் வாழ்வே
இம்மையே மறுமை தானும் நல்கினை இசையோடென்றாள்”

மூன்று உலகங்களையும் ஆளும் முழுமுதற் பெருமானின் தூதுவனாய் வருகை தந்து எனக்கு நல்லுயிர் தந்தாய். உனக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். என்னால் வாழ்த்தக்கூடிய அளிக்கக்கூடிய எளிய நல்வரம். அடியவளுக்கு அம்மையாகவும் அப்பனாகவும் வருகை தந்த நல்லருட்பெருமானே, எனக்கு இம்மைப் பயனையும் மறுமைக்கான நல்வாழ்வையும் நற்புகழுடன் அளித்திருக்கிறாய் என்று சொல்லி மேலும் வாழ்த்துகிறார்.

"பாழிய பனைத்தோள் வீர, துணையிலேன் பரிவு தீர்த்த
வாழியாய் வள்ளலே, யான் மருவிலா மனத்தேன் என்னில்
ஊழிஓர் பகலாய் ஓதும் ஆண்டெலாம் உலகம் ஏழும்
வீழுற்ற ஞான்றும் இன்றென இருத்தி என்றாள்"

கம்ப நாட்டாழ்வாரின் தமிழ்வளம்-கவித்திறன். முதிர்ந்த பனைமரங்கள் போன்ற தோள்களை உடைய வீரனே, துணைவனான இராமபிரானைப் பிரிந்து வாடும் அடியவளின் கவலையைப் போக்கிய வள்ளலே நீ வாழி. யான் மாசு மறுவிலாத மனத்தவள். தூயவள் என்பது உண்மையானால் உலகம் முழுவதும் பிரளய வெள்ளம் ஏற்பட்டு மண்ணுலகம் மூழ்கும் காலத்தும் இன்று போல் என்றும் வாழ்வாயாக என்பதாக வாழ்த்தும் சீதாப்பிராட்டியாரை வணங்கி விடை பெறுகிறான் அனுமன். கம்ப நாட்டாழ்வாரின் இனிமையான எழில் மிகுந்த எளிமையான தமிழ்ச்சொற்கள் நம்மை வாழ்த்தி வளம் பெறச் செய்கின்றன.

கம்பர் காட்டும் மன்னர்கள்

திருமிகு. மோ.ரேணுகா
தமிழ்த்துறை, உதவிப்பேராசியர், ஸ்ரீமத் இந்திராகாந்தி கல்லூரி,
திருச்சி.

இலக்கியங்கள் மக்கட் சமுதாயத்தினை நன்னெறிக் கண்ணாற்றுப்படுத்தும் பணியினைச் செய்கின்றன. இலக்கியங்களை வடிக்கும் புலவர்கள் பல்வேறு காட்சிகளை தமது பனுவலுள் அமைத்து இலக்கியத்திற்கு இன்மை சேர்ப்பதோடு சமுதாய நெறியினை எடுத்துக் காட்டிடவும் செய்வர். கம்பன் தமது காவியத்துள் மூன்று நாடுகளின் நிகழ்வுகளைப் பதிவு செய்து சமுதாய நெறியினை எடுத்துக்காட்டும் நிலையினை இக்கட்டுரை ஒருவாறு எடுத்துக் காட்டி நிற்கின்றது.

கம்பநாடன் இராமகாதையின் கண், மக்களின் தன்மையினைக் கருத்தில் கொண்டு 1. கோசலை, 2. கிட்கிந்தை, 3. இலங்கை எனும் மூன்று நாடுகளை முறையே மனிதன், விலங்க, அரக்கன் எனும் மூவகையோர் ஆட்சிவழி சமுதாயத்தின் ஆட்சிமுறை அமையுந் தன்மையைக் காட்டுகின்றார்.

கோசல மன்னன்

தயரதன் இணையில்லாச் சக்கரவர்த்தியாய் ஆட்சி செய்தான். அவனை கம்பன் அரசர்க்கு அரசன் (168) என்று சுட்டுகின்றான். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே நடந்த போரில் தேவர்களுக்குத் துணைநின்றான் (1487) முதலிய செய்திகள் தயரதனின் இணையற்ற வீரன் என்பதனைக் காட்டுகின்றது.

தேவர்களுக்கு உதவுமளவு வீரமும் மதிநுட்பமும் செவிந்த தயரதன் மூன்று மனைவியரில் கைகேயிமீதும், நான்கு புதல்வர்களுள். இராமன் ஒருவன் மீதும் பாசம் கொண்ட தன்மையும் மன்னனாக விளங்கியவனின் சமநோக்குப் பார்வையின்மையைக் காட்டுகின்றது.

கோசல நாட்டில் ஆடவர் மட்டுமின்றி பெண்டிரும் மதுவுண்டு களித்தமை (966 - 985) பரத்தையர் அயோத்தியில் இருந்தமை தயரதனின் வீரத்திற்கும் செங்கோல் சிறப்பிற்கும் பொருந்தாதவையாகும்.

இராமனுக்கு முடிசூட்டவுள்ள செய்தி அறிந்தவுடன் மக்கள் பாவமும் அருந்துயரமும் வேர்பரியும் (1592) என்று மகிழ்ந்ததாக கம்பன் காட்டுகின்றான்.

கிட்கிந்தை மன்னன்

இராமகாதையில் இரண்டாவது நாளாக கிட்கிந்தை அரசு இடம் பெறுகின்றது. இப்பகுதி மலைவளம், அருவி, அடர்ந்த காடுகள் சூழ் பகுதியாக கம்பன் (3843, 4132, 4146, 4283) காட்டுகின்றான். இங்கு வாலியின் ஆட்சியை இராமன் கூற்றாக கம்பன் நிறையரசு (4143) எனப்பாராட்டுகின்றான். வாலியின் வீரத்தினை (3822, 3823, 3824, 3825, 3826, 3831, 3834) பலவாறு கம்பன் புகழ்கின்றான். ஆயினும் இராமனின் கணைக்கு இரையாகின்றான்.

இணையற்ற வானர சமுதாயத்தின் பாதுகாவலானாக அரக்கர்களையே வென்ற வீரன், தனது தமையனின் கூற்றினை ஏற்க மறுக்கின்றான். தனது அமைச்சர்களின் அறிவுரைக்குச் செவிசாய்க்கவில்லை தான் வீரமுடையவன் எனும் செருக்கால் அறி-விழக்கின்றான். இராமனின் வில்லுக்கு இரையான பின்பு இராமனிடம் தான், தனது தம்பியின் மனைவியைக் கவர்ந்தமைக்கு பிரமன் எங்களுக்கு குலவொழுக்க முறையை விதிக்கவில்லை (4046) என்று சமாதானம் கூறுகின்றான்.

கிட்கிந்தையின் அரசனான வாலி வீரத்தினால் அறிவிழந்த தன்மையைக் கம்பன் காட்டுகின்றான்.

இலங்கை மன்னன்

இலங்கை யாண்ட அரக்கன் இராவணன் என்பானாவான். இவன் சிவபக்தியோடு இறைவனிடம் பெற்ற வரத்தினால் ஆட்சி செய்தவன். இம்மன்னன் சிவனிடம் வாழ்நாளும், வெற்றி தரும் சந்திரகாசம் எனும் வாளும் பெற்றவன். இம்மன்னனின் ஆட்சியைக் கண்ட அனுமன் கவலை உடைய மக்களை நாட்டிடை காணாது வியக்கின்றான். (4864)

இராவணன் தனது தமக்கை சூர்ப்பணகையின் நஞ்சுச் சொற்களிலே மயங்கி அறிவிழக்கின்றான். இறைவனிடம் பெற்ற வரங்களினால் தீமைகள் புரிகின்றான், இராவணனின் தீமைகளை,

'தேசியை சிறையில் வைத்தான் தேவரை இருக்க் செய்தான்
பூசுரர்க்கு அலக்கண் ஈந்தான் மன்னுயிர் புடைத்துத் தின்றான்
ஆசையின் அளவும் எல்லா உலகமும் தானே ஆள்வான்
வாசவன் திருவும் கொண்டான் வழி அலா வழிமேல் செல்வான்

என்ற இலக்குவன் பட்டியலிட்டமையைக் கம்பன் காட்டுகின்றான். இங்கு முதலில் சுட்டப்படும் குற்றம் இராவணன் இறுதியாகச் செய்த

மிகப்பெரிய குற்றம் ஆகையால் முதலில் காட்டி இனி இராவணன் குற்றம் செய்யாது செய்த குற்றத்திற்காக இராமாயணத்தால் இறுதிபெறப்போகும் நிலையைக் காணமுடிகின்றது.

நிறைவு

கம்பன் தனது இராமகாதையின்கண் காட்டும் மூன்று நாட்டு மன்னர்களும் வீரத்தின்வழி வந்த பதவியால் அறிவிழந்து உறவுப்பாசம் (தசரதன்), மறு நெறி சுட்டாத செயல் (வாலி) காமவிடம் மேலிட்ட செயல் ஆகிய செயல்களினால் வீரம், எனும் செருக்கால் அமைச்சர், உடன்பிறப்பு, நண்பர்கள் அறிவுரையை ஏற்காது அழிந்தமையைக் காணமுடிகின்றது. இம்மூன்று மன்னர்களின் குணங்களை நீக்கி இராமன் தன் உயர் குணத்தின்வழி நிலை நிறுத்திக் கம்பன் காட்டுகின்றான்.

கம்பன் காட்டும் அமைச்சர்கள்

திருமிகு. ப.சண்முகம்
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர், ஸ்ரீமத் ஆண்டவன் கலைக்கல்லூரி,
திருச்சி.

மானுட வாழ்வின் பல்வேறு கூறுகளை இலக்கியங்கள் நிரலிடுகின்றன. அவற்றுள் முடியாட்சி, குடியாட்சி என்ற நிலையானது இன்றியமையாததாகும். இவ்வாட்சி முறைகள் மக்கள் இன்பமுடன் வாழ்ந்திட துணை செய்கின்றன. இவ்விரு ஆட்சி முறைகளிலும் 'அமைச்சர்' எனும் பதவி முறையானது இன்றியமையா இடம் பெறுகின்றது. இராமகாதையின் கண் கம்பன் காட்டும் அமைச்சியலின் சிறப்பினை இக்கட்டுரை தொட்டுக் காட்டுகின்றது.

கம்பர் கூறும் அமைச்சர் இலக்கணம்

பழந்தமிழ் நூல்களில் குடியாட்சி என்ற முறை எடுத்துக்காட்டப்படவில்லை எனினும் முடியாட்சி, குடியாட்சி என்ற இருவகை ஆட்சியும் மாட்சியுடன் நடைபெற அமைச்சர்கள் என்போர் துணைசெய்கின்ற முறையினை இலக்கியங்கள் காட்டுகின்றன.

அமைச்சரின் இலக்கணத்தை,

' மந்திரிக்கு அழகு வரும்பொருள் உரைப்பது'

என்று சுருங்கக் காட்டுவதன் வழி அறியமுடிகின்றது. கம்பன்,

'உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரிய நூலுங்
கற்றவர் மான நோக்கிற் நவரிமா வினைய நீரார் ' - (கம்ப.அயோ.பா.9)

என்ற பாடலில் விரிவாகக் கூறுகின்றார். இப்பாடல் மந்திரியின் மதி நுட்பத்தினையும், கல்வியறிவையும், மான உணர்வுகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

அமைச்சரின் ஆலோசனைகளை ஏற்று நடப்பதே சிறப்பு என்பதனை,

"உமைக்கு நாதற்கும் ஓங்கு புள் ஊர்திக்கும்
இமைப்பில் நாட்டம் ஓர் எட்டு உடையானுக்கும்

சமைத்த தோள் வலி தாங்கினார் ஆயினும்
அமைச்சர் சொல்வழி ஆற்றுதல் ஆற்றலே " (பா - 1421)

என்ற பாவுள் காட்டுகின்றார். இங்கு சிவன், திருமால், பிரம்மா ஆரிய கடவுளராக இருப்பினும் (அ) கடவுளரை ஒத்த தோள்வலி உடையவராயினும் அமைச்சரின் ஆலோசனையைக் கேட்க வேண்டும் என்பது கருத்தாகும்.

இங்கு மிகுந்த தோள் வலிமையை மட்டும் கருதாது அறிவு வலிமையும் கலந்து நிற்றலே அரசுக்கு முழுமையான வெற்றி தரும் என்பது கம்பன் கருத்தாகும்.

கம்பன் காட்டும் அமைச்சரவை

தயரதனுடைய அமைச்சர்களாக திருட்டி, சயந்தன், விசயன், சித்தார்த்தன், அர்த்தசாதகன், அசோகன், மந்திரபாலன் என்ற என்மர் இருந்ததாக வால்மீகி காட்டுவதனைக் கம்பன் வசிட்டன், சுமந்திரன் எனும் இருவர் இருந்ததாக காட்டுகின்றான். இவ்விருவருள்ளும் வசிட்டனே செயல்படுகின்ற தன்மையும், சுமந்திரன் கூறியதனைச் செய்யும் பணியாளனாகவும் காணப்படுகின்றான். மேலும் குறுநில மன்னர்கள் உடைய வேந்தவையும் ஒன்றும் கோசல அரசவையில் இருந்தது.

இராமனுக்கு முடி சூட்ட விரும்புவதனை அமைச்சர்களிடம் கூறும்போது, அவர்கள் இசைவைத் தெரிவிக்கின்றனர். தயரதன் தனதமைச்சரவையை நோக்கி,

"மகன் வயின் அன்பினால் மயங்கி யான் இது
புகல, நீர் புகன்ற இப்பொம்மல் வாசகம்
உகவையின் மொழிந்ததோ? உள்ளம் நோக்கியோ?
தகவு என நினைந்தது எத்தன்மையால்" (1391)

என்று கேட்கின்றான். இங்கு அமைச்சர்கள் அனைவரும் மன்னனது மனக்கருத்துக்கு மாறுபாடாக கருத்து கூறாது உள்ள நிலையை கம்பன் மறை பொருளாகக் காட்டுவதனைக் காணமுடிகின்றது.

இராமன் காடு செல்ல முற்படும் போது அதனை அமைச்சன் வசிட்டன் தடுக்கவில்லை. மாறாக இராமனின் மரவுரிக்கோலங் கண்டு,

"வாழ்வினை நுதலிய மங்கலத்து நாள்
தாழ்வினை அதுவர சீரை சாத்தினான்

சூழ்வினை நான்முகத்து ஒருவன் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற்பாலதோ"

என்று கூறுகின்றான். இங்கு வினையால் வந்தது ஆயினும் மாற்றும் ஆற்றல் பெற்றியார் என்று கம்பனால் போற்றப்பட்ட அமைச்சன் செயலற்ற தன்மையைக் காணமுடிகின்றது.

மன்னன் நாட்டு மக்களை முறைசெய்து காத்திட சூழ்ந்த அறிவால் துணை செய்பவர்கள் அமைச்சர்கள் ஆவர். இவர்கள் மன்னனின் மனக்கருத்திற்கு ஒத்துப் போகின்ற அமைச்சர்களை கம்பன் காட்டுகின்றான்.

முடிவு

இராமகாதையில் கம்பன் காட்டும் அமைச்சரின் இலக்கணங்கள் எக்கால அரசியல் அமைச்சரவைக்கும் பொருந்துவன. ஆயினும் சில நேரங்களில் அமைச்சரவையானது செயலற்றுப் போகும் தன்மையுடையன என்பதனைத் தயரதனின் ஆட்சியின் ஒரு பகுதியில் பொருத்திக் காட்டியமையைக் காணமுடிகின்றது.

கம்பன் - பாத்திரம் சுவைசெய் பாவலன்

திருமிகு. தெய்வ.சுமதி
முனைவர் பட்ட ஆய்வு மாணவி,
திருப்புத்தூர்.

ஒரு நன்மையை நன்மையாகப் படைப்பதை விட, ஒரு தீமையைத் தீமை களைந்து நன்மையாகப் படைக்கிற போதுதான், அப்பாத்திரத்திற்கு சுவை சேர்க்க வேண்டியது கவிஞனின் கடமையாகிறது. கொடியஅரக்கர் வாழும் இலங்கையில் இயற்கையாகவே வெறுப்பு தோன்ற படைக்கப்பட்ட பாத்திரம் மண்டோதரி. அப்பாத்திரத்திற்கு கம்பன் சுவை செய்த விதம் காண்போம்.

இராவணன் அரக்கன்: கொடியவன்: பிறன்மனை நயந்த மாபாதகன் என்றெல்லாம் எண்ணும்போது அவன்மீது வருகின்ற வெறுப்பு, கோபம், அருவெறுப்பு போன்ற அத்தனை குணங்களும் அவன் மனையாள் என்ற ஒரே காரணத்தினால் மண்டோதரி மீதும் படிவது மனித இயற்கை. ஆனால் இராவணன் வீழ்ச்சியால் மகிழவேண்டிய மனிதமனம், மண்டோதரி அடைந்த துயரத்தை எண்ணிக் கலங்குகிறது. பிறன்மனை நயந்த இவனுக்கு இத்துன்பம் வேண்டும் என்று நினைக்கின்ற நம்மால் 'இவளுக்கா இத்துயரம் நேரவேண்டும்?' என்று இரங்காமல் இருக்க முடியவில்லையே! சீதையின் விடுதலை கண்டு மகிழும் நெஞ்சம், மண்டோதரி மாங்கல்யம் இழந்து, இராவணன் இறந்ததற்கான காரணங்களைச் சொல்லி அரற்றும்போது, அவள்துயரத்தில் பங்கெடுத்துத் தேம்புகிறதே! வெறுப்பு தோன்ற அமைந்த ஒருபாத்திரத்தின் வெறுப்பை நீக்கி, மாறாக படிக்கின்ற ஒவ்வொருவரும் அப்பாத்திரத்திற்காக இரங்கி ஏங்கி அழுமளவிற்கு, சுவை செய்திருப்பது தான் கம்பன் செய்த அற்புதம்.

மயன்மகள் மண்டோதரி அறிமுகம்

கம்பனில் ஐந்தாவது காண்டமான சுந்தர காண்டத்தில் ஊர் தேடும் படலத்தில் தான் அனுமன் கண்வழியே முதன் முதல் காணவருகிறாள் பஞ்சகன்னியரில் ஒருத்தியான மண்டோதரி. அசுரத் தச்சனாகிய மயன்மகள் உறையும் பேரழகுமிக்க பெருமாழிகையை அறிமுகப் படுத்தும் போதே அவள் உறங்கும் அழகையும் மூன்று பாடல்களில் உரைக்கின்றார் கம்பர்.

"கண்டனன், நழிர்திங்கள் மாய நந்திய வாள்முகத்து
ஒருதனி மயன் மகள் உறை மாடம்" (க.ரா.5029)

மாடஅழகில் மயங்கிய அனுமன், மேம்பட்ட மாடம் இது என்பதால் சீதை சிறை வைக்கப்பட்ட மாடமும் இதுவாக இருக்குமோ என்ற அச்சத்தில் உள்ளே நுழைகிறான். ஆரம்பை, மேனகை, ஊர்வசி, திலோத்தமை முதலியோர் கால்களை வருட, தேவமகழிர் னிணைமீட்டி சாமரம் னிச, கற்பக மலர்களின் நறுமணத்தை நுகர்ந்து கொண்டு, மிக உயர்ந்த மஞ்சத்தில் இரத்தின மணி விளக்குகளின் ஒழிகளைத் தன் உடல் ஒழியில் ஒழியிழக்கச் செய்தவாறு தேவமகழிர் மத்தியில் ஒரு தேவதையாக உறங்கிக் கொண்டிருக்கிறாள் பேரழகியான மண்டோதரி.

அன்னள் ஆகிய சானகி இவள்!

வால்மீகியில் இராவணன் காலருகில் மிக உயர்ந்த படுக்கையில் மண்டோதரி உறங்குவதைக் கண்டு, அனுமன் சீதையே என்று பெருமகிழ்வு கொண்டு, ஐயுற்று, வருந்தித் தெளிவதாக வருகிறது. ஆனால் கம்பன் எண்ணத்தாலும் சீதையைக் களங்கப்படுத்த விரும்பவில்லை. சீதையோ என்ற எண்ணம், ஐயம் அனுமனுக்கு இராவணன் காலருகில் வருவதைவிட, தனியிடத்தில் வருவது இன்னும் வலிமையானது என்பதால் தனிமாழிகை அமைத்து, சீதைக்குரிய உயர்ந்த அடையாளங்களை மண்டோதரிக்குப் பொருத்தி, கற்பரசியாக, உயர்குலமடந்தை இவள், சீதைக்கு நிகராக வைத்து எண்ணத் தக்கவள் என்ற எண்ணம் தோன்றும் வகையில் தேவமகளிர்க்கு மத்தியில் மண்டோதரி உறங்கிக் கிடப்பதாக கம்பன் படைத்திருப்பது, பாத்திரத்திற்கு சுவைசேர்க்க கம்பன் கையாண்ட உத்தி. அதுமட்டுமல்ல சொல்லின் செல்வன் அனுமன் வாயிலாகத்தான் இலங்கை நகரம், அந்நகரத்தில் சிறை வைக்கப்பட்ட சீதையின் கற்புநிலை, இராவணன் மாட்சி என்று அத்தனையும் வெளிப்படப் போகிறது. அப்படியிருக்க, அனுமனே,

"அன்னள் ஆகிய சானகி இவள்" (க.ரா.5033)

என்று மயங்கும் அளவிற்கு மண்டோதரியை சீதையாகவே படைத்து சுவை செய்திருப்பது கம்பனின் கன்னிமுயற்சி. இத்தகைய அழகும் கற்புமுடையாளைத் துணையாகப் பெற்றிருந்தும், மாற்றான் மனைவி சீதையை சிறையெடுத்த இராவணன் சிறுமையை உணர்த்த கம்பன் கையாண்ட உத்தி.

அக்ககுமாரன் வதைப்படலத்தில் மண்டோதரி

மண்டோதரியின் இளைய மகன் அக்ககுமாரன். அனுமனோடு போரிட்டு மாண்டுகிடக்கிறான். இலங்கையில் எல்லோரும் புலம்புகின்றனர். மகனைப் பலிகொடுத்த தாய் மண்டோதரி கடைசியாக வருகிறாள். வந்தவள் மகன் இறந்த செய்தி கேட்டு, அவனைத் தேடிச் சென்று புலம்பவில்லை. அருகில் நின்ற இராவணன் கால்களில் வீழ்ந்து அழுது அரற்றுகிறாள்.

"அயன் மகன் மகன் மகன் அடியில் வீழ்ந்தனள்
மயன் மகள், வயிறு அலைத்து அலவி மாழ்கினாள்" (க.ரா.5715)

'வயிறு அலைத்து அலவி மாழ்கினாள் என்று கூறும் கம்பன் மண்டோதரியின் கூற்றாக எதுவும் கூறவில்லை. பேசுகின்ற வார்த்தைகளை விட பேசாதமௌனம் உணர்த்துகின்ற வார்த்தைகளின் அர்த்தமும், ஆழமும், அழுத்தமும், வலிமையும் அதிகம். மண்டோதரியின் மௌனமான அழுகையும் அப்படித்தான். அவளுக்கு வந்த துன்பம், துன்பம் வந்த காரணம் என்று எதைச்சொல்லி அழுவாள்? "பாவி காமுகனே! இராவணா! உனது முறையற்ற செயலால், உனது முறையற்ற காமத்தால், பிறன் மனைவி என்று அறிந்தும் சீதையை நயந்து நீ சிறையெடுத்த காரணத்தால் அல்லவா, எனது அருமை மகன் அக்ககுமாரன் இறந்து கிடக்கிறான்." என்பதை எப்படிச் சொல்லி அழுவாள். மண்டோதரியின் மனம் கூறாமல்கூறும் வார்த்தைகளால் கற்போரின் கல்நெஞ்சையும் கலங்க வைக்கிறார் கம்பர். இராவணன் மனைவி என்ற வெறுப்பை இரக்கமாக மாற்றி, பாத்திரத்திற்கு சுவை செய்கின்ற அற்புதமான இடனிது. ஓரடியில் இராவணனின் மூன்று தலைமுறைகளை கூறும் வாமணன் அல்லவா கம்பன்!.

மகாபாரதம், கந்தபுராணம் போன்ற காப்பியங்களில் கூட இதுபோன்ற துயரம் அடைந்த மாதரசியர் உண்டு என்றாலும், மண்டோதரியின் துயரம் பலமடங்கு அதிகமானது. துரியோதனன் மனைவி பானுமதி. சூரபத்மன் மனைவி பதுமகோமளை. இருவரும் கணவனை இழந்தார்கள்: பிள்ளைகளைப் பலிகொடுத்தார்கள். ஆனால் அவர்களால் வாய்விட்டு அழமுடிந்தது. காரணம் துரியோதனன் மண்ணுக்காகப் போரிட்டான்: மாண்டான். சூரபத்மன் மானத்திற்காகப் போரிட்டான்: மாண்டான். இருவரது போரிலும், தோல்வியிலும் ஒரு பெருநிதம் இருந்தது. ஆனால் இராவணன் மனைவி மண்டோதரியின் துயரம் வாய்விட்டு அழக்கூட முடியாத துயரம்.

அதுதான், அந்தகாரணம் தான் அவள் துயரத்தை பலமடங்காக்கி அவள்மீது படிந்திருந்த வெறுப்பை கற்போர் மனத்தில் இரக்கமாக மாற்றி அவளுக்காக கலங்க வைக்கிறது. மண்டோதரி பாத்திரத்திற்கு கம்பன் சுவை செய்த விதம் அருமை.

இந்திரசித்தன் இறப்பில் மண்டோதரி

மண்டோதரியை அடுத்து யுத்த காண்டத்தில் காட்டுகிறார் கம்பர். மூத்தமகன் இந்திரசித்தன் இறந்த செய்தி கேட்டு மைந்தன் மேல் விழுந்து புலம்புகின்றாள். அவள் சோகத்தை ஏழு விருத்தங்களில் பாடுகிறார் கம்பர். அக்ககுமாரன் அழிவில் மௌனமாக அழுத மண்டோதரி இந்திரசித்தன் இறப்பில் எல்லை மீவிய சோகத்தினால் வாய்விட்டுப் புலம்புகிறாள். மண்டோதரியின் புலம்பல் கல்லையும் கரைவிக்கும் உருக்கம் மிக்கது.

"ஐயனே! அழகனே! என் அரும்பெறல் அமிழ்தே! ஆழிக்
கையனே, மழுவனே, என்று இவர் வலி கடந்த கால
மொய்யனே! முளரி அன்ன நின் முகம் கண்டிலாதேன்,
உய்வெனோ? - உலகம் மூன்றுக்கு ஒருவனே! செரு வலோனே!"
(க.ரா.9233)

சீதை என்று அமுதால் செய்த நஞ்சு!

அக்ககுமாரன் அழிவின்போது மௌனமாகத் துயருற்ற மண்டோதரியால் இந்திரசித்தன் இறந்தபோது அவ்விதம் மௌனமாக அழமுடியவில்லை. வாய்விட்டு புலம்புகிறாள். காரணம் மகன் மாண்டுவிட்டான் என்ற சோகம் ஒருபுறம் இருந்தாலும், நாளை மணாளனும் மாளப்போகிறானே என்ற உள்ளுணர்வு, அவளைத் தின்றது. பின்னாழில் நேரப்போகும் இராவணன் மரணத்தையும் இந்நாழில் உய்த்துணரும் ஆற்றல் அவளைக் கொன்றது. இராவணன் மகன் அதிகாயன் இறந்தபோது, அவன்தாய் தான்யமாலை புலம்பியதை கம்பன் கூறுகையில், சோகத்தின் உச்சியில் இராவணன் காமத்தைச் சுட்டிக்காட்டிச் சீறுவதாக பதிவு செய்கிறார்.

"பேதை ஆய்க் காமம் பிடிப்பாய் பிழைப்பாயோ?
சீதையால் இன்னம் வருவ சிலவேயோ?" (க.ரா.7997)

ஆனால், அதே போன்று சோகத்தின் உச்சியில் மண்டோதரியிடம் கணவனைக் கண்டிக்கும் பண்போ, அவன் காமத்தைச் சுட்டிச்சாடும் சீற்றமோ காணப்படவில்லை. வரவிருக்கும் துயரத்தை எண்ணியே அவள் கற்புமனம் தவிக்கிறது.

"அஞ்சினேன் அஞ்சினேன் அச்சீதை என்று அமுதால் செய்த
நஞ்சினால், இலங்கைவேந்தன் நாளை இத்தகையன் அன்றோ?"

(க.ரா.9238)

மண்டோதரியைச் சீதைக்கு நிகரான கற்பரசியே என்று காட்ட, அவள் கற்பின் வீச்சுக்குக் கம்பன் காட்டும் உன்னத அடையாளம் இது.

இராவணன் வீழ்ந்த படுகளத்தில் மண்டோதரி

இராவணன் இறந்து வீழ்ந்து கிடக்கும் படுகளத்திற்கு அவன் நினைவாகவே வாழும் மண்டோதரி வருகிறாள். அவள் துயரத்தை ஏழு பாடல்களில் பதிவு செய்கிறார் கம்பர். ஒவ்வொன்றும் ஆயிரம் பொருள்பொதிவு கொண்ட அவலம் நிறைந்த பாடல்கள். துயரத்தின் சாற்றிலே தோய்ந்த சொற்களால் வடித்தெடுக்கப்பட்ட சோகங்கள். சோகம் ஏழு பாடல்கழிலும் தோய்ந்திருந்தாலும் சோகத்தின் சாரத்தை இரண்டு பாடல்களில் பிழிந்தெடுத்து மண்டோதரி என்ற பாத்திரத்திற்கு அவலச் சுவையால் சுவை செய்திருக்கிறார் கம்பர்.

கள்ழிருக்கும் மலர்க்கூந்தல் சானகி

சோகத்தின் உச்சத்தில் மண்டோதரி வாயிலிருந்து தெரிக்கும் வார்த்தைகள் இராவணனின் மனத்தூய்மையைக் காட்டுவதாக அமைந்தன. இராமன் அம்பு சல்லடையாய் இராவணன் உடலைத் துளைத்திருப்பதைப் பார்க்கிறாள். அசோக வனத்தில் சிறையிருந்த சீதையை விடுவிக்க மட்டுமல்ல, இராவணனின் எண்ணச் சிறை-யிலிருந்தும் சீதையை விடுவிக்கவே இராமபாணம் இராவணன் உடலைத் துளைத்ததாகக் கூறுகிறாள் மண்டோதரி. ஆனால் தன் கணவன் உள்ளத்திருந்த சீதை என்றோ எடுத்து தூரனிசப்பட்டு,; நெஞ்சில் காமம் குடிபெயர்ந்து னிரம் வேர்விட்டுள்ளது அறியாது இராமபாணம் தோற்றதே! இராமபாணத்திற்கா இந்த தோல்வி! என்று அழுகையின் ஊடே அவள்கூறும் வார்த்தைகள் இராவணன் மனத் தூய்மையை, மனமாற்றத்தை, கணவன் நெஞ்சவிந்து போற்றும் அவள் கற்பின் திறத்தை காட்டுகிறது

"கள் இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள் இருக்கும் எனக்கருதி, உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாழி? "

(க.ரா.9940)

சோகத்தின் உச்சத்தில் சுவை சேர்க்கும் கம்பன்

சோகத்தின் எல்லையில் நின்று புலம்பும் புலம்பலைக் கூட

அவலச்சுவையாக அனுபவித்து வெளிப்படுத்துவது கம்பனுக்கு கைவந்த கலை. இராவணன் வீழ்ச்சிக்கு, அழிவிற்கு முதற்காரணம் சீதையின் பேரழகு. அடுத்தது மாறாத அவள் கற்புத்திறம். மூன்றாவது இராவணன் சீதைபால் கொண்ட காதல். நான்காவது சூர்ப்பணகை என்று பல காரணங்களை அடுக்கி புலம்புகிறாள் மண்டோதரி.

"காந்தையருக்கு அணி அனைய சானகியார்
    பேர் அழகும், அவர்தம் கற்பும்
ஏந்துபுயத்து இராவணனார் காதலும், அச்
    சூர்ப்பணகை இழந்த மூக்கும்
வேந்தர்பிரான், தயரதனார், பணியதனால்
    வேங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார்
    பெருந்தவமாய்ப் போயிற்றம்மா" (க.ரா.9942)

தயரதன் இராமனைக் காட்டிற்கு அனுப்பாதிருந்தால், இராமன் தந்தை சொல் ஏற்று காட்டிற்கு வராதிருந்தால், சூர்ப்பணகை இராமனைக் காணாதிருந்தால், கண்டு காதல் கொள்ளாதிருந்தால், இலக்குவன் அவள் மூக்கை அரியாது விட்டிருந்தால், அவள் இராவணனிடத்து முறையிடாதிருந்தால், இராவணன் சீதைபால் காதல் கொள்ளாதிருந்தால், அவள் பேரழகியாக இல்லாதிருந்தால் என் கணவன் இராவணன் இப்படி இறந்து வீழ்ந்து கிடக்க மாட்டானே என்று காரணங்களை அடுக்கி வைத்து ஏங்கி அழுகின்ற அபலையாக மண்டோதரி பாத்திரத்தை அவலச்சுவை பெய்து செய்திருக்கிறான் கம்பன்.

அவலச்சுவையின் எச்சமும் மிச்சமும்

சோகத்தின் மிச்சத்தை மண்டோதரி மரணத்தில் நிறைவு செய்கிறார் கம்பர். இராவணன் மார்பினைத் தன் கரங்களால் தழுவி, யாருமற்ற தனியிடத்தில், கூட்டக் கலப்பில், வந்த கழிப்பில், இன்பத்தின் உச்சத்தில் கணவன் மட்டுமே அறிய, அவள் கூறும் அந்த ஒரு சொல்லைக் கூறி அன்பனை அழைத்தாள். அவள் ஆவி நீங்கிற்று. மண்டோதரியின் மரணம் அன்பின் வெளிப்பாடு.

"தன்தழைக் கைகளால் தழுவி, தனி
நின்று அழைத்து உயிர்த்தாள்: உயிர் நீங்கினாள்" (க.ரா.9946)

கணவன் உடலோடு உடல் சேர்ந்து ஆவி பிரிந்த தனி அன்பில்

மண்டோதரி மரணத்தையும் ஆட்சி செய்கிறாள். வெறுப்பை அவலச்சுவையால் இரக்கமாக மாற்றி, கழிபேரிரக்கம் கொள்ளத்தக்கதாக, கற்போர் இதயத்தை துயரத்தில் தோய்த்து பிழியச் செய்கிற மண்டோதரி பாத்திரம், "கம்பன் - பாத்திரம் சுவை செய் பாவலன்" என்பதற்கு ஓர் அற்புதச்சான்று. அவலச் சுவை தோய்ந்த பாக்களால் மண்டோதரி பாத்திரத்தை கம்பன் சுவை சேர்த்து ஆக்கியிருக்கிறான்.

"நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பே யணிமுரசா - வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு." (நளவெண்பா - 32)

பிரிந்தவர் கூடினர்

முனைவர் வ.குருநாதன்
தலைவர், இலக்கியத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

புணர்நிலை – பிரிநிலை

திருமகள் உடனாய் அலைகடல் நடுவே அனந்தப் பள்ழியில் அறிதுயில் அமர்ந்த திருமால் - வெந்தொழில் அரக்கரின் வினைகளை வீழ்த்தி நந்தா தவத்தோரை நாளும் வாழ்த்தவும், மறத்தை ஒழித்து அறத்தை நிலைநாட்டவும்(பகவற்கீதை 4:8) தெய்வ நிலைவிட்டு மனிதநிலை பெற்று - அயோத்தி வேந்தன் தயரதனுக்கு மகனாய் இராமனெ அவதரித்தான் (கம்ப.பால.201, 284, 299). அப்போது அவனால் பிரித்துவிடப்பட்ட திருமகள் அவன் சென்ற மனித அவதாரத்திலேயே தானும் சென்று அவனுடன் கூடக் கருதி, மிதிலை வேந்தன் சனகனுக்கு மகளாய்ச் சீதையென அவதரித்தான்(கம்ப.568). இவ்வாறு ஓரிடத்திலிருந்து பிரிந்து ஈரிடங்களில் சென்று வளரும் இவ்விருவரும் ஊழாணைப்படி மீண்டும் ஒன்றிக் கலக்கும் நிகழ்ச்சிகளை ஆய்வு நோக்கில் காண்பதே இக்கட்டுரை.

கூட்டும் நல்வினை

நடுவரு நல்லூழ்: அயோத்தி இராமனும் மிதிலைச் சீதையும் அன்பு நெறியில் கண்டு கலக்க வேண்டும். இஃது எவ்வாறு முடியும்? திரி தனியே தீ தனியே இருக்கின்றன: இரண்டையும் வேறொருவர் பொருத்திவிடும் போதன்றோ சுடர்விளக்கு ஒளிவிடுகின்றது? இங்கே இவர்களையும் இடைநின்று கூட்ட மூன்றாவதாக ஒரு துணை தேவைப்படுகின்றது. அதனை நல்வினை, நல்லூழ் என்பர். அந்த நல்லூழின் துணையின்றி யாரும் கூடமுடியாது. எனவே, இவர்களுக்கும் அந்த ஊழின் துணை தேவை. அதுவும் இவர்களுக்குத் துணைவந்து கூட்டக் காத்திருக்கின்றது.

ஊழின் உருநிலை: ஆயின் அந்த ஊழின் செயல்முறை எப்படி? அருவப் பொருளாயிருக்கும் அதனால் உருவப் பொருள்களைக் கூட்ட முடியுமா? முடியாமல் போனால் அந்த ஊழிற்கும் வலிமையில்லை; அதை நம்பி, 'ஊழிற் பெருவலி; யாவுள மற்றொன்று சூழினும் தான்முந் துறும்' (குறள்.380) என்ற வள்ளுவருக்கும் வாய்மையில்லை என்றாகும். எனவே. அது ஒரு சூழ்ச்சி செய்கிறது. இயல்பாக உள்ள அருவ

நிலையினின்று, இடம் பொருள் ஏவலுக்கு ஏற்றதோர் உருவ நிலைக்கு மாறுகிறது. அப்போது, அந்த உருவமும் ஊழின் தொழிலைத் தன் தொழிலாக மேற்கொள்கிறது.

இங்கே, இராமனுக்கும் சீதைக்கும் இடைநின்ற நல்லூழ் கோசிகமுனிவனின் உருவில் சென்று அவர்களைக் கூட்ட முற்படுகிறது. கூட்டும்போது முதலில் யாரை யாரிடத்திற்குக் கொண்டு செல்வது? மலரை நாடி வண்டைச் செலுத்தும் இயற்கை உலகியல் கண்ட ஊழ், சீதையின் இருப்பிடத்திற்கே இராமனைக் கொண்டுசெல்ல நினைக்கிறது. எனவே, கோசிக முனிவன் இராமனை அழைத்துக்கொண்டு மிதிலை புறப்படுகிறான். புறப்படுமுன் இராமனுக்குச் சீதையைப் பற்றியோ, அவளை அவனுக்கு மணமுடிக்க எண்ணிய தன்னுடைய எண்ணம் பற்றியோ, அவளை நாடிச் செல்லும் அந்தப் பயணம் பற்றியோ முனிவன் ஏதும் சொல்லவில்லை. ஏன்? அதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது, சொல்லிச் செய்வதில் சிறப்பில்லை. இரண்டாவது, சொல்லுக்கு மாறாகச் சூழ்நிலைகள் உருவாகலாம். மூன்றாவது சீதையை நேரில் காண்பதற்குமுன் அவளைப் பற்றிய நினைப்பு இராமனுக்கு உகந்ததன்று. நான்காவதாக அப்படியொரு நினைப்பை ஏற்படுத்திவிட்டால், பின்னர் அவன் சீதையைக் கண்டு காதல் கொள்ளுமிடத்து அவனது உண்மையான காதலுக்கு அந்த நினைப்பே ஒரு மறுவாகும். சீதையின் உருவையும் உணர்வையும் கண்டு தன்விருப்பாகவே தான் அவற்றில் ஈடுபட்டு இராமன் அவளைக் காதலித்தான் என்ற அன்புநிலை மாறி, முனிவனுடைய சொல்வழிக் காதலித்தான் என்ற வன்புநிலை உருவாகிவிடும், அதற்கு வித்திடல் தகாது. இவ்வகைக் காரணங்களால் கோசிகன் உண்மையுணர்த்தாமலேயே இராமனைக் கூட்டிச் செல்லுகிறான். ஆயினும், அப்படிக் கூட்டிச் செல்வதற்கு எவையேனும் காரணம் காட்டவேண்டும் என்பதால் தன் வேள்வி காத்தலும் அதன்பின் சனகனது வேள்வி காணலும் என்ற இரண்டு காரணங்களையும் ஒன்றன்பின் ஒன்றாகக் காட்டி அழைத்துப் போகிறான் கோசிகன்.

ஊழின் ஆணை

தன்னைத் தம்பி தொடர, தான் முனிவனைத் தொடர்ந்து மிதிலை அரசன் வீதியில் நடந்து கொண்டிருக்கின்றான் இராமன்; மின்னலெலாம் சேவிக்கும் மின்னரசிபோல் கன்னிமாடத்தின்மேல் அன்னமாடுந்துறையில் தோழியர் சூழ நின்று கொண்டிருக்கிறாள் சீதை. நீண்ட இடைவெளிக்கு அப்பால் பிரிந்திருந்த அந்த இருவரையும்

இவ்வளவு நெருக்கத்தில் கொண்டுவந்து கூட்டுதற்கே கோசிகன் என்ற மூன்றாவது உருவில் புகுந்துவந்த ஊழ், இத்துடன் கோசிகனை ஒதுக்கிவிட்டு, இனி உள்ளத்தாலும் உடலாலும் கூடிக் கலக்கவேண்டிய அவ்விருவருக்குள்ளேயே புகுந்து நின்று விளையாடத் தொடங்குகிறது. தொடங்கி, அவர்கள் கூடவேண்டும் என்ற தன் ஆணையை நேரடியாக அவர்களிடத்தே செலுத்துகிறது; செலுத்திச் செயல்படத் தூண்டுகிறது. அவர்களும் செயல்படுகின்றனர். வீதியில் செல்லும் இராமனும் மாடத்தில் நிற்கும் சீதையும் விழிகளால் கலக்கின்றனர்.

"ஒன்றே வேறே என்விரு பால்வயின்
ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" (தொல்.பொருள்.களவு.2)

என்ற தொல்காப்பியக் கருத்தினுக்கேற்ப அமைகிறது இக்காட்சி. கடவுள் நிலையில் கூடியிருந்து பிரிந்தவர்கள் மனித நிலையில் கூடவேண்டும் என்ற நல்வினை வயத்தால் ஒருவரையொருவர் காண்கின்றனர்.

"எண்ணரும் நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்இணை கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" (பால.598)

என்பது இக்காட்சிப் பாடல்.

காட்சி உடன்பாடு

உணர்வுடன்பாடு, அறிவுடன்பாடு, மதியுடன்பாடு: மேற்கண்ட காட்சிப் பாடலில் ஒன்றினோடு ஒன்று தொடர்புடைய இரண்டு நிலைகள் அமையக் கம்பர் பாடியுள்ள திறம் நோக்கத்தக்கது. முதலாவது, 'கண்ணொடு கண்இணை கவ்வி ஒன்றையொன்று உண்ணவும்' என்பது. இதனுள் ஒடுவுருபு உடனிகழ்ச்சிப் பொருளது ஆதலின், இராமன் சீதை என்ற இருவரில் யார் முதலில் நோக்கியவர் என்ற ஆய்வுக்கு இங்கே இடமில்லை. இராமனுடைய கண்கள் சீதையின் கண்களைப் பாய்ந்து கவ்விய அதே நேரத்தில், சீதையினுடைய கண்களும் இராமனின் கண்களைப் பாய்ந்து கவ்வின என்று கொள்வதே பாடலுக்கேற்ற பொருள். இவ்வாறு ஒரே நேரத்தில் இருவரும் நோக்குதல் உண்மைக் காதலர் உளவியல். அவ்வியல்புக்கு ஏற்பவே இராமனும் சீதையும் நோக்கினர். அந்நோக்கங்களில் விரைவுக்குறிப்பும், வேட்கைக்குறிப்பும் கலந்திருந்தன என்ற உண்மையை விளக்கவே 'கவ்வி' எனும்

சொல்லைப் பெய்கிறார் கம்பர். அப்படிக் கவ்விய கண்கள் அதே வேகத்தில் ஒன்றையொன்று உண்ணவும் தலைப்படுகின்றன. உண்ணல் என்பதற்கு இங்கே 'ஈர்த்தல்', 'கவர்தல்' எனப் பொருள் கொள்ளலாம். கவரப்படுபொருள் மற்றவர் கருத்து. எனவே, ஒரே நேரத்தில் இருவரும் ஒருவரையொருவர் விரைவோடும், விருப்போடும் நோக்கிக் கண்களே வாயில்களாய் ஒருவர் மற்றவரின் கருத்தை உணர்ந்தனர் எனக்கொண்டு, அடுத்துள்ள இரண்டாவது நிலைக்கு வரலாம். 'நிலைபெறாது உணர்வும் ஒன்றிட' என்பதே அந்த இரண்டாம்நிலை. இங்கே உணர்வெனப்படுவது வேட்கை. அதுதான், ஒருவரையொருவர் பெறவேண்டுமென்ற உள்விருப்பம். அது நிலைபெறாமையாவது, உள்ளத்திற்குள் அடங்காமை. ஆக, இருவரும் தத்தம் வேட்கையைப் பிறர் அறியாவண்ணம் தங்களில் ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தி நிற்றல். இதுவே, தொல்காப்பியர் சுட்டுகின்ற 'சிதைவு பிறர்க்கின்மை' (தொல்.பொருள்.மெய்.நூ.13) எனும் மெய்ப்பாடாம். ஆகவே, உள்ளத்திற்குள் அடங்காத வேட்கை, நோக்கின்வழி வெளிப்பட்டு ஒன்றுமாறு இருவரும் ஒருவரையொருவர் நோக்கினர் எனக் காணலாம். இதனை,

"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்
கூட்டி உரைக்குங் குறிப்புரை ஆகும்" (தொல்.பொருள்.களவு.5)

என்ற நூற்பாவினுள் அடக்கிக் காட்டுவர் தொல்காப்பியர். அறிவுடம்படுத்தல் என அவர் குறித்ததனையே உணர்வும் ஒன்றிட என்று உணர்வுடம்படுத்திக் காட்டினார் கம்பர். இதுவே மதியுடம்பாடு எனவும் வழங்கப்பெறும்.

"ஆள்வினை முடித்த அருந்தவ முனிவன்
வேள்வி போற்றிய இராமன் அவனொடு
மிதிலை மூதூர் எய்திய ஞான்றே
மதியுடம் பட்ட மடக்கண் சீதை" (தொல்.பொருள்.அகம்.54.)

என்ற பழம்பாடலில் மதியுடம்பாடு எனும் பெயர்ச்சொல் வினைச்சொல்லாய்ப் பயின்று வந்துள்ளமை அறியலாம்.

உள்ளப் புணர்ச்சி

இவ்வாறு, இராமனும் சீதையும் கண்ட இந்த முதற்காட்சி-யிலேயே அவர்களுக்கிடையில் நின்ற பிரிவகன்று பாதிக்கூட்டம் முடிந்துவிடுகிறது. இதுவே, இலக்கணம் கூறும் இருவகைப்

புணர்ச்சியுள், உள்ளம் கலந்த உயரிய புணர்ச்சி;! இதனைக் கம்பர் வேறொரு பாடலில் நயமுறச் சுட்டுகின்றார்.

"பருகிய நோக்கெனும் பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினார்" (பால.600)

கண்வழியே நிகழ்ந்த உள்ளப் புணர்ச்சியாதலால், இங்குச் சொல்வழி அமைக்க வேண்டிய தேவையும் ஏற்படவில்லை. அப்படியொரு சொல்வழி அமைத்தால் அது பொருளற்றதாக மட்டுமன்றிப் பயனற்றதாகவும் போய்விடும்.

"கண்ணொடு கண்இனை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல" (குறள்.1100)

என்பது வள்ளுவம்.

உயிர்ப்புணர்ச்சி

இனி, இராமன் சீதையென்ற இருவருக்கிடையே இந்த உள்ளப்புணர்ச்சியை ஒட்டி ஓர் உயிர்ப்புணர்ச்சியும் நிகழ்ந்ததாகக் கம்பர் பாடியுள்ள நுட்பம் காணத்தக்கது. ஈருடல்களில் தனித்தனியே ஈருயிர்களோடு இருந்த அவர்கள், இக்காட்சியின் பயனாக ஈருடல்களுக்கும் சேர்ந்த ஒருயிராய் இணைந்துவிட்டனர் என்கிறார். இஃது இயலுவதொன்றோ எனும் வினாவிற்கும் அவரே விடை-யிறுக்கின்றார். எழிய மனிதக் காதலில் இப்புணர்ச்சி இயலாததாகலாம்;; கூடியிருந்த தெய்வங்கள் பிரிந்து மனித வடிவில் பின்னும் கூடும்போது இவ்வாறு உயிரொன்றிக் கலத்தல் இயலக் கூடியதே. இதில் ஆராய்ச்சியோ வியப்போ வேண்டா என்பது கம்பர் பதில்.

"மருங்கிலா நங்கையும் வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்டுடற்கு உயிரொன் றாயினார்;
கருங்கடற் பள்ழியிற் கலவி நீங்கிப்போய்ப்
பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ?" (பால.601)

இதுவே, அந்தப் பதிலை அடக்கிய பாடல்.

முடிவுரை

உடற்புணர்ச்சி: நிறைவுக் கூட்டம்: இங்ஙனம் உள்ளத்தாலும் உயிராலும் தடையின்றிக் கலந்தவர்கள் உடலாலும் கலக்கத்

துடிக்கின்றனர். அதற்கு உலகம் முன்னின்று ஒரு தடை வகுத்துச் சீதையின் மணப்பொருட்டாக உள்ளதொரு வில்லை வளைத்தால் இராமன் அவளை மணக்கலாம் என்பதையே விடையாகவும் அளிக்கிறது. அதன்படியே இராமன் அவ்வில்லை வளைக்கும்போது அவர்களுக்கு முன்னின்ற தடையும் வளைந்துவிட, இருவரும் உடலால் கலக்கத் துடித்த துடிப்பும் நிறைவேறுகிறது.

"நூற்கடல் அன்னவர் சொற்கடன் நோக்கி
மாற்கடல் அன்ன மனத்தவ ளோடும்
காற்கடல் போல்கரு ணைக்கடல் பண்டைப்
பாற்கடல் அன்னதோர் பாயல் அணைந்தான்" (பால.1343)

பாற்கடலை விட்டுப் பிரிந்தவர்கள் மீண்டும் அந்தப் பாற்கடலிலேயே சென்று கூடியதுபோல் முடிக்கிறார் கம்பர்.